ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

யதீந்த்ரப்ரவணரான மணவாளமாமுனிகள்

திருவாய்மலர்ந்தருளிய

ஆர்த்தி பிரபந்தம்.

மகாமகோபாத்தியாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்,
அடையாறு, சென்னை-20.

[illegible] ஸ்வாமியான

பிள்ளைலோகம் ஜீயர் அருளிச்செய்த

வ்யாக்யானமும் பதவுரையும்

[illegible] முத்ராபக்ஷ [illegible] ரான

புதுப்பட்டு - திருவேங்கடாசாரியரால்

[illegible] பரிசோதிக்கப்பட்டு

[illegible] முத்ராபக சபையாரால்
[illegible] ராக்ஷரசாலையில்
அச்சிடப்பட்டது.

[illegible] நாம

[illegible] மலைமண்டலம்.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீவைஷ்ணவ க்ரந்த முத்ராபக சபை (லிமிடெட்.)

இச்சபையில் தமிழ்லிபியில் அச்சிட்ட க்ரந்தங்கள்.

		ரூ.அ.ப.
1.	ராமசரமஸ்லோகம்	0-1-6
2.	பாரதாதி தனிஸ்லோகம்	0-2-6
3.	துஷ்கரஸ்லோக டிப்பணி	0-2-6
4.	பராசரவிசிஷ்ட பரமதர்ம சாஸ்த்ரம் (தாத்பர்யஸஹிதம்)	0-7-0
5.	திருப்பல்லாண்டு	0-7-6
6.	பெரியாழ்வார் திருமொழி வ்யாக்யானம் 1 & 2 பத்து	2-0-0
7.	,, 3 to 5 ,,	3-5-0
8.	திருச்சந்த விருத்தம்-வ்யாக்யானம்	1-6-0
9.	திருமாலை-வ்யாக்யானம்	0-14-0
10.	திருப்பள்ளியெழுச்சி	0-3-0
11.	அமலனாதிபிரான்	0-7-6
12.	பெரியதிருமொழி 1 முதல் 3 பத்துக்கள்	2-9-0
13.	,, 4 to 7	2-13-0
14.	,, 8 to 11	2-10-0
15.	திருக்குறுந்தாண்டகம்	0-2-6
16.	திருநெடுந்தாண்டகம்	1-0-0
17.	முதல் திருவந்தாதி (அரும்பத ப்ரதிபதஸஹிதம்)	0-9-0
18.	இரண்டாம் திருவந்தாதி	0-6-0
19.	மூன்றாம் திருவந்தாதி	0-6-0
20.	நான்முகன் திருவந்தாதி	0-7-0
21.	திருவிருத்தம் (அரும்பத ப்ரதிபத தாத்பர்யம்)	1-14-0
22.	திருவாசிரியம்	0-3-0
23.	பெரியதிருவந்தாதி (ப்ரதிபதஸஹிதம்)	0-6-0
24.	திருவெழுகூற்றிருக்கை	0-3-0
25.	சிறியதிருமடல்	0-4-6
26.	பெரிய திருமடல்	0-5-0
27.	இராமானுச நூற்றந்தாதி (உரையுடன்)	0-8-0
28.	உபதேசரத்தினமாலை	1-0-0
29.	திருவாய்மொழி நூற்றந்தாதி	0-15-6
30.	ஷண்மததர்ஶிநி	0-1-6
31.	யதிதர்மஸமுச்சய	0-9-0
32.	ஸ்ரீவைஷ்ணவ ஸமயாசார நிஷ்கர்ஷம்	2-5-0
33.	ஞானஸாரம்-ப்ரமேய ஸாரம் வ்யாக்யானம்	0-8-0
34.	ரஹஸ்யார்த்தப்ரதீபிகை யென்கிற பரகாலங்கலான் [illegible]ஸ்யம்	1-3-[illegible]
35.	ஆர்த்திபிரபந்த வ்யாக்யானம்	0-6-0

மேல்கண்ட கிரந்தங்களுக்கெல்லாம் பயின்டு சார்ஜு பிரத்தியேகம்.

இப்படிக்கு,

திருவேங்கடமுடையானையா;

கார்யதர்ஸி ஜநாதிகாரி,

நெ. உக, வெங்கடாசலமுதலி வீதி, சென்னை.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

ஸ்ரீஸைலேஸதயாபாத்ரம் தீபக்த்யாதிகுணார்ணவம் ।
யதீந்த்ரப்ரவணம்வந்தே ரம்யஜாமாதரம்முநிம் ॥
லக்ஷ்மீநாதஸமாரம்பாம் நாதயாமுநமத்யமாம் ।
அஸ்மதாசார்யபர்யந்தாம் வந்தேகுருபரம்பராம் ॥

யோநித்யமச்யுதபதாம்புஜயுக்மருக்ம
வ்யாமோஹதஸ்ததிதராணித்ருணாயமேநே ।
அஸ்மத்குரோர்ப்பகவதோஸ்யதயைகஸிந்தோ
ராமாநுஜஸ்யசரணௌசரணம்ப்ரபத்யே ॥

மாதாபிதாயுவதயஸ்தநயாவிபூதிஸ்
ஸர்வம்யதேவநியமேநமதந்வயாநாம் ।
ஆத்யஸ்யந:குலபதேர்வகுளாபிராமம்
ஸ்ரீமத்ததங்க்ரியுகளம்ப்ரணமாமிமூர்த்நா ॥

பூதம்ஸரஸ்சமஹதாஹ்வயபட்டநாத
ஸ்ரீபக்திஸாரகுலசேகரயோகிவாஹாந் ।
பக்தாங்க்ரிரேணு பரகாலயதீந்த்ரமிஸ்ராந்
ஸ்ரீமத்பராங்குசமுநிம் ப்ரணதோஸ்மிநித்யம் -

ஸ்ரீமதார்த்திப்ரபந்த தனியன்கள்.

தேன்பயிலுந்தாரானெதிராசன்சேவடிமேல்
தான்பரமபத்திதலையெடுத்து—மாந்தர்க்
குணவாக வார்த்தியுடனொண்டமிழ்கள்செய்தான்
மணவாளமாமுனிவன்வந்து. (க)

உரை.—மணவாள மாமுனிவன் = பெரிய ஜீயர், வந்து=திருவவதரித்து, தேன்=மகரந்தத்தை, பயிலும்=ஸ்ரவியாநின்ற, தாரான்=புஷ்பமாலையை தரித்த, எதிராசன் = எம்பெருமானாருடைய, சேவடிமேல் = சிவந்த திருவடித்தாமரைகளின் விஷயமாய், தான்=தனக்கு, பரமபத்தி= பரமபக்தி, தலையெடுத்து = தலையெடுப்பதனாலே, மாந்தர்க்கு= அஜ்ஞருக்கு, உணவாக=அறிவுவிளையும் படியாக, (போக்யமாக) ஆர்த்தியுடன்= ப்ரீதிபுரஸ்ஸரமான துக்கத்தோடு, ஒண்=போக்யமான, தமிழ்கள் = திரவிடவாக்யங்களைக் கூட்டி, செய்தான்=ஆர்த்தியென்கிற இப்பிரபந்தத்தையருளிச் செய்தனர்.

வம்பவிழ்த்தார்வண்மை மணவாளமாமுனிவன்
அம்புவியிற்கால்பொருந்தாவார்த்தியினால்—உம்பர்தொழும்
விண்ணுலகிற்செல்ல விரைந்தெதிராசன்பதங்கள்
நண்ணியுரைத்தான்நமக்கு. (உ)

உரை.=வம்பவிழ் = அப்போதலர்ந்த, தார் = புஷ்பமாலை யாலே அலங்கரிக்கபபட்ட, வண்மை = ஔதார்ய சீலரான, மணவாள மாமுனிவன் = பெரியஜீயர், அம்=அழகிய, புவியில் = பூமியில், கால் = திருவடிகள், பொருநதா=பொருந்தாத, ஆர்த்தியினால்=துக்கத்தினால், உம்பர்=நித்யஸூரிகளாலே, தொழும்=ஸேவிக்கப்படுகிற, விண்ணுலகில்= பரமபதத்துக்கு, செல்ல=எழுந்தருளும் பொருட்டு, விரைந்து=த்வரைப்பட்டு, எதிராசன் = எம்பெருமானாருடைய, பதங்கள்=திருவடிகளை, நண்ணி=அத்யவஸித்து, நமக்கு=அஸ்மதாதிகளுக்கு, உரைத்தான்=அருளிச்செய்தனர்.

ஜீயர்திருவடிகளேசரணம்.

இப் ப்ரபந்தத்துக்கு வ்யாக்யான மருளிச்செய்த பிள்ளைலோகஞ்ஜீயர் தனியன்.

లోకాచార్యమునిం వందే ధీశమాదిగుణార్ణవమ్ ।
తంశఠారిగురోశ్శిష్య మార్తివ్యాఖ్యాంకరోతియః ॥ (౧)

ఆర్తివ్యాఖ్యాంవరవరమునేరార్తబన్ధోర్మనోజ్ఞాం
లోకాచార్యోమునిరకృత సల్లోకమాహ్లాదయన్సః ।
ఆచార్యాణాంశఠరిపుకృతేరర్థనిర్వాహశక్తా
ప్రాచాంపశ్చాద్భువిసు మతయోయంవదన్తిప్రకల్పమ్ ॥ (౨)

కాన్తోపయన్తృయమినో జగదార్యయోగీ
వ్యాఖ్యాత్కృపారసనిధిః కృతిమార్త్యభిఖ్యాం ।
యంభూతలేనిగమశీర్షవిదోవదన్తి
కాన్తోపయన్తృయమినోవతరంద్వితీయమ్ ॥ (3)

லோகாசார்யமுநிம்வந்தே தீஶமாதிகுணார்ணவம் ।
தம்ஶடாரிகுரோஶ்ஶிஷ்ய மார்த்திவ்யாக்யாம்கரோதிய:. (௧)

ஆர்த்திவ்யாக்யாம்வரவரமுநே ரார்த்தபந்தோர்மநோஜ்ஞாம்
லோகாசார்யோமுநிரக்ருதஸல்லோகமாஹ்லாதயந்ஸ: ।
ஆசார்யாணாம்ஶடரிபுக்ருதேரர்த்தநிர்வாஹஶக்தௌ
ப்ராசாம்பஶ்சாத்புவிஸுமதயோயம்வதந்திப்ரகல்பம் ॥ (௨)

காந்தோபயந்த்ருயமிநோஜகதார்யயோகீ
வ்யாக்யாத்க்ருபாரஸநிதி:க்ருதிமார்த்த்யபிக்யாம் ।
யம்பூதலே நிகமஶீர்ஷவிதோவதந்தி
காந்தோபயந்த்ருயமிநோவதாரம்த்விதீயம் ॥ (௩)

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஜீயர் திருவடிகளே ஶரணம்.

ஸ்ரீமதார்த்திப்ரபந்த வியாக்யானம்.

அவதாரிகை.

ஸ்ரீய:பதியான ஸர்வேஶ்வரன் திருமாலடியார்களென்று ததேகநிரூபணீயரான தன்னடியார்க்கு ஸ்வப்ராப்தியைப்பண்ணிக்கொடுப்பதுப்ராப்யருசியைப் பிறப்பித்தாயிற்று. அந்த ப்ராப்யருசிதான் பரபக்தி பரஜ்ஞான பரமபக்திரூபையாயிறே பரிணமிப்பது. அப்படிப்பட்ட பக்தியையாயிற்று ஆழ்வாருக்குத் திருமேனியோடே உண்டாக்கி அங்கீகரித்தது. அத்தைப்பற்ற (௧) "மயர்வறமதிநலமருளினன்", (௨) "அவாவற்றுவீடுபெற்ற" என்று மருளிச்செய்தார். அதுதான் இவர் ஸம்பந்தமடியாக வெல்லாருக்கும் ப்ராப்திக்குமுன்னே ஸித்திக்கும்படியாயிருக்கும். தத்விஷயார்த்தமாக (௩) "భగవద్భక్తి మపి ప్రయచ్ఛ మే-பகவத்பக்திமபிப்ரயச்சமே", (௪) "పరభక్తియుక్తం మాం కురుష్వ-பரபக்தியுக்தம்மாம்குருஷ்வ" என்றிறே, ஆசார்யர்கள் அர்த்தித்தருளிற்று. அப்படி, ஸ்வாபிலஷிதத்தை அர்த்தித்துப்பெற்று க்ருதார்த்தராய் (௫) "கரைகண்டோர்" என்று முக்தராய்ச்சொல்லப்படுகிற பராங்குஶபரகாலாதிகளோடே ஒருகோவையாகவெழுந்தருளியிருப்பாராய், பின்பும், ருசியுடையோரெல்லார்க்கும் ஆஶ்ரயணீயராகைக்காக, ஸ்வாவதாரஸ்தலாதிகளிலும் அர்ச்சாரூபியாயெழுந்தருளியிருக்கிற, எம்பெருமானார் திருவடிகளிலே, தம்முடைய வாசார்யரான பிள்ளையெப்படியெண்ணித் தம்மை அங்குத்தைக்கு அநந்யார்ஹராம்படி, அறவிலைசெய்துகொடுத்து, தத்விஷய ப்ராவண்யத்தையும், ஜநிப்பித்தருளினாரோ? தாமுமப்படியே நிரவதிகவ்யாமோஹத்தையுடையராய், (௬) "కృష్ణతృష్ణాతత్త్వం-க்ருஷ்ணத்ருஷ்ணாதத்த்வம்", என்றுமாபோலே, "யதீந்த்ரப்ரவணர்" என்று

(௧) தி-வாய்-௧-௧-௧ (௨) தி-வாய்-௧௦-௧௦-௧௧ (௩) ஸ்தோ-ரத்ந-
(௪) ஶரணாகதிகத்யம் (௫) தி-வாய்-௮-௩-௧௦ (௬) பராங்குஶாஷ்டகம்

ததேகநிரூபணீயராம்படியான ஜீயரும், (௧) "பாலேபோல்சீரில்பழுத்தொழிந்தேன்" என்கிறபடியே (௨) 'கையும்மனமுன்குணங்களை யுன்னி" என்று அவருடைய கல்யாணகுணங்களிலே ப[illegible]வ பாவராய், அத்தாலே ப்ராப்தஸேஷியாய், சரமபர்வமான எம்பெருமானார் திருவடிகளை (௩)*மெய்கொள்ளக்காணவேணுமென்கிற வபிநிவேஶாதிஶயத்தாலே மெய்வெளுத்து, தத்கார்யமான ப்ராப்தி தஶையை ப்ராப்தராய், இப்படி கரைபுரண்ட வாற்றாமையையுடையராயிருக்கிற தாம், எம்பெருமானார் ப்ரஸாதத்தாலே, தமக்குப் பிறந்த பரமபக்தி தஶையைப்பேசி அநுபவித்தருளுகிற முகத்தாலே, சரமபர்வநிஷ்டராய், எம்பெருமானார் திருவடிகளில், ப்ராவண்யத்தை யுடையராயிருக்கும் சரமாதிகாரிகளெல்லார்க்கு மநுஸந்தித்து உஜ்ஜீவிக்கும்படி, இப்ப்ரபந்தமுகேந அவற்றை வெளியிட்டருளுகிறார்.

(௪) "பத்தியெல்லாம்தங்கியதென்ன" என்னும்படியிறே இவர்க்கு, *எதிராசன்சேவடிமேல் தான்பரமபத்திதலையெடுத்தது. (௫) "పరమాపదమాపన్నః-பரமாபதமாபந்ந:", (௬) "முடிந்தவவா"என்றும் சொல்லும்படியான, †பரமார்த்தியை ப்ராப்தராய், அந்ததஶையைப் பேசினப்பாசுரமாகையாலே, "ஆர்த்தி"என்றிதுக்கு நிரூபகநாமமாயிருக்கிறது. ஆர்த்திதான் ஸம்ஸாரத்தி லடிக்கொதிப்பாலும், ப்ராப்தவிஷயாநுபவாலாபத்தாலும் பிறக்குமதாயிறேயிருப்பது. அவையிரண்டையுமாய்த்து, (௭)* முந்நீர்ஞாலத்திலும், (௮)* அறுக்கும்வினையிலுமாழ்வாரருளிச்செய்தது. அத்தைப்பற்றவிறே "வம்பவிழும்தாரான்", "தேன்பயிலுந்தாரான்"என்கிற தனியன்களுமுண்டாய்த்து. அப்படியே இவர்க்கும், ஆகாரத்வயம் நடவாநின்றதேயாகிலும், அதிலநுபவாலாபத்திலுண்டான வார்த்தியிறே, ப்ராசுர்யேண இப்ப்ரபந்தத்தில் நடந்துசெல்லுகிறது. "ப்ராப்திதஶையிலார்த்தியைமுன்னிடும்" என்னக்கடவதிறே.

இவர்தாம் ஸமகாலத்திற்போலே, ஆழ்வான் முதலானவரைத்து முதலிகளோடுங்கூடி தழுவி முழுசிப்பரிமாறி *ராமாநுஜபதாம்

---

(௧) பெரியதிருவ-௫௮ (௨) இரா-நூ-௧௦௨ (௩) தி-வாய்-௩-௮-௪
(௪) இரா-நூ-௧௦௮ (௫) வி-தர்ம-௬௯-௪௭ (௬) தி-வாய்-௧௦-௧௦-௧௧
(௭) தி-வாய-௩-௨ (௮) தி-வாய-௯-௮ † பரமபக்தி

போஜத்வந்த்வகைங்கர்யத்திலே அந்வயித்து வாழவேணுமென்று, மநோரதித்தவர்க்கு, அது, மாநஸாநுபவமாத்ரமாய் அதீதகாலமாகையாலே, ப்ரத்யக்ஷயோக்யமன்றிக்கே யொழிகையாலும், இனி இவர் தேசவிசேஷத்திலே, நித்யகைங்கர்யநிரதராயிருக்கிறபடியையநுஸந்தித்து, அவர்விஷயத்திலே, தாமுமப்படி வழுவிலாவடிமை செய்து வாழவேணுமென்று, அவர் திருவடிகளிலே இத்தை ப்ரார்த்தித்தருளுகிறார்.

ஆகையிறே "வடுகநம்பிதன்னிலையை யென்றனுக்கு நீதந்தெதிராசா வெந்நாளுமுன்றனக்கேயாட்கொள்ளுகந்து" என்றருளிச் செய்தருளிற்று. (க) "𑌅𑌹𑌂 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌕𑌰𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 - அஹம்ஸர்வம்கரிஷ்யாமி" என்ற இளையபெருமாள் நிலை யெம்பெருமானாரது, (உ) "𑌶𑌤𑍍𑌰𑍁𑌘𑍍𑌨𑍋 𑌨𑌿𑌤𑍍𑌯𑌶𑌤𑍍𑌰𑍁𑌘𑍍𑌨𑌃 - ஶத்ருக்நோநித்யஶத்ருக்ந:" என்று பேசும்படியானவவர் நிலையாய்த்திவரது.

இனி (ங) "ஆழ்முதல்வன்" என்னும்படி அவதாரவிசேஷமாயிருந்துள்ள வ்பக்திவிசேஷங்கள், (ச)* முகில்வண்ணனடியையடைந்துய்ந்த ஆழ்வாரும, அந்த மாறனடிபணிந்துய்ந்த எம்பெருமானாரும், அவர் திருவடிகளிலே அநந்யஶரணரான ஜீயருமாயிறேயுள்ளது.

இப்படி இவர்களொருகோவையான வைபவத்தையுடையவிவர், ஆழ்வாருடையவும் உடையவருடையவும் வைபவத்தைத் திருவாய்மொழி நூற்றந்தாதியாலும், உபதேசரத்தினமாலையாலும், யதிராஜவிம்ஶதியாலு மருளிச்செய்து, அதிலும் தம் அபிநிவேஶமெல்லாம்தோற்ற (ரு) "𑌪𑌰𑌾𑌙𑍍𑌕𑍁𑌶𑌪𑌾𑌦𑌭𑌕𑍍𑌤𑌮𑍍 - பராங்குஶபாதபக்தம்" என்றும், (சு) "சடகோபன்தேமலர்த்தாட்கேய்ந்தினியபாதுகமாமெந்தையிராமாநுசன்" என்றும் முடிந்தநிலமாகச் சொல்லப்படுகிற சரமபர்வமே ப்ராப்யத்தில் சரமாவதியென்று மிச்சரமார்த்தத்தைச் சரமகாலத்திலே சரமப்ரபந்தரூபேண விதிலையாய்த்து வெளியிட்டருளிற்று. அதில் யதிராஜவிம்ஶதி, (ரு) "𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌂 𑌯𑌤𑌿𑌪𑌤𑌿𑌂 𑌪𑍍𑌰𑌣𑌮𑌾𑌮𑌿 𑌮𑍂𑌰𑍍𑌧𑍍𑌨𑌾 - ராமாநுஜம்யதிபதிம்ப்ரணமாமிமூர்த்நா" என்றுதொடங்கி,

---

(க) ரா-அ-ஙச-உரு (உ) ரா-அ-க-க (ங) தி-வாய்-எ-கூ-ங
(ச) தி-வாய்-எ-உ-கக (ரு) யதிராஜவி- (சு)

" [Grantha] - தஸ்மாதந்யபராஜோபவதீதிமத்வா" என்று தலைக்கட்டுகையாலே, ப்ராபகபரமாயிருக்கும். இங்கு "வாழி யெதிராசன்" என்று தொடங்கி, "இந்தவரங்கத்தினிதிருநீ" என்று தலைக்கட்டுகையாலே, இது ப்ராப்யபரமாயிருக்கும். ப்ராப்யத்வராநுஸந்தாந பரமாயிருக்கு முத்தரவாக்யம். அதில் தாத்பர்யமாயிருக்கு மிது. ப்ராப்யத்தில் முடிந்தநிலமிறே ததீயகைங்கர்யம். இனி அந்த கைங்கர்யவேஷத்தை ஸ்வரூபாநுரூபமாக நிஷ்கர்ஷித்து அறிய வேண்டுமத்தனையிறேயுள்ளது. இவர்க் கிப்ரபந்தத்தில் ஓடுகிறதசை தானநேகபா(ர)வஸ்ருத்திகளையுடைத்தாய், இதுதான் ஓர் சந்தஸ்ஸிலடங்காமையாலே, பலசந்தஸ்ஸுக்களாலும், அவற்றையருளிச்செய்கிறார்.

இதில் முதற்பாட்டில் ஸ்ரீதண்டகாரண்யவாஸிகளான ரிஷிகளும், பெரியவுடையாரும், பெருமாளைக்கண்டவநந்தரம், (க) "[Grantha]-ஏஹிபஶ்யஶரீராணி" என்று ராக்ஷஸர்களாலும், ராவணனாலும் நலிவுபட்ட ஸ்வஸ்வதேஹங்களைக்காட்டித் தங்கள்குறை தீர்த்துக்கொள்ளுவதற்கு முன்னே, அத்தலையில் ஸௌந்தர்ய ஸௌகுமார்யாதிகளைக்கண்டு கலங்கி, (உ) "[Grantha]-மங்களாநி ப்ரயுஞ்ஜாநாः" என்றும், (ங) "[Grantha]-ஆயுஷ்மந்?" என்றும், மங்களாசாஸனம் பண்ணினாப்போலே இவரும் தம்மைவிஷயீகரிக்க, *விண்ணின்தலைநின்று மெழுந்தருளின வெம்பெருமானாருடைய, அப்ராக்ருத திவ்யவிக்ரஹத்தில், ப்ரகாசிக்கிற ஸௌந்தர்ய ஸௌகுமார்யாதிகளைக் கண்டுகலங்கி ப்ரக்ருதி †நின்றவாத்மாவைக்காட்டி ஸ்வாபேக்ஷிதங்களை அறிவிப்பதற்கு முன்னே, அத்தலையில் குறை தீரவே, இத்தலையில் குறைத்தீர்த்துக்கொள்ளலாமென்றறுதியிட்ட படியே மங்களாசாஸனம் பண்ணுகிறார்.

இப்படி தாம் மங்களாசாஸனம்பண்ண, அத்தாலே நித்யஸூரிகளுக்குண்டான வாதராதிஶயத்தைக்கண்டு, (ச) "அன்பால்மயல் கொண்டுவாழ்த்துமிராமாநுசன்" என்கிறபடியே அங்குத்தைக்கு அநந்யராய் ப்ரேமபாரவஶ்யத்தாலே மங்களாசாஸனம் பண்ணுமவர்

(க) ரா-ஆ-ரு-கக (உ) ரா-ஆ-க-கஉ (ங) ரா-ஆ-கஎ-கஇ
(ச) இராம-நூ-கு † என்ற

களுடைய பரம்பரையில் ஸம்பந்தமுடையவர்களை நித்யஸூரிகளா தரிக்கும்படி யிதுவே என்று(௧)*சூழ்விசும்பிற்படியே தாம்வித்த(ஸ்) ராய்ப்பேசியருளுகிறார். (௨)"பலலாண்டுபல்லாண்டு"என்று துடங்கி "அப்பாஞ்சசன்னியமுமபல்லாண்டே" என்றும், (௩) "జయత్యతి బలో రామో లక్ష్మణశ్చ మహాబలః । రాజా జయతి సుగ్రీవో రాఘవేణాభిపాలితః-ஜயத்யதிபலோராமோ லக்ஷ்மணஶ்சமஹாபலஃ। ராஜாஜயதிஸுக்ரீவோ ராகவேணாபிபாலிதஃ" என்றும் ஸம்பந்த ஸம்பந்திகளினளவும் மங்களாசாஸநமுண்டாயிறேயிருப்பது.

அவதாரிகை முற்றிற்று.

---

(௧) தி-வாய-௧௦ ௬ (௨) திருப்பல்லாண்டு (௩) ரா-ஸ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:.

பரமகாருணிகரான பெரியஜீயரருளிச்செய்த

ஆர்த்திப்ரபந்தம்.

வாழி யெதிராசன் வாழி யெதிராசன்
வாழி யெதிராசனென வாழ்த்துவார்—வாழியென
வாழ்த்துவார் வாழியென வாழ்த்துவார் தாளிணையில்
தாழ்த்துவார் விண்ணோர்தலை. (க)

ப்ரதிபதம்.

வாழியெதிராசன் = எம்பெருமானார்க்கு மங்களம், வாழியெதிராசன் = எம்பெருமானார்க்கு மங்களம், வாழி யெதிராசன் = எம்பெருமானார்க்கு மங்களம், என = என்று-இப்படி மூன்றுப்ரகாரமாக அநுஸந்தித்து, வாழ்த்துவார் = மங்களாசாஸநம் பண்ணுகிறவர்களெவர்களோ? வாழியென வாழ்த்துவார் = (அவர்களுக்கு) மங்களாசாஸநம் பண்ணுமவர்களெவர்களோ? வாழியென வாழ்த்துவார் = (அவர்களுக்கு) மங்களாசாஸநம் பண்ணுமவர்களெவர்களோ? (அவர்களுடைய) தாளிணையில் = உபய திருவடிகளில், தாழ்த்துவார் = ப்ரணதிசெய்யுமவர்களெவர்களோ? (அவர்கள்) விண்ணோர் = நித்யஸூரிகளுக்கு, தலை = நிர்வாஹகபூதராவர்கள். (க)

(வ்யா) (க) "பல்லாண்டுபல்லாண்டு பல்லாயிரத்தாண்டு" என்றும், (உ) "பொலிகபொலிகபொலிக" என்றும், பரமவைதிகராயிருக்குமவர்கள் பகவத்பாகவதவிஷயத்திலே மங்களாஶாஸநம் பண்ணுமாபோலே, இவ்விஷயத்திலு மநந்யராய் அந்தவைதிகநிர்த்தேஶத்தின்படியே "வாழியெதிராசன்" என்று த்ரிப்ரகாரமாக மங்களாஶாஸநம் பண்ணுமவர்களை அப்படியே வாழியென்று மங்களாஶாஸநம்பண்ணுமவர்களை வாழியென்று மங்களாஶாஸநம் பண்ணுமவர்களுடைய பரஸ்பரஸத்ருஶங்களான திருவடிகளிலே பக்நாபிமாநராய் வணங்கி வழிபட்டிருப்பார் நித்யஸூரிகளுக்கு ஶிரஸாவாஹ்யர். அன்றிக்கே, அவர்கட்கு ஶ்ரேஷ்டராவர்களென்றுமாம்; வாழியிடைச்சொல்லும், வாழ்கவெனச்சொல்லும் வாழியென்கையாலே ப்ரபந்தாரம்பத்தில் மங்களாஶாஸநமுண்டாயிறே யிருப்பது.

(க) திருப்பல்லாண்டு (உ) தி-வாய்-டு உ-க

அவதாரிகை.—அடியிலே, (க) "தொழுதெழென்மனனே" என்றநுஸந்தித்த வாழ்வார் பஜநாலம்பநமான திருநாமத்தை, இரண்டாம் திருவாய்மொழியிலே (உ) "வண்புகழ்நாரணன்" என்று வெளியிட்டாப்போலே இவரும் இப்பாட்டில் அத்தோடுவிகல்பிக்கலாம்படியான இராமாநுசனென்கிற திருநாமத்தை வெளியிடாநின்றுகொண்டு கீழ்ப்பாட்டில் அந்வயமுகத்தாலே ஸாதித்தவர்த்தத்தை இதில் வ்யதிரேகமுகத்தாலே வெளியிட்டருளி இம்முகத்தாலுமெம்பெருமானார் வைபவத்தை யெல்லைநிலத்தளவும்பேசி அநுபவித்தருளுகிறார்.

இராமாநுசாய நமவென்று சிந்தித்
திராமாநுசரோ டிறைப்போழ்—திராமாநு
சிந்திப்பார்தாளிணையிற் சேர்ந்திருப்பார் தாளிணையை
வந்திப்பார் விண்ணோர்கள் வாழ்வு. (உ)

இராமாநுசாய = இராமாநுசர் பொருட்டு, நம வென்று = நமஸ்ஸென்று, சிந்தித்திரா = அநுஸந்தித்திராத, மாநுசரோடு = மநுஷ்யரோடு, இறைப்போழ்து = க்ஷணகாலமும், இராமாநு = இராவண்ணம், (ஸஹவாஸம் செய்யாவண்ணம்) சிந்திப்பார் = சிந்திக்கிறவர்களுடைய, தாளிணையில் = உபயதிருவடிகளில், சேர்ந்திருப்பார் = சேர்ந்திருக்கு மவர்களுடைய, தாளிணையை = உபய திருவடித்தாமரைகளை, வந்திப்பார் = வணங்குமவர்கள், விண்ணோர்கள் = நித்யஸூரிகளுக்கு, வாழ்வு = நித்யஸம்பத்தாவார்கள். (உ)

(வ்யா-ம்) "ராமாநுஜாயநம:" என்று ஸர்வகாலத்திலும் இம்மந்த்ரத்தை மநநம்பண்ணியிருக்கை ப்ராப்தமாயிருக்க இப்படி ஸதாஜப்யமான வித்தைச்செய்யாதே நித்யஜீவநத்தைவிட்டு ஸத்தையன்றிக்கே அஸத்துக்களாய் பஶுப்ராயரான மநுஷ்யர்கள் ப்ரதிகூலராகையாலே, அவர்களுடைய ஸஹவாஸமும் ஸல்லாபமுமாய் அவர்களுடன் க்ஷணகாலமும் வஸியாதப்ரகாரம் சிந்தித்திருக்கும் அநுகூலரானவர்களுடைய திருவடிகளை தங்கட்கு அபாஶ்ரயமாக ஆஶ்ரயித்திருக்குமவர்களுடைய திருவடிகளில் ஸ்துத்யபிவாதநம் பண்ணுமவர்கள் (ந) 'அரும்பேறுவானத்தவர்க்கு"எனகிறபடியே, நித்யஸூரிகளுக்கு நித்யஸம்பத்தாவர்கள். (உ)

(க) தி-வாய்-க-க-க (உ) தி-வாய்-க-உ-கo (ந)

(அ-கை) கீழிரண்டுபாட்டாலும், "வாழி" என்றும் "நம:" என்றும், அத்தலைக்கதிசயங்களை உபபாதித்துக்கொண்டு இனி இப்பாட்டுதொடங்கி, மேலெல்லாம் ஸ்வாபேக்ஷிதங்களை விண்ணப்பஞ்செய்கிறார். இதிலடியேனுக்கு ஸர்வவிதபந்துவும் தேவரீரேயாயிருக்க, ஏதந்நிஷ்டைக்கு விரோதியான வித்தேஹத்தை சே(ச்)தித்தருளாததற்கு ஹேதுவேதென்கிறார்.

தந்தைநற்றாய் தாரம்தனயர் பெருஞ்செல்வம்
என்றனக்குநீயே யெதிராசா—இந்தநிலைக்
கேராத விவ்வுடலையின்றேயறுத்தருளப்
பாராத தென்னோ பகர். (௩)

தந்தை = பிதாவும், நற்றாய் = வாத்ஸல்யத்தையுடைய அன்னையும், தாரம்=மனைவியும், தனயர்=புதல்வரும், பெருஞ்செல்வம் = மஹைஸ்வர்யமும், என்றமக்கு = அஸ்மதாதிகளுக்கு, நீயே=தேவரீரே, (ஆகின்றீர்) எதிராசா=யதீந்த்ரரே! இந்த=இவ்வாறான, நிலைக்கு=நிஷ்டைக்கு, ஏராத = சேராத, இவ்வுடலை = இந்தசரீரத்தை, இன்றே-இப்போதே, அறுத்து = சே(ச்)தித்து, அருள = க்ருபைசெய்ய, பாராதது = கடாக்ஷியாதது, என்னோ = யாதுகாரணமோ? பகர்=உரைசெய்தருளவேண்டும். (௩)

(வ்யா-ம்) யதிகளுக்கு நாதரானவரே! (௧) "சேலேயகண்ணியரும் பெருஞ்செல்வமும்நன்மக்களுமேலாத்தாய்த்தந்தையுமவரேயினியாவாரே" என்றும், (௨) "𑌤𑍍𑌵𑌮𑍇𑌵𑌮𑌾𑌤𑌾𑌚-த்வமேவமாதாச" இத்யாதியாலும் சொல்லுகிறபடியே ஹிதபரனானபிதாவும் ப்ரியபரையான மாதாவும் போக்யையான ஸ்த்ரீயும் நிரயநிஸ்தாரகரான புத்திரரும் மற்றும் ஸகலவிதபுருஷார்த்தஸாதநமான மஹைஸ்வர்யமுமெல்லாம் தேவர்க்குஸ்ரிய:பதியான பெரியபெருமாளேயாகிறாப்போலே (௩) "𑌮𑌾𑌤𑌾𑌪𑌿𑌤𑌾𑌯𑍁𑌵𑌤𑌯𑌃 - மாதாபிதாயுவதய:" இத்யாதிப்படியே அடியேனுக்கிவையெல்லாம் தேவரே; வஸ்துஸ்திதி இதுவாயிருக்க, இந்தநிஷ்டைக்கநுரூபமின்றியே விரோதியாயிருக்கிற இந்ததேஹத்தை காலாந்தரே கழிக்கிறோமென்னாமல் விபரீதஜ்ஞாநஜநகமாகையாலே இத்தைக் கழிக்கவேணுமென்றபேக்ஷிக்கிற விந்தநிவஸத்தில்தானே சே(ச்)தித்தருளத் திருவுள்ளத்தாலே போக்கடிகாணுதி

---

(௧) தி-வாய்-௫-௧-௮ (௨) ஶரணாகதிகத்யம் (௩) ஸ்தோ-ரத்ந-

ருக்கிறதற்கு ஹேதுவேது? அத்தை ஸர்வஜ்ஞரானதேவரே அருளிச்செய்யவேணும்; அதுவருத்தமாயிருந்ததோ; அதுக்குமொருகால் சிந்தைசெய்யுமத்தனையன்றோவுள்ளது. நல்லென்கிறவித்தை எல்லாத்திலுங் கூட்டிக்கொள்ளவுமாம். (உ)

(அ-கை) கீழே விரோதியாக வருளிச்செய்த தேஹந் தன்னையே ஆத்மாவுக்குச் சிறைக்கூடமாக வநுஸந்தித்து, தத்விமோசகருமவரேயென்று அவர்பக்கலிலே அத்தை ப்ரார்த்தித்தருளுகிறார்.

இந்தவுடற்சிறை விட்டெப்பொழுது யானேகி
அந்தமில் பேரின்பத்துளாகுவேன்—அந்தோ!
இரங்காயெதிராசா என்னை யினியுய்க்கை
பரங்காணுனக் குணர்ந்துபார். (௩)

இந்தவுடல்=இந்தசரீரமாகிற, சிறை = காராக்ருஹத்தை, விட்டு= நீத்து, எப்பொழுது=எப்போது, யான்=அடியேன், ஏகி = அர்ச்சிராதிமார்க்கத்தாலே சென்று, அந்தம்=முடிவு, இல்=இல்லாத, பேரின்பத்துள்=மஹாநந்தத்துக்குள், ஆகுவேன் = ஆவேன்? அந்தோ = ஐயோ! இரங்காய்=கிருபை செய்தருளீர், எதிராசா=யதிகுல ஸார்வபௌமரே! என்னை=அடியேனை, இனி=இனிமேல், உய்க்கை = ரக்ஷிப்பது, உனக்கு=தேவரீருக்கு, பரங்காண்=பரமன்றோ? உணர்ந்து=ஆலோசித்து, பார்=பார்த்தருளீர். (௩)

(வ்யா-ம்) "ஜீவஶரீரம்-இதம்ஶரீரம்" என்றும்படி பராக(X)ர்த்தமாய் "இந்தவுடற்சிறை" என்று ஆத்மாவுக்கு காராக்ருஹம் போலே பந்தகமாயிருக்கிற தேஹபந்தம் முக்தமாய் எப்போதுதான் நானர்ச்சிராதிமார்க்கத்தாலே சென்று * அந்தமில்பேரின்பத்தடியரோடு ஒருகோவையாய், நிரதிஶயாநந்தஜநகமானவர்கள் பரிஷதந்தர்ப்பாவத்தையுடையனாய் ஸம்ஸாரவெக்காயம்தட்டாதபடியாகக் கடவேன்? அய்யோ! யதிகளுக்கு நாதரான நீர் அகதிகளுக்கு மிரங்கியருளவேண்டாவோ?; ஈஶ்வரனும்கூட "க்ஷிபாமி" என்று கைவிட்டவரவைச்சிறையானவடியேனை யினியுஜ்ஜீவிப்பித்து ரக்ஷிக்கை *பல்லுயிர்க்கும்விடளிப்பானயவதரித்த தேவர்க்கே பரங்காணும். இவ்வர்த்தத்தைத் திருவுள்ளம்பற்றிப் பார்த்தருளீர். (௩)

(அ-கை) கீழ் "உணர்ந்துபார்" என்கிறஸம்பந்தம்தானேது? நீர் அவர்ஜநியான்கக்கு ஹேதுவேதென்று அவர்க்குக் கருத்தாக

அத்தைநிதர்ஶநமுகத்தாலே வெளியிடாநின்றுகொண்டு தேவர்க்கு வர்ஜநீயனென்கிறார்.

தன்புதல்வன் கூடாமல் தான்புசிக்கும் போகத்தால்
இன்புறுமோ தந்தைக்கெதிராசா—உன்புதல்வன்
அன்றோ யானுரையாயாதலா லுன்போகம்
நன்றோவெனை யொழிந்தநாள். (ரு)

தன் = தன்னுடைய, புதல்வன் = புத்ரன், கூடாமல் = கூடாத போது, தானபுசிக்கும் = தான் அநுபவிக்கும, போகத்தால = ஐஶ்வர்யாதி போகத்தாலே, தந்தைக்கு = பிதாவுககு, இன்பம் = ஆநந்தம், உறுமோ = உண்டாகுமோ ? (ஆதலால்) எதிராசா = எம்பெருமானாரே ! உன் = தந்தையாகிய தேவருடைய, புதல்வன் = புத்ரன், யான = அடியேன். அன்றோ = அல்லவோ ? உரையாய = பகர்ந்தருளீர்; ஆதலால் = ஆகையாலே, உன்போகம் = தேவருடைய போகம், எனையொழிந்தநாள் = அடியேனை யொழிந்ததிவஸம், நன்றோ = நல்லதாமோ ? ஸரஸமாயிருககுமோ? (அப்படி யிராதாகையால் அடியேனையும அருளப்பாடிட்டு அழைத்துக் கொண்டருளவேணும்) (ரு)

(வ்யா-ம்) தன்பிரியபுத்ரனானவன் ஸங்கதனுகாமல் தேஶாந்தரஸ்தனாயிருக்க அவனையொழியத் தானேஏகனாய் புஜிக்குமைஶ்வர்யாதிபோகத்தாலே அந்தப்பிதாவானவன் அப்படி புஜிக்கிறவந்தபோகத்தாலே ஸுகத்தையடையுமோ?; யதிகளுக்கு நாதரானவரே! அப்படியே அடியேனும், (க) "गरीयान्ब्रह्मणः पिता-கரீயாந்ப்ரஹ்மண:பிதா" என்னும்படியான தேவர்க்கும் அவாஜநீயனான புத்திரனன்றோ? இதில் ஸந்தேஹமில்லை யென்கிறதை தேவரீரருளிச்செய்தருளீர். இப்படி ஸம்பந்தம் அவர்ஜநீயமாகையாலே, (உ) "கட்டெழில்வானவர்போகம்" என்கிற தேவருடையபோகம் அடியேனை யொழிந்த திவஸம் ஸரஸமாயிருந்ததோ ? அப்படி யிராதாகையாலடியேனையு மருளப் பாடிட்டழைத்துக்கொண்டருளவேணும். (௩) "यद्विना भरतं त्वां च सौमित्रे भुज्यते सुखम्-யத்விநாபரதம்த்வாஞ்சஸௌமித்ரேபுஜ்யதேஸுகம்" என்னக்கடவதிறே. உறுதல் = கிட்டுதல். (ரு)

(அ-கை) "உன்போகம்நன்றோவெனையொழிந்தநாள்" என்று நம்பேரிலேபழியிடாநின்றீர் ; காலக்ரமத்திலே அதுக்கீடானபாகம்

(க) (உ) தி-வாய-அ-அ-கக (௩) ரா

விளைந்தவாறே அப்படியே செய்கிறோமென்று திருவுள்ளக்கருத்தாக, அந்த அநுகூலரானார்க்கன்றோ வப்படியாம்; ப்ரதிகூலனானவெனக்கு அரைக்ஷணந்தாழ்க்கிலும் ப்ராதிகூல்யமே கைவிஞ்சி வரும், ஆகையால் ஹேயகுணவர்த்த(த்த)கமான தேஹத்தைத் தத்பூர்வமே போக்கும்படிபண்ணி யருளவேணுமென்கிறார்.

வேம்புமுற்றக் கைப்புமிகுவதுபோல் வெவ்வினையேன்
தீம்புமுற்றுந் தேகமுற்றிச்செல்லுங்கால்—ஆம்பரிசால்
ஏற்கவேசிந்தித் தெதிராசா விவ்வுடலைத்
தீர்க்கவேயானவழிசெய்- (௬)

வேம்பு = வேப்பமரமானது, முற்ற = முற்ற முற்ற, கைப்புமிகுவதுபோல = (நாள்தோறும) கைப்பே விஞ்சி வருமாபோலே, வெவ்வினையேன்=க்ரூர கர்மாவாயிருக்கிற அடியேனுடைய, தேகமுற்றி=சரீரம் முற்றி, செல்லுங்கால்=விருத்தி யடையாநிற்கையில், தீம்பு = துஷ்கர்மங்களே, முற்றும்= அதிகமாம்; (ஆகையால்) ஆம்பரிசால்-ஸ்வரூபஸத்தையுண்டாம ப்ரகாரத்திலே, ஏற்கவேசிந்தித்து=முற்கோலிச்சிந்தித்து, எதிராசா = யதிகளுக்கு நாதரானவரே! இவ்வுடலை=இந்த ஹேய ஸமுதாயமான தேஹத்தை, தீர்க்கவேயான = முடிக்கைக்கான, வழி=உபாயம், செய் = செய்தருளவேணும். (எதிராசாவென்றடியிலே ஸம்போதிக்கவுமாம) (௬)

(வ்யா-ம்) ஸரஸமான கரும்பாகிலிறே நாள்தோறும் முற்ற முற்றரஸமேறிவருவது; விரஸமானவேம்புமுற்றமுற்ற நாள்தோறும் அந்தவிரஸமானகைப்பே விஞ்சிவருமாபோலே, என்னுடைய தேஹமானது காலக்ரமத்திலே பக்வமாங்காட்டில் க்ரூரகர்மாவாயிருக்கிற வென்னுடைய ஹேயகுணமே அதிகமாம். ஆகையாலிது ஸ்வரூபஸத்தையுண்டாம் ப்ரகாரத்திலே முற்கோலிச்சிந்தித்து, யதிகளுக்குநாதரானவரே! இந்த ஹேயஸமுதாயமான தேஹத்தை முடிக்கைக்கேயான உபாயஞ்செய்தருளவேணும்; வழி உபாயம். யதிராசா வென்றடியிலே ஸம்போதிக்கவுமாம். (௬)

(அ-கை) உம்முடையதோஷத்தை யேற்கவே முற்கோலிநாம் போக்குகைக்கு ப்ராப்தியேது? நீர்தாம் ஸ்வகார்யத்திலஜ்ஞராய் அஶக்தராயிருந்தீரோவென்ன, ஸ்தநந்தயப்ரஜை தன்கார்யத்துக்கு

வேண்டுமவை தானேசெய்துகொள்ளிலன்றோ தேவர்க்கு நித்யஸ்தநந்தயமானவடியேனும் ஸ்வகார்யத்துக்கு க்ஷமனாய் செய்துகொள்வதென்கிறார்.

அன்னைகுடிநீரருந்தி முலையுண்குழவி
தன்னுடையநோயைத் தவிராளோ — என்னே!
எனக்காவெதிராசா வெல்லாநீசெய்தால்
உனக்கது தாழ்வோவுரை. (எ)

அன்னை=ப்ரஜையினிடத்திலே அத்யந்தவாத்ஸல்ய யுக்தையான மாதாவானவள், குடிநீரருந்தி=(ப்ரஜைக்கு ஏதேனுமொரு பிணியுண்டானால், இது நம் குறையாலேவந்ததென்று தான்) தாஹநீர்த்தமுதலான வற்றை ஔஷதத்துக்கு விரோதியாமல்பருகி, முலையுண்குழவிதன்னுடைய=ஸ்வபோஷ்யமா யிருக்கிற ஸ்தநந்தயப்ரஜை யினுடைய, நோயை = வ்யாதியை, தவிராளோ=போக்காளோ? என்னே! = இதென்ன ஆச்சர்யம்! எனக்கா=அடியேனுக்காக, (மாத்ருவத் வத்ஸலரான தேவருக்கு நித்யஸ்தநந்தயனாயிருக்கிற வடியேனுக்காக) எதிராசா=யதிபதியே! எல்லா நீசெய்தால்=அடியேனால் அநுஷ்டேயாம்ஸமா யிருப்பனவைகளெல்லாத்தையும் நீரநுஷ்டித்து ரக்ஷித்தால், உனக்கதுதாழ்வோ = தேவருக்கது அவத்யமோ? (தேஜஸ்கரமா யிருப்ப தொன்றன்றோ?) உரை = பகர் (இவ்வர்த்தத்தை அஜ்ஞனான வென்னைக்கொண்டு பேசுவிக்கவேணுமோ? ஸர்வஜ்ஞரான தேவரீர்தாமே அருளிச்செய்யலாகாதோ? என்கிறார்.

(வ்யா-ம்) அதாவது ப்ரஜையினிடத்திலே அத்யந்தவாத்ஸல்ய யுக்தையான மாதாவானவள் ஔஷதஸேவைக்கும் க்ஷமமன்றிக்கே அத்யந்தம் ஶைஶவயுக்தமாய் ஸ்வபோஷ்யமாயிருக்கிற ஸ்தநந்தய ப்ரஜைக்கும் ஏதேனுமொரு வணுக்கம் உண்டானால், இது நம்குறையாலே வந்ததென்று தான்குடிநீர் முதலான ஔஷதஸேவையைப் பண்ணி அதினுடைய வணுக்கத்தைத் தவிர்க்குமே. அப்படியே மாத்ருவத்வத்ஸலரான தேவர்க்கு நித்யஸ்தநந்தயமாயிருக்கிறவடியேனுக்காக யதிகளுக்கு நாதரானவரே! அடியேனால் அநுஷ்டேயாம்ஸமாயிருப்பனவைகளெல்லாத்தையு மநுஷ்டித்து ரக்ஷித்தால் தேவர்க்கு அவத்யமன்றே! தேஜஸ்கரமாயிருப்பதொன்றன்றோ? இவ்வர்த்தத்தை, அஜ்ஞனானவென்னைக்கொண்டு பேசுவிக்கவேணுமோ? ஸர்வஜ்ஞரானதேவர் தாமருளிச்செய்யலாகாதோ? இதென்ன வாஶ்சர்யம்! அருந்துதல்=உண்டல்.

ஆசார்யாபிமாநமாவது, இவையொன்றுக்கும் ஶக்தியின்றிக்கே இருப்பாரொருவனைக்குறித்து இவனுடைய இழவையும், இவனைப்பெற்றால் ஈஶ்வரனுக்குண்டான ப்ரீதியையுமநுஸந்தித்து, ஸ்தநந்தயப்ரஜைக்கு வியாதியுண்டானால், தன்குறையாக நினைத்துத் தான் ஔஷதஸேவைபண்ணும் மாதாவைப்போலே இவனுக்காகத் தான், உபாயாநுஷ்டாநம்பண்ணி ரக்ஷிக்கவல்ல பரமதயாளுவான மஹாபாகவதாபிமாநத்திலே ஒதுங்கி, (க) "வல்லபரிசுவருவிப்பரேல அதுகாண்டும்" என்று சொல்லுகிறபடியே, "ஸகலப்ரவ்ருத்திநிவ்ருத்திகளும், அவனிட்டவழக்காக்குகை" என்றுமளவாகவருளிச்செய்த திவ்யஸூக்தியாய்த்து இவரிப்படி யருளிச்செய்தது. (எ)

(அ-கை) கீழ்ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளுக்கு க்ஷமமன்றிக்கேயிருக்கிற ஸ்தநந்தயப்ரஜையை மாதாரக்ஷிக்குமாபோலே உம்மையும் ரக்ஷிக்கவேணுமென்று, ப்ராப்திசொல்லாநின்றீர். ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளுக்கு க்ஷமராய் ஸத்கர்மங்களினுடைய நிவ்ருத்தியிலும், அஸத்கர்மங்களினுடைய ப்ரவ்ருத்தியிலும் நிரதராய், ஸ்வவிநாஶத்தை விளைத்துக்கொள்ளுகிற உம்மை நம்மால்ரக்ஷிக்கப்போமோ? என்று எம்பெருமானார்க்குத் திருவுள்ளமாகக்கருதி, அப்படியானாலும், அடியேனைக் காத்துரக்ஷியாதபோது தேவர்க்கே அவத்யமாமென்னுமத்தை ஸநிதர்ஶநமாக வருளிச்செய்கிறார்.

தன்குழவிவான்கிணற்றைச் சார்ந்திருக்கக் கண்டிருந்தாள்
என்பதன்றோவன்னை பழியேற்கின்றாள் — நன்குணரில்
என்னாலேயென்னாசமேலு மெதிராசா
உன்னாலே யாமுறவையோர். (அ)

(ஐந்து வயதுக்குட்பட்ட ப்ரஜையினுடைய துர்மரணமெல்லாம் மாதாவினுடைய அஜாக்ரதையினால்வந்ததாக அவளுக்கு தோஷத்தை ஶாஸ்த்ரம் விதிக்கையால்)

தன்குழவி = தன்னுடையசிசு, வான்கிணற்றை = பெருமைபொருந்திய கிணற்றினருகில், சார்ந்திருக்க = சேர்ந்திருக்க, கண்டிருந்தாள் = பார்த்துத்தகையாதிருந்தாள், என்பதன்றோ = என்றல்லவோ. அன்னை = தாய், பழி = அபவாதத்தை, ஏற்கின்றாள் = அடைகின்றாள்; நன்குணரில் = நன்றாக விசாரிக்குமளவில், என்னாலே = பாபமாகிற படுகுழியைக்கிட்டின

(க) நா-தி-௧௦-௧௦

வென்றாலே,என்நாசமேலும்=என்னுடைய நாசத்தைவிளைத்துக்கொள்ளப் பார்த்தேனேயாகிலும், எதிராசா = யதிகட்கு நாதரானவரே! உன்றாலே=தேவராலே, ஆம்=ஆகிற, உறவை=ஸம்பந்தத்தை, ஓர் = விசாரித்தருளீர். (அ)

(வ்யா-ம்) அதாவது அஞ்சுவயஸ்ஸுக்குட்பட்ட ப்ரஜையினுடைய தூர்மரணமெல்லாம் மாதாவினுடைய அநவதாநத்தாலே வந்ததாக அவளுக்கு ஶாஸ்த்ரம்தோஷம் விதிக்கையாலே, அப்படி வாராமல் கண்ணிலே வெண்ணெயிட்டு நோக்கவேணுமிறே மாதாவுக்கு; ஆகையாலே தன்னுடைய முக்த(X)ப்ரஜையானது தனக்கு நாஶகரமென்றறியாமல், தன்னளவன்றிக்கே ஆழத்தாலும் அகலத்தாலும் பெருத்திருப்பதானகிணற்றை ஆஸந்நமாகவிருக்கக்கண்டு, அத்தை ப்ரதிஷேதியாம லுபேக்ஷித்திருந்தாளென்கிற மாத்ரம்கொண்டன்றோ, அந்தமாதாவானவள் அபவாதம் ப்ராப்தையாகாநின்றாள்; அப்படியே நன்றாகநிரூபிக்கில், பாபங்களாகிற படுகுழியைக் கிட்டிநின்ற என்றாலே ஸ்வவிநாஶத்தை விளைத்துக்கொள்ளப்பார்த்தேனேயாகிலும், அத்தை நிஷேதித்து ரக்ஷிக்கவேணும்படி, யதிகளுக்கு நாதரான தேவராலேயுண்டாம் ஸம்பந்தத்தைத் திருவுள்ளம்பற்றவேணும். இத்தால் ஸம்பந்தமடியாக ஸர்வதஶையிலும் ரக்ஷிக்கவேணுமென்றுகருத்து. (க)“இதத்தாயிராமாநுசன்” என்கிற திவ்யஸூக்தியும், “பிரஜையைக் கிணற்றின்கரையில் நின்றும் வாங்காதொழிந்தால் தாயேதள்ளினாளென்னக்கடவதிறே” என்கிற திவ்யஸூக்தியுமாய்த்திருக்காகாரம். (அ)

(அ-கை) (உ) “நோற்றேன்பல்பிறவி” என்கிறபடியே, நீரும் முடையதுஷ்கர்மத்தாலே இஜ்ஜன்மமேயன்றிக்கே இன்னமும் சில ஜந்மம் எடுக்கவேண்டும்படியாய் இப்படி கைகழிந்திருக்கிறவுமக்கு எம்பெருமானாராலேசெய்து தலைக்கட்டலாவதேதென்று பார்ஶ்வஸ்தருக்குக் கருத்தாக, அப்படியானாலும் அடியேனுக்காக வின்னமும் அவதரித்து ரக்ஷித்தருளுவரென்கிறார்.

(க) திருவாய்மொழிதனியன் (உ) தி-மொ-௫-௯-அ

கூபத்தில்வீழுங்குழவியுடன் குதித்தவ்
வாபத்தைநீக்குமந்த வன்னைபோல்—பாபத்தால்
யான்பிறப்பேனேலு மினி யெந்தை யெதிராசன்
தான்பிறக்குமென்னை யுய்ப்பதா. (கசு)

கூபத்தில்=கிணற்றில், வீழும்=விழுகின்ற, குழவியுடன்குதித்து—சிசுவோடேகூட குதித்து, 'அவ்வாபத்தை=அவ்விடரை, நீக்கும்=போக்குகின்ற, அந்த அன்னைபோல்=அந்தமாதாவைப்போலே, பாபத்தால்=அடியேன்பண்ணின பாபத்தாலே, யான்பிறப்பேனேலும்=அடியேன் இன்னும்சில ஜந்மமெடுக்கும்படி யானேனாகிலும், எந்தை = அடியேனுக்குப் பிதாவாகிய, எதிராசன் = யதிகளுக்கு நாதரான எம்பெருமானார், என்னை = அடியேனை, உய்ப்பதா = உஜ்ஜீவிப்பிக்கைக்காக, தான் பிறக்கும்= தாம திருவவதரித்தருளுவர். (கசு)

(வ்-யா) அதாவது கிணற்றிலேவிழுந்தபின் பன்றிக்கே சற்றுந் தாழாமல் நின்று, பேதைக்குழவியென்னும்படியான முக்த(X)ப்ரஜையுடனேகூடக்குதித்தெடுத்து, அதினநவதாநத்தாலே வந்தவாபத்தைப்போக்கி ரக்ஷிக்கும் ஸ்நேஹயுக்தையான அந்தமாதாவைப்போலே (க) "சரணமாகும்தனதாளடைந்தார்க்கெல்லாம், மரணமானால் வைகுந்தங்கொடுக்கும்பிரான்" என்கிறபடியே, ஏதச்சரீராவஸாநத்திலே மோக்ஷமாமபடியான ப்ரபத்திவைபவத்தையும் அழித்து, நான்பண்ணின பாபத்தாலே இன்னமும் சிலஜன்மங்களையெடுக்கும்படியாய் ஆனேனேயாகிலும், இனி இப்படி கைகழிந்தபின் எனக்கு ஜநகராய் யதிகளுக்கு நாதரான வெம்பெருமானார் நான் பிறந்த ஜன்மத்துக்கீடாக, தாமுமென்னை யுத்தரிப்பிப்பதாக, *எதிர்சூழல்புக்கு அவதரித்தருளுவர். ஆகையால் அதில் எனக்கொரு நிர்ப்பந்தமில்லை. உடமைக்கொருமுழுக்கு, உடையவனுக்குடைமைபெறுந்தனையும் முழுகவேண்டுமபடியிறே யிருப்பது. (கசு)

(அ-கை) எம்பெருமானார், திருவடிகளையகன்று, அந்யபரஸ்கராயிருக்கையாலேயன்றோ ஜன்மத்துக்கடியான கர்மம் புகுருவது. இனி அந்தப்ரஸங்கமில்லாதபடி அவர் திருவடிகளைப் பொருந்திவாழென்று தன் திருவுள்ளத்தைக் குறித்தருளுகிறார்.

(க) தி-வாய-கூ-கo-ரு

பூமகள்கோன் தென்னரங்கர் பூங்கழற்குப்பாதுகமாய்
தாமகிழுஞ்செல்வச்சடகோபர்—தேமலர்த்தாட்
கேய்ந்தினியபாதுகமா மெந்தையிராமாநுசனை
வாய்ந்தெனது நெஞ்சமேவாழ். (௧௦)

பூமகள் = புஷ்பத்திலே் பரிமள மொரு வடிவு கொண்டாப்போலே யிருக்கிற பெரியபிராட்டியார்க்கு, கோன் = வல்லபரான, தென்னரங்கர் = பெரிய பெருமாளுடைய, பூங்கழற்கு, நிரதிசய போக்யமான திருவடித் தாமரைகளுக்கு. பாதுகமாய = பாதுகைகளாய், (அத்தாலே) தாமகிழும் = தாம் ஆநந்திக்கும், செல்வ = ஸாத்விகஜந ஸம்பத்தான, சடகோபர் = நம்மாழ்வாருடைய, தேன்மலர் = மதுஸ்யந்தியான புஷ்பமென்னலாம்படியான, தாளுக்கு = நிரதிசய போக்யமா யிருக்கிற திருவடிகளுக்கு, ஏய்ந்து = பொருந்தி, இனிய = ப்ரியமான, பாதுகமாம் = திருவடிநிலைகளாய், எந்தை = அடியேனுக்குத் தந்தையாய், அடியேனுடைய ஸ்வரூபஸத்தைக்குக் காரணபூதரான, இராமாநுசனை = இராமாநுசனென்று நிரூபகநாமத்தையுடையரான எம்பெருமானாரை, வாய்ந்து = ஆஶ்ரயித்து, எனது நெஞ்சமே = எனக்கு பவ்யமான மநஸ்ஸே, வாழ் = இந்த ஸம்பத்தைப் பெற்று வாழ். (ய)

(வ்யா-ம்) (௧)“பூமன்னுமாது பொருந்தியமார்பன்” இத்யாதிப்படியே, புஷ்பத்திலே பரிமளம் ஒருவடிவுகொண்டாப்போலே யிருக்கிற பெரியபிராட்டியாருக்கு வல்லபரான பெரியபெருமாளுடைய நிரதிஶயபோக்யமான, *பூவார்கழல்களுக்கு (௨) “அடிக்கீழமர்ந்து புகுந்தேன்” என்று ஸ்ரீசடகோபனாய், இப்படி *முகில்வண்ணனடியையடைந்து அத்தாலே (௩) “உற்றேனுகந்துபணிசெய்து” என்னும்படி தாம்ஹர்ஷிக்கும் ஸாத்விக ஜநஸம்பத்தான நம்மாழ்வாருடைய வகுளாபிராமமாய், மதுஸ்யந்தியான புஷ்பமென்றலாம்படி நிரதிசய போக்யமாயிருக்கிற திருவடிகளுக்கு, ஸ்வரூபப்ராப்தமாகையாலே அநுரூபமாய் (௪) “மேவினேனவன்பொன்னடி” என்னும்படி பொருந்தி அத்யந்தாபிமதமான திருவடிநிலைகளாய், என்னுடைய ஸ்வரூபஸத்தைக்குக் காரணபூதராய், இராமாநுஜனென்று நிரூபகத்தையுடையரான வெம்பெருமானாரை (௫) “இராமாநுசன்சரணாரவிந்தம் நாமன்னிவாழநெஞ்சே” என்கிறபடியே, எனக்கு பவ்யமான, மநஸ்ஸே! அநந்யப்ரயோஜநதையாலே பாதரேகைபோலேகிட்டி இந்தஸம்பத்தைப்பெற்றுவாழ். இத்தாலெம்பெருமானார்

(௧) இரா-நூ-௧-(௨) தி-வாய்-௬-௧௦-௧௦ (௩) தி-வாய்-௧௦-௮-௩ (௪) கண்ணி-௨

திருவடிகளில் ப்ராவண்யத்துக்கெல்லை நிலம் இவராகையாலே, அவர் திருவடி நிலைகளுக்கும் யதீந்த்ரப்ரவணரென்று நிரூபகமாக வேணுமிறே. "செல்வச்சடகோபர்" என்கிறதுக்கு (க) "தநம்மதீயம் தவபாதபங்கஜம்-धनं मदीयं तव पादपङ्कजम्" என்கிற செல்வத்தைப் பெற்றவராகவுமாம். எய்கை=பொருந்துகை, வாய்கை=கிட்டுகை.

(அ-கை.) (உ)"நிழலுமடிதாறுமானோம்" என்றும், (ந)"மேவினேனவன்பொன்னடி" என்றும் (ச) "रामानुजपदच्छाया-ராமாநுஜபதச்சாயா" என்றும் பேசும்படி, அத்யந்தபாரதந்த்ரராய் வாழுமவர்கள் பேற்றைப்பெறவேணுமென்று அபேக்ஷியாநின்றீர். அது நமக்கு அத்யந்தமந்தரங்கரான வடுகநம்பிபோல் வார்க்கன்றோ விடுத்திப்பதென்று திருவுள்ளக்கருத்தாக, அப்படியே த்வததநந்யதேவரான வடுகநம்பி நிஷ்டையை யடியேனுக்குமுண்டாக்கி, யாவதாத்மபாவி அடிமைகொண்டருளவேணுமென்கிறார்.

உன்னையொழிய வொருதெய்வம் மற்றறியா
மன்னுபுகழ்சேர் வடுகநம்பி—தன்னிலையை
என்றனக்கு நீ தந்தெதிராசா வெந்நாளும்
உன்றனக்கே யாட்கொள்ளுகந்து. (கக)

எதிராசா=எம்பெருமானாரே! உன்னையொழிய=தேவரையொழிய, ஒரு தெய்வமற்றறியா = (தேவர்க்கு உத்தேஶ்யரான பெருமாளையும் த்வதநுபவ கைங்கர்யாதிகளுக்கு நித்யஸத்ருவாகக் கருதி தேவரை யொழிய) வேறொரு பரதேவதையையு மறியாத, மன்னு=ஸ்திரமான, புகழ்=கீர்த்தியை, சேர்=அடைந்த, வடுகநம்பிதன்=வடுகநம்பி தம்முடைய, நிலையை=சரமபர்வநிஷ்டையை, என்றனக்கு=அதிலபேக்ஷையுடைய வடியேனுக்கு, நீதந்து = தேவர் ப்ரஸாதித்தருளி, எந்நாளும் = ஸர்வகாலத்திலும், உன்றனக்கே=தேவர்க்கே, (ரஸாவஹமாம்படி) ஆட்கொள் உகந்து = உகப்போடே அடிமைகொணடருளவேணும். (கக)

(வ்-ம்) யதிகளுக்கு நாதரானவரே! தேவரையொழிய தேவர்க்குத்தேஶ்யரான பெரியபெருமாளையும், த்வதநுபவ கைங்கர்யாதிகளுக்கு நித்யஸத்ருவாகக் கருதி, தேவரையொழிய வேறொருபர

(க) ஸ்தோ-ரத்ந (உ)பெரியதிருவ-நக (ந) கண்ணி-உ
(ச) எம்பார்தனியன்

தேவதைகளையு மறியாதிருப்பாராய் அத்தாலே ஸ்வரூபாநுரூபமான பரமஸ்லைப்ராப்தராய், இருகரையரன்றிக்கே பெருமதிப்பராயிருக்கிற வடுகநம்பி தம்முடைய சரமபர்வநிஷ்டையை அதிலபேக்ஷையையுடைய வடியேனுக்கு ப்ரஸாதித்தருளி, (க) "எனக்கேயாட்செய் யெக்காலத்தும்", என்கிறபடியே தேவர்க்கே ரஸாவஹமாம்படி, ஸர்வகாலத்திலு முகப்போடே அடிமைகொண்டருளவேணும். அங்கேபோகிலும் அவருகந்தவடியையேயாக வேணுமென்று கருத்து. மன்னுநிலைசேர் வடுகநம்பி யென்று பாடமானபோது, பொருந்தியிருக்கிற சரமபர்வநிஷ்டையாகவுமாம். (கக)

(அ-கை) நீர்சொல்லுகிறவருந் தேவைகளெல்லாம் நாம் செய்கைக்கடியான வுறவுண்டோ வென்றவருக்குக் கருத்தாக, உண்டென்று, பிள்ளை திருவடிகளிலே ஸம்பந்தம்பெற்றப்ரகாரத்தை ப்ரகாசிப்பிக்கிறார்.

தேசந்திகழுந் திருவாய் மொழிப்பிள்ளை
மாசில்திருமலை யாழ்வாரென்னை—நேசத்தால்
எப்படியே யெண்ணி நின்பால் சேர்த்தா ரெதிராசா
அப்படியே நீசெய்தருள். (கஉ)

தேசம் = இத்தேசங்களெல்லாம்; திகழும் = ப்ரகாசிக்கும்படியான ப்ரபாவத்தை யுடையராய், திருவாய்மொழிப்பிள்ளை = திருவாய்மொழியோட்டை ஸம்பந்தத்தையே தமக்கு நிரூபகமாக வுடையராய், மாசில்=தம்மிடத்திலே ஆசார்யத்வத்தை யேறிட்டுக்கொள்ளுகை முதலான க்ரூரநிஷித்தமான மாசில்லாமலிருக்கிற, திருமலையாழ்வார் = ஸ்ரீசைலநாதர், என்னை=தம்முடைய தயாபாத்ரமான வடியேனை, நேசத்தால=கருணையுமொருபமான ஸ்நேஹத்தாலே, எப்படியே யெண்ணி = இவனெப்படியாலுல் உஜ்ஜீவிப்பனென்று விசாரித்து, நின்பால்=ப்ராப்த சேஷியான தேவர்திருவடிகளிலே, சேர்த்தார் = சேர்த்தருளினாரோ? எதிராசா = எம்பெருமானாரே! அப்படியே நீ செய்தருள்=அப்படியே தேவரும் திருவுள்ளம்பற்றி உஜ்ஜீவிப்பித்தருளவேணும். (கஉ)

(அ-ம்) ஆழ்வாருடையவும் அவரடிபணிந்துய்ந்த தேவருடையவும் அபேக்ஷபேக்ஷவ்ருத்தியிலு மந்விதராய், ஜ்ஞாநபக்தி விரக்

(க) தி-வாய்-உ-கூ-௪

த்யாதிகளாலும் பூர்ணராய், அத்தாலே "திருவுடைமன்னரில்தேசு டையார்" என்று பேசும்படியான பெருமையையுடையவராகையாலே, திக்தேசங்களெல்லாம் பிரகாசிக்கும்படியான ப்ரபாவத்தையுடையராய், திருவாய்மொழியோட்டை ஸம்பந்தத்தையே தமக்கு நிரூபகமாகவுடையராய், தம்மிடத்திலே ஆசார்யத்வத்தையேறிட்டுக்கொள்ளுகை முதலான க்ரூரநிஷித்தமான மாசின்றிக்கேயிருப்பாராயிருக்கிற ஸ்ரீசைலநாதன் தம்முடைய தயாபாத்ரமானவென்னை, கருணைபரிணாமரூபமான ஸ்நேஹத்தாலே, இவனெப்படியாலுமுஜ்ஜீவிக்குமென்று விசாரித்து, ப்ராப்தசேஷியான தேவர் திருவடிகளிலே சேர்த்தருளினார். அப்படியே தேவரும் திருவுள்ளம்பற்றி உஜ்ஜீவிப்பித்தருளவேணும். (சஉ)

(அ-கை) தாம் †நிர்ப்பந்தித்தபடிகளெல்லாம் ‡கொண்டருளும்படி ஸுலபரான வெம்பெருமானாருடைய ஸௌந்தர்யாதிகளிலே தோற்றுத்தாம் மங்களாசாஸநம்பண்ணி, அவ்வளவில் நில்லாதே, ஸம்பந்த ஸம்பந்திகளளவும்சென்று அத்தால்பெற்ற பேற்றை அந்யபதேசத்தியாலே யருளிச்செய்கிறார்.

எதிராசன்வாழி யெதிராசன்வாழி
எதிராசன்வாழி யென்றென்றேத்தி — சதிராக
வாழ்வார்கள் தாளிணைக்கீழ் வாழ்வார்கள் பெற்றிடுவர்
ஆழ்வார்கள் தங்களருள். (சங)

எதிராசன்வாழி எதிராசன்வாழி எதிராசன்வாழி = யதிராசருக்கு மங்களமுண்டாகுக - யதிராசருக்கு மங்களமுண்டாகுக - யதிராசருக்கு மங்களமுண்டாகுக, என்றென்று = இப்படி பலகாலும் சொல்லி, ஏத்தி = ஸ்துதித்து, சதிராக = ஸாமர்த்யமாக, வாழ்வார்கள் = வாழுமவர்களுடைய, தாளிணைக்கீழ் = திருவடிகளின்கீழே, வாழ்வார்கள் = வாழுமவர்கள், ஆழ்வார்கள் தங்களருள் = ஆழ்வார்கள் பதின்மருடைய வருளையும், பெற்றிடுவர் = பத்தும் பத்தாகப் பெற்றிடுவர்கள். (சங)

(வ்யா-ம்) அவர் தாம் திருப்பல்லாண்டுமுகேந பஹுப்ரகாரமாக பகவத்விஷயத்திலே மங்களாசாஸநம்பண்ணுமதெல்லாம், தாமிவ்விஷயத்திலே, "எதிராசன்வாழி" என்றுதுடங்கி அத்தையே

† அநுஸந்தித்தபடி ‡ கேட்டருளும்படி

பலகாலும்சொல்லி ஸ்துதித்து, (க) "அடியேன்சதிர்த்தேனின்றே" என்கிறபடியே, சரமபர்வத்திலே நிஷ்டராய், அத்தாலே ஸாமர்த்த்யமாகவாழுமவர்களுடைய திருவடிகளின்கீழ், தாய்நிழலிலே யொதுங்குமாபோலே யொதுங்கி, (உ) "நின்தாளிணைகீழ்வாழ்ச்சி" என்னும்படி யதுவே வாழ்வாக வாழுமவர்கள் *மயர்வறமதிநலம் அருளப் பெற்றவர்களாய், அத்தாலே *அருள்கொண்டாடுமடியவராய், அதிலும், (ந) *எல்லையிலடிமைத்திறத்தினிலென்றும்மேவுமனத்தனராயிருக்கிற வாழவார்கள் பதின்மருடையவருளையும், பக்தும்பத்தாகப் பெற்றுவிடுவர்கள். (ச) "[illegible]-தயோமாம்தயோரா" என்னக் கடவதிறே. இத்தாலிவர்களுக்கு சரமாவதிதாஸ்யம் நிலைநிற்கும்படி கடாக்ஷிப்பர்களென்றபடி. முதல்பாட்டிலே மங்களாஸாஸநபருடைய ஸம்பந்தஸம்பந்திகளை *அயர்வறுமமரர்கள் ஆதரிப்பரென்றார். இதில் அவர்களை *மயர்வறமதிநலமருளப் பெற்றவர்களாதரிக்கும்படியை யருளிச்செய்கிறார். (௧௩)

(அ-கை) "தேசந்திகழும்" என்கிறபாட்டோடே இப்பாட்டுக்கு ஸங்கதி. நடுவில்பாட்டு ப்ராஸங்கிகம். உம்முடைய வாசார்யர், நம்பக்கலிலே யாஸ்ரயிப்பித்த வந்தவாஸ்ரயணமே, உம்முடைய பேற்றுக்கு ஸாதநமாகச் சொல்லாநின்றீர். அந்தவாஸ்ரயணபலம் போருமோ? ஏதேனும் பேற்றுக்குடலான வதிகாரஸம்பத்து உம் பக்கலிலே வேண்டாவோவென்று, மீளவும் எம்பெருமானார்க்குத் திருவுள்ளக்கருத்தாக வதுக்கிடான வதிகாரமுண்டாகில், தேவரை யபேக்ஷிக்கவேணுமோ? அப்படிப்பட்ட யோக்யதையில்லாதார்க்கன்றோ தேவரை யபேக்ஷிக்கவேண்டுவது. ஆகையால், அதிகாரஸூந்யரான வகதிகளை தேவரீர் ரக்ஷியாவிடில் வேறு புகலுண்டோ வென்கிறார்.

அதிகாரமுண்டே லரங்கரிரங்காரோ
அதிகார மில்லாதார்க்கன்றோ—எதிராசா
நீயிரங்கவேண்டுவது நீயுமதிகாரிகளுக்
கேயிரங்கி லென் செய்வோம் யாம். (௧௪)

(க) கண்ணி (உ) தி-வாய்-௩-உ-௪ (ந) பெருமாள்திரு-உ-௧0
(ச) ர-ஸ்தக-௪௧

அதிகாரமுண்டேல்=ஜ்ஞாநாநுஷ்டாந பூர்த்தியாகிற அதிகாரமுண்டானால், அரங்கரிரங்காரோ=பெரியபெருமாள் இரங்கியருளாரோ? அதிகார மில்லாதார்க்கன்றோ = அப்படிப்பட்ட அதிகார மில்லாதவர்களுக்கன்றோ, எதிராசா=எம்பெருமானாரே! நீயிரங்கவேணுமது = தேவரீரிரங்கி ரக்ஷித்தருள வேண்டுவது, நீயுமதிகாரிகளுக்கே யிரங்கில் = கதியற்றவர்களுககே கதியாயிருக்கிற தேவரும் அதிகார ஸம்பத்தையுடையவர்களுக்கே க்ருபைபண்ணி ரக்ஷிக்கில், என் செய்வோம் யாம்=அநதிகாரிகளாயிருக்கிற அஸ்மதாதிகள் என்னயோகயதையை யுபபாதித்துக்கொண்டு உஜ்ஜீவிக்கப்போகிறோம்? (அநாதி காலத்தோபாதி யிழந்தே போமித்தனையன்றோ?). (கஅ)

(வ்-ம்) (க)"புண்ணந்துழாமேபொருநீர்த்திருவரங்காவருளாய்" என்றத்தை யர்த்தித்தவர்களுக்கு (உ)"அருள்சூடியுய்ந்தவன"என்னும்படி, தாத்ருஶாதிகார முண்டானவர்களுக்கன்றோ பெரியபெருமாளிரங்கி யருளுவது. அப்படிப்பட்ட வதிகாரமில்லாத மாத்ருஶருக்கன்றோ யதிகளுக்கு நாதரானவரே! தேவரீரிரங்கி ரக்ஷித்தருள வேண்டுவது. அகதிகளுக்கே கதியாயிருக்கிற வீத்ருஶஸ்வபாவரான தேவரு மதிகாரஸம்பத்தை யுடையவர்களுக்கே க்ருபைபண்ணிரக்ஷிக்கில், அநதிகாரிகளாயிருக்கிற அஸ்மதாதிகளெந்த யோக்யதையை யுபபாதித்துக்கொண்டுஜ்ஜீவிக்கப்புகுகிறோம். அநாதிகாலத்தோபாதி யிழந்தேபோமித்தனையன்றோ? (கஅ)

(அ-கை) (ங)"இராமாநுசன்மிக்கபுண்ணியன்"என்னும்படி பரமதார்மிகராயிருக்கிற வவரை யடுத்தடுத்துப் பழியிடாநின்றோம். நாம் அவர் திருவடிகளை ஸஸ்நேஹமாக வநுஸந்தித்தால் அவர்தாமே யெல்லாம் செய்தருளுவராகையாலே, தத்விஷயஸ்நேஹந் தானுண்டோவென்று ஆனவளவும்பார்த்து, அது தமக்கத்யாவஸ்யபிஇல்லையென்று விஷண்ணராகிறார்.

எம்பெருமானார் திருவடிகளே சரணம்

என்பதுவே நாவுரைக்கு மித்தாலென்—அன்பவர்பால்
இப்போதளவும் யாதொன்றுங் காண்கின்றிலேன்
எப்போதுண்டாவதினி. (கக)

(க) திருவிரு-உஅ (உ) தி-வாய்-எ-உ-கக (ங) இரா-நூ

எம்பெருமானார் திருவடிகளே சரணம் = எமக்கு ஸ்வாமியான யதிராசருடைய திருவடிகளே ரக்ஷகம், என்பதுவே = என்று சொல்லப்படுகிற இந்த வாசகத்தையே, நாவுரைக்கும் = என் நாவானது ப்ரேமமின்றிச் சொல்லாநிற்கும். இத்தாலென் = இத்தாலென்ன ப்ரயோஜநம்? அன்பு = ப்ரேம புரஸ்ஸரமான பக்தி, அவர்பால் = அவர்விஷயத்தில், இப்போதளவும் = இந்த க்ஷணபர்யந்தமும், யானொன்றுங் காண்கின்றிலேன் = (ப்ரேமலேசமற்றிருக்கிற) அடியேனொன்றுங் காண்கிறிலேன், எப்போதுண்டாவதினி = இப்போதில்லாதது இனியெப்போதுண்டாகப்போகிறது? (கரு)

(வ்-ம்) பிள்ளைகொல்லி காவல்தாஸருக்கு ஸ்வரூபோஜ்ஜீவநமாயும், ஸோமயாசியாண்டானுக்கு நித்யப்ராப்யமாயுமிருக்கிற "எம்பெருமானார் திருவடிகளேசரணம்" என்று சொல்லப்படுகிற இந்த வாசகத்தையே, அஹ்ருதயமாக வென்நாவானது சொல்லாநிற்கும்; இப்படி நிஸ்ஸ்நேஹியாகத் திருநாமம் சொல்லுகிறவித்தாலே, (க) "சார்ந்ததென்சிந்தையுன்தாளிணைக்கீழன்பு தான்மிகவும்கூர்ந்தது" என்கிறபடியே, விஷயாநுகுணமாக வென்னுடைய ஸ்நேஹமானது, அவர்விஷயத்திலே சாமதஸாபந்நமான விக்காலத்தளவும், ப்ரேம லேசமற்றிருக்கிற நான்காண்கிறிலேன். இனி யிப்போதில்லாத தெப்போது உண்டாகப்புகுகிறது. இத்தாலென்னென்று-நிஸ்நேஹியாகத் திருநாமஞ்சொல்லுகிற வித்தாலென்ன ப்ரயோஜநமென்னவுமாம். அடியிலே "இராமாநுசாயநம:" என்று உத்தரவாக்ய தாத்பர்யத்தையும், இதில் "எம்பெருமானார் திருவடிகளேசரணம்" என்று பூர்வவாக்ய தாத்பர்யத்தையும் வெளியிட்டருளுகிறார். (கரு)

(அ-கை) நம்பக்கலுமக்காநுகூல்யமான ப்ரேம லேசமில்லாவிடில், ப்ராதிகூல்யநிவ்ருத்தி தானுண்டோவென்ன? அதுவுமில்லை. அப்படிப்பட்ட வஜ்ஞனையடியேனுடைய தோஷத்தை போக்யமாகக் கொண்டருளுகிற தேவர் திருவடிகளை என்று தான் ப்ராபிப்பேனென்கிறார்.

ஆகாத தீதென் றறிந்தும் பிறர்க்குரைத்தும்
ஆகாததே செய்வ னாதலால்—மோகாந்தன்
என்றுநினைத்தென்னை யிகழேலெதிராசா
என்றுன்னடி சேர்வன்யான். (கசு)

(க) இரா-நூ

ஆகாதது = ஸத்துக்களால் பரித்யஜிக்கப் படுவதான த்யாஜ்யம், ஈதென்று = இன்னதென்று, அறிந்தும் = தெளியவறிந்தும். பிறர்க்குரைத்தும் = (இப்படி யறிந்தவளவின்றிக்கே) பரோபதேசம் பண்ணியும், ஆகாததே செய்வன் = அந்த நிஷித்த க்ருத்யத்தையே நித்யாநுஷ்டாநமாக நடத்தாநிற்பன்; ஆதலால் = இப்படிச் சொல்லுவதொன்று செய்வதொன்றாகையாலே, மோகாந்தனென்று = மோஹத்தாலே அந்தகனென்று, நினைத்து = திருவுள்ளம்பற்றி, என்னை = அடியேனை, இகழேல் = உபேக்ஷிக்க வேண்டாம், எதிராசா = எம்பெருமானாரே! என்று = எப்போது, யான் = அடியேன், உன் = தேவருடைய, அடி = திருவடிகளை, சேர்வன் = அடையக்கடவேன்? (௧௯)

(வ்-ம்) ஸத்துக்களால் பரித்யஜிக்கப்படுமதான த்யாஜ்யமின்னதென்று தெளியவறிந்தும், இப்படியறிந்தவளவன்றிக்கே, பரோபதேசம்பண்ணியும், அந்த நிஷித்தக்ருத்யந் தன்னையே நித்யாநுஷ்டமாக நடந்தாநிற்பன். இப்படி சொல்லுவதொன்று செய்வதொன்றாகையாலே, மோஹாந்தனென்று திருவுள்ளம்பற்றி உபேக்ஷியாமல் ரக்ஷித்தருளுகிறவரே! இனி யிஸ்ஸாதநாநுஷ்டாநம் பண்ணினநான் (௧)"எந்நாள் யானுன்னை யினிவந்துகூடுவன்" என்கிறபடியே, என்று தான் தேவர் திருவடிகளை, அடையக்கடவேன். இனி யிழந்தேபோமத்தனையன்றோ?; அன்றிக்கே இப்படி மோகாந்தனாய் முன்னடிதோன்றாதே யிருக்கிற வடியேனுக்குத் தளப்பம்தீரும்படி, ஸர்வஜ்ஞரான தேவரொருநாளவதியிட்டுத் தந்தருளவேணுமென்கிறாராகவுமாம். (௧௯)

(அ-கை) கீழ்நாளவதியிட்டுத் தந்தருளவேணுமென்று அபேக்ஷித்தவிவருக்கு, அப்படியே (௨) "மரணமானால்" என்று ஸரீரவியோகஸமயத்திலே பரந்தாமமென்னுந் திவந்தருகிறோமென்று, எம்பெருமானார்க்குக் கருத்தாகவெண்ணி, இப்படி தருகிறோமென்கிற தேவரீர் கடுகச்செய்தருளாமல், தாழ்க்கைக்கு ஹேதுவேது என்கிறார்.

பொல்லாங்கனைத்தும் பொதிந்துகொண்டு நன்மையிலொன்
றில்லாவெனக்கு மெதிராசா—நல்லார்கள்

---

(௧) தி-வாய்-௩-௨-௧ (௨) தி வாய்-௯-௧௦-௫.

நண்ணுந்திருநாட்டை நான்தருவேனென்ற நீ
தண்ணென்றிருக்கிறதென்றான். (கள)

பொல்லாவகு = துஷ்க்ருத்யங்கள், அனைத்தும் = எல்லாவற்றையும், பொதிந்துகொண்டு = தகட்டில் பதித்தாப்போல் பதித்துக்கொண்டு, நன்மையில் = ஸத் க்ருத்யங்களில், ஒன்றில்லா = லவலேசமுமில்லாத, எனக்கும் = அடியேனுக்கும், எதிராசா = எம்பெருமானாரே! நல்லார்கள் = ஸத்புருஷர்கள், நண்ணும் = அடையத்தக்க, திருநாட்டை = பரமபதத்தை, நான்தருவேனென்ற நீ = (நம்மோடுண்டான ஸம்பந்தமடியாக) நாமே தருகிறோமென்றருளிச்செய்த தேவரீர், தண்ணென்றிருக்கிறதென்றான் = விளம்பம் செய்துகொண்டிருக்கிறது என்னகாரணம்? (அநந்யகதியாய் அகிஞ்சநனாயிருக்கிற வடியேனுக்குப் பரமபதத்தை ஶீக்ரத்தில் ப்ராபித்தருள வேணுமென்று கருத்து). (கள)

(வ்-ம்) (க)"நீசனேன்நிறைவொன்றுமிலேன்" (உ)"ஒక్రుతేసుక్రు తేక్ష-அக்ருதஸுக்ருதக:" இத்யாதிபடியே, அநாத்மகுணபரிபூர்ணனாய், ஆத்மகுணலேஶகந்தாஹிதனாய், அத்யந்தநிக்ருஷ்டனாயிருக்கிற வெனக்கும் (ங)"ப்రాప్యమర్చిః పదాసక్య ప్రద్యోతః పరమంపదమ్-ப்ராப்யமர்ச்சிஃபதாஸக்தஸ்தத்விஷ்ணோஃபரமம்பதம்" என்று ஸத்துக்களாலே ப்ராபிக்குமதாயிருக்கிற திருநாட்டை, நம்மோடுண்டான ஸம்பந்தமடியாக நாமேதருகிறோமென்று அருளிச்செய்த தேவரீரிப்போது தாழ்த்திருக்கைக்கு ஹேதுவெதுதான்; வேறேசிலர் ரக்ஷகருண்டென்றோ? தானே ஸாதநாநுஷ்டாநம் பண்ணிவருகிறானென்றோ? எத்தாலேதான் தாழ்க்கிறது. அநந்யகதியாய் அகிஞ்சநனாயிருக்கிற வடியேனுக்கு ஶீக்ரமாக ப்ராப்யதேஶத்தை ப்ராபித்தருள வேணுமென்று கருத்து. (கள)

(அ-கை) இவருடைய வபேக்ஷிதத்தை அவரும் செய்வாராக வநுமதிபண்ணியிருக்க, (ச)"அவனருள்பெறுமளவாவிநில்லாது" என்கிறபடியே க்ரமப்ராப்திபற்றாமல், (ரு)*ஊரெல்லாந்துஞ்சியிலவஸ்தையை ப்ராப்தராய்என்னுடைய ஸம்ஸாரமாகிற *விடியாவெந்நரகமான காளராத்ரிக்கு என்றொருநல்விடிவு பிறக்குமென்று மீளவும் *ரமாநுஜதிவாகரரானவவர் தம்மையே கேட்கிறார்.

(க) தி-வாய்-ங-ரு-ச (உ) வரத-ஸ்த- (ங)
(ச) தி-வாய்க-க ரு (ரு) தி-வாய்-ரு-ச

என்றுவிடிவதெனக் கெந்தா யெதிராசா
ஒன்றுமறிகின்றிலே னுரையாய்—குன்றாமல்
இப்படியே யிந்தவுயிர்க்கென்று மிருளேவிளைக்கும்
இப்பவமாம் நீண்டவிரவு. (கஅ)

எந்தாய்=அடியேனுக்குப் பிதாவாகிய, எதிராசா = யதிகளுக்கு நாதரானவரே! குன்றாமல்=குறையாமல், இப்படியே=இந்தப்ரகாரமே, இந்த உயிர்க்கு = இந்த ஆத்மவஸ்துவுக்கு, என்றும் = எக்காலமும், இருளே விளைக்கும் = அஜ்ஞாநாந்தகாரத்தையே விளைக்கும், இப்பவமாய் = இந்த ஸம்ஸாரமாகிற, நீண்டவிரவு = பெரிய நீளிரவு-காளராத்ரி, என்று விடிவதெனக்கு = அஜ்ஞாநாந்தகாரத்தி லகப்பட்டுக்கொண்டு வழிதெரியாமல் திகைத்துக்கொண்டிருக்கிற அடியேனுக்கு ராமாநுஜ திவாகரராகிய தேவருடையதர்ஶநயோகயமான ஸுப்ரபாதமாக எப்போதாகும்? ஒன்றுமறிகின்றிலேன் = ஏதத் விஷயமான ப்ரதிக்ரியை யொன்றுமறிகிறிலேன், உரையாய = ஸர்வஜ்ஞரான தேவர் இதுக்கொரு நல்விடிவு கண்டருளிச் செய்யவேணும். (கஅ)

(வ்-ம்) எனக்கு ஜநகராய் யதிகளுக்கு நாதரானவரே! தன்னுடைய வாகாரத்தில் சற்றும் குறைதலின்றிக்கே, ஏவம்விதரூபேண விந்தவாத்மாவுக்கு ஸர்வகாலத்திலும் ஜ்ஞாநோதய லேஶமின்றிக்கே அஜ்ஞாநாந்தகாரத்தையே விளைப்பதான (க) "భవదుర్దినఽ-பவதுர்திநம்" என்னும்படி ஸம்ஸாரமாகிற பெரியநீளிரவானது, (க) "అవివేకఘనాన్ధదిఙ్ముఖే-அவிவேககநாந்ததிங்முகே" இத்யாதிப்படியே பதஸ்கலிதனாய் வழிதிகைத்தலமருகின்ற வெனக்கு எந்தகாலம் த்வத்தர்ஶநயோக்யமான ஸுப்ரபாதமுண்டாவது! அஜ்ஞாநதிமிராந்தனான நான், ஏதத்விஷயமான ப்ரதிக்ரியை யொன்றுமறிகிறிலேன். (உ) "నిఖిలకుమతిమాయాశర్వరీబాలసూర్యః-நிகிலகுமதிமாயாஶர்வரீபாலஸூர்ய:" என்னும்படி ஸர்வஜ்ஞரான தேவர் (௩) "సుప్రభాతాద్యరజనీ-ஸுப்ரபாதாத்யரஜநீ" என்னும்படி இதுக்கு ஒரு விடிவுகண்டருளிச்செய்யவேணும். குன்றுதல்=குறைதல்; பவம்=ஸம்ஸாரம். (கஅ)

(அ-கை) கீழ் ஸம்ஸாரமாகிற காளராத்ரிக்கு அவதிகண்டருளிச்செய்ய வேணுமென்றார். இதில் தத்கார்யமான தேஹஸ்

(க) ஸ்தோ-ரத்ந (உ) யதிராஜஸப்ததி (௩) வி-பு-ஒ-கஎ

கரதை முதலான வென்னுடைய நிஹீந்வ்யாபாரமும், தேவர்க்கவத்யாவஹமன்றோ வென்கிறார்.

அல்லும் பகலும் யானுக்கை வழியுழன்று
செல்லுமதுன் தேசுக்குத்தீங்கன்றோ—நல்லார்கள்,
தந்தையர் நீசர்க்காட் செய்யச் சகிப்பரோ
எந்தை யெதிராசா விசை. (சக)

அல்லும் பகலும் = இரவும் பகலும், யான் = அடியேன், ஆக்கை வழியுழன்று = சரீரமார்க்கத்தில் சஞ்சரித்து தேஹ கிங்கரனாய், செல்லுமது = ப்ரவர்த்திப்பது, உன் தேசுக்கு = தேவருடைய ப்ரபாவாதிக்யத்துக்கு, தீங்கன்றோ = ஹாநியன்றோ? (அதெப்படி யெனில்) நல்லார்கள் = ப்ரஹ்ம விதக்ரேஸரரா யிருக்கிற ஸத்புருஷர்கள், தந்தையர் = தமபுதல்வர், நீசர்க்காட்செய்யச் சகிப்பரோ = அத்யந்த நிஹீநரான நீசர்கு நிஹீந வ்ருத்திகள்செய்யப் பொறுப்பரோ? எந்தை யெதிராசா = அடியேனுக்குத் தந்தையாய், யதிகளுக்கு நாதரானவரே! இசை = இத்தைத்தேவர்தாமே யருளிச் செய்யவேணும். (சக)

(வ்-ம்) (க)"உன்நாமமெல்லாம் என்றன் நாவினுள்ளே யல்லும்பகலுமமரும்படி நல்க" என்கிறபடியே தேவருடைய திருநாமஸங்கீர்த்தநாத் யநுபவகைங்கர்யங்களுக்கு யோக்யமான காலமெல்லாம் (உ) "அந்நாள்நீதந்தவாக்கையின்வழியுழல்வேன்" என்கிறபடியே தேஹ கிங்கரனாய், அதுவே யாத்ரையாய்த்திரிகிறது. (ந)"உனக்குப்பணி செய்திருக்கும்" இத்யாதியிற்படியே தேவர்க்கு தேஜோஹாநியன்றோ? அதுஎப்படி யென்னில், ப்ரம்ஹவிதக்ரேஸரராயிருக்கிற ஸத்துக்கள் தங்கள்புத்ராதிகளை அத்யந்தநிஹீநரான நீசர்க்கு நிஹீநவ்ருத்திகள் செய்யக்ஷமிப்பரோ? (இசை), எனக்கு ஜநகராய் யதிகளுக்கு நாதரானவரே! இத்தை தேவரீர்தானே ஸம்மதித்தருளீர். ஆகையாலத்தைத்தவிர்த்து, இவ்வாத்மாவுக்கு ஶேஷியானதேவரே! அநவரத மடிமைகொண் டருளவேணுமென்று கருத்து. தேசு=பெருமதிப்பு. (சக)

(அ-கை) இவரிப்படி "நல்லவர்கள் தய்தநயர் நீசர்க்காட்செய்யச்சகிப்பரோ" என்றவாறே *நல்லார்பரவுமிராமாநுசனை வெம்

(க) இரா-நூ-தனியன் (உ) தி-வாய்-ந-உ-க (ந) பெரி-தி-கு-கு-ந-ந

பெருமானார் இவரிங்ஙனே சொல்லப்பெறுமோ வென்று அத்தை ஸஹியாமல் *நல்லார்கள் நண்ணும் திருநாட்டிலே நல்லவமரரோடே ஒருகோவையாக்கி, அவர்களநுபவ கைங்கர்யத்தை யிவர்க்குண்டாக்கவேணுமென்கிற வ(்ய)பிஸந்தியை யுடையராயிருக்கிற வாகாரத்தைக்கண்டு, இனிப் பேறுதப்பாதென்றத்யவஸித்து, அர்ச்சிராதி மார்க்கத்தாலே, தேஶவிஶேஷத்தேறப்போய், பரமாத்ம ஸத்காரபர்யந்தமான பலபரம்பரைகளையெண்ணி, அத்தைத் தாம்பெற்றதாக த்ருஷ்டராகிறார்.

எண்சீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

போம்வழியைத்தருமென்னு மின்பமெல்லாம்
புசித்துவழிபோயமுத விரசையாற்றில்
நான்மூழ்கி மலமற்றுத் தெளிவிசும்பை
நண்ணி நலந்திகழ்மேனி தன்னைப்பெற்றுத்
தாமமரர்வந்தெதிர் கொண்டலங்கரித்துச்
சற்கரிப்ப மாமணி மண்டபத்துச் சென்று
மாமலராள்கோன் மடியில் வைத்துகக்கும்
வாழ்வுநமக் கெதிராச னருளும் வாழ்வே. (உ0)

போம் வழியை = பரமபதத்துக்குப் போயநுபவிக்குமாநந்தம் பரிச்சின்னமென்னும்படி நிரவதிகபோகயமான அர்ச்சிராதிமார்க்கத்தை, தரும் = கொடுக்கும், என்னும் = என்கிற, இன்பமெல்லாம் = அவ்வழியிலுண்டான வின்பமெல்லாம், புசித்து = அநுபவித்து, வழிபோய் = அர்ச்சிராதி மார்க்கத்தால் சென்று, அமுதவிரசையாற்றில் = அம்ருதமயமான விரஜாநதியில், நாம்மூழ்கி = தாபத்ரய துக்கங்களெல்லாந் தீர நாம் தீர்த்தமாடி, மலமற்று = ப்ராக்ருதங்களான மலங்களெல்லாம் கழிந்து, தெளிவிசும்பை = பரிசுத்தமான பரமபதத்தை, நண்ணி = கிட்டி, நலந்திகழ் மேனிதன்னைப்பெற்று = ஸ்வரூப குணங்களெல்லாம் ப்ரகாசிக்கும்படி ஶுத்த ஸத்வ மயமான அப்ராக்ருத திவ்யதேஹத்தைப்பெற்று, அமரர்தாம = நித்யஸூரிகள், வந்து = எழுந்தருளி, எதிர்கொண்டு = ப்ரத்யுத்கதராய், அலங்கரித்து = ப்ரஹ்மாலங்காராதிகளாலே யலங்கரித்து, சற்கரிப்ப = ஸத்கரிக்க, (அவர்களுடனேகூட) மாமணிமண்டபத்துச்சென்று = திருமாமணி மண்டபத்திலே சென்று, மாமலராள்கோன் = ஶ்ரிய:பதியான ஸ்ரீவைகுண்டநாதன், மடியில்வைத்துகக்கும் = மடியிலே வைத்து உச்சிமோந்து உகந்தருளுக்கும், வாழ்வு = ஸம்பத்து, எதிராசன் = எம்பெருமானார், நமக்கருளும் வாழ்வே =

இதில் அபேக்ஷையுடைய நமக்கு அருள்கொடையாக ப்ரஸாதித்தருளும் ஸம்பத்தே! (௨௦)

(வ்-ம்) (க) "போம்வழியைத்தரும்" என்கிறவாழ்வார் திவ்ய ஸூக்திப்படியேபோய்ப்புகுகிற தேசவிசேஷத்தில் ஸத்காரமெல்லா மொருசிருங்காயென்னும்படி அபரிச்சேத்யமான மார்க்கஸத்கார ஸுகத்தையெல்லாம் அநுபவித்து, கள்வன்கொல்லிப்பிராட்டியைப் போலே அவன்முன்னே வழிநடத்தப்பின்னேபோய், "విరజామమృతాకారాంమాంప్రాపయమహానదీమ్- விரஜாமம்ருதாகாராம்மாம்ப்ராப்யமஹா நதீம்" என்கிறபடியே அம்ருதவாஹிநியாய், விரஜையென்று பேரையுடைத்தான வந்நதியிலே தாபத்ரயதுக்கங்களெல்லாந்தீர நாமவகாஹித்து, அநந்தரம் ஸ்வரூபத்துக்கு திரோதா(ய)யகமான ப்ராக்ருதங்களான மலங்களெல்லாம் கழிந்து, *தெளிவிசும்புதிருநாடென்கிற ப்ராப்யதேசத்தைக்கிட்டி, ஸ்வரூபகுணங்களெல்லாம் ப்ரகாசிக்கும்படி ஶுத்தஸத்வமயமான வப்ராக்ருத திவ்யவிக்ரஹத்தை லபித்து, பஹுமந்தவ்யரான நித்யஸூரிகள் தாங்கள் ப்ரத்யுத்கதராய், ப்ரம்ஹாலங்காராதிகளாலே யலங்கரித்து ஸத்கரிக்க, அவர்களுடனேகூட திருமாமணிமண்டபத்திலே சென்று, ஶ்ரியப்பதியான ஸ்ரீவைகுண்டநாதன் (௨) "అఙ్కేభరతమారోప్యముదితఃపరిషస్వజే- அங்கே பரதமாரோப்யமுதிதஃபரிஷஸ்வஜே" என்கிறபடியே மடியிலேவைத்து உச்சிமோந்து உகந்தணைக்கும் ஸம்பத்தை எதிராசரான வெம்பெருமானார் இதிலபேக்ஷையையுடைய நமக்கருள்கொடையாக ப்ரஸாதித்தருளும் ஸம்பத்தே; இதொரு பேறிருந்தபடியே. (௨௦)

(அவதா) எத்தனையேனுமதிஶயித ஜ்ஞாநராயிருப்பார்க்கும் அப்ராப்யமாயிருக்கிற பேற்றை நீர்பெற்றதாகப் பேசாநின்றீர். அது நமக்கு ஸுலபமாயிருந்ததோவென்று தம் திருவுள்ளக்கருத்தாக, நம்முடைய வாசார்யரான பிள்ளை நிர்ஹேதுகமாகவுபகரித்தருளின ஜ்ஞாநத்தைக்கொண்டு, அவருடைய வபிமாநமே உத்தாரகமென்று நீ அத்யவஸித்திரு. பெறுதற்கரிய பேற்றை எம்பெருமானாரே பண்ணியருளுவர். ஆகையால் விதுவிஷயமாக "నిర్భయోనిర్భరోస్మి - நிர்ப்பயோநிர்ப்பரோஸ்மி" என்றிருக்கிற நமக்கு என்னபயமென்கிறார்.

(க) தி-வாய்-௩-௯-௩. (௨) ரா-யு ௧௩௦-௪௧.

கட்டளைக் கலித்துறை.

திருமலையாழ்வார் திருவாய் மொழிப்பிள்ளை சீரருளால்
தருமதி கொண் டவர்தம்மை யுத்தாரகராக வெண்ணி
இருமனமே யவர்க்கா யெதிராச ரெமைக்கடுகப்
பரமபதந்தன்னிலேற்றுவ ரென்னபயம்நமக்கே. (௨௧)

திருமலையாழ்வார் = ஸ்ரீசைலேசரென்னும் திருநாமத்தையுடைய, திருவாய் மொழிப்பிள்ளை = திருவாய்மொழிப்பிள்ளை தம்முடைய, சீரருளால் = நிர்ஹேதுக க்ருபையாலே, தரும = ப்ரஸாதித்தருளும், மதி = ஜ்ஞாநத்தை, கொண்டு = ஸாதநமாகக்கொண்டு, அவர்தம்மை = இப்படி மஹோபகாரகரா யிருக்கிற அந்தப்பிள்ளையை, உத்தாரகராக = ஸம்ஸாரத்தில் நின்று முத்தரிப்பவராக, எண்ணியிருமனமே = மநஸ்ஸே! அத்யவஸித்திரு. அவர்க்காய் = இப்படி நமமாசார்யரான பிள்ளைக்காக, எதிராசர் = எம்பெருமானார், எமை = ஸ்வாசார்யாபிமாநமே உத்தாரகமென்றிருக்கிற நம்மை, கடுக = சீக்ரமாக, பரம்பதந்தன்னில் = பரமபதத்திலே, ஏற்றுவர் = ஏற்றியருளுவர். என்னபயம நமக்கே = ஏதத் விஷயமாக நமக்கென்ன பயம? (ஒருபயமும் வேண்டாம். (மார்பிலே கைவைத்து நிர்ப்பயரா யுறங்குமத்தனை யன்றோ வென்று கருத்து). (௨௧)

(வ்-ம்) திருமலை யாழ்வாரென்று நிரூபகத்தையுடையவராய், பின்பு திருவாய்மொழி யிலவகாஹநத்தாலே ததேகநிரூபணீயரா யிருக்கிற பிள்ளை தம்முடைய நிர்ஹேதுக க்ருபையாலே ப்ரஸாதித்தருளும் "பொருவில்மதி" என்னும்படியான தத்விஷயஜ்ஞாநத்தை ஸாதநமாகக்கொண்டு, அந்த ஜ்ஞாநபலமாக இப்படி மஹோபகாரகராயிருக்கிற அந்தப்பிள்ளையை "ఉత్తారయతిసంసారాత్తదుపాయప్లవే నతு-உத்தாரயதிஸம்ஸாராத்ததுபாயப்லவேநது" என்கிறபடியே ஸம்ஸாரத்தில் நின்றும் உத்தரிப்பிக்குமவராக மநஸ்ஸே! அத்யவஸித்திரு. இப்படி நம்மாசார்யரான பிள்ளைக்காக யதிகளுக்கு நாதரான வெம்பெருமானார் தாமே †ஸ்வாசார்யாபிமாநமே உத்தாரகமென்றிருக்கிற நம்மையென்றுகொண்டு, சீக்ரமாக (க) "ஏற்றரும்வைகுந்தம்" என்று துஷ்ப்ராபதமாகச் சொல்லப்படுகிற பரமபதத்திலே ஏற்றியருளுவர். (உ) "மனமேநயல்மேவுதற்கே" என்கிறபடியே ஏதத்விஷயமாக நமக்கென்னபயம், ஒருபயமும் வேண்டா.

(க) தி-வாய்-எ-௯-௧௦ (உ) இரா-நூ-௯௮ † ஸதாசார்ய

மார்பிலே கைவைத்துறங்குமதநனையன்றோ வென்று கருத்து. "𑌅𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯𑌸𑍍𑌤𑍍𑌵𑌾𑌭𑍂𑌮𑍌-அசிந்த்யஸ்த்வாபூமௌ" இத்யாதி. "𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯 𑌤𑍍𑌵𑌾𑌮𑌦𑍍𑌯 - ப்ரபத்ய த்வாமத்ய" இத்யாதி. (உக)

(அ-கை) "என்னபயம்நமக்கே" என்று நிர்பயரான விவரிதில் "𑌅𑌸𑍍𑌮𑌦𑍍𑌗𑍁𑌰𑍁𑌦𑌯𑌾𑌯𑌾𑌤𑌯𑌤𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌙𑍍𑌘𑍍𑌰𑌿𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌨𑍍𑌵𑌯𑌃-அஸ்மத்குருதயாயாதயதீந்திராங்கிக்ரியாந்வய:" என்கிறபடியே பிள்ளையுடைய நிர்ஹேதுக க்ருபையாலே எம்பெருமானாருடைய வபிமாநநாவாருடனாய், ஸம்ஸாரஸமுத்திரத்தைக் கடந்து, ஶ்ரிய:பதியுடைய ஸ்ரீபாதகூலத்தை ப்ராபிப்பேனென்று நிஶ்சயிக்கிறார்.

தீதற்றஞானத்திருவாய்மொழிப்பிள்ளை சீரருளால்
ஏதத்தைமாற்றுமெதிராசர்தம் மபிமானமென்னும்
போதத்தையேறிப் பவமாம் புணரிதனைக்கடந்து
கோதற்றமாதவன் பாதக்கரையைக் குறுகுவனே. (உஉ)

தீதற்ற=குற்றமற்ற, ஞான=ஆத்மஜ்ஞாந குணங்களையுடைய, திருவாய்மொழிப்பிள்ளை=திருமாலவன் கவியான திருவாய்மொழியிலே அவகாஹநத்தை யுடையராகையாலே அத்தையிட்டு நிரூபிக்கும்படியான வாதிக்யத்தை யுடையரான பிள்ளையுடைய, சீரருளால் = நிர்ஹேதுக க்ருபையாலே, ஏதத்தை=காமாதி தோஷங்களை, மாற்றும்=போக்கடிக்கிற, எதிராசர்தம்=எதிகளுக்கு நாதராயிருக்கிற வெம்பெருமானாருடைய, அபிமானமென்னும்=அபிமானமென்கிற, போதத்தையேறி=நிரபாயமான விஷ்ணுபோதம் போன்ற வைஷ்ணவக் கப்பலையேறி, பவமாம் புணரிதனைக்கடந்து=ஸம்ஸாரமாகிற பெருங்கடலைக்கடந்து, கோதற்றமாதவன் பாதக்கரையை="விண்ணோர் பிரானார் மாசில் மலரடிக்கீழ்" என்றும், "துயரறுசுடரடி" என்றும் சொல்லுகிறபடியே, அகில ஹேயப்ரத்யநீகமாய் நிரவதிக தேஜோரூபமாய், பரமப்ராப்யமாயிருக்கிற ஶ்ரிய:பதியினுடைய திருவடிகளாகிற தீரத்தை, குறுகுவன் = கிட்டப்பெறுவேன். ஏ = பாதபூரணம். (உஉ)

(வ்-ம்) (க)"𑌤𑌜𑍍𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌤𑍋𑌽𑌨𑍍𑌯𑌦𑍁𑌕𑍍𑌤𑌮𑍍-தஜ்ஜ்ஞாநமஜ்ஞாநமதோந்யதுக்தம்" என்றும், (உ)"𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌨𑍍𑌯𑌾 𑌶𑌿𑌲𑍍𑌪𑌨𑍈𑌪𑍁𑌣𑌮𑍍-வித்யாந்யா ஶில்பநைபுணம்" என்றுஞ் சொல்லுகிறபடியே, பகவதந்யபரமாம் குற்றமன்

(க) வி-பு. (உ) வி பு.

றிக்கே, (௧) "தாமரையாள்கேள்வனொருவனையேநோக்குமுணர்வு" என்கிறபடியே ஸ்ரிய:பதியைவிஷயமாக வுடைத்தாய் அதுதான் ததீயபர்யந்தமாயிருக்கிற ஜ்ஞாநத்தையுடையராய், அதுக்குமேல் வறை முறுகலான ஆர்ஷவசநங்களை த்ருணவக்கரித்து திருமாலவன் கவியான திருவாய்மொழியிலே அவகாஹநத்தையுடையவராகையாலே, அத்தையிட்டு நிரூபிக்கும்படியான வாதிக்யத்தையுடையரான பிள்ளையினுடைய நிர்ஹேதுக க்ருபையினாலே, *காமாதி தோஷஹாராய் யதிகளுக்கு நாதராயிருக்கிற வெம்பெருமானார் தம்முடையவழி(தி)மாநரூபமாயிருப்பதாய், "ఇదం హి వైష్ణవం పోతం సమ్యగాస్తే భవార్ణవే - இதம்ஹி வைஷ்ணவம்போதம்ஸம்யகாஸ்தேபவார்ணவே" என்கிறபடியே நிரூபமான விஷ்ணுபோதம்போன்ற வைஷ்ணவ போதத்தை யாரோஹிகது, "సంసారసాగరం ఘోరం-ஸம்ஸாரஸாகரம் கோரம்" என்று சொல்லப்படுவதான ஸம்ஸாரமாகிற ஸமுத்திரத்தைக் கடந்து, (௨)"விண்ணோர்பிரானார்மாசில்மலரடிக்கீழ்" என்றும் (௩) "துயரறு சுடரடி" என்றுஞ் சொல்லுகிறபடியே ஹேயப்ரத்யநீகமாய், நிரவதிகதேஜோரூபமாய், வேறொருபராப்பாங்கரத்தை யபேக்ஷிக்கும்படியான சோதிநின்றிக்கேயிருக்கிற, ஸ்ரிய:பதியினுடைய திருவடிகளாகிற தீரத்தைக்கிட்டப்பெறுவன். இது நிச்சயம்.

பிராட்டி கடாக்ஷத்துக்கு விஷயமானபின்பு, திருவடி(௪)"రామస్య లోకత్రయనాయకస్య శ్రీపాదమూలం మనసా జగామ-ராமஸ்யலோகத்ரயநாயகஸ்ய ஸ்ரீபாதமூலம்மநஸாஜகாம" என்று அடைந்ததாக வத்பவஸித்தர்ணிக்கிற. (௫) "மானேய்நோக்கிமடவாளை மார்பில்கொண்டாய் மாதவா" என்றுதொடங்கி "உன்தேனேமலரும் திருப்பாதம்-வினையேன் சேருமாறருளாய்" என்றர்த்திக்கவேண்டிற்றிறே "சோதற்றமாதவன்" என்று சோதறுகையாவது அவனுக்கு விஶேஷணமானபோது பிராட்டியோடே கூடியிருக்கையாலே, திருவில்லாத சோதற்றவனென்றமாம் ; ஸ்ரிய:பதியிறே நித்யப்ராப்யனுவான்.

(அ-கை) கீழிரண்டுபாட்டாலும் ஸ்வாசார்ய பரமாசார்யர்களான பிள்ளையுடையவும் எம்பெருமானாருடையவும் அபிமானத்

---

(௧) க-திருவ-௬௭. (௨) திருவிரு-௫௪. (௩) தி-வாய்-க-க-க.
(௪) (௫) தி-வாய-க-௫-௫.

தாலே பேறுகப்பாதென்று நிஸ்சயித்து, இப்படி நிஸ்சிதமானபின்பு (௧) "வடிவுடைமாதவன்" என்னும்படி புதுக்கணிப்போடே ஸபரிகரனாய், திவ்யாஸ்தானமண்டபத்திலே திவ்யஸிம்ஹாஸநத்திலே திவ்யமஹிஷீபரிவ்ருதனாயெழுந்தருளியிருக்கிற ஸ்ரீமந்நாராயணனான ஸ்ரீவைகுண்டநாதனைக் கண்டநுபவிக்கும்படி எனக்குநாதரானதேவர் பண்ணியருளவேணுமென்கிறார்.

அடியார்கள் குழாங்களழகோலக்கமிருக்க
ஆநந்தமயமான மாமணிமண்டபத்துப்
படியாதுமில் படுக்கையாயிருக்கு மநந்தன்
பணாமணிகடம்மி லொளிமண்டலத்தி னிடையில்
வடிவாரு மாமலராள் வலவருகுமற்றை
மண்மகளு மாய்மகளு மிடவருகு மிருக்க
நடுவாக வீற்றிருக்கும நாரணனைக்கண்டு
நானநுபவிக்கும் வகை நல்கென்னெதிராசா. (௨௫)

என்னெதிராசா = அடியேனுக்கு ஸ்வாமியாய் யதிகளுக்கு நாதரானவரே! அடியார்கள் குழாங்கள் = நித்யமுக்த ப்ருந்தங்கள், அநந்த கருட விஷ்வக்ஸேந ப்ரமுகரான நித்யவர்க்கமும், பராங்குச பரகால யதிவராதிகள் தொடக்கமான முக்தவர்க்கமும், (மணிகளையும் முத்துக்களையும் நிறைத்தாப்போலே) அழகோலக்கமிருக்க = அழகோலக்கமாக வரிசையடைவே ஸேவித்திருக்க, ஆநந்தமயமான மாமணிமண்டபத்து = நிரதிசயாநந்தஜநகமான திருமாமணி மண்டபத்திலே, படியாதுமில = உபமாநமொன்றுமில்லாமல் நிருபமமான, படுக்கையாயிருக்கும் = திவ்யபர்யங்கமாயிருக்கும், அநந்தன = திருவநந்தாழ்வானுடைய, பணாமணிகள் தம்மிலொளி மண்டலத்தினிடையில் = பணாரத்நங்களின் ஜ்யோதிர் மண்டலத்தின் நடுவே, வடிவாரு மாமலராள் = "வடிவாய நின்வலமார்பினில் வாழ்கின்ற மங்கை" என்கிறபடியே, ஸௌந்தர்யத்தால் மிக்க ஸௌகுமார்யத்தையிட்டு நிரூபிக்கும்படியான பெரியபிராட்டியார், வலவருகு = வலதுபக்கத்திலும், மற்றைமண்மகளுமாய்மகளும் = தத்ஸமானரான பூமிப்பிராட்டியும், நீளாதேவியும், இடவருகும் = இடதுபக்கத்திலும், இருக்க = ஸேவித்திருக்க, நடுவாக வீற்றிருக்கும் = இவர்களுக்கு நடுவே மூன்று மின்கொடிகளோடே கூடி தாமரை பூத்ததொரு காளமேகம்போலே *வீற்றிருந்தேழுலகும் தனிக்கோல் செல்ல வெழுந்தருளியிருக்கிற, நாரணனை = ஸ்ரீவைகுண்ட

.நாதனை, கடுக = சீக்ரமாக, நான் = அடியேன், அநுபவிக்கும்வகை = அநுபவிக்கும் ப்ரகாரத்தை, நல்கு = ப்ரஸாதித்தருளவேணும். ("என்னெதிராசா நல்கு" என்றிவ்விடத்திலே ஸம்போதிக்கவுமாம்). (௨௩)

(வ்-ம்) அடியேனுக்கு ஸ்வாமியாய், யதிகளுக்கு நாதரானவரே! (௧) "அடியார்கள் குழாங்கள்" என்றும், (௨) "மாமணிமண்டபத்தந்தமில்பேரின்பத்தடியர்" என்றுஞ் சொல்லுகிறபடியே அநந்தகருடவிஷ்வக்ஸேந ப்ரமுகரான நித்யவர்க்கமும், பராங்குசபரகாலயதிவராதிகள் தொடக்கமான முக்தவர்க்கமும் மணிமுக்தாதிகளை நிறைத்தாற்போலே அழகோலக்கமாக வரிசையடைவே ஸேவித்திருக்க "ఆనన్దమయాయమణ్డపరత్నాయనమః-ஆநந்தமயாயமண்டபரத்நாயநம:" என்கிறபடியே, நிரஸ்தாதிஸயாநந்தஜநகமான திருமாமணிமண்டபத்திலே, அஸேஷஸேஷவ்ருத்திகளுக்கும், ஸைத்யமார்த்தவாதிகளுக்கு முபமாநமன்றியிலே யிருப்பதான திவ்யபர்யங்கமாயிருக்கிற (௩) "ஆயிரம்பைந்தலையவநந்தன்" (௪) "சிறப்புடையபணங்கள்மிசைச்செழுமணிகள்விட்டெறிக்கும்" என்றும், (௫) "தெய்வச்சுடர்நடுவுள்" என்றுஞ் சொல்லும்படியான பணாரத்நங்களின் ஜ்யோதிர்மண்டலத்தின் நடுவே.

(௬) "வடிவாய்நின்வலமார்பினில்வாழ்கின்றமங்கை" என்றும், (௭) "வடிக்கோலவாள்நெடுங்கண் மாமலராள்" என்றுஞ் சொல்லுகிறபடியே, ஸௌந்தர்யத்தால் மிக்கு ஸௌகுமார்யத்தையிட்டு நிருபிக்கும்படியான பெரியபிராட்டியார் வலவட்டத்திலும், ஏவம்பூதைகளாய் அவளுக்கு நிழல்போலவரான மற்றநாய்ச்சிமாரிடவட்டத்திலும் ஸேவித்திருக்க, இவர்களுக்குநடுவே மூன்றுமின்கொடிகளோடேகூடி தாமரைபூத்ததொருகாளமேகம் வெள்ளிமலையைக் கினியப் படிந்திருக்குமாபோலே, *வீற்றிருந்தேழுலகம் தனக்கோல்செல்லவெழுந்தருளியிருக்கிற *வாழ்புகழ்நாரணனான ஸ்ரீவைகுண்டநாதனைக் காலவிளம்பமின்றிக்கே கடுகநானநுபவிக்கும்ப்ரகாரம் இவனித்தைப் பெற்றிடுவானென்று ஸஸ்நேஹமாக உபகரித்தருளவேணும் "என்னெதிராசா நல்கு" என்றிவ்விடத்திலே ஸம்போதிக்கவுமாம். அடியிலேயாகவுமாம். (௨௩)

---

(௧) தி-வாய்-௨-௩-௧௦. (௨) தி-வாய்-௧௦-௯-௧௧. (௩) பெரி-திரு-௪-௩-௧௦.
(௪) பெரி-திரு-௪-௯-௭. (௫) பெரியதிருமடல்.
(௬) திரு-பல்லா-௧. (௭) உ-திருவ அ௨.

(அ-கை. இதில் தேஹவிமோசநந்தொடங்கி பலத்திலெல்லையான தேசிகரோடொரு கோஷ்டியாயிருக்குமதளவாயிருக்கிற பேற்றை யபேக்ஷித்தருளுகிறார்.

இந்தவுடல் விட்டிரவி மண்டலத்தூடேகி
இவ்வண்டங் கழித்திடையிலாவரண மேழ்போய்
அந்தமில் பாழ்கடந் தழகார் விரசைதனிற் குளித்தங்
கமானவனாலொளிக்கொண்ட சோதியும் பெற்றமரர்
வந்தெதிர்கொண் டலங்கரித்து வாழ்த்தி வழிநடத்த
வைகுந்தம்புக்கு மாமணிமண்டபத்துச்சென்று
நந்திருமாலடியார்கள் குழாங்களுடன் கூடும்
நாளெனக்குக்குறுகும் வகை நல்கென்னெதிராசா. (௨௪)

என்னெதிராசா = அடியேனுக்கு ஸ்வாமியும், யதிகளுக்கு நாதருமான எம்பெருமானாரே! இந்தவுடல = ஹேயமான இந்த ஸ்தூலசரீரத்தை, விட்டு = த்யஜித்து, இரவிமண்டலத்தூடேகி = ஸூர்யமண்டலத்தைக் கீண்டு அவ்வருகே போய், இவ்வண்டம = இந்த ப்ரஹ்மாண்டத்தை, கழித்து = கடந்து, இடையில் = நடுவிலுள்ள, ஆவரணமேழ்போய = ஸப்தாவரணங்களையுங் கடந்து, அந்தமில = முடிவில்லாத, பாழ்கடந்து = மூலப்ரக்ருதியைத்தாண்டி, அழகார் = அத்யந்த ரமணீயமாயிருக்கிற, விரசைதனில் = விரஜாநதியில, குளித்து = ஸ்நாநம்பண்ணி, அங்கு = அவ்விடத்தில். அமாநவனால் — அமாநவனுடைய கரஸ்பர்சத்தாலே, ஒளிக்கொண்டசோதியும்பெற்று = நிரவதிக தேஜோரூபமான திவ்யதேஹத்தையும் பெற்று, அமரர் வந்தெதிர்கொண்டு = நித்யஸூரிகள் எதிர்கொண்டெழுந்தருளி, அலங்கரித்து = பரப்ரஹ்மத்தை அலங்கரிக்குமாபோல் அலங்கரித்து, வாழ்த்தி = ஸ்தோத்ரம் பண்ணி, வழிநடத்த = மார்க்கத்தில் நடப்பிக்க, வைகுந்தம்புக்கு = வைகுந்தமாநகரத்தை ப்ரவேசித்து, மாமணிமண்டபத்துச்சென்று = திருமாமணி மண்டபத்தைக்கிட்டி, நம திருமாலடியார்கள் = நமக்கு ஸ்வாமிகளும், ஸ்ரிய:பதிக்கு அடியார்களுமாகிய நித்யஸூரிகளுடைய, குழாங்களுடன் = ப்ருந்தங்களோடு. கூடும் நாள் = கூடுகிற அந்த திநமானது, எனக்கு = அடியேனுக்கு, குறுகும்வகை = ஸமீபமாகிற ப்ரகாரத்தை, நல்கு = ப்ரஸாதித்தருள வேணும். (௨௪)

(வ்-ம்) அடியேனுக்கு ஸ்வாமியாய், யதிகளுக்கு நாதரானவரே! (௧) "இம்மாயவாக்கை" என்னுமாபோலே அத்யந்தம் ஹேய

(௧) திருவாய்-௧௦-௭-௩.

ஸமுதாயமாயிருப்பதாயிருக்கிற விஸ்தஸ்தூலஶரீரத்தை உபேக்ஷையோடே (௧) "மங்கவொட்டு" என்று த்யஜித்து (௨) "மன்னுங்கடுங்கதிரோன்மண்டலத்தினன்நடுவுளன்னதோரில்லியினூடுபோய்" என்கிறபடியே, அவன் மண்டலத்தைக்கீண்டு, அவ்வருகேபோய், மற்றுமாதிவாஹிகபுருஷர்களாயுண்டானவர்கள் லோகங்களெல்லாங்கடந்து, (௩) இமையோர்வாழ்தனிமுட்டை கோட்டையாய், கோடியோஜனமான வளப்பத்தை யுடைத்தான வண்டகபாலத்தைபேதித்து, அத்தையொருபடிக்கழித்து, மத்யேயுண்டான தமோத்தரமான ஆவரணஸப்தகத்தையுங்கடந்து, அவ்வருகேபோய் முடிவில்பெரும்பாழான மூலப்ரக்ருதியையுங்கடந்து அத்யந்தரமணீயமாயிருப்பதாய் விரஜையென்று ப்ரஸித்தமானவந்நதியிலே ஸ்நானம்பண்ணி, அவ்விடத்திலமானவகர ஸ்பர்ஶத்தாலே (௪) "ஒளிக்கொண்டசோதியுமாய்" என்னும்படி பஞ்சோபநிஷண்மயமாகையாலே, நிரவதிக தேஜோரூபமான திவ்யவிக்ரஹத்தையும்பெற்று, (௫) "முடியுடைவானவர் முறைமுறையெதிர்கொள்ள" என்கிறபடியே, நித்யஸூரிகள் ப்ரத்யுத்தாநராய், ப்ரஹ்மாலங்காராதிகளாலே அலங்கரித்து, ஸ்தோத்ரம்பண்ணிக்கொண்டு வழிநடத்தப்போய், ஸ்ரீவைகுண்டமாகிற திவ்யநகரத்தை ப்ரவேசித்து, பெருந்தெருவாலே யுள்ளேபோய், ஆநந்தமயமான திருமாமணிமண்டபத்தைக்கிட்டிச்சென்று, (௪) "அடியார்கள்குழாங்களுடன் கூடுவதென்றுகொலோ!" (௬) [illegible]- மதகேவலைஃபரிஜனைஸ்தவஸங்கிஷீய" என்கிறபடியே, நமக்கு ஸ்வாமிகளாய், ஶ்ரியஃபதியினுடைய திருவடிகளிலே ந்யஸ்தபரராய், அதுவே நிரூபகமாயிருக்கிற ஸூரிஸங்கங்களுடன் கூடுகிற வந்தஸிவஸமானது (௭) "குறுக்கும்வகையுண்டுகொலோ" என்கிறபடியே, அத்தை யபேக்ஷிக்கிறவெனக்கு அதுஸமீபமாம் ப்ரகாரமுபகரித்தருளவேணும். இவ்விடத்தில் நல்கல்= கொடுத்தல் (௨௪)

(அ-கை) நீரோ, உம்முடைய வபராதம் பாராமல் கனத்தவப்பேற்றை வபேக்ஷியாநின்றீர், அதுக்கு நாம்செய்வதென்னென்று,

---

(௧) தி-வாய்-௧௦-௭-௧௦. (௨) பெரியதிருமடல். (௩) தி-வாய்-௪-௯-அ.
(௪) தி-வாய-௨-௩-௧௦. (௫) தி-வாய்-௧௦-௯.
(௬) ர-ஸ்த. (௭) தி-வாய்-௯-அ-௧.

எம்பெருமானார்க்கு நினைவாக, அடியேனை அங்கீகரித்தவன்று தொடங்கி இன்றளவும் வரவடியேனுடைய வபராதங்களையும் பொறுத்து, உபேக்ஷியாதே மோக்ஷத்தையும் கொடுப்பாராக வெண்ணியிருக்கிற தேவர் காலவிளம்பம் பண்ணாமலத்தைச் செய்தருளவேணுமென்கிறார்.

என்றுநிர்ஹேதுகமாக வென்னையபிமானித்து
யானுமதறிந் துனக்கேயாயிருக்கும் வகைசெய்தாய்
அன்றுமுதலின்றளவு மநவரதம் பிழையே
யடுத்தடுத்துச்செய்வ தநுதவிப்ப தினிச்செய்யேன்
என்றுன்னை வந்திரப்பதா மென் கொடுமைகண்டு
மிகழாதே யிரவுபக லடிமைகொண்டு போந்தாய்
இன்று திருநாடு மெனக்கருள வெண்ணுகின்றாய்
இனிக்கடுகச்செய்தருள வேண்டுமெதிராசா. (௨௫)

எதிராசா = யதிகளுக்கு நாதரான எம்பெருமானாரே! என்று = எந்த தினத்தில், நிர்ஹேதுகமாக = நிர்ஹேதுகமாக-காரணமின்றி, என்னை = அடியேனை, அபிமானித்து = இவன் நம்முடையவனென்றபிமானித்தருளி, யானும் = அடியேனும், அதறிந்து = அந்த அபிமானவிசேஷத்தை யறிந்து, உனக்கே = தேவருக்கே, ஆயிருக்கும் = அநந்யார்ஹ சேஷமாயிருக்கத்தக்க, வகை = ப்ரகாரத்தை, செய்தாய் = செய்தருளினீரோ? அன்றுமுதல் = அந்த தினந்தொடங்கி, இன்றளவும் = இந்நாளவரையிலும், (பூர்வவாஸனை விடாமல்) அநவரதம் = நிரந்தரம், பிழையே = அபராதமே, அடுத்தடுத்து = இடைவிடாமல், செய்வது = செய்துவிட்டு-இப்படிச்செய்தோமேயென்று, அநுதவிப்பது = அநுதபிப்பது, (அநுதபித்து) இனி = இனிமேல், செய்யேனென்று = செய்யமாட்டேனென்று, உன்னை = தேவரீரை வந்து இரப்பதாம் = வந்து அர்த்திப்பதாகிற என் கொடுமைகண்டும் = அடியேனுடைய க்ரூரக்ருத்யங்களைக்கடாக்ஷித்தும், இகழாதே = உபேக்ஷியாமல், இரவுபகல் = திவாராத்ரமும், அடிமைகொண்டுபோந்தாய் = தேவர் திருவடிகளில் கைங்கர்யங்கொண்டருளினீர், (இம்மாத்ரமேயல்லாமல்) இன்று = இன்றையதினம், திருநாடும் = பரமபதத்தையும், எனக்கு = அடியேனுக்கு, அருள = க்ருபைசெய்ய, எண்ணுகின்றாய் = திருவுள்ளம் பற்றியருளுகிறீர். (இப்படி அபாரகருணாஸம்ருத்தியுடையராகையாலே) இனிக்கடுக = இனிஶீக்ரமாக, செய்தருளவேண்டும் = அதை க்ருபை செய்தருளவேணும். (௨௫)

(வ-ம்) யதிகளுக்கு நாதரான தேவரீரிவ் வாத்மாவை என்று நிர்ஹேதுகமாக, இவன் நம்முடையவனென்று அபிமானித்தருளி அடியேனும் அந்த வபிமானவிசேஷத்தை யறிந்து, தேவர்க்கே அநந்யார்ஹமாயிருக்கும்படி செய்தருளிற்று. அப்படியே அபிமானித்தருளினவன்று தொடங்கி, தேவர் திருவடிகளை ப்ராபிக்கவிருக்கிற வின்றளவும், நிரந்தரமபராதமே இடைவிடாமல் செய்வது இப்படி அக்ருத்யமானதைச் செய்தோமென்று அநுதாபிப்பது. இனி இப்படிப்பட்ட வபராதங்களைச் செய்யேனென்று, தேவரை யார்த்திப்பதாகிற வென்னுடைய க்ரூரகர்மங்கண்டு உபேக்ஷியாமல் இங்கும் திவாராத்ரவிபாகமற தேவர் திருவடிகளில் கைங்கர்யம் கொண்டருளினீர். அவ்வளவுமின்றிக்கே இன்றுஸத்துக்களுக்கு க(ம)ந்தவ்யபூமியான திருநாட்டையுமதுக்கு யோக்யதையில்லாத வெனக்கு ப்ரஸாதிப்பதாகவிச்சித்தருளாநிற்கிறீர். இப்படி செய்யவேண்டியற்ற பின்புகாலக்கழிவு செய்யாமல் கடுகச் செய்தருளவேணும்.

(அ-கை) இவர் தம்மை வங்கீகரித்தவன்று தொடங்கி இன்றளவாக உண்டான வபராதஸஹஸ்ராதிகளை யாவிஷ்கரிக்கவாறே, நம்மையொழிய வேறொருவர் இவர் குற்றங்களைப் பொறுத்துரக்ஷிக்கவல்லாருண்டோ? இனி இவர்க்கு மேலுண்டான கார்யமும் நாமே செய்து தலைக்கட்டவேணுமென்று, எம்பெருமானார்க்கு நினைவாக, பா(ஹ°)வஜ்ஞராகையாலே அவர்கருத்தறிந்து இப்படி அகதிகளுக்கே கதியாயிருக்கிற தேவரையொழிய, என்னுடைய வபராதங்களைப் பொறுத்துரக்ஷிக்க, ஏதந்நைக்ருணாவான்களான பெரியபெருமாள் முதலானார்க்குத்தான் முடியுமோ? இனி ப்ராப்யருசியையுமுண்டாக்கி, ப்ராப்யதேசத்திலே சேரும்படிபண்ணி யருளவேணுமென்கிறார். அன்றிக்கே அநவரதம் செய்கிற வபராதங்களை *க்ஷமித்துரக்ஷிக்கும்போது பெரியபெருமாள் முதலானாராகவேண்டாவோ வென்னை? அது †நமக்கன்றி யாவர்க்கு முடியுமென்கிறாராகவுமாம்.

தென்னரங்கர் தமக்காமோ? தேவியர்கட்காமோ?
சேனையர்கோன்முதலான சூரியர்கட்காமோ?
மன்னியசீர்மாறனருள்மாரிதமக்காமோ?
மற்றுமுள்ள தேசிகர்கள் தங்களுக்குமாமோ?

---

†உனக்கின்றி

என்னுடைய பிழைபொறுக்க யாவருக்குமுடியும்?
எதிராசா வுனக்கன்றி யாரொருவர்க்காகேன்
உன்னருளாலெனக்கு ருசிதன்னையுமுண்டாக்கி
ஒளிவிசும்பிலடியேனை யொருப்படுத்துவிரைந்தே. (௨௬)

எதிராசா=எம்பெருமானாரே! தென்னரங்கர் தமக்காமோ = (அடியேனுடைய அபராதங்களை க்ஷமிக்க) பெரியபெருமாளுக்குத்தான் ஶக்யமோ? தேவியர்கட்காமோ = பெரிய பிராட்டியார் துடக்கமான நாய்ச்சிமார்களுக்குத்தான் ஶக்யமோ? சேனையர்கோன்= ஸேநாதிபதியாழ்வான், முதலான=துடக்கமான, சூரியர்கட்காமோ = நித்யஸூரிகளுக்குத்தான் ஶக்யமோ? மன்னிய=நித்யமாயிருக்கிற, சீர் =ஆஶ்ரிதர் விஷயத்தில் வாத்ஸல்யாதி கல்யாண குணங்களையுடையரான, மாறன் = நம்மாழ்வார், அருள்மாரி=சேதனர் விஷயத்தில் க்ருபையை வர்ஷிக்கிற திருமங்கையாழ்வார், தமக்காமோ=இவர்களுக்குத்தான் ஶக்யமோ? ; மற்றுமுள்ள = மற்றுமுண்டான. தேசிகர்கள்=நாதயாமுநாதிகளான ஆசாரியர்கள், தங்களுக்கு மாமோ=அவர்களுக்குத்தான் ஶக்யமோ? என்னுடைய=அடியேனுடைய, பிழைபொறுக்க = அபராதங்களை ஸஹிக்க, யாவருக்குமுடியும்= எவர்களுக்குத்தான் ஶக்யமாகும்? உனக்கன்றி=தேவரீருக்கன்றி, யான் =அடியேன்,ஒருவர்க்காகேன்=மற்றொருவர்க்குச் சேஷபூதனாகேன்,உன்னருளால்=தேவருடைய க்ருபையாலே, எனக்கு = அடியேனுக்கு, ருசிதன்னையுமுண்டாக்கி=ப்ராப்ய ருசியையும் விளைத்து, ஒளிவிசும்பில்=நிரவதிக தேஜோரூபமான பரமபதத்தில், அடியேனை=தாஸனை, விரைந்து =அதிஶீக்ரமாக,ஒருப்படுத்து=சேர்த்தருளவேண்டும்.ஏ=பாதபூரணம்.

(வ்-ம்) யதிகளுக்கு நாதரானவரே! ஸ்வதஸ்ஸர்வஜ்ஞரான ஸர்வேஶ்வரனாலும் பரிகணித்து முடியாத அடியேனுடைய வபராதங்களை க்ஷமிக்க “தோஷோயத்யபி தஸ்யஸ்யாத்-தோஷாயத்யபிதஸ்யஸ்யாத்” என்றும், (க) “என்னடியா ரதுசெய்யார் செய்தாரேல் நன்றுசெய்தார்” என்று பேசும்படியான பெரியபெருமாளுக்குத் தான் ஶக்யமோ? அவர்க்கும் பொறைக்குவாத்தாய் (௨) “ந கஶ்சிந்நாபராத்யதி-நகஶ்சிந்நாபராத்யதி” என்றும் (௩) “க்ஷமே த்வம் நிர்தோஷஃ க இஹ ஜகதி - க்ஷமேதந்நிர்தோஷஃகஇஹஜகதி” என்றும் பேசும்படியான பெரியபிராட்டியார் துடக்கமான நாய்ச்சிமார்க்களுக்குத் தான்ஶக்யமோ? இப்படியான இவர்களிருவருடையவும் ‘சேர்த்தியிலடிமையை ஆசைப்

(க) பெரி-தி-௪-௧-௨. (௨) ரா-யு-௧௧௬-௪௪ (௩) ஸ்ரீகுணரத்ந.

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்

பட்டவர்களுக்குஅந்த கைங்கர்ய போகபாகிகளாம்படி (க) “అస్మా-భిస్తుల్యో భవతు - அஸ்மாபிஸ்துல்யோபவது” என்று கூட்டிக்கொள்ளும் ஸ்ரீஸேநாபதியாழ்வான் துடக்கமான நித்யஸூரிகளுக்குத் தான்ஶக்யமோ? இவர்கள் தான் விஷ்வக்ஸேநஸம்ஹிதை விஹகேந்திரஸம்ஹிதைகளிலே ப்ரபத்திமார்க்க ப்ரதர்ஶகரிறே. நித்யமாய்ப் பொருந்தியிருப்பதான ஆஶ்ரிதவிஷய வாத்ஸல்யாதிகுணயுக்தராய், அத்தை யநுஷ்டாநஶேஷமாம்படி (உ)*பயனன்றாகிலும் பாங்கல்லராகிலும் செயல் நன்றாகத்திருத்திப் பணிகொள்ளும் நம்மாழ்வார், இவரோபாதி சேதநவிஷயத்திலே க்ருபையைவர்ஷிக்கிற திருமங்கையாழ்வார் இவர்களுக்குத் தான்ஶக்யமோ? மற்றுமாழ்வார்கள் க்ருபைக்கு விஷயமாய், க்ருபாமாத்ர ப்ரஸந்நாசார்யர்களாயிருக்கிற நாதயாமுநாதிகளாயிருக்கிற வவர்கள் துடக்கமாக இவ்வருக்குள்ள வாசார்யகளுக்குத்தான் ஶக்யமோ? அபராதஸஹரான தேவர்க்கொழியக் கீழ்க்தான வெத்தனை யதிஶயிததயாவான்களானார்க்குத் தானித்தைச்செய்து தலைக்கட்டப்போமோ? அது ஒருவருக்கும் அஶக்யமாகையாலே (ங)“நிகரின்றிநின்றவென்னீசதைக்கு நின்னருளின்கணன்றிப் புகலொன்றுமில்லை”என்கிறபடியே தயைகஸிந்துவாய், ஸர்வாபராதஸஹராயிருக்கிற தேவர்க்கொழிய, அபராதாநாமாலயனான நான் காகத்தைப்போலே வேறொரு கோஷ்டிக்காளாகேன்—

உபாயதசையில் ரக்ஷித்தவோபாதி, உபேயதசையிலும் தேவர் க்ருபையாலே ப்ராப்யருசியையும் விளைத்து, (ச) “சுடரொளியாய் நின்றதன்னுடைச்சோதி” என்றும், (ரு) “தெளிவிசும்பு” என்றும் சொல்லப்படுகிற ப்ராப்யதேசத்திலே அடியேனை (சு) “அங்குற்றேனல்லேன்” என்னும்படி ஆந்தராளிகளுக விட்டுவையாமல் சீக்கிரமாக வொருதலைப்பித்தருளவேணும். ஒருகோடியில் சேர்க்கவேணுமென்றபடி. உனக்கன்றி என்கிறவித்தை கீழ்மேலும் கூட்டி நிர்வஹிப்பது. ஒருவேளையிலே, “க்ஷிபாமி” “நக்ஷமாமி” என்னும் நிரங்குஶஸ்வதந்த்ரனுக்கும், “క్షమాలఙ్ఘ్యాజ్ఞ సకలకరణోచ్ఛేదనపటు-

(க) ரா-யு-கஅ-ஙஅ. (உ) கண்ணி-க0. (ங) இரா-நூ-
(ச) தி-வாய்-ங-க0-ரு. (ரு) தி-வாய்-சு-எ-ரு. (சு) தி-வாய்-ரு-எ-உ

க்ஷமாலக்ஷ்மீப்ருங்கீஸகலகரணோந்மாதகமது” என்றும், (௧) “திமிர் கொண்டாலொத்துநிற்கும்” என்றும் பேசும்படி உந்மஸ்தகமான போகத்தாலே மதித்துஸ்தப்தைகளாயிருக்கு மவர்களுக்கும், அச் சேர்த்தியிலேகைங்கர்யநித்யநிரதராய், அஸ்தாநஸ்நேஹரக்ஷாவ்யஸநிகளாய், *ஆங்காரவாரமதுகேட் டுழலுமிழுமவர்களாயிருக்குமவர்களுக்கும் அச்சேர்த்தியையநுபவிக்கஆசைப்பட்டு(௨) “சிந்தைகலங்கித்திருமாலென்றழைப்பன்” என்றும், (௩) “உன்னைக்காணுமவாவில் வீழ்ந்து” என்றும், (௪) “உன்னைக்காணுமாசையென்னும் கடலில்வீழ்ந்து” என்றும், பக்திபாரவஶ்யத்தாலே ஆழங்கால்பட்டிருக்குமவர்களுக்கும், மற்றும் க்ருதக்ருத்யராயாக்கை விடும்பொழுதையும், மாக வைகுந்தம்காண்கையையும் மநோரதிக்கிறமுமுக்ஷுக்களுக்கும், ஸர்வதாபரார்த்தங்கண்டு பரோபதேஶம் பண்ணுகைகூடாதிறே! தம்மை அழியமாறியும் ஸம்ஸாரிகள் துர்க்கதிகள்கண்டு* அவர்பின்படரும்குணனாய் அவர்கள் அவிதேயதையைப்பாராமல், ஸர்வதாபரோபதேஶம்பண்ணியும் அத்தாலே, *ஆளுமாளாரென்கிறவனுடையதனிமைதீரும்படி மங்களாஶாஸநபரரை யுண்டாக்கி பரஸம்ருத்தியே பேறும்படி நடத்திக்கொண்டு போருவரொருவராகையாலே இவர்க்கேயாய்த்தித கூடுவது; (௫) “அது திருக்தலாவதே” என்று கைவிட்டத்தையிறே கைக்கொண்டு திருத்தி *திருமகள்கேள்வனுக்காக்கியருளிற்று. ஆகையிறே இவருமிப்படியருளிச்செய்தது; (௬) “மருள் கொண்டிளைக்கும் நமக்குநெஞ்சே யிராமாநுசன்செய்யும் சேமங்கள் மற்றுள்ளார்தரமோ” என்றிறே அமுதனாரு மருளிச்செய்தது. “[illegible]- பரம்நதக்ஷீயாம்ஸம்” இத்யாதி. (௨.௪)

(அ-கை) இவர் “ஒளிவிசும்பிலடியேனை ஒருப்படுத்துவிடாந்தே” என்றவநந்தரம் அவரும், (௭) “வானேதருவானெனக்காய்” என்றும்படி மோக்ஷப்ரதாநத்திலே ஸத்வரராயிருக்கிறபடியை ஸாக்ஷாத்கரித்து, இனி த்யாஜ்யமான இவ்விபூதியிலுண்டான துடக்குமநுபாதேயமாய், ப்ராப்யமான வவ்விபூதியிலுண்டான துடங்கலும் உபாதேயமாயற்றபின்பு, அவற்றின் விஸ்மரணாநுஸ்மரணங்களான க்ருத்யாக்ருத்யங்களைத் தமக்கு விதேயமான திருவுள்ளத்தைக் குறித்து விதித்தருளுகிறார்.

---

(௧) தி-வாய்-௯-௫-௨. (௨) தி-வாய்-௧-௮-௰. (௩) தி-வாய்-௫-௭-௨.
(௪) தி-மொ-௯-௯-௩. (௫) பெரியதி-௨௫. (௬) இரா-நூ- (௭) தி-வாய-௰-௮-௫

இவ்வுலகிலினியொன்று மெண்ணாதே நெஞ்சே ?
இரவுபகலெதிராச ரெமக்கினிமேலருளும்
அவ்வுலகை யலர்மகள்கோ னங்கிருக்கு மிருப்பை
யடியார்கள் குழாங்கடமை யவர்களநுபவத்தை
இவ்வுயிருமதுக்கிட்டுப் பிறந்திழந்துகிடந்த
தென்னுமதத்தையென்று மதுக்கிடைச்சுவராய்க்கிடக்கும்
வெவ்வினையால் வந்தவுடல் விடும்பொழுதை விட்டால்
வினையுமின்பந்தன்னை முற்றும்விடாமலிருந்தெண்ணே.

நெஞ்சே=மநஸ்ஸே, இவ்வுலகில் = இந்த லோகத்தில், இனியொன்றும்=இனியொன்றையும், எண்ணாதே=சிந்தியாதே, இரவு பகல் = ராப்பகலும், எதிராசர் = எம்பெருமானார், எமக்கு = நமக்கு, இனிமேலருளும்=இனிமேல் ப்ரஸாதிக்கும், அவ்வுலகை=வானுலகான அந்தலோகத்தையும், அலர்மகள்கோன்=புஷ்பவாஸிநியான பெரியபிராட்டியார்க்கு வல்லபனான ஸர்வேச்வரன், அங்கு=அந்தப் பரமபதத்தில்,இருக்குமிருப்பை=திவ்யஸிம்ஹாஸநத்திலே எழுந்தருளியிருக்குமிருப்பையும், அடியார்கள்=நித்யஸூரிகளுடைய, குழாங்கள்தமை=ஸமூஹங்களையும், அவர்கள் அநுபவத்தை=அவர்களுடைய ஹர்ஷத்துக்குப்போக்குவிட்டநுபவிக்கும் அநுபவத்தையும், இவ்வுயிரும்=இந்த ஆத்மவஸ்துவும், அதுகு = அந்தபோகத்துக்கு, இட்டுப்பிறந்து = ப்ராப்தனாயின்று, இழந்துகிடந்தது=அத்தைப் போககடித்துக்கொண்டு கிடந்தது, என்னுமதை=என்று சொல்லுமதையும், என்றும்=எக்காலமும், அதுக்கிடைச்சுவராய்க்கிடக்கும் = அந்த அநுபவத்துகு ப்ரதிபந்தகமாய்க கிடக்கும், வெவ்வினையால்=க்ரூரகர்மங்களால், வந்த=உண்டான, உடல் விடும்பொழுதை=தேஹவிமோசநமாகும் காலத்தையும், விட்டால்=அந்ததேஹத்தை விட்டபிறகு, விளையும்=பலிக்கும், இன்பந்தன்னை=நிரதிசயாநந்தத்தையும், முற்றும்=இந்தஸமஸ்த விஷயங்களையும், விடாமலிருந்து = இடைவிடாமலிருந்து, எண்ணு=சிந்தித்துப்போரு. (௨எ)

(வ்-ம்) பந்தமோக்ஷங்க ளிரண்டுக்கும் பொதுவான மநஸ்ஸே! "அத தேஹாவஸாநே ச த்யக்த ஸர்வேதரஸ்ப்ருஹ:" என்கிறபடியே இந்தக் கொடுவுலகில் ஹேயமாயிருப்பதான ப்ரக்ருதிப்ராக்ருதங்க ளெல்லாம் த்யாஜ்யமென்று நேரேயறிந்த பின்பு அல்பாஸ்திரத்வாதி தோஷதுஷ்டமானவைவற்றிலேகதேசமும் அங்கீகாரபோக்யமாக விசாரியாதே, எம்பெருமானார் நமக்கு ப்ராப்யருசியையு முண்டாக்கியருளி,

இனிமேல்வருங்கொடையாகவருளும் வானுலகானவந்த லோகத்தையும், அந்தலோகமெல்லாம்நிறம்பெறும்படி (க) "எழில்மலர்மாதருந்தானு மிவ்வேழுலகை இன்பம்பயக்க வினிதுடன்வீற்றிருந்து" என்கிறபடியே புஷ்பத்தில் பரிமளம் வடிவுகொண்டாப்போலேயிருக்கிற பெரியபிராட்டியாருக்கு வல்லபனான வ்யாவ்ருத்தித்தோற்றவங்கே திவ்யஸிம்ஹாஸநத்திலே எழுந்தருளியிருக்குமிருப்பையும்,

அச்சேர்த்தியிலே அடிமைசெய்கிற (உ) "அடியார்கள் குழாங்களை" என்கிற ப்ராப்யமானவவர்கள் ஸமூஹந்தன்னையும், அவர்கள் ஹர்ஷத்துக்குப் போக்குவிட்டநுபவிக்கு மநுபவத்தையும், இவ்வாத்மாவும் அதுக்கு ப்ராப்தனாய்வைத்து அத்தை இழந்துகிடந்ததென்கிறவவற்றையும், அத்யாபி அந்தஅநுபவத்துக்கு ப்ரதிபந்தகமாய்க் கிடக்கும் (௩) "பொல்லாவொழுக்குமழுக்குடம்பும்" என்கிறபடியே க்ரூரகர்மத்தாலே யுண்டான தேஹவிமோசந மாங்காலத்தையும், தேஹவிமோசநாநந்தரம் பலிக்கும் நிரதிஶயாநந்தத்தையும் இப்படி யுக்தங்களாய் ஸ்வரூபாநுரூபமாயுள்ளவை யெல்லாவற்றையும் திவாராத்ரவிபாக (ஹாம) மறவிடைவிடாமல் ஒருப்பட்டிருந்து சிந்தித்துப்போரு. அன்றிக்கே உக்தங்களான வவற்றிலொன்றும் விடாமலொருப்பட்டிருந்து சிந்தித்தென்னவுமாம். "இவ்வுலகிலினியொன்றுமெண்ணாதே" என்கிற விதுக்கு (௪) "மருளொழிநீ" என்று சொல்லுகிற அந்திமதஶா விரோதியான அர்ச்சாவதார ப்ராவண்யமாகவுமாம். (உஎ)

(அ-கை) செய்ததெல்லாஞ் செய்தும் இது நெடுங்காலமில்லாத ப்ராப்யருசி இப்போது எம்பெருமானாருடைய க்ருபையாலே உண்டாயிற்றென்று அந்தலாபத்தைப்பேசி அநுபவிக்கிறார்.

பண்டுபலவாரியரும் பாருலகோருய்யப்
　　பரிவுடனே செய்தருளும் பலகலைகடம்மைக்
கண்டதெல்லாமெழுதி யவைகற்றிருந்தும்பிறர்க்குக்
　　காதலுடன்கற்பித்துங் காலத்தைக்கழித்தேன்

(க) தி-வாய்-எ-கO-க.　　(உ) தி-வாய-உ-௩-கO
(௩) திருவி-க　　(௪) தி-வாய்-கO-௬-க-

புண்டரீகைகேள்வனுறை பொன்னுலகுதன்னில்
போகநினைவொன்றுமின்றிப் பொருந்தியிங்கேயிருந்தேன்
எண்டிசையுமேத்துமெதிராசனருளாலே
எழில்விசும்பேயன்றி யிப்போதென்மனமெண்ணாதே.

பண்டு=பூர்வகாலத்தில், பலவாரியரும் = ஆத்மோஜ்ஜீவநதத்பரரா யிருக்கிற பூர்வாசார்யர்களனைவரும், (ஏககண்டமாய) பாருலகோருய்ய= இந்தப் பூலோகத்திலுண்டான ஸமஸ்த சேதநர்களுமுஜ்ஜீவிக்க, பரிவுடனே= இவர்களிடத்திலுண்டான ப்ரேமையினாலே, செய்தருளும் = அருளிச்செய்த, பல்கலைகள் தம்மை=பலப்ரபந்தங்களை, கண்டதெல்லாம்= பார்த்ததெல்லாம், எழுதி=லிகித்து, அவை=அவற்றை, கற்றிருந்தும்= ஆசார்யமுகத்தாலே யப்யஸித்திருந்தும, பிறர்க்கு = அந்யருக்கு, காதலுடன் = ப்ரேமையோடு, கற்பித்தும் = போதிததும், காலத்தைக் கழித்தேன்=காலத்தைப் போக்கினேன, புண்டரீகை கேள்வன்=நளிநவாஸிநியான பெரியபிராட்டியார்கு வல்லபனானவன், உறை = நித்யவாஸம் பண்ணுகிற, பொன்னுலகுதன்னில் = நித்யவிபூதியான பரமபதத்துக்கு, போகநினைவொன்றுமின்றி = போகவேணுமெனகிற ஸ்மரணலேசமுமில்லாமல், பொருந்தியிங்கே யிருந்தேன் = இவ்விபூதியில ஆசையுள்ளவனாய் வஸித்தேன், எண்டிசையும = அஷ்டதிக்கிலுண்டானவர்களும், ஏத்தும் = தன் வைபவத்தைச்சொல்லி ஸ்தோத்ரம பண்ணும்படியான, எதிராசன் = எம்பெருமானாருடைய, அருளாலே = கருபையாலே, எழில்விசும்பையன்றி=விலக்ஷணமான பரமாகாசத்தையே யொழிய, வேறொன்றை இப்போதென்மனமெண்ணாதே= இப்போதென் மநஸ்ஸானது ஸ்மரியாது.

(வ்-ம்) நல்லடிக்காலமான பூர்வகாலத்திலே, ஆத்மோஜ்ஜீவநதத்பரராயிருக்கிற பூர்வாசார்யர்களனைவருமேககண்டமாய், இந்த பூலோகத்திலுண்டான ஸமஸ்தசேதநரு முஜ்ஜீவிக்க, இவர்களிடத்தில் ஸ்நேஹமாகச் செய்தருளும் பலப்ரபந்தங்கள்தன்னை(க)“தெரித்தெழுதி” இத்யாதிப்படியே, ஆதராதிசயத்தாலே தேடிக்கண்டவைகளெல்லாவற்றையும் லிகித்து அத்தை ஆசார்யமுகத்தாலே அப்யஸித்து, தந்நிஷ்டனாயிருந்தும், இந்நிஷ்டையில்லாதவந்யரும் தந்நிஷ்டரா யுஜ்ஜீவிக்கும்படி, அவர்களுக்கு ஆதரத்தோடே அப்யஸிப்பித்தும், காலக்ஷேபம்பண்ணினேன்; (௨)“தாமரையாள் கேள்வன்” என்னும்படி பெரியபிராட்டியார்க்கு வல்லபனானவன், நித்ய

(க) ௫-திருவ-௯௫ (௨) ௧-திருவ-௯௭

வாஸம்பண்ணுகிற ஸ்ப்ருஹணீயமான ஸ்ரீவைகுண்டதுல ம்போக வேணுமென்கிற ஸ்மரணலேஶமுமின்றிக்கே இவ்விபூதியிலே ஸக்த னாய் வஸித்தேன்.

(க) *திசையனைத்தும் ஏறுங்குணனையாலே அஷ்டதிக்கி லுண்டானவர்களும் தன்வைபவத்தைச் சொல்லி ஸ்தோத்ரம்பண் ணும்படியான எம்பெருமானாருடைய க்ருபையாலே விலக்ஷணமான பரமாகாஶத்தையேயொழிய, இப்போதென்னுடைய மநஸ்ஸானது ஸ்மரியாது. இதொரு க்ருபாவிஶேஷமிருந்தபடி என்? என்று கருத்து; இவ்விடத்திலேகாரந்தேற்றத்தில்- (உஅ)

(அ-கை) இனித் தம்முடைய ப்ராப்யவிரோதி நிரஸநஶீலரான எம்பெருமானார், ஸ்ரீபாஷ்யாதிகளான ஸ்ரீஸூக்திகளாலே பாஹ்ய குத்ருஷ்டி நிரஸநம்பண்ணி யருளின விஜயபரம்பரைகளைச்சொல் லி அத்தாலுண்டான வீரஸ்ரீக்கு மங்களாஶாஸநம் பண்ணுகிறார்.

தாழிசை.

சாறுவாகமதநீறுசெய்து சமணச்செடிக்கனல் கொளுத்தியே
சாக்கியக்கடலை வற்றுவித்து மிகு சாங்கியக்கிரிமுறித்திட
மாறுசெய்திடு கணாதவாதியர்கள் வாய்தகர்த்தறமிகுத்துமேல்
வந்தபாசுபதர் சிந்தியோடும்வகை வாதுசெய்த வெதிராசனார்
கூறுமாகுருமதத்தொடோங்கிய குமாரிலன்மதமவற்றின்மேல்
கொடியதர்க்கசரம்விட்டபின் குறுகிமாயவாதியரைவென்றிட
மீறிவாதில்வரு பார்க்கரன்மத விலக்கடிக்கொடி யெறிந்துபோய்
மிக்கயாதவமதத்தை மாய்த்த பெருவீரர் நாளுமிக வாழியே.

சாருவாக மதநீறுசெய்து = "ப்ரத்யக்ஷமேகம் சார்வாக:" என்கிற சார்வாகமதத்தை ஸ்வஸூக்திகளாகிற அக்நிஜ்வாலையாலே பஸ்மமாம்படி பண்ணி, சமணச்செடிக்கனல் கொளுத்தியே = சமணராகிற செடிக்கு அப்படியே அக்நிப்ரக்ஷேபத்தைப்பண்ணி, சாக்கியகடலை வற்றுவித்து = சாக்கியராகிற ஸமுத்ரத்தை ஸ்வஸூக்திகிரணங்களாலே ஶோஷிப்பித்து, மிகுசாங்கியக்கிரிமுறித்திட = அதிகமாயிருப்பதான ஸாங்க்யமலையை வாக்வஜ்ரத்தாலே சேதித்து, மாறுசெய்திடு கணாதவாதியர்கள் = ப்ரதிகோடி

(க) இரா-நூ-

களாய் வாதம்பண்ணுகிற காணாத வாதிகளுடைய, வாய்=வாக்கை, தகர்த்து=தம் வாக்காலே பக்நமாம்படி பண்ணி, அறமிகுத்து மேல்வந்த = அதிக்ரமித்து மேன்மேலும் வந்த, பாசுபதர்சிந்தியோடும்வகை=பாணாஸுரயுத்தத்திலே ருத்ரன் தன பரிவாரத்தோடு ஓடினாப்போலே, தன் பக்தர்களான சிவசமயத்தோர்களும் சீறுபாறாகச் சிதறி யோடும்படி, வாதுசெய்த வெதிராசனார் = வாதம்பண்ணி யருளின யதிராசர், கூறும்=பிதற்றுகிற்பதாய், மா = பெருத்திருப்பதான, குருமதத்தோடு = ப்ரபாகரமதத்தோடு, ஓங்கிய = உயர்ந்திருப்பதான, குமாரிலன் மதமவற்றின்மேல்= பாட்டமதமென்கிற வவைற்றின்மேலே, கொடியதாகச்சரம்விட்டபின் = க்ரூரமா யிருப்பதான தர்க்க ஸரத்தை (பாணத்தை) ப்ரயோகித்த பின்பு, குறுகிமாய வாதியரைவென்றிட=மாயவாதிகளிருந்த விடத்திலே சென்று கிட்டியவர்களை ஜயித்திட்டு, மீறிவாதில்வரும்=மிகுத்துகாவித்து வாதத்திலே வருகிற, பார்க்கரன் மதவிலக்கடிக்கொடியெறிந்துபோய்=பாஸ்கரன் மதமென்கிற வேரகொடிகள் குறுக்கிட அவற்றைச் சேதித்தெறிந்துவிட்டு அப்பால்சென்று, மிகக யாதவமதத்தை மாய்த்த = அதிகமான யாதவப்ரகாசன் மதத்தை மாண்டுபோம்படி பண்ணின, பெருவீரர்=மிக பராக்ரமத்தையுடைய எம்பெருமானார், நாளுமிகவாழியே=நித்யாபிவிருத்தமாம்படி மங்களத்தை யுடையராகவேணும். (௨௯)

(வ்-ம்) "ప్రత్యక్షమేకం చార్వాకాః-ப்ரத்யக்ஷமேகம் சார்வாகா:"என்கிற சார்வாகமதத்தை ஸ்வஸூக்திகளாகிற அக்நிஜ்வாலையாலே பஸ்மஸாத்காம்படிபண்ணி, சமணராகிற செடிக்கு அப்படியே அக்நிப்ரக்ஷேபத்தைப்பண்ணி, ஶாக்யராகிற ஸமுத்ரத்தை ஸ்வஸூக்திகிரணங்களாலே ஶோஷிப்பித்து; அதிகமாயிருப்பதான ஸாங்க்யகிரியை வாக்வஜ்ரத்தாலேசே (ఛే) தித்திட்டு; ப்ரதிகோடிகளாய் வாதம்பண்ணுகிற காணாதவாதிகளுடையவாக்கை ஸ்வவாக்காலே (భగ్న) பக்நமாம்படிப்பண்ணி;

மிகவுமுத்ததராய் மேல்வந்தபாசுபதர், பாணாஸுரயுத்தத்திலே ருத்திரன் ஸபரிகரனாயோடினாப்போலே, தத்பக்தர்களானவிவர்களும், சீறுபாறாகச் சிதறியோடும் பிரகாரம் வாதம்பண்ணியருளினவராய், ஏதேனுமொன்றை ஜல்பியாநிற்பதாய், பெருத்திருப்பதான ப்ராபாகரமதத்தோடே யுச்சராயமா யிருப்பதான பாட்டமதமென்கிற வவற்றின்மேலே, க்ரூரமாயிருப்பதான தர்க்கஶரத்தை ப்ரயோகித்தபின்பு, எங்கும் பரந்திருக்கையாலே, மாயி

களிருந்த விடத்திலேசென்று கிட்டி, (க) "வாதில்வென்றான் நம்மி ராமாநுசன்" என்கிறபடியே அவர்களை ஜயித்திட்டு, மிகைத்து வாதத்திலே வருகிற பாஸ்கரனுடைய மதமாகிற வமார்க்கத்தை, ஒருவரும் நடவாதபடி நிரோதித்து, கழியமிக்கிருக்கிற யாதவ மதத்தை மாண்டுபோம்படி பண்ணின வெம்பெருமானாருடைய இதர தர்சந நிரஸநத்தாலேவந்த மஹாவீரம், நாடோறுமபி(வி)வ்ருத்தமாய் வாழவேணும். குருமதம் = ப்ராபாகரமதம்; குமாரிலன் மதம்=பாட்டமதம். "கொடியெறிந்துபோய்" என்று - அவ்வளவிலே நில்லாதே கைகழிந்திருக்கிற பாரிப்பேயாகவுமாம். வந்தவாதிய ரென்றும் பாடஞ்சொல்லுவர். (௨௧)

(அ-கை) இனி இதர நிரஸநம்பண்ணியருளின ஸ்ரமந்த்ர, ஸ்ரீ பாஷ்யம் திருவாய்மொழி முதலான பகவத்விஷயங்களை வ்யாக்யாநித்துக்கொண்டு எழுந்தருளியிருக்கிறவிருப்பு தமக்கா கர்ஷகமாயிருக்கையாலே, பாதாதிகேஸாந்தமாக வநுபவித்து இவையெல்லாம் தனித்தனியே நித்யமாய்ச் செல்லவேணுமென்று மங்களாஸாஸநம்பண்ணியருளுகிறார்.

எண்சீர்க்கழி நெடியாசிரிய விருத்தம்.

சீராருமெதிராசர் திருவடிகள்வாழி
திருவரையிற்சாத்திய செந்துவராடைவாழி
ஏராருஞ்செய்யவடிவெப்பொழுதும்வாழி
இலங்கியமுந்நூல்வாழி யிணைத்தோள்கள்வாழி
சோராததுய்ய செய்யமுகச்சோதிவாழி
தூமுறுவல்வாழி துணைமலர்க்கண்கள்வாழி
ஈராறுதிருநாமமணிந்த வெழில்வாழி
இனிதிருப்போடெழில் ஞானமுத்திரைவாழியே. (௩௦)

சீர் = கல்யாண குணங்களாலே, ஆரும் = பரிபூர்ணமான, எதிராசர் = எம்பெருமானாருடைய, திருவடிகள் = பரமபோக்யமாய் நமக்கு ஸிரோபூஷணமாயிருக்கிற திருவடித்தாமரைகள், வாழி = நித்யமங்களமாயிருக்கவேணும், திருவரையில் = கடிப்ரதேசத்தில், சாத்திய = தரித்த, செந்துவராடைவாழி = ஆதித்யனைப் பரிவேஷித்தாப்போலே மிக்கசிவப்பையுடைத்தான காஷாயவஸ்த்ரம் நித்யமங்களமா யிருக்கவேணும், ஏராரும் = அ

(க) இரா-நூ-ரு௮.

முகால் நிறைந்த, செய்யவடிவு = சிவந்திருப்பதான திவ்யமங்கள விக்ரஹமும், எப்பொழுதும் = ஸர்வகாலத்திலும், வாழி = நித்யமங்களமாயிருக்கவேணும். இலங்கிய முந்நூல்வாழி = வைதிகோத்தம மென்னுமத்தை நிறம் பெறுத்துமதாய், ஸந்த்யாராக ரஞ்ஜிதமான மேகத்திலே மின்கொடி படர்ந்தாப்போலே திருமார்பிலே ப்ரகாசிக்கிற பரஹ்மஸூத்ரம் நித்ய மங்களமாயச் செல்லவேணும், இணைத்தோள்கள் வாழி = பொற்கற்பகத்தின் சாகைகளாய், அதற்குமேல் மோக்ஷப்ரதாநதீக்ஷிதங்களாய், ஸம்ஸார ஸாகரத்தில் மூழ்கி நோவுபடுகிறவர்களை உத்தரிக்கிற ஶக்தியையுடைததாய், இப்படிக்கொடுக்கவு மெடுக்கவு மாம்படியான குணத்தாலே பணைத்து நெடிதாயிருப்பனவாய், அதுக்குமேலே வகுளதுளவநளிநாக்ஷ மாலாலங்க்ருதமாயிருக்கிற பாஹுயுகளங்களானவை நித்ய மங்களமாயிருக்கவேணும், சோராத-துய்ய-செய்ய-முகச்சோதிவாழி = அநுபாவ்யமாய, பகவத் ஸாக்ஷாத்காரத்தாலும் ஆஶ்ரிததர்ஶநத்தில் ஹர்ஷத்தாலும் அநாஶ்ரித நிரஸநத்தில் அநாயாஸத்தாலும் அஸங்குசிதமாய், நிர்மலமாய, ஶோபாவஹமாயிருக்கிற, முகஜ்யோதிஸ்ஸானது நித்ய மங்களமாய்ச் செல்லவேணும், அமுறுவல்வாழி = ஆஶ்ரிதரக்ஷணத்தாலுண்டான வாநந்தத்தாலும், பகவதநுபவப்ரகர்ஷத்தாலுண்டானவாநந்தத்தாலும் பூவலர்ந்தாப்போலே ப்ரீதியைப்ரகாஶிப்பிக்கிற பரிசுத்தமான சிறுநகையும் நித்யமங்களமாயச் செல்லவேணும், துணைமலர்க்கண்கள் வாழி = ஸ்ரீரங்கஸ்ரீயையும், தாம் திருத்தத் திருத்தின ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீயையுமெப்போதும் கண்டுகளிக்குமதாய், காருண்யாம்ருத ப்ரஸரண சீலமாய ஆஶ்ரிதரை யமலங்களாக விழிக்குமென்னும்படி கடாக்ஷிக்கிற த்வந்த்வாரவிந்த ஸுந்தரமான திருக்கண்கள் அழகுமாறாமல் நித்யமங்களமாயிருக்கவேணும்; ஈராறு திருநாமமணிந்த வெழில் வாழி = கீழ்ச்சொன்ன வெல்லாத்தையும் நிறம்பெறுத்துவனவாய ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீ ஸூசகமாயிருப்பதாய், பொன்மலையின் பரிஸரமெங்கும் வெண்டாமரை பரப்புமாறப்பூத்தாப்போலே சிவந்த திருமேனியிலே வெள்ளியதான த்வாதஶோர்த்வபுண்ட்ரத்தாலுண்டான ஸௌந்தர்யம் நித்யமங்களமாய்ச் செல்லவேணும், இனிதிருப்போடு = பத்மாஸநஸ்தராயெழுந்தருளியிருக்கிற விருப்போடு, எழில் = உபயவேதாந்த ப்ரகாசகமாயிருக்கிற, ஞானமுத்திரை = பரதத்வபோத முத்திரையானது, வாழியே = நித்யமங்களமாயிருக்கவேணும். (௩௦)

(வ்-ம) ஆஶ்ரிதருக்கநுபாவ்யமான ஸ்வரூபரூபகுணங்களோடொவ்வாசியற வெல்லாத்தாலும் பரிபூர்ணராய், யதிகளுக்கு நாதரான வெம்பெருமானாருடைய (க) "அமரர் சென்னிப்பூ" என்னுமா

(க) திருக்குறு-௩

போலே (௧) "இராமாநுச னடிப்பூ" என்று சொல்லப்படுமதாய், அதுவே பரமபோக்யமாய், நமக்குச் சிரோபூஷணமாயிருக்கிற திருவடிப் போதுகள் போது செய்யாமல, ஏவம்விதாகாரத்தோடே நித்யமாய்ச் செல்லவேணும். அதுக்குமேலே ஆறுபாகாரத்தாலே பரிஶுத்தாத்ம ஸ்வரூபத்துக்கு தத்ஸாம்யமுண்டாகையாலே, (உ) "पीतकौशेयवासिनी - பீதகாஷாயவாஸிநீ" என்னும்படி பாரதந்த்ர்ய ஸம்பார்ஹத்வ ஸூசகமாய் திருவரையூந்தாப்போலே திருவரைக்கலங்காரா வஹமாய், ஆதித்யனைப் பரிவேஷித்தாப்போலே திருவரையிலே சூழச்சாத்தி மிக்கசிவப்பையுடைத்தான திருபரிவட்டமும நித்யமாய்ச் செலலவேணும்; அதுக்குமேலே ஆஶ்ரிதருக்கு ஶுபாஶ்ரயமாய், ஸௌந்தர்யாதிகளாலேயிக்கு புஷ்பஹாஸஸுகுமாரமாய், (௩) "रूपमेवास्यैतन्महिमानमाचष्टे - ரூபமேவாஸ்யை தந்மஹிமாநமாசஷ்டே" என்கிறபடியே, பரமாத்மராகமபுறம்பொசிந்தாப் போலே சிவந்திருப்பதான திவ்யமங்களவிக்ரஹமும், ஸர்வகாலத்திலும், "नित्यं नित्याकृतिधरम् - நித்யம நித்யாக்ருதிதரம்" என்னும்படி நித்யமங்களமாய்ச் செல்லவேணும்; அதுக்குமேலே வைதிகோத்தமரென்னுமத்தை நிறம் பெறுத்துமதாய், ஸந்த்யாராக ரஞ்ஜிதமானமேகத்திலே மின்கொடிபடர்ந்தாப்போலே திருமார்பிலே ப்ரகாசிக்குமதாய் ப்ரஹ்மஸூத்ரவ்யாக்யாத்ருத்வத்யோதகமாயிருப்பதான ப்ரஹ்மஸூத்ரமபபுகரோடே நித்யமாயிருக்கவேணும்;

அதுக்கு அநந்தா †மிரண்டிடத்திலுமாவாய், (௪) "बाहुच्छायामवष्टब्धो यस्य लोको महात्मनः - பாஹுச்சாயாமவஷ்டப்தோ யஸ்யலோகோ மஹாத்மந:" என்கிறப்டியே, ஸர்வர்க்கும் விஶ்ராந்திஶாகியான பொற்கற்பகத்தினுடையஶாகைகளாய், அதஏவ மோக்ஷப்ராப்தீக்ஷிதங்களாய், விசேஷித்து நிமக்நோத்தாரணசக்தியையுடைத்தாய், இப்படி கொடுக்கவு மெடுக்கவுமாம்படியான குணத்தாலே பணைத்துநெடிதாயிருப்பனவைகளாய், (௫) "தோளார் சுடர்த்திகிரி சங்குடைச் சுந்தரன்" என்னும்படி, தோள்மேலொல்லாவிசக்ராம்புஜங்களையுடைத்தாய், ஆகர்ஷகமான ஆழ்வார்களாலே அங்கிதமாயிருப்பனவைகளாய், அதுக்குமேலே வதுளதுளஸீ நளிநாக்ஷமாலா

(௧) இரா-நூ-௧0அ.
(உ.)
(௩)
(௪) ரா-ஸு-ந-௯௬-௧..
(௫) ஜ்ஞாநஸாரம்.
† இரண்டட்டத்திலுமுளவாய்.

லங்க்ருதமாயிருக்கிற யுகளபாஹுங்களானவை, உத்தமான குண ங்களோடே நித்யமாய்ச்செல்லவேணும்; அதுக்குமேலே (க) "ப்ரஹ்ம ... முகம்" -ப்ரஹ்மவித இவ ஸௌம்யதே முகம்பாதி" என்றும், (௨) "முகச்சோதிமலர்ந்ததுவோ" என்றுஞ் சொல்லு கிறபடியே, அநுபாவ்யமாய், பகவத்ஸாக்ஷாத்காரத்தாலும் ஆஸ் ரிதகர்ஸநத்தில் ஹர்ஷத்தாலும் அநாஸ்ரிதநிரஸநத்தி லநாயாஸத் தாலு மஸங்குசிதமாய், நிர்மலமாய், ஸோபாவஹமாயிருக்கிற முகஜ்யோதிஸ்ஸும் நித்யமாய்ச்செல்லவேணும்.

அதுக்குமேலே (ந) "... ஸலிலாஸஸ்மிதாதாரமபிப்ராணம் முகபங்கஜம்" என்னும்படி ஒரு முகமாய்ச்சேர்ந்து, அந்த முகபத்மத்தினுடைய விகாஸமென்னும் படியாய், (ச) "மின்பன்னிலா முத்தந்தவழ்கதிர்முறுவல்செய்து" என்கிறபடியே, ஆஸ்ரிதரக்ஷணத்தாலுண்டான வாநந்தத்தாலும், பகவதநுபவப்ரகர்ஷத்தா லுண்டான வாநந்தத்தாலும், பூவலர் ந்தாப்போலே ப்ரீதியை ப்ரகாசிப்பிக்கிற சாருஹாஸத்தாலுண் டான சந்த்ரிகையை ப்ரவஹிக்கிற ஸுஸ்மிதமு மப்படியே யெண் றுமுளதாயிருக்கவேணும். அதுக்குமேலே ஸ்ரீரங்கஸ்ரீயையும்,தாம் திருத்தத்திருந்தின ஸ்ரீவைஷ்ணவஸ்ரீயையு மெப்போதும் கண்டு களிக்குமதாய், கருணாம்ருத ப்ரஸாரணசீலமாய், ஆஸ்ரிதரை யம லங்களாக விழிக்குமென்னும்படிக் கடாக்ஷிக்கிற, த்வந்த்வாரவிந்த ஸுந்தரமான திருக்கண்கள், செவ்விமாறாமல் நித்யமாய்ச் செல்ல வேணும்;

கீழுக்தங்களான விவற்றை யெல்லாவற்றையும் நிறம்பெ றுத்துமவையாய், ஸ்ரீவைஷ்ணவஸ்ரீக்கு வர்த்தகமாயிருப்பதாய், பொன்மலையின் பரிஸரமெங்கும் வெண்டாமரை பரப்புமாறப்பூத் தாப்போலே, சிவந்ததிருமேனியிலே வெள்ளியதாய் ஊர்த்வதா ஸ்ரயண ஸூசிதஸக்தியை யுடைத்தானத்வாதசோர்த்வபுண்ட்ரதா ரணத்தாலுண்டான ஸௌந்தர்யம் நித்யமாய்ச்செல்லவேணும். கீழுக்தமான வெல்லாத்துக்கு மதிஷ்டிகையாயிருந்த வந்தவதிஷ்டா நஸக்தியாலே குத்ருஷ்டிகளாகிற குறும்பறும்படியாயு மாஸ்ரிதர க்ஷணத்துக்குறுப்பாயும், கேவல பகவதிச்சையாலே, (ரு) "வைய

(க) (௨) தி-வாய்-ந-க-க. (ந) வி-பு-ரு-கஎ-௨0.
(ச) தி-வாய-சு-௨-ரு. (ரு) தி-வாய்-சு-ந-கக

மன்னியிற்றிருந்து" என்னும்படி வ்யாவ்ருத்திதோற்ற, ஹம்ஸஸமூஹமத்யே ராஜஹம்ஸமானது ஸாஸமாக விருக்குமாபோலே, பரமஹம்ஸரானதாமும், "ஸம்ஸேவித: ஸயமேவித:" இத்யாதிப்படியே ராமாநுஜார்யவஶகராய் இராமாநுசனைத்தொழும் பெரியோராயிருக்கிற முதலிகளெல்லாரும் ஸேவித்திருக்க இவர்கள் நடுவே (க) "பத்மாஸநோபவிஷ்டம்-பரதத்த்வபோதமுத்ரம்-பத்மாஸநோபவிஷ்டம் பாதத்வபோதமுத்ரம்" என்னும்படி, பத்மாஸநஸ்தரா யெழுந்தருளியிருக்கிற விருப்போடே, உபயவேதாந்தார்த்தப்ரகாசகயாய், உந்நித்ரபத்மஸௌபகமாயிருக்கிற ஜ்ஞாநமுத்திரையானது, காதாசித்கமன்றிக்கே ஸதாதர்ஶநயோக்யமாம்படி வாழக்கடவதாகவேணும். (உ) "அன்னமதாயிருந்தங்கற நூலுரைத்த" என்னக்கடவதிறே †"தோராருதய்ய செய்ய முகச்சோதி" என்றும் பாடம் சொல்லுவர்; "ஸ்ரீமத்ததங்க்ரியுகளம" என்னுமாப்போலே, சீராருமென்கிறத்தை திருவடிகளுக்கு விசேஷணமாக்கவுமாம். எதிராசருடைய திருவடிகளாகையாலே *வாயு-லவபுஞ்ஜநாநிவத-பார்த்திவவ்யஞ்ஜநாங்கிதமாயிறே யிருப்பது. (௫௦)

(அ-கை) அஸக்ருதாவ்ருத்தி அபேக்ஷாகார்யமாகையாலே மீளவு மாதராதிசயத்தாலே, பாஹ்யகுத்ருஷ்டிநிரஸநம்பண்ணி யருளினமைக்கும, மற்றும் லோகோபகாரகங்களாகச் செய்தருளினவையெல்லாத்துக்கும், மங்களாசாஸனம்பண்ணியருளுகிறார். கீழ்ப்பாட்டுவிக்ரஹபரம். இப்பாட்டு ஸ்வரூபபரம்.

அறுசமயச்செடியதனை யடியறுத்தான்வாழியே
அடர்ந்துவருங் குதிட்டிகளை யறத்துறந்தான் வாழியே
செறுகலியைச்சிறிதுமறத் தீர்த்து விட்டான் வாழியே
தென்னரங்கர்செல்வமுற்றுந் திருத்திவைத்தான்வாழியே
மறையதனில் பொருளனைத்தும் வாய்மொழிந்தான் வாழியே
மாறனுரைசெய்த தமிழ் மறைவளர்த்தோன் வாழியே
அறமிகுநற்பெரும்பூதூ ரவதரித்தான் வாழியே
அழகாருமெதிராச ரடியிணைகள் வாழியே. (௫௧)

அறுசமயச்செடியதனை = பாஹ்யங்களான ஷண்மதங்களாகிற வ்ருக்ஷங்களை, அடியறுத்தான் வாழியே = மூலச்சேதநம் பண்ணினவர் நிதய

(க) பராங்குஶாஷ்டகம. (உ) தி-மொ-கக-௩-அ. † தோராந.

மாக வாழ்ந்தருளவேணும், அடர்ந்துவரும் = கூட்டமாய்க்கூடி மேலிட்டு வருகிற, குதிட்டிகளை = "நான்மறையும் நிற்கக்குறும்புசெய் நீசரும் மாண்டனர்" என்கிறபடியே வேதத்தில் குறும்புசெய்கிறஇவர்களை, அறத் துறந்தான் வாழியே = ஸவாஸநமாகத் துரத்தியருளினவர் நித்யமாக வாழ்ந்தருளவேணும், செறுகலியை = "அறுசமயம்போனது பொன்றி யிறந்ததுவெங்கலி" என்கிறபடியே, இவைத்துக்கெல்லாம் ஹேதுவாய் லோகமெங்கும் காடமாய் மூடிவருகிற கொடியகலியை, சிறிதும் = லேசமும், அற = இல்லாதபடி, தீர்த்துவிட்டான் வாழியே = போக்கடித்தவர் நித்யமங்களமாய் வாழ்ந்தருளவேணும், தென்னரங்கர் = ஸௌந்தர்ய பூர்ணரான பெரியபெருமாளுடைய, செல்வமுற்றும் = திருச்செல்வ மெல்லாவற்றையும், திருத்திவைத்தான்வாழியே = கட்டளைப்படும்படி பண்ணியருளினவர் நித்யமங்களமாய் வாழ்ந்தருள வேணும், மறைதனில் = வேதத்தில் ப்ரதிபாதிக்கப் படுகிற, பொருளனைத்தும் = ஸகலார்த்தங்களை யெல்லாம், வாய் மொழிந்தான்வாழியே = ஸ்ரீபாஷ்யரூபேண வருளிச்செய்தவர் நித்யமங்களமாய் வாழ்ந்தருளவேணும்; மாறன் = நம்மாழ்வார், உரைசெய்த = அருளிச்செய்த, தமிழ்மறை = த்ரவிடவேதத்தை, வளர்த்தோன் வாழியே = வர்த்திப்பித்தருளினவர் நித்ய மங்களமாய் வாழ்ந்தருளவேணும். அறமிக = அதில் தாத்பர்யமான ஶரணாகதிதர்ம ஜாதத்திலே விருத்தியடைய, நற்பெரும்பூதூர் = விலக்ஷணமான ஸ்ரீபெரும்பூதூரிலே, அவதரித்தான் வாழியே = திருவவதரித்தவர் நித்யமங்களமாய் வாழ்ந்தருளவேணும், அழகாரும் = ஸௌந்தர்யாதிகளாலே பூர்ணராயிருக்கிற, எதிராசர் = எம்பெருமானாருடைய, அடியிணைகள் வாழியே = ஸர்வ ஶரண்யமான சரணயுகளங்கள் நித்ய மங்களமாய்ச் செல்லவேணும். (௧௧)

(வ்-ம்) (௧) "శాక్యోలూక్యాక్షపాదక్షపణకకపిలపతంజలిమతానుసారిణః- சாக்யோலூக்யாக்ஷபாதக்ஷபணக கபிலபதஞ்ஜலி மதாநுஸாரிண:" என்கிறபடியே, பாஹ்யஷண்மதங்களாகிற மூடிக்கிடக்கிற செடிகளை மூலச்சேதநம் பண்ணியருளினவர் நித்யமாக வாழ்ந்தருளவேணும். மேலிட்டுவரும் குத்ருஷ்டிகளை (௨) "நான் மறையும் நிற்கக்குறும்புசெய் நீசருமாண்டனர்" என்கிறபடியே, ஸவாஸநமாகத் துரத்தியருளினவர் நித்யமாக வாழ்ந்தருளவேணும். (௩) "அறுசமயம்போனது பொன்றியிறந்ததுவெங்கலி" என்கிறபடியே, இவைத்துக்கெல்லாம் ஹேதுவாய், லோகமெங்கும் காட(ாட)மாய் மூடிவருகிற கலியை, அல்பாவஶேஷமுமில்லாதபடி மு

(௧) வேதார்த்தஸங்க்ரஹ. (௨) இரா-நூ-௯௩. (௩) இரா-நூ-௪௯.

டித்துவிட்டவர், வாழ்ந்தருளவேணும். அநந்தரம் "𑌶𑍍𑌰𑍀𑌮𑌨𑍍 𑌶𑍍𑌰𑍀𑌰𑌙𑍍𑌗𑌶𑍍𑌰𑌿𑌯𑌮𑌨𑍁𑌪𑌦𑍍𑌰𑌵𑌾𑌮𑌨𑍁𑌦𑌿𑌨𑌂 𑌸𑌂𑌵𑌰𑍍𑌧𑌯 - ஸ்ரீமந் ஸ்ரீரங்கஶ்ரியமநுபத்ரவாமநுதிநம் ஸம்வர்த்தய" என்கிறபடியே, பெரியபெருமாளுடைய திருச்செல்வமெல்லாம் கட்டளைப்படும்படி பண்ணியருளினவர் வாழ்ந்தருளவேணும்.

அதுக்குமேலே ப்ரமாணத்தில் வந்தால் வேதத்தில் விப்ரதிபத்திபோக்கினவளவன்றிக்கே, வேதாந்தார்த்தமெல்லாம், ஸ்ரீபாஷ்யரூபேண வருளிச்செய்தவர் வாழ்ந்தருளவேணும். அதுக்குமேலே ஆழ்வாராலே அருளிச்செய்யப்பட்ட திருவாய்மொழியை, (க) "வளர்த்த விதத்தாய்" என்னும்படி வர்த்திப்பித்தருளினவர். வாழ்ந்தருளவேணும். அதின் தாத்பர்யமான ப்ரபந்ந தர்மம் ஜகத்திலே வர்த்திக்க விலக்ஷணமான ஸ்ரீபெரும்பூதூரிலே யவதரித்தருளினவர் வாழ்ந்தருளவேணும். ஸௌந்தர்யாதிகளாலே பூர்ணராயிருக்கிற வெம்பெருமானுடைய ஸர்வஶரண்யமான சரணயுகளங்கள் நித்யமாகவாழவேணும் அழகாருமை—அடியிணைகளுக்கு விசேஷணமானபோது இரண்டு தாமரைப்பூவை நிறைத்து வைத்தாப்போலே யிருக்கிற சேர்த்தியழகையும், ஸ்வதஃ உண்டான ஸௌந்தர்யத்தையும் சொல்லுகிறதாகவுமாம். "அறமிகுநல் பெரும்பூதூர்" என்று பாடஞ்சொல்லுவர். அப்போது (உ) "இராமாநுசன் மிக்கபுண்ணியன்" என்கிற தர்மத்தை அதிகமாக உடைத்தென்னவுமாம். வாழியென்பது மங்களச்சொல். (௫௧)

(அ-கை) கீழ்ப்ரமிகுநற்பெரும்பூதூர் அவதரித்தானென்று ப்ரஸ்துதமான திருவவதார திருநக்ஷத்ரவைபவத்தை ப்ரீதியாலே பேசி அநுபவித்தருளுகிறார்.

சங்கரபாற்கரயாதவ பாட்டப்ரபாகரர் தங்கள்மதம்
சாய்வுறவாதியர்மாய்குவமென்றுசதுமறைவாழ்ந்திடுநாள்
வெங்கலிபிங்கினி வீறுநமக்கிலை யென்றுமிகத்தளர்நாள்
மேதினிநஞ்சுமை யாறுமெனத்துயர்விட்டு விளங்கியநாள்
மங்கையராளிபராங்குசமுன்னவர் வாழ்வுமுளைத்திடுநாள்
மன்னியதென்னரங்காபுரி மாமலை மற்றுமுவந்திடுநாள்

(க) திருவாய்மொழி தனியன். (உ) இரா-நூ-௯௬.

செங்கயல்வாவிகள் சூழ்வயல்நாளும் சிறந்தபெரும்பூதூர்
சீமானிளையாழ்வார் வந்தருளியநாள் திருவாதிரைநாளே. (௩௨)

சங்கர=சங்கரன்மதம், பாஸ்கர=பாஸ்கரன்மதம், யாதவ = யாதவப்ரகாசன் மதம் பாட்ட = பாட்டமதம், ப்ரபாகரர் தங்கள்மதம் = ப்ரபாகரன் மதம், (இவையெல்லாம்) சாயுற=நாசத்தை யடையா நிற்கையில், வாதியர்=வாதியர்களான ஶங்கராதிகளும், மாய்குவரென்று=ஜயமின்றி நசிப்பர்களென்று, சதுமறை=நாலுவேதங்களும், வாழ்ந்திடுநாள்=அர்த்த பௌஷ்கல்யத்தை யுடைத்தாய் அபிவிருத்தமாம் திவஸம்,வெங்கலி=க்ருரமானகலியும், இங்கினி வீறுநமக்கிலையென்று = இவ்விடத்தி லினி நமக்கு ஸாம்ராஜ்யம பண்ண ஶக்யமன் றென்று, மிகத்தளர்நாள்=மிகவும் நிலைகுலைந் திருக்கப்பண்ணுவதான திருநக்ஷத்ரம், மேதினி = பூமியும், நம்சுமை = நம்தலைச்சுமை, ஆறுமென = கழியுமென்று, துயர்விட்டு = துக்கத்தைவிட்டு, விளங்கியநாள் = ப்ரகாசியாநிற்கிற திருநக்ஷத்ரம், (இனி பூமியிலுண்டான அர்ச்சாஸ்தலங்களை யாதரிக்கு மவர்களாகையாலே) மங்கையராளி=திருமங்கை யாழ்வாருடையவும், பராங்குச=நம்மாழ்வாருடையவும், முன்னவர் = மற்ற பூர்வாசார்யர்களுடையவும், வாழ்வு=ஸம்பத்து, முளைத்திடுநாள் = அங்குரிக்கும் திருநக்ஷத்ரம், மன்னிய = பெரியபெருமாள் நித்யவாஸம்பண்ணுகிற, தென்னரங்காபுரி = அழகிய அரங்கமாநகரமும், மாமலை=பெரியதிருமலையும், மற்றும் = மற்றுமுண்டான திவ்யதேசங்களும், உவந்திடுநாள் = ஆநந்திக்கும் திருநக்ஷத்ரம். செங்கயல் வாவிகள்= சிவந்தழகிய மத்ஸ்யங்களையுடைய தடாகங்களால், சூழ்=சூழப்பட்டிருக்கிற, வயல்=விளைவயல்களிலுலே, நாளும் = நித்யமாக உண்டான, சிறந்த=அலங்காரங்களை யுடைத்தாயிருக்கிற, பெரும்பூதூர்=ஸ்ரீபெரும்பூதூரை அவதார ஸ்தலமாகவுடைய, சீமானிளையாழ்வார=ஸ்ரீமானாய் இளையாழ்வாரென்று நிரூபகத்தை யுடையரானவெம்பெருமானார், வந்தருளியநாள்=வந்தவதரித்தருளின திநம், திருவாதிரைநாளே = திருவாதிரைத் திருநக்ஷத்ரம். (இதுவொருநாளே! "ஸ்ரீமாநாவிரபூத் பூமௌ ராமாநுஜதிவாகர:" என்னக்கடவதிறே.) (௩௨)

(வ்-ம்) விசேஷணத்தை இல்லைசெய்வாரும், விசேஷ்யத்தை இல்லைசெய்வாருமாய் இப்படி வி(ஶேஷ)பாகத்வயகுதிருஷ்டிகளாய்க் கொண்டு வேதார்த்தாபலாபம் பண்ணுகிறவர்களாகையாலே, வைதிகதர்மம் தலைசாயும்படிவந்து கிட்டியிருக்கிறவாதியர்களான சங்கராதிகளுடையமதம் நாசத்தை யடையுமென்று நாலுவகைப்பட்ட வேதமானது அர்த்தபௌஷ்கல்யத்தை யுடைத்தா யபி(வி)வ்ருத்தமாம் திவஸம்.

(௧) "கலியும் கெடுங்கண்டுகொள்மின்" என்றசொல்லுகிறபடியே, க்ரூரமான கலியானது இவ்விடத்திலினி நமக்கு ஸாம்ராஜ்யம்பண்ண ஶக்யமன்றென்று, மிகவும் நிலைகுலைந்திருக்கப்பண்ணவற்றான திருநக்ஷத்ரம். கலியும், கலிகார்யமான குத்ருஷ்டிகளும் போகையாலே, "సస్యంధరా పుణ్యవతీ-விஶ்வம்பரா புண்யவதீ" என்றும், (௨) "தவந்தாரணிபெற்றது" என்றுஞ் சொல்லுகிறபடியே, பூமியானது, நம்தலைச்சுமைகழியுமென்று துக்கத்தைவிட்டு ப்ரகாசியாநிற்கிறதிருநக்ஷத்ரம்; இனி பூமியிலுண்டானவர்ச்சாஸ்தலங்களையாத்ரிக்குமவர்களாகையாலே, திருமங்கைக்கு நிர்வாஹகரான திருமங்கையாழ்வார், பராங்குசாதி (ఖఢీ) தேயரான நம்மாழ்வார் முதலானவர்களுடைய ஸம்ருத்தி அங்குரிக்கும் திருநக்ஷத்ரம்.

அதுக்குமேலே, பெருமாள் நித்யவாஸம் பண்ணுகிறகோயில், (௩) "அருவிசெய்யாநிற்கும் மாமலை" என்று சொல்லப்படுவதான பெரியதிருமலை, மற்றுமுண்டான திவ்யதேசங்களும், ஸ்வஸ்வ ஸம்ருத்தியையடையுமேதோமென்று, ஹர்ஷிக்கும் திருநக்ஷத்ரம். இதுக்கெல்லாமடியாய், (௪) "அங்கயல்பாய்வயல்" என்னுமாபோலே, சிவந்தழகிய கயல்களையுடைத்தான வாவிகளாலே சூழப்பட்டிருக்கிற விளைவயல்களினுலே நித்யமாகவுண்டான நகராலங்காரங்களையுடைத்தாயிருக்கிற, ஸ்ரீபெரும்பூதூரை அவதாரஸ்தலமாகவுடையஸ்ரீமானுப், இளையாழ்வாரென்று நிரூபகத்தையுடையரானவெம்பெருமானு ரவதரித்தருளினதிவஸம் திருவாதிரைதிருநக்ஷத்ரம்.

இதுவொருநாளே! "శ్రీమానావిరభూద్భూమౌ రామానుజదివాకరః-ஸ்ரீமாநாவிரபூத்பூமௌ ராமாநுஜதிவாகர:" என்னக்கடவதிறே.- "தென்னரங்காபுரிமாமலைமற்று முவந்திடுநாள்" என்கிறதுக்கு, தத்ரஸ்தரான ஸ்ரீவைஶ்வரர்கள் ஹர்ஷிப்பார்களென்றபடி; மன்றல் =பொருந்துதலும், நிலைப்பாடும். ஆறுதல்=சமித்தல். (௫) "உன் நாமமெல்லாம் என்றன் நாவினுள்ளே யல்லும்பகலும மரும்படிநல்கு" என்கிறபடியே, இவருக்கு தத்வாசகமான திருநாமங்கள்தான் அநுபாவ்யங்களாயிருக்கையாலே, எதிராசனென்றும், இராமாநுச

---

(௧) தி-வாய்-௫-௨-௧ (௨) இரா-நூ-௪௫. (௩) திருவி-
(௪) இரா-நூ-௧௦௮. (௫) இரா-நூ-தனியன்.

னென்றும், எம்பெருமானாரென்றும், இளையாழ்வாரென்று மநுஸந்தித்தருளினார். (௫௨)

(அ-கை) கீழ்ப்ராஸங்கிகமாய் வந்த மங்களாஶாஸநத்திலே மண்டியநுபவித்து, "ప్రాసంగికం పరిసమాప్య ప్రకృతమనుసరతి-ப்ராஸங்கிகம் பரிஸமாப்ய ப்ரக்ருதமநுஸரதி" என்கிறபடியே, மீளவும் ப்ரக்ருதத்திலே இறங்கி, ஸர்வலோகத்திலேயுண்டான ஸர்வதுரிதங்களும் போம்படியவதரித்து ரக்ஷித்தருளின்ப்போலே, அடியேனுடைய வஜ்ஞாநத்தைப்போக்கி யடிமைகொண்டஸ்வாமியானவரே! அடியேனுடைய ப்ரக்ருதிஸம்பந்தநிபந்தநமாயுண்டான தேஹஸ்திதி தத்விமோசந காலாதிநியமங்களையெல்லாமறிந்தருளும் ஸர்வஜ்ஞரானதேவர், அஜ்ஞனைவடியேனை விலக்ஷணமானதேசத்தி லாரோஹிப்பித்தருளத் திருவுள்ளமாகில், விஸ்மரித்திருக்கிறதுக்கு ஹேதுவேதென்று அவர் தமமையே கேட்கிறார். (௫௨)

இன்னமெத்தனைகாலமிந்த வுடம்புடன்யானிருப்பன்
இன்னபொழுதுடம்பு விடுமின்னபடியதுதான்
இன்னவிடத்தே யதுவுமென்னு மிவையெல்லாம்
எதிராசா நீயறிதி யானிவையொன்றறியேன்
என்னையினியிவ்வுடம்பை விடுவித்துன்னருளால்
ஏராரும்வைகுந்தத்தேற்ற நினைவுண்டேல்
பின்னைவிரையாமல் மறந்திருக்கிறதென்பேசாய்
பேதைமைதீர்த்தென்னையடிமைகொண்டபெருமானே. (௫௩)

இன்னம் = இன்னமும், எத்தனைகாலம் = எவ்வளவுகாலம், இவ்வுடம்புடன் = ஹேயமான இந்த தேஹத்தோடே, யானிருப்பன் = இதில் பொருத்தமற்றிருக்கிற வடியேனிருப்பேன், இன்னபொழுதுடம்புவிடும் = இன்னகாலத்திலே தேஹம்விடும், இன்னபடி = இன்ன ப்ரகாரத்திலே, அதுதான் = அந்த தேஹவியோகந்தான், இன்னவிடத்தே = இன்னஸ்தலத்திலே, அதுவும் = அந்த தேஹவிமோசநமாம, என்னுமிவையெல்லாம் = என்று சொல்லப்படுகிற விவையெல்லாம், எதிராசா = எம்பெருமானாரே! நீயறிதி = ஸர்வஜ்ஞரான தேவர் அறிந்தருளுவுதீர, யான் = அஜ்ஞனை வடியேன், இவையொன்றறியேன் = இவற்றி லேகதேசமுமறியேன், (ஆனபின்பு) பேதைமைதீர்த்து = அஜ்ஞானத்தைப்போக்கி, என்னை = அடியேனை, அடிமைகொண்டபெருமானே = ஆட்கொண்டஸ்வாமீ! என்னை =

இத்தேஹத்தோடே பொருத்தமற்றிக்கிற வடியேனே, இனி - உன்னருளால்=இனி தேவர்க்ருபையாலே, இவ்வுடம்பை விடுவித்து= இச்சரீரத்தை விடுவித்து, ஏராரும்=திவ்யாலங்கார பரிபூர்ணமான, வைகுந்தத்தேற்ற=பரமபதத்திலேயேற்ற, நினைவுணடேல் = திருவுள்ளமுண்டாகில், பின்னை=அநந்தரம, விரையாமல்=த்வரியாமல்,மறந்திருக்கிறதென்=நிருத்யோகராய் விஸ்மரித்தெழுந்தருளி யிருக்கிறதற்கு ஹேதுவேது? பேசாய்=அத்தை யருளிசசெய்தருளீர். (௩௩)

(வ்-ம்) த்வத்ஸம்பந்தஜ்ஞாநஶூந்யதையாகிற மௌர்க்யத்தைப்போக்கி, சேஷபூதனானவடியேனே, (௧) "வினையேனையுனக்கடிமையறக்கொண்டாய்" என்கிறபடியே, சேஷத்வாநுகுணமாக தாஸ்யத்தைக்கொண்டருளின ஸ்வாமியானவரே! இன்னமெத்தனைகாலாவதி இந்தஹேயமானதேஹத்தோடே, இதில் பொருத்தமற்றிருக்கிற நானிருப்பன்; "இன்னகாலத்திலே தேஹம் முக்தமாம், இன்னபிரகாரத்தாலே இந்த தேஹவிமோசநம், இந்த ஸ்தலத்திலே" என்று சொல்லப்படுகிற விவையெல்லாம், யதிகளுக்கு நாதராய், ஸர்வஜ்ஞானதேவர் அறிந்தருளுவீர். அஜ்ஞனான நானிவற்றிலேகதேசமு மறியேன்.

ஆனபின்பு, இத்தேஹத்தோடே பொருத்தமற்றிருக்கிறவென்னை, இனிதேவர் க்ருபையாலே இச்சரீரத்தை விடுவித்து, திவ்யாலங்காரபரிபூர்ணமான பரமபதத்திலே ஏற்றத் திருவுள்ளமுண்டாகில், அநந்தரம், (௨)"விண்ணுலகம் தருவானாய் விரைகின்றான்" என்கிறபடியே த்வரியாமல் நிருத்யோகராய், விஸ்மரித்தெழுந்தருளியிருக்கிறதற்கு ஹேதுவேது? அத்தை யருளிச்செய்தருளீர். தேவர்க்கு க்ருபையுண்டாயிருக்க விளம்பஹேதுவான ஸாதநமித்தலையி லில்லையாயிருக்க, காலவிளம்பம் கார்யமென்னென்று கருத்து; "அமர்ந்திருக்கிற தென்பேசாய்" என்றுபாடஞ்சொல்லுவர். நினைவுண்டேலென்று, வித்தவத்கரிக்கிறதாகவுமாம். (௩௪)

(அ-கை) நமக்கு க்ருபையுண்டானாலும், எத்தனை தயாவான்களையும், நிர்க்க்ருணராம்படி பண்ணுமதான உம்முடைய ப்ரபல ப்ரதிபந்தகங்கள் கிடந்ததேயென்று எம்பெருமானார்க்கு நினைவாக, (௩)"సర్వపాపేభ్యో మోక్షయిష్యామి-ஸர்வபாபேப்யோமோக்ஷயிஷ்யாமி"

---

(௧) தி-வாய்-௪ ௯-௧. (௨) தி-வாய-௧௦-௯-௩. (௩) கீ-௧௮-௬௬.

என்கிற ஸர்வேஶ்வரன், தேவர்க்கு விதேயனன்றோ ? ஆகையா லே, த்வதநந்யனான நான் பாபபலங்களை புஜியாமல், முக்தனாம்படி பண்ணவேணுமென்கிறார்.

முன்னைவினைபின்னைவினை யாரத்தமென்னும்
 மூன்றுவகையான வினைத்தொகையனைத்தும்யானே
என்னையடைந்தோர் தமக்குக் கழிப்பனென்னுமரங்கர்
 எதிராசா நீ யிட்டவழக்கன்றோ சொல்லாய்
உன்னையல்லதறியாத யானிந்தவுடம்போ
 டுழன்றுவினைப்பயன் புசிக்கவேண்டுவதொன்றுண்டோ
என்னுடையவிருவினையை யிறைப்பொழுதில்மாற்றி
 ஏராரும்வைகுந்தத்தேற்றி விடாய் நீயே. (௩௪)

முன்னைவினை = பூர்வாகம், பின்னைவினை = உத்தராகம், ஆரத்தம் = ப்ராரப்தம், என்னும் = என்று சொல்லப்படுகிற, மூன்றுவகையான = மூன்று ப்ரகாரங்களான, வினைதொகை = பாபஸமூஹங்கள, அனைத்தும் = அகிலத்தையும், யானே = ஸர்வஜ்ஞத்வ ஸர்வஶக்தித்வ விசிஷ்டனான நானே, என்னை = வாத்ஸல்யாதி குணவிசிஷ்டனான வென்னை, அடைந்தோர் தமக்கு = அநந்யசரணராய் சரணவரணம் பண்ணின ப்ரபந்நரானவர்கள் தங்களுக்கு, கழிப்பனென்னும் = அப்படிப்பட்ட அகிலபாபத்தையும் ஸவாஸநமாகப்போக்குவனென்றருளிச்செய்த, அரங்கர் = திருவரங்கரான பெரியபெருமாள், எதிராசா = யதிகளுக்கு நாதரானவரே ! நீயிட்டவழக்கன்றோ = தேவருக்கு விதேயரன்றோ? சொல்லாய் = அருளிச்செய்யவேண்டும், (இவ்வர்த்தம யதார்த்த மென்னுமது தேவர்தா மருளிச்செய்யலாகாதோ?) உன்னையல்லது = (இப்படி ஈஶ்வரவசீகாரத்தையுடைய) தேவரையொழிய, அறியாத = வேறொரு ரக்ஷகனையுமறியாத, யான் = அடியேன், இந்தவுடம்போடு = இச்சரீரத்தோடு, உழன்று = பொருந்தி அதுவேயாதாரையாக விருந்து, வினைப்பயன் = தத்கார்யமான பாபபலங்களை, புசிக்கவேண்டுவதொன்றுண்டோ? அநுபவிக்கவேணுமென்றொரு நிர்ப்பந்தமுண்டோ? என்னுடைய = அடியேனுடைய, இருவினையை = ப்ரபலபாபத்தை, இறைப்பொழுதில் = க்ஷணகாலத்தில், மாற்றி = ஸவாஸநமாகப்போக்கி, ஏராரும் = அழகுநிறைந்துள்ள, வைகுந்தத்தேற்றிவிடாய் = வைகுந்தமாநகரத்திலேற்றி விட்டருளீர், நீயே = தேவரீரே யென்கிறார்.) (௩௪)

(வ்-ம்) "పూర్వాఘముత్తరాఘఞ్చ సమారబ్ధమఘం తథా-பூர்வாகமுத்தராகஞ்ச ஸமாரப்தமகம்ததா" என்கிற படியே, பூர்வாகமுத்தராகமாரப்தமென்று சொல்லப்படுகிற, வர்க்கத்ரயமான பாபஸமூஹங்க

ளான வெல்லாவற்றையும், (௧) "మామేకం శరణం వ్రజ, అహం త్వా సర్వ పాపేభ్యో మోక్షయిష్యామి-மாமேகம் சரணம்வ்ரஜ, அஹம்த்வா ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி" என்று, ஸஹாயாந்தர நிரபேக்ஷனாய்க்கொண்டு ஸர்வஜ்ஞத்வ ஸர்வஶக்தித்வ விசிஷ்டனானநானே, வாத்ஸல்யாதி குணவிஶிஷ்டனானவென்னை அநந்யஶரணராய் ஶரணவரணம்பண்ணின ப்ரபந்நரானவர்கள் தமக்களுக்கு அப்படிப் பட்ட வகிலபாபத்தையும் ஸவாஸநமாகப்போக்குவனென் றருளிச்செய்த செம்மையுடைய திருவரங்கரான பெரியபெருமாள், எதிகளுக்கு நாதரானவரே! (௨) "వశ్యస్సదాభవతి తే-வஶ்யஸ்ஸதாபவதிதே" என்கிறபடியே த்வதநீ(ధీ)நரன்றோ? இவ்வர்த்தம் யதார்த்தமென்னுமதுதேவர் தாமருளிச்செய்யலாகாதோ? இப்படி ஈஶ்வர வஶீகாரத்தையுடைய தேவரையொழிய, வேறொரு ரக்ஷகாந்தரமறியாதே அநந்யகதியாயிருக்கிறநான் இந்ததேஹத்தோடேபொருந்தி அதுவே யாத்ரையாகவிருந்து, தத்கார்யமான பாபபலங்களை புஜிக்கவேணுமென்றொருநிர்ப்பந்தமுண்டோ? பாபங்களுக்குமெனக்குமென்ன சேர்த்தியுண்டு? இப்படியானபின்பு என்னாலே அநுபாவ்யமாயிருக்கிற ப்ரபலகர்மங்களை, (௩) "கடிவார்தீயவினைகள் நொடியாருமளவைக்கண்" என்கிறபடியே க்ஷணகாலத்திலேஸவாஸநமாகப் போக்கி நான் தரைக்கிடைகிடவாமல் ஏர்கொள்வைகுந்தமாநகரத்திலே த்வதேகபரமாயற்றபின்பு ஏற்றிவிட்டருளீர். ஏர் = அழகு. ஆர்தல்=மிகுதி. (௩-௪)

(அ-கை) அடியேனுடைய ஸகலப்ரதிபந்தகங்களைப்போக்கி, ரக்ஷித்தருளுகையிலே யத்நம்பண்ணியருளுகிறதேவர், க்ருபையாலே நித்யகைங்கர்யங்கொண்டருள ஸங்கல்பித்திருக்க, அத்தையு ‡ மதிகரித்துப்போவதான வென்னுடைய ருசிவிரோதியாயிருக்கிற விந்திரியபாரவஶ்யத்துக் கடியானபாபங்களைப்போக்கி, த்வதேகமநாவாம்படி பண்ணியருளவேணுமென்கிறார்.

அருளாலேயடியேனை யபிமானித்தருளி
அநவரதமடிமைகொள்ள நினைத்து நீயிருக்க
மருளாலேபுலன்போக வாஞ்சைசெய்யுமென்றன்
வல்வினையை மாற்றியுன்பால் மனம்வைக்கப்பண்ணாய்

(௧) கீ-௧௮-௬௬. (௨) யதிராஜஸப்ததி. (௩) தி-வாய்-௧-௬-௧௦.
‡ அதிகரமித்து.

தெருளாருங் கூரத்தாழ்வானு மவர்செல்வத்
திருமகனார்தாமு மருளிச்செய்த தீமைத்
திரளானவத்தனையுஞ் சேரவுள்ளவென்னைத்
திருத்தியுய்யக்கொள்ளும வகை தேருமெதிராசா. (௩௫)

அருளாலே = கிருபையாலே. அடியேனையபிமானித்தருளி = அடியேனை அங்குற்றைக்கு அநந்யார்ஹனாம்படி யபிமானித்தருளி, அநவரதம = நிரந்தரம். அடிமைகொள்ள = நித்யகைங்கர்யம் கொண்டருள, நினைத்து நீயிருக்க, = தேவர் திருவுள்ளம் பற்றியிருக்க, மருளாலே = அத்தையறியவொட்டாத வஜ்ஞாநத்தாலே, புலன் = இந்த்ரியங்களினுடைய, போக = விஷயபோகங்களை. வாஞ்சை செய்யும் = அபேக்ஷிக்கின்ற, என்றன் = அடியேனுடைய, வல் = ப்ரபலமான, வினையை = கர்மங்களை, மாற்றி = அதில்நின்றும் முகம் மாறப்பண்ணி, உனபால் = தேவர விஷயத்தில், மனம்வைக்க = மநஸ்ஸுவைக்கும்படி, பண்ணாய் = பண்ணியருளவேணும், தெருளாரும் = ஜ்ஞாநபரிபூர்ணரான, கூரத்தாழ்வானும் = ஸ்ரீகூரேசரும், அவர் செல்வத்திருமகனார்தாமும் = அவர் திருவயிற்றிலே யவதரிக்கும்படியான ஸ்ரீயையுடையரான பெரியபட்டரும், அருளிச்செய்த = தந்தம் நைச்யங்களை யருளிச்செய்த, தீமைத்திரளான = பாபஸமூஹங்களான, அத்தனையும் = எல்லாவற்றையும், சேரவுள்ள = சேரவுண்டான, என்னை = அடியேனை, திருத்தி = செயல் நன்றாகத்திருத்தி, உய்யக்கொள்ளும் = உஜ்ஜீவிக்கபண்ணியருளும், வகை = ப்ரகாரத்தை, எதிராசா = எம்பெருமானாரே! தேரும் = சிந்தித்தருளும். (௩௫)

(வ்-ம்) (௧) "కూరనాథభట్టాఖ్య దేశికవరోక్త సమస్తనైచ్యమ్, అద్యాస్య సఙ్కుచితమేవ-கூரநாதபட்டாக்ய தேசிகவரோக்த ஸமஸ்தநைச்யம் । அத்யாப்ய ஸங்குசிதமேவ" என்கிறபடியே, ஜ்ஞாநபரிபூர்ணரான கூரத்தாழ்வானும், அவர் திருவயிற்றிலே யவதரிக்கும்படியான ஸ்ரீயையுடையராய், அதடியாக, (௨) "శ్రీరఙ్గరాజకమలాపదలాలితత్వమ్-ஸ்ரீரங்கராஜகமலாபதலாளிதத்வம்" என்னும்படி, ஸ்ரீமத்குமாரரான பெரியபட்டர் தாமும் ஸ்வஸ்வநைச்யங்களை (௩) "బుద్ధ్వాచశోచ-புத்வாசசோச" (௪) "అతిక్రామన్నాజ్ఞామ్-அதிக்ராமந்நாஜ்ஞாம்" இத்யாதிகளாலே அருளிச்செய்த பாபஸமூஹங்களானவை யொன்றொழியாம லெல்லாஞ்சேரவுண்டானவென்னை (௫) "செயல்நன்றாகத்திருத்திப்பணிகொள்வான்" என்னும்படி, திருத்தி யுஜ்ஜீவிக்கப்பண்ணி

---

(௧) யதிராஜவிம்ஶதி. (௨) ர-ஸ்த-௧-௧௧. (௩) வர-ஸ்த-௭௬.
(௪) ர-ஸ்த. (௫) கண்ணி-௰.

க்கொண்டருளும் பிரகாரம் சிந்தித்தருளுமவரே! தேவருடைய கேவலக்ருபையாலே, அடியேனை அங்குற்றைக்கு அநந்யார்ஹனும்படி யபிமாநித்தருளி நிரந்தரம் நித்யகைங்கர்யங்கொண்டருள தேவர் திருவுள்ளம்பற்றியிருக்க, அத்தையறியவொட்டாத வஜ்ஞானத்தாலே, (க) "[illegible]-ஶப்தாதிபோகருசிரந்வஹமேததேஹா" என்கிறபடியே, இந்திரியபரிச்சிந்நங்களானவிஷயபோகங்களிலே வாஞ்சையைப்பண்ணும் என்னுடையவநிவர்த்யமான ப்ரபலகர்மங்களை, அதில் நின்றும் முகம்மாறப்பண்ணி, (உ) "தன்பால் மனம்வைக்கத்திருத்தி" என்கிறபடியே, ப்ராப்தவிஷயமான தேவர்விஷயத்திலே மநஸ்ஸை வைக்கும்படி பண்ணியருளவேணும். யதாந்வயமாக யோஜிக்கவுமாம். (௫௫)

(அ-கை) "மருளாலே புலன்போகவாஞ்சைசெய்யு மென்றன் வல்வினையைமாற்றி" என்றபின்பு மனைநடையாடக் காணகையாலே, அத்யந்தஹேயமாயிருக்கிற விஷயாநுபவஸுகவாஞ்சையானது அடியேனுடைய மநஸ்ஸை, பலாத்காரத்தோடே தான் மேலிடாநின்றது. அதுக்குஹேது வாஸநாகர்மங்களின்னதென்றறியே னென்கிறார்.

நேரிசை வெண்பா.

‡ வாசனையிலூற்றமோ மாளாதவல்வினையோ
வேதென்றறியே னெதிராசா — தீதாகும்
ஐம்புலனிலாசை யடியேன் மனந்தன்னை
வன்புடனே தானடரும்வந்து. (௫௬)

எதிராசா = எம்பெருமானாரே! தீதாகும் = இவ்வாத்மாவுக்கு அத்யந்தம் பொல்லாங்காயிருக்கிற, ஐம்புலனில் — பஞ்சேந்த்ரிய பரிச்சிந்நமான விஷயஸுகங்களில், ஆசை = அபேக்ஷையானது, அடியேன் = அடியேனுடைய, மனந்தன்னை = மநஸ்ஸை, வன்புடனே = பலாத்காரத்தோடே, தான்வந்து = தானே மேல்விழுந்து வந்து, அடரும் = மேலிடாநின்றது. விஷயங்களில் மூட்டுவதாகத் தான் மேலிடாநின்றது, (இந்த ருசிக்கு ஹேது) வாசனையில் = அநாதிபாபவாஸநையில்பற்றியிருக்கிற, ஊற்றமோ = தார்ட்யமோ, மாளாத = ப்ராயஶ்சித்த விநாஶ்யமாத அநுபவவிநாஶ்யமதலன்றிக்கே யிருப்பதான, வல்வினையோ = அடியேனுடைய ப்ரபலகர்ம

(க) யதிராஜவிம்ஶதி. (உ) தி-வாய்-க-ரு-கo, ‡ வாதநே.

மோ, ஏதென்று=எதுவென்று, அறியேன்=அறிகிறிலேன், (இதுக்குக் காரணமின்னதென்றறிந்து அதனைத் தேவரே நிவர்த்திப்பித்தருளவேணுமென்று கருத்து). (௩௬)

(வ்-ம்) இவ்வாத்மாவுக்கத்யந்தம் பொல்லாங்குதானாயிருக்கிற (௧) "ஐங்கருவிகண்டவின்பம்" என்னும்படி இந்திரியபரிச்சிந்நமான விஷயஸுகங்களிலபேக்ஷை (௨) "ஹ்ருத்ப்ரஸஹ்ய மந:-ஹரந்திப்ரஸபம் மந:" என்கிறபடியே, தேவர் திருவடிகளைப் பற்றியிருக்கிற வடியேனுடைய மநஸ்ஸை மேல் விழுந்துவந்து, பலாத்காரத்தோடே விஷயங்களிலே மூட்டுவதாகத்தான் மேலிடாநின்றது. இந்த ருசிக்கு ஹேது (௩) "దుర్వాసనాదృఢమతిస్సుఖమింద్రియోత్థం హాతుం న మే మతిరలం వరదాధిరాజ-துர்வாஸநாத்ருடமதஸ்ஸுகமிந்த்ரியோத்தம் ஹாதும் நமே மதிரலம் வரதாதிராஜ" என்கிறபடியே அநாதிபாபவாஸநையிலே பற்றியிருக்கிறதார்ட்டியமோ? அன்றிக்கே (௪) "மதியிலேன் வல்வினையே மாளாதோ" என்னும்படி அதுக்குமடியா யநுபவவிநாஶ்யமாதல், ப்ராயஶ்சித்த விநாஶ்யமாதலன்றிக்கேயிருப்பதான வென்னுடைய ப்ரபலகர்மமோ? இதேதென்றறிகிறிலேன்; இதுக்கு நிதாநமின்னதென்றறிந்து, அத்தை தேவரே நிவர்த்திப்பித்தருளவேணுமென்று கருத்து. அடருகை=மேலிடுகை. "அருளாலே" "வாதனை" என்கிற விரண்டுபாட்டாலும் ஐம்புலனென்று விஷயங்களைச் சொல்லுகிறது. (௩௬)

(அ-கை) நீர் இந்த்ரியங்களினுடைய தோஷத்தை யநுஸந்தித்துப் பதருகிறீர். நாமதாமும் அவற்றின்கையிலே காட்டிக்கொடோம்காணும்; இப்படி யஞ்சுகிறவும்மை ஸம்ஸாரத்திலே வைக்கிறது—"ஆர்த்தி-அதிகாரபூர்த்திக்கென்னுமது முக்யம்" என்கிறபடியே இத்தாலே நிறம் பெறுவதான வார்த்தாதிகாரம் பிறக்குந்தனையும்காணும். ஆகையால் அதுபிறந்தவுடனே உம்முடைய வபேக்ஷிதத்தைச்செய்து தலைக்கட்டுகிறோங்காணுமென்று எம்பெருமானுருக்குக் கருத்தாக, இவ்வளவாகவில்லாதவதிகாரம் இனிமேலென்னவுண்டாக்கப்புகுகிறது. இந்த வதிகாரஸம்பத்தியுமுண்டாக்கி அபேக்ஷிதஸம்விதாநத்துக்கு விரோதியானபாபஸமூஹத்தைச் சேதித்து ப்ராப்யதேசத்தை ப்ராபிப்பியாததுக்கு ஹேது வேதென்கிறார்.

---

(௧) திருவாய்-௪-௯-௧௦. (௨) கீ-௨-௬௦
(௩) வர-ஸ்த-௭௮ (௪) திருவாய்-௧-௭-௩.

இன்றளவுமில்லாத வதிகாரமேலுமெனக்
கென்றுளதாம் சொல்லா யெதிராசா—குன்று
வினைத்தொடரை வெட்டிவிட்டு மேலைவைகுந்தத்
தென்னைக்கடுக வேற்றாததென்? (௩௭)

இன்றளவும்=இப்போதளவும், இல்லாவதிகாரம் = இல்லாத அதிகாரம், மேலும்= இனிமேல், எனக்கு = அடியேனுக்கு, என்றுளதாம்= எப்போதுண்டாகும்? (இப்போதுண்டாகாததோ இனிமேலுண்டாகப் போகிறது) சொல்லாய்=இத்தை தேவர் அருளிச்செய்யவேணும், எதிராசா=எம்பெருமானாரே, குன்றா=ஒன்றாலும் நசியாமலிருப்பதான, வினைத்தொடரை = பாபாநுபந்தத்தை, வெட்டிவிட்டு= சேதித்துப் பொகட்டு, மேலை=ஸர்வோத்தரமான, வைகுந்தத்து=பரமபதத்தில், என்னை = அடியேனை, கடுக = சீக்ரமாக, ஏற்றாதது = ஆரோபியாததற்கு, என் = என்ன காரணம்? (௩௭)

(வ்-ம்) "இன்று திருநாடுமெனக்கரிதாவெண்ணுகின்றாய்" என்னும்படியான இன்றளவுமில்லாதவதிகாரம் இனிமேலென்றுண்டாவதாம். இப்போதுண்டாகாததோ இனிமேலுண்டாகிறது? இத்தை தேவரருளிச்செய்யவேணும். இப்படிருசிவிரோதியாய், ஒன்றாலும் நசியாமலிருப்பதான (௧) "தொன்மாவல்வினைத்தொடர்" என்னும்படியான பாபாநுபந்தத்தைச் சேதித்துப்பொகட்டு (௨) "மேலைவைகுந்தத்திருத்தும்" என்கிறபடியே ஸர்வோத்தரமான தேசத்திலே, அதிலபேக்ஷையையுடையவடியேனை, அஜ்ஞாநாவஹமான ஸம்ஸாரத்தில் நின்றும் ஶீக்கிரமாக ஆரோபியாததற்கு ஹேதுவேது? என்றாலே எல்லாம் அஶக்யமாய், தேவராலே எல்லாம ஶக்யமாயிருந்தபின்பு தாழ்க்கைக்கொரு ஹேத்வந்தரமில்லையென்றுகருத்து. (௩௭)

(அ-கை) இன்றளவுமில்லாதவதிகாரமென்றத்தை, †தார்க்கிகஶப்தநியாயத்தாலே தர்ஶிப்பியாநின்றுகொண்டு, தத்ஹேதுபூர்வமாக வத்தையருளிச்செய்கிறார்.

அஞ்சிலறியாதா ரைம்பதிலும் தாமறியார்
என்சொலெனக்கோ வெதிராசா—நெஞ்சம்

(௧) தி-வாய்-௩-௨-௨. (௨) தி-வாய்-௮-௯-௧௧. † லௌகிக.

உன் தாளொழிந்தவற்றையே யுகக்கவின்றும்
அநுதாபமற்றிருக்கையால். (௩அ)

எதிராசா = எம்பெருமானாரே, நெஞ்சம் = க்ஷுத்ரவிஷயங்களிலே மண்டியிருக்கிற மநஸ்ஸானது. உன = ப்ராப்தசேஷியான தேவருடைய, தாள் = நிரதிசயபோக்யமான திருவடிகளுக்கு, ஒழிந்தவற்றையே = பாஹ்யமாய அப்ராப்தவிஷயங்களான வற்றையே, உகக்க = அநுமோதிக்க, இன்றும் = இப்போதும், அநுதாபம் = இப்படி அப்ராப்தமான விஷயங்களைவிரும்புவதே! என்கிற பஶ்சாத்தாபமும், அற்று = இல்லாமல் இருக்கையால் = இருப்பதினாலே, அஞ்சில் — விவேகாங்குரயோக்யமான பஞ்சவர்ஷத்தில், அறியாதவா = அறியாதவர்கள், ஐம்பதிலும் = ஐம்பதுவயஸ்ஸிலும், தாமறியார் = அவர்களறியார்கள், என்சொல் = என்றுசொல்லுகிற இந்த லௌகிகவார்த்தை, எனக்கோ = அடியேன் பொருட்டோ? (௩அ)

(வ்-ம்) எதிகளுக்கு நாதரானவரே! (௧) "நீமனம்" என்னும்படி க்ஷுத்ரவிஷயங்களிலே மண்டியிருக்கிற மநஸ்ஸானது, (௨) "யாதானும் பற்றிநீங்கும்" என்கிறபடியே, ப்ராப்தஶேஷியான தேவருடைய நிரதிசயபோக்யமான திருவடிகளை யொழிந்த வப்ராப்த விஷயங்களானவற்றையே யநுமோதிக்க, இப்படி யப்ராப்தமான விஷயத்தை விரும்புவதே யென்றநுதபிக்கவேண்டும்படியான தசையை ப்ராப்தமாயிருக்கிற வின்றும் அநுதாபஸம்பந்தமாயிருக்கையாலே, (௩) "[illegible]-தஸ்மாத் பால்யே விவேகாத்மா" என்கிறபடியே, விவேகாங்குரயோக்யமான பஞ்சவர்ஷத்தி லஜ்ஞரானவர்கள் தத்பரிணமதசையான வைம்பதுவயஸ்ஸிலும் விவேகஸம்பந்தயதையாலே அஜ்ஞராவர்களென்று சொல்லுகிற விந்த லௌகிகஸூக்தம் எனக்கே அம்ஸமாயிற்றே? ஆகையால். ஸ்வஹிதத்தி லஜ்ஞனை யெனக்கு ஸர்வஜ்ஞரான தேவரொருபோக்குடி கண்டருளவேணுமென்று கருத்து. "நெஞ்சமும் தாளொழிந்தவற்றையே யுகக்கும்" என்று பாடமானபோது "அஞ்சிலறியாதா ரைம்பதிலும் தாமறியாரென் சொல்லெனக்கோ வெதிராசா வின்று மநுதாபமற்றிருக்கையால், நெஞ்சமுந்தா ளொழிந்தவற்றையே யுகக்கும்" என்று மிப்படியோஜிக்கக்கடவது. (௩அ)

(அ-கை) நீர் "உன் தாளொழிந்தவற்றையே யுகக்கும்" என்று அவர்க்கநுமா யப்ராப்தங்களாயிருக்கு மவற்றையே பற்றினால்,

(௧) தி-வாய்-௨-எ-அ. (௨) திருவி-௬௫. (௩) வி-பு-௬-௧௭-௭௫.

விரஸமாயிருக்கிற வும்மை அவரெப்படி யங்கீகரிக்கப் புகுகிறு ரென்று பார்ஶ்வஸ்தர்க்கபிப்ராயமாக, ஆஶ்ரயணதசையிலே குண ஹீநனாய், அத்தாலே விரஸனாயிருக்கிற வென்னுடைய தோஷத்தை போக்யமாக விரும்பி யங்கீகரித்தருளின வெம்பெருமானார் என்னை யுபேக்ஷித்தருளாரென்றுமத்தை ஸத்ருஷ்டாந்தமாக வருளிச் செய்கிறார்.

> வேம்புகறியாக விரும்பினர் கைத்ததென்று
> தாம்புகடாதே புசிக்குந் தன்மைபோல்—தீம்பனிவ
> னென்றுநினைத்தென்னை யிகழா ரெதிராசர்
> அன்றறிந் தங்கீகரிக்கையால். (ருக)

வேம்பு = வேப்பிலையும், கறியாக = கறியமுதாக, விரும்பினர் தாம் = அபேக்ஷித்த தாங்கள், கைத்ததென்று = கைப்பாகவிருக்கிறதென்று, புகடாதே = உபேக்ஷியாதே, புசிக்கும் = புஜிக்கிற, தன்மைபோல = ஸ்வபாவம்போலே, தீம்பனிவனென்று = இவன் துஷ்டனென்று, நினைத்து = விசாரித்து, என்னை = அடியேனை, எதிராசர் = எம்பெருமானார், அன்று = அக்காலத்தில் - அங்கீகாரஸமயத்திலே, அறிந்து = தோஷயுக்தனென்றறிந்து, அங்கீகரிக்கையால் = அந்த தோஷத்தையே போக்யமாகக்கொண்டு அங்கீகரித்தருளுகையாலே, இகழார் = உபேக்ஷித்தருளார்.

(வ்-ம்) அதாவது (க) "வேம்புங்கறியாகுமென்று" என்கிறபடியே, ஸரஸமானவற்றை யுபேக்ஷித்து, அத்யந்தம் கைப்பையுடைத்தாய், விரஸமாயிருப்பதானவேப்பிலை தொடக்கமாயுள்ள தத்ஸம்பந்திபதார்த்தங்களைச் சோற்றுக்கு உபதம்ஶமாகவாதரித்து புஜிக்குமவர்கள், அது விரஸமாய்க்கைத்ததென்று அத்தைவிரும்பிப் புஜிக்கும் தாங்கள் உபேக்ஷியாதே புஜிக்கும் ஸ்வபாவம்போலே அங்கீகாரஸமயத்திலே தோஷயுக்தனென்றறிந்து, அத்தை போக்யமாகக் கொண்டங்கீகரித்தருளுகையாலே, எம்பெருமானா ரிப்போதிவன் தோஷயுக்தனென்று உபேக்ஷித்தருளார். (உ) "ஸதோஷோப்யநுக்ராஹ்யஸ்ஸதோஷோப்யஜேயம்" என்னும்படி யிதோரங்கீகாரதார்ட்ட்ய மிருந்தபடியென்னென்று கருத்து. (ருக)

(அ-கை) உம்முடையதோஷம் பாராதே யங்கீகரித்தோமாகில் மேலுள்ளதும் நாமே க்ரமத்திலே செய்கிறோமென்று, எம்பெருமா

(க) திருவ-ச-ள. (உ) ரா-யு-க-அ-கூ.

ரருக்கு நினைவாக த்வதநுபவயோக்யமான காலத்தை யெல்லாம் வ்யர்த்தமேபோக்கி, அதுக்கசலான ஸம்ஸாரத்திலிராமல் அநுபவத்துக்குப்பாங்கான தேசத்திலே சேர்த்து, அதுக்கிடைச்சுவர்தள்ளிப்போகடவேணுமென்கிறார்.

அவத்தேபொழுதை யடியேன் கழித்துப்
பவத்தே யிருக்குமது பண்போ—திவத்தேயான்
சேருமவகையருளாய் சீராரெதிராசா
போருமினி யிவ்வுடம்பைப்போக்கு. (௪௦)

அடியேன்=தாஸபூதனான நான், பொழுதை=தேவருடைய வநுபவ கைங்கர்யங்களுக்கடைத்த விலக்ஷணமான காலமெல்லாம், அவத்தே=வ்யர்த்தமாக, கழித்து=போக்கி, இப்பவத்தே=விரோதியாயிருக்கிற இந்த ஸம்ஸாரத்தில், இருக்குமது=பொருந்தியிருக்கிறது, பண்போ=தேவருடைய க்ருபாஸ்வபாவத்துக்குச்சேருமோ? திவத்தே=பரமபதத்தை, யான்=அடியேன், சேருமவகை=அடையும் ப்ரகாரத்தை, அருளாய=க்ருபை செய்தருளீர், சீர்=ஸமஸ்த கல்யாணகுணங்களாலே, ஆர்=பூர்ணரான, எதிராசா=எம்பெருமானாரே! போரும=ஸம்ஸாரத்தில் சிறையிருப்பு போரும்-போரும, இனி இவ்வுடம்பை=இனி இந்தச் சரீரத்தை, போக்கு=போக்கியருளவேணும். (௪௦)

(வ்-ம்) தேவருடைய வநுபவகைங்கர்யங்களுக் கடைத்தவிலக்ஷணமானகாலமெல்லாம் அதுக்கிட்டுப்பிறந்த அடியே னப்படிப்பட்டவந்தப்பொழுதைப்பழுதேபோக்கி, விரோதியாயிருக்கிற ஸம்ஸாரத்தில் பொருந்திபிருக்கிறது தேவர் க்ருபாஸ்வபாவத்துக்குப் போருமோ? ஆசையால் கைங்கர்யவர்த்த(ர்)கமாய்.(க)"பரந்தாமமென்னுந்திவம்" என்னும்படியான தேசத்திலேயபேக்ஷையுடைய நான் கெடுமரக்கலங்கரைசேர்ந்தாப்போலே சேரும்ப்ரகார மிரங்கியருளவேணும்—ஸமஸ்தகல்யாணகுணபரிபூர்ணராய் எதிகளுக்கு நாதரானவரே! ஸம்ஸாரத்தில் சிறையிருப்புபோரும். இனி பகவத்ஸ்வரூபதிரோதாநகரியாய், விபரீதஜ்ஞாநஜநநியாய் ஆத்மாவோடேபொருந்தியிருக்கிற விந்ததேஹத்தைப் போக்கியருளவேணும்; இதுவே புருஷார்த்தம், பண்பு=ஸ்வபாவம், "அடியேன் இப்பவத்தே இருக்குமதுபண்போ" என்று கீழோடே கூட்டவுமாம் (௪௦)

(க) இரா-நூ.

(அ-கை) ஆனாலும் முனிய தோஷபூயஸ்த்வத்தைப்பாராதே அருந்தேவைகளைச்செய்யும்படி சொல்லக்கூடுமத்தனையோ வென்னில்; அஸக்ருதாபராதனான வடியேனுடைய ப்ராக்ருதஸம்பந்த நிபந்தநமாய் வருமபராதங்களையெல்லாம் பொறுத்து ரக்ஷிக்கு மவரானபின்பு, ஸகலஜீவலோகஸமுஜ்ஜீவநார்த்தமாக வவதரித்தருளின தேவர், அதிசபலனானவெனக்கு தயைபண்ணி ரக்ஷிக்கவேணுமென் கிறார்.

எனைப்போல் பிழைசெய்வா ரிவ்வுலகிலுண்டோ
உனைப்போல் பொறுக்கவல்லாருண்டோ — அனைத்துலகும்
வாழப்பிறந்த வெதிராச மாமுனிவா
ஏழைக்கிரங்காயினி. (௬௧)

எனைப்போல் = அடியேனைப்போல், பிழை = அபராதத்தை, செய்வார் = செய்யுமவர்கள், இவ்வுலகிலுண்டோ = இந்த லோகமெல்லாம் தேடிப்பார்த்தாலும் கிடைப்பரோ? உனைப்போல் = தேவரைப்போலே, பொறுக்கவல்லார் = ஸஹிக்கவல்லார், உண்டோ = உபயவிபூதியிலுண்டோ? அனைத்துலகும் = ஸமஸ்தலோகங்களும், வாழ = உஜ்ஜீவித்து வாழும்படியாக, பிறந்த = அவதரித்தருளின, எதிராச = யதிராச ரென்கிற திருநாமத்தையுடைய, மா = பூஜ்யரான, முனிவா = யோகிஜநாக்ரகண்யரே! ஏழைக்கு = சபலனாயிருக்கிற வடியேனுக்கு, இனி இரங்காய் = இனி தயை பண்ணியருளவேணும். (௬௧)

(வ்-ம்) (க) "நிகரின்றி நின்றவென்னீசதைக்கு" என்கிறபடியே அபராதம்பண்ணுமவர்களில் வைத்துக்கொண்டு, மாக்ருதாபராதக்ருத்துக்களாயிருக்குமவர்கள் இந்தலோகமெல்லாந் தேடிப்பார்த்தாலுங்கிட்டுமோ? (க) "அருளுக்குமஃதேபுகல்" என்கிறபடியே அபராத ஸஹரில்வைத்துக்கொண்டு, தேவரைப்போலே ஸஹிக்கவல்லாருபயவிபூதியிலுண்டோ? ஸகலஜீவலோகமு முஜ்ஜீவித்து வாழும்படியாக வவதரித்தருளி, அவர்கள் ரக்ஷணத்திலே மநநம் பண்ணியருளுகிற வெம்பெருமானாரே! இப்படிக்கைகழிந்தபின்பு, பற்றினத்தைவிடாத சபலனாயிருக்கிற வெனக்கு தயைபண்ணியருளவேணும். (உ) "ఆపద్నంత్యద్య యేన నాథా -ததஹம் த்வத்ருதேந நாதவாந்" இத்யாதிவத். (௬௧)

(க) இரா-நூ-௬௨. (உ) ஸ்தோ-ர-௫௧.

(அ-கை) "இப்படி யாகிஞ்சந்யாநந்யகதித்வங்களை யாவிஷ்கரிக்கும திகாரிகளைப் பெற்றோமே" என்றுகந்து, எதிராசமாமுனியான வெம்பெருமானார் இவர்க்கினிப் பெறவேண்டும்பேறுகளை மநநம்பண்ணுவது, இவருடைய ப்ரேமஸ்வபாவத்தைக் கடாக்ஷித்துக்கொண்டிருப்பதாகாநிற்ச, அதுபற்றாமல் இவர்க்கும் ரக்ஷித்தல்லது நிற்கவொண்ணாதபடி (க)"உண்ணிலாவிய" என்றபடியே, இந்த்ரியபராக்ரோபமான பாசுரத்தாலே, தம்முடைய வநந்யகதித்வத்தை முன்னிட்டுக் கூப்பிடுகிறார்.

ஐம்புலன்கள் மேலிட் டடரும்பொழுதடியேன்
உன்பதங்கடம்மை நினைந்தோலமிட்டால்—பின்பவைதாம்
என்னையடராம லிரங்கா யெதிராசா
உன்னையல்லா லெனக்குண்டோ? (௪௨.)

ஐம்புலன்கள்=பஞ்சேந்த்ரியங்கள், மேலிட்டு = ஆக்ரமித்து, அடரும்பொழுது=ஸ்வ ஸ்வ விஷயங்களைக் காட்டு காட்டென்று துடர்ந்து பாதிக்கும தசையில், அடியேன்=தேவர்க்கு சேஷபூதனான வடியேன், உன் = தேவருடைய, பதங்கள்தம்மை= திருவடித்தாமரைகளை, நினைந்தே=(ஸ்ரீகஜேந்த்ராழ்வான், தேவஸம்வத்ஸரத்திலே ஆயிரம் ஸம்வத்ஸரம் முதலை நீருக்கிழுக்க, தான் கரைக்கிழுக்க வலச்சல் பட்டு, அதுக்குத்தன்னில மாகையாலும், அபிமதவித்தியாலும், பலம் வர்த்திக்கையாலும், தனக்குத்தனனில மலலாமையாலும், அபிமதாலாபத்தாலும், பலம் க்ஷயிக்கையாலும் துதிக்கை முழுத்துமபடியான தசை விளைகையாலே, இனி யிதுக்குவகருகில்லை யென்னும்படியான ஆபத்தையடைந்து, இத்தசையில் விரோதிநிரஸநசீலனான ஸர்வேஶ்வரனே நமக்குரக்ஷகனென் றநுஸந்தித்து "நாராயணாவோ" என்றோலமிட்டாப்போலே, ஸகலாபந்நிவாரணமான தேவர் திருவடிகளை) ஸ்மரித்து, ஓலமிட்டால் = ராமாநுஜா! வென்று கூப்பிட்டால், பின்பு= அநந்தரம், அவைதாம் = அப்படி பாதிக்குமவையான அவ்விந்த்ரியங்கள்தான், என்னை = அடியேனை, அடராமல்=மேலிடாமல், இரங்காய் = க்ருபைசெய்தருளீர், எதிராசா= யதிகளுக்கு நாதரானவரே! உன்னையல்லால் = தேவரையொழிய, எனக்கு=அடியேனுக்கு (ரக்ஷகர்) உண்டோ = இனிவேறுண்டோ? (ரக்ஷகாந்தரமில்லை யாகையாலே தேவரே ரக்ஷித்தருளவேணுமென்று கருத்து) "உன்பதங்கள் = தம்மை நினைந்தோலமிட்டால்" என்கிறத்துக்கு, "எம்பெருமானார் திருவடிகளே சரணமென்று மநஸ்ஸாலே ஸ்மரித்து வாக்காலேபெருமிடறு செய்து கூப்பிட்டால்" என்று பொருளாகவுமாம். (௪௨)

(க) தி-வாய்-௭-௧-௧.

(வ்-ம்) (க) "கோவாயைவரென்மெய்குடியேறி" இத்யாதிப் படியே, பஞ்சேந்த்ரியங்களுமாக்ரமித்து ஸ்வஸ்வகரணும்படி ஸ்வஸ்வவிஷயங்களைக்காட்டு, காட்டென்று தொடர்ந்து பாதிக்குந்தசையிலே தேவர்க்கே சேஷபூதனனவடியேன் கஜேந்த்ராழ்வான் மடுவின் கரையிலே, (உ) "[illegible]-க்ராஹ ஆகர்ஷதே ஜலே" என்று (ங) *முழுவலிமுதலை நீருக்குள்ளே பிழுத்துக்கொண்டு போய் நலியும்போது, (ச) "[illegible]-மனஸா சிந்தயத்தரிம்" என்று சிந்தித்து (ரு) "நாராயணவோ" என்றோலமிட்டாப் போலே, ஸகலாபந்நிவாரணமான தேவர் திருவடிகளை ஸ்மரித்து, ராமாநுஜாவென்று கூப்பிட்டவே,

அநந்தரம் அபாய பாதகங்களானவவை, அடியேனை மேலிடாமல், தயைபண்ணியருளவேணும். யதிகளுக்கு நாதரானவரே! தேவரையொழிய வெனக்கு ரக்ஷகராவார்? இனி வேறுண்டோ? வேறு ரக்ஷகாந்தரமில்லையாகையாலே, தேவரே ரக்ஷித்தருளவேணுமென்று கருத்து. "உனபதங்கள் தன்னை நினைந்தோலமிட்டால்" என்கிறதுக்கு எம்பெருமானார் திருவடிகளை சரணமென்று மனஸ்ஸாலே ஸ்மரித்து, வாக்காலே பெருங்கூப்பிடு செய்து கூப்பிட்டாலென்னவுமாம். (சஉ)

(அ-கை) "இரங்கா பெதிராசா" என்று அவரை வெறுக்கிறதென்? ப்ராப்யபூமியில் பராவண்யமும், த்யாஜ்யபூமியில் ஜிஹாஸையும் இந்திரிக்கவேண்டியாபேக்ஷையாயிருக்கது. அவையிரண்டு மிலலாத நமக்கு அஸத்ருசமானதேசத்தை அவரெப்படித்தந்தருளுவரென்று அதில நின்றும் நிராசராகிறார்.

இந்தவுலகிற்பொருந்தாமை யேதுமில்லை
அந்தவுலகிற்போக வாசையில்லை—இந்தநமக்
கெப்படியேதான் தருவ ரெந்தையெதிராசர்
ஒப்பில் திருநாடுதந்து. (சங)

இந்தவுலகில் = கொடுவுலகமான லீலா த்யாஜ்யபூமியில், பொருந்தாமை = அடிக்கொதிப்பது அருசி, ஏதுமில்லை = அத்யல்பமுமில்லை, அந்தவு

(க) திரு-மொ-எ-எ-க (உ) வி-தா.பு-கூக-சக. (ங) திரு-மொ-ரு-அ-ங.
(ச) வி-தர்ம-கூக-சஎ. (ரு) சிறியதிருமடல்.

லகில் = அந்த ப்ராப்யபூமியான பரமபதத்தில், போக = செல்ல, ஆசை யில்லை = ப்ராவண்யமுமில்லை, இந்த நமக்கு = இப்படி யபேக்ஷிதங்களா யிருக்கிற விரண்டிலும் அந்வயமற்றிருக்கிற நமக்கு, எந்தை = தந்தையாகிய, எதிராசர் = எம்பெருமானார், ஒப்பு = உபமானம், இல் = இல்லாத, (வைபவத்தையுடைய) திருநாடு = பரமபதத்தை, எப்படியோதான் = எந்த ப்ரகாரமாகத்தான், உகந்து = ஸந்தோஷித்து, தருவர் = உபகரித்தருளுவர்? (௪௩)

(வ்-ம்) (௧) "கொடுவுலகங்காட்டேல்" என்னும்படியான இந்த த்யாஜ்யபூமியில் அடிக்கொதிப்பு அத்யல்பமுமில்லை. (௨) "வானுலகந்தெளிந்தே யென்றெய்துவது" என்னும்படியான அந்த ப்ராப்ய பூமியை ப்ராபிக்கவேணுமென்கிற ப்ராவண்யமுமில்லை. இப்படி யபேக்ஷிதங்களாயிருக்கிற விரண்டிலு மந்வயமற்றிருக்கிற நமக்கு ஜநகரான வெம்பெருமானார் அஸத்ருஶ வைபவத்தை யுடைத்தான (௩) "தெளிவிசும்பு திருநாடு" என்கிற திருநாட்டை உகப்புடனே எப்படித்தானுபகரித்தருளுவர். (௪௩)

(அ-கை) "இந்த வுலகில் பொருந்தாமை யேதுமில்லை யந்தவுலகில் போகவாசையில்லை" என்றநுஸந்தித்தவர், நம்மளவிதுவாயிருந்தது. இனி லௌகிகரளவென்னென்றவர்களிடத்திலே கண் வைக்க. அவர்கள்படி காலத்தண்ணிதாயிருந்தவாறே இப்படியிருப்பது இவர்கள் பாபங்களைச் செய்யும்பிரகார மென்றதுக்கு நொந்தருளிச்செய்கிறார்.

மாகாந்தநாரணனார் வைகும் வகையறிந்தோர்க்
கேகாந்தமில்லை யிருளில்லை—மோகாந்தர்
இவ்விடமேகாந்த மிருளென்று பயமறவிருந்து
செய்வர்கடாம் பாவத்திறம். (௪௪)

மாகாந்த = லக்ஷ்மீகாந்தனான, நாரணனார் = ஸர்வேஶ்வரன், வைகும்வகை = (நாராயணத்வ ப்ரயுக்த ஸம்பந்தமடியாக ஸமஸ்தசேதநாசேதநங்களிலும உள்ளும புறம்பும்) வ்யாபித்திருக்கிற, ப்ரகாரத்தை, அறிந்தோர்க்கு = அறிந்த ஜ்ஞாதாக்களுக்கு, ஏகாந்தமில்லை யிருளில்லை = தனிமையில்லை, அந்தகாரமில்லை, ச்ருதி "நாராயண பரோஜ்யோதி:" என்றும், "பற்கணேன் = நாரணனைக்கண்டேன்" என்றும், "அவனே யென்னு

(௧) தி-வாய-௪-௯-௭. (௨) தி-மொ-௯-௩-அ. (௩) தி-வாய-௯-௭-௫.

ள்ளிருள் தானற விற்றிருந்தான்" என்றுஞ் சொல்லுகிறபடியே, எங்குமு ளனாய் எங்கும் வெளிசெறிப்பா யிருக்கையாலே, நிஷித்த ப்ரவ்ருத்திக ளுக்கு த்தேட்டமான விருளும் ஏகாந்தமுமற்றிருக்கை. ஆகையாலே அவர் களுக்கொருமைத்திருக்கிற ஏகாந்தமுமில்லை, தாஸ்யயோக்ய மன்றிக்கே ஆவரணாகாரமாய் வ்யாபித்திருக்கிற அந்தகாரமுமில்லை யென்று கருத்து.) மோக்ஷாந்தா = "மோக்ஷாந்த கவோப்ருதா:" என்னும்படி மோக்ஷாந்தராய் முன்னடி தோற்றுதே யிருக்குமவர்கள், இவ்விடம்ஏகாந்தமிருளொன்று = இவ்விடமொருவருமில்லாத வேகாந்தம், இவ்விடம் தேஜ: ப்ரசாரமில்லாத விருள என்று, பயமற்றிருந்து = நிர்ப்பயராயிருந்து. பாவத்திறம் = பாபஸமூஹங்களை, செய்வார்கள்தாம் = அஜ்ஞான தாவகள் செய்யாநிற்பர்கள் (அக)

(வ்-ம்) ‡ இதில் (க) "செல்வநாரணன்" என்கிறபடியே, ஸ்ரிய:கா ந்தனை ஸர்வேஶ்வரன் நாராயணத்வ ப்ரயுக்தஸம்பந்தமுடையாக ஸம ஸ்த சேதநாசேதநங்களிலும் அந்தர்ப்பஹிர்வ்யாபித்திருக்கிறபாகா ரத்தை யறிந்தஜ்ஞர் தாக்களுக்கு (உ) "నారాయణపరో జ్యోతిః-நாராயண பரோஜ்யோதி:" என்றும், (௩) "அவனென்னுளிருள் தானற விற்றிருந்தான்" என்றும் (௪) "பகற்கண்டேன் நாரணனைக்கண் டேன்" என்றும் சொல்லுகிறபடியே, எங்குமுளனாய் எங்கும் வெ ளிச்செறிப்பாயிருக்கையாலே. நிஷித்தப்ரவ்ருத்திகளுக்குத் தேட்ட மான இருளு மேகாந்தமுமற்றிருக்கையாலே, அவர்களுக்கு †ஒருமை வருந்தமற்றிருக்கிற ஏகாந்தமுமில்லை. தாஸ்யயோக்ய மன்றிக்கே ஆவரணாகாரமாய், ஆவரித்திருக்கிற அந்தகாரமுமில்லை. (௫) "హృది నారాయణం పశ్యన్నాప్యగచ్ఛద్రహస్సదా । యస్స్యద్వారతతో చాపి గోవిన్దం త ముపాస్మహే - ஹ்ருதி நாராயணம் பஶ்ய நநாப்யாகச்சத்ரஹஸ் ஸதா | யஸ்ஸ்வதாரரதேநாபி கோவிந்தம் த முபாஸ்மஹே."

இவர்கள்படியன்றிக்கே (௬) "మోక్షైకసమసాప్తాః-மோக்ஷாநந்த தமனா வ்ருதா:" என்னும்படி மோக்ஷாந்தராய், முன்னடிதோற்று தேயிருக்குமவர்கள், (எ) "అన్తర్బహిస్సకలవస్తుషు సన్తమీశ మన్ధః పురస్థితమివాహ మవీక్షమాణః- அந்தர்ப்பஹிஸ்ஸகலவஸ்துஷு ஸந்தமீஶமந்த: புரஸ்ஸ்திதமிவாஹமவீக்ஷமாண:" என்கிறபடியே, நிரவதிகதேஜோ

(க) திருவாய-க-கO-அ. (உ) நாரா-கக. (௩) திருவாய-அ-எ-௩.
(௪) உ-திருவ-அக (௫) (௬) வி-பு- (எ) யதிராஜவிம்ஶதி
† ஒருமைதிருக ‡ சிலபதங்கள் விட்டிருகிறது சுத்தப்ரதி காணவில்லை.

மயனான ஸர்வேஶ்வரன் எங்கும் வ்யாபித்திருக்கும்ப்ரகாரத்தை நெஞ்சென்னும் உட்கண்ணாலே காணமாட்டாதே, இவ்விடம் ஒருவருமில்லாத ஏகாந்தம், இவ்விடம் தேஜஃப்ரசாரமில்லாத இருளென்று நிர்ப்பயராயிருந்து (க) "த்வஸ்ய ஸ்தேயம் வ்ரஜிநம் கரிஷ்ய-தஸ்யாந்திகேத்வம் வ்ரஜிநம் கரோஷி" என்கிறபடியே பாபஸமூஹங்களை அஜ்ஞானதாங்கள் செய்யாநிற்பர்கள்; இவர்கள்படி. இதுவாவதே யென்று கருத்து. வைகல்=சொல்லலும், இருத்தலும்; திறம்=ஸமூஹம். இப்பாட்டுக்கடி, எம்பெருமானாருடைய உக்த்யநுஷ்டாநங்களாயிருக்கும். (௪௪)

(அ-கை) கீழ் "மாகாந்தநாரணனார் வைகும்வகை" என்று வ்யாப்தியை ப்ரஸ்தாவித்து, இப்படி ஸர்வவ்யாபகனான வனோடு அநாதியாய் வருகிற ஸம்பந்தமுண்டாயிருக்க, அத்தை அறியாதே கீழ்ச்சொன்ன மோஹாந்தரிலே யந்யதமராயிருந்த நான், ஆசார்ய ஸம்பந்தத்தாலேயன்றோ உஜ்ஜீவித்ததென்று ஸ்வலாபத்தை எப்போது மநுஸந்தித்துப்போருவென்று, தம்திருவுள்ளத்தைக்குறித் தருளிச்செய்கிறார்.

நாராயணன்திருமால் நாரம்நாமென்னுமுறை
யாராயில்நெஞ்சே யநாதியன்றோ—சீராரும்
ஆசாரியனாலேயன்றோ நாமுய்ந்ததென்று
கூசாம லெப்பொழுதுங்கூறு. (௪௫)

நாராயணன் திருமால்= "திருமாலே நானுமுனக்குப் பழவடியேன்" என்கிறபடியே ஶ்ரிய; பதியானவன் நாரஶப்தவாச்யங்களான வாத்மாக்களையுடையவன். நாரம நாம் = நித்யமான அநந்தநாரங்கள் நாம், என்னும்=என்கிற, உறவு= அந்த அநாதயயாந ஸம்பந்தம, ஆராயில் = நிரூபிக்கில், நெஞ்சே = மநஸ்ஸே! அநாதியன்றோ = இன்றாகவுண்டானதன்றே? அநாதியாய் வருகிறதன்றோ? சீராரும்= அந்தஸம்பந்தத்தை யுணர்த்தின ஜ்ஞாநாதிகுண பரிபூர்ணரான, ஆசாரியனாலேயன்றோ = ஆசார்யராலே யல்லவோ? நாமுய்ந்ததென்று = நாமுஜ்ஜீவிதததென்று, கூசாமல்=லஜ்ஜாபிமாநங்களைவிட்டு, எப்பொழுதும்=ஸாவகாலமும், கூறு=பாவித்தமாக வநுஸந்திததுகொண்டிரு. (௪௫)

(க) பார-ஸம்ப-௭௪-௧௬.

(வ்-ம்) (௧) "திருமாலே நானுமுனக்குப் பழவடியேன்" என்கிறபடியே, அவன் ஸ்ரிய:பதி நாராயணன். நாம் நாரமென்கிற இந்த வளாத்யயநஸம்பந்தம் நிரூபிக்கில், மநஸ்ஸே இன்றாகவுண்டானதன்றே! அநாதியாய் வருகிறதன்றோ? ஆயிருக்கவது நெடுங்காலம் ஸம்பந்தஜ்ஞாநமன்றிக்கே, அஸித்ப்ராயமா யிழந்தன்றோ கிடந்தது. இப்போது தத்ஸம்பந்தத்தை யுணர்த்தின ஜ்ஞாநாதிகுணபரிபூர்ணனாயிருக்கிற வாசார்யனாலே யன்றோ நாமுஜ்ஜீவித்ததென்று, (௧) "பெருமையும் நாணும் தவிர்ந்து பிதற்றுமின்" என்கிறபடியே, லஜ்ஜாபிமாநங்களைவிட்டு ஸர்வகாலமும் ப்ரஸித்தமாக வநுஸந்தித்துக்கொண்டு போரு. (௨) "இறையு முயிரும்" இத்யாதி. "ஸேஷோஹ்யஶசஸ்ய - ஆத்மநோஹ்யதிநீசஸ்ய" இத்யாதி. (௩௫)

(அ-கை) கீழ் ஆசார்யனாலே யன்றோ நாமுய்ந்ததென்கிறவித்தை விசேஷநிஷ்டமாக்கி யருளிச்செய்கிறார்.

திருவாய்மொழிப்பிள்ளை தீவினையோந்தம்மைக்
குருவாகி வந்துய்யக்கொண்டு—பொருவில்
மதிதானளித்தருளும் வாழ்வன்றோ நெஞ்சே
எதிராசர்க் காளானோம்யாம். (௩௬)

திருவாய்மொழிப்பிள்ளை = "தொண்டர்க் கமுதுண்ணச் சொன்மாலைகள் சொன்னேன்" என்கிறபடியே பூர்வரான ஸ்ரீவைஷ்ணவர்களுக்குப் போக்யமாக வவதரித்த திருவாய்மொழியிலே யவகாஹித்து, அதில் ஸப்தரஸம், அர்த்தரஸம், பாவரஸமென்கிற விவற்றை யநுபவித்து, ததேகநிஷ்டராய். தத்வ்யதிரிக்த ஸாஸ்த்ரங்களை த்ருணவத் ப்ரதிபத்திபண்ணியிருக்கையாலே, திருவாய்மொழியோட்டை ஸம்பந்தத்தையே தமக்குநிரூபகமாக வுடையராய், ஆழ்வார் திருவடிகளிலே ஸர்வவித கைங்கர்யமே யநவரதம் செய்துகொண்டு போராநிற்கிற திருவாய்மொழிப்பிள்ளை, தீவினையோந்தம்மை = க்ரூரகர்மாக்களோமா யிருக்கிற நம்மை, குருவாகி = ஆசார்யராயவதரித்து, வந்து = நாமிருந்தவிடம் தேடிவந்து, உய்யக்கொண்டு = உஜ்ஜீவிக்கும்படி யங்கீகரித்து, பொருவில் = ஸாஸ்த்ரஜ்ஞாநாதிகள் போலன்றிக்கே - உபமாந ரஹிதமான, மதி = திருமந்த்ரத்தால் பிறக்குமதான ஜ்ஞாநத்தை, தான் = தாம், அளித்தருளும் = உபகரித்தருளும், வாழ்வன்றோ = ஸம்பத்தினாலன்றோ? நெஞ்சே = மநஸ்ஸே! யாம் = நாம், எதிராசர்க்கு = எம்பெருமானார்க்கு, ஆளானோம் = அடிமையாயினோம். (௩௬)

(௧) திருப்பல்லா-௧௧. (௨) ஜ்ஞாநஸாரம்.

(வ்-ம்) (௧) "தொண்டர்க்கமுதுண்ணச் சொன்மாலைகள் சொன்னேன்" என்கிறபடியே பூஸுரரான ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு போக்யமாக அவதரித்த திருவாய்மொழியிலேயவகாஹித்து, அதில் ஶப்தரஸம், அர்த்தரஸம், பாவரஸம் என்கிற இவற்றை யநுபவித்து, தந்நிஷ்டராய் தத்வ்யதிரிக்த ஶாஸ்த்ரங்களை த்ருணவத்ப்ரதிபத்தி பண்ணியிருக்கையாலே, திருவாய்மொழியோட்டை ஸம்பந்தத்தையே தமக்கு நிரூபகமாகவுடையராய் ஆழ்வார் திருவடிகளிலே, ஸர்வவிதகைங்கர்யமே யநவரதஞ் செய்துகொண்டு போராநிற்கிற திருவாய்மொழிப்பிள்ளை, (௨) "ஒப்பிலாத் தீவினையேனை யுய்யக்கொண்டு" என்னும்படி க்ரூரகர்மாக்களாயிருக்கிற நம்மை (௩) "தேனார் கமலத்திருமாமகள் கொழுநன் தானே-குருவாகி" என்கிறபடியே, ஆசார்யராயவதரித்து, நாமிருந்தவிடந்தேடி வந்துஜ்ஜீவிக்கும்படி யங்கீகரித்து ஶாஸ்த்ர ஜ்ஞாநாதிகள்போலன்றிக்கே, உபமாநரஹிதமாய் திருமந்த்ரத்தால் பிறக்குமதானஜ்ஞாநத்தை யுபகரித்தருளும் ஸம்பந்தன்றோ, மநஸ்ஸே! ப்ராப்தமேஷியான வெம்பெருமானார்க் கடிமையானோம் - நாம்; பதத்ரயார்த்தநிஷ்டைதான் ததீயபர்யந்தமாயல்லதிராதென்று கருத்து. (௬௰)

(அ-கை) "எதிராசர்க்காளானோம் யாம்" என்ற ப்ரீத்யுக்தியாலே, கீழே "மாகாந்தநாரணனார்" என்றும் "நாராயணன் திருமால்" என்றும் ப்ரஸ்துதமான நாராயணஶப்தத்தோடே விகல்பிக்கும்படியாய் அதில் சதுரையாயிருப்பதான ராமாநுஜனென்கிற திருநாமவைபவத்தை வெளியிடவேண்டி அத்தை வ்யதிரேகமுகத்தாலே வெளியிடுகிறார்.

கட்டளைக் கலித்துறை.

இராமாநுசாய நமவென் றிரவும் பகலும் சிந்தித்
திராமாநுசர்களிருப்பிடந் தன்னி லிறைப்பொழுதும்
இராமாநுசரவர்க்கெல்லா வடிமையுஞ் செய்ய வெண்ணி
இராமாநுசர்தம்மை மாநுசராக வென்கொலெண்ணுவதே.

இராமாநுசாய = இராமாநுசர் பொருட்டு, நமவென்று = நம: என்று, இரவும் பகலும் = திவாராத்ரமும், சிந்தித்து = அநுஸந்தித்து, இரா = இ

(௧) தி-வாய்-௯-௪-௧. (௨) தி-வாய்-௭-௯-௪. (௩) உபதேசர-

ராத, மாநுசர்கள் = மனிதருடைய, இருப்பிடந்தன்னில் = வஸிக்கிற ஸ்தலந்தன்னில், இறைப்பொழுதும் = க்ஷணகாலமும் இரா = வர்த்தியாதிருக்கிற, (ஆழ்வானை போல்வாரானை) மாநுசரவர்க்கு = மநுஷ்யருக்கு, எல்லாவடிமையும் = ஸர்வவித கைங்கர்யங்களையும், செய்யவெண்ணி = செய்யக்கருதி, இரா = அத்தைச செய்யாமலிருக்கிற, மாநுசர்தமமை = அறிவற்ற மநுஷ்யர்தங்களை, மாநுசராக = பசு ஸமானவர்களை மநுஷ்யராக, என்கொல் எண்ணுவது = எப்படித்தான் எண்ணுவது? ("ஜ்ஞாநேநஹீந: பஶுபிஸ்ஸமாந:" என்னுமத்தனை. (சஎ)

(வ்-ம்) (க) "நள்ளிருளளவும் பகலும் நானழைப்பன் நாராயணா வென்னும் நாமம்" என்கிறபடியே, "ராமாநுஜாயநம:" என்று இவாராத்ரவிபாக (ஸ்ர்வ) மற வநுஸந்திக்க ப்ராப்தமாயிருக்க, அத்தைச்செய்யாதேயிருக்கிற பசு ஸமாநரான மநுஷ்யர்கள் வர்த்திக்கிற ஸ்தலந்தன்னில் க்ஷணகாலமும் துஸ்ஸஹமாய் வர்த்தியாதிருக்கிற ஆழ்வான் போல்வாராய், ஸாஸ்த்ரவஶ்யரான மநுஷ்யஜந்மாக்களுக்கு (உ) "எத்தொழும்பும் சொல்லால மனத்தால் கருமத்தினால் செய்வன்" என்கிறபடியே ஸர்வவித கைங்கர்யங்களையுஞ் செய்யவெண்ணியிருக்க ப்ராப்தமாயிருக்க, அத்தைச் செய்யாதேயிருக்கிற க்ருதக்நமநுஷ்யர்தங்களை; (ந) "மானிடவரல்லரென்றென்மனத்தே வைத்தேன்" என்கிறபடியே, பஶுஸமானவர்களை மநுஷ்யராக வெப்படி யெண்ணுவது, (ச) "ஜ்ஞாநேநஹீந: பஶுபிஸ்ஸமாந:-ஜ்ஞாநேநஹீந: பஶுபிஸ்ஸமாந:" என்னுமத்தனை.

(அ-கை) கீழெல்லாவடிமையுஞ் செய்யவெண்ணி, இராமாநுசாய என்கிறப்ரஸங்கத்திலே, தமமுடைய வாகாதிகரணங்களை இப்படியே யவர்கள்விஷயத்திலே அநுபார்ஹமாம்படி பெரியபெருமாள் பண்ணியருளினபடியை ப்ரீதியாலே பேசியருளுகிறார்.

எண்ணுதென்னெஞ்ச மிசையாதென்நா விறைஞ்சாதுசென்னி
கண்ணுனவை யொன்றுங்காணாவுரு கலியார்நலிய
வொண்ணுதவண்ண முலகளித்தோனெதிராசனடி
நண்ணுதவரை யரங்கேசர் செய்தநலம் நமக்கே. (சஅ)

(க) தி-மொ-க-க-கி. (உ) இரா-நூ-அ0.
(ந) தி-மொ-கக-எ-ந (ச)

கலியார் = கலியுகத்திலுள்ள சேதநர், நலியவொண்ணாதவண்ணம் = அக்கலியினுடைய க்ரௌர்யத்தாலே பீடிக்கப்படாதபடி உலகு = லோகத்தை, அளித்தோன் = ரக்ஷித்தவரான, எதிராசன் = எம்பெருமானாருடைய, அடி = திருவடிகளை, கண்ணுதவரை = கிட்டி ஆஶ்ரயியாதவர்களை, என்னெஞ்சம் = என்னுடைய மநஸ்ஸானது, எண்ணாது = ஸ்மரியாது, என்நாவு = என்னுடைய வாக்கானது, இசையாது = ஸ்துதியாது, சென்னி = என் ஶிரஸ்ஸானது, இறைஞ்சாது = வணங்காது, கண்ணனை = என் கண்களானவை. ஒன்றும் = ஒன்றையும், காணவுறா = கண்ணுறாது, அரங்கேசர் = சிந்தையினோடு கரணங்களைத்தந்த ஸ்ரீரங்கராஜரான பெரியபெருமாள், செய்தநலம் நமக்கே = அக்கரணங்கள் அந்யசேஷமாகாமல் நமக்குச்செய்த நன்மை யிவையாயிற்று. (“கலியார் நலியவொண்ணாத வண்ணம் உலகளித்தோனெதிராசன்” என்கிறவிடத்தில். கலியார் = கலியானது, நலியவொண்ணாதவண்ணம் = தன்னுடைய க்ரௌர்யத்தாலே பாதியாதபடி, உலகளித்தோன் = லோகத்தை ரக்ஷித்த, எதிராசன் யதிபதி என்றும் பொருளாகவுமாம்) (௭௮)

(வ்-ம்) (௧) ‘தாழவொன்றில்லா மறைதாழ்ந்து தலமுழுதுங் கலியே யாள்கின்ற நாள்வந்தளித்தவன்” என்கிறபடியே, கலியானது தன்னுடைய க்ரௌர்யத்தாலே பாதி(ஶ)யாதபடி லோகத்தை ரக்ஷித்தவராய், (௨) “பேறொன்றுமற்றில்லை” என்கிறபடியே, ப்ராப்யப்ராபகங்களான வெம்பெருமானார் திருவடிகளைக்கிட்டி ஆஶ்ரியாதவர்களை (௩)‘ நையும்மன முன்குணங்களையுன்னி” இத்யாதியாலும், (௪)‘‘ஶ்ரீ... -நித்யம்யதீந்த்ர” இத்யாதியாலுஞ் சொல்லுகிறபடியே, தத்விஷயத்திலே ப்ரவணமான வென்னுடைய மநஸ்ஸுதொடக்கமான கரணங்களானவைகள் ஸ்மரித்தல், ஸ்துதித்தல், பஜித்தல், தர்ஶித்தலாகிற ஸ்வஸ்வகார்யங்கள் செய்யாது. சிந்தையினோடு கரணங்களைத்தந்த ஸ்ரீரங்கராஜரான பெரியபெருமாள், அவை அந்யசேஷமாகாமல் நமக்குச்செய்த நன்மை இவையாய்த்து. நலம் = ஸம்பத்து; இங்கு தேஹஸம்பத்திறே. “இசையாதுநா” (௫) “மநः பூர்வோ வாகுத்தரः - மநःபூர்வோவாகுத்தரः” என்கிறபடியே, அதுக்கநந்தரபாவியான நாவுடைய வாயானது, (௬) “நாவியிலாவிசைமாலைகளேத்தி” என்கிறபடியே, ஸ்துதிரூபமான ஶப்தஸந்தர்ப்

(௧) இரா-நூ-௧௬. (௨) இரா-நூ-௪௫. (௩) இரா-நூ-௧௦௨
(௪) யதிராஜவிம்ஶதி (௫) யஜு-௭-௧௨- (௬) தி-வாய-௪-௫-௪

பநங்களைப் பண்ணமாட்டாது, (இறைஞ்சாதசென்னி) (க) "ப்ரண மாமி மூர்த்நா-ப்ராணமாமி மூர்த்நா" என்னு மவருடைய சென்னி யிறே. (கண்ணுனைவையொன்றுங்காணு துரு) (௨) "கண்கருதிடுங் காண" (௩) "ஸ்ரீமாதவாங்க்ரி-ஸ்ரீமாதவாங்க்ரி" என்னும்படியான திரு வடிகளைக்கேசமும் தர்ஸிக்க வாசைப்படாது; (௪) "காணலுறுகின்றேன்" என்கிறவிடத்துக்கு, காணவாசைப்படுகிறேனென்றிறே யருளிச்செய்தது. கலியாரென்கிறது (௫) "ஏவினர் கலியார்" என் கிறபடியே பாதகத்வத்தினுறப்பைப் பற்றவாய்த்து. (௪௮)

(அ-கை) "எதிராசனடி நண்ணுதவரை எண்ணுது" இத்யாதி யாலே, தமக்கு ஸம்ஸாரிகளிடத்திலுண்டான வைமுக்யத்தை தர் ஸிப்பித்து, மீள வவர்களநர்த்தத்தைக்கண்டு ஆற்றமாட்டாதே, அவர்களுக்கு மோக்ஷோபாயமாக வெம்பெருமானருடைய வாஸ்ர யணுதிகளை விதிக்கிறுர்.

நந்தாநரகத்தழுந்தாமை வேண்டிடில்நானிலத்தீர்
எந்தாதையான வெதிராசனை நண்ணுமென்றுமவன்
அந்தாதிதன்னை யநுசந்திபுமவன் தொண்டருடன்
சிந்தாகுலங்கெடச்சேர்ந்திரு முத்திபின்சித்திக்குமே.(௪௯)

நந்தா = ஒருகாலு மநுபவித்து முடியாத, நரகத்து = ஸம்ஸாரமா கிறநரகத்திலே, அழுந்தாமை = மக்நராகாமை, வேண்டிடில் = அபேக்ஷித மாகில், நானிலத்தீர் = நாலுவகைப்பட்ட பூமியிலுண்டானவர்களே! என் = அடியேனுக்கு, தாதையான = பிதாவான, எதிராசனை = எம்பெருமானு ரை, நண்ணும் = ஆஸ்ரயியுங்கோள், என்றும் = ஸர்வகாலத்திலும், அவ னந்தாதிதன்னை = மோக்ஷைகஹேதுவாயிருக்கிறவவருடைய திருநாமத்தைப் பாட்டுகள்தோறும் ப்ரதிபாதிப்பதாய அதற்குமேல் ப்ரபந்நஜந காயத்ரியா யிருக்கிற வஸாவிஷயமான நூற்றந்தாதிதன்னை, அநுசந்திபும் = அநுஸந்தி யுங்கோள், அவன் தொண்டருடன் = அவர் திருவடிகளிலே சபலராய தொ ண்டுபட்டிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்களுடன், சிந்தாகுலம் = ஸம்ஸார ஸஹவா ஸத்தாலுண்டான மனோதுக்கமெல்லாம், கெட = நசிக்கும்படி, சேர்ந்தி ரும் = ஒருமிக்கப் பொருந்தியிருங்கோள், பின் = ஆனபின்பு, முத்தி = மோக்ஷமானது, சித்திக்கும் = ஸம்ருத்தமாக விதமாகும் (௪௯)

(க) யதிராஜவிம்ஸதி (௨) இரா-நூ- (௩) யதிராஜவிம்ஸதி-௧.
(௪) ௬-திருவ-௪௧. (௫) தி-மொ-௧-௧-௮.

(வ்-ம்) (௧) "நர்கா நரகத்தழுந்தாவகை" (௨) "நரகத்திடை நுழுகாவகை" என்கிறபடியே ஒருகாலும் அநுபவித்து முடியாததாய் (௩) "மற்றை நரகம்" என்னும்படி ஸம்ஸாரமாகிற நரகத்திலே, மக் நராகாலை யபேக்ஷிதமாகில், நாலுவகைப்பட்ட பூமியிலுண்டானவர்களே! எனக்கு ஜநகரான வெம்பெருமானை ஆஸ்ரயியுங்கோள். ஸர்வகாலத்திலும் மோக்ஷஹேதுவாயிருக்கிற வவர் திருநாமத்தைப் பாட்டுகள்தோறும் ப்ரதிபாதிப்பதாய் அதுவே ப்ரபந்தஜநகாயத்ரியாயிருக்கிறவவர் விஷயமான நூற்றந்தாதிதன்னை அநுஸந்தியுங்கோள்; (௪) "உன் தொண்டர்களுக்கே" என்னும்படி அவர் திருவடிகளிலே சபலராய் தொண்டுபட்டிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்களுடன் ததிதாஸஹவாஸத்தாலுண்டான மநோதுக்கமெல்லாங்கெட ஒருநீராகப்பொருந்தியிருங்கோள் ஆனபின்பு முக்தியானது ஸம்பாயமற ஸித்திக்கும்; இத்தாலிவருடைய வாஸ்ரயணீதிகளுக்குந் தானே, அநிஷ்டநிவ்ருத்தி பூர்வகேஷ்டப்ராப்தியைப் பண்ணுமென்று கருத்து. (௪௧)

(அ-கை) அவர்கள் ஆஸ்ரயிக்கிறோமென்றாறியிருக்க, மீளவுமவர்களைக்குறித்து என் காலத்தை வ்யர்த்தமே போக்குகிறீர்கள்? அவர் திருநாமத்தை ஸ்மரிக்க, அதி துர்லபமான பலம் ஸித்திக்குமென்கிறார்.

அவத்தே யருமந்த காலத்தைப்போக்கி யறிவின்மையால்
பவத்தே யுழல்கின்ற பாவியர்காள் பலகாலம் நின்று
தவத்தே முயல்பவர் தங்களுக்கு மெய்தவொண்ணாதவந்தத்
திவத்தே யும்மைவைக்கும் சிந்தியும் நீ ரெதிராசரென்றே.

அருமந்தகாலத்தை = திருநாமமநுஸந்திக்கைக்கு யோக்யமாயிருப்பதாய் ஸ்லாக்யமான காலத்தை, அவத்தேபோக்கி = வ்யர்த்தமேபோக்கி, அறிவின்மையால் = அஜ்ஞாநத்தாலே, இப்பவத்தே = இந்த ஸம்ஸாரத்தில், உழல்கின்ற = பரிப்ரமிக்கிற, பாவியர்காள் = பாபிகளாயுள்ளவர்களே! பலகாலம் = ஸர்வகாலத்திலும், நின்று = ஒருபடிப்பட நின்று, தவத்தே = தபஸ்ஸை, முயல்பவர் தங்களுக்கும் = செய்கின்றவர்களுக்கும், எய்தவொண்ணாத = ப்ராபிக்கப்போகாமலிருப்பதான, அந்ததிவத்தே = "தத்க்ஷரே

(௧) தி-மொ-௧௧-அ-௩. (௨) தி-மொ-௭-௩-௫.
(௩) தி-வாய்-அ-௧-௩. (௪) இரா-நூ-௧௦௭.

பரமேவ்யோமந்” என்று சொல்லுகிற ஶ்ருதி ப்ரஸித்தியை யுடைத்தாயி ருப்பதான அந்தப் பரமபதத்திலே, உமமை = நித்யஸம்ஸாரிகளான உங் களை, வைகரும்=நித்யரோடே யொருகோவை யாக்கிவைப்பர், நீர்=நீங் கள், எதிராசவென்று=எதிராசாவென்று, சிந்தியும் = மநஸ்ஸிலே சிந்தி யுங்கோள். (யத்நம அல்பமாய, பலம் அதிகமாயிருக்கும). (ரு0)

(வ்-ம்) திருநாமம் அநுஸந்திக்கைக்கு யோக்யமாயிருப்பதான ஶ்லாக்யமானகாலத்தை வ்யர்த்தமேபோக்கி, அஜ்ஞாநத்தாலே ஸம்ஸாரத்திலே பரிப்ரமிக்கிற பாபிகளாயுள்ளவர்களே! ஸர்வகால த்திலும் ஒருபடிப்படநின்று தபஸ்ஸிலே உத்ஸாஹிக்குமவர்களாயி ருக்கு மவர்களுக்கும் ப்ராபிக்கப்போகாமலிருப்பதாய், (க) [illegible] -‘‘ததக்ஷரே பரமேவ்யோமந்’’ என்று சொல்லுகிற ஶ்ருதிப்ரஸித்தியையுடைத்தா யிருப்பதான வந்தப்பரமபதத்திலே, நித்ய ஸம்ஸாரிகளான வுங்களை யேற்றி நித்யரோடே ஒருகோ வையாக்கிவைக்கும். அதுக்குடலாக கீழ்ச்சொன்னவைகள்தான் நேர்த்தி யென்னலாம்படி அதிலு மெளிதாயிருப்பதான வெம்பெ ருமானார் திருநாமத்தை, எதிராசனென்று நீங்கள் மநஸ்ஸிலே சிந் தியுங்கோள். நேர்த்தியல்பமாய், பலமதிகமாயிருக்கும். நேர்த்தி= யத்நம். (ரு0)

(அ-கை) இனிஸம்ஸாரிகளிழவைத்தான் சொல்லவேணுமோ? உம்முடைய நிலை இருந்தபடியென்னென்று எம்பெருமானார்க்கு நினைவாக, அவர்களோ பாதி அநாதிகாலமெல்லாம் வ்யர்த்தமேபோ யிருக்க, அதினிழவின்றிக்கே யிருக்கிறவெனக்கு தேவருடைய க்ருபை யுண்டானபின்பு, ததலாபக்லேஶமுண்டாய்த்தென்று ஸ்வ லாபத்தைப்பேசியருளுகிறார். இழவு=அலாபக்லேஶம்.

என்றுளனீச னுயிருமன்றேயுண் டிக்காலமெல்லாம்
அன்றளவாகப்பழுதே கழிந்த திருவினையால்
என்றிழவின்றி யிருக்கு மென்னெஞ்சமிரவுபகல்
நின்றுதபிக்கு மெதிராசா நீயருள்செய்தபின்னே. (ருக)

என்றுளன் ஈசன் = (‘‘நானுன்னை யன்றி யிலேன் கண்டாய் நாரண னே நீ யென்னையன்றியிலை’’ என்கிறபடியே, ஒழிக்கவொழியாத அவிநா

(க) தை-நாரா.

பாலஸம்பந்தம் நித்யமாக வுண்டாகையாலே) நியந்தாவான ஈஶ்வரன் எப்படி எப்போதும் நித்யஸித்தனாயிருக்கிறானோ? (அப்படியே) உயிரும் = ஈஶிதவ்யஜ்ஞானவாத்மாவும், அன்றேயுண்டு = அப்போதே உண்டாயிருக்கிறான், இக்காலமெல்லாம் = இவ்வநாதிகாலந்தொடங்கி, இன்றளவாக = இப்போதளவாக, இருவினையால் = புண்யபாபரூபமான ப்ரபலகர்மத்தாலே, பழுதேகழிந்ததென்று = வ்யர்த்தமாகவே போயிற்றென்று, இழவின்றியிருக்கும் = இப்படி இழந்தநாளுக் கநுதபியாமலிருக்கிற, என்னெஞ்சம் = அடியேனுடைய மநஸ்ஸு, எதிராசா = எம்பெருமானாரே! நீயருள்செய்த பின்னை = தேவர் விசேஷகடாக்ஷம் பண்ணியருளின பின்பு, இரவுபகல் = அல்லும் பகலும், நின்று = இதிலே யொருப்பட்டு நின்று, தபிக்கும் = பரிதபியாநிற்கும். (௫௧)

(வ்-ம்) (க) "நானுன்னையன்றியிலேன்கண்டாய் நாரணனே நீ என்னையன்றியிலை" என்கிறபடியே, ஒழிக்கவொழியாத வவிநாபாவஸம்பந்தம் நித்யமாகவுண்டாகையாலே, நியந்தாவான ஈஶ்வரன், என்றுந்தொடங்கி ஸித்தனாயிருக்கும். அப்படியே, ஈஶிதவ்யஜ்ஞானவாத்மாவும் அப்ருதக்ஸித்தவிசேஷணமாகையாலே, அன்றே யுண்டாயிருக்கும். இப்படி யன்றுதொடங்கி தேவர் விஷயீகாரம்பெற்ற வின்றளவாக வுண்டான வென்னுடைய ப்ரபலகர்மத்தாலே ஶேஷஶேஷிஸம்பந்தஜ்ஞாநகார்யமான கைங்கர்யத்துக்கு அடைத்த விந்த அநாதிகாலமெல்லாம் வ்யர்த்தமே போயிற்றென்று இழந்தநாளைக்கு அநுதபியாமலிருக்கிற வென்னுடைய மநஸ்ஸு, தேவர் விஶேஷகடாக்ஷம்பண்ணியருளினபின்பு, திவாராத்ரவிபாக (ஶூந்ய)மற விதிலே யொருப்பட்டு நின்று பரிதபியாநிற்கும். இதென்ன ஸ்வபாவம். ஒரு க்ருபாப்ராபல்ய மிருந்தபடியே! இருவினை = புண்யபாபங்களாகவுமாம். (௫௧)

(அ-கை) அநுதாபாதிகளுண்டாகவே, எம்பெருமானாருக்காக, பெரியபெருமாள், "ஶ்ரீமாந் ஸமாரூட பதங்கராஜ:- ஸ்ரீமாந் ஸமாரூடபதங்கராஜ:" என்கிறப்டியே எழுந்தருளி யபிமானித்தருளும் பேற்றின் கௌரவத்தை அநுஸந்தித்தருளுகிறார்.

கனககிரிமேல் கரியமுகில்போல்
வினதைசிறுவன் மேற்கொண்டு—தனுவிடும்போது

(க) ரா-திருவ-௭.

எராரங்க ரெதிராசர்க்காக வென்பால்
வாரா முன்னிற்பர் மகிழ்ந்து. (ருஉ)

கனககிரிமேல் = ஸ்வர்ணமயமான மஹாமேரு மலையின்மேலே, **கரிய முகில்போல்** = (படிந்திருக்கிற) நீலமேகம்போலே, **வினதை** = வினதை யென்னும் ஸ்த்ரீயினுடைய, **சிறுவன்** = புத்ரனான வைநதேயனை-பெரிய திருவடியை, **மேற்கொண்டு** = வாஹநமாகக்கொண்டு (கருடவாஹநாரூடராய்) **தனுவிடும்போது** = சரீரமவிடுகிற ஸமயத்தில், (தாய் முகங்காட்டுமாபோலே) **ஏர்** = ஸௌந்தர்யாதிகளால், **ஆர்** = பூர்ணரான, **அரங்கர்** = பெரியபெருமாள், **எதிராசர்க்காக** = எம்பெருமானாருக்காக, **என்பால் வாரா** = அடியேனிருந்த விடத்தே வந்து, **மகிழ்ந்து** = ஹர்ஷயுக்தராய், **முன்னிற்பர்** = முன்னே நிற்பர். இத்தாலெனக்கபேக்ஷிதமான * முகமும் முறுவலும் காட்டி யநுபவிப்பித்தருளுவர்; இது நிஸ்சயமென்று கருத்து. (ருஉ)

(வ்ய) (க) "[illegible]—காஞ்சநஸ்ய கிரேஸ்ஸ்ருங்கே ஸதடித்தோயதோ யதா" என்றும், (உ) "மஞ்சுயர் பொன்மலைமேலெழுந்தமாமுகில்போன்றுளர்" என்றுஞ் சொல்லுகிறபடியே, ஸ்வர்ணமயமான மஹாமேருவின்மேலே (ங) "பெரும்பவ்வமண்டியுண்ட பெருவயிற்றகருமுகிலானது இனியப்படிந்திருக்குமாபோலே. பரபாகரஸாவஹமாம்படி, விநதை சிறுவனென்னும்படியான பெரியதிருவடிமேல்கொண்டு தேஹபாத ஸமயத்திலே தாய் முகங்காட்டுமாபோலே, ஸௌந்தர்யாதிகளால் பூர்ணரான பெரியபெருமாள் எம்பெருமானாருக்காக நானிருந்தவிடத்தே வந்து ஹர்ஷயுக்தராய் முன்னிற்பர். இத்தாலெனக்கபேக்ஷிதமான முகமும் முறுவலும் காட்டியநுபவித்தருளுவர். இது நிஸ்சயமென்று கருத்து. (ருஉ)

(அ-கை) இப்படிப்பெரியபெருமாள் பெரியதிருவடிமேல் கொண்டுவந்து திருமுகப்ரஸாதம் பண்ணும்படியை யநுஸந்தித்து அதுக்கிடைச்சுவராய் பாபாஸ்பததேஹத்துடன் துஸ்ஸஹமான துக்கங்களை யநுபவித்திருக்க முடியாது. ஆகையாலே, ஹிதப்ரவர்த்தகரானதேவர் ஸகலதுக்காஸ்பதமான ஸம்ஸாரத்தில் நின்றும் அடியேனைச்சீக்கிரமாக உத்தரிப்பித்தருளவேணுமென்கிறார்.

(க) (உ) தி-மொ-கூ உ-அ.
(ங) திருநெ-உச.

இதத்தாலே தென்னரங்கர் செய்கிறதென்றறிந்தே
 இருந்தாலுந்தற்கால வேதனையின் கனத்தால்
பதைத்தாவோ வென்னுமிந்தப் பாவவுடம்புடனே
 பலநோவுமநுபவித் திப்பவத்திருக்கப்போமோ
மதத்தாலே வல்வினையின் வழியுழன்று திரிந்த
 வல்வினையேன் றன்னை யுனக்காளாக்கிக்கொண்ட
இதத்தாயும் தந்தையுமா மெதிராசா வென்னை
 இனிக்கடுக விப்பவத்தினின்று மெடுத்தருளே. (௫௩)

இதத்தாலே = ஹிதபுத்தியாலே, தென்னரங்கர் = பெரியபெருமாள் செய்கிறதென்றறிந்தே யிருந்தாலும் = க்ருபாபலமாக துக்கங்களை யநுபவிபித்தருளுகிறாரென றறிந்தே யிருந்தாலும், தற்காலவேதனையின் கனத்தால் = அந்தந்த காலத்திலுண்டான வேதனையின் மிகுதியாலே, பதைத்து = துடித்து, ஆவோவென்னும் = அந்த துஸ்ஸஹதையாலுண்டான விஷாதத்தாலே துக்கஸூசகமான ஹா! ஓ! என்கிற சப்தங்களைச்செய்யாநின்ற, இந்த பாவவுடம்புடனே = இந்தப்பாபசரீரத்தோடே, பலநோவுமநுபவித்து = வெகுதுக்கங்களையும் அநுபவித்து, இப்பவத்து = இந்தஸம்ஸாரத்தில், இருக்கப்போமோ = இருக்க முடியுமோ? மதத்தாலே = தேஹமதத்தினாலே, வல்வினையின் வழியுழன்று திரிந்த = ப்ரபல காமத்தின் மார்க்கத்திலே அதுவே யாத்ரையாய் வர்த்தித்த, வல்வினையேன் தன்னை = மஹாபாபியான வடியேனை, உனக்கு = ஸத்துக்களுக்கு ஸமாஶ்ரயணீயராயிருக்கிற தேவர்க்கு, ஆளாக்கிக்கொண்ட = அடிமையாக்கிக் கொண்டருளின, இதத்தாயும் = ஹிதத்தைநடத்தும் மாதாவும், தந்தையுமாம் = பிதாவுமாயிருக்கிற, எதிராசா = எம்பெருமானாரே! இனி = தேவர்ஸம்பந்தத்தை யறிந்தபின்பு, என்னை = அடியேனை, கடுக = சீக்ரமாக, இப்பவத்தினின்றும் = இந்த ஸம்ஸாரத்தில் நின்றும், எடுத்தருள் = எடுத்துக்கரையேற்றி யருளவேணும்; (அவர்ஜநீய ஸம்பந்தமடியாக விரோதத்தரிப்பித்தருளுவரென்று கருத்து.) (௫௩)

(வ்-ம்) (க) "ஆரப்பெருந்துயரே செய்திடினும்" இத்யாதிப்படியே ஹிதபுத்யா பெரியபெருமாள் க்ருபாபலமாக துக்கங்களை யநுபவிப்பித்தருளுகிறாரென்றறிந்தே யிருந்தாலும் அந்தவந்த காலத்திலுண்டான வேதனையின் மிகுதியாலே துடித்து, அந்த துஸ்ஸஹதையாலுண்டான விஷாதத்தாலே துக்கஸூசகமான ஶப்தங்களைச்சொ

(க) ஜ்ஞாநஸாரம்.

ல்லுமிந்த பாபசரீரத்தோடே பஹுதுக்கங்களை யநுபவித்து துக்கா வஹமான விந்தஸம்ஸாரத்தி லிருக்கஶக்யமோ? (௧) "பாவமேசெய்து பாவியானேன்" என்கிறபடியே, தேஹமதத்தாலே பாபகர்மத்தின்மார்க்கத்திலே அதுவே யாத்ரையாய் வர்த்தித்த மஹாபாபியானவென்னை ஸத்துக்களுக்காஶ்ரயணீயரா யிருக்கிற தேவர்க்கடிமையாக்கிக்கொண்டருளின ஹிதத்தைநடத்தும மாதாவும் பிதாவுமாயிருக்கிற தேவர் ஸம்பந்தத்தையறிந்த பின்பு அடியேனைச்சீக்கிரமாக விந்தஸம்ஸாரத்தில் நின்றும் (௨) "ஸம்ஸாரார்ணவ" "மாந்தாரய" என்னும்படி எடுத்துக்கரையேற்றியருளவேணும். அவர்ஜநீயஸம்பந்த மடியாகவிறே, உத்தரிப்பித்த நருளுவரென்று கருத்து. (௫௩)

(அ-கை) இப்படி இவரபேக்ஷித்தபடியே, எம்பெருமானரு மிவரபேக்ஷிதமெல்லாஞ் செய்வாராக வெண்ணியிருக்க, இவர்க்கது பற்றுமல்,(௩) *ஒருபகலாயிரமூழியாய், மீளவும் அவர் தமமைப்பார்த்து, ஸர்வவிதபந்துவுமாயிருக்கிறதேவர். நானிந்ததேஹத்தோடே இருந்து துக்கப்படாமல் என்றுதான் நலமந்த மில்லதோர் நாட்டிலேசேரும்படி ஏற்றியருளுவதென்கிறார்.

இன்னுமெத்தனைநா ளிவ்வுடம்புடனே
இருந்துநோவுபடக் கடவேனையோ
என்னையிதினின்றும் விடுவித்துநீர்
என்றுதான் திருநாட்டினு ளேற்றுவீர்
அன்னையுமத்தனு மல்லாதசுற்றமும்
ஆகியென்னை யளித்தருள்நாதனே
என்னிதத்தை யிராப்பகலின்றியே
ஏகமெண்ணு மெதிராசவள்ளலே, (௫௪)

அன்னையும் = ப்ரியத்தைப்பண்ணுகிற மாதாவும், அத்தனும் = ஹிதத்தைப்பண்ணுகிற பிதாவும், அல்லாத சுற்றமும் = மற்றும அநுகதமான அசேஷபந்துக்களுமெல்லாம், ஆகி = ஆய, எனனை = அடியேனை, அளித்தருள் = ரக்ஷித்தருளுகிற, நாதனே = ஸ்வாமீ ! என் = அடியேனுடைய, இதத்தை = இஷ்டத்தை, இராப்பகலின்றியே = இரவுபகலின்றியே, ஏகமெணணும் = ஒருபடி சிந்திக்கிற, எதிராசவள்ளலே = பரமோதாரராய்,

(௧) தி-மொ-௧-௯-௯. (௨) ஶரணாகதிகத்யம். (௩) தி-வா-௧௦-௩-௧.

யதிகளுக்கு நாதரான எம்பெருமானாரே! (தேவருக்கு ஆட்பட்டபின்பும்) இன்னம் = இன்னமும், எத்தனைநாள் = எத்தனைகாலம், இவ்வுடம்புடனேயிருந்து = இந்ததேஹத்திலே யிருந்து, நோவுபடக்கடவேன் = வேதனைபடக்கடவேன, ஐயோ = அந்தோ! என்னை = அடியேனை, இதினின்றும் = பந்தகமான விந்ததேஹத்தில் நின்றும், விடுவித்து = முக்தனாம்படி பண்ணி, நீர் = தேவர், என்றுதான் = எப்போதுதான், திருநாட்டினுள் = பரமபதத்தில, ஏற்றுவீர் = ஏற்றியருளுவதீர, (இதையருளிச்செய்யவேணும்.) (௫௩)

(வ்-ம்) (௧) "அன்னையாயத்தனாய் என்னை யாண்டிடும் தன்மையான்" என்கிறபடியே, ப்ரியஹிதங்களைப்பண்ணுகிற மாதாபிதாக்களும், மற்று மநுக்தமானஸம்பந்துக்களுமெல்லாமாய் என்னை ரக்ஷித்தருளுகிற நாதனே (௨) "என்மனமேக மெண்ணுமிராப்பகலின்றியே" என்கிறபடியே, என்னுடையஹிதத்தை திவாராத்ரவிபாக (௯)மற வொருபடி சிந்திக்கிற பரமோதாரராய், யதிகளுக்கு நாதரானவரே! (௩) "உனக்காட்பட்டு மடியே னின்னு முழல்வேனோ" என்கிறபடியே தேவருக்கு சேஷபூதனானபின்பு இன்ன மெத்தனை காலமிந்ததேஹத்திலே யிருந்து வேதனைப்படக்கடவேன்? ஐயோ? அடியேனை பந்தமான விந்ததேஹத்தில் நின்றும் முக்தனாம்படி பண்ணி, என்றுதான் திருநாட்டினுள் ளேற்றியருளுவதீர்? அந்நாளுமொருநாளாமோ? வள்ளல் = ப்ரத்யுபகார ரஹிதமாக வுபகரிக்குமுதாரர். (௫௪)

(அ-கை) செய்தவம்ஸத்தில் க்ருதஜ்ஞதையும் செய்யவேண்டுமம்ஸத்தில் அபேக்ஷையு மதிகாரிக்கு வேண்டுவதொன்றாகையாலே, அந்த க்ருதஜ்ஞதாஸூசகமாக எம்பெருமானாருடைய ப்ரஸாதத்தாலே தாம் பெற்றபேறுகளை அநுஸந்தித்து வித்த (ஞ) ராயருளுகிறார்.

தென்னரங்கர் சீரருளுக்கிலக்காகப்பெற்றோம்
திருவரங்கம் திருப்பதியே யிருப்பாகப்பெற்றோம்
மன்னியசீர்மாறன்கலை யுணவாகப்பெற்றோம்
மதுரகவிசொற்படியே நிலையாகப்பெற்றோம்

---

(௧) கண்ணி-௪ (௨) தி-வாய்-௯-௩-௭. (௩) தி-வாய்-௫-௮-௰.

முன்னைவராங்குரவர் மொழிகளுள்ளப்பெற்றோம்
முழுதுநமக்கவை பொழுதே போக்காகப்பெற்றோம்
பின்னையொன்றுதனில் நெஞ்சுபோராமற்பெற்றோம்
பிறர்மினுக்கம் பொறாமையில்லாப் பெருமையும்பெற்றோமே.

தென்னரங்கர் = தர்ஶநீயமான கோயிலிலே "அருள்கொடுத்திட்டடியவரை யாட்கொள்வாராய்" அன்பொடு தென்திசை இலங்கைநோக்கிப் பள்ளிகொண்டருளுகிற பெரியபெருமாளுடைய, சீரருளுக்கு = நிர்ஹேதுக க்ருபைக்கு, இலக்காகப்பெற்றோம் = லக்ஷ்யமாகப்பெற்றோம், திருவரங்கம் திருப்பதியே = "தென்னாடும் வடநாடுந்தொழநின்ற திருவரங்கம் திருப்பதி" என்றும் "ஆராமஞ்சூழ்ந்த வரங்கம்" என்றும் "தலையரங்கம்" என்றுஞ் சொல்லுகிறபடியே, அகில திவ்யதேச ப்ரதாநமான திருவரங்கம் திருப்பதியே இருப்பாகப்பெற்றோம் = நித்யவாஸஸ்தாநமாகப் பெற்றோம், மன்னிய சீர் = பரபக்த்யாதி கல்யாணகுணங்கள் பொருந்தியிருக்கிற, மாறன் = நம்மாழ்வாருடைய, கலை = தொண்டர்க்கமுதான வகுளபூஷண வாக் அம்ருதத்தை, உணவாகப்பெற்றோம் = அஶநமாக புசிக்கப்பெற்றோம், மதுரகவி = 'தேவுமற்றறியேன்" என்றருளிச்செய்த மதுரகவியாழ்வாருடைய, சொற்படியே = திவ்யஸூக்திபடியே, நிலையாகப்பெற்றோம் = "யதீந்த்ரமேவ நீரந்த்ரம் நிஷேவே தைவதம்பரம்" என்றும், "உன்னையொழியவொரு தெய்வமற்றறியா மன்னுபுகழ்சேர் வடுகநம்பி தன்னிலையை" என்றும், நாமும் நம்முடையாரும் பேசும்படியான சரமபர்வ நிஷ்டையே நிஷ்டையாகப்பெற்றோம், முன்னவராம் நங்குரவர் மொழிகளுள்ளப்பெற்றோம் = தத்ப்ரதிபாதகங்களான நம்முடைய பூர்வாசார்யர்களுடைய திவ்ய ஸூக்திகளான ரஹஸ்யங்களை ஆந்தரமாக அநுஸந்திக்கப் பெற்றோம், முழுதும் நமக்கவைபொழுதே போக்காகப்பெற்றோம் = அதில் ஆதராதிசயத்தையுடைய நமக்கு மற்றொன்றில் பொழுதுபோக்காகாமல் முழுதும் அவற்றையே காலக்ஷேபமாகப் பெற்றோம், பின்னை = இப்படியான அநந்தரம், ஒன்றுதனில் = இதர க்ரந்தங்களிலொன்றிலும், நெஞ்சுபோராமல் பெற்றோம் = மநஸ்ஸு சலியாமல் இதிலே ப்ரதிஷ்டிதமாம்படி யிருக்கப்பெற்றோம், பிறர்மினுக்கம் பொறாமையில்லா = இதெல்லாமொருதட்டும் தானொரு தட்டுமாயிருக்குமதாய், "இப்படியிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்களேற்ற மறிந்துவுகந்திருக்கையும்" என்னும்படி அரிதாயிருப்பதான பரோச்ராயங்கண்டால் அஸஹிஷ்ணுதையில்லாத, பெருமையும் பெற்றோமே = மஹத்த்வத்தையும் லபித்தோமே? இதொரு மஹாலாபமிருந்தபடியே! என்று வியந்தருளுகிறார் (உள்ளுதல் = விசாரித்தல்.) (௫௫)

(வ-ம்) தர்ஸநீயமானகோயிலிலே (க)* அருள்கொடுத்திட்டடியவரையாட்கொள்வாராய் (உ)* அன்பொடு தென்திசைநோக்கிப் பள்ளிகொண்டருளுகிற பெரியபெருமாளுடைய நிர்ஹேதுககிருபைக்கு லக்ஷ்யமாகப்பெற்றோம்; (ங) "தென்னாடும் வடநாடுந்தொழநின்ற திருவரங்கந்திருப்பதி" என்றும், (ச) "ஆராமஞ் சூழ்ந்தவரங்கம்" என்றும், (ரு) "தலையரங்கம்" என்றுஞ் சொல்லுகிறபடியே, அகிலதிவ்யதேசப்ரதாநமான திருவரங்கந்திருப்பதியே, நித்யமாக வாஸஸ்தானமாகப் பெற்றோம்; பரபக்த்யாதிகல்யாணகுணங்கள் பொருந்தியிருக்கிற வாழ்வாருடைய தொண்டர்க்கமுதான வகுளபூஷணவாகம்ருதத்தை அசநமாக புஜிக்கப்பெற்றோம்.

(சு) "தேவுமற்றறியேன்" என்கையாலே, அவர்களைச் சிரித்திருப்பாரென்னும்படியான மதுரகவிகளுடைய திவ்யஸூக்திப்படியே 'యస్మిందృఢైవ నిరంధ్రా నిష్ఠాదైవతం పరమ్-யதீந்த்ரமேவ நீரந்த்ரம் நிஷேவே தைவதம்பரம்" (எ) "உன்னையொழிய ஒருதெய்வம் மற்றறியாமன்னுபுகழ்சேர்வடுகநம்பி தன்னிலைமை" என்றும், நாமும் நம்முடையாரும் பேசும்படியான சரமபர்வநிஷ்டையே நிஷ்டையாகப் பெற்றோம். தத்ப்ரதிபாதகங்களான நம்முடைய பூர்வாசார்யர்களுடைய திவ்யஸூக்திகளான ரஹஸ்யங்களை (அ) "நெஞ்சு தன்னால் தேறலுமாம்" என்னும்படி மேலெழவன்றிக்கே ஆந்தரமாக வநுஸந்திக்கப் பெறறோம்; அதிலாதராதிசயத்தையுடைய நமக்கு மற்றொன்றில் பொழுதுபோக்காமல் முழுது மவற்றையே காலக்ஷேபமாகப்பெற்றோம். இப்படியானவநந்தரம் ததிதரக்ரந்தங்களி லொன்றிலும் மநஸ்ஸு சலியாமல் இதிலே ப்ரதிஷ்டிதமாம்படியிருக்கப் பெற்றோம். இதெல்லாமொருதட்டும், தானொருதட்டுமா யிருக்குமதாய், (கூ) "இப்படியிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்களேற்றமறிந்துகந்திருக்கையும்" என்னும்படி அரிதாயிருப்பதான பரோச்ராயங்கண்டால் அஸஹிஷ்ணுதையில்லாத மஹத்தையும் லபித்தோமே? இதொருமஹாலாபம் இருந்தபடியே!; உள்ளுதல்=விசாரித்தல். (ருரு)

(க) பெரி-தி-ரு-கூ-ங. (உ) பெரு-தி-க-க0 (ங) பெரி-தி-ரு-கூ-கக.
(ச) சிறியதிரு-ம0. (ரு) உ-திருவ-எ0. (சு) கண்ணி-உ
(எ) கக. (அ) உபதேச ர. (கூ) முமுக்ஷுப்படி-உ.

(அ-கை) "மதுரகவி சொற்படியே நிலையாகப் பெற்றோம்" என்று தம்முடைய நிலையை வெளியிடாநின்றுகொண்டு அதுக்கநு ரூபமாக வவர் திருவடிகளில் கைங்கர்யத்தை யபேக்ஷிக்கிறார்.

> உன்றனபிமானமே யுத்தாரக மென்று
> சிந்தைதெளிந்திருக்கச் செய்தநீ—அந்தோ
> எதிராசா, நோய்களாலென்னை நலக்காமல்
> சதிராக நின்திருத்தாள் தா. (௫௬)

எதிராசா = யதிகளுக்கு நாதரானவரே! உன்றன் அபிமானமே உத்தாரகமென்று = ("ஆசார்யாபிமானமே யுத்தாரகம்" என்கிறபடியே) தேவருடைய அபிமானமே யிவ்வாத்மாவுக் குத்தாரகமென்று, சிந்தை தெளிந்திருக்கச்செய்தநீ = "தெளிவுற்ற சிந்தையா" என்கிறபடியே, மநஸ்ஸு நிர்மலமாய் தந்நிஷ்டனாயிருக்கும்படி பண்ணியிருக்கும்படி உபகரித்தருளின தேவர், அந்தோ = ஐயோ! நோய்களால் = வேதனைகளால், என்னை = அடியேனை, நலக்காமல் = பாதியாமல், சதிராக = ஸாமர்த்தியமாக, நின் திருத்தாள் = தேவர் திருவடிகளை, தா = ப்ரஸாதித் தருளவேணும். (௫௬)

(வ்-ம்) எதிகளுக்கு நாதரானவரே! "ஆசார்யாபிமானமே யுத்தாரகம்" என்கிறபடியே, தேவருடைய அபிமானமே இவ்வாத்மாவுக்குத்தாரகமென்று (க) "தெளிவுற்ற சிந்தையர்" என்கிறபடியே, மநஃப்ரஸாதமுண்டாய், தந்நிஷ்டராயிருக்கும்படி பண்ணி உபகரித்தருளினதேவர், அய்யோ! வேதனைகளாலடியேனை நலக்கேடுபண்ணாமல் (உ) "సుఖేనేమాం ప్రకృతిం స్థూలసూక్ష్మరూపాం విసృజ్య-ஸுகே நேமாம் ப்ரக்ருதிம் ஸ்தூலஸூக்ஷ்மரூபாம் விஸ்ருஜ்ய" என்கிறபடியே, ஸாமர்த்த்யமாக (௩) "உன்பதயுகமா மேர்கொண்டவீடு" என்கிறபடியே தேவர் திருவடிகளை ப்ரஸாதித்தருளவேணும். சதிர் = விரகு: (௫௬)

(அ-கை) இப்படி நீர்சொல்லுகிற நிர்ப்பந்தமெல்லாங்கேட்டு, நாம் உம் கார்யஞ்செய்கைக்கு எந்த ஸம்பந்தப்ராபல்யங்கொண்டு தடருகிறீரென்ன, பிள்ளை திருவடிகளையாச்ரயித்த ராஜகுலமாஹாத்ம்யத்தாலே யொருவஸ்துவென்றபிமானித்து அடியேனுடை

(க) திருவாய்-எ-ரு-௪க. (உ) ஸாரணாகதிகத்யம். (௩) இராமா-நூ-

அபராதம் பாராததேவர் (க) "ஸம்ஸார ஶூல ஸ்ரீவிஷ்ணு க்ருபயா பரயா பவபயஜ்வர ஸ்ருணு ஸ்ரீமந் க்ருபயா பரயா த்வ" என்கிறபடியே, அடியேனுடைய முக்த (௧) ஜல்பிதத்தைச் செவிதாழ்த்துக் கேட்டருளவேணுமென்கிறார்.

> தேசிகர்கள்போற்றும் திருவாய்மொழிப்பிள்ளை
> வாசமலர்த்தாளடைந்த வத்துவென்று—நேசத்தால்
> என் பிழைகள்காணு தெதிராசரே யடியேன்
> புன்பகர்வைக் கேளும் பொறுத்து. (௫௭)

தேசிகர்கள் போற்றும் திருவாய்மொழிப்பிள்ளை = தேசிககுல கூடஸ்தராய் ஆழ்வாருடைய அசேஷ வ்ருத்தியிலும் அந்விதராய், அதுவேயாத்ரையாய்ச் செய்துகொண்டு போருகையாலே, "செந்தமிழ்வேதத் திருமலையாழ்வார்வாழி" என்று, ஆசார்யர்களாலே மங்களாசாஸநம் பண்ணும்படியான மாஹாத்ம்யத்தை யுடையரான பிள்ளையுடைய, வாசமலர்த்தாளடைந்த = ஸௌகந்த்ய ஸௌகுமார்ய யுக்தமான திருவடிகளை யாஶ்ரயித்த, வத்துவென்று = சேஷத்வாஶ்ரயமான வஸ்துவென்கிற, நேசத்தால் = ஸ்நேஹத்தாலே, என்பிழைகள்காணு = அடியேனுடைய அபராதங்களை தர்ஶியாதே, (அதில் அவிஜ்ஞாதாவா யிருக்கிற) எதிராசரே = எம்பெருமானாரே! அடியேன் = அடியேனுடைய, புன்பகர்வை = அல்பவார்த்தைகளை, பொறுத்து = சீறுமல் ஸஹித்து, கேளும் = ஸாதரமாகத் திருச்செவிசாத்தியருளவேணும். (௫௭)

(வ்-ம்) தேசிககுலகூடஸ்தரான வாழ்வாருடைய வஶேஷவ்ருத்தியிலு மந்விதராய், அதுவேயாத்ரையாய்ச் செய்துகொண்டுபோருகையாலே, "செந்தமிழ்வேதத் திருமலையாழ்வார்வாழி" என்று ஆசார்யர்களாலே மங்களாஶாஸநம் பண்ணும்படியான மாஹாத்ம்யத்தையுடையரானபிள்ளையுடைய ஸௌகந்த்ய ஸௌகுமார்யயுக்தமான திருவடிகளை யாஶ்ரயித்த ஶேஷத்வாஶ்ரயமான வஸ்துவென்கிற ஸ்நேஹத்தாலே அடியேனுடைய வபராதங்களை தர்ஶியாதே, அதில் அவிஜ்ஞாதாவாயிருக்கிற தேவர் அடியேனுடைய தோஷயுக்தமான முக்த(௧)ஜல்பிதத்தைச் சீறுமல் ஸஹித்து நின்று ஸாதரமாகத் திருச்செவிசாத்தியருளவேணும். (௫௭)

(அ-கை) "திருவாய்மொழிப்பிள்ளைவாசமலர்த் தாளடைந்தவ தது" என்கிறமாத்திரமேயோ? அவராலே லப்தஜ்ஞாநனுமெனக்கு த்வத்ஸம்பந்தஜ்ஞாந மில்லையோ வென்கிறார்.

எந்தை திருவாய்மொழிப்பிள்ளை யின்னருளால்
உன்றனுறவை யுணர்த்தியபின்—இந்தவுயிர்க்
கெல்லாவுறவும் நீயென்றே யெதிராசா
நில்லாத துண்டோ வென்னெஞ்சு. (௫௮)

எந்தை — "திருமந்த்ரம் மாதாவும், பிதாவாசார்யனு மென்றருளிச் செய்வர்கள்" என்கிறபடியே, எனக்குப்பிதாவான. திருவாய்மொழிப்பிள்ளை = திருவாய்மொழிப்பிள்ளை தம்முடைய, இன்னருளால் = நிர்ஹேதுக க்ருபையாலே, உன்றனுறவை = தேவர் திருவடிகளில் ஸர்வவித பந்துத்வத்தையும், உணர்த்தியபின் = அஜ்ஞாதஜ்ஞாபநம் பண்ணி ரக்ஷித்தருளின வநந்தரம், இந்தவுயிர்க்கு = இப்படியுண்டான ஸம்பந்தத்தையறிந்த விந்த வாத்மாவுக்கு, எல்லாவுறவும் = மந்த்ர ப்ரதிபாத்யமான நவவிதஸம்பந்தமும், நீயென்றே = தேவரென்றே, (அத்யவஸித்து) எதிராசா = எம்பெருமானாரே! என்னெஞ்சு = அடியேனுடைய மநஸ்ஸு, நில்லாததுண்டோ? = நிலைநில்லாதே யிருக்குமதுண்டோ? "தந்தை நற்றாய் தாரந் தனயர் பெருஞ்செல்வ மென்றனுக்கு நீயே" என்றும், "அல்லாதசுற்றமுமாகி" என்று மன்றோ விருப்பது? (௫௮).

(வ்-ம்) "திருமந்த்ரம் மாதாவும், பிதா ஆசார்யனுமென்றருளிச் செய்வர்கள்" என்கிறபடியே எனக்கு ஜநகரான திருவாய்மொழிப் பிள்ளை தம்முடைய நிர்ஹேதுக க்ருபையாலே, தேவர் திருவடிகளில் ஸர்வவிதபந்துத்வத்தையும் அஜ்ஞாதஜ்ஞாபநம்பண்ணி ரக்ஷித்தருளின வநந்தரம் இப்படி யுண்டானஸம்பந்தத்தை யறிந்த விந்த வாத்மாவுக்கு மந்த்ரப்ரதிபாத்யமான நவவிதஸம்பந்தமும் தேவரென்று அத்யவஸித்து அதில் நிலைநில்லாதே இருக்குமதுண்டோ என்னுடைய மநஸ்ஸு; "தந்தை நற்றாய் தாரந் தனயர் பெருஞ் செல்வமென்றனக்கு நீயே" என்றும், "அல்லாதசுற்றமுமாகி" என்று மன்றோ விருப்பது. (௫௮)

[illegible]ப்படி தேஹத்தி இருள்[illegible]களில் ஸம்ப[illegible] [illegible]வைக்[illegible] பெரியபெருமாள் பெரியதிருவடியை மேற்கொண்டுவந்து முக[illegible] [illegible] பண்ணி தேஹவிமோசனம் [illegible] [illegible]யை [illegible]ளிச்செய் வேறுமென்கிறார்.

[illegible]திருவரங்க ரேரார்கருடன்மேல்
வந்து முகங்காட்டி வழிநடத்த—சிந்தைசெய்திப்
பொல்லா வுடம்புதனைப் போக்குவதெந்நாள்கொலோ
சொல்லா யெதிராசா சூழ்ந்து. (ருசு)

எந்தை = அடியேனுக்குத் தந்தையும் தாயுமான. திருவரங்கர் = கோயிலையிட்டு இருக்கும்படியான பெரியபெருமாள், ஏரார்கருடன்மேல் = அழகுநிறைந்த பெரியதிருவடியின்மேல், வந்து = எழுந்தருளி, முகங்காட்டி = (சரீரம் விடுகிற ஸமயத்திலே அடியேனுக் கபேக்ஷிதமான கஸ்தூரி திருநாமத்தையும், முறுவலையுடைத்தான திருமுகமண்டலத்தையுங்காட்டி, வழிநடத்த = அர்ச்சிராதிமார்க்கத்தாலே நடத்திக்கொண்டுபோக, சிந்தை செய்து = ஸங்கல்பித்தருளி, இப்பொல்லா வுடம்புதனை = இந்த ஹேயமான தேஹந்தன்னை, போக்குவ தெந்நாள்கொலோ = தேவர்க்காகப் போக்கி யருளுவதெந்நாளோ? எதிராசா = எம்பெருமானாரே! சூழ்ந்து = (அத்தை நான் பெறியிருக்கும்படி) விசாரித்து, சொல்லாய் = அருளிச்செய்தருளீர்.

(வ-ம்) எனக்குத்தந்தையும் தாயுமாவாராய கோயிலையிட்டுத் திருப்பிக்கும்படியான பெரியபெருமாள், (க) *அஞ்சிறைப்புள்பாகரான வாகாரந்தோன்ற ஸௌந்தர்யாதிகளால் மிக்கிருக்கிற பெரியதிருவடிமேல்கொண் டெழுந்தருளி ஶரீரவியோகஸமயத்திலே எனக்கபேக்ஷிதமான கஸ்தூரி திருநாமத்தையும், (உ) "நல்கதிர் முத்தவெண் [illegible]கைச்செய்யவாய்" என்று முறுவலையுடைத்தான ஒளிமதிசேர் திருமுகத்தையுங்காட்டி, [illegible] (ங) * ஆறுஞ்சேதுறையு [illegible]னுதாம் அர்ச்சிராதிமார்க்கத்தாலே கொண்டுபோய்

(க) திருமொ. (உ) பெரு-தி-உ-எ. (ங) தி-மொ.

[illegible]யாமி'' [illegible]பே [illegible] (௰)
[illegible]ன் [illegible]ந்தர்ந்தென் [illegible]யோ'' [illegible]டியே அதுக் [illegible] [illegible] [illegible] போக்யதையுவு [illegible]; அ[illegible] நான [illegible]றிருக்கும்படி விசாரித்[illegible]செய்தருளீர். (௰) "[illegible] [illegible] சதுர்த்த[illegible] வர்ஷே" என்று நாளவதிபிட்டு, பின்பு (௪) [illegible] [illegible]- ஆ[illegible]ம் ஹ்ருஷ்ட:'' என்று [illegible]யிருக் [illegible]ப்பேலே அது கொண்டு நான் ஹ்ருஷ்டனாய் இருக்கலாய்[illegible] அன்றிக்கே சூழ்க்கென்கிறது-பெரியபெருமாள் *அவாவறச்சூழ்[illegible]படியாகவுமாம். (௫) "சொல்லு நீயாமறியச்சூழ்ந்து" என்கிறவிடத்துக்கு விசாரித்தென்றிறே வ்யாக்யானம் பண்ணினார்கள். (௫௧)

(அ-கை) இனி நம்பேற்றுக்கு நாம் தாம் த்வரிக்கவேணுமோ? பெரியபெருமாள் எம்பெருமானாருக்குப் பண்ணியருளின பேறுகளெல்லாம் அவர் திருவடிகளில் ஸம்பந்தமுடைய நமக்கு தா (௬) யப்ராப்தமாயிருப்பதொன்றன்றோவென்று அத்தைத் தாம் பெற்றாராகத் திருவுள்ளத்தோடேகூடி ப்ரீதராயருளுகிறார்.

இந்தவரங்கத் தினிதிரு நீ யென்றரங்கர்
எந்தையெதிராசர்க்கீந்தவரம்—சிந்தைசெய்யில்
நம்மதன்றோநெஞ்சமே நற்றாதைசொம்புதல்வர்
தம்மதன்றோ தாயமுறைதான்.

மணவாளமாமுனிகள் திருவடிகளே சரணம்.

அரங்கர்=பெரியபெருமாள், இந்த வரங்கத்து=இந்தக் கோயிலிலே இனிதிருநீயென்று=("ஸ்ரீரங்கே ஸுகமாஸ்வ") என்கிறபடியே [illegible]மாகவிருமென்று, எந்தை யெதிராசர்க்கு=அடியேனுக்கு [illegible] எம்பெருமானார்க்கு, ஈந்தவரம்=ப்ரஸாதித்தருளின வரத்தை, சிந்தைசெய்யில்=விசாரிக்குமளவில், நெஞ்சமே=மநஸ்ஸே, நம்மதன்றோ=நம்முடைய

(௪) வராஹசரமம். (௫) தி-வாய்-௫-அ-௬. (௬) ரா-அயோ[illegible]

[illegible] (அப்படிப்பெண்ணில்) [illegible] நிருபாதிகபிதாவானவனுடைய, சொம் = சொத்துக்கு [illegible] (ஸ்வ) [illegible]ப்ராப்தியாலே, புத்ரனுடைமைதன்றோ = புத்ரனுக்கானதன்றோ [illegible]? (ஆகையாலே நம்) ப்ராப்திக்கு நாமே யத்னிக்கவேண்டா; எல்லாம் [illegible] [illegible] [illegible]கிறதீ இனி [illegible] [illegible] ஸ்தபராயிருக்குமத்தனை.

லோவென்னில்; அப்போது ஆத்மவாசகமான மகாரமும் ப்ரதமாந்தமாய், பகவத்வாசகமான அகாரமும் ப்ரதமாந்தமானால் இருவருடையவும் ஐக்யபரமாதல், ஸமத்வபரமாதலாமத்தனை. அப்போது ஸகலஶாஸ்த்ரங்களுக்கும் வையர்த்த்யம்வரும். ஸ்வஸ்வரூப பரஸ்வரூபங்களுக்கும் சேராது. எங்ஙனேயென்னில்; (க) "పతింవిశ్వస్య-பதிம்விஶ்வஸ்ய" (உ) "పతింపతీనామ్-பதிம்பதீநாம்" (ங) "ప్రధానక్షేత్రజ్ఞపతిర్గుణేశః - ப்ரதாநக்ஷேத்ரஜ்ஞபதிர்குணேஶ:" (ச) "కరణాధిపాధిపః-கரணாதிபாதிப:" (ரு) "ఈశతే దేవ ఏకః-ஈஶதே தேவ ஏக:" (சா) "పరవానస్మి-பரவாநஸ்மி" (எ) "భగవతేవాஉహమస్మి-பகவதேவாஹமஸ்மி" (அ) "దాసోஉహమ్-தாஸோஹம்" இத்யாதிகளாலே பகவச்சேஷித்வத்தையும் ஆத்மஶேஷத்வத்தையும் சொல்லுகிற ஸகலஶாஸ்த்ரங்களுக்கும் வையர்த்த்யம்வரும். இந்த ஶேஷித்வ ஶேஷத்வங்கள்தன்னாலே உபயஸ்வரூபத்துக்கும் சேராதென்னுமிடம் சொல்லிற்று. இவ்வக்ஷரத்திற்சொன்ன கார்யத்வ ரக்ஷ்யத்வங்களோடும் விரோதிக்கும். ஆத்மா நித்யனேயாகிலும் இவனுடைய நித்ய ப்ரஹ்மவிஶேஷணத்வத்தாலே விஶேஷணத்வாரா கார்யத்வம் சொல்லக்குறையில்லை.

(எ) "నాహమపి నమమ, భగవత ఏవాహమస్మి-அஹமபி நமம, பகவத ஏவாஹமஸ்மி" என்று ஸ்வாதந்த்ர்ய நிவ்ருத்திபூர்வகமாக பகவதேக பாரதந்த்ர்யத்தைச் சொல்லுகிற நமஶ்ஶப்தத்துக்கும் வையர்த்த்யம் வரும். ஶரீராத்மபாவத்தைச் சொல்லுகிற நாராயணபதத்துக்கும் பாதகம்வரும். அதில் சதுர்த்தியிற் சொல்லுகிற கைங்கர்யப்ரார்த்தனைக்கும் உதயமில்லை. ஆக ஶாஸ்த்ரத்தோடு ஶாஸ்த்ரதாத்பர்யத்தோடு ப்ரதிபாதிக்கவஸ்துவோடு ஶாஸ்த்ரவித்யநுஷ்டானத்தோடு வாசியற ஸகலத்தோடும் விரோதிக்கையாலே இவ்வகாரம் ப்ரதமாந்தமாகமாட்டாது. சதுர்த்த்யந்தமாகக்கடவது.

(கூ) "బ్రహ్మణే త్వా మహస ఓమిత్యాత్మానం యుంజీత- ப்ரஹ்மணே த்வா மஹஸ ஓமித்யாத்மானம் யுஞ்ஜீத" என்று இந்த ஶேஷத்வத்தை ஸமர்ப்

(க) தை-நா-கக (உ) ஶ்வே-ஙு-எ (ங) ஶ்வே-ஙு-கசு

(ச) ஶ்வே-ஙு-கூ (ரு) ஶ்வே-க-கO (சா) ரா-ஆ-கரு-எ

(எ) பாஞ்ச (அ) .. (கூ) தை-நா

பணரூபகேநச்சொல்லுகிற ஶ்ருதிவாக்யத்தில் “ப்ரஹ்மணே” என்கிற சதுர்த்யந்தத்வமும், இதின்விவரணமாய் விஶேஷ்யமான நாராயணபதத்தில சதுர்த்யந்தமே இதுக்கு ப்ரமாணமாகக் கடவது.

ஆக இவ்வகாரம் சதுர்த்த்யந்தமாய் அகாரவாச்யனுக்கு இஷ்டவிநியோகார்ஹமாம்படி ஶேஷமாயிருக்கு மென்றதாயிற்று. ஆக அகாரத்தினுடைய ஶப்தஶக்தியாலே காரணத்வமும், தா(து)துவாலே ரக்ஷகத்வமும், அர்த்தபலத்தாலே ஶ்ரிய:பதித்வமும், சதுர்த்த்யந்த பதஶக்தியாலே ஶேஷித்வமும் சொல்லிற்றாயிற்று.

இப்பதத்திற் சொல்லுகிற காரணத்வ ரக்ஷகத்வ ஶ்ரிய:பதித்வ ஶேஷித்வங்களுக்கு ஆஶ்ரயமான பகவத்ஸ்வரூபம் லக்ஷ்மீஸ்வரூப விஶிஷ்டமாயிருக்கச்செய்தே இதிற்சொல்லுகிற ஶ்ரிய:பதித்வ ஶேஷித்வங்களில் லக்ஷ்மீஸ்வரூபத்துக்கு அந்தர்ப்பாவமுண்டானவோபாதி காரணத்வ ரக்ஷகத்வங்களிலும் அந்தர்ப்பாவமுண்டாகக் குறையில்லையேயென்னில்; காரணத்வம் ப்ரஹ்மத்துக்கு அஸாதாரண தர்மதயாலக்ஷணத்வேந நிர்த்தேஶிக்கப்படுகையாலே வ்யக்த்யந்தரத்தில் கிடவாததாகையாலே ப்ராதாந்யேந இவளுக்குக் காரணத்வமில்லை.

இனி காரணத்வாந்தர்ப்பாவம் சொல்லும்போது நிமித்தரூபேணவாதல்; உபாதாநரூபேணவாதல்; ஸஹகாரிரூபேணவாதல் சொல்லவேணும். (௧) “సదేవసోమ్యేదమగ్రఆసీత్, ఏకమేవాద్వితీయమ్-ஸதேவஸோம்யேதமக்ர ஆஸீத், ஏகமேவாத்விதீயம்” (௨) “సృష్టిస్సృజతిచాత్మానమ్-ஸ்ருஷ்டிஸ்ஸ்ருஜதிசாத்மாநம்” (௩) “కార్యేనన్తేస్వతనుముఖతస్త్వాముపాదానమాహుః — கார்யேநந்தேஸ்வதநுமுகதஸ்த்வாமுபாதாநமாஹு:” இத்யாதிகளாலே நிமித்தோபாதாநங்களிரண்டும் அவனென்று சொல்லுகையாலே அந்தர்ப்பாவம் சொல்லவொண்ணாது.

இனி ஸஹகாரி யென்னவேணும். அப்போதைக்கு ஸஹகாரிகள்தான் நிமித்தோபாதாநோபகரணரூபேண த்ரிவிதமாயிருக்கும். அதில் நிமித்தரூபஸஹகாரிகளாவன—படநிர்மாண நிமித்தனான குவிந்தனுக்கு ஸஹகாரிகளான குவிந்தாந்தரங்கள். உபாதாநரூப ஸஹகாரிகளாவன—படோபாதாந பூததந்துவுக்கு ரக்தக்ருஷ்ணாதி

(௧) சாந்தோ-௬-௨-௧ (௨) வி-பு-௧-௨-௬௭ (௩) ர-ஸ்த-௨-௩௧

ரூபேண ஸஹகரிக்கிற த்ரவ்யாந்தரங்கள். உபகரணரூப ஸஹகாரிக ளாவன—ரதநிர்மாண க்ரியாஹேதுபூதங்களான வாஸ்யாதிகள்.

அவற்றில், (௧) "మనసైవజగత్సృష్టిం సంహారఞ్చకరోతియః- மநஸைவஜகத்ஸ்ருஷ்டிம் ஸம்ஹாரஞ்சகரோதியః" என்றும், (௨) "ஞானமூர்த்தேகொண்டு எல்லாக்கருமங்களும் செய்யெல்லையில்மாயன்" என்றும், நிமித்தபூதனை விஶ்வரனுக்குத் தன் ஸங்கல்பஜ்ஞாநமொழிய வேறொன்று அபேக்ஷிதமல்லவென்று சொல்லுகையாலும் "அத்விதீயம்" என்று நிமித்தாந்தர நிஷேதம் பண்ணுகையாலும், (௩) "సదేవ-ஸதேவ" (௩) "ఏకమేవ-ஏகமேவ" (௪) "అహమేవ-அஹமேவ" (௫) "బహుస్యామ్-பஹுஸ்யாம்" (௫) "స్వయమకురుత-ஸ்வயமகுருத" இத்யாதிகளாலே ஸச்சப்தவாச்யமான பரவஸ்துவொழிய உபாதாநாந்தரமில்லையென்று சொல்லுகையாலும். (௬) "సృష్టిస్థిత్యన్తకరణీం బ్రహ్మవిష్ణుశివాత్మికామ్ । ససంజ్ఞాం యాతి భగవానేక ఏవ జనార్దనః- ஸ்ருஷ்டிஸ்தித்யந்தகரணீமப்ரஹ்மவிஷ்ணுஶிவாத்மிகாம் । ஸஸம்ஜ்ஞாம்யாதி பகவாநேகஏவஜநார்தநః" என்று ப்ரஹ்மருத்ராதிரூபேண நின்று ஸ்ருஷ்ட்யாதிகளைப் பண்ணுகிறான் ஜநார்த்தநனொருவனுமே; வேறுஸஹகாரிகளில்லையென்றும், (௭) "அவனே அகல்ஞாலம்படைத்திடந்தான்" என்றும், ஸஹகார்யந்தர நிஷேதம்பண்ணுகையாலும், இவனை நிமித்தோபாதாந ஸஹகாரிரூபேண ஸஹகாரியென்னவொண்ணாது.

சிதசித்துகளிலே இவன் அநுப்ரவேஶித்து நின்று ஸ்ருஷ்டிக்கிறவோபாதி இவள்பக்கலிலே இவன் அநுப்ரவேஶித்தாலும் உபாதாநாந்தர நிஷேதத்துக்கு விரோதம் பிறவாதிறேயென்னில்; அப்படிச் சொல்லவொண்ணாது. அபரிணாமியாய் பரிஶுத்தமான ப்ரஹ்மத்துக்கு அவற்றினுடைய அநுப்ரவேஶாபாவத்தில் உபாதாநஹேதுகமான பரிணாமித்வமும், அஜ்ஞத்வதுஃக்கித்வரூபமான அஶுத்தியும் ப்ரஸங்கிக்குமாகையாலே பரிணாமியான வசித்தையும் †அசிதாஶ்ரயமான வாத்மாவையும் அநுப்ரவேஶிக்க வேண்டுகை

---

(௧) வி-பு-ரு-உ௨-கரு (௨) தி-வாய-௩-௧௦-அ (௩) சாந்தோ-௬ ௨-௧

(௪) சாந்தோ-௭-௨ரு-௧ (௫) தை-ஆந- (௬) வி-பு-௧-௨-

(௭) தி-வாய-௬-௩-௨- † அவிதயாஶ்ரய

யாலும் இவளுடைய அநுப்ரவேஶாபாவத்தில் இப்படி வருவதொரு விரோதமில்லாமையாலும்,

அதுக்குமேலே ப்ரஹ்மஸ்வரூபத்தை க்ரஹிக்கிற ப்ரமாணந்தான், (௧) "యతో వా ఇమాని భూతాని జాయన్తే-யதோவா இமாநி பூதாநி ஜாயந்தே" இத்யாதிகளாலே காரணத்வாதி விஶிஷ்டமாக க்ரஹிக்கையாலும், (௨) "బహు స్యాం-பஹுஸ்யாம" என்கிற ப்ரஹ்மஸங்கல்பாநந்தரம் ஜகத்து உண்டாகையாலும், ஸங்கல்பாத்பூர்வம் ஜகத்து இல்லாமையாலும், (௩) "అజామేకాం లోహితశుక్లకృష్ణాం బహ్వీం ప్రజాం జనయన్తీం సరూపామ్ - அஜாமேகாம் லோஹித ஶுக்லக்ருஷ்ணாம் பஹ்வீம் ப்ரஜாம் ஜநயந்தீம் ஸரூபாம்" என்று குணத்ரயாத்மிகையான ப்ரக்ருதி ப்ரஜைகளை உத்பாதிக்குமிடத்தில் தான் அசேதநமாகையாலே, அசேதநமான ம்ருத்து புருஷப்ரயத்ந ஸாபேக்ஷமாய்க்கொண்டு க(டா)டாதிகளை உத்பாதிக்குமாபோலே (௪) "మయాధ్యక్షేణ ప్రకృతిః సూయతే సచరాచరమ్-மயாத்யக்ஷேண ப்ரக்ருதிஸ்ஸூயதே ஸசராசரம்" என்கிறபடியே ப்ரஹ்மாதி(தி)ஷ்டிதமாய்க்கொண்டே ஜகத்தை யுத்பாதிக்குமென்று சொல்லுகையாலும், (௫) "విష్ణోస్సకాశాదుద్భూతం జగత్తత్రైవ చ స్థితమ్-விஷ்ணோஸ்ஸகாஶாதுத்பூதம் ஜகத்தத்ரைவ ச ஸ்திதம்" என்றும், (௬) "సర్వకారణకారణే-ஸர்வகாரணகாரணே" என்றும், விஷ்ணு ஶப்தவாச்யனான ஸர்வேஶ்வரனே ஜகத்காரணபூதனென்றும்சொல்லுகையாலும், இவள் ஸ்வரூபத்தை காரணத்வேந க்ரஹிப்பதொரு ப்ரமாணமில்லாமையாலும், இவள் ஸங்கல்பத்தை யொழியவும் ஜகத்து உண்டாகையாலும், இவள் கூடாதபோது ஜகத்து உத்பந்நமாகாதென்கைக்கு ஒரு அநுபபத்தியில்லாமையாலும், இவள் காரணபூதையென்று சொல்லுவதொரு ப்ரமாணமில்லாமையாலும் இவளுக்கு காரணத்வாந்தர்ப்பாவ ஶங்கையே பிடித்தில்லை.

காரணபூத ப்ரஹ்மஸ்வரூப நிரூபகத்வேந இவளுக்கு அவர்ஜநீயஸந்நிதி யுண்டேயாகிலும் அநுபயுக்த விஶேஷணங்களைப்போலே தத்க்ரியாந்வயமின்றிக்கே தத்விஷயப்ரீத்யாதிகளிலே அந்வயமாகக்கடவது. அப்படியே ரக்ஷகத்வமும் (௧) "యేన జాతాని జీవన్తి-யேந

(௧) தை-ப்ருகுவல்லி (௨) தை-ஆநந்தவ-௬ (௩) தை-நா-௪௨-௫
(௪) கீதை-௯-௧௦ (௫) வி-பு-௧-௪-௩௧ (௬) வி-பு-௬ ௫ ௭௨

ஜாதாநிஜீவந்தி" இத்யாதிகளிலே ப்ரஹ்மலக்ஷணமாகச் சொல்லப் படுகையாலும், (க) "ఈశ్వరస్సర్వభూతానాం-ஈச்வரஸ்ஸர்வபூதாநாம்" (உ) "విష్ణుస్త్రిలోక్యపాలకః-விஷ்ணுஸ்த்ரைலோக்யபாலக:" (ங) "పాలనేవిష్ణురచ్యతే-பாலநேவிஷ்ணுருச்யதே" (ச) "సర్వపాతి-ஸர்வபாதி" (ரு) "విష్ణుఃపాల్యఇజ్యాపాతిచ-விஷ்ணு:பால்யந்சபாதிச" இத்யாதிகளாலே விஷ்ணுபரப்தவாச்யனை ஸர்வேச்வரனே ரக்ஷகனாகச் சொல்லுகையாலும், இவனுக்கு ரக்ஷகத்வாநர்ப்பாவம் சொல்லவொண்ணாது. இந்த ரக்ஷகத்வவிசிஷ்டமாய் அநிஷ்டநிவ்ருத்திபூர்வக இஷ்டப்ராப்திப்ரத(ஜ)த்வலக்ஷணமாயிருக்கிறவுபாயத்வமு யாதொன்று, அதிலும் இவனுக்கு அந்தர்ப்பாவமில்லை.

எங்ஙனேயென்னில்; (சா) "మామేకంశరణంవ్రజ-மாமேகம்சரணம் வ்ரஜ" (எ) "తమేవశరణంగచ్ఛ-தமேவசரணம்கச்ச" (அ) "మామేవయేప్రపద్యంతే-மாமேவயேப்ரபத்யந்தே" (கூ) "తమేవచాద్యంపురుషంప్రపద్యే-தமேவசாத்யம்புருஷம்ப்ரபத்யே" (க0) "యోబ్రహ్మాణంవిదధాతిపూర్వం యోవైవేదాంశ్చప్రహిణోతితస్మై। తంహిదేవమాత్మబుద్ధిప్రసాదంముముక్షుర్వైశర ణమహంప్రపద్యే-யோப்ரஹ்மாணம்விததாதிபூர்வம் யோவைவேதாம்ச்ச ப்ரஹிணோதிதஸ்மை। தம்ஹிதேவமாத்மபுத்திப்ரஸாதம்முமுக்ஷுர்வை சரணமஹம்ப்ரபத்யே" (கக) "நாகணைமிசைநம்பிரான்சரணே சரண்" (கஉ) "கழல்களவையேசரணாகக்கொண்ட" (கங) "கண்ணனல்லாலில்லைகண்டீர்சரண்" (கச) "களைகண்மற்றிலேன்" (கரு) "மூவாத் தனிமுதலாய்மூவுலகுங்காவலோன்" இத்யாதிகளிலே வ்யக்த்யந்தரநிஷேதபூர்வகமாக ஸர்வகாரணவஸ்துவுக்கே உபாயத்வத்தை விதிக்கையாலே.

ஜ்யோதிஷ்டோமம ஸ்வர்க்கஸாதநமாகாநிற்கச்செய்தேயும் ப்ரயாஜாதிகளான கர்மவிசேஷங்கள் ஸஹகாரித்வேந ஸஹாயமாகிறப் போலேயும், பக்தி பகவத்ப்ராப்திஸாதநமாகாநிற்கச்செய்தேயும் கர்மஜ்ஞாநங்கள் ஸஹகாரித்வேந ஸாதநமாகிறப்போலேயும், இவ

(க) கீதை-க அ சுக (உ) (ங)
(ச) வி-பு-க-உ-சுஎ (ரு) வி-பு (சா) கீ-க அ--சுசு
(எ) கீதை-க அ-சுஉ (அ) கீ-எ-க ச (கூ) கீ-கரு-ச
(க0) ஶ்வே-சு க அ (கக) தி-வாய-ரு-க0-கக (கஉ) தி-வாய-ரு-அ-கக
(கங) தி-வாய்-கூ-க-க0 (கச) தி-வாய்-ரு-அ-அ (கரு) தி-வாய-உ-அ-ரு

ளுக்கும் ஸஹகாரித்வேந உபாயத்வாந்தர்ப்பாவமுண்டாளுமோ வென்னில்; ஏதேனுமொன்றுக்கு ஸஹகாரித்வ முண்டாவது-ஸ்வரூ போத்பத்திமுகேநவாதல், உத்பந்நஸ்வரூப வர்த்த (*) நமுகேநவா தல், வர்த்தி(†) தஸ்வரூப பலப்ரதாநமுகேந வாதலாயிற்று;

உபாயபூதனான ஈஶ்வரன் (௧) “ఉపాయోపేయత్వే తదిహ తవ తత్త్వం-உபாயோபேயத்வே ததிஹ தவ தத்வம்” என்று ஸித்தஸ்வரூபனுமாய் ஏகரூபனுமாய் அமோக (‡) ஸங்கல்பனுமாயிருக்கையாலே உத்பத்த்யாதிகளில் ஸஹகாரிஸாபேக்ஷதை யில்லாமையாலும், (௨) “களைவாய் துன்பம் களையா தொழிவாய் களைகண் மற்றிலேன்” என்றும், (௩) “உன்னாலல்லால் யாவராலுமொன்றும் குறைவேண்டேன்” என்றும், ஸஹகாரிநிரபேக்ஷமாகச் சொல்லுகையாலும் இவனுக்கு ஸஹகாரித்வமில்லை.

ப்ரஹ்மஸ்வரூப க்ராஹகப்ரமாணம் (௪) “యేన జాతాని జీవంతి-யேந ஜாதாநி ஜீவந்தி” (௫) “యో వై వేదాంశ్చ ప్రహిణోతి తస్మై-யோவை வேதாம்ஶ்ச ப்ரஹிணோதி தஸ்மை” இத்யாதிகளாலே ப்ரஹ்மஸ்வரூபத்தை உபாயத்வேந க்ரஹிக்கையாலும் (௬) “సర్వపాపేభ్యో మోక్షయిష్యామి-ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி” என்கிற உக்த்யநந்தரம் ஶோகநிவ்ருத்தி பிறக்கையாலும், இந்த வுக்திக்கு முன்பு ஶோகநிவ்ருத்தி பிறவாமையாலும், அநிஷ்டநிவ்ருத்திபூர்வகமான இஷ்டப்ராப்தி-நிர்ஹேதுகக்ருபாவிஶிஷ்டனான ஸர்வேஶ்வரன் தன்னாலே உபபந்நமாகையாலும், (௭) “సర్వలోకశరణ్యాయ - ஸர்வலோகஶரண்யாய” (௮) “శరణ్యం శరణం యాతః-ஶரண்யம் ஶரணம் யாத:” (௯) “చరణౌ శరణం యాతః-சரணௌ ஶரணம் யாத:” (௫) “ముముక్షుర్వై శరణమహం ప్రపద్యే-முமுக்ஷுர்வை ஶரணமஹம் ப்ரபத்யே” என்று ஸர்வஶரண்யனாகச் சொல்லுகையாலும், இவள் ஸ்வரூபத்தை உபாயத்வேந க்ரஹிப்பதொரு ப்ரமாணமில்லாமையாலும் இவனுடைய உக்தியொழிய கேவலபகவதுக்தியாலே ஶோகநிவ்ருத்தி பிறக்கையாலும், இவள் ஸஹகரியாத போதும் உபாயத்வம் உபபந்நமாகையாலும், இவள் ஜகத்துக்கு உபாயபூதையென்று சொல்லுவதொரு ப்ரமாணமில்லாமையாலும் இவனுக்கு உபாயத்வமில்லையென்னுமிடம் ஸம்ப்ரதிபந்நம்.

---

(௧) ர-ஸ்த-௨-௮௭ (௨) தி-வாய்-௫-௮-௮ (௩) தி-வாய-௫-௮-௩
(௪) தை-ப்ருகு- (௫) ஶ்வே-௬-௧௮ (௬) கீ-௧௮-௬௬
(௭) ரா-யு-௧௭-௧௫ (௮) ரா-யு-௩௪-௧௭ (௯)

ஸர்வஜ்ஞத்வாதிகுணமுகேந கார்யகரனாகிறவோபாதி இவளை யும் ஸஹகாரித்வேந அந்தர்ப்ப(ர்)வித்துக்கொண்டு கார்யகரனாகக் குறையென்னென்னில், குணங்கள் கார்யோபயோகியாகையாலும், குணத்வேந உண்டான அப்ருதக்ஸித்தியோக்யத்வத்தாலும், சைதந் யாநாதாரத்வத்தாலே கர்த்ருத்வாதாரஸங்காவகாசமில்லாமையாலே நைரபேக்ஷ்யஹாநி யில்லாமையாலும், இவள் சார்யாநுபயுக்தையா கையாலும், த்ரவ்யத்வேந வருகிற ப்ருதக்ஸித்தியோக்யத்வத்தாலும், சைதந்யாதா(தா)ரத்வ நிபந்தந கர்த்ருத்வாதிப்ரஸக்தியோக்யதை யாலே நைரபேக்ஷ்யஹாநியுண்டாகையாலும அதுவொவ்வாது. ஆகையாலே ஸர்வப்ரகாரத்தாலும் இவளுக்கு உபாயத்வாந்தர்ப் பாவமில்லை யென்றதாயிற்று. ஆகையாலே உபாயதசையில் இவ ளுக்குண்டான ஸ்வரூபாநுரூபமான உபாயபூதனானவனை உபாயத் வேந ஆஸ்ரயிக்கிற சேதநருடைய ஸ்வாபராதநிபந்தநபயநிவ்ருத்தி ஹேதுபூத புருஷகாரோபயோகியாகக்கடவது.

அப்படியன்றியிலே ஸ்ரிய:பதித்வத்துக்கு ப்ராதிஸம்பந்த்யபே க்ஷை யுண்டாகையாலும், தர்மிக்ராஹகமான ஸ்ரீஸப்தந்தான் "శ్రయత ఇతి-శ్రీః-ஸ்ரயத இதி ஸ்ரீ:" என்று பகவத்ஸ்வரூபத்தை யாஸ்ர யித்திருக்கையாலே ஸ்ரீஸப்தவாச்யை யானவளென்று சொல்லுகை யாலும், "శ్రీఙ్-సేవాయామ్-ஸ்ரிஞ்-ஸேவாயாம்" என்கிற தாதுவிலே கர்த்தரிவ்யுத்பத்தியாலே ஸ்வாஸ்ரயமான பகவத்ஸ்வரூபத்தை ஸே வித்திருக்குமென்கையாலும், (க) "అనన్యా రాఘవేణాహం భాస్కరేణ ప్రభా యథా - அநந்யா ராகவேணாஹம் பாஸ்கரேண ப்ரபா யதா" என் றும், (உ) "నిరాధారానసిద్ధ్యతి-நிராதாரா நஸித்யதி" என்றும், பகவத் ஸ்வரூபத்தை யாஸ்ரயித்தபோது தன்ஸத்தையாய், ஒழிந்தபோது ஸத்தையில்லையென்று சொல்லுகையாலும், ஸ்ரீயையொழிய அவனுக் கு ஸ்ரிய:பதித்வம் அநுபபந்நமாகையாலும, (௩) "విష్ణోః శ్రీః-விஷ்ணோ ஸ்ஸ்ரீ:" (௪) "విష్ణుపత్నీ-விஷ்ணுபத்நீ" (௫) "హ్రీశ్చ తే లక్ష్మీశ్చ పత్న్యౌ - ஹ்ரீஸ்சதே லக்ஷ்மீஸ்சபத்ந்யௌ" (௬) "తవశ్రియా-தவஸ்ரியா" (௭) "மலராள்மணவாளன்" (௮) "நாண்மலராள்நாயகன்" (௯) "திருமக

(க) ரா-ஸு-க-கசு (உ) லக்ஷ்மீதந்-உ (௩) வி-பு-க-கூ-அ-கஎ
(௪) ஸ்ரீஸூக்தம (௫) யஜு- (௬) ஸ்தோ-ர-
(௭) தி-வாய-க-க0-௪ (௮) தி-மொ-ரு-ரு- (௯) தி-வாய்-க-சு-க

ளார்தனிக்கேள்வன்” இத்யாதிகளிலே இவளை அவனுக்குப் பத்நீத்வேந சேஷபூதையாகச் சொல்லுகையாலும், ஸ்ரிய:பதித்வத்தில் அந்வயமுண்டென்னுமிடம் ஸுஸ்பஷ்டம.

அப்படியே “𑌶𑍍𑌰𑍀𑌯𑌤 𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍀𑌃 - ஸ்ரீயத இதி ஸ்ரீ:” என்று ஸர்வராலும் ஆஸ்ரயிக்கப்படுமென்று சொல்லுகையாலும் “𑌶𑍍𑌰𑍀𑌞𑍍 𑌸𑍇𑌵𑌾𑌯𑌾𑌂-ஸ்ரிஞ்-ஸேவாயாம்” என்கிற தா(து)துவிலே கர்மணிவ்யுத்பத்தியாலே ஸர்வர்க்கும் ஸேவாவிஷயபூதையாகச் சொல்லுகிறவள் தன்னுடைய மாத்ருத்வரூபமான சேஷித்வத்தாலே ஆஸ்ரிதரை அபராதோபகரண பூர்வகமாக ரக்ஷித்துக்கொண்டு போருமென்று சொல்லுகையாலும், ஏவம்பூத சேஷித்வத்தாலே இவளுடைய புருஷகாராந்தர நிரபேக்ஷாஸ்ரயணீயத்வம் உபபந்நமாகையாலும், (௧) “𑌅𑌸𑍍𑌯𑍇𑌶𑌾𑌨𑌾 𑌜𑌗𑌤𑍋 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌪𑌤𑍍𑌨𑍀 - அஸ்யேஶாநா ஜகதோ விஷ்ணுபத்நீ” (௨) “సకలం తదిదం ఉభయం తవైవ మాధవ-ஸகலம்தத்இதந்தவைவமாதவ” (௩) “దాసోహం కమలానాథ - தாஸோஹம்கமலாநாத” (௪) “திருமாலையல்லது தெய்வமென்றேத்தேன்” (௫) “திருமாலேநானுமுனக்குப்பழவடியேன்” (௬) “திருமாலை வணங்குவனே” இத்யாதிகளிலே இவளை சேஷித்வத்திலே அந்தர்ப்பவித்துச் சொல்லுகையாலும் இவளுக்கு சேஷித்வத்திலே அந்வயமுண்டென்னுமிடம் ஸம்ப்ரதிபந்நம்.

ஆகையாலே நாராயணபதத்திற் சொல்லுகிற ஸகலகுணங்களும் பகவத்ஸ்வரூபாஸ்ரயமாயிருக்கச்செய்தேயும் வாத்ஸல்யாதிகள் ஆஸ்ரயணத்திலே உபயுக்தமாயும், ஸர்வஜ்ஞத்வாதிகள் கார்யகரத்வத்திலே உபயுக்தமாயும், ஸௌந்தர்யாதிகள் அநுபாவ்யமாயும் போருகிறவிடத்தில் விரோதமில்லாதாப்போலேயும், காரணதசையில சிதசித்துக்கள் உபாதாநோபயோகியாயும, ஸங்கல்பம நிமித்தபர்யவஸாயியாயும், ஜ்ஞாநாதிகள் ஸஹகாரியாயும போருகிறவிடத்தில் விரோதமில்லாதாப்போலேயும், லக்ஷ்மீஸ்வரூபம் அகாரவாச்யமான பகவத்ஸ்வரூபத்தை ஆஸ்ரயித்திருந்ததேயாகிலும் காரணத்வரக்ஷகத்வாதிகளிலந்வயமின்றியிலே தத்விஷயாநுமோத புருஷகாரத்வ மாத்ரமேயாய் ஸ்ரிய:பதித்வ சேஷித்வங்களில் அந்வயமுண்டாமிடத்தில் விரோதமில்லை.

---

(௧) ஸ்ரீஸூக்தம் (௨) ஸ்தோ-ரத்ந (௩)
(௪) ௧. திருவ-௬௪ (௫) பல்லாண்டு-௧௧ (௬) திருவிரு-௬௫.

இந்த காரணத்வ ரக்ஷகத்வங்களுக்கு ஸர்வஜ்ஞத்வாதி குணாபேக்ஷையுண்டாகையாலும், உபயவிபூதி ரக்ஷகனாகையாலும், ஶ்ரிய:பதியாகையாலும், ஸர்வஸ்மாத் பரனாகையாலும் (௧) "కారణన్తు ధ్యేయః-காரணந்துத்யேய:" (௨) "యో బ్రహ్మాణం విదధాతి పూర్వమ్-ముముక్షుర్వై శరణమహం ప్రపద్యే-யோப்ரஹ்மாணம்விததாதிபூர்வம்-முமுக்ஷுர்வைஶரணமஹம்ப்ரபத்யே" என்றும் காரணவஸ்துவே உபாஸ்யமாகவும் ஶரண்யமாகவும் சொல்லுகையாலும், உபாஸ்யமாயும் ஶரண்யமாயுமிருக்கிற வஸ்துவே அநிஷ்டநிவ்ருத்தி பூர்வகமான இஷ்டப்ராப்தியைப் பண்ணுகையாலும், உபாஸ்யமாயும் ஶரண்யமாயுமிருக்கிற வஸ்துவே உபாயமாயறுகையாலும், இதுதான் இதுக்குமுன்பு ப்ராப்தமின்றியிலே மேல்ப்ராப்தவ்யமாகையாலும், இந்த உபாஸ்யத்வ ஶரண்யத்வ உபாயத்வ ப்ராப்யத்வங்களுக்கு விலக்ஷணவிக்ரஹாபேக்ஷையுண்டாகையாலும், இவ்வகாரத்தாலே ஸமஸ்தகல்யாணகுணாத்மகத்வமும் உபயவிபூதிநாதத்வமும் ஶ்ரிய:பதித்வமும் ஸர்வஸ்மாத்பரத்வமும் உபாஸ்யத்வமும் ஶரண்யத்வமும் உபாயத்வமும் உபேயத்வமும் விலக்ஷணவிக்ரஹயோகமும் சொல்லிற்றாயிற்று.

அநந்தரம், உகாரம் (௩) "తదేవాగ్ని స్తద్వాయు స్తత్సూర్య స్తదు చన్ద్రమాః-ததேவாக்நிஸ்தத்வாயுஸ்தத்ஸூர்யஸ்ததுசந்த்ரமா:" என்று ஏவகாரத்தையும் உகாரத்தையும் பர்யாயமாகச் சொல்லுகிற ஸ்தாநப்ரமாணத்தாலே அவதாரணார்த்தமாய்க்கொண்டு இந்த ஶேஷத்வ விரோதியான அந்யார்ஹதையைக்கழித்து அவனுக்கே ஶேஷமென்று அவதாரிக்கிறது.

ஸர்வாதிகனான அகாரவாச்யனுக்கு ஶேஷமான வஸ்துக்கு அந்யஶேஷத்வ யோக்யதையில்லையாயிருக்க இந்த ப்ரஸக்தப்ரதிஷேதமேதென்னில்; லோகத்திலே ஒருவனுக்கு ஶேஷமான க்ருஹக்ஷேத்ராதிகள் பிறர்க்கு அர்ஹமாகக் காண்கையாலும், "హిరణ్యం కుణ్డలాయ-ஹிரண்யம் குண்டலாய" என்றிருக்கச் செய்தேயும் கடகமகுடாதிகளுக்கும் அர்ஹமாகக் காண்கையாலும், (௪) "మాతృదేవో భవ, పితృదేవో భవ, ఆచార్యదేవో భవ, అతిథిదేవో భవ-மாத்ருதேவோபவ, பித்ருதேவோபவ, ஆசார்யதேவோபவ, அதிதிதேவோபவ" என்று ஒருவனுக்கு அநேகவிஷய ஶேஷத்வத்தை விதிக்கக்காண்கையாலும்,

---

(௧) அதர்வ (௨) ஶ்வே-௬-௧௮ (௩) தை-நா- (௪) தை-ஶீக்ஷாவல்லி

அப்படியே ஈஶ்வரனுக்கு இவ்வாத்மவஸ்து ஶேஷமாமிடத்தில் அந்யர்க்கும் ஶேஷமாய் ஈஶ்வரனுக்கும் ஶேஷமாயிருக்குமோ வென்று ஶங்கைபிறக்க, அந்த ஶங்கையைக்கழித்து அவனுக்கே ஶேஷமென்கிறது.

ஶேஷத்வமாகில் அநந்யார்ஹமா யிருக்குமென்கிற நியமமாகில் க்ஷேத்ராதிவிஷயமாக அநயார்ஹமாவா னென்னென்னில்; அங்கு ப்ருதக்ஸ்திதியோக்யமான த்ரவ்யமாகையாலே க்ரயவிக்ரயாதிகளாலே அந்யார்ஹமாகைக்கு யோக்யதையுண்டு. இங்கு ப்ருதக்ஸ்தித்யயோக்யத்ரவ்யமாகையாலே அநயார்ஹமாகைக்கு யோக்யதையில்லை.

எங்ஙனே யென்னில்; க்ஷேத்ரம் க்ரயவிக்ரயார்ஹமாகையாலும், புத்ரன் க்ரயவிக்ரயார்ஹனுமாய் மாதாபிதாக்களுக்கும் அநேக தேவதைகளுக்கும் ஶேஷமாயிருக்கையாலும், பார்யை பாணிக்ரஹண பூர்வகாலத்திலே மாதாபிதாக்களுக்கு ஶேஷமாயும் அநந்தரம் ஸோமகந்தர்வாதிகளுக்கும் ஶேஷமாயும் ஶரீராவதி(தி)யாயும் உபேக்ஷாவதியாயுமிருக்கையாலும், தேஹமும், பார்யாஶரீரம் பர்த்தாவுக்கு ஶேஷமாய, பர்த்ருஶரீரம தேவாதிகளுக்கு ஶேஷமாய், க்ரயவிக்ரய யோக்யமாயிருக்கையாலும், குணமும் நிராஶ்ரயமாகநில்லாதே ஓராஶ்ரயத்தைப்பற்றி நிற்கையாலே ஸ்வாஶ்ரய ஶேஷியான வ்யக்திக்குத் தானும் ஶேஷமாகையாலும க்ஷேத்ரபுத்ர தாரதேஹ குணாதிகளுக்கும் அநநயார்ஹத்வமில்லை.

குண்டலாபிமாநியான ஹிரண்யமும் கர்த்தாவினுடைய ருசிவிசேஷத்தாலே கடகாதிகளுக்கும யோக்யமாகையாலே அதுக்கும் அநந்யார்ஹத்வமில்லை. * மாத்ருதேவோபவேத்யாதிகளும் அநேக விஷயவிதியாகையாலே அந்த விஷயபூதனானவனுக்கும அநந்யார்ஹத்வமில்லை.

இங்கு அப்படியன்றியிலே (க) "నతదస్తివినాయత్స్యాన్మయాభూతంచరాచరమ్-நததஸ்திவிநாயத்ஸ்யாந்மயாபூதம்சராசரம்" (௨) "தன்னுள்கலவாதவெப்பொருளும்தானில்லையே" என்று ப்ருதக்ஸ்திதியோக்யமன்றென்கையாலும், ப்ருதக்ஸ்திதி சொன்னபோது ஈஶ்வரனுடைய ஸர்வப்ரகாரித்வாதிகள் பங்க (ப⁴ங்க³) மாகையாலும்,

(க) கீதை-௧௦-௩௯ (௨) தி-வாய்-௨-௫-௩

(க) "𑌆𑌤𑍍𑌮𑍈𑌵𑍇𑌦𑌂 𑌸𑌰𑍍𑌵𑌮𑍍-ஆத்மைவேதம்ஸர்வம்" (உ) "𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍈𑌵𑍇𑌦𑌂 𑌸𑌰𑍍𑌵𑌮𑍍-ப்ரஹ்மைவேதம்ஸர்வம்" என்று ஸாமாநாதிகரண்யத்தாலே ஶரீராத்மபாவஸம்பந்தத்தைச் சொல்லி, தத்வ்யாப்தமான ஶேஷஶேஷிபாவஸம்பந்தத்தை "ஆத்மைவ" என்று அவத(த)ரித்துக்கொண்டு அஸாதாரணமாகச் சொல்லுகையாலும், (ங) "𑌸𑍍𑌵𑌤𑍍𑌵𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌿 𑌸𑌞𑍍𑌜𑌾𑌤𑌮𑍍-ஸ்வத்வமாத்மநி ஸஞ்ஜாதம்" (ச) "𑌦𑌾𑌸𑌭𑍂𑌤𑌾𑌃-தாஸபூதா:" (ரு) "𑌆𑌤𑍍𑌮𑌦𑌾𑌸𑍍𑌯𑌂 𑌹𑌰𑍇𑌃 𑌸𑍍𑌵𑌾𑌮𑍍𑌯𑌂 𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌮𑍍 - ஆத்மதாஸ்யம் ஹரேஸ்ஸ்வாம்யம் ஸ்வபாவம்" (சு) "குலதொல்லடியேன்" (எ) "தொல்லடிமைவழிவரும்தொண்டர்" இத்யாதிகளாலே இந்த ஶேஷத்வத்தை நிருபாதிகமாகவும் அநந்யஸாதாரணமாகவும் ஸ்வாபாவிகமாகவும் சொல்லுகையாலும், இப்படி ஶேஷமானவஸ்து ஜ்ஞாநாநந்தஸ்வரூபமாய் ஜ்ஞாநகுணகமாயிருக்குமென்று மேலே உக்தமாகையாலும், க்ரயவிக்ரயாநர்ஹம், அஸாதாரணம், நிருபாதிகம், நித்யம், ஔபாதிக தேஹவ்யாவ்ருத்தஶரீரம், குணியென்னுமிடம் ஸுஸ்பஷ்டம்.

ஆகையாலே க்ஷேத்ரபுத்ரதார தேஹாதிகளிற்போலே அந்யஶேஷத்வஶங்கா ஹேதுவான க்ரயவிக்ரயார்ஹத்வ ஸாதாரணத்வ ஔபாதிகத்வ அநித்யத்வங்கள் இவ்விடத்திலில்லாமையாலே இங்கு அந்யஶேஷத்வஶங்கையே பிடித்தில்லை.

பூர்வோக்தமான ப்ருதக்ஸ்தித்யநர்ஹதையாலும், அஸாதாரணதையாலும், *மாத்ருதேவோபவேத்யாதிகளிற் சொல்லுகிற அநேகஶேஷத்வத்துக்கு உதயமில்லை. குண்டலார்ஹமான ஹிரண்யத்தினுடைய ஸ்வாம்யதீ(தீ)நமான மகுடார்ஹத்வம் இங்கும் ஶேஷ்யதீநமாகவுண்டாக, ஶேஷத்வம் ஶேஷிபூதபகவந்நியோகாதீநமாக வருகிறதாகையாலே பகவச்சேஷத்வமே யித்தனையொழிய அந்யஶேஷத்வமன்று.

இப்படி அந்யஶேஷத்வஶங்கையில்லாமையாலே தந்நிவ்ருத்த்யபேக்ஷையில்லையென்றிட்டு தத்வாசகமான உகாரத்துக்கு உதயமில்லை யாகாதோவென்னில்; இப்படி ஶேஷபூதனைச் சொல்லுகிற சேதநன் கர்மஹேதுகமாக உத்பந்நமான ஶரீரஸ்தனாயிருக்கையாலே அந்த ஶரீரோத்பாதகரான மாதாபிதாக்களென்ன, அந்த ஶரீரத்தைப்பற்ற வுண்டான வர்ணாஶ்ரமநிபந்தநமாக வருகிற க்ரியா

(க) சாந்தோ-எ-உரு-உ (உ) ப்ருஹ-ச-ரு (ங)
(ச) (ரு) (சு) தி-வாய்-சு-கO-க (எ) தி-வாய்-க-உங

ப்ரதிஸம்பந்திகளான அக்நீந்த்ராதி தேவதைகளென்ன, இவர்களைப் பற்றி வருவதொரு கர்மோபாதிகசேஷத்வமுண்டாகையாலே தந்நிவ்ருத்தியைச் சொல்லுகிற உகாரத்துக்கு உதயமில்லையென்ன வொண்ணாது.

ஆனால் கர்மஹேதுக சரீரஸ்தனாயிருக்கச் செய்தே தத்கார்யமான அந்யசேஷத்வத்தை நிவர்த்திப்பிக்கும்படி யென்னென்னில்; ஏவம்பூதனான சேதநன்விஷயமாக ஈச்வரன் நிர்ஹேதுகாங்கீகாரத்தைப்பண்ணி ஸ்வரூப யாதாத்ம்யஜ்ஞாநத்தைப் பிறப்பிக்கையாலே ஸ்வாத்மசரீரங்களிலுண்டான அத்யந்தபேதஜ்ஞாநம்பிறந்து அந்த சரீரத்திற்காட்டில் அந்யனாகத் தன்னையநுஸந்தித்திருக்கையாலும், ஸ்வரூபாநுகுணமாக ரக்ஷிக்குமென்கையாலே ஸ்வரூபவிருத்தக்ரியாஹேதுவான கர்மத்தை நேராக நிவர்த்திப்பித்து ஸ்வரூபாநுரூபமான உபாயத்தையும் பரிக்ரஹிப்பித்துப்போருகையாலும் சரீரஹேதுவாயும் க்ரியாஹேதுவாயும வருகிற அந்யசேஷத்வங்களை நிவர்த்திப்பிக்கக் குறையில்லை.

(க) “యావానర్థ ఉదపానే సర్వతస్సంప్లుతోదకే । తావాన్సర్వేషు వేదేషు బ్రాహ్మణస్య విజానతః-யாவாநர்த்த உதபாநே ஸர்வதஸ்ஸம்ப்லுதோதகே । தாவாந் ஸர்வேஷு வேதேஷு ப்ராஹ்மணஸ்ய விஜாநதஃ” என்று ஆறு பெருகிப் போகாநின்றால் பிபாஸிதனுக்கு ஸ்வதாஹசாந்திமாத்ர ஜலபாநமே அபேக்ஷிதமானாப்போலே, ஸகலவேதங்களும் ஸகலார்த்தங்களையும் சொல்லிற்றேயாகிலும் க்ருஹஸ்ததர்மம் வநஸ்தனுக்கு த்யாஜ்யமானாப்போலேயும, அதுதான் பிக்ஷுவுக்கு த்யாஜ்யமாமாபோலேயும், ஸ்வரூபப்ரதாநனானவனுக்கு சரீரப்ரதாநனானவனுடைய க்ரியை த்யாஜ்யமாகையாலும், (உ) “దేవర్షిభూతాత్మనృణాం పితౄణాం నకింకరో నాయమృణీచ రాజన్ । సర్వాత్మనా యశ్శరణం శరణ్యం నారాయణం లోకగురుం ప్రపన్నః - தேவர்ஷிபூதாத்மந்ருணாம்பித்ருணாம நகிங்கரோநாயம்ருணீசராஜந் । ஸர்வாத்மநாயச்சரணம் சரண்யம்நாராயணம்லோககுரும்ப்ரபந்நஃ” என்று பகவச்சேஷத்வோபாயத்வ ஜ்ஞாநமுடையவன் தேவதாந்தரங்களுக்கு கிங்கரனுமல்லன், ருணியுமல்லனென்றும், (ஙு) “బ్రహ్మచర్యేణ ఋషిభ్యః, యజ్ఞేన దేవేభ్యః, ప్రజయా పితృభ్యః-ப்ரஹ்மசர்யேணரிஷிப்யஃ,யஜ்ஞேநதேவேப்யஃ,ப்ரஜயாபித்ருப்யஃ” என்று சொல்லுகிற தேவர்ஷி பித்ரு பூதவிஷயங்க

(க) கீதை (உ) பாரத (ஙு) யஜுஃ

ளான ரிணமோசநார்த்த க்ரியாநிபந்தநமாக வந்த கிங்கரத்வத்தை அந்த க்ரியாஹேதுபூதமான ரிணித்வ விஶேஷபூர்வகமாக விஶேஷிக்கையாலும், (க) "యో వై స్వాం దేవతామతియజతే, ప్ర స్వాయై దేవతాయై చ్యవతే, న పరాం ప్రాప్నోతి, పాపీయాన్భవతి - யோ வைஸ்வாயதேவதாமதியஜதே, ப்ரஸ்வாயை தேவதாயை ச்யவதே நபராம் ப்ராப்நோதி, பாபீயாந்பவதி" என்று யாவனொருவன் ஸ்வரூபாநுரூபமான தேவதையையொழிய யஜிக்கிறான்; அவன் அந்த தேவதையின்பக்கல் நின்று ப்ரஷ்டனாம். அவனுக்கு பர(ஃ)ப்ராப்தியுமில்லை. பாபிஷ்டனுமாமென்கையாலும், (உ) "సంసేవ్య ఏకో హరిరిన్ద్రియాణాం సేవాఽన్యదేవేష్వభిచార ఏవ। అన్యోఽపి సేవ్యో యది దేవసామ్యాత్ కోవా హృషీకేశపదాభిధానః - ஸம்ஸேவ்ய ஏகோ ஹரிரிந்த்ரியாணாம் ஸேவாந்யதேவேஷ்வபிசார ஏவ। அந்யோபி ஸேவ்யோயதி தேவஸாம்யாத் கோவா ஹ்ருஷீகேஶபதாபிதாந:" என்று ஸகலேந்த்ரியங்களாலும ஸம்ஸேவ்யமானவனிருப்பான் ஹரிஶப்தவாச்யனை ஸர்வேஶ்வரனென்றும், இந்த்ரியங்களைக்கொண்டு தத்வ்யதிரிக்த தேவதைகளை ஸேவிக்கறவில் பர்த்ருஶேஷமான ஶரீரத்தை அந்யபுருஷோபயோகமாக்கின ஸ்த்ரீக்கு வ்யபிசாரமே பலித்து பாதிவ்ரத்யஹாநி யுண்டாமாபோலே, ஹ்ருஷீகேஶனுடையதான ஹ்ருஷீகங்களை அந்யவிஷயமாக்குகையாலே அந்த ஹ்ருஷீகங்களுக்கும ஸ்வரூபஹாநியாய் அவற்றுக்குக்காரணியான தனக்கும் ஸ்வரூபஹாநி யுண்டாமென்றும் சொல்லிக்கொண்டு இந்த்ரியங்களுடைய அந்யப்ரஸங்க க்ஷாமகாத்வ விஶேஷபூர்வகமாக பகவத்ப்ரதிஸம்பந்தி கர்மகாத்வத்தை விதிக்கையாலும், அந்யதேவதாப்ரதி ஸம்பந்திகமாய் ஸ்வரூபவிருத்த(த்)மான கர்மத்தினுடைய நிவ்ருத்தி-ஸ்வபூத ஜ்ஞாநவிஶிஷ்டனுக்கு ஸ்வத: ப்ராப்தமென்றதாயிற்று.

சிலர், இதினுடைய அப்ராப்தத்வஶங்கையைப்பண்ணி தத்பரிஹாரார்த்தமாக இந்த க்ரியைகள் பகவத்பர்யவஸாநபுத்த்யா அநுஷ்டேயங்களென்றும, அந்த தேவதாநாமங்களை பகவந்நாமங்களாக புத்திபண்ணி அநுஷ்டிப்பாரென்று சொல்லுவர்கள். அவற்றினுடைய விதா(ధా)நகாலத்தில, "అగ్నయే, ఇన్ద్రాయ - அக்நயே, இந்த்ராய" என்று அக்நீந்த்ராதிதேவதைகளை ப்ரதிஸம்பந்திகளாகச் சில க்ரி

(க) (உ)

யைகளை விதிக்கிறவோபாதி "விஷ்ணவே" என்று ஸர்வவ்யாபகனான ஸர்வேஶ்வரனை ப்ரதிஸம்பந்தியாகச் சில க்ரியைகளை விதித்தும் போராநின்றது.

அக்நீந்த்ராதி தேவதாப்ரதிஸம்பந்தி க்ரியைதானே பகவத்பர்யவஸாயியுமாய், அந்த தேவதாநாமங்கள்தானே பகவந்நாமங்களுமாமாகில் "விஷ்ணவே" என்று தனித்து விதிக்கக்கூடாது. அதுக்குமேலே அந்த க்ரியைகளுக்கு தத்தத்தேவதாப்ரதிஸம்பந்தித்வமில்லையாகில் ஸர்வக்ரியைகளிலும் விஷ்ணவேயென்று வ்யாபகத்வேந ஸர்வவிஶேஷ்யபூதனான ஸர்வேஶ்வரனை ப்ரதிஸம்பந்தியாக விதிக்க அமையும்.

அங்ஙனன்றியிலே அந்த தேவதைகளையும் ஸர்வேஶ்வரனையும் தனித்து விதிக்கக் காண்கையாலே அந்த விதிகளுக்கு ப்ரதிஸம்பந்தி அந்த தேவதைகளாகவேணும். ஆகையாலே அந்த தேவதைகள்தான் விஶேஷணத்வேந ஶேஷபூதராய்க்கொண்டு தங்கள் ஸ்வரூபம் ஸித்தமாயிருக்கச் செய்தேயும், "நாமவிஶேஷணத்வேந ஶேஷபூதர்; அவன் விஶேஷ்யத்வேந ஶேஷி" என்கிற ஜ்ஞாநமின்றியிலே "தேவோஹம், ஸ்வதந்த்ரோஹம்" என்று அஹங்காரமமகாரக்ர(ஃ)ஸ்தராயிருப்பார் சிலராகையாலே, பர்த்ருஶேஷபூதையான பார்யையானவள் ஆர்த்தவாதி தூஷிதையானவன்று அந்த பர்த்தாவோடு புத்ரர்களோடு வாசியற ஸ்வாங்கஸ்பர்ஶயோக்யதையில்லாதாப்போலே பகவச்சேஷத்வஜ்ஞாநமுடையார்க்கு தத்தத்தேவதா ப்ரதிஸம்பந்திகமான க்ரியைகள் த்யாஜ்யங்களாகையாலும், விதி விஶேஷ்யபர்யந்தமானபோதும் இந்த ந்யாயத்தாலே விஶேஷணத்துக்கு அஜ்ஞாநநிபந்தநமான அநுபாதேயத்வம் வருகையாலும், பூர்வோக்த ந்யாயத்தாலே ஸம்யக்ஜ்ஞாநநிஷ்டனைக்குறித்து விதியில்லாமையாலும், ஸம்ஶயவிபர்யயரஹிதமாம்படி நிர்ஹேதுகமாக லப்த(ஃ)ஜ்ஞாநரான ஆழ்வார், (க) "நீராய்நிலனாய்" என்று தொடங்கி ஸர்வேஶ்வரனுடைய ஸர்வஶரீரத்வத்தை ஸாமாநாதிகரண்யத்தாலே அநுஸந்தித்து, தமக்கு அநுபா(ஃ)வ்யத்தை நிர்ணயித்து பேக்ஷிக்கிற இடத்தில் (க) "கூராராழி வெண்சங்கேந்திக் கொடியேன்பால்வாராய்" என்று அஸாதாரண லக்ஷணமாயிருந்துள்ள ஶங்கசக்ரத(ஃ)ரமான விக்ரஹத்தோடே வரவேணுமென்றபேக்ஷிக்கையாலும்,

(க) தி-வாய்-௬-௯-௧

யஜ்ஞத்திலே தீக்ஷித்தவனுக்கு நித்யகர்மங்கள் த்யாஜ்யமாமாபோலே பகவத்ப்ராப்திநிஷ்டரானவர்களுக்கு இவை த்யாஜ்யமாகையாலும் ஸ்வரூபயாதாத்ம்ய ஜ்ஞாநவான்களுக்கு தத்ப்ரகாராநுஷ்டாநம் அநுபந்தமாகையாலே இது சொல்லவொண்ணாது.

கர்மஹேதுகோத்பந்ந ஶரீரமேயாகிலும் இந்த ஜ்ஞாநாநந்தரம் கர்மநிராஸபூர்வக கேவல பகவதிச்சா ஹேதுவான ஶரீரஸ்திதியாகையாலே இந்த இச்சாஶ்ரயம பகவத்விஷயமாகையாலும், பூர்வ ஜந்ம மாதாபித்ருஸாபேக்ஷத்வம் அநந்தரஜந்மத்தி லில்லாதாப்போலே இந்த ஶரீரோத்பாதகரான மாதாபித்ருவிஷயஸாபேக்ஷத்வம் இவனுக்கில்லாமை கீழ்ச்சொன்ன ஹேதுவிதயமாகையாலும் தந்நிவ்ருத்தி அத்யந்தம் ப்ராப்தமென்னுமிடம் ஸம்ப்ரதிபந்நம். (க)"ஸஹி வித்யாதஸ் தம் ஜநயதி ஸஹிவித்யாதஸ்தம்ஜநயதிதச்ச்ரேஷ்டம்ஜந்ம"(உ) "அன்றுநான்பிறந்திலேன் பிறந்தபின் மறந்திலேன்" என்றும் இந்த ஜ்ஞாநோத்பத்தியையும் ஜந்மாந்தரமாகச் சொல்லிற்றிறே.

ஜ்ஞாநம் பிறந்தவநந்தரத்திலே ஶரீரவிமோசநம் பிறக்குமாகில் ஒருவர்க்கும் இந்தஜ்ஞாநம் பிறவாதென்றும், இவனாலே அநேக சேதநரைத் திருத்தலாமென்றும, இவனுடைய சரமஶரீரமாகையாலே தனக்குண்டான வாதராதிஶயத்தாலும் ஈஶ்வரன் தன்னிச்சையாலே வைக்குமென்று பூர்வாசார்யர்களருளிச்செய்கையாலே பகவதிச்சையே ஹேதுவென்னக் குறையில்லை.

ஆனால் து:க்கஹேதுவான வ்யாத்யாதிகளுண்டாவானென்னென்னில், கர்மபலநதான் வ்யாத்யாதிரூபேணவும். தேவதாந்தரஸாபேக்ஷத்வரூபேணவும, தேஶகாலாதிநிபந்தநமான ஶீதோஷ்ணாதிகள், அநபாநாதி வாஞ்சையித்யாதிரூபேணவும த்ரிவிதமாயிருக்கும்.

அதில வ்யாத்யாதிகள் தஜ்ஜநிதக்லேஶாதிஶயத்தாலே ததாஶ்ரயமான ஸ்வரூபவிருத்த ஶரீரத்திலே உபேக்ஷைபிறக்கைக்கு ஹேதுவாகையாலே ஹிதபரனை யீஶ்வரன் தத்தேதுவான கர்மத்தை நிஶ்ஶேஷமாக நிவர்த்திப்பிப்பன். தேவதாந்தரஸாபேக்ஷத்வம் ஸ்வரூபவிருத்தமாகையாலே ஸ்வரூபாநுகுணரக்ஷணம் பண்ணுகிற யீஶ்வரன் தத்தேதுவானகர்மத்தினுடைய நிஶ்ஶேஷநிவ்ருத்தி

(க) ஆபஸ்தம்பதர்ம-க- (உ) தி-ச-வி-௬௪-

யைப்பண்ணும். தேஶகாலநிரந்தரமான ஶ்ரீமந்த்ராஷ்ணதிகள், அநந்யாராதிவார்ஜனை, இவை தேவதாந்தர ஶேஷத்வத்தோபாதி ஸ்வரூபத்துக்கு அத்யந்தம் விருத்தமின்றியிலே வ்யாக்யாதிகளோபாதி ஶரீரோபேக்ஷாதிகளை பிறக்கைக்கு ஹேதுவாகையாலே தத்ஹேதுவான கர்மத்தை அவன் உபேக்ஷித்திருக்கும். ஆகையாலே இசசாஹேதுவான ஶரீரஸ்திதிக்குங் குறையில்லை. அநந்யஶேஷத்வநிவ்ருத்தியும் அத்யந்தமநுபபந்நம். ஆக உகாரத்தாலே ஶாஸ்த்ரீயமான அக்நீந்த்ராதி தேவதாநுவர்த்தநத்தையும் மாதாபிதாசகளுடைய அநுவர்த்தநாதிகளையும் வ்யாவர்த்திக்கிறது.

அங்ஙனன்றியிலே இவ்வுகாரம பகவத்வ்யதிரிக்த ஶேஷத்வத்தினுடைய நிவ்ருத்தியைப் பண்ணுகிறதென்றுமர்த்தம். தத்வ்யதிரிக்தஶேஷத்வத்தில் நிருபாதிக ப்ரஸங்கமில்லாமையாலே நிரஸ்தம். ஆக ஸர்வகாரணபூதனாய் ஸர்வரக்ஷகனாய் ஶ்ரிய:பதியாய் ஸர்வஶேஷியான அகாரவாச்யனுக்கே அநந்யார்ஹ ஶேஷமென்றதாயிற்று.

அநந்தரம், மகாரம் இப்படி ஶேஷபூதனாய் தேஹேந்த்ரியாதிவிலக்ஷணனாய் ஆநந்தரூபஜ்ஞாந ஸ்வரூபனுமாய் அஹம்ஶப்தவாச்யனுமாய் ஜ்ஞாத்ருத்வாதி குணவிஶிஷ்டனுமாய் ஸ்வயம்ப்ரகாஶனுமாய் அணுபரிமாணனானவாத்மாவை சொல்லுகிறது.

எங்ஙனேயென்னில ; (௧) “भूतानि चक्षुरादीनि-பூதாநிசக்ஷுராதீனி” இத்யாதியாலே தேஹோபாதானமான பூதபஞ்சகங்களும் இந்த்ரியங்களும் விஷயங்களும மனோஹங்காரங்களும் தொடக்கமான விருபத்துநாலு தத்வங்களையும் ககாராதி (ஃ) பகாராந்தமான இருபத்து நாலக்ஷரத்தாலும் சொல்லி, அநந்தரம்,(௨) “आत्मा तु समकारेण पञ्चविंशः प्रकीर्तितः - ஆத்மாதுஸமகாரேண பஞ்சவிம்ஶ:ப்ரகீர்த்தித:” என்று இருபத்தஞ்சாம் தத்வமான ஆத்மாவை இருபத்தஞ்சாமக்ஷரமானமகாரத்தாலே இவற்றிற்காட்டில வேறுபடச்சொல்லுகையாலே; ஆத்மா தேஹாதிவிலக்ஷணனென்னுமிடம்சொல்லிற்று.

ஆத்மாதான் தேஹாதிவிலக்ஷணனானபடி யென்னென்னில், தேஹமாகிறது - அவயவ ஸமுதாயமாகையாலே அந்த வவயவங்களுக்கு, என்னுடைய அவயவங்களென்று அந்யனாயிருப்பானொரு

(௧) பாத்மோத்தரே-௨௨௬- (௨)

னுடைய மமதைக்கு விஷயமாகையொழிய அஹம்வ்யவஹாரமில்லாமையாலும். ஒரு அவயவம் ஆத்மாவென்னும்போதைக்கு தத்தத(ஸ்ர)பாவத்திலும் * அஹம்வ்யவஹாரமுண்டாகையாலும், அவயவங்களெல்லாம் தனித்தனியே ஆத்மாக்களாமிடத்தில் ஆத்மபூதமாயிருக்கிற பாகத்திலுண்டானஸுகம் அந்யாத்மாவாயிருக்கிற ஜிஹ்வை அறியக்கூடாமையாலும், (க) "దేహస్తావదనాత్మోదృశ్యత్వాద్ఘటవచ్ఛ్రీ। ఆత్మా ఉద్రశ్యోమతో యస్మాత్సృమాం నైవసర్వదా। ప్రత్యక్షేణోపలభ్యస్తే యథైవాత్రఘటాదయః। తస్మాదుపలభ్యతే దేహోప్యతో నాత్మాభవేద్ధ్రువమ్ - தேஹஸ்தாவதநாத்மாபித்ருஶ்யத்வாத்கடவச்சுபே। ஆத்மாத்ருஶ்யோமதோயஸ்மாத்ப்ரமாணைரேவஸர்வதா। ப்ரத்யக்ஷேணோபலப்யந்தேயதைவாத்ரகடாதயஃ। ததோபலப்யதே தேஹோப்யதோநாத்மாபவேத்த்ருவம்" என்று அசக்ஷுர்விஷயமென்று ப்ரமாணங்கள் சொல்லுகையாலே சக்ஷுர்விஷயமான தேஹம் ஆத்மாவாகக்கூடாதென்று சொல்லுகையாலும், நானும் என்னுடைய தேஹமென்றும் அஹமர்த்தபூதனை ஆத்மாவைக்காட்டில் இத(ம)ர்த்தபூதமான தேஹத்தைப் பிரியச்சொல்லுகையாலும் தேஹத்திற்காட்டில் வ்யாவ்ருத்தமென்னுமிடம் ஸித்தம்.

"యోహమద్రాక్షం సోహం స్ప్రృశామి - யோஹமத்ராக்ஷம் ஸோஹம் ஸ்ப்ருஶாமி" என்று தர்ஶநஸ்பர்ஶநங்களிரண்டுக்கும் ஒருவனே கர்த்தாவென்று சொல்லுகையாலும், "నధీచ్ఛుర్వాత్మాకరణత్వాత్ప్రదీపవత్। తథాత్మానభవత్యన్యానీంద్రియాణ్యపిశోభనే - நசைவ சக்ஷுராத்மா கரணத்வாத்ப்ரதீபவத்। ததாத்மா நபவத்யந்யாநீந்த்ரியாண்யபி ஶோபநே" என்று சக்ஷுராதிகளைப்போலே பதார்த்த தர்ஶநத்துக்கு ஹேதுவாகச்சொல்லுகையாலே கரணபூதமான இந்த்ரியங்களிற்காட்டில் கர்த்ருபூதனை ஆத்மா வ்யாவ்ருத்தனென்னுமிடம் ஸம்ப்ரதிபந்நம்.

ஆத்மஸந்நிதியுமுண்டாய் இந்த்ரியங்களுக்கு விஷயஸ்பர்ஶமுமுண்டாயிருக்கச்செய்தேயும் அந்தஃகரணாபாவத்தாலே விஷயஜ்ஞாநநிஷ்பத்தியொழிகையாலே அந்தஃகரணாபேக்ஷையுண்டாகையாலும் "ఆత్మామనోపినభవేత్కరణత్వాత్ప్రదీపవత్ - ஆத்மாமநோபிநபவேத்கர

(க) (உ)

ணத்வாத் ப்ரதீபவத்" என்று ஸ்ம்ருதிகளுக்குக் கரணமாகச் சொல்லுகையாலும் கர்த்தாவான ஆத்மாவுக்குக்கரணத்வம் கூடாமையாலும், பாஹ்யேந்த்ரியங்களினுடைய அபாவத்திலும் ஸ்ம்ருதியுண்டாகையாலே அவை ஸ்ம்ருதிகளுக்குக்கரணமாக மாட்டாமையாலும், இவையொழிய அந்தஃகரணாபேக்ஷையுண்டாகையாலே அந்தஃகரணரூபமான மநஸ்ஸிற்காட்டில் கர்த்தாவான ஆத்மா வ்யாவ்ருத்தன்.

“ తథైవబుద్ధేశ్చ కర్తృకరణత్వంచ శ్రూయతః - ததைவபுத்திஶ்சிக்தஞ்ச கரணத்வம்ச்ருயேரயதஃ" என்று அத்யவஸாயத்துக்கும் தர்ஶநத்துக்கும் புத்திசித்தங்களைக் கரணமாகச் சொல்லுகையாலே இவற்றுக்கு ஆஶ்ரயமான வாத்மா இவற்றிற்காட்டில் வ்யாவ்ருத்தன்.

“ప్రాణోప్యనాత్మావిజ్ఞేయ†స్సుషుప్తేశ్చేతనోయతః-ப்ராணோப்யநாத்மா விஜ்ஞேயஸ்ஸுஷுப்தேஶ்சதநோயதஃ" என்றப்ராணனும் ஆத்மாவன்றென்கையாலும் இதுதான் ஒருவர்க்கு ஶேஷமென்கையாலும் ஜ்ஞாநாஶ்ரயமாகமாட்டாமையாலும் ஜ்ஞாநாஶ்ரயமான ஆத்மா ப்ராணனில் வ்யாவ்ருத்தன்.

ஆசையாலே தேஹேந்த்ரியமநஃப்ராணாதிகளிற்காட்டில் வ்யாவ்ருத்தனென்னுமிடம் ஸம்ப்ரதிபந்நம.

இ(ட)தம் ஶப்தவாச்யமான ஶரீராதிகளை கவர்க்கந்தொடங்கி ப(ஞ)காரமளவாகச்சொல்லி, அஹம்ஶப்தவாச்யமான ஆத்மாவை மகாரத்தாலே சொல்லுகையாலே ஆத்மா அஹம்ஶப்தவாச்யனே; அன்றாகில் பராக(X)ர்த்தத்திற்காட்டில் ஆத்மாவுக்கு பேத(தீக)கமான ப்ரத்யகர்த்தம ஸித்தியாது. அஹம் புத்தி(ர்)கோசரம் அஹங்காரரூபஜடம்; அது ஆத்மத்யோதகமென்கிறவிது ஶாந்தாங்காரமானது ஆதித்யதர்ஶநத்துக்கு ஹேதுவாகமாட்டாதாற்போலே இந்த ஜடரூபமான அஹங்காரம் ஸ்வயம்ஜ்யோதிஸ்ஸான ஆத்மாவைத் த்யோதிப்பிக்கமாட்டா தாகையாலும் ஆத்மா அஹம்புத்திகோசரமாகவேணும்.

ஏவம்பூதமான தேஹாதிவைலக்ஷண்யமும் அஹமர்த்தமும் இவ்வக்ஷரஸ்வபாவத்தாலே சொல்லிற்றாயிற்று.

---

† (பா) సజ్ఞేన.

இதுதான் "మన-జ్ఞానే-மந-ஜ்ஞாநே" என்கிற தா(தா)துவிலே வ்யுத்பந்நமாய் வாச்யமான ஆத்மாவினுடைய (க) "అత్రాయంపురుష స్స్వయఞ్జ్యోతిర్భవతి-அத்ராயம்புருஷஸ்ஸ்வயஞ்ஜ்யோதிர்ப்பவதி" (உ) "జ్యోతిరహమస్మి - ஜ்யோதிரஹமஸ்மி" (௩) "విజ్ఞానఘనఏవ - விஜ்ஞாநகநஏவ" (௪) "విజ్ఞానంయజ్ఞంతనుతే-விஜ்ஞாநம்யஜ்ஞம்தநுதே" இத்யாதி ப்ரமாணஸித்தமாய், த(த)டாதிபதார்த்த ஸத்பாவத்திற்போலே‡ஸம்ஶயமின்றியிலேயிருக்கையாலே ப்ரத்யக்ஷஸித்தமாயிருக்கிற ஜ்ஞாநஸ்வரூபத்தைச் சொல்லுகிறது. இதுதான் அநுகூலமாகப்ரகாஶிக்கையாலே ஆநந்தரூபமாயிருக்குமென்னுமிடம் ஸம்ப்ரதிபந்நம். "అహమిదంజానామినజానామి-அஹமிதம்ஜாநாமி நஜாநாமி" என்கிற ஸவ்யதிரிக்த பதார்த்தஜ்ஞாத்ருத்வ ஸம்ஶயம்போலன்றிக்கே "అహమ్-அஹம்" என்கிற ஸ்வரூபம ஜ்ஞாநாந்தரநிரபேக்ஷமாக நிஸ்ஸம்ஶயமாகத் தோன்றுகையாலே ஸ்வஸ்மைஸ்வயம் ப்ரகாஶமாயிருக்குமென்கிறது. இத்தால், ஆத்மாவினுடைய அநந்யாதீ(தீ)ந ப்ரகாஶகத்வாஹ்லாதகத்வ லக்ஷணமான ஜ்ஞாநாநந்தஸ்வரூபத்வம் சொல்லிற்றாயிற்று.

அநந்தரம், "మను-అవబోధనే-மநு-அவபோதநே" என்கிற தா(தா)துவிலே ஸித்தமாய், (௫) "నహివిజ్ఞాతుర్విజ్ఞాతేర్విపరిలోపోవిద్యతే-நஹி விஜ்ஞாதுர்விஜ்ஞாதேர்விபரிலோபோவித்யதே" (௬) "విజ్ఞాతారమరేకేనవిజానీయాత్-விஜ்ஞாதாரமரேகேநவிஜாநீயாத்" (௭) "జ్ఞోఽతఏవ-ஜ்ஞோத ஏவ" என்று சொல்லுகிற ஜ்ஞாநகுணகத்வம் சொல்லுகிறது. எனக்கு ஜ்ஞாநம்பிறந்தது, நஶித்ததென்று ப்ரத்யக்ஷமாகையாலும், ஜ்ஞாநம்தர்மமல்லவாகில் ஸமஸ்தகயவஸ்த்வாதியிற்சொல்லுகிறதிமாதா(தா)நத்துக்கு விஷயமதர்மியாய், அதினுடைய ஏகரூபத்வத்துக்கு ஹாநிவருகையாலும், ஜ்ஞாநமத(த)ர்மமாகவேணும்.

அநந்தரம், "మాఙ్-మానే-மாங்-மாநே" என்கிற தாதுவிலே பரிமாணாஶ்ரயத்வம் ஸித்தமாய், அந்தப்பரிமாணம் மஹத்பரிமாணமன்று; அணுபரிமாணமென்னுமிடத்தை (அ) "ఏషోఽణురాత్మా-ஏஷோ

(க) ப்ருஹ-௬-௩-௯-   (உ) தை-௯ா-   (௩ ப்ருஹ-௪ ௪-௧௨
(௪) தை-ஆந   (௫) ப்ரு-௬-௩-௩௦   (௬) ப்ருஹ-௪-௪-௧௪
(௭) ப்ரஹ்மஸூத்   (அ) முண்ட-௩-௧௯

‡ "ஆத்மஸத்பாவத்தில்" என்றதிகபாடம்

ணுராத்மா" (க) "வாலாக்ர ஶதபாகஸ்ய ஶததா கல்பிதஸ்ய ச । பாகோ ஜீவ:-வாலாக்ர ஶதபாகஸ்ய ஶததா கல்பிதஸ்ய ச । பாகோ ஜீவ:" இத்யாதிகளாலே சொல்லுகையாலே அணுபரிமாணத்வம் சொல்லுகிறது. உத்க்ராந்தி க(ா)த்யாக(ா)திகள் ப்ரத்யக்ஷமாகையாலும் அணுபரிமாணனாக வேணும். (உ) "ஸோऽநந்த்யாய கல்பதே-ஸோநந்த்யாயகல்பதே" என்று பரமமஹத்பரிமாணபூதனாகவும் சொல்லாநின்றதே யென்னில், அப்போது (ங) "ஆத்மாऽபஹதபாப்மா-ஆத்மாபஹதபாப்மா" என்று சொல்லுகிற ஏகரூபத்வத்துக்கு ஹாநிவருகையாலே மஹத்பரிமாணத்தைச் சொல்லுகிறதன்று. முக்தாவஸ்தையில் திரோதா(ன)நிவ்ருத்திபிறந்து ப்ரகாஶிதமான குணத்தினுடைய ஆநந்த்யத்தைச்சொல்லுகிறது. ஆனால் ஆபாதசூடம் அநுவர்த்திக்கிற ஸுகது:க்காநுபவம் கூடுமோவென்னில், ஸ்வத(ர்)ம்மமான ஜ்ஞாநம் வ்யாப்தமாய் ஸர்வத்ர உண்டான ஸுகது:க்காதிகளை ஸ்வாஶ்ரயமான தர்மிக்கு ப்ரகாஶிப்பிக்கையாலே கூடும். ஆகையால் அணுபரிமாணனே; ஏவம்பூதமான ஜ்ஞாநஸ்வரூபத்வஜ்ஞாநகுணகத்வ அணுபரிமாணத்வங்கள் தா(து)துத்ரயத்தாலும் சொல்லுகிறது.

இந்த ஜ்ஞாத்ருத்வம் குணாந்தரங்களுக்கு முபலக்ஷணமாய் நித்யத்வம் ஏகரூபத்வம் துடக்கமான குணங்களையும் சொல்லுகிறது. (ச) "அஜோ ஹ்யேக:-அஜோஹ்யேக:" (ரு) "நித்யோ நித்யாநாம்-நித்யோநித்யாநாம்" என்று நித்யனாகச் சொல்லுகையாலும், தேஹாந்தரக்ருத கர்மஹேதுகமான ஸுகது:க்காநுபவம் காண்கையாலும், நிஷ்கர்மனானபோது ஜந்மாதிகள் கூடாமையாலும் நித்யனாகவேணும். (உ) "ஆத்மாऽபஹதபாப்மா-ஆத்மாபஹதபாப்மா" என்கையாலே ஏகரூபன். இந்த நித்யத்வ ஏகரூபத்வங்கள் இதினுடைய அர்த்தஸ்வபாவத்தாலே சொல்லிற்று.

ஆக, ஆத்மாவினுடைய ஸ்வரூபஸ்வபாவங்களை அக்ஷரஸ்வபாவத்தாலும், தா(து)துக்களாலும் அர்த்தஸ்வபாவத்தாலும் சொல்லாநின்றுகொண்டு ஆத்மாவுக்கு வாசகமாயிருக்கிறது மகாரம். இதில் ஏகவசநம் ஜாத்யேகவசநமாய், (ரு) "நித்யாநாம் சேதநாநாம்-

(க) ஶ்வே-ரு-அ (உ) ஶ்வே-ரு-அ (ங) வி-பு-உ-கங-ஞ
(ச) தை-நா-கஉ (ரு) ஶ்வே-சு-கக

நித்யாநாம்சேதநாநாம்பஹூநாம்" என்று சொல்லுகிற பத்த(௧) முக்த நித்யாத்மகமான த்ரிவிதாத்மவர்க்கத்தையும் சொல்லுகிறது. ஸுகதுக்காதி வ்யவஸ்தாபேதத்தாலும் ஆத்மாக்கள் அநேகராக வேணும். ஆக, மகாரத்தாலே பகவதநந்யார்ஹ ஶேஷமான த்ரிவிதாத்மவர்க்கமும் சொல்லிற்றாயிற்று.

அநந்தரம் த்ரிகுணத்ரவ்யமான அசித்வர்க்கமும் பகவச்சேஷபூதமாகையாலே, ஶேஷபூதவஸ்துக்களுக்கு கர்மாநுஷ்டாநோபகரணமாயும் கைங்கர்யோபகரணமாயு மிருக்கையாலும், (௨) "யத்தே ஸமதிகச்சந்தி-யஸ்யைதே தஸ்ய தத்தநம்" என்கிற ந்யாயத்தாலே ஶேஷியான பகவானுக்கு ஶேஷமாகையாலும், ஶேஷபூதவஸ்துவாசகமான விப்பதத்திலே அந்த அசித்வர்க்கமும் சொல்லப்படுகிறது.

சிதசித்துக்களிரண்டும் ஶேஷமாயிருக்கச்செய்தே ஸ்வதஶ் ஶேஷத்வவிஸ்ம்ருதியுள்ளது சேதநவஸ்துவாகையாலும், தந்நிவ்ருத்திபூர்வகமாக ஶேஷத்வ ஜ்ஞாநாபேக்ஷையும் அவனுக்காகையாலும், தத்கார்யமான ஶேஷவ்ருத்தி ருசிபூர்வகமான தத்விஷயோபாயஸ்வீகாரம் பண்ணுவானும் சேதநனாகையாலும், ஈஶ்வரனுக்கு ஸ்வபோக(௩) விஷயமாயிருப்பதும் சேதநவஸ்துவாகையாலும், இந்த சேதநனுடைய ஶேஷத்வஜ்ஞாநத்தாலே அசித்தினுடைய ஶேஷத்வமும் ஸித்திக்கையாலும் தத்வாசகமான பதத்தாலே அசித்தை உபலக்ஷிக்கிறது. அங்ஙனன்றிக்கே இதில் ஶப்தம் அசித்தாகையாலே ஶப்தாம்ஶத்தாலே அசித்வர்க்கத்தைச் சொல்லுகிறது. அர்த்தாம்ஶத்தாலே சித்வர்க்கத்தைச் சொல்லுகிறதென்னவுமாம். ஆக, மகாரத்தாலே கீழ்ச்சொன்ன ஶேஷத்வத்துக்கு விஷயமான த்ரிவிதாத்மவர்க்கமும் த்ரிவிதாசித்வர்க்கமும் சொல்லிற்றாயிற்று.

ஶேஷமான வஸ்துக்களை ப்ரதமம் சொல்லாதே வஸ்துகதமான ஶேஷத்வத்தை ப்ரதமம் சொல்லுகைக்கு ஹேதுவென்னென்னில்; வஸ்துதான் ஶேஷத்வேந உத்பந்நமானதாகையாலே ஶேஷத்வத்தை ப்ரதமத்திலே சொல்லி, அநந்தரம் உத்பந்நவஸ்துவேஷத்தைச் சொல்லவேண்டுகையாலும், ஶேஷபூதவஸ்துகத வ்யாபாரா

(௧)

திகளும் ஶேஷ்யதிகமென்னுமிடம் தோற்றுகைக்காகவும், ஶேஷபூதபுருஷனுடைய புருஷார்த்தமும் ஶேஷிப்ரியவிஷயத்வமென்று தோற்றுகைக்காகவும், ஏவம்பூத ஜ்ஞாநாபாவத்தால் ஸ்வவிஷயாரோபிதமான ஸ்வாதந்த்ர்யதாவாநலத்தாலே த(ஃ)ஹ்யமாநமான வஸ்துவை தத்ப்ரதிபடமான ஶேஷத்வஜலத்தாலே ஆற்றவேண்டுகையாலும் ஶேஷத்வத்தை ப்ரதமத்திலே சொல்லி அநந்தரம் தத்விஶிஷ்டமான வஸ்துவைச்சொல்லக் குறையில்லை.

ஆக ப்ரணவத்தாலே ஸர்வகாரணபூதனாய் ஸர்வரக்ஷகனாய் ஶ்ரிய:பதியாய் ஸர்வஶேஷியாய் ஸமஸ்தகல்யாணகுணாத்மகனாய் உபயவிபூதிநாதனாய் ஸர்வஸ்மாத்பரனாய் அகாரவாச்யனான ஸர்வேஶ்வரனுக்கு அநந்யார்ஹஶேஷமான து - தேஹேந்த்ரியாதிவிலக்ஷணமாய் ஜ்ஞாநாநந்தஸ்வரூபமாய் அஹம் ஶப்தவாச்யமாய் ஜ்ஞாநகுணகமாய் ஸ்வயம்ப்ரகாஶமாய் அணுபரிமாணமாய் நித்யமாய் ஏகரூபமாய் அநேகவிதமான ஆத்மவஸ்துவும் அவனுக்கு உபகரணபூதமான அசித்வஸ்துவு மென்றதாயிற்று.

இப் ப்ரணவார்த்தத்தை (க) "கண்ணபுரமொன்றுடையானுக்கு அடியேனொருவர்க்குரியேனோ" என்று திருமங்கையாழ்வாரும் அநுஸந்தித்தருளினார். "கண்ணபுரமொன்றுடையானுக்கு" என்று அகாரார்த்தத்தையும், "ஒருவர்க்குரியேனோ" என்று உகாரார்த்தத்தையும், "அடியேன்" என்று மகாரார்த்தத்தையும். இப்ப்ரணவந்தான் ஶேஷஶேஷிரூபேண ஆத்மபரமாத்மாக்களிருவருடையவும் ஸ்வரூபத்தை ப்ரதிபாதிக்கையாலே ஆத்மஸ்வரூபத்தையும் பகவத்ஸ்வரூபத்தையும் இரண்டையும் சொல்லுகிறது.

எங்ஙனேயென்னில்; அகாரத்திலேறிக் கழிந்த சதுர்த்தீவிபக்தியாலே ஆத்மாவினுடைய ஶேஷத்வத்தைச்சொல்லி, அகாரத்தாலே தத்ப்ரதிஸம்பந்தியைச்சொல்லி, உகாரத்தாலே ததந்யார்ஹதாநிவ்ருத்தியைச்சொல்லி, மகாரத்தாலே ஶேஷமானவஸ்து தேஹேந்த்ரியமந:ப்ராணபுத்திவிலக்ஷணமாய் ஜ்ஞாநாநந்தஸ்வரூபமாய் ஜ்ஞாநகுணகமாய் நித்யமாய் அணுபரிமாணமாய் ஏகஸ்வரூபமாயிருக்குமென்றுசொல்லி, ஆக இப்படி ஆத்மஸ்வரூபத்தை யதா(ரூ)வாக ப்ரதிபாதிக்கையாலே ஆத்மஸ்வரூபம் சொல்லுகிறது.

(க) தி-மொ-அ-க-ா

ஸவிபக்திகமான அகாரத்தாலே பரமாத்மாவினுடைய ஸர்வ காரணத்வ ஸர்வரக்ஷகத்வ ஶ்ரிய:பதித்வ ஸர்வஶேஷித்வங்களைச் சொல்லி, உகாரத்தாலே ஶேஷித்வத்தினுடைய அந்யார்ஹதா நிவ்ருத்தி சொல்லி, மகாரத்தாலே தத்வித்தமானவிஷயத்தைச்சொல்லி ஆக இப்படி பரமாத்மஸ்வரூபத்தை யதாவாகப்ரதிபாதிக்கையாலே பரமாத்மஸ்வரூபம் சொல்லுகிறது.

அகாரத்தாலே ரக்ஷகனைச்சொல்லி மகாரத்தாலே ரக்ஷ்யவஸ்துவைச்சொல்லி † உகாரத்தாலே ரக்ஷ்யரக்ஷகனுடைய அநந்யார்ஹதா ரூபமான லக்ஷணம் சொல்லுகையாலே இப்ப்ரணவத்தாலே உபாயத்தை ப்ரதிபாதிக்கிறது. அகாரத்தாலே ப்ராப்யமான பகவத்ஸ்வரூபத்தைசசொல்லி, மகாரத்தாலே பராப்தாவான ஆத்மஸ்வரூபம் சொல்லி, ஶேஷத்வமானதுஶேஷவ்ருத்தியொழிய ஸித்தியாமையாலே தத்வாசகமான சதுர்த்தியாலே கைங்கர்யத்தைச்சொல்லி, அவதா(தா)ரணத்தாலே (க) "தனக்கேயாக வெனைக்கொள்ளுமீதே" என்கிற கைங்கர்யத்தைச் சொல்லுகையாலே பரணவத்தாலே ப்ராப்யஸ்வரூபத்தை ப்ரதிபாதிக்கிறது.

அகாரத்தாலே ஶேஷியான ப்ரஹ்மஸ்வரூபத்தைச்சொல்லி மகாரத்தாலே ஶேஷமான ஆத்மஸ்வரூபம்சொல்லி அகாரத்தில் தா(தா)துவாலே உபாயஸ்வரூபம்சொல்லி அதில் சதுர்த்தியாலே புருஷார்த்தஸ்வரூபம்சொல்லி அதிலே அந்யஶேஷத்வஶங்காரூபேண விரோதிஸ்வரூபம் சொல்லுகையாலே ப்ரணவத்தாலே அர்த்தபஞ்சகமும் சொல்லுகிறது. ஆக ப்ரணவத்தாலே பகவத்ஸ்வரூபமென்ன, சித்ஸ்வரூபமென்ன, தத்ஸம்பந்தஸ்வரூப விஶேஷமென்ன, உபாயஸ்வரூபமென்ன, ப்ராப்யஸ்வரூபமென்ன, இத்யாதிகளான ஸகலார்த்தங்களும் சொல்லப்படுகிறது. ஆகையாலே ஸகல ஶாஸ்த்ரஸங்க்ரஹமென்னுமிடம் ஸம்ப்ரதிபந்நமாகச் சொல்லிற்றாயிற்று.

அநந்தரம் உகாரவிவரணமான நமஶ்ஶப்தம் இப்படி ஶேஷபூதனான ஆத்மாவினுடைய அஹங்கார மமகாரநிவ்ருத்தியைப் பண்ணுநின்றுகொண்டு ஸ்வஸ்வாதந்த்ர்ய நிவ்ருத்தியையும் தத்வித்தமான அந்யஶேஷத்வாபாவத்தையும் ஸ்வகதமான ஸ்வாமித்வ

(க) திருவாய்-உ-க-ச † (பா) சதுர்த்தியாலே

சேஷித்வங்களினுடைய ராஹித்யத்தையும் தத்பலிதமான பார தந்த்ர்யத்தையும் தத்பர்யவஸாந பூமியான ததீயசேஷத்வத்தையும் பாரதந்த்ரஸ்வரூபத்துக்கு* அநுரூபமான உபாயத்தையும் சொல்லுகிறது.

ப்ரதமாக்ஷரமான அகாரத்தை ப்ரதமம் விவரியாதே ப்ரதமம் உகாரவிவரணமான நமஸ்ஸப்தமாகைக்கடி யென்னென்னில்; இம மந்த்ரந்தான் ஆத்மஸ்வரூபயாதாத்ம்ய ப்ரதிபாதந பரமாகையாலே உகாரோக்தமான பகவத்வ்யதிரிக்தாநய சேஷத்வநிவ்ருத்திபர்த்ரத்தாலே ஸ்வரூபயாதாத்ம்யபூர்த்தி பிறவாமையாலே தத்பூர்த்திஹேதுவான ஸ்வஸ்வாதந்த்ர்ய நிவ்ருத்திபண்ணுகை அநந்தரம ப்ராப்தமாகையாலே தத்வாசகமான நமஸ்ஸப்தம முற்படவேண்டுகையாலும், ஸ்வரூபத்தை ததீயசேஷத்வ பர்யந்தமாக வநுஸந்தித்து, ததநுரூபபுருஷார்த்தபரிக்ஷை பண்ணவேண்டுகையாலே ததீயசேஷத்வ வாசகமான நமஸ்ஸப்தம் புருஷார்த்த ப்ரார்த்தநாவாசகமான நாராயணபதத்துக்கு முன்னேயாகவேண்டுகையாலும், இப்பதத்திற் சொல்லுகிற ஸ்வரூபாநுரூபோபாயவரணம் ஸ்வஸ்வதந்த்ர்ய நிவ்ருத்திபூர்வகமாக வேண்டுகையாலும ப்ரணவத்திற் சொல்லுகிற ப்ரகாரத்வ ரக்ஷ்யத்வ சேஷத்வ ததநந்யார்ஹத்வ ஜ்ஞாநாநந்தஸ்வரூபத்வ ஜ்ஞாநகுணகத்வாதிகளுடைய ஸ்வார்த்தத்தை ஸ்வாதீநத்தை இவற்றினுடைய நிவ்ருத்தியையும மேலே நாராயணபதத்திற்சொல்லுகிற புருஷார்த்தஸ்வரூப கைங்கர்யத்தில்வருகிற ஸ்வகீயத்வ ஸ்வஸ்வாரஸ்யாதி நிவ்ருத்தியையும பண்ணும் போதைக்கு காகாக்ஷிந்யாயததாலே இதுநடுவே கிடக்கவேண்டுகையாலும் ப்ரதமம் உகாரவிவரணமான நமஸ்ஸப்தமாகக்கடவது.

இந்த நமஸ்ஸப்தந்தான் "ந" என்றும், "ம"என்றும இரண்டு பதமாயிருக்கும. இதில மகாரம்—"மந-ஜ்ஞாநே" என்கிற தா(து) துவிலே ஷஷ்ட்யந்தவசநமாய், (து)தாத்வர்த்தம் ஜ்ஞாத்ருத்வமாகையாலே எனக்கென்கிற வர்த்ததத்துக்கு வாசகமாகிறது. இங்கு விஷயநியமம் பண்ணுமையாலே (க) "చేతనస్యయదామమ్యం స్వస్మిన్ స్వీయే చవస్తుని। మమఇత్యక్షరద్వంద్వం తేదామమ్యస్యవాచకమ్-சேதநஸ்யயதாமமயம் ஸ்வஸ்மிந்ஸ்வீயேசவஸ்துநி । மமஇத்யக்ஷரத்வந்த்வம்ததாமம்யஸ்ய

(க) அஹி-ஸம்ஹி-௫௨-௨௦

வாசகம்'' "అనాదివాసనారూఢమిథ్యాజ్ఞాననిబన్ధనా। ఆత్మాత్మీయపదార్థస్థాయా స్వాతన్త్ర్యస్వతామతిః-அநாதிவாஸநாரூடமித்யாஜ்ஞாநநிபந்தநா । ஆத்மாத்மீயபதார்த்தஸ்தாயா ஸ்வாதந்த்ர்யஸ்வதாமதிஃ" என்கிறபடியே அநாதிகாலஸஹிதமான விபரீதஜ்ஞாநமடியாக வுண்டாமதாய், "மமாஹம், மமேதம்" என்றுகொண்டு ஸ்வதந்த்ரமாகவும் ஸ்வகீயமாகவும் கிடக்கிற மமதாமூலக ஸ்வரூபவிருத்தமாய் நிவர்த்தியமான அஹங்காரமமகாரங்களைச் சொல்லுகிறது.

நிஷேதவாசியான நகாரம் அத்தை நிஷேதிக்கிறது (௧) "నాహంమమ స్వతన్త్రోహం నాస్మీత్యస్యార్థఉచ్యతే। నమే దేహాదికంవస్తు శేషఃపరమాత్మనః। ఇతిబుద్ధ్యానివర్తన్తే తాస్తాస్స్వీయామనీషితాః। అనాదివాసనాజాతైరోఘైస్తైస్తైర్వికల్పితైః। రూపితంయద్దృఢంచిత్తే స్వాతన్త్ర్యస్వత్వధీమయమ్। తత్తద్వైష్ణవసార్వాత్మ్యప్రతిబోధసముత్థయా। నమఇత్యనయావాచానఞాస్వస్మాదపోహ్యతే- நாஹம் மம ஸ்வதந்த்ரோஹம் நாஸ்மீத்யஸ்யார்த்தஉச்யதே । நமே தேஹாதிகம்வஸ்து ஶேஷஃபரமாத்மநஃ । இதிபுத்த்யாநிவர்த்தந்தே தாஸ்தாஸ்ஸ்வீயாமநீஷிதாஃ । அநாதிவாஸநாஜாதைரோகைஸ்தைஸ்தைர்விகல்பிதைஃ । ரூபிதம்யத்த்ருடம்சித்தே ஸ்வாதந்த்ர்யஸ்வத்வதீமயம் । தத்தத்வைஷ்ணவஸார்வாத்ம்யப்ரதிபோதஸமுத்தயா । நம இத்யநயாவாசாநஞாஸ்வஸ்மாதபோஹ்யதே" என்றும் (௨) 'யானே நீயென்னுடைமையும் நீயே" என்றும் சொல்லுகிறபடியே ஸ்வஸ்வகீய பகவச்சேஷத்வத்தை த்ருடீகரியாநின்றுகொண்டு ஸ்வாஹங்கார மமகாரநிவ்ருத்தியைப் பண்ணுகிறது.

இதில் அஹங்காரநிவ்ருத்தியாலே † ஸ்வஶேஷத்வபாவம் சொல்லிற்று. மமகாரநிவ்ருத்தியாலே ஸ்வாமித்வ ஶேஷித்வங்களிலுண்டான ராஹித்யமும் ஸ்வகீய வ்யாபாராதிகளுடைய ஸ்வாதீநதாநிவ்ருத்தியும் பலிக்கையாலே, இதநாலே ஸ்வாதந்த்ர்ய ஸ்வஸ்வாதந்த்ர்யங்களினுடைய நிவ்ருத்தி சொல்லிற்று. ஆக நமஶ்ஶப்தத்தாலே (௩) "ద్వ్యక్షరస్తు భవేన్మృత్యుః-த்வ்யக்ஷரஸ்து பவேந்ம்ருத்யுஃ" (௪) 'మమేతి త్ర్యక్షరో మృత్యుః-மமேதித்ர்யக்ஷரோம்ருத்யுஃ" என்றும், (௨) "யானே யென்றனதே யென்றிருந்தேன்" என்றும், ஆத்மாவுக்கு நாஶகமான

---

† ஶேஷத்வம்.

(௧) அஹிர்ஸம்ஹி. (௨) திருவாய்-௨-௯-௯ (௩) பார-ஶாந்தி-௧௩.

அஹங்கார மமகாரங்களை நிவர்த்திப்பித்து, (க) "త్ర్యక్షరం బ్రహ్మణః పదమ్-த்ர்யக்ஷரம்ப்ராஹ்மணஃபதம்" (உ) "నమమేతిచశాశ్వతమ్ - நமமேதி ச ஶாஶ்வதம்" (ரு) "అహమపినమమ-భగవతఏవాహమస్మి-அஹமபி நமம-பகவத ஏவாஹமஸ்மி" (ச) "యాఃకాశ్చనకృతయోమమభవన్తి-తాసుమమతా నాస్తి-భగవతఏవతాః-யாஃகாஶ்சந க்ருதயோ மம பவந்தி-தாஸு மமதா நாஸ்தி பகவத ஏவதாஃ" என்று ஆத்மோஜ்ஜீவநமாயிருக்கிற ஶேஷத்வபாரதந்த்ர்யங்களைச் சொல்லுகிறது.

ஆத்மஸ்வரூபம் ஶேஷமாய் ஜ்ஞாதாவாயிருக்கையாலே ப்ரதமம் ஶேஷத்வவாசியானபதம உதித்தாப்போலே அஹங்காராதிகள் நிஷேத்யமாயேயிருக்கையாலே இங்கும் நிஷேத்யத்துக்கு முன்னே நிஷேதம் முற்படுகிறது.

கீழே அநந்யார்ஹ ஶேஷத்வம் சொன்னபோதே ஸ்வஸ்வாதந்த்ர்யம் நிவ்ருத்தமன்றோ வென்னில்,

பார்யைக்கு பர்த்ரு ஶுஶ்ரூஷணம் ஸ்வரூபமாய், அது அவனுக்கு போக்யமாயிருக்கச்செய்தேயும் போக(భోగ)ரஸத்திலே தனக்கும் அந்வயமுண்டாய், (ரு) "పతింయానాతిచరతిమనోవాక్కాయకర్మభిః। సాభర్తృలోకానాప్నోతిసద్భిస్సాధ్వీతిచోచ్యతే - பதிம்யா நாதிசரதி மநோ வாக்காயகர்மபிஃ । ஸா பர்த்ருலோகாநாப்நோதி ஸத்பிஸ்ஸாத்வீதி சோச்யதே" என்று அந்த ஶுஶ்ரூஷணந்தான் பர்த்ருலோகப்ராப்திக்கு ஸாதநமாயிருக்கையாலே ஶேஷபூதையானவளுக்கு ஸ்வாதந்த்ரயம் அநுவ்ருத்தமாயிற்று.

உபாஸகனுக்கு பகவச்சேஷத்வஜ்ஞாநம் பிறந்து கைங்கர்யருசியும் நடந்து போராநிற்கச்செய்தேயும் ப்ராப்ய ப்ராப்திஸாதநம் ஸ்வப்ரவ்ருத்திரூப கர்மாதிகளாகையாலே பகவச்சேஷமான ஸ்வரூபத்துக்கு ஸ்வாதந்த்ர்யம் அநுவ்ருத்தமாய்ப் போந்தது.

அங்ஙனன்றியே ஸ்வரூப புருஷார்த்தங்கள் ஸ்வ(గ)தமல்லாத வோபாதி ஸ்வரக்ஷணார்த்த வ்யாபாரமும் ஸ்வகதமல்லவென்றதாயிற்று. "அது ஸ்வரூபம் பரகதம், விரோதிபரகதம், புருஷார்த்தம் பரகதமென்கிற ப்ரதிபத்திஸ்வகதம், அதுவும் பராதீநம்" என்கிற ஆச்சான்பிள்ளைவார்த்தை இவ்விடத்தில் அநுஸந்தேயம்.

(க) பரா-ஶாந்தி-கக   (உ)   (ரு)
(ச)   (ரு)

அதவா, ஶேஷமானவஸ்து ஜ்ஞாதாவாயிருக்குமென்று மகாரத்தாலே சொல்லுகையாலே அந்த ஜ்ஞானத்தாலே ஹிதாஹிதவிஷயவிகாரமுண்டாய், அத்தாலே ஹிதரூபக்ரியை பண்ணிக்கொண்டு நமஸ்ஸப்தம் அதடியாகவருகிற ஸ்வாதந்த்ர்யத்தை நிஷேதிக்கிறதென்னவுமாம்.

ஆகையாலே அங்கு பகவச்சேஷத்வ விரோதியான ஸ்வாதந்த்ர்யத்தினுடைய நிவ்ருத்தியைப் பண்ணிற்று. இங்கு அநந்யஶேஷத்வத்தினுடைய ஸ்வாதீநதாநிவ்ருத்தியையும் ஶேஷிபூத பகவத்ரக்ஷகத்வ விரோதியான ஸ்வாதந்த்ர்யத்தினுடைய நிவ்ருத்தியையும் பண்ணுகிறது.

ஶேஷபூதனை சேதநன் ஸ்வரக்ஷணத்தினின்றும் நிவ்ருத்தனானால் ஶேஷியான விஸ்வான் ரக்ஷகனுடனாமாகையாலே ஈஸ்வரனுடைய உபாயபாவம் ஆர்த்தமாகத்தோற்றுகிறது, ஆக இப்படி சேதநஸ்வரூபம் பகவதேகஶேஷமுமாய் பகவதேகரக்ஷ்யமுமாயிருக்கையாலே பகவத்கதமான குணங்களோபாதி ப்ராப்யத்வ ப்ரதிபத்தி பண்ணலாயிருக்கிறது. அவன் குணங்களோபாதி அவன் அபிமாநத்தே கிடக்கையாலே;

இவ்வர்த்தத்தை (க) "அவரைப் பிராயந்தொடங்கியென்றுமாதரித்தெழுந்தவென் தடமுலைகள் துவரைப்பிரானுக்கே சங்கற்பித்துத் தொழுதுவைத்தேன்" என்று நாய்ச்சியாருமருளிச்செய்தார். (உ) "ఇచ్ఛాత ఏవ తవ విశ్వపదార్థసత్తా నిత్యం ప్రియాః తవతు కేచన తే హి నిత్యాః। నిత్యం త్వదేకపరతన్త్రనిజస్వరూపా భావత్కమఙ్గళగుణా హి నిదర్శనం నః- இச்சாத ஏவதவ விஸ்வபதார்த்தஸத்தா நித்யம் ப்ரியாஸ்தவது கேசந தேஹி நித்யா:। நித்யம்த்வதேகபரதந்த்ரநிஜஸ்வரூபா பாவத்கமங்களகுணாஹி நிதர்ஶநம்ந:" என்று பகவத்ப்ரீதிவிஷயபூதராய்க்கொண்டு ததீய(த்)மாநாந்தர்ப்பூதரானவர்கள் அவன் குணங்களோபாதி ப்ராப்யபூதரென்னுமர்த்தத்தை ஆழ்வானுமருளிச்செய்தார். குணங்களோபாதி பரதந்த்ரர்களாகச் சொல்லுகையாலே அவனுக்கு இஷ்டவிநியோகார்ஹரென்னுமிடம் சொல்லிற்றாயிற்று. இஷ்டவிநியோகார்ஹத்வமாவது - அவன் கொடுத்தார்க்கு ஸ்வம்மாம்படியிருக்கையிறே. அப்போதிறே பாரதந்த்ர்யஸித்தியும். ஆகையாலே (௩) "அடி

(க) நா·தி-௧-௪ (உ) வை-ஸ்த·௩௪ (௩) அமல ௧.

யார்க்கென்னை யாட்படுத்த விமலன்" என்றும், (௧) "యోఽహ్రీశిర్వహుమా వక్ష్యమయ్యయోధ్యానివాసినామ్। మత్ప్రియార్థం విశేషేణ రాసేనావిశ్వతామ్-யாப்ரீதிர் ஹூமாநஞ்சமப்யயோக்யாநிவாஸிநாம் | மத்ப்ரியார்த்தம் விஶேஷேண பாகேஷு நிவேஶ்யதாம்" என்றும் சொல்லுகிறபடியே ஶேஷிபூத பகவத்ப்ரீதமாய் ஶேஷபூத சேதநபாரதந்த்ர்ய பூர்த்திஹேதுவாயிருக்கிற ததீயஶேஷத்வமும் இப்பதத்திலே சொல்லிற்றாயிற்று.

பகவச்சேஷத்வபூர்த்தி ததீயஶேஷத்வத்தாலேயாகில், அது கீழ்ச்சொன்ன பகவதநந்யார்ஹஶேஷத்வத்தோடு விருத்தமாகாதோவென்னில்; இந்த ததீயஶேஷத்வம் ஶேஷியான ஈஶ்வரனுடைய நியோகநிபந்தநமாய்க்கொண்டு ஶேஷத்வகார்யமாய் வருகிறதாகையாலே, பதிவ்ரதையானவள் பர்த்ருநியோகத்தாலே தத்பந்துஶுஶ்ரூஷணம் பண்ணினால் பர்த்ருப்ரியகரமாய்க்கொண்டு பாதிவ்ரத்யாபிவ்ருத்தி(ஹே)துமாமாபோலே அநந்யார்ஹஶேஷத்வாபிவ்ருத்தி(ஹே)ஹேதுவாமத்தொழிய ததவிருத்தமாகாது. ஆனாலும், (௨) "క్షేత్రజ్ఞః ప్రకృత్య స్వస్య-உத்தம:புருஷஸ்த்வந்ய:" என்கிற நடயத்தாலும், ஈஶ்வரன், (௩) "மனனுணர்வளவிலன், பொறியுணர்வவையிலன்" (௪) "இல்லது முள்ளது மல்லதவனுரு" என்கிறபடியே சேதநாசேதநவிஸஜாதீயனாகையாலும், ததீயரோகிலும் அநயத்வம் வாராதோவென்னில.(௫) "ఆనన్యార్హ న్యస్వ-அநந்யபரஸிந்தயந்த:" என்கிறபடியே இவர்கள்தான் அவனுக்கு அப்ருதக்ஸித்த விஶேஷணஜ்ஞாநவான்களாய்க்கொண்டு அநந்யராயிருக்கையாலும் (௬) "జ్ఞానీత్వాత్మైవ-ஜ்ஞாநீத்வாத்மைவ" என்றும், (௭) "பத்தராவியை" என்றும், ததீயஶேஷத்வபர்யந்தமான தச்சேஷத்வஜ்ஞாநமுடையவர்கள் ஸர்வாத்மபூதனை தனக்கும் ஆத்மபு(பூ)தராகச் சொல்லுகிற க்ருஷ்ணைபாயநதாலே ஆத்மபரீங்களுக்கு அநயத்வமொராது.

இந்த ததீயஶேஷத்வம் (அ) "స్వేచ్ఛయోపశేషస్య తాదధీన్యఘటోత్తమః। భగవద్భక్తశేషత్వం స్వేచ్ఛయాపిస్వేచ్ఛవేత్-" அவேச்சயைவாப்ரஸ்யதா

(௧) ரா-அயோ- (௨) கீ-௧௫-௧௮ (௩) தி-வாய்-௧-௧-௨.
(௪) தி-வாய்-௧-௧-௪ (௫) கீ-௯-௨௨ (௬) கீ-௭-௧௮
(௭) தி-மொ-௧௦-௧-௮ (அ)

ததீயபலார்த்தந: | பகவத்பக்தஶேஷத்வம் ஸ்வேச்சயாபிக்வசித்ப வேத்" என்கிறபடியே ஶேஷபூதனை தன்னுடைய அதிசயமானதல்லாதாப்போலே ஶேஷபூதப்ரதிஸம்பந்தி நியோகாதிசமாக வன்றிக்கே, (க) "ఇతిస్వేచ్ఛయా దేవస్స్వభక్తవిషయే ప్రభుః । ఆత్మాత్మీయస్య సర్వస్య సఙ్కల్పయతి శేషతామ్ ॥ అన్యోన్యశేషభావోఽపి పరస్వాతన్త్ర్యసమ్భవః । తత్తదాకారభేదేన యుక్త ఇత్యుపపాదితమ్- இதிஸ்வேச்சயாதேவ ஸ்வபக்தவிஷயே ப்ரபு: | ஆத்மாத்மீயஸ்யஸர்வஸ்யஸங்கல்பயதிஶேஷதாம் | அந்யோந்யஶேஷபாவோபி பரஸ்வாதந்த்ர்யஸம்பவ: | தத்ததாகாரபேதேந யுக்தஇத்யுபபாதிதம்" என்கிறபடியே ஶேஷியான ஸர்வேஶ்வரனுக்கு ப்ரீதிவிஷயபூதரானவர்களைப்பற்ற தத்ப்ரேரிதமாய்க்கொண்டு வந்ததாகையாலே இஷ்டவிநியோகார்ஹதாலக்ஷணமான அநந்யார்ஹ ஶேஷத்வ கார்யமித்தனையொழிய அத்தோடு விருத்த(த்த)மன்று.

ஸ்வப்ரியவிஷயபூதரைப்பற்ற ஶேஷபூதசேதநரை ஶேஷமாக்கி அதடியாகத்தான் ப்ரியதமனாயிருக்கு மென்கையாலே தத்ப்ரீதியே புருஷார்த்தமாயிருக்கும்; அவர்களுக்கு அந்தப்ரீதி ஔபாதிகமாகமாட்டாது. அதுதானே ப்ரயோஜநமாமித்தனை யாகையாலே ததீயஶேஷத்வம் நிருபாதிகமாகக்கடவது.

அங்ஙனன்றியிலே பகவச்சேஷத்வம்போலே ஸ்வத: வருகையன்றிக்கே பகவத்ப்ரேரிதமாய்க்கொண்டு வருகையாலே ஔபாதிகமென்னவுமாம். ப்ரதிஸம்பந்தி விஷயங்களினுடைய புத்யதிசமாக ஏககாலீநமாக ஏகாஶ்ரயஸ்தமாய் வருகிற ஶேஷஶேஷிபாவம் ஆஶ்ரயபேதேந வுண்டாகிறதாகையாலே அந்யோந்யாஶ்ரய தோஷமில்லாமையாலே இந்த ததீயஶேஷத்வம் உபபந்நமென்றதாயிற்று.

ஆக இந்த நமஶ்ஶப்தத்தாலே அஹங்காரமமகார நிவ்ருத்தியும், நிவ்ருத்தமான ஸ்வரூபத்தினுடைய அத்யந்தபாரதந்த்ர்யமும் பாரதந்த்ர்ய காஷ்டையான ததீய ஶேஷத்வமும் பாரதந்த்ர்யாநுரூபமான உபாயமுமாகிற இந்த நாலர்த்தமும் சொல்லிற்று.

ஆனாலும் இது அநந்யஶரணத்வ ப்ரதாநமாயிருக்கும்; எங்ஙனேயென்னில்; கீழே ஆர்த்தமாக உபாயபாவம் சொல்லாநிற்கச்

(க)

செய்கையும் அவ்வளவில் பர்யவஸியாதே, (க) "యశ్చదేవో మయాదృష్టః పురాపద్మాయతేక్షణః । సఏషపృథుదీర్ఘాక్షస్సమ్బన్ధీతేజనార్దనః । సర్వేషామేవ లోకానాంపితామాతాచమాధవః । గచ్ఛధ్వమేనంశరణం శరణ్యంపురుషర్షభాః. யஶ்சதேவோமயாத்ருஷ்டஃ புராபத்மாயதேக்ஷணஃ । ஸஏஷப்ருது தீர்க்காக்ஷஸ்ஸம்பந்தீதேஜநார்தநஃ । ஸர்வேஷாமேவலோகாநாம் பிதாமாதாசமாதவஃ । கச்சத்வமேநம்ஶரணம்ஶரண்யம்புருஷர்ஷபாஃ' என்று ஸர்வலோகங்களுக்கும் ப்ரியஹிதங்களை நடத்திக்கொண்டு போருவாரொருவனாகையாலே எல்லார்க்கும் மாதாவுமாய் பிதாவுமாய் (உ) "உயிர்க்கெல்லாம் தாயாயளிக்கின்ற தண்டாமரைக்கண்ணன்" என்கிறபடியே அந்த ப்ரியஹிதங்களைகளெல்லாம் தோன்றும்படி பத்மாயதேக்ஷணனாயிருப்பான் யாவனொருவன்; அவனொரு தேவன் முன்பென்னாலே காணப்பட்டான்; அந்த ஜநார்த்தனன் ப்ருதுதீர்க்காக்ஷனாய்க்கொண்டு உங்களுக்கு ஸம்பந்தியாயிருக்கிறான்; அவனைச் சரணம்புகுருங்கோளென்று உபதேசிக்க, அநந்தரமேயிலே (ங) "ఏవముక్తాస్త్రయః పార్థాయమౌ చ భరతర్షభ । ద్రౌపద్యాసహితాస్సర్వేనమశ్చక్రుర్జనార్దనమ్- ஏவமுக்தாஸ்த்ரயஃபார்த்தாயமௌசபரதர்ஷப! த்ரௌபத்யாஸஹிதாஸ்ஸர்வே நமஶ்சக்ருர்ஜநார்த்தநம்" என்றிப்படி சொல்லப்பட்ட பாண்டவர்களைவரும் த்ரௌபதியோடே கூடிக்கொண்டு நமஸ்ஸைப்பண்ணினார்களென்கிற ஸ்தாநப்ரமாணத்தாலும் உபாயவாசகமாகச் சொல்லுகையாலும்,

(ச) "పఞ్చానాం కారణానాం హి పఞ్చమః ప్రధానముచ్యతే । విసర్గః పరమేశస్తు తత్రాఙ్గో'యం నిరూప్యతే । అనాదిః పరమేశో యశ్శక్తిమానచ్యుతః ప్రభుః । తస్మాత్పఞ్చమః ప్రధానో'యం పఞ్చసమనానామవాన் - பஞ்சாங்கா । உத்திஷ்டாஃபஞ்சாங்கா உதீர்யதே । ஸர்க்கஃபரமேஸ்வரஸ்யார்த்தோயம்நிரூப்யதே । அநாதிஃபரமே ஶோயஶ்ஶக்திமாநச்யுதஃப்ரபுஃ । தத்ப்ராப்தயேப்ரதாநோயம்பஞ்சாங்கமாநவாந்" என்று பஞ்சப்ராப்திக்கு கர்மஜ்ஞாநாதிகளிற்காட்டில் ப்ரதாநோபாயமாக பகவத்விஷயத்தைச் சொல்லுகிறது நமஶ்ஶப்தமென்று நிர்வசி(ஃ)க்கையாலும், இவ்வுபாயாங்கமான ஸ்வப்ரவ்ருத்தி த்யாகத்தை ஸ்வஸ்வாதந்த்ர்ய நிவ்ருத்திமுகேந இந்த நமஶ்ஶப்தத்திலே சொல்லுகையாலும் இந்த நமஶ்ஶப்தம் அநந்ய ஶரணத்வ ப்ரதாநமாகக்கடவது.

(க) பா-ஸபா-ராஜஸூ (உ) தி-மொ-எ-௪ (ங) பார-ஸபா (ச) அஹிர்ப்பு-ஸ

ஆக நமஸ்ஸப்தத்தாலே ஸ்வரூபவிருத்த(ஷ்)மான அஹங்கார மமகாரங்களினுடைய நிவ்ருத்தியும், நிவ்ருத்தமான ஸ்வரூபத்தினுடைய அத்யந்தபாரதந்த்ர்யமும், இந்தப் பாரதந்த்ர்ய காஷ்டையான ததீயசேஷத்வமும், பாரதந்த்ர்யத்துக்கு அநுரூபமான உபாயமும் சொல்லிற்றாயிற்று.

ஆக ப்ரணவத்தாலே ஸ்வரூபம் சொல்லி நமஸ்ஸப்தத்தாலே ஸ்வரூபாநுரூபமான உபாயம் சொல்லிற்றாயிற்று.

அநந்தரம் அகாரவிவரணமான நாராயணபதம்-பகவச்சேஷபூதனாய் பகவதேகரக்ஷ்யனுமாயிருந்துள்ள ஆத்மாவுக்கு தத்ரூப புருஷார்த்தஸ்வரூபமான கைங்கர்யப்ரார்த்தனையைச் சொல்லக்கடவதாகக்கொண்டு, தத்ப்ரதிஸம்பந்தியாய் தச்சேஷியான சேஷித்வத்துக்குக் காரணமான ஸர்வாதா(ர)த்வ ஸர்வவ்யாபகத்வ ஸர்வாந்தர்யாமித்வ ஸர்வரக்ஷகத்வ ஸர்வசரீரித்வாதிகளையுடையவனாய் அநுபாவ்யகுணஸமுத்ரனாய் உபாயோபேயபூதனாய் ஹேயப்ரத்யநீகத்வ கல்யாணைகதானத்வ விசிஷ்டனாய் ஸ்ரீயப்பதியாய் ஸர்வநியந்தாவாய் ஸர்வகாரணனான ஸர்வேச்வரனைச் சொல்லுகிறது.

அகாரத்திற்சொன்ன ஸர்வரக்ஷகத்வத்துக்கு விஷயமான ரக்ஷ்யாம்சத்தைச் சொல்லுகையாலும் நாராயணபதத்தில் ஸமாஸத்வயத்தாலும ரக்ஷணப்ரகாரத்தைச் சொல்லுகையாலும் அகாரவிவரணமாகிறது நாராயணபதம். "நார" என்றும், "அயந" என்றும் இரண்டுபதமாய் மேல் சதுர்த்திவிபக்தியுமாயிருக்கும். அதில் நாரபதம் "நர" என்றும்; "நார" என்றும "நாரா:" என்றுமாய் ஸ்வரூபேணவும் ப்ரவாஹரூபேணவும் நித்யமான ஸகலபதார்த்தங்களையும் சொல்லுகிறது.

எங்ஙனேயென்னில், ரேப(ர)ம் "ரிங்-க்ஷயே" என்கிற தா(து)விலே விக்ருதமாய் "ர" என்றுபதமாய், க்ஷயிஷ்ணுக்களான வஸ்துக்களைச் சொல்லி, நகாரம் அதனை நிஷேதித்து "நர" என்று நித்யபதார்த்தத்தைச் சொல்லுகிறது. க்ஷயப்ரஸங்க நிஷேதமுகேந நித்யத்வம் சொல்லுகையாலே ப்ரவாஹரூபேண நித்யங்களான பதார்த்தங்களும் இந்த நாரபதத்தாலே சொல்லுகிறது.

யஸ்ய ஸ: நாராயண:" என்று பஹுவ்ரீஹியாய், ஸ்வவ்யதிரிக்த ஸமஸ்த வஸ்துக்களிலும் அநுப்ரவிஷ்டனைக்கொண்டு ஆகாரமாகிகளைப் போலே ஸ்வரூபத்தாலே வ்யாபிக்கையன்றிக்கே ப்ரதிபதார்த்தம் யாவத்ஸ்வரூபம் பரிஸமாப்ய ஆத்மதயா வ்யாபித்து நின்று நியமிக்குமென்று பீடக்கநயமே சொல்லுகிறது.

யதா கப்யாஸம் புண்டரீகமேவமக்ஷிணீ ! மஹாரஜதம் வாஸ:" என்று ஆதித்யமண்டலத்தின் நடுவே ஹிரண்யனான புருஷன் காணப்படா நின்றான்; ஆபாதசூடம் ஹிரண்யவர்ணனாயிருக்கிற அவனுக்கு அப்போதலர்ந்த செவ்வித்தாமரைப்பூப்போலேயிருக்கிற திருக்கண்கள் திருப்பரியட்டம் பொன்னிறத்த வாடையாயிருக்குமென்றும், (௧) "ధ్యేయస్సదా సవితృమణ్డలమధ్యవర్తీ నారాయణస్సరసిజాసనసన్నివిష్టః । కేయూరవాన్ మకరకుణ్డలవాన్ కిరీటీ హారీ హిరణ్మయవపుర్ధృతశఙ్ఖచక్రః - த்யேயஸ்ஸதா ஸவித்ருமண்டலமத்யவர்த்தீ நாராயணஸ்ஸரஸிஜாஸநஸந்நிவிஷ்ட: ! கேயூரவாந்மகரகுண்டலவாந்கிரீடீ ஹாரீ ஹிரண்மயவபுர்த்ருதஶங்கசக்ர:" என்று ஆதித்யமண்டலாந்தர்வர்த்தியாய்ச் செவ்வித்தாமரைப் பூவை ஆஸநமாகவுடையனாய்த் தோள்வளையும் குழையும் திருச்செய்யமுடியுமாரமுமுடையனாய் திகழும் பொன்மேனியுமாய் நிறபானாய், ஶங்கசக்ரதாரியான நாராயணன் த்யேயனென்கிற விக்ரஹத்தோடே, (௨) "యత్తదద్రేశ్యమగ్రాహ్యమగోత్రమవర్ణమచక్షుశ్శ్రోత్రంతదపాణిపాదం నిత్యం విభుం సర్వగతం సుసూక్ష్మం యద్భూతయోనిం పరిపశ్యన్తి ధీరాః - யத்தத்தேஶ்யமக்ராஹ்யமகோத்ரமவர்ணமசக்ஷுஶ்ஶ்ரோத்ரம் ததபாணிபாதம் நித்யம் விபும் ஸர்வகதம் ஸுஸூக்ஷ்மம் யத்பூதயோநிம் பரிபஶ்யந்தி தீரா:" என்று சக்ஷுரிந்த்ரியக்ராஹ்யமின்றிக்கே மாநஸஜ்ஞாநவேத்யமுமின்றிக்கே நாமவர்ணரஹிதமுமாய் சக்ஷுஶ்ஶ்ரோத்ர பாணிபாதரஹிதமாய் நித்யமாய் அநவச்சிந்நபரிமாணமாய் ஸர்வவ்யாப்தமாய் அதிஸூக்ஷ்மமாய் ஸத்தாயோகி ஸகலபதார்த்தங்களுக்கும் காரணமாயிருக்கும் வஸ்துவை தி(தீ)ரரானார் உள்ளபடி காண்பர்களென்றும், *ரூபவர்ணாதி நிர்த்தேஶவிஶேஷணவிவர்ஜிதமாயிருக்குமென்றும் சொல்லுகிற ரூபாதிநிஷேதம் விரோதிக்கையாலும்,

(௩) "పాదోఽస్య విశ్వా భూతాని త్రిపాదస్యామృతం దివి - பாதோஸ்ய விஶ்வா பூதாநி த்ரிபாதஸ்யாம்ருதம் திவி" என்று லீலாவிபூதி ஒருகாலும் நித்யவிபூதி முக்காலுமாயிருக்குமென்கிற விபூதித்வயத்தோடே (௪) "నేహ నానాస్తి కిఞ్చన - நேஹ நாநாஸ்தி கிஞ்சந" என்கிற நாநாத்வ நிஷேதம் விரோதிக்கையாலும் இப்படி ஆபாதசூடம் பரஸ்பர விருத்தமாய்த் தோற்றுகிற ஶாஸ்த்ரங்களும் விடவேண்டி வரும்.

(•) (௨) முண்ட-௧-௧-௬

அப்போது ஶாஸ்த்ரவஶ்யதையும் ஆஸ்திக்யமுமின்றியிலே யொழியுமாகையாலே இப்படி வருகிற விரோதத்தை குணவர்ணாஶ்ரமபாகருச்யாதிபேதங்களாலே வேறுபட்டுவருகிற வதிகாரந்தோறும் வ்யவஸ்திதவிஷயமாக்கிப் பரிஹரிக்கக்கடவது.

எங்ஙனேயென்னில்; தமோகுணப்ராசுர்யநிபந்தநமான பராஹிம்ஸாபரதையாலும் ரஜஃப்ராசுர்யநிபந்தநமான க்ஷுத்ரபுருஷார்த்தார்த்தித்வத்தாலும் ஸத்த்வப்ராசுர்யநிபந்தநமான முமுக்ஷுத்வத்தாலும் வருகிற வதிகாரந்தோறும் வ்யவஸ்திதமாகையாலே ஶ்யேநவிதிக்கும் மோக்ஷவிதிக்கும் வருகிற விரோதம் பரிஹ்ருதம; ஹிம்ஸாநிஷேதம் ஸாமாந்யமாகையாலும் பஶுவிஶஸநவிதி கர்மநிபந்தநமாகையாலும் அவற்றுக்குண்டான விரோதம பரிஹ்ருதம். நித்யாக்நிஹோத்ரவிதி தத்த்யாகவிதிகள் கர்மயோகநிஷ்டையும் ஜ்ஞாநயோகநிஷ்டையுமாகிறவதிகாரந்தோறும் வ்யவஸ்திதவிஷயமாகையாலே அவற்றுக்குவருகிற விரோதம் பரிஹ்ருதம். ஸமுச்சயவிதியும் கர்மயோகத்தில் விஶ்வாஸமாந்த்யத்தாலே உபயஸாபேக்ஷனானவனைக் குறித்தாகையாலே பரிஹ்ருதம். பக்திவிதியும், கர்மஜ்ஞாநஸஹக்ருதையான பக்தியே கார்யகரமாவதென்கிற பாகம் பிறந்த வதிகாரிக்காகையாலே கர்மஜ்ஞாநங்களோடு அதுக்குண்டான விரோதம் பரிஹ்ருதம். ஸகுணவித்யைதஹரவித்யைகளுக்குவருகிற விகல்பமும் ஸ்வரூபமாத்ரத்திலும் குணவிஶிஷ்டஸ்வரூபத்திலுமுண்டான ருசிவிஶேஷத்தால்வந்த வதிகாரந்தோறும் வ்யவஸ்திதமாகையாலே பரிஹ்ருதம்.

ஸகுணவாக்யத்துக்கும் நிர்க்குணவாக்யத்துக்குமுண்டான விரோதம், (க) "అపహతపాప్మా విజరో విమృత్యుర్విశోకో విజిఘత్సో౭పిపాసస్సత్యకామస్సత్యసంకల్పః - அபஹதபாப்மா விஜரோ விம்ருத்யுர்விஶோகோ விஜிகத்ஸோ உபிபாஸஸ்ஸத்யகாமஸ்ஸத்யஸங்கல்பஃ" என்று ஹேயப்ரதிபடனாகையாலே அபஹதபாப்மாவாயிருக்கும். நித்யயௌவநஸ்வபாவனைக்கொண்டு ஏகரூபனாயிருக்கையாலே ஜராரஹிதனாயிருக்கும், நித்யனாகையாலே நாஶரஹிதனாயிருக்கும்; நிரதிஶயாநந்தஸ்வரூபனாகையாலே விஶோகனாயிருக்கும். அகர்மவஶ்யனா

(க) சாந்தோ-அ-எ-க

கையாலே க்ஷுத்பிபாஸாதிரஹிதனாயிருக்குமென்கிற ஹேயகுண ராஹித்யத்தையும், ஸத்யமான காமங்களையுடையனாயிருக்கும், ஸத்யமான ஸங்கல்பங்களையுடையனாயிருக்குமென்கிற கல்யாணகுண ஸாஹித்யத்தையும் சொல்லுகிறதாகையாலே பரிஹ்ருதம்.

நிர்விக்ரஹஸவிக்ரஹங்களுக்குண்டான விரோதமும், (க) "இச்சாக்ருஹீதாபிமதோருதேஹ:- இச்சாக்ருஹீதாபிமதோருதேஹ:" என்கிற இச்சாக்ருஹீதமான விக்ரஹத்தையும், கர்மாதீநமானஶரீரபரிக்ரஹ மில்லாமையும் சொல்லுகிறதாகையாலே பரிஹ்ருதம்; (உ) "நேஹ நாநாஸ்தி-நேஹநாநாஸ்தி" என்கிறவாக்யம் த்ரவ்யபேதத்தாலே பி(ரு)ந்நமான விபூதித்வயத்தினுடையவும் விஶிஷ்டைக்யத்தைச் சொல்லுகிறதாகையாலே விபூதியோகம்சொல்லுகிற வாக்யத்துக்கு† முண்டான விரோதம் பரிஹ்ருதம்.

ஆகயிப்படி பரஸ்பரவிருத்தமான வர்த்தவிஶேஷங்கள் குணவர்ணநபே(த்)தபிந்நமாய் வருகிற வதிகாரந்தோறும் வ்யவஸ்திதமானவோபாதி இதுவும்அதிகாரந்தோறும் வ்யவஸ்திதமாயிருக்கும்.

அதாவது (ங) "உணர்ந்துணர்ந்து" என்கிறபடியே ப்ரக்ருதே: பரமாய் ஜ்ஞாநஸ்வரூபமாய் ஜ்ஞாநகுணகமாய் பகவச்சேஷமாய் ஜ்ஞாத்ருத்வகர்த்ருத்வ போக்த்ருத்வாதிவிஶிஷ்டமாயிருக்குமாத்ம ஸ்வரூபமென்றறிந்து, ததநுகுணமான புருஷார்த்தம்ஸ்வயத்நஸாத்யமென்கிறவளவிலேநிற்கிறவனைக்குறித்து கர்மஜ்ஞாநாதிஸாதநங்களை விதிக்கிறது; (ச) "உணர்வு முயிருமுடம்புமமற்றுலப்பிலனவும்பழுதேயாம், உணர்வைபெறவூர்ந்து" என்றும், (ரு) "மெய்ம்மையை மிகவுணர்ந்து" என்றும் சொல்லுகிறபடியே ஜ்ஞாநாதிகளெல்லாம் புறணிதமாமபடி சரமமானபகவதேகரக்ஷ்யமாய் பகவதத்யந்தபாரதந்த்ரமாய் பகவதேகபோக(ஶேஷ)மாயிருக்கும ஆத்மஸ்வரூபமென்றறிந்து, அந்தபகவதேகபோகத்வமாகிற புருஷார்த்தம் பாரதந்த்ரமாய் பகவதேகரக்ஷ்யமான ஸ்வரூபத்துக்கு ஸ்வயத்நத்தால் வித்தியாது; நிருபாதிகரக்ஷகனைவனாலே லப்யமென்றறிந்து, (சு) "என்னான்

(க) வி-பு-சு-எ-அச (உ) ப்ருஹ-சு-ச-கக (ங) தி-வாய்-க-ங-சு
(ச) தி-வாய்-அ-அ ங (ரு) திருமாலை-ஙஅ (சு) தி-வாய்-ரு-அ ங
† இங்கே சிலபதம் காணவில்லை

செய்கேன்" என்கிறபடியே ஸ்வரூபத்தில் ஸ்வரக்ஷண ஜ்ஞாநாபாவத்தாலும், புருஷார்த்தம் அநந்யஸாத்யமென்கிற ஜ்ஞாநவத்தையாலும் பக்திபாரம்பத்தாலும் அநந்யகதிகளாய், பலத்தில் ப்ராரப்தகர்மாவஸாநமாகிற விளம்பத்தைப் பொறுக்கமாட்டாதவர்களுமாயிருக்கிறவர்களைக் குறித்து ப்ரபத்தியோகத்தை விதிக்கிறதென்கை.

இப்படி ஜ்ஞாநவிபாக(భా౯) நிபந்தநமான ருசியைப்பற்றிவருகிற வதிகாரந்தோறும் வ்யவஸ்திதவிஷயமாகையாலே கர்மஜ்ஞாநாதிவிதாயக ஶாஸ்த்ரத்துக்கும் ப்ரபத்திவிதாயகஶாஸ்த்ரத்துக்கும் விரோதப்ரஸங்கமே பிடித்தில்லை. ஶாஸ்த்ரசோ(దిే)திதமான ஸகலதர்மங்களும் ஸர்வர்க்கு முபாதேயமல்லாமையாலும் (க) "యావానర్థఉదపానే సర్వతస్సంప్లుతోదకే। తావాన్సర్వేషు వేదేషు బ్రాహ్మణస్య విజానతః. யாவாநர்த்த உதபாநே ஸர்வதஸ்ஸம்ப்லுதோதகே । தாவாந்ஸர்வேஷு வேதேஷு ப்ராஹ்மணஸ்ய விஜாநத:" என்று த்ரயஶப்யராய் பகவல்லீலாவிஷயபூதரான சேதநரைக்குறித்து அவ்வொருடைய குணருசிகளுக்கு அநுகுணமாக ஶாஸ்த்ரசோதிதமான வர்த்தங்களில், ஸர்வத்ர பாநதுகிடக்கிற ஜலத்தில த்ருஷார்த்தனுக்கு ஸ்வதாஹஶாந்திக்கானவளவே அபேக்ஷிதமாமாபோலே அறிவுடையனவனுக்கு ஸ்வாதிகாராநுகுணமானவே அபேக்ஷிதமாய் தத்வ்யதிரிக்தங்களானவை த்யாஜ்யமென்கையாலும், வர்ணாஶ்ரமதர்மங்களில் ஸ்வவர்ணாஸ்வாஶ்ரமாதிகளுக்கு விஹிதமான தர்மங்களை உபாதேயமாகவிதித்து தத்வ்யதிரிக்த வர்ணாஶ்ரமதர்மங்களை த்யாஜ்யதவேந விதிக்கையாலும், ஸ்வாதிகாராநுரூப தர்மாநுஷ்டாநத்தாலும் வ்யதிரிக்த தர்மத்யாகத்தாலுமல்லது ஶாஸ்த்ரவஶ்யதைதான் கூடாமையாலும், ஸ்வரூபயாதாத்ம்ய ஜ்ஞாநவானைப் பகவதேகரக்ஷ்யத்வ ப்ரதிபத்தியாகிற ப்ரபத்த்யநுஷ்டாநத்திலே யிழியுமவனுக்கு ஸ்வாதந்த்ர்யகார்யமாய் அஹங்காரகர்ப்பமான கர்மயோகாதிகளினுடைய த்யாகவிதி அத்யந்தமுபபந்நமென்றதாயிற்று.

(உ) "సన్న్యస్యత్యఖిలాన్ కర్మాణ్యపి। ఉపాయోయం చతుర్థస్తే ప్రోక్తః శీఘ్రఫలప్రదః। అస్మిన్ హి వర్తమానానాం విధ్యభావప్రసంగతః। పూర్వే త్రయ ఉపాయాస్తే ధర్మాయాస్తే నిరాకృతాః- ஸந்யாஸஸ்த்யாகஇத்யுக்தஶ்ஶரணாகதிரித்

(க) கீ-உ-சகா (உ) அஹிர்ப்பு-லஎ

உபாரம்யாயம்சதுர்த்தஸ்தே ப்ரோக்தஸ்ஸர்வபலப்ரத: । ஆகி ஞ்சனவாதமாநாநாம் விதெளவிப்ரவிஷேவிதே। பூர்வேத்ரயஉபாயா ஸ்தேபவேயுரமநோஹரா:" என்று ஸங்யாஸஶப்தத்தாலும் த்யாக ஶப்தத்தாலும் ஶரணாகதிஶப்தத்தாலும் சொல்லப்பட்ட சதுர்த் தோபாயமான ப்ரபத்தி ஆரப்த(ப்த)ஶரீராவஸாநத்திலே ஃபலமாகை யாலே ஶீக்ரபலப்ரதமாயிருக்கும்; ப்ராஹ்மணோத்தமராலே ஸே விக்கப்பட்டிருக்கிறவிந்தவிதியிலே நடக்குமவர்களுக்கு முன்பு சொன்னகர்மஜ்ஞாநபக்தி யென்கிற மூன்றுஉபாயங்களும் மநோஹ ரங்களன்று. ஆகையாலே அநுரூபங்களன்றென்று ப்ரபத்தியினு டையஉத்கர்ஷமும் கர்மஜ்ஞாநபக்திகளுடைய வபகர்ஷமும் பகவச் சாஸ்த்ரத்திலும் சொல்லிற்று.

(க) "సాధనం భగవత్ప్రాప్తౌ స ఏవేతి స్థిరా మతిః । సాధ్యభక్తిస్స్మృతా సైవ ప్రపత్తిరితి గీయతే । ఉపాయో భక్తిరేవేతి తత్ప్రాప్త్యాం యా తు సా మతిః । ఉపాయభక్తిరేత స్యాః పూర్వోక్తైవ గరీయసీ । ఉపాయభక్తిః ప్రారబ్ధవ్యతిరిక్తాఘనాశినీ । సాధ్యభక్తి స్తు సా హంత్రీ ప్రారబ్ధస్యాపి భూయసీ- ஸாதநம்பகவத்ப்ராப்தெள ஸஏவேதி ஸ்திராமதி: । ஸாத்யபக்திஸ்ஸ்ம்ருதாஸைவ ப்ரபத்திரிதிகீயதே । உ பாயபக்திரேதஸ்யா: பூர்வோக்தைவகரீயஸீ। உபாயபக்தி:ப்ராரப்த வ்யதிரிக்தாகநாஶிநீ । ஸாத்யபக்திஸ்துஸாஹந்த்ரீ ப்ராரப்தஸ்யாபி பூயஸீ" என்று பகவத்ப்ராப்திக்கு பகவானே உபாயமென்கிற வ்ய வஸாயாத்மகஜ்ஞாநம் ஸாத்யபக்தியாக வநுஸந்திக்கப்படும்; அது வே ப்ரபத்தியென்றுசொல்லப்படும்; பகவத்ப்ராப்திக்கு பக்தியே உபாயமென்கிற நினைவுக்கு 'உபாயபக்தி'யென்றுபேர். இத்தைப் பற்ற முன்புசொன்னப்ரபத்தி ஶ்ரேஷ்டை; அதுக்கு ஹேது- உபாயபக்தியென்கிறபக்தியோகம் ப்ராரப்தவ்யதிரிக்தமான பூர் வாகோத்தரா(க)க ரூபமானபாபத்தைப்போக்குமத்தனை; ஸாத்ய பக்தியென்கிற ப்ரபத்தியோகம் ப்ராரப்தத்தையும் நஶிப்பிக்குமா கையாலே யென்று ப்ரபத்தியினுடைய ஸாவோபாயாதிக்யம் ப்ரதே ஶாந்தரங்களிலும் சொல்லிற்று.

இப்படி அதிகாரிபேதத்தாலே அவிருத்த(த)மாயிருக்கச்செய்தே யும் ஆபாதப்ரதீதியில் ஆபாஸமாகத்தோற்றுகிற விரோதத்தைப்

(க) லக்ஷ்மீதந்த்

பரிஹரிக்கைக்காகச் சிலர் வேதாந்தமான தர்மங்களுக்கதிகாரி யில்லாத ஸ்த்ரீஶூத்ராதிர்யாகாதிகள் பலமூகாங்கம் ... இவர்களுக்கு ப்ரபத்தியோகம் விதிக்கிறது; அல்லாத த்ரைவர்ணி கருக்கு கர்மஜ்ஞாநாதிகள் விதிக்கிறதென்று விஷயவிபாக(ஞா)ம் பண்ணினார்கள்; (௩)"మాం హి పార్థ వ్యపాశ్రిత్య యేఽపి స్యుః పాపయోనయః । స్త్రియో వైశ్యాస్తథా శూద్రాస్తేఽపి యాన్తి పరాం గతిమ్ । కిం పునర్బ్రాహ్మణాః పుణ్యా భక్తా రాజర్షయస్తథా-மாம்ஹிபார்த்தவ்யபாஶ்ரித்யயேபிஸ்யுः பாபயோநயः। ஸ்த்ரியோவைஶ்யாஸ்ததாஶூத்ராஸ்தேபியாந்திபராங்கதிம்। கிம்புநர்ப்ராஹ்மணாः புண்யாபக்தாராஜர்ஷயஸ்ததா" என்று, பார்த்தனே! பாபயோநிகளான ஸ்த்ரீஶூத்ரவைஶ்யாதிகளாயவர் சிலர்; அவர்களும் என்னையாஶ்ரயித்து பரமயானகதியை ப்ராபிப்பர்கள்; புண்யயோநிகளான ப்ராஹ்மணர், ராஜர்ஷிகள் பக்தராயிருக்கிறவர்கள் என்னைபஜித்துப் பரகதியைப்ராபிப்பாகளென்னுமிடம் சொல்லவேணுமோ வென்கையாலே ஸ்த்ரீஶூத்ராதிகளுக்கும் பஜநாதிகாரமுண்டாகையாலும், கர்மஜ்ஞாநாதிகளைவிட்டு ப்ரபத்தியைப்பண்ணென்று விதிப்பது தாமாதிகாரமுள்ள விடத்திலேயாகிலும், இந்த பக்த்யதிகாரஹேதுவான ஜாத்யாதிவைகல்யமில்லாத க்ஷத்ரியனான வர்ஜுநனைக்குறித்து தர்மங்களைவிட்டு என்னைப்பற்றென்று விதிக்கையாலும், அந்தவிஷயவிபாக(ஞா)ம் அயுக்தம்.

தர்மஶப்தத்தாலே பலாதிகளைச் சொல்லுகிறதாய் பலஸங்க கர்த்ருத்வங்களைப்பரித்யஜித்து தர்மஸ்வரூபமாத்ரத்தை யநுஷ்டியாநின்றுகொண்டு தத்தங்கமாக ப்ரபத்தியைப்பண்ண மோக்ஷஸித்தியுண்டாமென்கிறதென்பார்கள் சிலர்;

இவ்விடத்தில் பலத்யாகபூர்வகமாக தர்மத்தை யநுஷ்டியென்று சொல்லாமையாலும், பலத்யாகத்தைச்சொல்லி ஸ்வரூப நிஷேதம் பண்ணுகையாலே தர்மஸ்வரூபாநுஷ்டாநம் ப்ரஸ்துதமானாலும், (௨) "కర్మణ్యేవాధికారస్తే మా ఫలేషు కదాచన । మా కర్మఫలహేతుర్భూర్మా తే సఙ్గోఽస్త్వకర్మణి-கர்மண்யேவாதிகாரஸ்தே மாபலேஷுகதாசந। மாகர்மபலஹேதுர்ப்பூர்மாதேஸங்கோஸ்த்வகர்மணி" என்று கர்மத்திலே உனக்கதிகாரம்; பலத்திலதிகாரமில்லை; கர்மபலஹேதுவாகாதே

---

(௩) கீ-௯-௩௨ (௨) கீ-௨-௪௭

தென்று உனக்குக் கர்மாநுஷ்டாநத்தில் அலைக்கழுண்டாவதென்கை
யாலே பலத்யாகம் சொல்லவொண்ணாமையாலும், லக்ஷண்யாபல
த்தைச் சொல்லுகிறதென்ன வேண்டிவது, தர்மஸ்வரூபம் சொல்
லுகிறதென்னுமிடத்தில் விரோதமுண்டாணபோதாகையாலும், (க)
“ నిశ్చయంశృణు మే తత్ర త్యాగే భరతసత్తమ ! త్యాగో హి పురుషవ్యాఘ్ర త్రివిధస్సంప్ర
కీర్తితః । యజ్ఞదానతపఃకర్మ న త్యాజ్యం కార్యమేవతత్ । యజ్ఞో దానం తపశ్చైవ పా
వనాని మనీషిణామ్ । ఏతాన్యపి తు కర్మాణి సఙ్గం త్యక్త్వా ఫలాని చ । కర్తవ్యానీతి మే పార్థ
నిశ్చితం మతము త్తమమ్- நிஶ்சயம்ஶ்ருணு மே தத்ர த்யாகே பரதஸத்தம |
த்யாகோ ஹி புருஷவ்யாக்ர த்ரிவிதஸ்ஸம்ப்ரகீர்த்திதः | யஜ்ஞதாநதப:கர்
ம ந த்யாஜ்யம் கார்யமேவைதத் | யஜ்ஞோ தாநம் தபஶ்சைவ பாவநாநிம
நீஷிணாம் | ஏதாந்யபி து கர்மாணி ஸங்கம் த்யக்த்வா பலாநி ச | கர்த்த
வ்யாநீதி மே பார்த்த நிஶ்சிதம் மதமுத்தமம்” இத்யாதிகளாலே கீழ்ச்
சொன்ன பலத்யாகத்தை நிகமிக்கிறதென்றுமபோதும் நிகமநத்தில்
பலமில்லாமையாலும், (உ) “ఇతి తే జ్ఞానమాఖ్యాతం గుహ్యాద్గుహ్యతరం మయా ।
విమృశ్యైతదశేషేణ యథేచ్ఛసి తథా కురు- இதி தே ஜ்ஞாநமாக்யாதம் குஹ்யாத்
குஹ்யதரம் மயா | விம்ருஶ்யைதததேஷேண யதேச்சஸி ததா குரு”
என்றிப்படி குஹ்யாத்குஹ்யதரமான ஜ்ஞாநம் உனக்கென்றலே
சொல்லப்பட்டது; நீ இவற்றையடங்கவிசாரித்து யாதொருபடி
இச்சித்தாய்; அப்படியேசெய்யென்று முன்பேநிகமித்துவிட்டு, (ங)
“ సర్వగుహ్యతమం భూయశ్శృణు మే - ஸர்வகுஹ்யதமம்பூயஶ்ஶ்ருணுமே”
என்று முன்புசொன்னகுஹ்யதரமான தர்மாதிகளிற்காட்டில் குஹ்
யதமமாகையாலே விலக்ஷணமான ஸித்ததர்மத்தைச் சொல்லுகி
றேன்; கேளென்று இதினுடைய வைலக்ஷண்யம் முன்பே ப்ரஸ்
துதமாகையாலும் இதின் வைலக்ஷண்யத்தாலே ஶோகநிவ்ருத்தி
ஸ்வரஸமாகப் பிறக்கையாலும், இங்கு நிகமிக்கிறதென்கை புநருக்
தியாகையாலும் பலத்யாகம் சொல்லுகிறதென்கிறபக்ஷம் துஷ்டம்.

சிலர் அநாதிகாலார்ஜிதமான பாபங்களினுடைய நிரஸபூர்வக
நிரஸயமாக பகவத்ப்ரேமரூபேண நடக்கப்பட்ட பக்தியோகா
ரம்ப விரோதியான நாநாவிதபாபங்களுக்கு ப்ராயஶ்சித்தமாக விதி
க்கிற க்ருச்ச்ரசாந்த்ராயண கூஶ்மாண்டாதிகளான ப்ராயஶ்சித்த

(க) கீ-கஅ-ச (உ) கீ-கஅ-கூக (ங) கீ-கஅ-கூசு

தர்மங்கள் சேர்க்கலேக அநுஷ்டிக்குமவையர்கையாலும் இஷ்டகாம களாகையாலும் அவற்றைவிட்டு தத்ஸ்தானே யென்னைப்பற்றென் றுசொல்லுகிற தென்பர்கள்; பக்தியோகாரம்பவிரோதி துஷ்க்ருத த்தையுடையனல்லாமையாலும, ஜிதேந்த்ரியனாகையாலும் பக்த்யா ரம்பவிரோதி பாபநிபந்தநமோகமும ப்ராயஶ்சித்தமும நிஷ்ப்ரஸங்க தமல்லாமையாலும் மோக்ஷஸாதந பூதகர்மாதிவாசகமான தர்மஶப் தத்தை ப்ராயஶ்சித்ததர்மமாத்ரத்தைச சொல்லுகிறதென்கைக் கும் ப்ரமாணமில்லாமையாலும், ஸர்வஶப்தத்துக்குப்பொருளில் லாமையாலும், அதுவுமர்த்தமன்று.

சிலர் கர்மயோகாதிகளிலே ப்ரமஶமுண்டாகில் தத்ப்ராயஶ் சித்தமாக ப்ரபத்தியைவிதிக்கிற தென்பர்கள்; (க) "ఏషా తేఽభిహితా సాంఖ్యే బుద్ధిర్యోగే త్విమాం శృణు- ஏஷாதேபிஹிதாஸாங்க்யேபுத்திர்யோகேத் விமாம்ஶ்ருணு" என்று ஆத்மயோகத்தில் இந்தபுத்தி உனக்குச் சொல்லப்பட்டது; கர்யோகத்திலிந்தபுத்தி உனக்குச்சொல்லப்படு கிறது; காமயோகத்திலிந்த-புத்தியைக்கேளென்று கர்மயோகத் தைச்சொல்ல வாரம்பித்தவளவிலே, (உ) "నేహాభిక్రమనాశోఽస్తి ప్రత్యవాయో న విద్యతే- நேஹாபிக்ரமநாஶோஸ்திப்ரத்யவாயோநவித்யதே" என்று இந்தக் கர்மயோகத்தில ஆரப்த(ப்த)மானவம்ஶத்துக்கு நாஶ மில்லை; நடுவிச[illegible]ளுல் ப்ரத்யவாயமுமில்லையென்று ப்ராயஶ் சித்த நிரபேக்ஷமாகவும் சொல்லுகையாலே அதுவுமர்த்தமன்று.

(ங) "తమేవం విదిత్వాఽతిమృత్యుమేతి నాన్యః పన్థా విద్యతేఽయనాయ- தமேவம் விதித்வாதிம்ருத்யுமேதிநாந்யபந்தாவித்யதேயநாய" என்று ஜ்ஞாந யோகத்தாலே ஸம்ஸாரத்தைக் கடக்கலாமதொழிய ப்ராப்திக்கு உபாயம்வேறில்லை யென்றும், (ச) "తమేవైకం జానథ ఆత్మానమన్యా వాచో విముఞ్చథ- தமேவைகம்ஜாநதாத்மாநமந்யாவாசோவிமுஞ்சத" "అమృతస్యైష సేతుః- அம்ருதஸ்யைஷஸேது:" என்று பரமாத்மாவான ஸர் வேஶ்வரனொருவனையுமே யறியுங்கள்; அவ்வறிவே அம்ருதஸ்வரூப மான மோக்ஷத்துக்குவழி; அல்லாதவார்த்தைகளை விடுங்களென்று, ஜ்ஞாநயோகத்தை மோக்ஷஸாதநமாகச் சொல்லுகையாலும், தந்நி ஷ்டனுக்குக் கர்த்தவ்யமொன்றுமில்லையென்று, கர்மத்யாகம்-"జ్ఞా

(க) கீ-உ-ங௯ (உ) கீ-உ-சO (ங) ஶ்வே-ங-அ (ச) முண்ட-உ-உ-ரு

మృతేన తృప్తస్య-ஜ்ஞாநாம்ருதேந த்ருப்தஸ்ய" என்கிற ஶ்லோகத்திலே சொல்லுகையாலும், ஜ்ஞாநயோகலாபத்துக்கு தத்ஸாதநமான கர்மத்தைவிட்டு தத்ஸ்தாநே என்னைப்பற்றென்று சொல்லுகிறதென்று சிலர் சொல்லுவர்கள் ;

(க) "కర్మణైవ హి సంసిద్ధిమాస్థితా జనకాదయః- கர்மணைவஹி ஸம்ஸித்திமாஸ்திதாஜநகாதய:" என்று கர்மந்தன்னை மோக்ஷஸாதநமாகச் சொல்லுகையாலும், (உ) "యజ్ఞేన దానేన తపసా నాశకేన బ్రాహ్మణా వివిదిషన్తి-யஜ்ஞேநதாநேநதபஸாநாஶகேநப்ராஹ்மணாவிவிதிஷந்தி" என்று கர்மத்தை ஜ்ஞாநஸாதநமாகச சொல்லுகையாலும், த்யாகாநந்தரம் ஜ்ஞாநயோகவாசகமாயிருப்பதொரு ஶப்தமில்லாமையாலும் "ஶரணம்வ்ரஜ" என்கிறவாக்யம ஆத்மஜ்ஞாநவாசகமல்லாமையாலும், ப்ரபத்தியே மோக்ஷந்துக்கு ஸ்வதந்த்ரஸாதநமாகவிதிக்கையாலும, (௩) "యథా పుష్కరపలాశ ఆపో న శ్లిష్యన్తే, ఏవమేవంవిది పాపం కర్మ న శ్లిష్యతే-யதாபுஷ்கரபர்ணஆபோநஶ்லிஷ்யந்தே, ஏவமேவம்விதிபாபம் கர்மநஶ்லிஷ்யதே" என்று யாதொருபடி தாமரையிலேயில்நீர்தங்காது; அப்படியே ஜ்ஞாநயோகநிஷ்டன்பக்கல் பாபம்ஸம்ஶ்லேஷியாதென்றும், "జ్ఞానాగ్నిః-ஜ்ஞாநாக்நி:" இத்யாதிப்படியே ஜ்ஞாநமாகிற வக்நிதானே ஸர்வகர்மங்களையும் பஸ்மமாக்குமென்றம், (௪) "యథైషీకాతూలమగ్నౌ ప్రోతం ప్రదూయేత, ఏవం హాస్య సర్వే పాప్మానః ప్రదూయన్తే-யதைஷீகாதூலமக்நௌப்ரோதம்ப்ரதூயேத, ஏவம்ஹாஸ்யஸர்வேபாப்மாந:ப்ரதூயந்தே" என்று நெருப்பிலிட்ட பஞ்சுபோலே ஸகலபாபங்களும நஶிக்குமென்றம், இத்யாதிகளாலே ஜ்ஞாநயோகந் தன்னாலே ஸகலபாபங்களும் போமென்கையாலே இங்குச்சொல்லுகிற "ஸர்வபாபேப்யோமோக்ஷயிஷ்யாமி" என்கிற ஸ்வயம்பாபவிமோசநோக்தி சேராமையாலும், (ரு) "చోదనాలక్షణోऽర్థో ధర్మః-சோதநாலக்ஷணோர்த்தோதர்ம:" என்கிற ந்யாயத்தாலே ஸாதநபூதகர்மஜ்ஞாநாதிவாசகமான தர்மஶப்தத்தை கர்மயோகமாத்ரத்திலே ஸங்கோசிப்பிக்கவொண்ணாமையாலும், விஹிதஜ்ஞாநத்துக்கு அங்கமாக விஹிதமானகர்மத்தைவிட்டால் விஹிதகர்மத்யாகமாகிற தூஷணமவருகையாலும் அதுவுமர்த்தமன்று ;

(க) கீ-௩ ௨0 (உ) ப்ரு-௬-௪-௨௨ (௩) சாந்தோ-௪-௧௪-௩
(௪) சாந்தோ-ரு-௨௪-௩ (ரு) பூர்வமீமாம்ஸா

ஸர்வதர்மங்களைவிட்டே என்னை ஶரணவரணம் பண்ணுவானென்று ஶரணாகதிப்ரஶம்ஸையிலே இதுக்குத் தாத்பர்யம்; தர்மத்யாகத்திலன்றென்று சிலர் சொல்லுவர்கள்; ப்ரஶம்ஸையைக் காட்டுகிற அபிப்ராயமில்லாமையாலும், தர்மங்களினுடைய த்யாகம் விருத்த(ஶ)மாகையாலே, வருந்திக்கல்பித்தாலும் ப்ரஶம்ஸையால் "மாஶுச:" என்கிற ஶோகநிவ்ருத்தி கூடாமையாலும் அதுவுமர்த்தமாகமாட்டாது;

பஶுவிதியில் பஶுதந்த்ரத்தைப்பண்ணுதல், பூர்ணாஹுதியைப்பண்ணுதல் செய்வானென்று பஶுதந்த்ரத்யாகத்தில தாத்பர்யமின்றிக்கே பூர்ணாஹுத்யநுஷ்டாநமாத்ரத்திலே தாத்பர்யமானாற்போலே இங்கும் தர்மத்யாகத்திலே தாத்பர்யமில்லை; ப்ரபத்த்யநுஷ்டாநத்திலே தாத்பர்யமென்கிற பக்ஷமும், ஸாதநாந்தரபரித்யாகமில்லாதபோது அநுஷ்டிக்கவொண்ணாத ப்ரபத்திக்கு பஶுதந்த்ரத்யாகத்தில தாத்பர்யமின்றிக்கே பூர்ணாஹுத்யநுஷ்டாநமாத்ரத்திலே தாத்பர்யமாகவிதிக்கிற பூர்ணாஹுதிந்யாயம் த்ருஷ்டாந்தமல்லாமையாலே அர்த்தமன்று;

தர்மஶப்தத்தாலே பகவத்வ்யதிரிக்த தேவதாந்தராராதநரூபமாக வேதவேதாந்தங்களிற் சொல்லுகிற தர்மத்தைச்சொல்லுகிறதாய், அந்த தர்மங்களைவிட்டு மோக்ஷோபாயமாக பகவத்ஸமாஶ்ரயணத்தைப் பண்ணுவானென்று, இதரதேவதாப்ரதிஸம்பந்திக கர்மநிவ்ருத்திபூர்வகமாக பகவதேகப்ரதிஸம்பந்திகமான கர்மத்தைவிதிக்கிறதாய், அத்தாலே பகவத்விஷயத்தோடே ஐகாந்த்யம் விதிக்கிறதென்று சிலர்சொல்லுவர்கள்; தேவதாந்தரங்கள் இங்கு ப்ரஸ்துதமல்லாமையாலும், ப்ரஸ்துதமானாலும், (௩) "యేప్యన్యదేవతాభక్తా యజన్తే శ్రద్ధయాన్వితాః । తేపిమామేవ కౌన్తేయ యజన్త్యవిధిపూర్వకమ్-யேப்யந்யதேவதாபக்தா யஜந்தே ஶ்ரத்தயாந்விதா: । தேபிமாமேவகௌந்தேய யஜந்த்யவிதிபூர்வகம்" என்று யாவர் சிலர் அந்யதேவதாபக்தராய்க் கொண்டு ஶ்ரத்தையோடே யஜிக்கிறார்கள்; அவர்களும்நம்மையே யஜிக்கிறார்களென்கையாலே தேவதாந்தராராதநத்திலும் பகவதைகாந்த்யத்துக்கு விரோதமில்லையென்கையாலும், ஶரணவரணமாகிறது-ஸமாஶ்ரயணமாத்ரமின்றிக்கே உபாயப்ரார்த்தநாரூபமாகை,

(௩) கீ-௯-௨௩

யாலே தர்மஶப்தம் தத்ப்ரதிகோடியாய்க்கொண்டு த்யாஜ்யமான ஸாதநதர்மத்தைக் காட்டுமதொழிய கேவலம் ஆராதநரூபமான தர்மத்தைக் காட்டாமையாலும் அதுவுமர்த்தமன்று;

சிலர், ஶரணாகதிவிரோதிகளான தர்மங்களைவிட்டு ஶரணாகதியைப் பண்ணுவானென்று சொல்லுகிறதென்பர்கள்; விரோதித்தவற்றைவிடுகைக்கு விதிவேண்டாவாகையாலும், தர்மஶப்தம் விருத்த(ஜ)கர்மத்தைவ(ஸ)சியாமையாலும், ஸர்வதர்மங்களையுமென்கை கூடாமையாலும், அதுவுமர்த்தமன்று.

ஸர்வதர்மங்களைவிட்டு நின்றவனுக்கு விஹிததர்மபரித்யாக ப்ராயஶ்சித்தமாக "ஶரணம்வ்ரஜ" என்று ப்ரபத்தியைவிதிக்கிறதென்பர்சிலர் ; அதுவுங்கூடாது; அவற்றுக்கு நியதப்ராயஶ்சித்தமாகவிதிக்கிற தர்மங்களோடே விரோதிக்கையாலும், விதிவிஷயபூதனானவர்ஜுநனுக்கு விஹிததர்மத்யாகப்ரஸங்கமில்லாமையாலும், விதிக்கப்படுகிற இந்தப்ராயஶ்சித்ததர்மந்தான் பலஸாதநதர்மத்யாகத்தைப்பற்றவோ? பலவிது(ர)ரதர்மத்யாகத்தைப் பற்றவோவென்று விசாரித்தால், பலஸாதநதர்மமநுஷ்டியாதபோது பலாபாவமாத்ரமொழிய தோஷமில்லாமையாலே ப்ராயஶ்சித்தாபேக்ஷையில்லை.

கிஞ்சபலஸாதநதர்மப்ராயஶ்சித்தமாகில், நான் மோக்ஷவிரோதி ஸகலபாபவிமோசநம் பண்ணுகிறேனென்கிற உக்திகூடாது. பலவிதுரமானநித்யநைமித்திகதர்மங்களில் நைமித்திகதர்மத்யாகத்தில் பேதேந ப்ராயஶ்சித்தமின்றிக்கே நிமித்தம்வந்தபோது ததநுபந்தியான நைமித்திகத்தை யநுஷ்டிக்கவே அதிலுடையதோஷம் பரிஹ்ருதம். அதுக்கு அதிகாரமுண்டத்தனையொழிய ப்ராயஶ்சித்த தர்மத்துக்கு அதிகாரமில்லை. நித்யகர்மத்யாக ப்ராயஶ்சித்தமென்னப்பார்க்கில், தத்த்யாகத்தைப்பற்றவிதிக்கிற ப்ராயஶ்சித்தகர்மத்தோடே விரோதிக்கும்.

அந்த ப்ராயஶ்சித்த தர்மங்களாதல், ஶரணவரணமாதலென்று ஸமவிகல்பமாகச் சொல்லப்பார்க்கில், அந்தப்ராயஶ்சித்ததர்மங்கள் ஸாமாந்யமான ஶரணவரணத்தைப்பற்ற ப்ரபலமாகையாலே ஸமவிகல்பமாகச் சொல்லவொண்ணாது.

அந்த தர்மங்களும் ஶரணவரணமுங்கூட நித்யகர்மத்யாக ப்ராயஶ்சித்தமாமென்று ஸமுச்சயமாகச் சொல்லப்பார்க்கில், ஏகஶப்தத்தில் சொல்லுகிற அவதா(ர)ரணத்துக்கு விரோதம்வரும்; அவைதான் இந்த ஶ்லோகத்தில ஸந்நிஹிதங்களுமல்ல; ஆகையாலே ஸமுச்சயம் கூடாது.

அஸந்நிஹிதங்களான வந்தப்ராயஶ்சித்தங்கள்தான் ஸ்வதந்த்ராதிகாரங்களுமாயிருக்கும்; ஆகையாலே விஹிததர்மத்யாக ப்ராயஶ்சித்தமாக ஶரணவரணம் விதிக்கிறதென்னுமர்த்தமநுபபந்நம்.

பக்தியோகத்துக்கு அங்கமான கர்மாதிகளிலே வைகல்யம் பிறந்தால் தத்ப்ராயஶ்சித்தம ப்ரபதநமென்பர் சிலர்; தர்மஶப்தம் அங்கஸஹிதமாய் வேதோக்தமான ப்ரதாநோபாயத்தை யல்லது அங்கதர்மமாத்ரத்தை வசியாமையாலும், அங்கதர்மமாத்ர வாசகமென்கைக்கு ப்ரமாணமில்லாமையாலும், அங்கதர்மமாத்ரத்தைச் சொல்லும்போது தர்மவிஶேஷணமான ஸர்வஶப்தத்துக்கு வையர்த்த்யம்வருகையாலும் அது சொல்லவொண்ணாது.

அங்கதர்மவைகல்யப்ராயஶ்சித்தமாம்போது, ஶக்யாம்ஶத்யாகப்ராயஶ்சித்தமோ? அஶக்யாம்ஶத்யாக ப்ராயஶ்சித்தமோவென்று விகல்பித்தால், அதிகாராநுகுணமான வநுஷ்டாநஸமயத்தில் ஸாமாந்யேந ஸர்வவர்ணாஶ்ரமதர்மங்களும் ஒருவனாலநுஷ்டித்துத் தலைக்கட்டப்போகாமையாலும, ஒருவனைக்குறித்து விதியில்லாமையாலும், ஸ்வாதிகாராநுரூபமான விஹிதங்களானவற்றில் ஶக்யாம்ஶத்யாக ப்ராயஶ்சித்தமொழிய அஶக்யாம்ஶத்யாக ப்ராயஶ்சித்தமென்ன வொண்ணாது. ஶக்யாம்ஶத்யாக ப்ராயஶ்சித்தமென்னில் அவற்றைக்குறித்து விதிக்கிற அந்த ப்ராயஶ்சித்தங்களோடே விரோதிக்கும். ஆகையாலே. அங்கவைகல்ய ப்ராயஶ்சித்தமென்கிற பக்ஷம துஷ்டம்.

சிலர் ஶிஷ்டவிஹிதமான ஶர்மஜ்ஞாநாதி ஸாதநவிஶேஷங்களை நிஷேதித்துத் தலைக்கட்டுகிறதித்தனை யல்லது தத்த்யாகத்தை விதிக்கிறதன்றென்பர்கள். எங்ஙனேயென்னில்; (க) "ఏవముక్త్వా హృషీకేశం గుడాకేశః పరంతప — நயோத்ஸ்யாமீதி கோவிந்தமுக்த்வா தூஷ்ணீம்பபூவஹ" (உ) "విసృజ్య సశరం చాపం — ரதோபஸ்த உபாவிஶத்" என்று நான்

(க) கீ-உ-கூ (உ) கீ-க-சஎ

யுத்தம்பண்ணக்கடவேனல்லேனென்று தேர்த்தட்டிலே விழுந்த வர்ஜுநனை யுத்தத்திலே ப்ரவர்த்திப்பிக்கைக்காக ப்ரவ்ருத்தமான ப்ரபந்தமாகையாலும், (க) "నియతం కురు కర్మ త్వం కర్మ జ్యాయో హ్యకర్మణః। శరీరయాత్రాపి చ తే న ప్రసిద్ధ్యేదకర్మణః-நியதம்குருகர்மத்வம் கர்மஜ்யாயோ ஹ்யகர்மண: । ஶரீரயாத்ராபிசதேநப்ரஸித்த்யேதகர்மண:" (௨) "ధర్మ్యాద్ధి యుద్ధాచ్ఛ్రేయోఽన్యత్ క్షత్రియస్య న విద్యతే। లోకసంగ్రహమేవాపి సంపశ్యన్ కర్తుమర్హసి-தர்ம்யாத்தி யுத்தாச்ச்ரேயோந்யத்க்ஷத்ரியஸ்யநவித்யதே । லோகஸங்க்ரஹமேவாபி ஸம்பஶ்யந்கர்த்துமர்ஹஸி" என்று கர்மத்தை நியதமாகப்பண்ணு; கர்மாநுஷ்டாநமே ஶ்ரேஷ்டம்: கர்மவிதுரனானவனுக்கு ஶரீரயாத்ரையும் ஸித்தியாது. க்ஷத்ரியனானவனுக்கு தர்மஸஹிதமான யுத்தத்திற்காட்டில நல்லதுமில்லை. லோகஸங்க்ரஹத்தைப் பார்த்தாகிலும் கர்மத்தைச்செய்யென்றுமித்யாதிகளாலே கர்மம் அவஶ்யம கர்த்தவ்யமென்கையாலும், (௩) "అథ చేత్త్వమిమం ధర్మ్యం సంగ్రామం న కరిష్యసి। తతః స్వధర్మం కీర్తిం చ హిత్వా పాపమవాప్స్యసి- அத சேத்த்வமிமந்தர்ம்யமஸங்க்ராமமநகரிஷ்யஸி । ததஸ்ஸ்வதர்மங்கீர்த்திஞ்சஹித்வாபாபமவாப்ஸ்யஸி" "తతో యుద్ధాయ యుజ్యస్వ నైవం పాపమవాప్స్యసి-ததோயுத்தாயயுஜ்யஸ்வநைநம்பாபமவாப்ஸ்யஸி" என்று நியதர்மமான விஹதயுத்தத்தைப் பண்ணுயாகில தர்மத்தையும் கீர்த்தியையுமிழந்து பாபத்தையடைவதி; ஆகையாலே யுத்தத்தின்பொருட்டு யுக்தனுப் இப்படிப் பாபதனதயடையாதேகொளளென்று கர்மமநுஷ்டியாதபோது பாபிஷ்டனுமென்கையாலும், (௪) "యే త్వేతదభ్యసూయంతో నానుతిష్ఠంతి మే మతమ్। సర్వజ్ఞానవిమూఢాంస్తాన్విద్ధి నష్టానచేతసః- யேத்வேததப்யஸூயந்தோநாநுதிஷ்டந்திமேமதம் । ஸர்வஜ்ஞாநவிமூடாம்ஸ்தாந்வித்திநஷ்டாநசேதஸ:" நானுதரித்து உபதேசித்த கர்மத்தை அஸூயைபண்ணுகின்றுகொண்டு யாவர்சிலர் அநுஷ்டியாதிருக்கிறுர்கள்; அவர்கள் ஜ்ஞாநஹீநராய் நஶிக்குமவர்களாக புத்திபண்ணு; கர்மத்தையநுஷ்டியாதுசெல் நஷ்டனுமென்றும், (௫) "మోహాత్తస్య పరిత్యాగస్తామసః పరికీర్తితః- மோஹாத்தஸ்யபரித்யாகஸ்தாமஸ:பரிகீர்த்தித:" என்று மோஹத்தாலே கர்மத்தினுடைய பரித்யாகம் தாமஸமென்று கர்மத்யாகத்தை தம:கார்யமாகச்சொல்லுகை

(க) கீ-௩-௨௦ (௨) கீ-௨-௩௧ (௩) கீ-௨-௩௩
(௪) கீ- (௫) கீ-௧௮-௭

யாலும், (௪) "సఙ్గం త్యక్త్వా ఫలఞ్చైవ స త్యాగస్సాత్త్వికో మతః - ஸங்கம் த்யக்த்வா பலஞ்சைவ ஸத்யாகஸ்ஸாத்விகோ மத:" என்று ஸங்கத்தையும் பலத்தையும் விடுகிறது ஸாத்விகத்யாகமென்கையாலும், (௨) "న హి దేహభృతా శక్యం త్యక్తుం కర్మాణ్యశేషతః । నియతస్య తు సన్న్యాసః కర్మణో నోపపద్యతే - நஹி தேஹப்ருதா ஶக்யம் த்யக்தும் கர்மாண்யஶேஷத:। நியதஸ்ய து ஸந்ந்யாஸ: கர்மணோ நோபபத்யதே" என்று-ஶரீரியானவனுக்கு கர்மங்கள் ஸோகவிடவொண்ணாதென்றும், நித்யமான கர்மத்தினுடைய த்யாகம் கூடாதென்கையாலும், (௩) "కర్తవ్యానీతి మే పార్థ నిశ్చితం మతముత్తమమ్ - கர்த்தவ்யாநீதி மே பார்த்த நிஶ்சிதம் மதமுத்தமம்", கர்மங்கள் கர்த்தவ்யமென்றே எனக்கு உத்தமமான மதமென்கையாலும், (௪) "స్థితోఽస్మి గతసన్దేహః కరిష్యే వచనం తవ - ஸ்திதோஸ்மி கதஸந்தேஹ: கரிஷ்யே வசநந்தவ" என்று நீ திருவுள்ளமானபடியே கர்மானுஷ்டானம் பண்ணக்கடவேனென்கையாலும், அப்படியே பார்த்தனுக்கும் ப்ரவ்ருத்தமாகையாலும்.

"மாமேவயேப்ரபத்யந்தே" இத்யாதிகளிலே அங்கமாகவிதித்த ப்ரபத்தியை ப்ரதாநமாகவிதிக்கக்கூடாமையாலும், சிரகாலஸாத்யமாய் துஷ்கரமான கர்மஜ்ஞாநங்களாலே ஸாத்யமானவர்த்தத்தை ஒருப்ரபத்திமாத்ரம் ஸாதிக்கக்கூடாமையாலும், கிழ்லோகநாங்குறை துஷ்கரத்வாதிகளாலே ஶோசம்பிறந்ததாகச் சொல்லாமையாலும், (௫) "దుఃఖమిత్యేవ యత్కర్మ కాయక్లేశభయాత్త్యజేత్ । స కృత్వా రాజసం త్యాగం నైవ త్యాగఫలం లభేత్ - துஃக்கமித்யேவ யத்கர்மகாயக்லேஶபயாத்த்யஜேத் । ஸக்ருத்வா ராஜஸம் த்யாகம் நைவத்யாகபலம்லபேத்" என்று கர்மத்தை காயக்லேஶபயத்தாலே துஃக்கமென்றுவிட்டானாகில் அது ராஜஸத்யாகம்; அவனுக்கு த்யாகபலஸித்தியில்லையென்கையாலும் விஹிதாநுஷ்டாநம் ஸ்வரூபஹாநியாயாகில விதிநிஷேதஶாஸ்த்ரவஶ்யரன்றிக்கே யொழியுமாகையாலும், "ஶரணம்வ்ரஜ" என்கிறவிதியும் அநுஷ்டிப்பாரில்லாமையாலே அதுக்கும் வையர்த்த்யம் வருகையாலும், விஹிதமான கர்மஜ்ஞாநாதிகளுக்கு அங்கதயாப்ரபத்திவிதாநம் பண்ணுகிறதென்னுமளவில், ப்ரபத்தியினுடைய அந்யநிரபேக்ஷதாநியந்தா ஸ்வதந்த்ரோபாயத்வத்தைசொல்லுகிற அவதாரண

---

(௧) கீ-கஅ-கூ (௨) கீ-கஅ-கக (௩) கீ-கஅ-கூ
(௪) கீ-கஅ-எகூ (௫) கீ-கஅ-அ

வாசியான ஏகபதத்துக்கு வையர்த்த்யம்வருமென்ன வேண்டாதபடி தேவதாநதராங்களை வ்யாவர்த்திக்கலாமாகையாலும், இங்குச்சொல்லுகிற த்யாகம் கர்மஸ்வரூபத்யாகமாகமாட்டாது.

ஆகையாலே கீழ்ச்சொன்ன கர்மஜ்ஞாநாதிஸாதநங்களில்ப(ஃ)ல்ஸங்காதிகளையும் ஸ்வதந்த்ரஸாதநமெனகிற ப்ரதிபத்தியையும் விட்டு தத்ஸாதநஸமாராத்யனானவனையே பலப்ரஸாதகனாகபுத்தி பண்ணு; அவற்றாலே ப்ரீதனான நான் என்னைப்பெறுகைக்கு விரோதியான ஸர்வபாபங்களில் நின்றும் விமோசிக்கிறேன். ஆன [illegible] எனக்குப்ரஸாதநமான கர்மயோகத்தில் கர்த்தவ்யாகர்த்த[illegible]யாலே†மோஹிக்கக்கடவையல்லையென்று உக்தார்த்தத்தை [illegible]தென்று சிலர் சொல்லுவர்கள்; அது அர்த்தமன்று;

காம்ய அல்பம் கர்த்தவ்யமென்றதும், அகரணத்தில் பாபம் வருமென்றதும் ஸாதகமான கர்மத்திலன்றிக்கே ஸ்வவர்ணஸ்வாஸ்ரமோசிதமான தர்மத்திலே யாகையாலும், கர்மம் ஸ்ரேஷ்டமென்னுமிடம், கர்மயோகத்தை ப்ரஸம்ஸித்தபடி யாகையாலும், (க) "ஸ்ரீ ஷீர்யதப்யஸ்மாய ந:-யேத்வேதப்யஸம்பந்த:" என்கிறவிடம் அநுஷ்டிக்கச்சொன்னதிலே அஸூயையைப்பண்ணில்நஷ்டனுமென்கிறதொழிய அநுஷ்டியாதபோது நஷ்டனுமென்கிறதன்றாகையாலும், அநுஷ்டியாதவன் நஷ்டனுமென்னில், கர்மயோகநிரபேக்ஷனாய்விட்ட ஜ்ஞாநயோகாதிகாரிக்கு நாஸம்வரவேண்டுகையாலும், கர்மஸ்வரூபத்யாகம் தாமஸகார்யமென்றவிடம் "மோஹாத்" என்று விஸேஷிக்கையாலும், நாஸ்திகத்யாகத்தைச் சொல்லுகிறதாகையாலும்; ஸாத்விகத்யாகமாகச்சொன்ன பலாதித்யாகம் நாஸ்திகவ்யாவ்ருத்திபரமாகையாலும், அங்ஙனன்றாகில் கர்மஸ்வரூபத்யாகம் பண்ணின ஜ்ஞாநயோகாதிகாரிக்கும் ஸாத்விகத்வமின்றியிலே யொழிகையாலும், கரணங்கள் குர்வத்ரூபங்களாகையாலே கர்மங்களை விடப் போகாதென்கிறவிடம் பகவத்ப்ரீணநகர்மத்தைவிடுகை பக்ஷமல்லவென்கிறத்தாலே பரிஹ்ருதமாகையாலும் "கர்த்தவ்யாநி" என்கிறவிடம் "த்யாஜ்யம்தோஷவத்" என்று ராகத்வேஷாதிகளோபாதி ஆத்மாவுக்கு கர்மம பந்தகமாகையாலே த்யாஜ்யமென்கிறவர்களை

(க) ஸ்ரீ-கீ-௩-௯

† மோஹிக்க

வ்யாவர்த்திக்கிறதாகையாலும் கர்மத்தை யங்கமாகவுடைத்தான ஜ்ஞாநந்தன்னையே கர்மத்துக்கு அங்கமாகவிதிக்கையாலே அங்கமானப்ரபத்தியை ஸ்வதந்த்ரமாக விதிக்கக்கூடாதென்கிற விரோத மில்லாமையாலும்,

தபஃகர்மாதிஸாத்யமான பாபநிவ்ருத்தி க்ருஷ்ணாநுஸ்ம்ருதி மாத்ரத்தாலே.ஸித்திக்குமென்றெழுதுகையாலே ப்ராபல்யதௌர்ப்பல்யமில்லாமையாலும், த்யாகபலஸித்தியில்லை யென்கிறவிடம் ஸாதநமான கர்மத்தைவிட்டு தத்ஸாத்யமானஜ்ஞாநத்தை ஆசைப்படில் அதுகிடையாதென்கிறதாகையாலே அத்தோடு விரோதமில்லையா கையாலும், ஸ்வாதிகாராநுரூபதர்மத்தை யநுஷ்டேயமாகச்சொல்லி தத்வ்யதிரிக்ததர்மத்தை த்யாஜ்யமாகச்சொல்லுகிறதாகையாலே விதிநிஷேத ஶாஸ்த்ரவையர்த்ர்யம்வருமென்ன வொண்ணாதாகை யாலும், (க) "మాశుచస్సమ్పదం దైవీమభిజాతోసి పాణ్డవ-மாஶுசஸ்ஸம்பதந்தைவீமபிஜாதோஸிபாண்டவ" என்கிற ஶோகநிவ்ருத்தியாலே ஶோகம் அநுமேயமானவோபாதி இங்கும், "మాశుచః-மாஶுசஃ" என்கையாலே ஶோகம் அநுமிக்கலாயிருக்கையாலே ஶோகம் ப்ரஸ்துதமன்றென்கிறது தூஷணமாகமாட்டாமையாலும், ப்ரபத்தியை ஸ்வதந்த்ரமாக விதிக்கையாலும்,

(உ) "ఇతి తే జ్ఞానమాఖ్యాతమ్- இதிதேஜ்ஞாநமாக்யாதம்" என்று அந்த ஜ்ஞாநப்ரகரணந்தன்னிலே நிகமித்துவிடுகையாலே, புநருக்திவருகையாலும், (ங)"అహం హి సర్వయజ్ఞానాం భోక్తా చ ప్రభురేవ చ-அஹம்ஹிஸர்வயஜ்ஞாநாம்போக்தாசப்ரபுரேவச" என்று ஸர்வயஜ்ஞங்களுக்கும் போக்தாவும்நானே; பலப்ரதாநம் பண்ணுமவனும்நானே, யென்று தானேசொல்லுகையாலே "సర్వపాపేభ్యో మోక్షయిష్యామి-ஸர்வபாபேப்யோமோக்ஷயிஷ்யாமி" என்கிறவிடம் கர்மஜ்ஞாநாதிஸாதநங்களாலே ப்ரீதனானநானென்கிறவிஶேஷணம் இங்குக்கூடாமையாலும், தேவதாந்தரவ்யாவ்ருத்தி "மாம்"என்கிறபதத்தாலே ஸித்திக்கையாலே ஏகபதத்துக்கு வ்யாவர்த்த்யமில்லாமையாலும், (ச) "నానుశోచితుమర్హసి-நாநுஶோசிதுமர்ஹஸி" (ரு) "నైవం శోచితుమర్హసి

(க) கீ-௧௬-௫ (உ) கீ-௧௮-௬௩ (ங) கீ-௯-௨௪
(ச) கீ-௨-௨௫ (ரு) கீ-

ஸர்வம் ப்ராப்தும் அர்ஹஸி” என்று நீ ப்ராப்திக்கக்கட வைப ஸ்லேயென்று சொல்ல, அவனும், (க) “యత్త్వయోక్తం వచస్తేన మోహోఽయం విగతో మమ-யத்த்வயோக்தம்வசஸ்தேந மோஹோயம்விகதோமம” என்று அத்யாத்மவிஷயமாக நீ திருவுள்ளமான வார்த்தைகளாலே என்னுடைய மோஹம்போயிற்றென்று அவன் ப்ரதிவசநம் பண்ணுகையாலும்,

(௨) “సర్వగుహ్యతమం భూయశ్శృణు మే పరమం వచః-ஸர்வகுஹ்யதமம்பூய ஶ்ஶ்ருணுமே பரமம்வச:” (௩) “రాజవిద్యా రాజగుహ్యం పవిత్రమిదముత్తమమ్। ప్రత్యక్షావగమం ధర్మ్యం సుసుఖం కర్తుమవ్యయమ్-ராஜவித்யா ராஜகுஹ்யம்பவித்ரமிதமுத்தமம்। ப்ரத்யக்ஷாவகமம்தர்ம்யம்ஸுஸுகம்கர்த்துமவ்யயம்” என்று ராஜகுஹ்யமாகச் சொல்லப்பட்ட பக்தியோகத்தைக்காட்டிலும், (௪) “ఇతి గుహ్యతమం శాస్త్రమిదముక్తం మయానఘ-இதிகுஹ்யதமம் ஶாஸ்த்ரமிதமுக்தம்மயாநக” என்று குஹ்யதமமாகச் சொல்லப்பட்ட புருஷோத்தமவித்யாதிகளிற்காட்டிலும் அதிகமாய், ஸர்வகுஹ்யதமமென்றும், (௫) “ఏతద్వై మహోపనిషదం దేవానాం గుహ్యమ్-ஏதத்வை மஹோபநிஷதம்தேவாநாம்குஹ்யம்” என்று ஶ்ருதியிலும், (௬) “ఏతన్మహోపనిషదం దేవానాం గుహ్యముత్తమమ్- ஏதந்மஹோபநிஷதம்தேவாநாம்குஹ்யமுத்தமம்” என்று ஸ்ம்ருதியிலும் தேவகுஹ்யமாகச் சொல்லப்பட்ட ந்யாஸஶப்தவாச்யமான ப்ரபத்தியை ஸர்வாதிகமாகப் பிரியச்சொல்லுகையாலும், உக்தஸாதநநிகமனமென்கிற பக்ஷமாத்ரமன்று;

ஆகையாலே கீழுபதிஷ்டமான கர்மாதிகளிலே (௭) “తత్కిం కర్మణి ఘోరే మాం నియోజయసి కేశవ - தத்கிம்கர்மணிகோரேமாம்நியோஜயஸி கேஶவ” என்று பின்பு கோரமான இக்கர்மத்திலே என்னையென் செய்யமூட்டுகிறு யென்கையாலே கர்மங்களிலே துஷ்கரத்வாதிபயம் நடக்கையாலும், (௮) “కచ్చిన్నోభయవిభ్రష్టశ్ఛిన్నాభ్రమివ నశ్యతి-கச்சிந்நோபயவிப்ரஷ்டஶ்சிந்நாப்ரமிவநஶ்யதி” என்று யோகப்ரஷ்டனானவன் சி(஛ி)ந்நாப்ரம்போலே நஶிக்குமென்கையாலே கர்மயோக

(க) கீ-
(௨) கீ-௧௮-௬௪
(௩) கீ-௯-௨
(௪) கீ-௧௫-௨௦
(௫) தை-நா-௭௯
(௬)
(௭) கீ-௩-௧
(௮) கீ-௬-௩௮

ம் ஸாபாயமென்கிறபயம் நடக்கையாலும், (க) "చఞ్చలం హి మనః కృష్ణ ప్రమాథి బలవద్దృఢమ్ । తస్యాహం నిగ్రహం మన్యే వాయోరివ సుదుష్కరమ్-சஞ்சல மஹி மநஃ க்ருஷ்ண ப்ரமாதி பலவத் த்ருடம்। தஸ்யாஹம் நிக்ரஹம் மந்யே வாயோரிவ ஸுதுஷ்கரம்" என்று மநஸ்ஸு விஷயங்கள் தோறும் புட்டி புக்கு ஒன்றில் நிலைநில்லாதே யிருப்பதொன்று; ப(ப)லவத்தாய் த்ருடமாயிருக்கும்; ஸததகதியான வாயுவினுடைய நிரோத(த)மிதானுப் போலே, அந்த மநஸ்ஸை விஷயங்களில் நின்றும் மீட்கையரிதென்று புத்திபண்ணுநின்றேனென்கையாலே காமயோகாதிகளுடைய† வநுஸந்தாநமும் கப்பட துஷ்கரமென்றுபயப்படுகையாலும்,

(உ) "యతతో హ్యపి కౌన్తేయ పురుషస్య విపశ్చితః । ఇన్ద్రియాణి ప్రమాథీని హరన్తి ప్రసభం మనః ॥ తాని సర్వాణి సంయమ్య యుక్త ఆసీత మత్పరః-யததோஹ்யபி கௌந்தேய புருஷஸ்ய விபஶ்சிதஃ। இந்த்ரியாணி ப்ரமாதீநி ஹரந்தி ப்ரஸபம் மநஃ। தாநி ஸர்வாணி ஸம்யம்ய யுக்த ஆஸீத மத்பரஃ" என்று ஜ்ஞாநவானைக்கொண்டு இந்த்ரியஜயம் பண்ணுகையிலே யத்நியாநிற்கிற புருஷனுக்கும் அது அரிது; மநஸ்ஸையும் தன்வழியிலே அபஹரித்துக்கொள்ளுமென்கையாலே இந்த்ரியப்ராபல்ய நிபந்தநமான பயம் நடக்கையாலும், தத்பரிஹாரார்த்தமாக அந்த இந்த்ரியங்களை நியமித்து என்பக்கலிலே தத்பரனுவானென்கையாலும்,

(௩) "దైవీ హ్యేషా గుణమయీ మమ మాయా దురత్యయా-தைவீ ஹ்யேஷா குணமயீ மம மாயா துரத்யயா" என்று எனக்கு லீலாபரிகரமாய் குணத்ரயாத்மிகையான எனனுடைய இந்தமாயையை ஒருவராலும் ஸ்வயத்நத்தால கடக்கவரிதென்கையாலும், (௪) "ఈశ్వరః సర్వభూతానాం హృద్దేశేఽర్జున తిష్ఠతి । భ్రామయన్ సర్వభూతాని యన్త్రారూఢాని మాయయా-ஈஶ்வரஸ்ஸர்வபூதாநாம் ஹ்ருத்தேஶேऽர்ஜுந திஷ்டதி। ப்ராமயந்ஸர்வபூதாநி யந்த்ராரூடாநி மாயயா" என்று ஸர்வநியந்தாவான ஸர்வேஶ்வரன் ஸர்வருடையவும் ஹ்ருதயப்ரதேஶங்களிலே நில்லாநிற்கும்; ஸத்தாயோகி ஸகலபதார்த்தங்களையும் யந்த்ராரூடமாக்கி ப்ரமிப்பியாநின்றுகொண்டு; என்கையாலே, ஈஶ்வராதீநமஜகத்து, தன்னால செய்யலாவதொருக்ருத்யமில்லை யென்றறிகையாலும்,

---

(க) கீ-௬-௩௪ (உ) கீ-௨-௬௦ (௩) கீ-௭-௧௪

(௪) கீ-௧௮-௬௧ † அநுஷ்டாநம

(௧)"మత్తస్స్మృతిర్జ్ఞానమపోహనంచ-மத்தஸ்ஸ்ம்ருதிர்ஜ்ஞாநமபோஹநஞ்ச" என்று பூர்வார்த்தத்திலுடைய ஸ்ம்ருதியும் ஜ்ஞாநாபோஹநாதிகளான விவையுமென்னாலே யென்கையாலே சேதந வ்யாபாரைகஸாத்யமாயிருப்பதொன்றுமில்லையென்றறிகையாலும், "మామేవయే ప్రపద్యంతే మాయామేతాం తరంతి తే - மாமேவயேப்ரபத்யந்தே மாயாமேதாந்தரந்திதே" என்று என்னையே யாவர்சிலர் ப்ரபத்தி பண்ணுகிறார்கள; அவர்கள் இந்தமாயையைக் கடப்பர்களென்றும், (௨)"తమేవచాద్యంపురుషంప్రపద్యే-தமேவசாத்யம்புருஷம்ப்ரபத்யே"(௩) "తమేవశరణంగచ్ఛసర్వభావేనభారత-தமேவஶரணம்கச்சஸர்வபாவேநபாரத" இத்யாதிகளாலே ஸர்வகாரணபூதனான வந்தப்புருஷனையே ப்ரபத்திபண்ணுவானென்றும், ஸர்வபாகாரத்தாலும் அவனையே ஶரணமாகவடையென்றும பலவிடங்களிலும ப்ரபத்தியைவிதிக்கச் சேட்கையாலே ப்ரபத்திபலலது ஸம்ஸாரநிஸ்தரணோபாயமில்லை யென்கிற ப்ரபத்திவைலக்ஷண்யஜ்ஞாநம பிறக்கையாலும,

ஸுகரமாய் நிரபாயமாய் நிரபேக்ஷமாய் ஸித்தமாய் பாதந்த்ர ஸ்வரூபத்துக்கநுரூபமாய் அவிளம்ப்யபலப்ரதமான விவ்வுபாயங் கிடக்க துஷ்கரமாய் ஸாபாயமாய் ஸாபேக்ஷமாய் பஹுதரஜந்மஸாத்யமாய் ஸ்வரூபவிருத்தமாய் விளம்ப்யபலப்ரதமான ஸாத்யோபாயங் களிலே என்னைமூட்டாநின்றாய், அவை துரநுஷ்டேயமாயிராநின்றது; (௪) "நெறிகாட்டிநீக்குதியோ" என்கிறபடியே ஸாதநாந்தரங் களைக்காட்டி அகற்றநினைக்கிறாயோ! விலக்ஷணோபாயமான வுன் னைக்காட்டி உஜ்ஜீவிப்பிக்கிறாயோ! (௪)"என்செய்வானெண்ணினாய் கண்ணனே" என்று ஶோகாவிஷ்டனானவளவிலே இப்படி ஸாதந விஶேஷஶ்ரவணத்திலே ஶோகமிறக்கும்படி பாகமிறந்தபின்பு,

இனி நீபூர்வோக்தமானகர்மஜ்ஞாநாதிஸாதநங்களைஸாங்க மாகஸவாஸநபரித்யாகபண்ணிவாதஸல்யாதிகுணவிஶிஷ்டனாய்க் கொண்டுஉன்னுடையதோஷமேபோக்யமாய்,உன்சிறுமைபாராதே உனக்குமுன்னின்று கார்யம்செய்யுமவனாய், அதிலும என்பேறு கச் செய்வேனாயிருக்கிறவென்னை உன்னுடைய இஷ்டாநிஷ்டப்ராப்தி பரிஹாரங்களுக்கு அவ்யவஹிதமாய் உன்னினைவையும அபேக்ஷியாதபடி நிரபேக்ஷஸாதநமாகநினை; அநந்தரம் ஜ்ஞாநாதிகுண

---

(௧) கீ-௧௫-௧௫ (௨) கீ-௧௫-௪ (௩) கீ-௧௮-௬௨
(௪) பெரியதிருவந்தாதி-௬

விஶிஷ்டனை நான் என்பக்கலிலே ஸமர்ப்பித்த ஸர்வப(த)ர்த்தனை யுன்னை என்னைப்பெறுகைக்கு விரோதியானஎல்லாப்பாபங்களும் நமக்கிடமன்றென்று விட்டுப்போம்படி பண்ணக்கடவேன்; ஆனபின்பு ஸாதநாந்தர துஷ்கரத்வாதிகளைப்பற்ற ஶோகிக்கக்கடவையல்லை யென்கிறவிதுவே சரமஸ்லோகத்துக்குச் சரமமானவர்த்தமென்று நம்பூர்வாசார்யர்களருளிச்செய்வர்களென்று ஆச்சான்பிள்ளை யருளிச்செய்தார்.

நம்மாழ்வாரும் இவ்வுபாயாநுஸந்தாநதசையிலே (௧)"நோற்ற நோன்பிலேன்" என்று கர்மயோகத்தை யில்லையென்றும், "நுண்ணறிவிலேன்" என்று ஜ்ஞாநயோகபக்தியோகங்களை யில்லையென்றும், கர்மஜ்ஞாநபக்திகளுடைய அநந்வயாநுஸந்தாநபூர்வகமாக "அம்மான்" என்று ஸ்வாமித்வத்தையும் "சிரீவரமங்கலநகர்விற்றிருந்த" என்று ஸௌலப்யத்தையும், "எந்தாய்" என்று ஸௌஶீல்யத்தையும், "உனக்குமிகையல்லேன்" என்று வாத்ஸல்யத்தையும் முன்னிட்டு "தமியேனுக்கருளாய்" "அருளாயுய்யுமாறெனக்கே" என்று பகவத்க்ருபையையநுஸந்தித்து "நின்பாதமேசரணாகத்தந்தொழிந்தாய்" என்று உபாயவிதாநத்தையும், "கழல்களவையே சரணாகக்கொண்ட" "ஏகசிந்தையனாய்" என்று விதி(தி)விஷயமான ப்ரபத்தியையும் அருளிச்செய்தார்.

திருமங்கையாழ்வாரும் (௨)"பிறவிநோயறுப்பானேணிலேன்", (௩)"மற்றேலொன்றறியேன்" "நலந்தானொன்றுமிலேன் நல்லதோரறம்செய்துமிலேன்" என்று இதரோபாயஶூந்யதையை யருளிச்செய்து "நாயேன்வந்தடைந்தேன்" என்று தம்முடைய நைச்யத்தைப் புரஸ்கரித்து "ஆற்றேன்வந்தடைந்தேன்" என்று அநந்யஶரணத்வரூபமான அஸாதாரணத்தைமுன்னாக உபாயவரணம் பண்ணியருளினார்.

ஸ்ரீதொண்டரடிப்பொடியாழ்வாரும் (௪)"குளித்துமூன்றனலை யோம்பும் குறிகொளந்தணமைதன்னையொளித்திட்டேன்" என்று கர்மயோகத்தினுடைய ஸவாஸநபரித்யாகத்தைச்சொல்லி "என்கணில்லை" என்று ஜ்ஞாநயோகாநந்வயத்தை யநுஸந்தித்து "நின்க

(௧) தி-வாய-௫-௭-௧ (௨) தி-மொ-௧-௯-௧ (௩) தி-மொ-௧-௯-௩
(௪) திருமாலை-௨௫

ஙம்பத்தனல்லேன்" என்று பக்தியோகாநந்வயத்தை யநுஸந்தித்து "நம்பீகடல்வண்ணு" என்று ஸரண்யகுணபூர்த்தியை யநுஸந்தித்து "எனக்கருள்செய்கண்டாய்" என்று ப்ரபத்த்யுபாயவரணம் பண்ணி யருளினர்.

(௩) "கறவைகள்பின்சென்று கானம்சேர்ந்துண்போம்" என்று கர்மயோகாநந்வயத்தையும், "அறிவிலலே" "அறிவொன்றுமில்லே" என்று ஜ்ஞாநயோக பக்தியோகங்களினுடைய அநந்வயத்தையுமருளிச்செய்து, "புண்ணியம்நாமுடையோம்" என்றுஸித்தோபாயாநந்வய ப்ரதிபத்தியையுமருளிசெய்து, ப்ரபத்தி இதரோபாயபரித்யாகபூர்வகமாக விருக்குமென்னுமிடத்தை நாய்ச்சியாருமருளிசசெய்தார்.

இப்படி ஆழ்வார்களெல்லாரும் ஸாதநாந்தராநந்வயபூர்வகமாகப் பலவிடங்களிலும ப்ரபத்தியை யருளிசசெய்துகொண்டு போருகையாலே இதிற்சொல்லுகிற த்யாகவிதாநம் அத்யந்தமநுரூபமாயேயிருக்குமாகையாலே இவ்வாழ்வார்கள் திருவுள்ளத்தை யநுவிதா(நு)நம்பண்ணிப்போந்த யாமுநமுனிகள பாஷ்யகாரர் முதலான பூர்வாசார்யர்களும் ஸாதநாந்தரபரித்யாகபூர்வகமாக இப்ப்ரபத்தியை யருளிச்செய்தார்.

எங்ஙனேயென்னில்;-யாமுநமுனிகள், (உ)"न धर्मनिष्ठोऽस्मि-நதர்மநிஷ்டோஸ்மி" என்கிற ஸ்லோகத்திலே, "நதர்மநிஷ்டோஸ்மி" என்று பேற்றுக்குறுப்பாகக் கர்மயோகத்தி லந்வயமில்லையென்றும, "न चात्मवेदी-நசாத்மவேதீ" என்று ஜ்ஞாநயோகத்தி லந்வயமில்லையென்றும், "न भक्तिमांस्त्वच्चरणारविन्दे-த்வச்சரணாரவிந்தேநபக்திமாந" என்று பக்தியோகத்திலந்வயமில்லையென்றும, "अकिञ्चनः-அகிஞ்சநः" என்று இதுக்குஅதிகாரஸக்திவாஞ்சா(ஞா)நதபாதிகளுமில்லையென்றும் "अनन्यगतिः-அநந்யகதிः" என்றுரக்ஷகாந்தரமில்லையென்றும் "शरण्य-ஸரண்ய" என்று உபாயபூதனுடைய குணபூர்த்தியை யருளிச்செய்து "त्वत्पादमूलं शरणं प्रपद्ये-த்வத்பாதமூலம்ஸரணம்ப்ரபத்யே" என்று "मामेकं शरणं व्रज-மாமேகம்ஸரணம்வ்ரஜ" என்று விதித்ததேவர்திருவடிகளின் மூலத்தை அந்தவுபதேஸக்ரமத்திலே ப்ரபத்திபண்ணுகிறேனென்றருளிச்செய்தார்.

---

(௩) திருப்பாவை-உஅ (உ) ஸ்தோ-ரஉ

பாஷ்யகாரரும் (க) "పిత్రంమాతరం-பிதரம்மாதரம்" என்று தொடங்கி "సర్వధర్మాంశ్చ సంత్యజ్య-ஸர்வதர்மாம்ஶ்சஸந்த்யஜ்ய" என்கிற இறுதியாக சேதநாசேதநரூபங்களான ப்ராப்யாபாஸங்களையும் ப்ராபகாபாஸங்களையும் பரித்யஜித்து "లోకవిక్రాంతచరణౌశరణం తేఽవ్రజం విభో-லோகவிக்ராந்தசரணௌஶரணம்தேவ்ரஜம்விபோ" என்று திருவுலகளந்தருளின திருவடிகளையுபாயமாக வரிக்கிறேனென்று புராணவசநப்ரக்ரியையாலே இதரோபாயபரித்யாகபூர்வகமாக ஶரணவரணம் பண்ணி, ஸ்வவசநத்தாலே ஶரணம்புகுகிறவளவிலும (௩) "ఐకాంత్య ప్రాప్త్యుపాయభూతభక్తితదుపాయసమ్యగ్జ్ఞానతదుపాయసమీచీనక్రియా-கைங்கர்யப்ராப்த்யுபாயபூதபக்திததுபாயஸம்யக்ஜ்ஞாநததுபாயஸமீசீநக்ரியா" என்று தொடங்கி "అదృష్టసన్తారోపాయః- அத்ருஷ்டஸந்தாரோபாயः" என்கிற இறுதியாக கைங்கர்யப்ராப்திக்கு உபாயமான பக்தி, ததுபாய ஜ்ஞாநயோகம், ததுபாயமான கர்மயோகம், ததங்கமான ஶமதமாதிகளாகிற ஸமஸ்தாத்மகுணங்களாலும்நிஹீநனாயிருப்பனென்றும், அநாதிபாபவாஸநையின் மிகுதியாலே இவற்றுக்கடியான ஆத்மஜ்ஞாநமுங்கூடவில்லாதபடி பகவந்மாயாதிரோஹித ஸ்வப்ரகாஶனாகையாலே அத்ருஷ்டஸந்தாரோபாயனாயிருப்பனென்று கர்மஜ்ஞாநாத்யுபாயவிஶேஷங்களினுடைய வநந்வயத்தை யருளிச்செய்து, (௩) "నిఖిలజనుజాతశరణ్య! శ్రీమన్నారాయణ! తవచరణారవిన్దయుగళం శరణమహం ప్రపద్యే-நிகிலஜநுஜாதஶரண்யஶ்ரீமந்நாராயண தவசரணாரவிந்தயுகளம் ஶரணமஹம்ப்ரபத்யே" என்று ஶரண்யகுணாநுஸந்தாநபூர்வகமாக ஸ்வாபராதபயநிவர்த்தகபுருஷகாரத்தைப் புரஸ்கரித்து ஆஶ்ரயணோபயோகிகல்யாணகுணவிஶிஷ்டனானவவன் திருவடிகளிலேஶரணம்புக்கார்.

ஶ்ரீவத்ஸாங்காசார்யரும், (உ) "త్వామామనన్తి-த்வாமாமநந்தி" என்கிற ஶ்லோகத்திலே-தேவரீர், ஜ்ஞாநக்ரியாபஜநங்களாகிற ஸாதநவிஶேஷங்களாலே லப்ய(ர்)ராகவும் அநயைரலப்யராகவும் சொல்லுவர்கள். அயோத்யாவாஸிகளான சராசரஸஹிதங்களானப்ராணிகள் இவற்றிலெந்தவுபாயத்தாலே ப(ர)ஜித்தார்களென்று வ்யதிரேகத்தாலே ஸித்தோபாயம் இதரஸாதநநிரபேக்ஷமென்னுமிடத்தை

(க) ஶரணாகதிகத்யம் (உ) வரதராஜஸ்தவ-ககூ

ரும் "தயாஸிந்தோ-கருணாம்ருதாப்தே" என்று பகவத்க்ருபையே உபாயமென்று உதாஹரணபூர்வகமாக வருளிச்செய்து (க)"ஸ்வநிஷ்டாபிஜ்ஞை:-ஸ்வகைர்க்குணைஸ்ஸ்வைஸ்சரிதை:"என்கிறஶ்லோகத்திலே ஶமதமாதிகுணவிஶிஷ்டராய்க்கொண்டு கர்மயோகாதிகளாலே தேவரைபஜிக்குமவர்களுக்கும் அவற்றைக் கார்யகரமாக்குவது தேவர்க்ருபையானபின்பு அந்த க்ருபையை எனக்கு அவலம்பமாக அநுஸந்தித்திருப்பனென்றருளிச்செய்து, (உ)"யத்யப்யஹம்-யதித்வ பக்தோபி" என்று கர்மஜ்ஞாநபக்திகளாகிற ஸாதநவிஶேஷங்களிலந்வயமில்லையேயாகிலும் தேவருடையக்ஷமாதயாதி மங்களகுணங்களுண்டாகையாலே தேவர் திருவடிகளை நான்வரிக்கக் குறையில்லையென்று இதரோபாயநிவ்ருத்திபூர்வகமாகப்ரபத்தியை பகவத்ப்ராப்த்யுபாயமாகவருளிசசெயதார்.

ஶ்ரீபராசரபட்டரும்,(ங)"ஜ்ஞாநக்ரியாபஜநஸம்பதகிஞ்சநோஹம்-ஜ்ஞாநக்ரியாபஜநஸம்பதகிஞ்சநோஹம்" இத்யாதிகளாலே கர்மயோகாதிகளென்ன, இச்சாதிகார ஶக்த்யநுஶயாதிகளென்ன, இவற்றிலொன்றிலுமெனக் கந்வயமில்லையென்று இதரோபாயஹாநியை முன்னிட்டு "ஶரணம்பவ-ஶரணம்பவ" என்று உபாயப்ரார்த்தநைபண்ணியருளினார். அபயப்ரதகுருஸூநுவான ஸுந்தரவரராஜாசார்யரும் இஶ்ஶ்லோகதாத்பர்யமருளிசசெய்கிறவிடத்தில் (ச) "மத்ப்ராப்த்யர்த்ததயா-மத்ப்ராப்த்யர்த்ததயா" இத்யாதியாலே என்னைப்பெறுகைக்குறுப்பாக என்னாலே சொல்லப்பட்ட எல்லாஸாதநங்களையும் ஸவாஸநமாகவிட்டு அநந்தரம் என்னை யொருவனையுமே என்னைப்பெறுகைக்குஸாதநமாக வ்யவஸாயத்தைப்பண்ணு; ஏவம்ரூப வ்யவஸாயயுக்தனான வுன்னை ஜ்ஞாநஶக்த்யாதி ஸகலகுணங்களாலும் பூர்ணனானநான் என்னைப்பெறுகைக்கு ப்ரதிபந்தகங்களான எல்லாப்பாபங்களாலும் விரஹிதனாக்குகிறேன்; ஶோகியாதே கொள்ளென்று இதரோபாய நிவ்ருத்திபூர்வகமான ஸித்தோபாயவரணத்தை இதுக்குத்தாத்பர்யமாக வருளிச்செய்தார்.

ஆகையாலே ஸகலஸாதநாஸஹமான ஸித்தோபாயத்தை ஸாதநாந்தர கர்மாதித்யாகவிதாநபூர்வகமாக விதிக்கையாலே இஶ்ஶ்லோ

(க) வர-ஸ்த-௯௪ (உ) வர-ஸ்த-௯௫ (ங) ரங்க-ஸ்த-அ௯
(ச) அஷ்டஶ்லோகி

கத்துக்கு ஸ்வாரஸிகமானவர்த்தம் துமேயென்னுமிடம் ஸர்வஸம் ப்ரதிபந்நமென்றதாயிற்று.

ஏவம்ரூபமான காமாத்யுபாயங்களைக் கிழடையப்பரக்கச்சொல்லி அநந்தரம் இந்தப்ரபத்தியைச்சொல்லி இதுக்கவ்வருகே யோருபாயம சொல்லாமையாலே, இத்தைச் சரமஸ்லோகமென்று நம்மாசார்யர்களருளிச்செய்வர்கள்.

[மாம்ஶரணம்வ்ரஜ-𑌮𑌾𑌂 𑌶𑌰𑌣𑌂 𑌵𑍍𑌰𑌜] என்னையே உபாயமாகப்பற்றென்று தானே யாதரித்துவிதிக்கையாலும், "𑌅𑌹𑌂 𑌤𑍍𑌵𑌾 𑌸𑌰𑍍𑌵𑌪𑌾𑌪𑍇𑌭𑍍𑌯𑍋 𑌮𑍋𑌕𑍍𑌷𑌯𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿-அஹம்ஸர்வபாபேப்யோமோக்ஷயிஷ்யாமி" என்றுதானே பாபவிமோசநம பண்ணுவிக்கக்கடவேனென்று ப்ரேமத்தோடே சொலலுகையாலும ஶரண்யாபி(பி)மதத்வம் இதுக்குத் தாத்பர்யம்.

"𑌸𑌰𑍍𑌵𑌧𑌰𑍍𑌮𑌾𑌨𑍍𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌜𑍍𑌯-ஸர்வதர்மாந்பரித்பஜ்ய" என்று ஸ்வவ்யதிரிக்த ஸமஸ்தஸாதநத்யாகத்தையுமசொல்லுகிறது. தவயத்தில ஈஶ்வரபாரதந்தர்ய நிபந்தநமாக வுபாயம்சொலலுகிறது. இதில ஈஶ்வரஸ்வாதந்த்ரய நிபந்தநமாக வுபாயம்சொலலுகிறது. ஆகையாலே ஈஶ்வரஸ்வரூபம் சொலலுகை இதுக்குப்ரதாநார்த்தம்.

இவ்வுபாயஸ்வீகாரம் ஸ்வீகார்ய ஸ்வரூபதர்ஶநத்திலல்லது கூடாமையாலே அநுஸந்தாநம் ஸௌலப்யமென்று நம்பூர்வாசார்யரகளருளிசசெய்வர்கள்; ஸ்வதந்த்ரனை யீஶ்வரனுககு ஸ்வரூபமானவுபாயத்வத்தை ப்ராதாந்யேந ப்ரதிபாதிக்கிறது. அது இதரோபாயத்யாகதநிலலலது கூடாமையாலே "ஸர்வதர்மாந்பரித்யஜ்ய" என்று ததங்கமான ஸாதநாந்தரத்யாகம் சொலலிற்று.

அவன் உபாயத்வோ ஆஶ்ரயணீயனும்போது ஆஶ்ரிதகதமான தோஷாதிகள் பாராமல் ஆஶ்ரயணீயனாகவேண்டுகையாலே தத்பயோகியான வாத்ஸல்யாதிகுணத்தை "மாம" என்கிறவிடத்திலே சொல்லுகிறது. அவ்வுபாயகார்யமான விஷ்டாநிஷ்டப்ராப்தி பரிஹாரங்களுக்கு ஓரதிகாரவிஶேஷாபேக்ஷை யுண்டாகையாலே அவ்வதிகாரிவிஶேஷணமான ஸித்தோபாயப்ரதிபத்தியை, "ஶரணம்வ்ரஜ" என்கிறவிடத்தாலே சொலலுகிறது; அவ்வுபாயகார்யமான பாபவிமோசநத்துக்கு அபேக்ஷிதமான ஜ்ஞாநஶக்த்யாதிகுணயோகத்தை "அஹம்" என்று காட்டுகிறது. ஸித்தோபாயத்வ ப்ரதிபத்தியுக்தனான வதிகாரியைக்காட்டுகிறது "த்வா" என்று; மேலில் பத

விஷயமும் உபாயக்ருத்யமான பாபவிமோசநத்தையும் உபாயஸ்வீகாரபலமான நைர்ப்ப(ர்)ர்யத்தையும் சொல்லுகிறது.

இதிற்சொல்லுகிற நிரபேக்ஷோபாயத்வமும் அநிஷ்டநிவ்ருத்தீஷ்டப்ராப்திப்ரதத்வமும் ஈஶ்வரனுக்கு ஸ்வரூபமாகையாலே இதுதான் ஈஶ்வரஸ்வரூபம் சொல்லுகிறதென்னவுமாம்; இந்த வுபாயவரணமும் தத்கார்யமான நிர்ப்பரத்வாநுஸந்தாநமும் பகவதேகரக்ஷ்யமாய் பகவதேகஶேஷமாயிருக்கிற வாத்மாவுக்கு ஸ்வரூபமாகையாலே ஆத்மஸ்வரூபம் சொல்லுகிறதென்றலுமாயிருக்கும்.

இதில் பூர்வார்த்தம் அதிகாரிக்ருத்யம் சொல்லுகிறது. உத்தரார்த்தம உபாயக்ருத்யத்தையும் அதிகாரிக்ருத்யலேஶத்தையும் சொல்லுகிறது. அதிகாரிக்குக்ருத்யம் இதரோபாயங்களைவிட்டு அவனையே உபாயமாகப்பற்றி நிர்ப்ப(ர்)ரனாயிருக்கை. உபாயத்துக்கு க்ருத்யம்-த்யாகஸ்வீகாரங்களுக்கு ப்ரேரகனாய் விரோதித்துப் பற்றுவிக்கையும, ஸ்வேநரூபேண நின்று அநிஷ்டநிவ்ருத்தீஷ்டப்ராப்திகளைப்பண்ணுகையும்.

(ஸர்வதர்மாநித்யாதி) இதில் தர்மஶப்தம் இஶ்ஶ்லோகத்தில் ப்ரதாநப்ரதிபாத்யமான ஸித்தோபாயத்தினுடைய ஸ்வீகாரத்துக்கு அங்கமான த்யாகத்துக்கு விஷயமான ஸகலதர்மங்களையும உபாதாநம் பண்ணுகிறது.

இதுதான் - "ஶ்ரேயஸ்ஸாதநம்தர்ம:" என்று பலஸாதநதயா ஸ்வஸாத்யமாக ஶாஸ்த்ரசோதி(தி)தமான தர்மங்களைசசொலலுகிறதாய், அத்தாலே ஜ்ஞாநயோகத்துக்கு ஸாதநமாகவிதிக்கும் கர்மயோகத்தையும், பக்தியோகத்துக்கு ஸாதநமாகவிதிக்கும் ஜ்ஞாநயோகத்தையும் சொல்லுகிறதென்னில் ;-(க)"रामो विग्रहवान् धर्मः-ராமோவிக்ரஹவாந்தர்ம:" (உ)"कृष्णं धर्मं सनातनम्-க்ருஷ்ணம் தர்மம் ஸநாதநம்" என்கிற ஸநாதநதர்மத்துக்கு தர்மஶப்தவாச்யத்வமின்றியிலேயொழியும் ; அப்போது "ஶரணம்வ்ரஜ" என்கிறவிதிக்கு வையர்த்த்யம் ப்ரஸங்கிக்கும்; மோக்ஷயிஷ்யாமியோடும் விரோதிக்கும்; ஆகையாலே இத்தர்மஶப்தம்-"ஶ்ரேயஸ்ஸாதநதர்ம:"என்றும், "चोदनालक्षणोऽर्थो धर्मः-சோதநாலக்ஷணோர்த்தோதர்ம:" என்

(க) ரா-ஆர-௩௭-௪௫ (உ) பாரத-ஆர-அஅ

ம் சொல்லுகிறபடியே பல[illegible]ஸாத்யஸாதநங்களான தர் மத்தைச் சொல்லக்கடவது.

இந்த தர்மஶப்தந்தான், தர்மமென்றும், பரதர்மமென்றும், பரமதர்மமென்றும் த்ரிவிதமாயிருக்கும். இதில தர்மஶப்தத்தாலே (க) "శృణుష్వ పరమం కర్మ ద్వివిధం తదిహోచ్యతే । ఏకం ప్రవర్తకం ప్రోక్తం నివర్తక మథాపరమ్ । కామతస్తు కృతం కర్మ ప్రవృత్తముపదిశ్యతే । నిష్కామం జ్ఞానపూర్వన్తు నివృత్తముపదిశ్యతే । ప్రవర్తకఞ్చ స్వర్గాదిఫలసాధనముచ్యతే । నివర్తకాఖ్యం వేదేషు విజ్ఞేయం మోక్షసాధనమ్-ஶ்ருணுஷ்வ பரமம் கர்ம த்விவிதம் ததிஹோச்யதே। ஏகம் ஸம்ப்ரவர்த்தகம்ப்ரோக்தம்நிவர்த்தகமதாபரம்। காமதஸ்துக்ருதம் கர்மப்ரவ்ருத்தமுபதிஶ்யதே । நிஷ்காமஞ்ஜ்ஞாநபூர்வந்துநிவ்ருத்தமுபதிஶ்யதே । ப்ரவர்த்தகஞ்சஸ்வர்க்காதிபலஸாதநமுச்யதே । நிவர்த்தகாக்யம்வேதேஷு விஜ்ஞேயம்மோக்ஷஸாதநம்" என்கிறபடியே லோகத்தில் கர்மம் இரண்டுபடியாகச் சொல்லப்படாநின்றது. அவைநகேள்! ப்ரவர்த்தககர்மமென்றும், நிவர்த்தககர்மமென்றும்; அதில ப்ரவர்த்தகமாவது-பலாபிஸந்தியோடே ஸ்வர்க்கஸாதநமாக வநுஷ்டிக்கும் ஜ்யோதிஷ்டோமாதிகள். நிவர்த்தகமாவது-பலாபிஸந்திரஹிதனுப்கொண்டு ஸ்வரூபஜ்ஞாநபூர்வகமாக வர்ணாஶ்ரமதர்மங்களை இதிகர்த்தவ்யதயா அங்கமாகக்கொண்டு மோக்ஷஸாதநமாக வநுஷ்டிக்கும் கர்மயோகாதிகளென்று த்விவிதமாகச் சொல்லுகிற கர்மங்களில், ஸ்வர்க்காதிஸாதநமான ஜ்யோதிஷ்டோமாதிகளைச் சொல்லுகிறது.

பரதர்மஶப்தத்தாலே பந்தகமான ஸ்வர்க்காதிபுருஷார்த்தஸாதநங்களிற்காட்டில் மோக்ஷஸாதநமாகையாலே விலக்ஷணமாய் ஸாத்யமான கர்மயோகாதிகளைச் சொல்லுகிறது. பரமதர்மஶப்தத்தாலே க்ஷுத்ரபலஸாதநமுமின்றிக்கே ஸ்வயத்நஸாத்யமுமின்றிக்கே விததமுமாய் பரமபுருஷார்த்தஸாதநமுமாய், (உ) "యే చ వేదవిదో విప్రా యే చాధ్యాత్మవిదో జనాః । తే వదన్తి మహాత్మానం కృష్ణం ధర్మం సనాతనమ్-யேச வேதவிதோவிப்ரா யேசாத்யாத்மவிதோஜநா: । தேவதந்திமஹாத்மாநம் க்ருஷ்ணந்தர்மம்ஸநாதநம்" என்று வேதவித்துக்களாய் பூர்வபாக(ஞ)நிஷ்டரானவரோடு அத்யாத்மவித்துக்களாய் உத்தரபாக(ஞ)

(க)

(உ) பார-ஆர-அஅ

நிஷ்டாநுரோதேவாச்ரயஸாதநதர்மமென்று சொல்லப்படுவதாய் ஸர்வாதிரிக்தமான ஸித்தஸாதநத்தைச் சொல்லுகிறது.

இத்தர்மஶப்தம் பலஸாதநதர்மவாசகமாகையாலே இவை மூன்றையும் சொல்லுமேயாகிலும் மோக்ஷோபாயம் சொல்லுகிற ப்ரகரணமாகையாலும், முமுக்ஷுவான இவ்வதிகாரிக்கு ஸ்வர்க்காதி புருஷார்த்தங்களில் அபேக்ஷையில்லாமையாலும், இங்கு த்யாஜ்யதயா தர்மஶப்தோக்தமாயிற்று-ஸ்வர்க்காதிஸாதநமான ஜ்யோதிஷ்டோமாதிகளுமன்றிக்கே ஸ்வீகார்யத்வேந விதிக்கையாலே பரமதர்மமுமன்றிக்கே மோக்ஷஸாதநதயா ஶாஸ்த்ரசோதிதமாய் ஸாத்யமான பரதர்மமாத்ரமென்னுமிடம் ப்ரகரணபலத்தாலும் விதிபலத்தாலும் ஸித்தம்.

இப்படிப் பரதர்மம் த்யாஜ்யமாகச் சொல்லுகையாலும், ஸ்வதந்த்ரஸாதநமான பரமதர்மம் அங்கமாகமாட்டாமையாலும், பரதர்மாங்கமான பரமதர்மமும் த்யாஜ்யத்வேந உபாதாநம்பண்ணப்படுகிறது. அந்யானதர்மங்களில் அபேக்ஷையில்லாதபோதே அங்கத்திலும் அபேக்ஷையில்லையிறே.

இதில் பஹுவசநத்தாலே (௧) “కర్మణైవహి సంసిద్ధిమాస్థితా జనకాదయః-கர்மணைவஹி ஸம்ஸித்திமாஸ்திதா ஜநகாதய:” என்று ஸ்வதந்த்ரஸாதநமாகவும், (௨) “సర్వం కర్మాఖిలం పార్థ జ్ఞానే పరిసమాప్యతే-ஸர்வம் கர்மாகிலம் பார்த்த ஜ்ஞாநே பரிஸமாப்யதே” (௩) “కషాయే కర్మభిః పక్వే తతో జ్ఞానం ప్రవర్తతే-கஷாயே கர்மபி: பக்வே ததோ ஜ்ஞாநம்ப்ரவர்த்ததே” என்று அங்கஸாதநமாகவும் சொல்லப்பட்ட கர்மயோகமும், (௪) “నహి జ్ఞానేన సదృశం పవిత్రమిహ విద్యతే । జ్ఞానాగ్నిస్సర్వకర్మాణి భస్మసాత్కురుతే తథా-நஹி ஜ்ஞாநேந ஸத்ருஶம் பவித்ரமிஹ வித்யதே। ஜ்ஞாநாக்நிஸ்ஸர்வகர்மாணி பஸ்மஸாத்குருதே ததா” (௫) “జ్ఞానాదేవ చ కైవల్యం ప్రాప్యతే యేన ముచ్యతే- ஜ்ஞாநாதேவ சகைவல்யம்ப்ராப்யதே யேந முச்யதே” என்று ஸ்வதந்த்ரஸாதநரூபமாயும், இந்தஜ்ஞாநம் தைலதாராவதவிச்சிந்ந ஸ்ம்ருதிஸந்தாநரூபமாய், அநவரதபா(భా)வநாரூபையான பக்தியாய்ப் பரிணதமாகையாலே பக்த்யங்கமாகவும் சொல்லப்பட்ட ஜ்ஞாநயோகமும், (௬) “ఉభాభ్యామేవ పక్షాభ్యాం-உபாப்யாமேவ பக்ஷா

(௧) கீ-௩ ௨௦ (௨) கீ-௪-௩௩ (௩)
(௪) கீ-௪-௩௮ (௫) (௬) நாரஸிம்ஹபு

ப்யாம்" இத்யாதியாலே மோக்ஷஸாதநமாகச்சொல்லப்பட்ட கர்ம ஜ்ஞாநஸமுச்சயமும். (க) "భక్త్యాత్వనన్యయాశక్యః-பக்த்யாத்வநந்யயாஶக்ய:" (உ) "స్వకర్మజ్ఞానవైరాగ్యసాధ్యభక్త్యేకగోచరః-ஸ்வகர்மஜ்ஞாநவைராக்யஸாத்யபக்த்யேககோசர:" என்று கர்மஜ்ஞாநஸாத்யமாய் மோக்ஷஸாதநமாகச் சொல்லப்பட்ட பக்தியோகமும்,

(௩) "జన్మ కర్మ చ మే దివ్యమేవం యో వేత్తి తత్త్వతః। త్యక్త్వా దేహం పునర్జన్మ నైతి మామేతి సోఽర్జున-ஜந்மகர்மசமேதிவ்யமேவம்யோவேத்தி தத்த்வத:। த்யக்த்வாதேஹம்புநர்ஜந்மநைதிமாமேதிஸோர்ஜுந" என்று என்னுடைய திவ்யமான அவதாரத்தையும் அதில் திவ்யவ்யாபாரங்களையும் யாவனொருவன் உண்மையாகவறிகிறான்; அவன் ஶரீரத்தைவிட்டுப்போனால் மீண்டுபிறவான்; என்னை ப்ராபிக்குமென்கிற (௪) "நிலவரம்பில பலபிறப்பாய்" என்கிற அவதாரரஹஸ்யஜ்ஞாநமும்,

(௫) "యో మామేవమసమ్మూఢో జానాతి పురుషోత్తమమ్ స సర్వవిద్భజతి మాం సర్వభావేన భారత- யோமாமேவமஸம்மூடோஜாநாதிபுருஷோத்தமம்। ஸஸர்வவித்பஜதிமாம்ஸர்வபாவேநபாரத" என்று யாவனொருவன் என்னை அஸம்மூடனாய்க்கொண்டு புருஷோத்தமனாகவறிகிறான்; இந்தப் புருஷோத்தமத்வஜ்ஞாநமாகிறது த்ரிவிதசேதநாசேதநங்களினுடையவும் ஸ்வரூபஸ்வபாவங்களை யதாவாகவறிந்து அவற்றில் வ்யாவ்ருத்தனாகவும், (௬) "ఉత్తమః పురుషస్త్వన్యః పరమాత్మేత్యుదాహృతః। యో లోకత్రయమావిశ్య బిభర్త్యవ్యయ ఈశ్వరః - உத்தம:புருஷஸ்த்வந்ய:பரமாத்மேத்யுதாஹ்ருத:। யோலோகத்ரயமாவிஶ்ய பிபர்த்யவ்யயஈஶ்வர:" என்கிற ந்யாயத்தாலே அவற்றுக்கு வ்யாபகனாகவும் தா(தா)ரகனாகவும் நியாமகனாகவும் நிற்கையாலே அவனெல்லாமறிந்தவனாகையாலே அவன் ஸர்வபாவத்தாலும் என்னையடைந்தவனென்றும், (௭) "ఇతి గుహ్యతమం శాస్త్రమిదముక్తం మయానఘ। ఏతద్బుద్ధ్వా బుద్ధిమాన్ స్యాత్ కృతకృత్యశ్చ భారత- இதிகுஹ்யதமம்ஶாஸ்த்ரமிதமுக்தம்மயாநக। ஏதத்புத்த்வாபுத்திமாந்ஸ்யாத்க்ருதக்ருத்யஶ்சபாரத" என்றிப்படி குஹ்யதமமான இந்தஶாஸ்த்ரம் இதுகேட்கைக்கு அதிகாரியாம்படி நீ அபாபனாகையாலே உனக்குஎன்னாலே சொல்லப்பட்டது; இந்தப்

(க) கீ-கக-டுச (உ) கீதார்த்தஸங்க்ரஹ (௩) கீ-௪-௯
(௪) திருவாய்-க-௩-உ (௫) கீ-க௫-க௯ (௬) கீ-க௫-க௭ (௭) கீ-க௫-உ0

புருஷோத்தமத்வத்தை புத்திபண்ணினவன் அபிமதபலாபத்தாலே க்ருதக்ருத்யனுமென்கிற, (௩) "ஆமெனப்பாரியலன்னோரில்லை" என்கிற புருஷோத்தமவித்தையும்,

(௨) "దేశోయంసర్వకామధుక్-தேசோயம்ஸர்வகாமதுக்" (௩) "మధురానామనగరీపుణ్యాపాపహారీశుభా - மதுராநாமநகரீ புண்யாபாபஹாரிணீ" என்று ஸர்வகாமபலப்ரதமாகவும், அதிஷ்டத்ருக்திஷ்டப்ராப்திப்ரதமாகவும் ஸ்வயம்ப்ராப்யமாகவும் சொல்லுகிற புண்யக்ஷேத்ர வாஸமும், -

(௪) "స్తువన్నామసహస్రేణనిత్యంభక్తిసమన్వితః। సర్వపాపవిశుద్ధాత్మా యాతిబ్రహ్మసనాతనమ్-ஸ்துவந்நாமஸஹஸ்ரேண நித்யம் பக்திஸமந்வித: ஸர்வபாபவிசுத்தாத்மா யாதி ப்ரஹ்மஸநாதநம்" என்று பக்தியுக்தனாய்க்கொண்டு அவன் திருநாமங்களைச்சொல்லி ஸ்தோத்ரம்பண்ணுமவன் ஸர்வபாபங்களும்போய் ஶுத்தாத்மாவாய் ஸநாதநமான ப்ரஹ்மத்தை ப்ராபிக்குமென்கிற (௫) "பாடீரவன்நாமம் வீடுபெறலாமே" என்று சொல்லுகிற திருநாமஸங்கீர்த்தனமும்.

(௬) "கடைத்தலைசீய்க்கப்பெற்றால் கடுவினைகளையலாம்" என்றும், *மாகந்தநீர்கொண்டு தூவிவலம்செய்கையும் (௭) "பூவிற்புகையும் விளக்கும்சாந்தமும் நீருங்கொண்டு" (௮) "பூசனைசெய்கின்றார்கள் புண்ணியம்செய்தவாறு" என்கிறபடியே பூசனைசெய்கையும், (௯) "புண்ணியம்செய்து நல்லபுனலொடுமலர்கள்தூவி யெண்ணுமின் எந்தைநாமம் இப்பிறப்பறுக்கும்" என்று இத்யாதிகளாலே சொல்லப்பட்ட திருவிளக்கெரிக்கை திருமாலையெடுக்கை திருவலகிடுகை முதலான ஸாதநபுத்தியாலே செய்யப்படுவதாய், ருசிபேதத்தாலும் பாகபேதத்தாலும் அத்யந்தபிந்நமாய் ஆகமபேதத்தோபாதி அஸங்க்யாதமான வுபாயவிசேஷங்களைச் சொல்லுகிறது.

அதவா, கர்மஜ்ஞாநபக்திகளுடைய அவாந்தரபாஹுள்யத்தைப்பற்ற பஹுவசநமாகவுமாம், அதில் கர்மம்-அக்நிஹோத்ர தர்ஶ பூர்ணமாஸாக்நிஷ்டோம தீர்க்கஸத்ராதிரூபேண பஹுவிதம். ஜ்ஞாநமும் உபாஸ்யவஸ்துஸ்வரூபபேதத்தைப்பற்றி வருகிற ஸத்வித்

(௧) பெரிய-தி-௧-௧-௩ (௨) காருடபுரா (௩)
(௪) ஸஹஸ்ரநாம (௫) தி-வாய்-௧௦-௫-௫ (௬) தி-வாய்-௧௦-௨-௮
(௭) தி வாய் ௫-௨-௧ (௮) தி-வாய்-௧௦-௨-௪ (௯) தி-வாய்-௧௦-௨-௫

யதாஹாவித்யாதிபேதத்தாலே பஹுவிதம்; பக்தியும் (க) "[illegible] [illegible] ஸம்ஸித்தம் கீர்த்தயந்த:" (உ) "మన్నాథా:-மச்சரபா:" இத்யாதி-
களிற சொல்லுகிற அர்ச்சநஸ்தவப்ரணாமாதிகளாலே பஹுவிதமாய்
இப்படிவருகிற வ்யக்த்யாநந்த்யத்தைச் சொல்லுகிறது; பஹுவிதமு-
மென்று சொல்லுவர்கள்; ஆக பஹுவசநத்தாலே மோக்ஷ[illegible]
த்யாபாதாநமாகச் சொல்லுகிற கர்மங்களினுடைய ஆநந்த்ய[illegible]
யும் ப்ரதிவ்யக்தியிலுண்டான வாநந்த்யத்தையும் சொல்லிற்
ற்று, (ரு) "நெறியெல்லாமெடுத்துரைத்த" என்னக்கடவதிறே.

இதில், "தர்மாந்" என்கிற த்விதீயாந்தம்-இந்தநாமங்கள் மேற்
சொல்லுகிற த்பாகத்துக்கு விஷயமென்னுமிடத்தைக் காட்டுகிறது;
ஆகையாலே பகவதுபாயவரணம் பண்ணுமதிகாரிக்கு தத்வ்யதிரிக்
த ஸகலஸாதபதார்மகளும் த்யாஜ்யமென்றதாயிற்று.

இந்தர்மவிசேஷணமான ஸர்வசப்தம் த்ரைவர்ணிகஸாதார
ணமாய் பாஹ்மசாயாத்யாச்ரமங்கள்தோறும் அநுவ்ருத்தமாய,(சு)
"సన్ధ్యాహీనో ఽశుచిర్నిత్యమనర్హస్సర్వకర్మసు-ஸந்த்யாஹீநோசுசிர்நித்யமநர்
ஹஸ்ஸர்வகர்மஸு" "తే త్వఘం భుఞ్జతే పాపాః - தேத்வகம் புஞ்சதே
பாபா:" என்று-பாபத்தையே புஜிக்கிறவர்களாகையாலே அவர்
கள்பாபிஷ்டர்களென்றும், அநநுஷ்டாநத்தில் ஸாவகாமாநர்ஹராக
வும், அநுஷ்டாநத்தில் அர்ஹராகவும் சொல்லுகையாலே இந்தக்
கர்மாநுஷ்டாநத்துக்கு யோக்யதாபாதகங்களான (ரு) "ஓதியுரு
வெண்ணுமந்தி" "ஐவேள்வி" என்கிற ஸந்த்யாவந்தந பஞ்சமஹாயஜ்
ஞாதிகளைச் சொல்லுகிறது.

கர்மயோகாதிகளுக்கு யோக்யதாபாத(ட)கமாகில் இக்கர்மங்
கள், இவற்றையொழிய வுதயமில்லாத ப்ரதாநகர்மங்களுக்கு த்பாக
விஷயத்வம் சொன்னபோதே (சா)"సాధ్యాభావే మహాబాహో సాధనైః కిం ప్ర
యోజనమ్-ஸாத்யாபாவே மஹாபாஹோ ஸாதநை:கிம்ப்ரயோஜநம்" எ
ன்று ஸாத்யமில்லாதபோது ஸாதநங்களாலே யென்னப்ரயோஜந
முண்டென்கிற ந்யாயத்தாலே இதுக்கும் த்பாகவிஷயத்வம் சொல்
லிற்றாகாதோ; ஆயிருக்க ஸர்வசப்தத்தாலே பிரியச்சொல்லவேண்
டுகிறதென்னென்னில்;

(க) கீ-க-கச (உ) கீ க-௯ச (உ) தி-வாய்-[illegible]
(சு) தக்ஷஸ்ம்ரு (ரு) க-திருவ-௯௯ (சா) வி-பு-[illegible]

ஸாதநமான தர்மத்துக்கு யோக்யதாபாதகமாயிருக்கிற ஆநுகூல்யமில்லையேயாகிலும், "ஸ்ரேயஸ்ஸாதகம் தர்ம:" என்கிற ந்யாயத்தாலே மோக்ஷஸாதநகர்மமே இத்தர்மஶப்தத்துக்கு அர்த்தமென்று நினைக்கையாயிருக்கையாலே அவற்றுக்கு த்யாகவிஷயத்வம் சொல்லுகிறதென்று தோன்றுகையாலும், த்யாகவிஷயத்வமில்லாதபோது "ஸக்ஷ்ஸ்பர்ஶஸ்து-அநர்ஹஸ்ஸர்வகர்மணாம்" என்று ஸர்வகர்மாநர்ஹத்வம் சொல்லுகையாலே "ஶரணம்வ்ரஜ" என்கிற ஸித்தஸாதநஸ்வீகாரத்துக்குமநர்ஹனாய், அதுக்கும் இதரயோக்யதாபாதகதர்மங்கள் அபேக்ஷிதமாமென்று வருகிற ஶங்கையைப் பரிஹரிக்கைக்காக ஸர்வஶப்தத்தாலே பிரித்துச்சொல்லுகிறது.

வக்ஷ்யமாணமான ஸ்வீகாரத்துக்கு (க)"வைத்தேன்மதியால்" (உ) "அவனதருளாலுறற்பொருட்டு என்னுணர்வினுள்ளேயிருத்தினேன்". (ங)"யானுமென்னெஞ்சுமிசைந்தொழிந்தோம்" இத்யாதிகளிற்படியே அறிவும் அநுமதியும் இசைவுமேயிறே அபேக்ஷிதம். அதுதானும், (ச) "என்னிசைவினை" (ரு) "இசைவித்தென்னை" (உ) "அவனதின்னருளே" என்று பரஸ்வாதீநமாயிறே யிருப்பது. அதுக்குவேண்டுவது சைதந்யமாத்ரமேயிறே;

அதறிக்கே, ஸர்வகாமங்களுக்கும் யோக்யதையபேக்ஷிதமாகில் இந்த ஸாதநபாவஸ்தைக்கும் யோக்யமாக ஒரு ஸத்பாவஸ்தை அபேக்ஷிதமாகவேண்டிவரும்; அதுகாணாமையாலே அவை இதுக்கநபேக்ஷிதங்கள்;

(சு) "దురాచారోపిసర్వాశీకృతఘ్నో నాస్తికః పురా। సమాశ్రయేదాదిదేవం శ్రద్ధయాశరణంయది। నిర్దోషంవిద్ధితంజన్తుంప్రభావాత్పరమాత్మనః-துராசாரோபி ஸர்வாஶீ க்ருதக்நோ நாஸ்திக: புரா। ஸமாஶ்ரயேதாதிதேவம் ஶ்ரத்தயா ஶரணம் யதி। நிர்தோஷம் வித்தி தம் ஜந்தும் ப்ரபாவாத்பரமாத்மந:" என்று நிஷித்தாசாரனாய் ஸர்வாஶியாய் பிறர்பண்ணின உபகாரத்தை இல்லைசெய்து திரிபவனாய், தர்மாதர்மங்களும் பரலோகமும் பரதேவதையுமில்லையென்று திரிபவனாய் இவ்வஸம்ர்யாதையிலே பழகவடிபட்டுப்போந்தவனாயிருக்குமவனும் ஸர்வகாரணபூதனான ஸர்வேஶ்வரனை ஶ்ரத்தையோடே ஶரணமாக ஆஶ்ரயித்தா

(க) தி-வாய-அ-எ (உ) தி-வாய-அ-அ-கூ (ங) பெரியதிருவ-உசு
(ச) தி-வாய-க-எ-ச (ரு) தி-வாய-ரு-அ-கூ (சு) ஸாத்வதஸ-௳கக

ளுகில் அந்த ஜந்துக்களை ஶரண்யனான பரமாத்மாவின் ப்ரீதிக்காக நிர்த்தோஷர்களாகவே புத்திபண்ணுகைகையாலே இந்த ஸ்வீகாரத்துக்கு இவையபேக்ஷிதமென்று சொல்லிற்றிறே.

அங்ஙனன்றிக்கே (க) "తతస్సాగరవేలాయాం దర్భానాస్తీర్య రాఘవః । అఞ్జలిం ప్రాఙ్ముఖః కృత్వా ప్రతిశిశ్యే మహోదధేః - ததஸ்ஸாகரவேலாயாம் தர்ப்பானாஸ்தீர்ய ராகவ: । அஞ்ஜலிம் ப்ராங்முக: க்ருத்வா ப்ரதிஶிஶ்யே மஹோததே:" என்று கடற்கரையிலே ப்ராங்முகத்வாதி நியமங்களோடே புல்படுத்துக் கையுமஞ்ஜலியுமாய்க் கிடந்து ஶரணவரணம் பண்ணினவர்க்கு இந்த யோக்யதையும், (௨) "చాపమానయ-சாபமாநய" என்கிற ஸாதநாந்தரத்தில் நினைவுமிறே அது பலியாதொழிந்தது.

(௩) "రావణో నామ దుర్వృత్తః-ராவணோ நாம துர்வ்ருத்த:" என்று தனக்குண்டான தண்மையை முன்னிட்டு ஶரணம்புக்க ஸ்ரீவிபீஷணாழ்வானுக்குத் தன்னபிமதஸித்தியும் பிறந்து (௪) "సముద్రం రాఘవో రాజా శరణం గన్తుమర్హతి-ஸமுத்ரம் ராகவோ ராஜா ஶரணம் கந்துமர்ஹதி" என்று பிறர்க்கும் உபதேஶிக்கைக்கு அதிகாரமுண்டாகக் காண்டோமிறே. ஆகையாலே யோக்யதை தேடவும் வேண்டா; அயோக்யதை போக்கவும் வேண்டா; உண்டான யோக்யதை ப்ரதிபந்தகமென்றும், அயோக்யதை பற்றாசென்று நிற்கையே அதிகாரம்.

அதுக்குமேல் யோக்யதாஸாபேக்ஷமென்னில், அவை த்ரைவர்ணிகாதிகாரமாகையாலே இதினுடைய ஸர்வாதிகாரத்வமும் பக்ந(భగ్న)மாம். ஆக மேற்சொல்லுகிற ஸ்வீகாரத்துக்கு இங்குச் சொல்லுகிற யோக்யதை அநபேக்ஷிதமென்கைக்காகப் பிரித்துச் சொல்லுகிறதென்றதாயிற்று.

ஆனால், (௫) "శాన్తో దాన్త ఉపరతస్తితిక్షుః సమాహితో భూత్వాత్మన్యేవాత్మానం పశ్యేత్ - ஶாந்தோ தாந்த உபரதஸ்திதிக்ஷு: ஸமாஹிதோ பூத்வா ஆத்மந்யேவாத்மாநம் பஶ்யேத்" என்று பாஹ்யாப்யந்தரேந்த்ரிய நியமங்களையுடையவனாய் ஸர்வபோகத்திலுமுபரதனாய் ஸம்ஸாரநிஸ்தரணேச்சையுடையனாய் ஏகாக்ரசித்தனாய்க்கொண்டு ஹ்ருதயத்திலே பரமாத்மாவை த்யானம்பண்ணுவானென்கிற ஜ்ஞானயோக ஸாதநமான ஶமதமாத்யாத்மகுணங்களும் ஸத்யார்ஜவதயாதிகளும்

(க) ரா-யு-உக (௨) ரா-யு-உக-உஉ (௩) ரா-யு-கஎ-க0

(௪) ரா-யு-உ0 (௫) ப்ருஹ-௬-ச உ௩

ஸாத்விகதாஸ்திக்யாதிகளும் இதுக்கு அபேக்ஷிதமாகையாலே இந்த ஸ்வரூபத்திலே உபாத்தமானாலோவென்னில்; அவை உபாயோபகாரமுமின்றிக்கே உபாயஸ்வீகாராங்கமுமின்றிக்கேயிருந்தாலும் ஸித்தோபாயத்திலே அதிக்ருதனானவனுக்கு அந்தவுபாயபலமாய்க் கொண்டு ஸம்பாவிதங்களான ஸ்வபாவங்களாகையாலே ப்ராப்யந்தோடே உபாதேயமாமதொழிய த்யாஜ்யமாகாது;

ஆத்மகுணமானவிவை த்யாஜ்யமென்னில், ஶேஷஶேஷித்வ ரக்ஷ்யரக்ஷகத்வ போக்த்ருத்வ போக்யத்வ ஜ்ஞாநாதிகளும் த்யாஜ்யமாகவேண்டிவரும்; அப்போது ஸ்வஸத்தாபோகாதிகளுமின்றியிலே யொழியும்; ஆகையாலே ஶமதமாதிகள் த்யாஜ்யமென்னவொண்ணாது;

இஸ்ஸர்வஶப்தத்திலே, (௧) "[illegible] லோகஸங்க்ரஹமேவாபிஸம்பஶ்யந்கர்த்துமர்ஹஸி" என்று லோகத்திலுள்ளார் ஆதரிக்கைக்கு உறுப்பாகவுமநுஷ்டிக்கைக்கு அர்ஹனாகாநின்றுமென்ற பூர்வோக்தகர்மங்களும், புத்ரனைப்பெற்ற பிதா அநுஷ்டிக்கும் ஜாதகர்மநாமகரணாதிகளும் த்யாஜ்யதயா உபாதாநம் பண்ணப்படுகிறது.

ஸ்வீகார்யமான உபாயம் ஸ்வவ்யதிரிக்த ஸமஸ்தப்ரவ்ருத்தி நிரபேக்ஷமாயிருக்கையாலே கர்மாநுஷ்டாநத்தாலே நஷ்டகஷாயனாய் ஜ்ஞாநயோகத்தைப்பெற்ற அதிகாரி ஸாத்யஸித்த்யநந்தரம் ஸாதநஸாபேக்ஷையில்லாமையாலே அந்தக்கர்மத்தை நிவர்த்திக்கில், ஜ்ஞாநயோகாநுகுணபாகமில்லாதவனும், (௨) "[illegible] யத்யதாசரதிஶ்ரேஷ்ட:" என்கிற ந்யாயத்தாலே கர்மாநுஷ்டாநத்தைத்தவிரும்; ஜ்ஞாநயோகத்திலந்வயமில்லாதே கர்மத்தைவிட்டால் உபயப்ரஷ்டனாய் நஶிக்கும்; அவனுக்கு நாஶகமானபாபம் கர்மத்தினின்றும் நிவ்ருத்தனான ஜ்ஞாநயோகாதிகாரியை ஸ்பர்ஶிக்கும்; ஆகையாலே ஜ்ஞாநயோகத்துக்கு ப்ரதிபந்தகமாகையாலே அவனுக்கு லோகஸங்க்ரஹார்த்த ப்ரவ்ருத்திகளும் ஜாதகர்மநாமகரணாதிகளும் அநுஷ்டிக்கவேணும்; இவன் ஸித்தஸாதநஸ்வீகாரம் பண்ணினவனாகையாலே ஸாத்யமானஜ்ஞாநயோகலாபமில்லையென்

---

(௧) கீ-௩-௨௦ (௨) கீ-௩-௨௧

திறவலாபமில்லாமையாலும், ஸ்வீக்ருதமானவுபாயம் "நச்சுமாமருந்தம்" என்கிறபடியே அத்யந்தஸௌலப்யமாகையாலே பாபஸ்பர்ஶமுண்டாமென்கிற பயமில்லாமையாலும், "ஸர்வதர்மாந் பரித்யஜ்ய மாமேகம் ஶரணம் வ்ரஜ அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி" என்கிற வுபாயத்தையெடுத்துறுகைப்பாலே ஸ்வநிவர்த்யமாயிருப்பதொரு பாபமில்லாமையாலும், இவனுக்கு அநுஷ்டேயமல்ல; இனி அநுஷ்டித்தானாகில் ஆநுஶம்ஸ்யப்ரேரிதனாய் அநுஷ்டித்தானித்தனை; புத்ரார்த்தமான பும்ஸவநாதிகளும் பாபபயப்ரேரிதனாயநுஷ்டிக்கக்கடவனல்லன்; உபாயோபகாரபுத்த்யாவுமின்றிக்கே கர்த்தவ்யபுத்த்யாவுமின்றிக்கே ஆநுஶம்ஸ்யத்தாலே செய்கையாலே அதுவும் பாபவிஶேஷணமான ஸர்வஶப்தத்திலே அந்தர்ப்பூதமாய் மோக்ஷயிஷ்யாமியிலே அந்வயித்து ஈஶ்வரைகநிவர்த்யமாம்; ஆகையாலே லோகஸங்க்ரஹார்த்தப்ரவ்ருத்தி இவனுக்கு த்யாஜ்யமென்றதாயிற்று.

சிலர் யோக்யதாபாதகதர்மங்கள் அப்ருதக்தர்மங்களாகையாலும், தர்மஶப்தம் ஸாங்கமான ஸாதநதர்மங்களைச் சொல்லுகையாலே யோக்யதாபாதகங்களும் தர்மஶப்தந்தன்னிலே உக்தமாகையாலும், தர்மஶப்தவிஶேஷணமான ஸர்வஶப்தம் யோக்யதாபாதகதர்மவாசகமாகமாட்டாது; ஆகையால் ஸர்வஶப்தம் ஸாகல்யவாசியாமித்தனையென்பர்கள்; தர்மஶப்தம் ஶ்ரேயஸ்ஸாதநதர்மவாசியாகையாலே யோக்யதாபாதகதர்மவாசகமாகமாட்டாமையாலும் ஸாகல்யம் தர்மஶப்தஸ்தமான பஹுவசநத்தாலே ஸித்தமாகையாலும் யோக்யதாபாதகதர்மமும்கூட த்யாஜ்யதர்மவாசகதர்மஶப்தவிஶேஷண ஸர்வஶப்தத்திலே உபாத்தமாய் த்யாஜ்யமென்கையாலே தர்மங்களினுடைய நிரவஶேஷத்யாகமும் பலிக்கையாலும், ஸத்ஸம்ப்ரதாயஸித்தஸதாசார்யர்களெல்லாரும் ஸர்வஶப்தம் யோக்யதாபாதகதர்மவாசகமாக அருளிச்செய்கையாலும், ஸாகல்யவாசியென்கிறது அர்த்தமன்று;

இந்ததர்மங்கள் உபாயோபயோகியன்றாகிலும், (க) "[illegible] விஹிதத்வாச்சாஶ்ரமகர்மாபி" என்று வர்ணாஶ்ரமவிஹிதமாகையாலே யநுஷ்டேயமாகாதோவென்னில்; உபாயப்ரகரணமாகையாலே உபாயத்துக்கு யோக்யதாபாத(ஃ)கமானவற்றை வாசகா

(க) ப்ரஹ்மஸூ-௩-௪-௩௨.

மொழிய விஹிதமாய்வருகிற வாகாரம் இவ்விடத்திலே அப்ரஸ்துத மாலகையாலே த்யாஜ்யமாகாதென்னவொண்ணாது;

அதவா; ஸ்வாகபுருஷார்த்தவிருத்தமாக ஜ்யோதிஷ்டோமத்திலே தீக்ஷித்தவனுக்கு விதயாதிகள த்யாஜ்யமாமாபோலே மோக்ஷார்த்தமாக விததாமஸ்வீகாரமாகிற யாகத்திலே தீக்ஷிதனுக்கும் விஹிதாபாமும் த்யாஜ்யமென்னவுமாம்;

(க) "ஸ்த்ரியம்ஸம்ஸர்க்க-தஸ்யையமய விஜஷ:" என்கிற வசனாகத்தாலே பராணமவரணத்வயும் ஒருபாகமாக நிரூபித்தானிறே வேத புருஷன்; ஆனாலும், இவை பகவத்விஷயத்துக்கு ஆஜ்ஞாரூபமாகய காயமாகையாலே பகவத்ப்ரீதியாகிற பரமப்ரயோஜநவிததிககாக அனுஷ்டேயமாகக்கடவது; அல்லது, விஹிதமான வாகாரத்தாலேயும் உபாயதத்துக்கு யோக்யதாபாதகமான வாகாரத்தாலேயும் த்யாஜ்யமாகக்கடவது;

ஸாதனஸ்வீகாரத்துக்கு ஸ்வரக்ஷணத்திலசக்தியும் அப்ராப்தியும் விளம்பாக்ஷமத்வமுமுடையவனிறே அதிகாரி; (உ) "ఇదం శరణమజ్ఞానా మిదమేవ విజానతాం । ఇదం తితీర్షతాం పారమిదమానన్త్యమిచ్ఛతాం - இதம்சரணமஜ்ஞாநாமிதமேவவிஜாநதாம் இதம்திதீர்ஷதாம்பாரமிதமாநந்த்யமிச்சதாம்" (ங) "అజ్ఞ సర్వజ్ఞ భక్తానాం ప్రపత్తావధికారితా - அஜ்ஞஸர்வஜ்ஞபக்தாநாம்ப்ரபத்தாவதிகாரிதா" (ச) "అవిద్యాతః அவித்யாத:" இத்யாதிகளாலே ஸ்வஸ்வரூபம் பகவதேகரக்ஷ்யமாகவறிவைத்திக்கையாலே ஸ்வரக்ஷணத்திலே அஜ்ஞாசக்திகளும், உபேயஸ்வரூப மநந்யஸாத்யமாக வறிவைத்திக்கையாலே அப்ராப்தியும், ப்ராப்யவைலக்ஷண்யானுஸந்தாநத்தாலே விளம்பாக்ஷமத்வமுமுடையராய், அதவா அநந்யகதிகளாயிருக்கிறவர்களுக்கு இப்ப்ரபத்தியிலதிகார மென்று சொல்லிற்றிறே. ஆகையாலேயிறே இவ்வுபாயம் ஸர்வாதிகாரமாகிறது.

ஆக, "ஸர்வதர்மாந்" என்று ஸாத்யமான ஸகலஸாதனங்களையும் த்யாஜ்யதயா உபாதானம்பண்ணிற்றாயிற்று.

அநந்தரம், "பரித்யஜ்ய" என்று இவற்றினுடைய த்யாகப்ரகாரம் சொல்லுகிறது. இதுதான், "த்யஜ, த்யஜ்ய, பரித்யஜ்ய" என்று த்யாகமும் ல்யப்பும் உபயமுமாய த்ரிவிதமாயிருக்கும்; இதில்

(க) தை-கா- (உ) மநு-சு-அச (ங) (ச)

ஸ்பஷ்டமான த்யாகஶப்தத்தாலே அபிமதபுருஷார்த்தஸித்திக்கு அநுரூபமாய் ஸஹாயாந்தராஸஹமான வுபாயத்தை ஸ்வீகரிக்கிற வதிகாரிக்கு ததங்கமான ஸாதநாந்தரத்யாகத்தை விதிக்கிறது.

ஸத்வித்யாநிஷ்டனுக்கு தத்வ்யதிரிக்தவித்யாந்தரத்யாகம் ஆர்த்தமாகஸித்திக்கிறப்போலே புருஷார்த்தலாபத்துக்கு இதரநிரபேக்ஷமான வுபாயத்தை ஸ்வீகரிக்குமவனுக்கு இதரோபாயத்யாகம் ஆர்த்தஸித்தமாய் வருகையாலே இவ்விடத்திலே த்யாகத்துக்கு விதேயத்வமில்லையென்று சிலர் சொல்லுவர்கள்;

அது சொல்லவொண்ணாது; விதேயமான ஶரணவரணத்துக்கு தத்வ்யதிரிக்தோபாயத்யாக வ்யதிரேகேண உதயமில்லாமையாலே அங்கியான வுபாயவரணம் விதேயமாகிறவோபாதி அங்கமான த்யாகமும் விதேயமாக வேண்டுகையாலே; ஆகையாலே (க) "ప్రక్షాళ్య పాదావాచామేత్స్నాత్వావిధివదర్చయేత్ । స్థిత్వార్ఘ్యం దానవేదద్యాద్ధ్యాత్వాదేవం జపే న్మనుమ్- ப்ரக்ஷாள்யபாதாவாசாமேத்ஸ்நாத்வாவிதிவதர்ச்சயேத் । ஸ்தித்வார்க்யம்பாநவேதத்யாத்த்யாத்வாதேவம்ஜபேந்மநும்" இத்யாதிகளாலே பாதப்ரக்ஷாளநம்பண்ணி ஆசமநம்பண்ணுவான்; ஸ்நாநம்பண்ணி விதியுக்தமானப்ரகாரத்திலே அர்ச்சிப்பான்; ஆதித்யனுக்கு நின்று அர்க்யப்ரதாநம்பண்ணுவான்; மந்த்ரப்ரதிபாத்யமான தேவதையைத்யாநம்பண்ணி தத்ப்ரதிபாதகமான மந்த்ரத்தை ஜபிப்பானென்று விஶிஷ்டமாக விதிக்கிறப்போலே இங்கும் த்யாகஸ்வீகாரங்களை விஶிஷ்டமாக விதிக்கிறது.

அவ்விடத்தில் ஆர்த்த(ஃ)மாக ஸித்தியாமையாலே விதிக்கிறது; இங்கு ஸித்ததர்மஸ்வீகாரந்தானே ததிதரதர்மத்யாகத்தைக் காட்டுகையாலே விதேயத்வமில்லையென்னில்; அது சொல்லவொண்ணாது; இவ்வதிகாரிக்கு நிஷித்தகர்மாந்வயத்தில் ப்ராயஶ்சித்தியாமோபாதி ஸாதநாந்தராந்வயத்திலும் ப்ராயஶ்சித்தியாமென்று ஶாஸ்த்ரம் சொல்லுகையாலே ஆர்த்தமாக ஸித்திக்கையன்றிக்கே விதேயமாக வேண்டுகையாலே;

எங்ஙனேயென்னில்; (உ) "ఉపాయాపాయసంయోగే నిష్ఠయా హీయతేఽనయా । అపాయసంప్లవే సద్యః ప్రాయశ్చిత్తం సమాచరేత్ । ఉపాయానాముపాయత్వస్వీకారేఽప్యేతదేవహి - உபாயாபாயஸமயோகே நிஷ்டயாஹீயதே

(க) (அ)லக்ஷ்மீதந்த்-கஎ

யா । அபாயஸம்ப்லவே ஸத்ய: ப்ராயஸ்சித்தம் ஸமாசரேத் । உபாயா நாமுபாயத்வஸ்வீகாரேப்யேததேவஹி" என்று நிஷித்தமாய் த்யாஜ்யமான ஹிம்ஸாத்யபாயாந்வயத்திலும் ஸாதநமான கர்மாத்யுபாயாந்வயத்திலும் இந்த ஸித்ததர்மநிஷ்டைக்கு ப(த்)ங்கம்வருகையாலே அபாயாந்வயத்தில் சடக்கென ப்ராயஸ்சித்தம் பண்ணுவான்; உபாயாந்வயத்திலும் அப்படியே ப்ராயஸ்சித்தம் பண்ணுவானென்று ஸாஸ்த்ரம் சொல்லுகையாலே;

ஆகையாலே, அந்வயத்தில் ப்ராயஸ்சித்தியாக வேண்டுமவற்றினுடைய த்யாகம், நிஷித்தமான பூதஹிம்ஸை "న హింస్యాత్ సర్వా భూతాని" - நஹிம்ஸ்யாத்" என்று விதேயமானவோபாதி விதேயமாக வேண்டுகையாலும், த்யாகந்தனக்குஹேது துஷ்கரத்வாதிகளிலுங்காட்டில் ஸ்வரூபவிருத்த(த்)மென்கிற பாதிபத்தியே ப்ரதாநமாகையாலும், ஸாதநாந்தரங்களினுடைய த்யாகம் விதேயமாகக்கடவது.

இப்படி விஹிதமானத்யாகம் ஸாதநாந்தரங்களினுடைய ஸ்வரூபத்யாகமோ? பலத்யாகமோ? உபாயபுத்தித்யாகமோவென்னில்; கர்மயோகாதிகள் ஸ்வாபிமதபுருஷார்த்தத்துக்கு ஸாதநங்களென்கிற ப்ரதிபத்தியைவிட்டு அவற்றையநுஷ்டித்து உபாயஸ்வீகாரம்பண்ணவேண்டி விழுகையாலும், அப்போது புத்தித்யாகபூர்வகமாக அநுஷ்டிதமான கர்மயோகாதிகள் ப்ரபத்திக்கு அங்கமாகையாலே இதினுடைய ஸ்வதந்த்ரோபாயத்வஹாநி வருகையாலும், ஸர்வாதிகாரமின்றிக்கேயொழிகையாலும், தர்மஸப்தம் தர்மகதமானவுபாயத்வப்ராதிபத்திவாசகமல்லாமையாலும், (க) "శ్రేయస్సాధనం ధర్మః - ச்ரேயஸ்ஸாதநம்தர்ம:" என்று தர்மஸப்தத்துக்கு உதயம ஸாதநத்வேநவாகையாலே இத்தர்மஸப்தம் ஸாதநதர்மத்தையே வசி(ச)க்கையாலும், "ఏవ ద్వాభ్యాం దేవర్షే విజ్ఞేయం మోక్షసాధనమ్ - நிவர்த்தகாக்யம் தேவர்ஷே விஜ்ஞேயம்மோக்ஷஸாதநம" என்று நிவர்த்தகதர்மத்துக்கு மோக்ஷஸாதநத்வம் ஸாஸ்த்ரஸித்தமாகையாலே ஸாதநத்யாகம் பண்ணவொண்ணாமையாலும், இவ்வுபாயம் அகிஞ்சநாதிகாரமின்றிக்கே யொழிகையாலும், (உ) "అహమస్మ్యపరాధానామాలయోఽకిఞ్చనోఽగతిః। త్వమేవోపాయభూతో మే భవేతి ప్రార్థనామతిః - அஹமஸ்ம்யபராதாநா

(க) பூர்வமீமாம்ஸா (உ) அஹி-ஸம-ரு-சு-ரு-அ

மாலயோகிஞ்சநோகதி: । த்வமேவோபாயபூதோமேபவேதிப்ரார்த்தநாமதி:" என்று - நான் அபராதாநாமாலயனுகாநின்றேன் ; அநுமர்த்தமஹேஷத்வாதிகளால நிரூபிதமாகையன்றிக்கே அபராதத்தையிட்டு நிரூபிக்கும்படி ஸாபராதன்; அத்யந்தபாரதந்த்ரனுகையாலே அகிஞ்சநன்; தவதேகரக்ஷ்யமாகையாலே அகதியென்று தன்னுடைய அபராதபூயஸ்தையையும் ஆகிஞ்சந்யாநந்யகதித்வங்களையுமநுஸந்தித்து, நீயே உபாயமாகவேணுமென்று ப்ரார்த்திக்கை ஶரணாகதியென்கிற லக்ஷணவாக்யத்தோடே விரோதிக்கையாலும், இது ஸ்வரூபப்ரகாரமன்றிக்கே விஶிஷ்டவேஷப்ரகாரமாகையாலே, இதினுடைய ஸ்வரூபாநுரூபத்வம் பக்ஷ(ஃ)மாகையாலும் புத்திக்யாகபக்ஷம அர்த்தமன்று

இந்த தர்மஶப்தத்தில் உபாதாநம்பண்ணிற்று ப(ஃ)லஸங்காதித்யாகபூர்வகமாக அநுஷ்டேயமான நிவர்த்தகதர்மமாகையாலே ப்ரஸஜ்யபாதிஷேதத்துக்கு இடமில்லாமையாலும், தர்மஶப்தம் ப(ஃ)லவாசியல்லாமையாலும் புநருக்திப்ரஸங்கத்தாலும் பலத்யாகபக்ஷமுமர்த்தமன்று;

ஸ்வாபிலஷிதமான புருஷார்த்தத்துக்கு ஸ்வரூபாநுரூபமான ஸாதநத்தைப் பரிக்ரஹிக்கிற இவனுக்கு ஸாதநரூபதர்மத்யாகம் பண்ணுகை விருத்தமல்லாமையாலும், முமுக்ஷுத்வத்தாலே ஸ்வர்க்கஸாதநமான ஜ்யோதிஷ்டோமகர்மம் த்யாஜ்யமானவோபாதி வித்தஸாதநபரிக்ரஹத்தாலே இவையும த்யாஜ்யமாகக்கடவதாகையாலே இங்குவிதிக்கிறது ஸாத்யஸாதநரூபதர்மங்களுடைய ஸ்வரூபத்யாகத்தை யென்றதாயிற்று.

வித்தஸாதநம் ஸகலேதரநிரபேக்ஷமாகையாலும், ஸஹாயாந்தராஸஹமாகையாலும், ஸாதநாந்தரங்கள் ஸ்வரூபவிருத்தங்களாகை-யாலும், ஸகலேதரஸாபேக்ஷமாகையாலும் ப்ராப்யவிரோதிகளாகையாலும், துஷ்கரங்களாகையாலும, இவை த்யாஜ்யமாகக்கடவன.

பகவதேகரக்ஷ்யத்வேந வித்தஸ்வரூபனுப் பகவதேகஶேஷபூதனுயிருக்கையாலே ததிதரவ்யாபாராஶ்ரயத்வம் விருத்த(ஃ)மாகையாலே ஸ்வரூபவிருத்தமாயிருக்கும்; வித்தஸ்வரூபனுய் ஏகரூபனுப் பரமசேதநனுய் அமோகஸங்கல்பனுகையாலே ஸஹகாரிநி

பேக்ஷமாகவிருக்கும். ரக்ஷணார்த்தமான ஸ்வவ்யாபாரதர்ஶநத்தில் ரக்ஷகனானவீஶ்வரன் ரக்ஷணாந்நிவ்ருத்தனுமாகையாலே சணற்கயிறு கண்ட ப்ரஹ்மாஸ்த்ரம்போலே ஸஹாயாந்தராஸஹமாயிருக்கும். சிரகாலஸாத்யமாய்ஸாபாயமுமாயிருக்கையாலே துஷ்கரங்களாயிருக்கும்; ஸாயஸாரிக ஸகலதுரிதவிதாநபூர்வகமாக அர்ச்சிராதிமார்க்கத்தாலே அப்ராக்ருதமான தேஶத்திலேபோய்ப்புக்கு நிரந்தரபகவதநுபவஜநித நிரதிஶயாநந்தஹ்ருஷ்டனாய் அந்த ஹர்ஷப்ரகர்ஷ பலாத்க்ருதனாய்க்கொண்டு "ஸஏகதா பவதி-அபரிமிததாபவதி" என்கிறபடியே அநேகவிக்ரஹபரிக்ரஹம்பண்ணி யாவதாத்மபாவி பண்ணுகிற கைங்கர்யத்துக்கு ஸ்வாநுஷ்டேயமாய் ஸ்வதந்த்ரகார்யமாயிருக்கிற கர்மாதிகள் ஸத்ருஶபலமல்லாமையாலே ப்ராப்யவிஸத்ருஶமாயிருக்கும்;

ஆகையாலே, (க)"ஶீதோ பவ ஹநூமத:-ஶீதோபவஹநூமத:" என்று நெருப்பை நீராக்கவல்லஶக்தி யுண்டாயிருக்கச்செய்தேயும், லங்காபவநத்திலே இருந்தை(ஸ்)யான பிராட்டி, (உ)"தத்தஸ்ய ஸத்ருஶம்பவேத்-தத்தஸ்யஸத்ருஶம்பவேத" என்றிருந்தாப்போலேயும், (ங)"ரக்ஷ மாம் ஶரணாகதாம்-ரக்ஷமாய்ஶரணாகதாம்" என்று த்ரௌபதி க்ருஷ்ணன் பக்கலிலே ஸமர்ப்பிதஸர்வ(ஸ்)வையாய்க்கொண்டு தன்கையைவிட்டிருந்தாப்போலேயுமிருக்கிறதே ஸ்வரூபயாதாத்ம்யஜ்ஞாநபூர்த்தி பிறந்ததாவது.

ஸ்வஸ்வரூபம், (ச) "கரணாதிபாதிப:-கரணாதிபாதிப:" என்று கரணங்களோடு கரணிபோடுவாசியற ஹ்ருஷீகேஶனை வணிட்ட வழக்காகையாலும், ததேகரக்ஷ்யத்வேந வஸ்துஸ்வரூபனாகையாலும ஸாதநாந்தராநுஷ்டாநத்துக்கு யோக்யதையுமில்லை. ப்ராப்தியுமில்லை. ரக்ஷ்யத்வபாரதந்த்ர்யங்களிரண்டும் ஸ்வஸ்வரூபத்தவேஷமாகையாலே பரேச்சாதீநமாய் பரகதமான வ்யாபாரம் ரக்ஷகமாம்; ஸ்வீய பரப்ரேரிதமேயாகிலும் ஸ்வகதமானவ்யாபாரம் ரக்ஷகமாகமாட்டாதபடியாயிறே யிருப்பது.

பரஸ்வரூபத்தைப் பார்த்தாலும், "அரக்ஷணே-அவரக்ஷணே"

(க) ரா-ஸு-ருரு-உக (உ) ரா-ஸு-ருரு-ருo (ங) பார-ஸபா-கஅ-சஉ
(ச) ஸ்ரீவேதா-கக

என்று ரக்ஷகத்வேநக்ருஹீதமான ஸ்வரூபத்தையுடையவனாகையாலே ரக்ஷகத்வம் நிருபாதிகமாகையாலும், (க)"[illegible]-உபாயோபேயத்வே ததிஹ தவ தத்த்வம்" என்று உபாயத்வம் ஸ்வரூபமாக வருளிச்செய்கையாலும், ஸாதநாந்தராநுஷ்டாநத்தில் பராப்தியில்லையாகையாலே ஸ்வரூபத்தில ஸாதநாந்தரங்கள்புகுர வழியில்லை.

ஆகையிறே *மயர்வறமதிநலமருளப்பெற்றவர்கள் (உ)"நோற்ற நோன்பிலேன்" என்றும், (ங)"நலந்தானொன்றுமிலேன் நல்லதோரறம்செய்துமிலேன்" (ச) "மற்றோர் நெறியொன்றறியேன்" என்றும், இவ்வுபாயாந்தராநந்வயத்தை யருளிச்செய்தது. (ரு) "నజానేశరణంపరమ్-நஜாநேஶரணம்பரம" என்னக்கடவதிறே.

ஸாதநாநுஷ்டாநயோக்யமான புண்யகாலங்கள், ஸாதநமான புண்யக்ஷேத்ரவாஸம், தர்மாநுஷ்டாநத்துக்கு காரணமான ஶரீரஸம்பந்தம், ஸாதநாநுஷ்டாநமக்கே மரணமுண்டானால் வரும் ஶரீராந்தரப்ராப்தி இவையெல்லாவற்றிலும் எனக்கு மஹத்தாநபயம நடவாநிற்கிறதென்கையாலே ஸாதநாந்தரங்கள ஸ்வரூபஜ்ஞாநவானுக்கு பயஜநகமாயிறேயிருப்பது.

(சு) "అథపాంతకభీతస్త్వం సర్వభావేనభారత। విముక్తాన్యసమారమ్భో నారాయణపరో భవ-அதபாதகபீதஸ்த்வம ஸாவபாவேநபாரத | விமுக்தாந்ய ஸமாரம்போ நாராயணபரோபவ" என்று ஸாதநாந்தரங்கள் பாதகமென்று பயப்பட்ட நிஸர்வப்ரகாரத்தாலும், பாரதனே! அந்யஸமாரம்பங்களைவிட்டு நாராயணபரனுவாயென்று தர்மதேவதை தர்மபுத்ரனைக்குறித்து பாதகமென்று உபதேஶிக்கையாலும், ப்ராயஶ்சித்த விஷயமாகச் சொல்லுகையாலும் (எ) "நெறிகாட்டிநீக்குதியோ" என்று பகவத்விஷயத்துக்குப் புறமபாகைக்கு உறுப்பாகையாலும், உத்தேஶ்யமான பகவத்பாரதந்த்ர்யத்துக்கு விரோதியாகையாலும் அதர்மமென்று போரப்ராப்தமாயிருக்க, தர்மமென்று பேரிடுகிறது இவ்வளவுபாகம் வாராதவர்களுடைய ப்ரதிபத்தியாலேயிறே.

(க) ர-ஸ்த- (உ) தி-வாய-ரு-எ (ங) தி-மொ-க-கூ-ச (ச) தி-மொ-க-கூ-க
(ரு) ஶ்ரீநதே-க (சு) விஷ்ணுதர்ம கூசு-எக (எ) பெரியதிருவ-கூ

ஆகையாலே இங்குச்சொல்லுகிறது விஹிதஸாதநவ்யதிரிக்தஸாத்ய ஸாதநங்களினுடைய ஸ்வரூபத்யாகமென்றாயிற்று ஸம்ப்ரதாயம்.

இப்படி த்யாஜ்யமான தர்மந்தான், அநுஷ்டேயதயா சாஸ்த்ரவிஹிதமான அர்த்தத்துக்கு வாசகமாகையாலே விஹிதாநுஷ்டாந ரூபேணவும் நிஷித்தபரிஹாரரூபேணவுமென்கிற உபயவிததர்மத்துக்கும் வாசகமாயிருக்கிறது. இதைத்த்யாஜ்யதயா உபாதாநம்பண்ணுகிறதால், நிஷித்தபரிஹாரத்யாகமாகிறது நிஷித்தாநுஷ்டானமாகையாலே நிஷித்தாநுஷ்டானம் லக்ஷ்யமாணமான ஸ்வீகாரத்துக்கு அங்கமாகாதோவென்னில், அது ஸகலப்ரவ்ருத்திகளினுடையவும் நிவ்ருத்தியை ஸஹிக்குமொழிய ப்ரவ்ருத்தியைஸஹியாது. அதுக்குமேலே நிஷித்தாநுஷ்டாநபலமான பாபம் ஈச்வரனுடைய நிக்ரஹமாகையாலே, அவனை யதிசயிப்பித்து ஸ்வரூபஸித்தியாயிருக்கிற இவ்வதிகாரிக்கு தந்நிக்ரஹகாரணமான நிஷித்தாநுஷ்டானம் த்யாஜ்யமாகக்கடவது. புருஷார்த்தமும் பகவத்கைங்கர்யமாகையாலும் நிஷித்தம் த்யாஜ்யமாயிருக்கும். ஆக ஸ்வரூபஸாதந புருஷார்த்தங்கள் மூன்றினுடையவும் வேஷத்தைப்பார்த்தாலும் நிஷித்தாநுஷ்டானம் த்யாஜ்யமாகக்கடவது.

இவையன்றியில் பகவந்நிக்ரஹஹேதுவாய் நரகப்ராப்திஹேதுவான ப்ரஹ்மஹத்யாதிகள் பகவதபசாராதிகள் த்யாஜ்யமின்றியிலே யொழியும். ஆனால் நிஷித்தபரிஹாரம் தர்மசப்தார்த்தமின்றிக்கே யொழிந்ததோவென்னில்; தர்மமாவது- அநுஷ்டேயதயா சாஸ்த்ர விஹிதமானதாகையாலே, “இதம் குரு, இதம் மா கார்ஷீ:-இதம் குரு, இதம் மாகார்ஷீ:” என்று விதிநிஷேதாத்மகமான உபயத்தையும் வசிக்குமாகையாலே இது சொல்லவொண்ணாது.

ஆனால் என்சொல்லிற்றாயிற்றென்னில்;-(௧)“ந ஹிம்ஸ்யாத் ஸர்வா பூதாநி-நஹிம்ஸ்யாத்ஸர்வாபூதாநி” (௨) “ந கலஞ்ஜம் பக்ஷயேத்-நகலஞ்ஜம் பக்ஷயேத்” இத்யாதிகளாலே ஸாமாந்யேந சொல்லுகிற நிஷித்தநிவ்ருத்திமாத்ரம் தர்மசப்தவாச்யமன்று; ஆனாலும் ஸாதநரூபதர்ம வாசகமான இத்தர்மசப்தத்தில் உபாத்தமன்று; ஆகையாலே ஸாமாந்யேந நிஷித்தாநுஷ்டானம் வருமென்கிற ப்ரஸங்கமில்லை.

இதில் மோக்ஷஸாதநரூபமான விதிநிஷேதாத்மகமான தர்மங்

(௧) (௨)

க்கைச் சொல்லுகிறது. அதினுடைய த்யாகத்தில் ஸாதநவித்தியில் ஸாமக்ரியாயிருக்கிறவொரு நிஷித்தமில்லாமையாலே தத்ஸாதநா பேக்ஷையில்லாதனவுக்கு த்யாஜ்யதாசங்கையில்லை. நிஷித்தபரிஹாரத்திலே யர்மயிக்கிறஸ்வாக்ஷத்திலே ப்ரவ்ருத்தனுக்கு அதஏவப்ரபத்திக்குதிகாரஹாநிவருகையாலே பூர்வார்ஜிதபாபப்ராயஶ்சித்தம் த்யாஜ்யமாமோபாதி நிஷித்தபரிஹாரமும் த்யாஜ்யமாகக்கடவது.

(க) "త్రివిధాం పశ్య దేవేశ కర్మణో గహనాం గతిమ్। నిషేధవిధిశాస్త్రాభ్యాం విధాఞ్చ నిబోధ మే। అనర్థసాధనం కించిత్ కించిచ్చాప్యర్థసాధనమ్। అనర్థపరిహారాయ కించిత్ కర్మోపదిశ్యతే। త్రైరాశ్యం కర్మణామేవం విజ్ఞేయం శాస్త్రచక్షుషా। అపాయోపాయసంజ్ఞౌ తు పూర్వౌ రాశీ పరిత్యజేత్। తృతీయో ద్వివిధో రాశిరనర్థపరిహారకః। ప్రాయశ్చిత్తాత్మకః కశ్చిద్యశ్చాన్యోఽనర్థనాశకః। తదంశం నైవ కుర్వీత ముముక్షుః పూర్వరాశివత్-

த்ரிவிதாம்பஶ்யதேவேஶ கர்மணோ கஹநாங்கதிம் । நிஷேதவிதிஶாஸ்த்ரேப்யஸ்தாம் விதாஞ்சநிபோதமே । அநர்த்தஸாதகம் கிஞ்சித் கிஞ்சிச்சாப்யர்த்தஸாதகம் । அநர்த்தபரிஹாராய கிஞ்சித் கர்மோபதிஶ்யதே த்ரைராஶ்யம் கர்மணாமேவம் விஜ்ஞேயம் ஶாஸ்த்ரசக்ஷுஷா । அபாயோபாயஸம்ஜ்ஞௌ து பூர்வௌ ராஶீ பரித்யஜேத் । த்ருதீயோ த்விவிதோ ராஶிரநர்த்தபரிஹாரக: । ப்ராயஶ்சித்தாத்மக: கஶ்சித் யஶ்சாநர்த்தநாஶக: । தமம்ஶம் நைவ குர்வீத முமுக்ஷு: பூர்வராஶிவத்" என்று விஷேதவிதிஶாஸ்த்ரங்களில் கர்மத்தினுடைய ப்ரகாரம் த்ரிவிதமாயிருக்குங்காண்; அந்தப்ரகாரத்தை யென்பக்கலிலே யறியென்று தொடங்கி அநர்த்தரூபநரகாதிகளுக்கு ஸாதநமாயிருக்கும் சில; போக(ஸ்வர்க) மோக்ஷரூபபுருஷார்த்தஸாதநமாயிருக்கும் சில; அநர்த்தபரிஹாரஸாதநமாயிருக்கும் சில; இப்படி த்ரிவிதமாயிருக்குமென்று ஶாஸ்த்ரசக்ஷுஸ்ஸாலே யறியப்படும்; அதில் அநர்த்தஸாதநமான அபாயகர்மம் ஸகலேதரோபேக்ஷகமாய்க்கொண்டு ஸித்தஸாதநத்தைப் பரிக்ரஹிக்கிறவனுக்கு ததங்கமாகையாலே த்யாஜ்யம்; அநர்த்தபரிஹாரகர்மத்தில் பூர்வார்ஜிதபாபபரிஹாரமான ப்ராயஶ்சித்தகர்மம் ஸித்ததர்மஸ்வீகாரத்துக்கு யோக்யதைகள் போகவும் வேண்டாதபடி யிருந்தபடியே அதிகாரமாகையாலே த்யாஜ்யம். ஆகாமியநர்த்தபரிஹாரமான கர்மம் ஶரணவரணாநந்தரம் அநர்த்தஹேதுவான கர்மங்க

(க) லக்ஷ்மீதந்த்ரம்

யில் புத்திபூர்வகப்ரவ்ருத்தி கூடாமையாலும், அபுத்திபூர்வகம்ஸ்ஸாத்ம்ருதயத்தில் படாமையாலும் பட்டாலும், பாபவிமோசனமான ஸர்வஶப்தத்திலே அந்தர்ப்பவிக்கையாலும் த்யாஜ்யமென்று ஸ்வரூபமான தர்மத்யாகப்ரகாரம் ஶாஸ்த்ரங்களிலே பரக்கச்சொல்லப்பட்டது; ஆகையாலே மோக்ஷஸாதநதயாவிஹிதமான விதி நிஷேதாத்மகமான ஸகலதர்மங்களும் ஸாங்கமாக த்யாஜ்யமென்றதாயிற்று.

அதவா, ஸர்வதர்மபரித்யாகவிதாநபூர்வகஶரணவரணவிதிவிஷயபூதனான இவ்வதிகாரிக்கு கர்த்தவ்யத்வேந விஹிதமாயிருப்பதொன்றில்லாமையாலும், ஶரண்யப்ரபாவத்தாலும், ஸர்வபாபவிமோசகமான விஷயத்தைப்பற்றியிருக்குமவனுக்கு அவஶமாகப் புகுந்தவை பந்தகமாகமாட்டாமையாலும், ஸாமாந்யேநவுண்டான நிஷித்தநிவ்ருத்தித்யாகத்தைச்சொல்லவுமாமென்றநுஸந்திப்பர்கள்.

இப்படி உபாயோபயோகியன்றாகிலும் ஶிஷ்யபுத்ரர்களுடைய வுஜ்ஜீவநத்துக்காகவும் லௌகிகருடைய ஸங்க்ரஹத்துக்காகவும் தந்தாமுடையவாந்ருஶம்ஸ்யத்தாலும் பூர்வாசார்யர்கள் இத்தையநுஷ்டித்துப் போருவர்கள்; அவ்வநுஷ்டாநம் ஸ்வவிபூதிபூதரான சேதநருடைய உஜ்ஜீவநஹேதுவாகையாலே ஈஶ்வரப்ரீதிவிஷயத்வமாகிற புருஷார்த்தம் அநுஷ்டாதாவுக்கு ஸித்திக்கையாலே இவை அநுஷ்டேயங்கள்.

கர்த்ருகரணத்ரவ்யமந்த்ரங்கள் பேதியாதிருக்கச்செய்தேயும் நினைவுமாறாட்டத்தாலே ஒருகர்மத்துக்கே ப்ரவர்த்தககர்மமென்றும் நிவர்த்தககர்மமென்றும் பேராகிறவோபாதி நிவர்த்தகதர்மமும் நினைவுமாறாட்டத்தாலே ப்ராப்யத்திலே அந்வயிக்கும். ஆக, த்யஜவென்கிறத்தாலே ஸாத்யமான ஸகலஸாதநங்களினுடையவும் த்யாகத்தைச்சொல்கிறது.

அநந்தரம் பரியென்கிற வுபஸர்க்கத்தாலே ஸாதநதர்மம் ஸ்வரூபாநுரூபமன்றாகிலும் ஸ்வாபீஷ்டமான புருஷார்த்தம் ஸ்வயத்நஸாத்யஸாதநலப்ய(ஹ)மென்றுகேட்டுப்போந்தவாஸனையாலே த்யக்தமானவுபாயங்களிலும் வாஸனையநுவர்த்திக்குமாகில் அதிகாரத்துக்கு ப(ங்)கமாகையாலும், அபாயஸம்யோகத்திற்போலே உபா

ஸம்யோகத்திலும் ப்ராயஸ்சித்தியாமென்று இதுசொல்லுகையா லும், வாஸனையும் ருசியும் கிடக்குமாகில் ஸித்தஸாதநத்தி லந்வய மின்றிக்கே யொழிகையாலும், ஸ்வஸ்வரூபத்தையும் பந்த(பத்த)த்தை யுமநுஸந்தித்தால் ஸாதநாந்தராந்வயமாகிறது ராஜமஹிஷி உஞ்சவ்ரு த்திபண்ணுதல் குடஞ்சுமத்தல்செய்தால் ராஜாவுக்கு அவத்யமாமோ பாதி ரக்ஷகனானவீஸ்வரனுக்கு அவத்யமாமாகையாலும் வாஸநா ருசிகளுங்கூடவிடவேண்டுகையாலே ஸவாஸநமான த்யாகத்தைச் சொல்லுகிறது.

ஸ்வரூபத்துக்கு ஸாதநாந்தரங்களின் ப்ரத்வம்ஸாபாவமன்றியி லே அத்யந்தாபாவமநுரூபமாகையாலே ப்ரதிபத்தியும் அத்யந்தாபா வமாகவேண்டுகையாலே ஸாதநாந்தரஸத்பாவப்ரதிபத்தியன்றிக்கே (க)"సర్వేశ్వరం సర్వ-ஹஜாகேஸரணம்பரம்"என்றிருக்கையே பூர்ணா திகாரம். இப்படி அத்யந்தாபாவப்ரதிபத்திவிஸிஷ்டனாகையாலேத்யா கந்தானில்லை யென்னலாம்படியிருக்கும்; ஆகையாலே இதிற்சொல் லுகிற த்யாகமாகிறது ஸாதநாந்தரங்களினுடைய அநந்வயாநுஸந் தாநமென்னுமிடம் இந்த வுபஸர்க்கத்தாலே ப்ரதிபாதிக்கிறது.

இந்தவுபாயாந்தராநந்வயமே ஸித்தோபாயாந்வயப்ரதிபத்தி யாகிற ஸ்வீகாரத்துக்கு அங்கமாகையாலே, த்யாஜ்யாநந்வயநிபந்தந மான த்யாகாபாவத்தாலே ஸ்வீகாரத்திலநந்வயம் வரவொண்ணாது; ஸித்தஸாதநம் ப்ரவ்ருத்திஸஹமல்லாதவோபாதி நிவ்ருத்திரூபக்ரி யையையும் ஸஹியாதாகையாலே; இதில் த்யாகம்விதிக்கிற ப்ரகரண த்திலே ஸாதநாந்தரங்களைப் பரக்கச்சொல்லிக்கொண்டு போருகை யே அப்ரஸ்துதமாகையாலே; அநுஷ்டாநவாக்யத்தில் ஸ்வீகாரமா த்ரமேயிறே ப்ரதிபாதிக்கப்படுகிறது.

இவைதன்னிலநுஷ்டாநத்துக்கு அஸக்தனானவன் (உ)"సోஹం తే దేవదేవేశ నార్చనాదౌ స్తుతౌ న చ। సామర్థ్యవాన్ కృపామాత్రమనోవృత్తిః ప్రసీద మే
ஸோஹம்தேதேவதேவேஸ நார்ச்சநாதௌஸ்துதௌ ச । ஸாமர்த் த்யவாந்க்ருபாமாத்ரமநோவ்ருத்திঃப்ரஸீதமே" என்று தேவதேவே ஸனே! தேவருடைய அர்ச்சநஸ்தவநாதிகளில் நான்ஸக்தனல்லே ன்; கேவலக்ருபையாலே ரக்ஷ்யபூதனென்று திருவுள்ளம்பற்றி ப்ர

(க) ஸ்ரீகீதை-க (உ) வி-பு-ரு-எ-எ0

[illegible] வேணும்; ஸ்வீகாரத்தில் [illegible] ஏகைகமே [illegible] ஸ்வேனென்றும், அதிலே யதிகா[illegible]லென் (௧) "ஸர்வதர்மான் பரித்யஜ்ய" என்கிறபடியே அப்ராப்தமென்றறிவு பிறக்கவேணுமென்றும். இவை நமக்கு அப்ராப்தமென்கிற ஜ்ஞானமுடையவர்கள் (௨) "மோக்ஷநோன்மிலேன்" (௩) "மநுஷ்யனல்லேன்றறியேன்" என்கிறபடியே அவை யெனக்கில்லையென்றறிவர்கள்; ஆகையாலே ஸித்தோபாயவரணம் ஸர்வாதிகாரமாகிறது.

அப்போது ஸ்யப்பில்சொல்லுகிற த்யாகாங்கத்வம்ஸித்திக்கும்படியென்னென்னில், ஸர்வோபாயஸங்க்யாசமிருப்பாரில்லாமையாலே யதாயோக்யம்விட்டுப் பற்றுவாரும் அநந்வயாநுஸந்தானம் பண்ணிப் பற்றுவாருமாயிருக்கையாலே அங்கத்வஸித்திக்குக்குறையில்லை. இவற்றில் இலலை யென்றறிவிக்கிறவர்களுக்கு வாஸநாருசிகளுங்கூட வில்லாமையாலே அவர்களே முக்யாதிகாரிகள். ஏவம்ரூபமான ருசிவாஸனைகளுடைய வத்யந்தாபாவம் த்யாகவாசகமான "த்யஜ்ய" என்கிற ஶப்தத்துக்கு விஶேஷணமான பரிஶப்தத்தாலே சொல்லுகிறது. தர்மஶப்தத்திலுபஸர்க்கம் தர்மாநுஷ்டாநயோக்யதாபாதகங்களை யுபாதாநம்பண்ணுகையாலே த்யாஜ்யவிஶேஷவாசகமாகிறவோபாதி த்யாகஶப்தத்திலுபஸர்க்கமும் வாஸநாருசிகளையுங்கூட வுபாதாநம்பண்ணுகையாலே த்யாகம் விஶேஷவாசகமாகிறது. வ்ரஜவிலஸித்திக்கிற பரைகரக்ஷ்யத்வப்ரதிபத்தியில் ஸ்வாதந்த்ர்ய ராஹித்யத்தைக்காட்டுகிற ஏகபதமும் உபாயஸ்வரூபத்துக்கு ஔஜ்ஜ்வல்யாவஹமாகிறவோபாதி த்யஜ்யவென்று விதிக்கிற ஸாதநாந்தரங்கள் பரைகரக்ஷ்யத்வவிரோதியென்கிற ப்ரதிபத்தி ஸ்வஸ்வரூபத்துக்கு ஔஜ்ஜ்வல்யாவஹமாயிருக்கும்.

அங்கியான ஸ்வீகாரமாகிறது ஸித்தஸாத்யத்வாந்வய ப்ரதிபத்தியினுடைய வநுஸந்தானமாகையாலே உபாயநைரபேக்ஷ்ய விரோதியல்லாதவோபாதி அங்கமானத்யாகமும் ஸித்தஸாதநாந்தராநந்வய ப்ரதிபத்தியாகையாலே நைரபேக்ஷ்யவிரோதியாகாது. ப்ராக்ருதப்ராக்தாந்விதமான வகாரம் ஸ்வரூபத்திலநந்வயார்ஹதை

---

(௧) ஶரணாகதிகத்யம (௨) தி-வாய்-௫-௭- (௩) தி-மொழி-௯-௮

[illegible]

ஸஙருபத்தில் (க) "மானிடவர்க்கென்று பேச்சப்படுவதற்கு இல்லேன்" என்றும், (உ) "மற்றொருவர்க்கென்னைப் பேசலொட்டேன் மாலிருஞ்சோலையெம்மாயற்கல்லால்" என்றும் அந்யஸ்பர்ஸம் நாசகரமாயிருக்குமோபாதி, உபாயத்திலும், (ந) "களைவாய் துன்பம் களையாதொழிவாய்களைகண்மற்றிலேன்" (ச) "உன்னாலல்லால் யாவராலுமொன்றும்குறைவேண்டேன்" என்றும் சொல்லுகிறபடியே இதரஸாதநஸ்பர்ஸமும் ஸ்வயத்னஸ்வீகாரமும் நாசகரமாயிருக்குமாகையாலே ஸாதநாந்தரங்களினுடைய அத்யந்தாபாவப்ரதிபத்தி இந்தப் பரிஸப்தத்தாலே சொல்லிற்றாயிற்று.

உபாயாபாயங்களினுடைய ஸம்யோகத்தில் ப்ராயஸ்சித்தியமென்று கீழ்சொல்லிற்று. அவ்விடத்தில் அவனுக்குச்சொல்லுகிற ப்ராயஸ்சித்தமாவது-(ரு) "అపిచేత్సుకృతంకృత్వాస్యాదమోహ యోగమేవనిషేవేతనాన్యంయజ్ఞంసమాచరేత్ - அபிசேத்பாதகம் கிஞ்சித்யோகீகுர்யாத்ப்ரமாததஃ। யோகமேவ நிஷேவேத நாந்யம் யத்நம் ஸமாசரேத்" என்று யோகாப்யாஸநிரதனானவன் ப்ரமாதத்தாலே யேதேனும் பாபம்பண்ணினால் யோகத்தையே ஸேவிப்பான்; வேறொருயத்நமநுஷ்டிப்பானல்லனென்று யோகிக்கு ப்ராமாதிகபாபஸம்பந்தில் யோகாப்யாஸந்தானே ப்ராயஸ்சித்தமானாபோலே, "ఉపాయస్యాపినేసద్యః ప్రాయశ్చిత్తంసమాచరేత్ । ప్రాయశ్చిత్తిరియంసాత్రయత్పునశ్శరణంవ్రజేత్ । ఉపాయానాముపాయత్వస్వీకారేప్యేతదేవహి - அபாயஸம்ப்லவே ஸத்யஃ ப்ராயஸ்சித்தம் ஸமாசரேத்। ப்ராயஸ்சித்திரியம் ஸாத்ர யத்புநஸ் ஸரணம் வ்ரஜேத்। உபாயாநாமுபாயத்வஸ்வீகாரேப்யேததேவஹி" என்று ப்ரபத்தியென்னுமிடம் சொன்னதோ?

(சு) "కృతేసాపేనుతాపోవై యస్యపుంసః ప్రజాయతే। ప్రాయశ్చిత్తంతుతస్యైకం హరిసంస్మరణంపరమ్ - க்ருதே பாபே நுதாபோ வை யஸ்ய பும்ஸஃ ப்ரஜாயதே।

(க) நா-தி-க-ரு (உ) பெரி-தி-ந-ச ரு (ந) தி-வாய்-ரு-அ-அ

(ச) தி-வாய்-ரு-அ-உ (ரு) லக்ஷ்மீ-தந்த்ர (சு) வி-பு-உ-அ-அ

ப்ராயஶ்சித்தங்களையும் [illegible] என்று பரம பண்ணினவளவிலே யாவனொருபுருஷனுக்கு அநுதாபமிறக்கிறது; அவனுக்கு ப்ராயஶ்சித்தம் ஹரிஸம்தவாச்யனான ஸர்வேஶ்வரனே அந்தப் பாபங்களைப்போக்குவனென்று நினைக்கையென்றும், (௧) "க்ருஷ்ணாநுஸ்மரணம்பரம-க்ருஷ்ணாநுஸ்மரணம்பரம" என்று பகவத்ப்ரகாரத்வாநுஸந்தாநமே ஸர்வப்ராயஶ்சித்தங்களிலும் அதிகமான ப்ராயஶ்சித்தமென்று ப்ரதேஶாந்தரங்களிலும் சொல்லிற்று.

அவ்விடத்தில் புந:ப்ரபதநமாவது - புந:ப்ரயோகமின்றிக்கே பூர்வக்ருதப்ரபத்தியினுடைய ஸர்வாநிஷ்டநிவாரகத்வரூபமான வாகாரத்தை யநுஸந்தித்து வ்யவஸிதனாகை. ஆனகபாலே (௨) "ஸக்ருதேவ ஹி ஶாஸ்த்ரார்த்த: க்ருத:-ஸக்ருதேவஹிஶாஸ்த்ரார்த்த:க்ருத:" (௩) "ஸக்ருதேவ ப்ரபந்நாய-ஸக்ருதேவப்ரபந்நாய" இத்யாதிகளிற் சொல்லுகிற ஸக்ருத்ப்ரபத்தியோடு விரோதியாது.

அநந்தரம் "த்யஜ்ய" என்கிற ல்யப்பாலே இத்யாகம் மேற்சொல்லுகிற வுபாயஸ்வீகாரத்துக்கு அங்கமானவன்று கர்த்தவ்யம்; அல்லாதபோது கர்த்தவ்யமன்றென்கிறது. உபாயாந்தரங்களைவிட்டு ஸித்தோபாயத்தைப்பற்றுதேயிருக்குமாகில் உபயப்ரஷ்டனாய் விநாஶத்தோடே தலைக்கட்டுமத்தனையிறே. ஆகையாலே, த்யாகம் மேலிட்டு நரகம் வஸ்தவ்யமாகியாதல், த்யாகபூர்வகமாக ஸ்வீக்ருதமானவுபாயம் மேலிட்டு பரமபதம் என்கிறுமுறிப்படிச் செல்லுதல் செய்யும்படியிறே யென்னிலையென்று ஜீயாருளிச்செய்தது. ஆக த்யாகம் ஸித்தோபாயவரணம்பண்ணுமதிகாரியைப் பற்றவாகையாலே த்யாகவிஷிக்கு மநுஷ்டாநவிதிக்கும் விரோதமில்லை; ஆக, ல்யப்பாலே இங்கு விதேயமானத்யாகம் வ்ரஜவென்று விதிக்கிற ஸ்வீகாரத்துக்கு அங்கமென்றதாயிற்று.

நநு, இந்தகர்மபரித்யாகம் விதேயமாகில் இதில் மேற்சொல்லுகிற ஶோகநிவ்ருத்திகூடாது; எங்ஙனேயென்னில், உபாயாந்தரங்களை ஸ்வரூபவிருத்தமென்று விட்டவனுக்கு ஶோகமில்லாமையாலே "மாஶுச:" என்கிற நிஷேதவிதி கூடாமையாலே, அதுக்கு மேலே உபாயாந்தரங்களை துஷ்கரத்வாதிபயத்தாலே விட்டுத் தன்

(௧) வி-பு-௨ (௨) லக்ஷ்மீ-த-௧௭ (௩) ரா-யு-௧௮-௩௩

னுடைய புருஷார்த்தலாபத்துக்கு தூருபாயமில்லாமையாலே ஸோகித்தவனுக்கு இந்தவுபாயஸௌகர்யத்வம் முன்புசொன்ன வுபாயங்களைத் தானேவிடுகையாலே யுண்டாகையாலே த்யாகத்துக்கு விதேயத்வமில்லை யாகையாலும், அந்தவுபாயத்யாகந்தான் துஷ்கரத்வாதி ப்ரதிபத்தியாலேயாகையாலும், விளம்பாக்ஷமனான புருஷனுக்கு பஹுதாஜந்மஸாத்யமான வுபாயாந்தரங்களில் துஷ்கரத்வாதி ப்ரதிபத்தி பிறக்கையாலும், புருஷார்த்தவைலக்ஷண்யஜ்ஞாநத்தாலே தத்ப்ராப்தியிலே அதித்வரை நடக்கையாலே அதில்விளம்பத்தைக ஸஹியாமல் சிரகாலஸாத்யமான வுபாயாந்தரங்களைவிட்டு அவிளம்ப்ய பலப்ரதமாயிருப்பதொரு வுபாயம் காணாமையாலே ஸோகிக்கிறவனைக்குறித்து ஸ்வதப்ராப்தமான த்யாகத்தையநுவதித்து உத்தஸாதநத்தை விதிக்கிறதாகையாலும், விஹிதமானவுபாயத்தை விடச்சொல்லிவிதிக்கில் ஸாஸ்த்ரவையர்த்த்யம் வருகையாலும், ஒருபலத்துக்கு குருவாயும் லகுவாயுமிருப்பதிரண்டு உபாயத்தைவிதித்தால லகூபாயமுண்டாயிருக்க குரூபாயத்திலிழிவாரில்லாமையாலே லகூபாயமான ப்ரபத்த்யுபாயஸந்நிதியில் குரூபாயமானபக்த்யுபாயத்துக்கு அநுஷ்டாநமில்லாமையால் வருகிற வப்ராமாண்யத்தாலும், குரூபாயஸந்நிதியில் லகூபாயத்துக்கு உதயமில்லாமையாலே இந்தத்யாகம் விதேயமன்று; ஸ்வயமேவத்யக்தோபாயனானவனுக்கு அந்தத்யாகத்தையநுவதித்து ஸரணவரணமாத்ரம் விதிக்கிறதென்று சிலர்சொல்லுவர்கள்.

அது சொல்லவொண்ணாது; அத்யந்தபாரதந்த்ரமாய் பகவதேகரக்ஷ்யமான ஸ்வரூபத்துக்கு அநுரூபமல்லாத ஸாதநாந்தரதர்ஸநத்தாலே ஸோகித்தவனைக்குறித்து அவற்றினுடைய த்யாகபூர்வகமாக வநருபோபாயத்தை விதித்து ஸோகியாதே கொள்ளென்கையாலே ஸோகநிஷேதவிதி கூடாதென்கிறவிடம் அர்த்தமல்லாமையாலும், உபாயாந்தரங்களை துஷ்கரத்வாதிபயத்தாலே விட்டவனுக்கு அதுராஜஸத்யாகம்; அவனுக்கு த்யாகபலமான வாகிஞ்சந்யஸித்தியுமில்லை யென்னுமிடம், (க)"దుఃఖమిత్యేవయత్కర్మ కాయక్లేశభయాత్త్యజేత్ । సకృత్వారాజసంత్యాగం నైవత్యాగఫలంలభేత్" - துக்கமித்யேவயத்கர்மகா

(க) கீ-கஅ-அ

யக்லேஶபயாத் த்யஜேத் ஸக்ருத்வா ராஜஸத்யாகம் நைவ த்யாகபலம் லபேத்" என்று இழே சொல்லி து:க்கத்வாதி பயநிபந்தநமான ராஜஸத்யாகத்தை நிஷேதிக்கையாலும், து:க்கத்வாதி பயநிபந்தநமான த்யாகத்தில் ஶாஸ்த்ரீயாநுஷ்டாநத்தில் ஸர்வஶக்தத்துக்கு வையர்த்யம் வருகையாலும், பகவதேகரக்ஷ்யமான ஸ்வரூபத்துக்கு ரக்ஷகவ்யாபாரம் ரக்ஷ்யமாய்த் தொழிய ரக்ஷ்யவ்யாபாரம் ரக்ஷகமாகமாட்டாமையாலும், ஸ்வாதந்த்ர்யவ்யாபாரம் பாதகாதிகளோபாதி ப்ரதிபந்தகமாகையாலும், ஸாகாரமுமாய் அநாரூபமுமாய் நிரபாயமுமான ஸாதநத்திலுடைய ஸ்வீகாரத்துக்காக தத்விருத்தமாய் து:ஷ்கரமுமாய் ஸாபாயமுமாய் ஸ்வரூபாநநுரூபமாயிருக்கிற ஸாதநாந்தரங்களை விடச் சொன்னவித்தால் ஶாஸ்த்ரவையர்த்த்யம் வருமென்னவொண்ணாதாகையாலும், குணாநுகுணமாக விஹிதமான ஶ்யேநசித்யாதிகள் ஶாஸ்த்ரவிஶ்வாஸம்பிறந்து யதாவான புருஷார்த்ததத்ஸாதநங்களிலே ருசிபிறந்தவாறே த்யாஜ்யமாக விதிக்கிறாப்போலே ஜ்ஞாத்ருத்வகர்த்ருத்வபோக்த்ருத்வாதிகளே ஆத்மாவுக்கு ஸ்வரூபமென்றநுஸந்தித்தவனைக்குறித்து விஹிதமான ஸாதநாந்தரங்கள் அநந்யார்ஹஶேஷத்வாநந்யஶரணத்வாநந்யபோக்யத்வங்களாகிற ஸ்வரூபயாதாத்ம்ய ஜ்ஞாநவானைக்குறித்து த்யாஜ்யமாகவிதிக்க ப்ராப்தமாகையாலும், பரமபுருஷார்த்தலக்ஷணமான புருஷார்த்தத்தை யறிந்திருக்கச்செய்தேயும் ஐஶ்வர்யாதிபுருஷார்த்தங்களிலே அபிலாஷை நடக்கக்காண்கையாலும், ஸாதநத்திலும் ஒருவன் ர்த்தபரீக்ஷைபண்ணி ஜீவிக்கக்காணநிற்கச்செய்தேயும் ஒருவன் க்ருஷிபண்ணி ஜீவிக்கக்காண்கையாலும், பூர்வபூர்வகர்மாநுகுணமாக ஸாகாரதுஷ்கரமார்க்கங்களிலே ருசிபிறக்குமாகையாலும் ஸாத்யஸாதநங்கள் ஆயாஸாதிகளாலே துஷ்கரமாகிறவோபாதி ஸித்தஸாதநத்திலும் விஶ்வாஸதௌர்லப்யத்தாலருமையாலே துஷ்கரத்வமுண்டாகையாலும், லகூபாயமென்று இதிலே குருபாயத்திலிழிவாரில்லையென்கிற தூஷணமல்லாமையாலும், ஆகையாலே ஸகலஸாதநங்களையும் ஸஹியாதேயிருப்பதாய் ஸ்வயம்நிரபேக்ஷமான ஸித்தஸாதநஸ்வீகாரத்தை இதில் விதிக்கிறதாகையாலே ததங்கமான த்யாகம் விதேயமென்கிறது.

ஆக, பதத்வயத்தாலும் த்யஜ்யமான தர்மங்களையும், த்யாகப்ரகாரத்தையும், த்யாகம்-ஸ்வீகாரத்துக்கு அங்கமென்னுமிடத்தையும் சொல்லிற்று.

அநந்தரம் த்யாகாங்கமான ஸ்வீகாரத்தைச்சொல்லுகை[illegible]யாய்க்கொண்டு ஸ்வீகார்யஸ்வரூபத்தை "மாம்" என்கிற பதத்தாலே சொல்லுகிறது. இவ்விடத்தில் பதர்கூட்டைவிட்டு மணியை[illegible]தை யண்டைகொள்ளென்பாரைப்போலேயிறே இந்தவிதிவசுமென்று நம்பிள்ளையருளிச்செய்வரென்று ஆச்சான்பிள்ளை யருளிச்செய்வர். ஸாதநாந்தரங்கள் ஸாபாயங்களாய் அநேகங்களாய் அசேதநங்களாயிருக்கையாலே பதர்கூட்டம்போலேயென்றது. இவன் ஸித்தஸ்வரூபனாய் ஒருவனாய் பரமசேதநனாயிருக்கையாலேமணிபர்வதம்போலே யென்கிறது.

"மாம்" என்று த்வத்ஸாரத்யேஸ்திதனானவென்னையென்றபடி. இத்தால் நீவிமுகனானவன்றும் அந்தர்யாமியாய்நின்று ஸத்தையைநோக்கியும், கரணகளேபரவிதுரனாய் அசித(ஃ)விஶேஷிதனானவன்றும் தன்பக்கலிலே யேறிட்டுக்கொண்டு நோக்கியும், பின்பு நீ அபி(ஃ)முகனாயுஜ்ஜீவிக்கக்கூடுமோவென்று கரணகளேபரப்ரதாநம் பண்ணியும், பின்பு அவற்றைக்கொண்டு ப்ரவ்ருத்திகள் செய்கைக்காக அநுப்ரவேஶித்து, தன்னைப்பெறுகைக்கு உடலாயிருப்பதொரு ஜ்ஞாநவிஶேஷமுண்டாமோவென்னும் நசையாலே வேதங்களையும்வைதிகரையும் ப்ரவர்த்திப்பித்து,(க)"ధృతినియమనరక్షావీక్షణైశ్శాస్త్రదానప్రభృతిభిరచికిత్స్యాన్ ప్రాణినః ప్రేక్ష్య భూయః సురమనుజతిరశ్చాం లీలయా తుల్యధర్మా త్వమవతరసి దేవో జాపి సన్నవ్యయాత్మా - த்ருதிநியமநரக்ஷாவீக்ஷணைஶ்ஶாஸ்த்ரதாநப்ரப்ருதிபிரசிகித்ஸ்யாந்ப்ராணிந:ப்ரேக்ஷ்ய பூய:ஸுரமநுஜதிரஶ்சாம்லீலயா துல்யதர்மாத்வமவதரஸிதேவோஜாயிஸந்வ்யயாத்மா" என்றிப்படியே த(ஃ)ரித்துநியமித்துரக்ஷணவகாசமானரக்ஷாபேக்ஷை பார்த்திருந்து ஶாஸ்த்ரப்ரதாநம்பண்ணிசெய்துபோந்த விவ்வோராகாரவிஶேஷங்களாலே ரக்ஷணவகாஶம்பண்ணிக்கொடாமையாலே ரக்ஷணத்திலொரு சிக்கையில்லாத ப்ராணிகளைப்பார்த்து தேவதிர்யகாதியோநிகளிலே அவர்களோடு ஸமாநதர்மாவாய்க்கொண்டு அவதரியாநிற்புதி ; ஜநநமரணாதியோக்யமின்

(க) ர.ஸ்.த.உ.சு௮

றிக்கே நித்யனாயிருக்கச்செய்தேயுமென்கிறபடியே, ஓலைப்புறத்தில் செல்லாதவிடத்தை யெடுத்துவிட்டு நடத்துவாரைப்போலே ராம க்ருஷ்ணாத்யவதாரங்களைப்பண்ணுவதாய் இப்படி எதிர்சூழல்புக்குத் திரிகிற தன்வ்யாபாராதிகளைக் காட்டுகிறான்.

"மாம்" என்று தன்வ்யாமோஹத்தைக் காட்டுகிறானென்று நம்பிள்ளையருளிச்செய்வர்; அதாவது - (௧) "வைகுண்டே து பரே லோகே-வைகுண்டேதுபரேலோகே" இத்யாதிகளிற்படியே "த்ருத்வா பகவதஸ்ஸஹ-பக்தைர்ப்பாகவதைஸ்ஸஹ" என்கிற வைகுந்தத்தமரரும் முனிவருமான பரிஜனமமரர்களோடு ஸ்ரீபூமி நீளைகளோடுமெழுந்தருளியிருந்து நிரந்தரபூர்ணானுபவம் நடக்கச்செய்தேயும் லீலாவிபூதியிலுள்ளாருடைய விழவேதிருவுள்ளத்திற்பட்டு (௨) "ஸம்ஸாரிணஸ்-ஸம்ஸாரிணோமேத" என்று அவ்வநுபவம் உண்டாருக்காட்டாதே திருவுள்ளம்புண்பட்டு இவர்களையும் அவ்வநுபவத்திலே மூட்டலாமோவென்னும் நசையாலே அவதரித்துத் தாழநின்று அவன்கால் தலையிலேபடநின்று வ்யாபரித்த தன்வ்யாமோஹமெல்லாம் தோற்றும்படியிருக்கை.

"நீ உனக்குபோக்யமான ஶப்தாதிவிஷயங்களை புஜிக்கையாலே உன்னுடம்பில புசரைப்பார்; எனக்கு போக்யமான வுன்னையநுபவிக்கப்பெறுமையாலே என்னுடம்பில் வெளுப்பைப்பார்" என்று சட்டையைவிழவிட்டுக் காட்டுகிறானென்று எம்பார் அருளிச்செய்வர். போக்தாவுக்குத் தன்போக்யஜாதத்திலே யொன்றுகுறையிலும் குறைவாயிருக்குமிறே; (௩) "அஹமந்நம்-அஹமந்நம்" என்று ஆத்மவஸ்து அத்தலைக்கு போக்யமாயிறேயிருப்பது.

ஆக, "மாம்" என்று பரவ்யூஹாதிகளையும் விபவாந்தரங்களையும் இவ்வவதாரந்தன்னில் நவநீதசௌர்யாத்யபதாநாந்தரங்களையும் வ்யாவர்த்திக்கு, உனக்கு ஸாரதியாய் உனக்கு இழிதொழில் செய்து நிற்கிற வென்னையென்று, (௪) "பார்த்தன்செல்வத்தேரேறுசாரதி" என்றும், (௫) "கோல்கையிற்கொண்டு பார்த்தன்றன்தேர்முன்னின்றான்" என்றும், (௬) "தேர்மன்னர்க்காயன்று தேரூர்க்

(௧) வாயுபுராணம் (௨) மஹோபநிஷத் (௩) தை-ப்ருகு
(௪) தி-மொ-௨-௧0-௮ (௫) தி-மொ-௨-௩-௧ (௬) தி-மொ-௧௧-௫-௮

தான்" என்றும் சொல்லுகிற *தேசமறியவோர்சாரதியான நிலையைக்காட்டுகிறது.

"யாம்" என்று ஆஶ்ரயணீயமான வ்யக்தியைச்சொல்லுகையாலே ஆஶ்ரயணீயனையோநிபாக(க)"நிகரில்புகழாயுலகம்மூன்றுடையாய் என்னையாள்வானே திருவேங்கடத்தானே" என்று ஆழ்முதல்வராலே அநுஸந்திக்கப்பட்டு அநுஷ்டாநவாக்யத்தில் நாராயணபதத்திலே யநுஸந்தேயமான வாத்ஸல்யாதிகுணசதுஷ்டயங்களும் அநுஸந்தேயங்கள்.

வாத்ஸல்யமாவது - அன்றீன்றகன்றின்பக்கல் தாய்பசுவுக்குள்ள வ்யாமோஹம்; அதாவது-ஈவிப்பட்ட கறையில் புல்லையும் காற்கடைகொள்ளும் தேநுவானது-தன்கடையில்நின்றும் புறப்பட்டகன்றினுடைய தோஷத்தைத்தன்பேறாகநக்கித் தன்முலைப்பாலாலே அத்தை த(சு)ரிப்பிக்குமாபோலே, ஆஶ்ரிதகதமான தோஷமே போக்யமாக வங்கீகரித்து (க) "பாலேபோல்சீர்" என்கிற தன் கல்யாணகுணங்களாலே அவர்களை ரக்ஷிக்கை. ஸ்வாமித்வமாவது-ஆஶ்ரிதருடைய பேறிழவிலுண்டான ஸுகதுக்கங்கள் அவர்களுக்கன்றிக்கேயாம்படி அவர்களையுடையனாகை. ஸௌஶீல்யமாவது-(உ) "அவாப்தஸமஸ்தகாம:-அவாக்யநாதர:" என்கிறபடியே பெரியமேன்மையுடையனாய் (ங) "அவனெவ்விடத்தான் யானார்" என்னும்படியிருக்கிறவன் க்ஷுத்ரஸம்ஸாரியான சேதநனோடே அவன் சிறுமையாதல் தன்பெருமையாதல் தன்னெஞ்சிற்படாதபடி புரையறக்கலக்கை. ஸௌலப்யமாவது-(ச) "கட்கரியபிரமன் சிவனிந்திரனென்றிவர்க்குக்கட்கரியகண்ணனை" என்கிறபடியே அதீந்த்ரியனான தான் எல்லாருடையகண்ணுக்கு இலக்காய்க்கொண்டு ஸுலபனாயிருக்கை.

(ரு) "[illegible]-நயோத்ஸ்யாமி" என்று தர்மத்திலே அதர்மபுத்திபண்ணி யுத்தத்தில்நின்றும் நிவ்ருத்தனான அர்ஜுனன் தோஷம்பாராமல் மேல்விழுந்து தன்பேறாக அவனுக்கு அத்யாத்மோபதேஶம் பண்ணுகையாலே வாத்ஸல்யம்காணலாம்.

(க) பெரியதிருவ-ருஅ (உ) சா.தோ-ரு-கச-உ (ங) தி-வாய்-ரு-க-எ
(ச) தி-வாய-எ-எ-கக (ரு) கீ-உ-கூ

[illegible] அர்ஜுநனுக்கு இழிதொழில் செய்யும் [illegible] யைப் அப்ராதநனும் நிற்கிறநிலையிலே [illegible] ஸ்வாஹகத்வாதிகளை யுபதேசியாநின்றுகொண்டு (௧) "தேவர்தலை மன்னர்தாமே" என்றும் (௨) "பார்த்தன்றன்தேரையூருந்தேவன்" என்றும் சொல்லும்படியாயிருக்கிற ஸௌஸ்வரூப்யத்தைக் காட்டு கையாலே ஸ்வாமித்வம் காணலாம்.

அதிசயிதஜ்ஞாநரான ஸூரிகளுக்கு மெட்டவரியனாயிருக்கிறதானே, (௩) "హే కృష్ణ హే యాదవ హే సఖేతి-ஹே க்ருஷ்ண ஹே யாதவ ஹே ஸகேதி" (௪) "సేనయోరుభయోర్మధ్యే రథం స్థాపయ మేఽచ్యుత-ஸேநயோருபயோர்மத்யே ரதம் ஸ்தாபய மேச்யுத" என்று வாராய தோழனே! க்ருஷ்ணனே யாதவனே யென்றழைத்து, "தேரைநடத்து; புரவியைவிட்டுக்குளிப்பாட்டு" என்னும்படி "பார்த்தர்க்காய், ஐவர்க்காய், தேர்மன்னர்க்காய்" என்கிறபடியே அவர்களுக்கு கையாளாய்க்கொண்டு *பாங்காக முன்னைவரோடன் பளவிநிறகையாலே ஸௌசீல்யம் காணலாம்.

(௫) "న సందృశే తిష్ఠతి రూపమస్య న చక్షుషా పశ్యతి కశ్చనైనమ్-நஸந்த்ருசே திஷ்டதிரூபமஸ்ய நசக்ஷுஷா பஶ்யதி கஶ்சநைநம்" (௬) "న మాంసచక్షురభివీక్షతే తమ్-நமாம்ஸசக்ஷுரபிவீக்ஷதேதம்" (௭) "యస్యావతారరూపాణి సమర్చన్తి దివౌకసః-யஸ்யாவதாரரூபாணி ஸமர்சந்தி திவௌகஸ:" (௮) "అపశ్యన్తః పరం రూపమ్-அபஶ்யந்த:பரம்ரூபம்" என்றும், (௯) "நேரேகடிக் கமலத்துள்ளிருந்துங்காண்கிலான்" (௧௦) "கார்செறிந்தகண்டத்தானெண்கண்ணான்காணான்" (௧௧) "நீறுடிதான்காணமாட்டாத" என்று மித்யாதிகளாலே சொல்லுகிறபடியே ப்ரஹ்மாதிகளுக்கும் ஸ்வயத்நத்தால்காண நிலமின்றிக்கேயிருக்கிற விக்ரஹத்தை (௧௨) "దివ్యం దదామి తే చక్షుః పశ్య మే యోగమైశ్వరమ్- திவ்யம் ததாமிதேசக்ஷு:பஶ்யமேயோகமைஶ்வரம்" என்று அர்ஜுநனுக்கு திவ்யசக்ஷுஸ்ஸைக்கொடுத்து

---

(௧) ௪-திருவ-௧௬ (௨) நா-மொ-௬ ௫ ௯ (௩) கீ-௧௧-௪௧
(௪) கீ-௧-௨௧ (௫) தை-நா- (௬) ரு-வேத-
(௭) வி-பு (௮) (௯) ௧-திருவ-௫௬
(௧௦) ௪-திருவ-௭௩ (௧௧) ௪-திருவ ௨௭ (௧௨) கீ-௧௧-௮

[illegible] அதற்குப் [illegible]
[illegible] விஶ்வரூபதர்ஶநத்தாலேவர்த ஐஶ்வர்யம் [illegible]
ளவன்றனக்கே, (க) “కిరీటినంగదినంచక్రహస్తమిచ్ఛామిత్వాంద్రష్టుమహం [illegible] తేనైవరూపేణచతుర్భుజేనసహస్రబాహోభవవిశ్వమూర్తే- கிரீடிநம் [illegible] ஹஸ்தமிச்சாமித்வாத்ரஷ்டுமஹந்ததைவ! தேநைவரூபேண சதுர்புஜேநஸஹஸ்ரபாஹோபவவிஶ்வமூர்த்தே” என்று பரிசரிதபூர்வமான ஶுபாஶ்ரயவிக்ரஹத்தையே காணவேணுமென்று பார்த்திருக்கவளவிலே, (உ) “వ్యపేతభీః ప్రీతమనాః పునస్త్వంతదేవమేరూపమిదంప్రపశ్య- வ்யபேதபீஃப்ரீதமநாஃ புநஸ்த்வந்ததேவமேரூபமிதம்ப்ரபஶ்ய” என்று ஸ்வாஸாதாரணவிக்ரஹத்தைக் காட்டியும், (ங) “తద్విష్ణోఃపరమంపదం సదాపశ్యన్తిసూరయః- தத்விஷ்ணோஃ பரமம்பதம்ஸதாபஶ்யந்திஸூரயஃ” என்று நித்யஸூரிகள் கண்டு ஸத்தைபெறும், (ச) “భర్తారంపరిషస్వజే- பர்த்தாரம்பரிஷஸ்வஜே” என்று பிராட்டிமாரணைந்து ஸத்தைபெறும் போருகிற திவ்யவிக்ரஹத்தை அர்ஜுநனுக்குக்கடாக்ஷியாதாங்குகைக்கும் துர்யோதநாதிகளிலக்காகவந்திலே யெய்யவும்பண்ணிநிற்கையாலே ஸௌலப்யம் காணலாம்.

இந்த வாத்ஸல்யாதிகளிலுங்காட்டில் கீழ்ச்சொன்னவ்யாமோஹகுணமே ஆஶ்ரிதருக்கு உத்தாரகமாவது; (ரு) “வாரிக்கொண்டுன்னைவிழுங்குவன்காணிலென்று ஆர்வுற்றவென்னையொழியவென்னில் முன்னம்பாரித்துத் தானென்னைமுற்றப்பருகினான்” என்கிறபடியே ஒருசேதநனைப்பெற்றானாகில் உஜ்ஜீவித்தல், இல்லையாகில் நாவிலும் பல்லிலும் நீரற்றுக்கிடக்கும்படியான வ்யாமோஹத்தோடேயென்னைமுற்றப்பருகினானென்றாரிறே; (சு) ‘உய்வுபாயம்மற்றின்மைதேறி” என்று-தம்முடைய ஆத்மஸத்தையை அவனுக்கலங்காரமான திருவாபரணம் திருமாலைகளாகவும், இவருடைய வுக்தி மாத்ரமே திருப்பீதாம்பரம்முதலானவலங்காரங்களாகவுங்கொள்ளும்படியான வ்யாமோஹமல்லது உஜ்ஜீவநோபாயமில்லையென்றாரிறே.

(க) கீ-கக-சகூ.　(உ) கீ-கக-சகூ.　(ங) ஸாம-உத்தர
(ச) ரா-ஆர-டுO-ருகூ.　(ரு) தி-வாய்-கூ-சு கO.　(சு) தி-வாய்-சா-ரு-கக

...காட்டில் ப்ரணயித்தகாட்டில் இவளுக்கு விசேஷம் நிருபா திகத்வமும் இந்தவ்யாமோஹகுணமுமென்று ஆச்சான்பிள்ளை வார்த்தை.

இவ்விடத்தில் "மாம்" என்கிற வபுரோக்ஷநிர்த்தேசத்தாலே ப்ரகாசிதமாய், கீழ்ச்சொன்ன ஸௌலப்யகுணத்துக்கு விஷயமாய், ஆச்ரயணோபயோகிதபாத்யத்திலே (ஹ) சரணசப்தத்தாலே சொல்லப்பட்ட விக்ரஹத்தையும் சொல்லுகிறது.

அதாவது-ஸேநாதூளிதூஸரிதமாய் அலையெறிகிற கொத்தார் கருங்குழலும், ஸ்மிதபிந்தாஸ்தபநிதமான கோளிழைவாண்முகமும், ஆச்ரிதவிரோதிநிரஸநத்தாலே சீறிச்சிவந்து சிதறவலர்ந்த தாமரைத் தடாகம்போலே கண்டவிடமெங்கும் அலையெறிகிற திருக்கண்களும், காளமேகநிபச்யாமமாயிருண்டு குளிர்ந்த திருமேனியும், குருமாமணிப்பூண்குலாவித்திகழும் திருமார்பிலே நந்தவனமாலையும் அதுக்குப் பரபாக(ஹ)மாம்படி சாற்றின வந்திபோன்ற நிறத்தாடையும், தாக்கினாவுளவுகோலும், ஜ்ஞாநமுத்ராபோடேகூடின வணிமிகுதாமரைக்கையிலே கொத்த சிறுவாய்க்கயிறுமாய் நிற்கிறநிலையைக்காட்டுகையாலே விலக்ஷணவிக்ரஹயோகமும் தோற்றுகிறது.

"மாம்" என்ற விலக்ஷணவிக்ரஹோபேதமாய் வாத்ஸல்யாதி குணவிசிஷ்டவஸ்துவைச்சொல்லுகையாலே, (க) "ஸ்ரீவத்ஸவக்ஷா:-ஸ்ரீவத்ஸவக்ஷா:" (உ) "ஸ்ரீவத்ஸவக்ஷோநித்யஸ்ரீ-ஸ்ரீவத்ஸவக்ஷஸம்ஜாதகம்" (ந) "திருமார்பில்திருமங்கைதன்னோடும் திகழ்கின்ற" என்கிறபடியே இந்த விக்ரஹத்துக்கு நிரூபகபூதையாய், (ச) "அலர்மேல்மங்கையுறைமார்பாநிகரில்புகழாய்" இத்யாதியாலே வாத்ஸல்யாதிகளுக்கு உத்பாத(ஹ)வகையாக நம்மாழ்வாராலே யநுஸந்திக்கப்படிருப்பாளாய், ஆச்ரயிக்கிற சேதநரை அபராதாபாகரணபூர்வகமாக வங்கீகரிக்கும்படி பண்ணக்கடவ புருஷகாரத்துக்கநுரூபமான வுபய விஷய ஸம்பந்தத்தையுடையளாயிருக்கிறலக்ஷ்மியோடுண்டான ஸம்பந்தம் இப்பதத்திலே யநுஸந்தேயம்.

(க) ரா-யு-கக-கரு (உ) (ந) தி-வாய-கo-ங-க
(ச) தி-வாய்-ஙு-கo-கo

(க) "[illegible] [illegible]ஸ்வர:-ஸ்ரீகர்ப்ப: பரமேஸ்வர:" (உ) "திருவுடையடிகள்" (ங) "திருமகளார் தனிக்கேள்வன் பெருமையுடையபிரானார்" என்றும் (ச) "கோலமலர்ப்பாவைக்கன்பாகிய வென்னன்பே" என்றும், (ரு) "திருவின்மணாளன் என்னுடைச்சூழலுளான்" என்றும், வாத்ஸல்யாதிகள் ப்ரகாஶிக்கிறது-ஶ்ரீஸம்பந்தத்தாலேயிறே.

ஆக, புருஷகாரவஸ்துவையும் வாத்ஸல்யாதிகுணவிஶேஷங்களையும் சொல்லுகையாலே அநுஸந்தாநரஹஸ்யத்தில் ப்ரதமபதமான ஶ்ரீமத்பதத்தையும் நாராயணபதத்தையும் நினைக்கிறது.

இப்படி வேண்டுகிறது நித்யாநுஷ்டாநங்களுக்கு ஐக்யமுண்டாகவேண்டுகையாலே; ஶ்ரீமானான நாராயணனையிறே அநந்ய உபாயமாக ப்ரார்த்திக்கிறது; ஆக, ஶ்ரீமத்தையைச் சொல்லுகையாலே அபராதாதிகளைப்பாராமல் ரக்ஷிக்குமென்கிறது; நாராயணபதத்தால் புருஷகாரபூதையானவள் (சா) "சிதகுரைக்குமே" என்றும், "என்னடியார் செய்தாரேல் நன்றுசெய்தார்" என்றும் அவளோடே மறுதலைத்துரக்ஷிக்கும் ஸ்வபாவத்தைச்சொல்லுகிறது.

இப்படி ஶ்ரியஃபதியான நாராயணனுகிறான் க்ருஷ்ணனென்னுமிடம் (எ) "ఏష నారాయణశ్శ్రీమాన్ క్షీరార్ణవనికేతనః। నాగపర్యఙ్కముత్సృజ్య హ్యాగతో మధురాం పురీమ్ - ஏஷநாராயணஶ்ஶ்ரீமாந் க்ஷீரார்ணவநிகேதந:। நாகபர்யங்கமுத்ஸ்ருஜ்யஹ்யாகதோமதுராம்புரீம்" என்றுசொல்லிற்று; (அ) "రుక్మిణీ కృష్ణజన్మని-ருக்மிணீ க்ருஷ்ணஜந்மநி" என்கையாலே ஶ்ரியஃபதித்வமநுவர்த்திக்குமிறே. குணியானவஸ்துபுக்கிடத்தே குணங்களும் புகுருமாகையாலே நாராயணத்வமும் அநுவ்ருத்தமாகக் குறையில்லை.

(கா) "కృష్ణ ఏవ హి లోకానాముత్పత్తిరపి చాప్యయః-க்ருஷ்ண ஏவஹிலோகாநாமுத்பத்திரபிசாப்யய:" (கo) "అహం కృత్స్నస్య జగతః ప్రభవః ప్రళయస్త

(க) ஸஹஸ்ரநாமம் (உ) தி-வாய்-க ங-அ- (ங) தி-வாய்-க- சா-க
(ச) தி-வாய-கo-கo-எ (ரு) தி-வாய்-க-க-க- (சா) பெரி-தி-ச க-உ
(எ) ஹரிவம்ஶம் (அ) வி-பு-க- (கூ) பார-ஸபா-கூஅ- (கo) கீ-எ-க

...ம் க்ருத்ஸ்நஸ்ய ஜகத: ப்ரபவ: ப்ரளயஸ்ததா" (௧) "మత్తః పరతరం నాన్యత్కించిదస్తి ధనంజయ - மயி ஸர்வமிதம் ப்ரோதம் ஸூத்ரே மணிகணா இவ" (௨) "మయాతతమిదంసర్వం జగదవ్యక్తమూర్తినా- மயா ததமிதம் ஸர்வம் ஜகதவ்யக்தமூர்த்திநா" (௩) "మత్స్థానిసర్వభూతానినచాహంతేష్వవస్థితః। నచమత్స్థానిభూతానిపశ్యమేయోగమైశ్వరమ్- மத்ஸ்தாநி ஸர்வபூதாநி நசாஹம்தேஷ்வவஸ்தித: । நசமத்ஸ்தாநி பூதாநி பஶ்யமேயோகமைஶ்வரம்" இத்யாதிகளாலே நாராயணபதோக்தமான ஸர்வகாரணத்வ ஸர்வஸம்ஹார்த்த்ருத்வங்களும் ஸர்வவ்யாபகத்வ ஸர்வாதாரத்வாதிகளும் க்ருஷ்ணாவதாரத்திலு மநுஸந்திக்கப்படாநின்றதிறே. ஆகையாலே ஶ்ரிய:பதியாய் நாராயணனானவென்னை யென்றபடி.

ஆனால் நாராயணஶப்தோக்தங்களானஸகலகுணங்களும் அநுஸந்தேயங்களாகாதோவென்னில்; "மாம்" என்று ஆஶ்ரயணீயவ்யக்தியைச் சொல்லுகையாலே ஆஶ்ரயணோபயோகியான வாத்ஸல்யாதிகளை இங்கே அநுஸந்தித்து, அஹமென்று அநிஷ்டநிவ்ருத்தி பூர்வகேஷ்டப்ராபணவன்பக்கலிலே ததுபயோகிகளான ஜ்ஞாநஶக்த்யாதிகளையும் அநுஸந்திக்கப்ராப்தமாகையாலே ஸகலகுணங்களும் அநுஸந்திக்கவேணுமென்கிற நியமமில்லை,

ஆக வாஶ்ரயிக்கிற சேதநனுடைய ஸ்வாபராதபயநிவ்ருத்திஹேதுபூத புருஷகாரயோகமும், ஸ்வதோஷதர்ஶநபயநிவ்ருத்திஹேதுபூதவாத்ஸல்யமும், அப்ராப்ததாநிபந்தநபயநிவ்ருத்திஹேதுவான ஸ்வாமித்வமும், ஸ்வநைச்யதாநிபந்தந பயநிவ்ருத்திஹேதுவான ஸௌஶீல்யமும். துர்லபத்வநிபந்தபயநிவ்ருத்திஹேதுவான ஸௌலப்யமும், "மாம்" என்கிற வாஶ்ரயணீயவஸ்துவின்பக்கலிலே யநுஸந்தித்ததாயிற்று.

அநந்தரம், ஏகஶப்தம் - இவ்வுபாயவிஶேஷத்தைச் சொல்லுமிடங்களிலே (௪) "త్వమేవోపాయభూతో మేభవ-த்வமேவோபாயபூதோமேபவ" (௫) "తమేవశరణంగచ్ఛ-தமேவஶரணம்கச்ச" (௬) "మామేవయే ప్రపద్యన్తే-மாமேவயேப்ரபத்யந்தே" (௭) "తమేవచాద్యంపురుషంప్రపద్యే-

(௧) ஸ்ரீ-எ-எ (௨) ஸ்ரீ-கூ ச (௩) ஸ்ரீ- (௪) அஹிஸம-ருக-ரு௧
(௫) ஸ்ரீ-௧அ-௬௨ (௬) ஸ்ரீ-எ-௧௪ (௭) ஸ்ரீ-௧௫-௪

மோக்ஷார்த்யம்புருஷம்ப்ரபத்யே" (க) "[illegible]மேவஸரணம்ப்ராப்ய" (உ) "பாதம்சரணாகத்தந்தொழுந்தாய்" (ங) "கழல்களவையேசரணாகக்கொண்ட" (ச) "நாகணைமிசைநம்பிரான் சரணேசரண்" இத்யாதிகளாலே அவதா(ரு)ரணஸஹிதமாகப்ரயோகித்துக்கொண்டு போருகிற ஸ்தாநப்ரமாணத்தாலே உகாரம்போலே ஏகஸப்தமும் அவதாரணமாய் உபாயத்திலுடைய ஸஹாயாந்தராஸஹத்வரூப நைரபேக்ஷ்யத்தைக் காட்டுகிறது.

'ஏகஸப்தத்துக்குப்பொருள் த்விதீயவ்யாவ்ருத்திபிறே. இத்தால் எது வ்யாவர்த்த்யமென்னில்; உபாயத்வேநாஸ்ரயணீயமாகிற விவ்வஸ்துவுக்கு விஸேஷணமான ஏகஸப்தமாகையாலே தத்ப்ரதிகோடியான வுபாயாந்தரங்களும்; உபாயோபயோகிகளாய் வருமவைபிறே-வ்யாவர்த்த்யங்களாவது; அதில் கர்மஜ்ஞாநாதிஸாதநாந்தரங்களினுடைய த்யாகம் கீழேசொல்லுகையாலே அவைவ்யாவர்த்த்யங்களொன்னவொண்ணாது. ஸ்வீகர்த்தாவான சேதநனுடைய முமுக்ஷுத்வத்தாலும் பகவதநந்யார்ஹஸேஷத்வ ஸ்வரூபநிஷ்டையாலும், (ரு)"మత్తః పరతరం నాన్యత్కిఞ్చిదస్తి ధనఞ్జయ-மத்த:பரதரம்நாந்யத்கிஞ்சிதஸ்திதநஞ்ஜய" என்கிற வாஸ்ரயணீயனுடைய ஸர்வஸ்மாத்பரத்வத்தாலும், தேவதாந்தரங்கள் இங்கு அப்ரஸ்துதங்களாகையாலும்-அவை வ்யாவர்த்த்யங்களென்னவொண்ணாது. இது தான் ஸித்தமான ஸாதநத்தைப்பற்றி வருகிற ப்ரதிபத்திமாத்ரமாகையாலே அதிலுபாயத்வமாதல்,அங்கத்வமாதலில்லாமையாலே "ஸரணம்" என்று, உபாயத்வம்-மாமென்று நிர்த்தேஸிக்கப்பட்ட வஸ்துவின்மேலே கிடக்கையாலும், அதுதான் ஸஹாயாந்தரங்களை ஸஹியாதபடி நிரபேக்ஷமாகையாலும், ப்ரபத்திபிலுபாயத்வமும் அங்கபாவமுமில்லை.

உண்டாமாகில் இவ்வுபாயத்துக்கு உபாயாந்தரவ்யாவ்ருத்திரூபமான ஸித்தத்வ நைரபேக்ஷ்யங்களில்லையாம். ஆனால் ஏகஸப்தத்துக்கு வ்யாவர்த்த்யமாகவொன்றில்லாமையாலே அது நிரர்த்

(க) ஜீதா-க- (உ) தி-வாய-ரு-எ-க0 (ங) தி-வாய்-ரு-அ-கக
(ச) தி-வாய்-ரு-க0-கக (ரு) கீ-எ எ

நமாமியென்னில்; உபாயாந்தரவ்யாவ்ருத்திக்கு மவகாசமில்லையே யாகிலும், ஸித்தோபாய ப்ரதிபத்தியில் அங்கபாவமில்லையேயாகிலும், "యదనన్తరం యద్భవతి తత్తస్య కారణమ్- யதநந்தரம் யத்பவதி தத்தஸ்யகாரணம்" என்று யாதொன்றுண்டான வநந்தரத்திலே யாதொன்றுண்டாம்; அதுக்கு முன்னிலது காரணமாமென்கிற ந்யாயத்தாலே, (க) "ఉపాయోపేయత్వే తదిహ తవ తత్త్వం న తు గుణౌ- உபாயோபேயத்வே ததிஹ தவதத்வம்ந துகுணௌ" என்று உபாயத்வம் நித்யமேயாகிலும் இவனுடைய ஸ்வீகாராநந்தரம் அவனுடைய உபாயபாவம் ஜீவிக்கையாலே ஸ்வீகாரத்திலே அங்கபுத்திபிறக்கைக்கு யோக்யதையுண்டாகையாலே அதுவ்யாவர்த்த்யமாகலாம்.

ஆனால் அங்கபாவம் கழிகிறபடி யெங்ஙனேயென்னில்; அங்கமாவது அங்கிக்கு கிஞ்சித்காரமாமதிறே. அந்த கிஞ்சித்காரந்தான் - ஸ்வரூபோத்பாதகமாயாதல், உத்பந்நஸ்வரூபத்துக்கு வர்த்த(ர்)கமாயாதல; வர்த்தி(ர்)தஸ்வரூப பலப்ரதமாயாதலாயிருக்கும். அதில் ஸித்தஸ்வரூபமாகையாலே உத்பத்த்யபேக்ஷையில்லை. ஏகரூபமாகையாலே வ்ரு(ர்)த்த்யபேக்ஷையில்லை. பரமசேதநனாகையாலும், அமோக(க)ஸங்கல்பனாகையாலும் ஸர்வஜ்ஞத்வாதிகுணவிஶிஷ்டனாகையாலும் நிருபாதிக ஸௌஹ்ருத்தாகையாலும, பலப்ரதாநத்திலும் அந்யஸாபேக்ஷதையில்லை.

"యద్యత్సాధనం తత్తత్సాఙ్గమ్-யத்யத்ஸாதநம்தத்தத்ஸாங்கம்" என்கிறபடியே உபாயமாகில் அங்கஸாபேக்ஷமாயன்றோ இருப்பது, பக்த்யாதிகளைப்போலேயென்னில; அது உபாயத்வநிபந்தநமன்று; ஸாத்யத்வநிபந்தநம்; எங்ஙனேயென்னில்; பக்தி-(உ) "జన్మాన్తరసహస్రేషు తపోజ్ఞానసమాధిభిః । నరాణాం క్షీణపాపానాం కృష్ణే భక్తిః ప్రజాయతే- ஜந்மாந்தரஸஹஸ்ரேஷு தபோஜ்ஞாநஸமாதிபி: | நராணாம்க்ஷீணபாபாநாம் க்ருஷ்ணேபக்தி:ப்ரஜாயதே" என்கிறபடியே சிரகாலஸாத்யமாகையாலே கர்மஜ்ஞாநங்களை யபேக்ஷித்திருக்கும். சிரகாலேந நிஷ்பந்நமாக வேண்டுகையாலே பகவத்ப்ரஸாதாதி ஸாபேக்ஷமாயிருக்கும். அசேதநமாகையாலே பலப்ரதாநத்திலும ஈஶ்வராநுக்ரஹ ஸாபேக்ஷமாயிருக்கும்.

(க) ர-ஸ்த-உ (உ) லகலத்ரிஸம்ருதி

இவ்வுபாயம் அவற்றை யபேக்ஷித்திராது. ஆகையாலே ஸ்வீகாரம் அங்கமாகமாட்டாது. உபாயாந்தரங்கள் உபாயமாகிறது பல ப்ரதானதேவர்களுக்கு ப்ரஸாதநமாகிறவோபாதி இதுவும் ப்ரஸாதநமாகாதோவென்னில்; அவர்கள் பலப்ரதாநோந்முகரல்லாமையாலே ப்ரஸாதநஸாபேக்ஷதையுண்டு; இங்கு உபாயபூதனான ஈஸ்வரன் எதிர்சூழல்புக்கு ஆள்பார்த்துத் திரிகிறவனாகையாலும் நிருபாதிக ரக்ஷகனாகையாலும் அவனுக்கு ப்ரஸாதநமாகச் செய்யவேண்டுவதில்லை. உண்டென்றிருக்கில் தனக்கு ஸ்வாபாவிகமான ஸ்வரூபபாரதந்த்ர்யத்தையும் கழித்து அவன் ரக்ஷகத்வத்தையும் ஸோபாதிகமாக்குகிறானித்தனை.

ஆனால் இவ்வுபாயம் இத்தனைநாளும் ஜீவியாதொழிவானென்னென்னில; உபாயமாவது-ஒருவனுடைய இஷ்டாநிஷ்டப்ராப்தி பரிஹாரம்பண்ணுகையாகையாலே அதுக்கொரு அதிகாரியாகில அபேக்ஷிதம்; ஸ்வீகாரம் என்செய்யவென்னில்; ப்ரயோஜநாந்தரபரரிலும் ஸாதநாந்தரநிஷ்டரிலுங் காட்டில் வ்யாவ்ருத்தமான வநந்ய ப்ரயோஜநத்வ அநந்யஸாதநத்வங்களை ப்ரகாஶிப்பிக்கிறது.

இப்படி இவனுடைய ரக்ஷணத்திலே உத்யுக்தனாய் நிருபாதிக ரக்ஷகனாயிருக்கிறவன் பக்கலிலே "யாச்ஞா ப்ரபத்தி:-யாசநாப்ரபத்தி:" "ப்ரார்த்தநாமதி:-ப்ரார்த்தநாமதி:" என்கிற ப்ரார்த்தனை வேண்டுவானென்னென்னில்; மோக்ஷதசையில ஸர்வம்கரிஷ்யாமி யென்கிற ஸங்கல்பாநுகுணமாக ஸர்வதேஶஸர்வகால ஸர்வாவஸ்தோசிதமான ஸர்வவிதகைங்கர்யங்களையும் கொள்ளுவதாக வொருப்பட்டிருக்கச்செய்தேயும் அடிமைகொள்ளுகிறவன் உத்துங்கதத்வமாகையாலும் அவாப்தஸமஸ்தகாமனாய்க்கொண்டு நிரபேக்ஷனாகையாலும், அடிமைதான் ஸ்வரூபஸத்தாஹேதுவான ஶேஷத்வத்தினுடைய வுத்பத்திஹேதுவாய்க்கொண்டு அநுரூபமாய் அபிமதமாயிருக்கையாலும், ஶேஷவ்ருத்தியிலாதராதிஶயத்தாலும் ப்ரார்த்தனைவேண்டினவோபாதி இங்கும் உபாயபூதனானவன் ரக்ஷணோந்முகனாயிருக்கச்செய்தேயும் அவன்ஶ்ரிய:பதித்வ நாராயணத்வாதிகளாலே ஸர்வாதிகனாயிருக்கையாலும், தன்னுடைய ஸ்வரூபபாரதந்த்ர்யாநுஸந்தாநத்தாலே இவ்வுபாயத்தில் தனக்குண்டான வாதராதிஶயத்

தாலும் பரதந்த்ரசேதநனுகையாலும் சைதந்யகார்யமான ப்ரார்த்தனைவேணும்.

அங்கு கைங்கர்யம் சேஷபூதமான ஸ்வரூபத்துக்கு அநுரூபமான புருஷார்த்தமாகைபாலே சேஷபூதனுடைய சைதந்யகார்யமாக ப்ரார்த்தனைபுகுந்தது. இங்கு உபாயவிசேஷமும் பாரதந்த்ர ஸ்வரூபத்துக்கு அநுரூபமாகையாலே பரதந்த்ரனுடைய சைதந்ய கார்யமாக ப்ரார்த்தனைபுகுந்தது. ஆகையாலே இந்தஸ்வீகாரம் அதிகாரியை விசேஷித்துக்கொடுக்கிறது. உபாயமுமன்று. உபாயாங்கமுமன்று; ப்ரபத்தவ்யனுக்கு ரக்ஷகத்வவிசேஷித்வாதிகள் ஸ்வரூபமானுப்போலே ரக்ஷ்ய ஸ்வரூபனுன ப்ராப்தாவுக்கும் இப்ப்ரபத்தி ஸ்வரூபம்.

"அவ-ரக்ஷணே" "மந-ஜ்ஞானே" என்கைபாலே ரக்ஷணதர்மாஶ்ரய வஸ்துவுக்கு ரக்ஷ்யவிஷயம் அபேக்ஷிதமானுப்போலே ஜ்ஞாநாஶ்ரயவஸ்துவுக்கும் ஜ்ஞேயவிஷயம் அபேக்ஷிதமாயிருக்கும். இருவர்க்கும் இரண்டும் விஷயமாயிருக்கையாலும், இரண்டும் தர்மிக்ராஹக ப்ரமாணஸித்தமாகையாலும் இருவர்க்கும் இரண்டும் ஸ்வரூபமாயிருக்கும்.

இனி அதிகாரிக்கு அங்கபாவமுண்டாகில் ஸ்வீகாரத்துக்கும் அங்கபாவமுண்டு. க்ஷாத்ர அந்தத்துக்கு ஸாதநமின்றிக்கே போஜநாபேக்ஷாதயோதகமாகிறவோபாதி, இதுவும் உபாயத்வஸம்பாதநம் பண்ணுகிறதன்று. ரக்ஷாபேக்ஷாத்யோதகமாய்க் கிடக்கிறது. (க) "த்வமேவோபாயபூதோ மே பவ-த்வமேவோபாயபூதோமேபவ" (உ) "தத்தேசோபாயதாயாச்ஞா-தத்தேசோபாயதாயாச்ஞா" என்றிறே லக்ஷணவாக்யங்களும்.

(ங)"உணர்வினுள்ளேயிருத்தினேன் அதுவுமவனதின்னருளே" என்று இப்ப்ரதிபத்திக்கு உபாயகார்யத்வமுண்டிதகனையல்லது உபாயமேஷாத்வமில்லை; (ச)"உன்மனத்தாலென்னினைந்திருந்தாய்"(ரு) "என்செய்கின்றாய்சொல்லு"என்று அவன்நினைவேயிறே உபாயம். இத்தலைக்கு(சா)"ஶ்ரீஸ்வ-தத்தஸ்ய" என்றிருக்கைக்கு மேலில்லையே; ராஜமஹிஷி க்ஷுளிகைகுத்துதல், குடம் சுமத்தல்செய்யுமோபாதியிறே இவன் ஸ்வரக்ஷண வ்யாபாரத்திலிழிகையாகிறது. ராஜாவுக்கு போகயோக்யமாய் அவனுலேரக்ஷ்யமான ஶரீரரக்ஷணபண்ணினுல

(க) அஹி-ஸம்-ருக-ருஅ. (உ) விஷ்வக்ஸேநஸம் (ங) தி-வாய்-அ-அ-ங
(ச) தி-மொ-உஎ-க (ரு) (சா) ரா-ஸ-ருகர-ருO

அவளுக்கும் ஸ்வரூபஹாநியாய் ராஜாவுக்கும் அவத்யமாமாபோலே யிறே ஈஶ்வரஶேஷமாய் ஈஶ்வரைகரக்ஷ்யமான ஸ்வரூபஸமரக்ஷணத்திலிவனிழிந்தால் இவனுக்கும் ஸ்வரூபஹாநியாய் ஈஶ்வரனுக்கும் அவத்யமாயிருக்கும்படியாகையாலே இவ்வேகஶப்தம்வ்ரஜவென்று விஹிதமான ஸ்வீகாரத்திலங்கபாவத்தைக் கழிக்கிறது.

அதவா, இவ்வேகஶப்தம் ஶரணஶப்தவிஶேஷணமாய், அத்தாலே அத்விதீயமான வுபாயமெனகிறதென்றருளிச்செய்வர்கள். அத்தாலும் உபயநைரபேக்ஷ்யமே பலிக்கிறது. நிரபேக்ஷோபாயமாகையாலேயிறே ஆநுகூல்யாதிகளும் அங்கநின்றிக்கே ஸம்பாவித ஸ்வபாவங்களாகப் பூர்வாசார்யர்களருளிச செய்வர்கள்.

(ஶரணம்) கீழ், மாமென்றுஸ்வீகார்யதவேந சொன்னவஸ்துவை ஸ்வீகரிக்கும ப்ரகாரத்தைச சொல்லுகிறது. (ஶரணம்) (௧) "ఉపాయేగృహరక్షిత్రోశ్శబ్దశ్శరణమిత్యయం । వర్తతేసామ్ప్రతన్త్వేష ఉపాయార్థైకవాచకః-உபாயேக்ருஹரக்ஷித்ரோஶ்ஶப்தஶ்ஶரணமித்யயம் । வர்த்ததேஸாம்ப்ரதந்த்வேஷஉபாயார்த்தைகவாசகः" என்கிறபடியே ஶரணஶப்தம் உபாயத்தையும் க்ருஹத்தையும் ரக்ஷிதாவையும காட்டுமேயாகிலும் "సర్వధర్మాన్పరిత్యజ్య-ஸர்வதர்மாந்பரித்யஜ்ய" என்கிற ஸாதநாந்தரத்யாகத்துக்கு அநந்தரபாவியாய் "పాపేభ్యో మోక్షయిష్యామి-பாபேப்யோமோக்ஷயிஷ்யாமி" என்கிற பாபவிமோசநத்துக்குப் பூர்வபாவியான ஶரணவரணமாகையாலே உபாயவாசியாய்க் கிடக்கிறது.

ஆனால், (௧௦௪) "ஏஷ ஹ்யேவ ஸாது கர்ம காரயதி, தம் யமேப்யோ லோகேப்ய உந்நிநீஷதே, ஏஷ ஏவாஸாது கர்ம காரயதி, தம் யமதோ நிநீஷதே" என்று—உந்நிநீஷையாலும், அதோநிநீஷையாலும், ஸர்வேஶ்வரன்றானே ஸாத்வஸாது கர்மங்களைப் பண்ணுவியாநிற்குமென்கிறவிது சேரும்படியென்? எனில்: இது ஸர்வஸாதாரணமன்று. யாவனொருவன் பகவத்விஷயத்தில் அதிமாத்ரமான ஆநுகூல்யத்திலே வ்யவஸிதனாய்க்கொண்டு ப்ரவர்த்தியாநிற்கும்; அவனை யநுக்ரஹியாநின்றுகொண்டு பகவான்றானே ஸ்வப்ராப்த்யுபாயங்களாய் அதிகல்யாணங்களான கர்மங்களிலே ருசியை ஜநிப்பிக்கும்; யாவனொருவன் அதிமாத்ர ப்ராதிகூல்யத்திலே வ்யவஸிதனாய்க்கொண்டு ப்ரவர்த்தியாநிற்கும்; அவனை ஸ்வப்ராப்தி விரோதிகளாய், அதோகதிஸாதநங்களான கர்மங்களிலே ஸங்கிப்பிக்கும் என்று இந்த ஶ்ருதிவாக்யங்களுக்கு அர்த்தமாகையாலே. இது தன்னை ஸர்வேஶ்வரன்றானே யருளிச்செய்தானிறே. (௧௦௫) "அஹம் ஸர்வஸ்ய ப்ரபவோ மத்த: ஸர்வம் ப்ரவர்த்ததே। இதி மத்வா பஜந்தே மாம் புதா பாவஸமந்விதா:" என்று தொடங்கி, (௧௦௬) "தேஷாம் ஸததயுக்தாநாம் பஜதாம் ப்ரீதிபூர்வகம் । ததாமி புத்தியோகம் தம் யேந மாமுபயாந்தி தே॥ தேஷாமேவாநுகம்பார்த்தமஹமஜ்ஞாநஜம் தம: । நாஶயாம்யாத்மபாவஸ்தோ ஜ்ஞாநதீபேந பாஸ்வதா" என்றும், (௧௦௭) "அஸத்யமப்ரதிஷ்டம் தே ஜகதாஹுரநீஶ்வரம்" என்றுதொடங்கி (௧௦௮) "மாமாத்மபரதேஹேஷு ப்ரத்விஷந்தோऽப்யஸூயகா:" என்னுமளவாக அவர்களுடைய ப்ராதிகூல்யாதிஶயத்தைச் சொல்லி, (௧௦௯) "தாநஹம் த்விஷத: க்ரூராந் ஸம்ஸாரேஷு நராதமாந் । க்ஷிபாம்யஜஸ்ரமஶுபாநாஸுரீஷ்வேவ யோநிஷு" என்றும் அருளிச்செய்கையாலே.

ஆகையால், அநுமந்த்ருத்வமே ஸர்வஸாதாரணம்; ப்ரயோஜகத்வம் விஶேஷவிஷயமென்று கொள்ளவேணும். (௧௧௦) "க்ருத ப்ரயத்நாபேக்ஷஸ்து" என்கிற, ஸூத்ரத்திலே இத்தனையும் பாஷ்யகாரர் தாமே அருளிச்செய்தார்.

௬௩. ஜ்ஞாநாஶ்ரயமாகில் ஶாஸ்த்ரங்களிலே யிவனை ஜ்ஞாந மென்று சொல்லுவானேன்? என்னில்;

இவை யெல்லாவற்றையுந் திருவுள்ளம்பற்றியிறே! (கர்த்ருத்வத்துக்கு ஈஶ்வராதீநம்) என்று அருளிச்செய்தது.

ஆக, கீழ்ச்செய்ததாயிற்று அது; 'ஜ்ஞாநாஶ்ரயமாகை யாவது-ஜ்ஞாநத்துக்கு இருப்பிடமாயிருக்கை'' என்று, ப்ரதமத்திலே ஆத்மாவினுடைய ஜ்ஞாத்ருத்வத்தைச் சொல்லி, ஜ்ஞாந மாத்ரமென்பாரை நிராகரித்துக்கொண்டு, ஜ்ஞாத்ருத்வ கதநாநந்தரம் கர்த்த்ருத்வ போக்த்ருத்வங்கள் சொல்லவேண்டுகையாலே, அவை யிரண்டும் ஜ்ஞாத்ருத்வபலத்தாலே தன்னடையே வருமென்னுமிடத்தை தர்ஶிப்பித்து, குணங்களுக்கே கர்த்ருத்வமுள்ளது; ஆத்மாவுக் கில்லையென்பாரை நிராகரித்துக்கொண்டு, ஆத்மாவினுடைய கர்த்ருத்வத்தைஸ்தாபித்து, அந்த கர்த்த்ருத்வத்தில் ஸ்வரூபப்ரயுக்தமல்லாத வ்யபதேசத்தையும், அதுதானிவனுக்கு வருகைக்கடியையுஞ்சொல்லி, இப்படி ஆத்மாவுக்குண்டான கர்த்த்ருத்வந் தான் ஸர்வாவஸ்தையிலும் ஈஶ்வராதீநமாயிருக்குமென்று நிகமித்தாராய்த்து.

இதெல்லாம ஆத்மாவினுடைய ஜ்ஞாநாஶ்ரயத்வகதந மடியாக வந்ததிறே.

இப்படி, ஆத்மா ஜ்ஞாநாஶ்ரயமாயிருக்குமாகில், (௧௱)''யோ விஜ்ஞாநே திஷ்டந்'' (௭௭) ''விஜ்ஞாநமய:'' (௧௧௧) ''விஜ்ஞாநம் யஜ்ஞம் தநுதே' என்றும், (௧௧௨) ''ஜ்ஞாந ஸ்வரூபமத்யந்த நிர்மலம் பரமார்த்த:'' (௧௧௩) ''ஜ்ஞாநஸ்வரூபமகிலம் ஜகதேதத் அபுத்தய: । விஜ்ஞாநம் பரமார்த்தோஹி த்வைதிநோ த்யப்ரமஶிந:' என்றும், ஶாஸ்த்ரங்களிலே இவனை ஜ்ஞாநமென்று சொல்லுவானென்? என்கிற ஜிஜ்ஞாஸா ப்ரஶ்நத்தை யநுவதிக்கிறார்;

(ஜ்ஞாநாஶ்ரயமாகில ஶாஸ்த்ரங்களிலே யிவனை ஜ்ஞாநமென்று சொல்லுவானென்னென்னில) என்று.

௩௭. ஜ்ஞாநத்தையொழியவுந் தன்னை யறிகையாலும், ஜ்ஞாநம் ஸாரபூதகுணமாய் நிரூபகதர்மமாகையாலும் சொல்லிற்று.

௩௮. நியாம்யமாகையாவது - ஈஶ்வரபுத்த்யதீநமாக வெல்லா வ்யாபாரங்களு முண்டாம்படி யிருக்கை.

இப்படி, ஶாஸ்த்ரங்கள் சொல்லுகைக்கு மூலம் இன்னதென்கிறார்; (ஜ்ஞாநத்தையொழியவும் தன்னை யறிகையாலும்) என்று தொடங்கி.

அதாவது - ஜ்ஞாநம் ஸ்வாஶ்ரயத்துக்கு ஸ்வயம்ப்ரகாஶகமாயிருக்குமோபாதி, ஜ்ஞாநநிரபேக்ஷமாகத் தனக்குத்தானே ப்ரகாஶிக்கையாலும், ஜ்ஞாநம் இவனுக்கு ஸாரபூதகுணமாகையாலும், ஸ்வரூபாநுபந்தித்வேந ஸ்வரூபநிரூபக தர்மமாகையாலும் சொல்லிற்றென்கை.

இதுதான்- (கக௪) "தத்குணஸாரத்வாத்து தத்வ்யபதேஶ: ப்ராஜ்ஞவத் । யாவதாத்மபாவித்வாச்ச ந தோஷஸ் தத்தர்ஶநாத்" என்கிற ஸூத்ரத்வயத்தாலும் சொல்லப்பட்டது. (கஎரு) "ஜ்ஞாநாத் வ்யதிரேகேண, ஜ்ஞாநஸ்ய யாவதாத்மகுணத்வாத்; ஸ்வாபாவிகத்வேந ஸ்வரூபநிரூபக குணத்வாத், ஸ்வரூபவத் ஜ்ஞாநவத் ஸ்வப்ரகாஶத்வாச்ச வ்யபதேஶ:" என்றிறே! தீபத்திலே பாஷ்யகாரரும் அருளிச்செய்தது.

(நியாம்யமாகையாவது - ஈஶ்வரபுத்த்யதீநமாக எல்லா வ்யாபாரங்களும் உண்டாம்படி யிருக்கை.) அதாவது - (ககசு) "யஸ்ய சேதநஸ்ய யத் த்ரவ்யம் ஸர்வாத்மநா ஸ்வார்த்தே நியந்தும் தாரயிதும் ச ஶக்யம் தச்சேஷதைகஸ்வரூபம் ச தத் தஸ்ய ஶரீரம்" என்று இத்யாதிகளில் சொல்லுகிறபடியே, அந்தராத்மதயா நின்று நியமிக்கை - ஈஶ்வரனுக்கு ஸார்வகாலிகமாகையாலே, இவ்வாத்மவஸ்து அவனுக்கு நியாம்யமாகையாவது-ஶரீரத்தினுடைய ஸகல ப்ரவ்ருத்திகளும் ஶரீரியினுடைய புத்த்யதீநமாக உண்டாமாபோலே, ஶரீரபூதமான இவ்வாத்மவஸ்துவினுடைய ஸகல வ்யாபாரங்களும், ஶரீரியான பரமாத்மாவினுடைய புத்த்யதீநமாகவே யுண்டாம்படி யிருக்கையென்றபடி.

௩௯. தார்யமாகையாவது-அவனுடைய ஸ்வரூப ஸங்கல்பங்களை யொழிந்தபோது தன் ஸத்தை யில்லையாம்படி யிருக்கை.

இப்படி, தச்சரீரதயா தததீந ஸகல ப்ரவ்ருத்திகளையும் அசேதநமான ஶரீரம்போலே தானாக வொரு ப்ரவ்ருத்தி பண்ணமாட்டாதபடி யிருக்கையன்றிக்கே, ஜ்ஞாத்ருத்வ கர்த்ருத்வ போக்த்ருத்வங்களை ஸ்வாபாவிககர்மங்களாக வுடையனாகையாலே, ஜ்ஞாந சிகீர்ஷா ப்ரயத்நபூர்வக ப்ரவ்ருத்திக்ஷமனா யிருக்கையாலும், ஸகல ப்ரவ்ருத்திகளிலும் இவனுடைய ப்ரதம ப்ரயத்நத்தை யபேக்ஷித்துக் கொண்டு ஈஶ்வரன் அநுமதிதாநம் பண்ணுகையாலும், விதிநிஷேத ஶாஸ்த்ர வையர்த்த்யமுமில்லை.

(௩௯) இவனுடைய ப்ரவ்ருத்திமூலமாக ஈஶ்வரன் பண்ணும் நிக்ரஹாநுக்ரஹங்களுக்கும், ததநுகுணமான பலப்ரதாநத்துக்கும் விரோதமில்லையென்னுமிடம் கீழே சொல்லப்பட்டது.

(தார்யமாகையாவது - அவனுடைய ஸ்வரூப ஸங்கல்பங்களை யொழிந்தபோது தன்ஸத்தை யில்லையாம்படி யிருக்கை.) அதாவது (௩௪௭) "ஏஷ ஸேது-ர் விதரண:" (௧௧௮) "ஸத்-வம் ச ஜாநே ச ப்ரதிஷ்டிதம்" (௧௧௯) "ஸர்வேஶ்வராணி ஸர்வபூதாநி ஸவிதுஸ் ஸவிதாந ஸம்வித்தா:" (௧௨௦) "ஏதஸ்ய வா அக்ஷரஸ்ய ப்ரஶாஸநே கார்கி ஸூர்யாசந்த்ரமஸௌ வித்ருதௌ திஷ்டத:" என்று, இத்யாதிகளிற் சொல்லுகிறபடியே, ஈஶ்வரன் ஸகல சேதநாசேதநங்களையும் பற்றி நியமேநதாரகனாகையாலே, இவ்வாத்மவஸ்து தார்யமாகையாவது - தனக்கு நியமேந தாரகமாய்க்கொண்டு தன் ஸத்தாஹேதுவாயிருக்கிற அவனுடைய திவ்யாத்ம ஸ்வரூபத்தையும், இந்த ஸ்வரூபாஶ்ரிதத்வத்துக்கும் ஸத்தாநுப்ரவ்ருத்திரூபமான ஸ்திதிக்கும் ஹேதுவாயிருந்துள்ள அவனுடைய நித்யேச்சாகார்ய ஸங்கல்பத்தையும் ஒழிந்தபோது தன் ஸத்தாஹாநி பிறக்கும்படியிருக்கையென்றபடி.

இப்படி, தார்யவஸ்துக்களை ஸ்வரூப ஸங்கல்பங்களிரண்டாலும் தரிக்குமென்னுமிடம் அபியுக்தராலே விஸ்தரேண ப்ரதிபா

...க்கப்பட்டது. எங்ஙனே யென்னில்; "ஈஶ்வரன் தன் ஸ்வரூப நிரூபகதர்மங்களுக்கும், நிரூபிதஸ்வரூப விஶேஷணங்களான குணங்களுக்கும்போலே, ஸ்வவ்யதிரிக்த ஸமஸ்த த்ரவ்யங்களுக்கும் அவ்யவஹிதமாக ஸ்வரூபேண ஆதாரமாயிருக்கும். அவ்வோ த்ரவ்யங்களை யாஶ்ரயித்திருக்கும் குணாதிகளுக்கு அவ்வோ த்ரவ்யத்வாரா ஆதாரமாயிருக்கும். ஜீவர்களாலே தரிக்கப்படுகிற ஶரீரங்களுக்கு ஜீவத்வாரா ஆதாரமாயிருக்குமென்று சிலர் சொல்லுவார்கள். ஜீவனை த்வாரமாகக்கொண்டு, ஸ்வரூபத்தாலும் ஆதாரமாமென்று சில ஆசார்யர்கள் சொல்லுவர்கள். இப்படி, ஸர்வமும் ஆஶ்ரயத்தைப்பற்ற அப்ருதக்ஸித்தவிஶேஷணமாகையாலே, இவற்றின் ஸத்தாதிகள் ஆஶ்ரயஸத்தாதீநங்கள்; ஸர்வவஸ்துக்களினுடையவும் ஸத்தை ஸங்கல்பாதீநையாகையாலே அநித்யங்கள் அநித்யேச்சையாலே யுத்பந்நங்களாயும், நித்யங்கள் நித்யேச்சாஸித்தங்களாயு மிருக்கை. இவ்வர்த்தத்தை (௧௨௧) "[illegible]" என்கிற ஶ்லோகத்தாலே அபியுக்தர் விவேகித்தார்.'

"இத்தாலே, ஸர்வத்தினுடையவும் ஸத்தாநுவ்ருத்திரூபையான ஸ்திதியும் ஈஶ்வரேச்சாதீநையானபடியாலே ஸர்வமும் ஈஶ்வரஸங்கல்பாஶ்ரிதமென்று சொல்லுகிறது. குருத்ரவ்யங்கள் ஸங்கல்பத்தாலே த்ருதங்களென்று ஶாஸ்த்ரங்கள் சொல்லுமது (௨௨) "[illegible] ॥ [illegible]" என்கிறபடியே, ஒரோதேஶவிஶேஷங்களிலே விழாதபடி நிறுத்துகையைப்பற்ற. இப்படி இச்சாதீநஸத்தாஸ்திதிப்ரவ்ருத்திகளான வஸ்துக்களுக்கு பரமாத்மஸ்வரூப மென்செய்கிறது? என்னில்; பரமாத்மாவினுடைய விச்சை யிவ்வஸ்துக்களை பரமாத்மாவின் ஸ்வரூபாஶ்ரிதங்களாக வகுத்துவைக்கும். இப்படி, ஸர்வவஸ்துவும் ஈஶ்வரஸ்வரூபாதீநமுமாய், ஈஶ்வரேச்சாதீநமுமாயிருக்கும்; லோகத்திலும் ஶரீரம்-ஶரீரியினுடைய ஸ்வரூபாஶ்ரயமுமாய், ஸங்கல்பாஶ்ரயமுமா யிருக்கக்காணாநின்றோம். இவனிருந்தகாலமிருந்து, இவன் விட்டபோது ஒழிகையாலே ஸ்வரூபாஶ்ரிதம். இவ்வர்த்தம், ஸங்கல்பமில்லாத ஸுஷுப்த்யாத்யவஸ்தைகளிலே தெளிவது. ஜாகராதிதஶைகளில் ஸங்கல்பத்தாலே விழாதபடி தாங்கும்

௬௦. சேஷமாகையாவது - சந்தந குஸும தாம்பூலாதிகளைப் போலே, அவனுக்கிஷ்ட விநியோகார்ஹமா யிருக்கை.

ஸங்கல்பாஶ்ரித மெனைக்கடவது" என்று, இப்படி ரஹஸ்யத்ரயஸாரத்திலே ப்ரதிபாதிக்கையாலே.

(சேஷமாகையாவது-சந்தநகுஸுமதாம்பூலாதிகளைப்போலே அவனுக்கு இஷ்ட விநியோகார்ஹமா யிருக்கை.) அதாவது-சந்தந குஸுமாதி பதார்த்தங்கள் தனக்கென்னவிருப்பதோராகாரமின்றிக்கே, பூசுமவனுக்கும் சூடுமவனுக்கும் உறுப்பாய், விநியோகங் கொள்ளுமவனுக்குத் தானும் விநியோகங்கொண்டு, தானுகந்த விஷயங்களுக்குங் கொடுக்கலாம்படி இஷ்டவிநியோகார்ஹமா யிருக்குமாபோலே, சேதநவஸ்துவா யிருக்க ஸ்வப்ரயோஜநகந்தமன்றிக்கே தன்னுடைய ஸ்வரூபஸ்வபாவ வைலக்ஷண்ய மெல்லாவற்றாலும் சேஷிக்கு அதிசயகரமாய், விநியோகத்தளவில் அவனுக்குத் தானும் விநியோகங்கொண்டு, (கஉ௩) "அடியார்க்கென்னைப்படுத்தவிமலன்" என்கிறபடியே, தானுகந்தவர்களுக்கும் உறுப்பாக்கலாம்படி வேண்டினபடி விநியோகத்துக்கு யோக்யமாயிருக்கை யென்றபடி. சித்த்ரவ்யத்துக்கு அசித்த்ரவ்யங்களை த்ருஷ்டாந்தமாகச் சொல்லிற்று- பாரதந்த்ர்யாதிசயம் சொல்லுகைக்காகவிறே. ஆகம் ஸ்வரூப யாதாத்ம்யம் இதுவாகையாலே யிறே! பராப்யுத்கர்ஷம் பண்ணுகிறதசையிலே (கஉ௪) "தனக்கேயாக வெனைக்கொள்ளுமீதே" என்று, ஆழ்வார் அருளிச்செய்தது (கஉ௫) "பரகதாதிஶயாதாநேச்சயோபாதேயத்வமேவ யஸ்ய ஸ்வரூபம் ஸ ஶேஷ: பர: ஶேஷீ" என்று, சேஷசேஷித்வலக்ஷணம் பாஷ்யகாரராலே யருளிச்செய்யப்பட்டது. இந்த லக்ஷணவாக்யார்த்தத்தை யநுஸரித்துக்கொண்டு, (கஉ௬) "உத்தேஶ்யாதிஶயாதாநேச்சயோபாதேயத்வம் யஸ்ய ஸ்வரூபம் ஸ ஶேஷ: பர: ஶேஷீ" என்று, சேஷசேஷித்வலக்ஷணத்தை அபியுக்தரானவர்களும் சொல்லிவைத்தார்கள். (கஉ௭) 'யதேஷ்டவிநியோகார்ஹம் ஶேஷஶப்தேந கத்யதே' என்று சொல்லுகையாலே, சேஷத்வமாவது- இஷ்டவிநியோகார்ஹத்வம் என்று ஶாஸ்த்ரஸித்தம்.

௪௧. இதுதான் க்ருஹ க்ஷேத்ர புத்ர களத்ராதிகளைப்போலே ப்ருதக்ஸித்த்யாதிகளுக்கு யோக்யமாம்படி யிருக்கை யன்றிக்கே, ஶரீரம்போலே யவற்றுக் கயோக்யமா யிருக்கை.

இப்படி, ஈஶ்வரவிஷயத்தில் ஆத்மாவுக்குண்டான ஶேஷத்வந்தான், (௧௨௮) "யஸ்யாஸ்மி ந தமந்தரேமி" (௧௨௯) "[illegible]" (௧௩௦) "தாஸபூதாஸ் ஸ்வதஸ்ஸர்வே ஹ்யாத்மாந: பரமாத்மந: । நாந்யதா லக்ஷணம் தேஷாம் பந்தே மோக்ஷே ததைவ ச" (௧௩௧) "ஸ்வோஜ்ஜீவநேச்சா யதி தே ஸ்வஸத்தாயாம் ஸ்ப்ருஹா யதி । ஆத்மதாஸ்யம் ஹரேஸ்ஸ்வாம்யம் ஸ்வபாவஞ்ச ஸதா ஸ்மர" என்று, ஶ்ருதி ஸ்ம்ருத்யாதிகளிலே சொல்லப்படாநின்றதிறே.

(௪௧) ஒருவனுக்கு க்ருஹக்ஷேத்ராதிகளும் ஶேஷமாய், ஸ்வஶரீரமும் ஶேஷமா யிருக்கச்செய்தே, க்ருஹக்ஷேத்ராதிகள் - ப்ருதக்ஸித்த்யாதிகளுக்கு அர்ஹமாய், ஶரீரம் - அவற்றுக்கு அநர்ஹமாயிருக்கக்காண்கையாலே, இவ்வாத்மவஸ்து ஈஶ்வரனுக்கு ஶேஷமாமிடத்தி லிருக்கும்படி யெங்ஙனே? என்கிற ஶங்கையிலே யருளிச்செய்கிறார்; (இதுதான்) என்று தொடங்கி.

இதுதானென்றது - இப்படி ஈஶ்வரஶேஷமாகச் சொல்லப் பட்ட ஆத்மவஸ்துதா னென்றபடி.

(க்ருஹ க்ஷேத்ர புத்ர களத்ராதிகளைப்போலே) என்கிற விடத்தில், ஆதிஶப்தத்தாலே- தநதாந்யாராம தாஸ தாஸீவர்க்கங்களைச் சொல்லுகிறது.

(ப்ருதக்ஸித்த்யாதிகளுக்கு யோக்யமாம்படி யிருக்கை யன்றிக்கே) என்கிறவிடத்தில், ப்ருதக்ஸித்தியாவது- ஸம்ஹாபலம்பநியம மின்றிக்கே, ஶேஷியானவனை யொழியவும் தான்ஸித்திக்கை.

ஆதிஶப்தத்தாலே - அநேக ஸாதாரணத்வத்தைச் சொல்லுகிறது; க்ருஹக்ஷேத்ர தாஸதாஸீப்ரப்ருதிகள்- பித்ரு புத்ர ஜ்யேஷ்ட கநிஷ்டாதிகளுக்கு ஸாதாரண ஶேஷமாயிருக்கும்; புத்ரனும்

௬௨, ஆத்மஸ்வரூபந்தான், பத்த முக்த நித்யரூபேண மூன்று படிப் பட்டிருக்கும்.

பர்த்தா பித்ரு பித்ருவ்யாதிகளுக்கு ஸாதாரணஶேஷமாயிருக்கும்; களத்ரமும் (௧௱௨) “𑌸𑍋𑌮𑌃 𑌪𑍍𑌰𑌥𑌮𑍋 𑌵𑌿𑌵𑌿𑌦𑍇 𑌗𑌨𑍍𑌧𑌰𑍍𑌵𑌃 𑌵𑌿𑌵𑌿𑌦 𑌉𑌤𑍍𑌤𑌰𑌃, 𑌤𑍃𑌤𑍀𑌯𑍋 𑌅𑌗𑍍𑌨𑌿𑌷𑍍𑌟𑍇 𑌪𑌤𑌿𑌸𑍍𑌤𑍁𑌰𑍀𑌯𑌸𑍍𑌤𑍇 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌜𑌾𑌃” என்று - பாணிக்ரஹணாநந்தரம் ஸோமாதிகளுக்கு ஶேஷமாகச் சொல்லுகையாலே, அநேகஸாதாரணமாயிருக்கும்; இப்படி யன்றிக்கே, ஶரீரம்போலே யவற்றுக்கு அயோக்யமாயிருக்கையாவது- அப்ருதக்ஸித்தமாய், அநந்யஸாதாரணமான ஶரீரம்போலே. ப்ருதக்ஸித்த்யாதிகளானவற்றுக்குத் தான் அநர்ஹமாயிருக்கை.

“ப்ருதக்ஸ்த்தித்யாதிகளுக்கு” என்று பாடமாகில், ஆதிஶப்தத்தாலே-ப்ருதகுபலப்த்தியைச் சொல்லுகிறது. அப்போதைக்கு, இதுதான் க்ருஹ க்ஷேத்ர புத்ர மித்ர களத்ராதிகளைப்போலே, பிரிந்துநிற்கைக்கும், பிரிந்துதோற்றுகைக்கும் அர்ஹமாம்படி யிருக்கை யன்றிக்கே, ஶரீரம்போலே தவபயாநர்ஹமாயிருக்குமென்று பொருளாகக்கடவது. (௧௱௩) “𑌏𑌵𑌮𑌾𑌤𑍍𑌮𑌶𑌰𑍀𑌰𑌭𑌾𑌵𑌃 𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌿 𑌆𑌧𑌾𑌰𑌾𑌧𑍇𑌯𑌭𑌾𑌵𑌃, 𑌨𑌿𑌯𑌨𑍍𑌤𑍃𑌨𑌿𑌯𑌾𑌮𑍍𑌯𑌭𑌾𑌵𑌃, 𑌶𑍇𑌷𑌶𑍇𑌷𑌿𑌭𑌾𑌵𑌶𑍍𑌚” என்றும், (௧௱௪) “𑌯𑌸𑍍𑌯 𑌚𑍇𑌤𑌨𑌸𑍍𑌯 𑌯𑌦𑍍𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌂 𑌸𑌰𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌨𑌾 𑌸𑍍𑌵𑌾𑌰𑍍𑌥𑍇 𑌨𑌿𑌯𑌨𑍍𑌤𑍁𑌂 𑌧𑌾𑌰𑌯𑌿𑌤𑍁𑌞𑍍𑌚 𑌶𑌕𑍍𑌯𑌂 𑌤𑌚𑍍𑌛𑍇𑌷𑌤𑍈𑌕𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌞𑍍𑌚 𑌤𑌤𑍍𑌤𑌸𑍍𑌯 𑌶𑌰𑍀𑌰𑌮𑍍” என்றும் வேதார்த்தஸங்க்ரஹத்திலும், ஸ்ரீபாஷ்யத்திலும், ஆத்மஶரீரபாவலக்ஷணமாக பாஷ்யகாரர் அருளிச்செய்த நியந்த்ருநியாம்யபாவம், ஆதாராதேயபாவம், ஶேஷஶேஷிபாவமாகிற மூன்றும் இவ்விடத்திலே சொல்லப்படுகையாலே, (௧௱௫) “𑌯𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌾 𑌶𑌰𑍀𑌰𑌂 𑌯𑌸𑍍𑌯𑌾𑌕𑍍𑌷𑌰𑌂 𑌶𑌰𑍀𑌰𑌮𑍍” என்று, இத்யாதி ஶ்ருதிஸித்தமான ஆத்மாவினுடைய பரமாத்மஶரீரத்வம் அர்த்தாத் உக்தமாயிற்று.

ஆக, கீழே ஆத்மஸ்வரூபத்தினுடைய ஶோதநம்பண்ணப்பட்டது.

(௬௨) இனி, ஏவம்பூதமான ஆத்மஸ்வரூபம், அநாத்யசித்ஸம்பந்த தத்வியோக ததந்வயங்களாலே பத்தமுக்த நித்யரூபேண த்ரிப்ரகாரமாயிருக்கும்படியை யருளிச்செய்கிறார்:

௪௩ பத்தரென்கிறது-ஸம்ஸாரிகளை.

௪௪ முக்தரென்கிறது - ஸம்ஸாரஸம்பந்த மற்றவர்களை.

---

(௪௨) (ஆத்மஸ்வரூபந்தான் பத்தமுக்தநித்ய ரூபேண மூன்று படிப்பட்டிருக்கும்) என்று.

இதில், பத்தரென்கிறதாரை! என்னுமாகாங்க்ஷையிலே யரு ளிச்செய்கிறார்: (பத்தரென்கிறது ஸம்ஸாரிகளை) என்று.

அவர்களாகிறார் - நிலைதலவத், தாருவஹ்நிவத், தர்விவேச குணத்ரயாத்மகாநாதி பகவந்மாயாதிரோஹித ஸ்வரூபராய், அநாத்யவித்யா ஸஞ்சிதாநந்த புண்யபாபரூப கர்மவேஷ்டிதராய், தத்தத் கர்மாநுகுண விவித விசித்ர தேவாதிரூபதேஹவிசேஷ ப்ரவிஷ்டராய், அவ்வோ தேஹங்களிலே அஹம்புத்தியையும் தேஹாநுபந்திகளிலே மமதாபுத்தியையும் பண்ணி தர்வாஸநாருசி விவசராய், ஸ்வஸ்வகர்மாநுகுண ஸுகதுக்கபரம்பரைகளை யநுபவிக்குமவர்கள்.

(௪௪) இனி, முக்தரென்கிறதாரை யென்னுமாகாங்க்ஷையிலே யருளிச்செய்கிறார்;

(முக்தரென்கிறது - ஸம்ஸாரஸம்பந்த மற்றவர்களை) என்று; அவர்களாகிறார்—அநாதிகர்ம ப்ரவாஹ ப்ரயுக்தமான ஸம்ஸாரஸம்பந்தம் நடவாநிற்கச்செய்தே, மோக்ஷருசிக்கு ப்ரதிபந்தகமான கர்மவிசேஷம், அநுபவத்தாலே யாதல், ஸாமாந்யேநவநுஷ்டிக்கும் ப்ராயச்சித்த கர்மங்களாலே யாதல், அநபிஸம்ஹிதபலமாய் அநு யுத்கடமான ப்ராமாதிக புண்யங்களாலேயாதல் க்ஷபித்து, அநுகூலயாக ஜாயமாநதசையில் பகவத்கடாக்ஷத்தா லுண்டான ஸத்வோத்ரேகத்தாலே மோக்ஷருசிபிறந்து, ஸத்குருஸமாச்ரயண ஸம்ப்ராப்த வேதாந்தவேத்ய பரப்ரஹ்மஜ்ஞாநராய், தத்ப்ராப்திரூப மோக்ஷ ஸித்த்யர்த்தமாக, ஸ்வவர்ண ஸ்வாச்ரமோசிதமான கர்மங்களை பலஸங்க கர்த்ருத்வத்யாக பூர்வகமாக வநுஷ்டித்து (௧௩௧) “[illegible]” என்றும் (௧௩௨) “[illegible]” என்னும் சொல்லுகிறபடியே, அந்த ஸத்கர்மாநுஷ்டாநத்தாலே ஜ்ஞாநோத்பத்தி விரோதி ப்ராசீநகர்மம் க்ஷபித்தவாறே அந்தக்கரணம்

௪௫. நித்யரென்கிறது - ஒருநாளும் ஸம்ஸரியாத ஶேஷஶேஷாஶநாதிகளை.

நிர்மலமாய், பகவதேகாவலம்பியான ஸம்யக்ஜ்ஞாநமுதித்து, அநந்தரம், (௧௱௮) "ஜந்மாந்தர ஸஹஸ்ரேஷு தபோஜ்ஞாந ஸமாதிபி꞉ । நராணாம் க்ஷீணபாபாநாம் க்ருஷ்ணே பக்தி꞉ ப்ரஜாயதே" என்கிறபடியே, இப்படி பஹுதர ஜந்மஸாத்யமான கர்மஜ்ஞாநங்களாலே பிறந்த தைலதாராவதவிச்சிந்ந ஸ்ம்ருதிஸந்தாநரூப பக்திமூலமாகவரும் பகவத்ப்ரஸாதத்தாலேயாதல், அன்றிக்கே தன்னுடைய நிர்ஹேதுகஸௌஹார்த்தவிஶேஷத்தாலே யாத்ருச்சிகாதி ஸுக்ருத பரம்பரைகளைக் கல்பித்து, அதடியாக விஶேஷகடாக்ஷத்தைப்பண்ணி, அநந்தரம் அத்வேஷத்தைஜநிப்பித்து, ஆபிமுக்யத்தை யுண்டாக்கி ஸாத்விக ஸம்பாஷணத்தை விளைத்து, அவ்வழியாலே ஸதாசார்ய ஸமாஶ்ரயணத்திலேமூட்டி, தது꞉பதேஶமுகேந தத்வஜ்ஞாநத்தைப் பிறப்பித்தல், தன்னுடைய விஶேஷகடாக்ஷந்தன்னாலே தத்வஜ்ஞாநத்தைப்பிறப்பித்தல்செய்து, மஹாவிஶ்வாஸபூர்வகமாகத் தன்திருவடிகளே உபாயமென்று நிற்கும்படிபண்ணும் பகவதாகஸ்மிகக்ருபையாலே உபாயாந்தரவிஷயத்தில் பிறந்த துஷ்கரத்வாதி புத்திமூலமாக வரும் ப்ரபதநமூலமான பகவத்ப்ரஸாதத்தாலேயாதல, ஸாம்ஸாரிக ஸகலதுரிதங்களும் கழிந்து ஆவிர்பூதஸ்வரூபராய் பகவதநுபவ கைங்கர்யைக போகரானவர்கள்.

அவிஶேஷேண, "முக்தரென்கிறது - ஸம்ஸாரஸம்பந்தமற்றவர்களை" என்கையாலே பகவதநுபவத்தில் ருசியின்றிக்கே, தத்ஸமாஶ்ரயணத்தைப்பண்ணி ஸம்ஸாரநிவ்ருத்தியை யுண்டாக்கிக்கொண்டு தேஶவிஶேஷத்திலேபோய் ஸ்வஸ்வரூபாநுபவம்பண்ணியிருக்கும் கேவலரையும் சொல்லிற்றாயிற்று.

(௪௫) இனி, நித்யரென்கிற தாரையென்னும் ஆகாங்க்ஷையிலே யருளிச்செய்கிறார்;

(நித்யரென்கிறது - ஒருநாளும் ஸம்ஸரியாத ஶேஷஶேஷாஶநாதிகளை) என்று. ஒருநாளும் ஸம்ஸரியாதவென்கையாலே - முக்தரை வ்யாவர்த்திக்கிறது; நிவ்ருத்த ஸம்ஸாரரிறே! அவர்கள்; இவர்கள் அஸ்ப்ருஷ்ட ஸம்ஸாரகந்தரிறே! (௧௱௯) "ஸஹாத

ஸமஜ்ஞாஸ்யா ஸ்வரூபஸ்ய ஸ்வபாவா:” என்றாரிறே! பட்டர்; (௧௮௰) “நித்யோ நித்யானாம்” என்றும், (௫௮) “ஜ்ஞாஜ்ஞௌ த்வாவஜாவீசநீசௌ” என்றும் சொல்லுகிறபடியே ஆத்மஸ்வரூபம் நித்யமாயிருக்க; (௧௮௧) “ஸதைவ” என்பது, (௧௮௧) “ஸதா பச்யந்தி” என்பதாகிறது பகவத்விஷயஜ்ஞாந ராஹித்ய ஸாஹித்யங்களாலேயிறே; ஆகையால், இவர்களை நித்யரென்கிறதும், பகவத்ஜ்ஞாநத்துக் கொருநாளும் ஸங்கோச மில்லாமையாலே யென்று கொள்ளவேணும். இந்த வைபவத்தைப்பற்றவிறே! (௧௮௨) “யத்ர பூர்வே ஸாத்யா: ஸந்தி தேவா:” என்றும், (௧௮௩) “பத்ரமிச்சந்த ருஷயஸ்ஸ்வர்விதஸ்தபோதீக்ஷாமுபநிஷேதுரக்ரே ... யஜாரேவாணா:” என்றும் ஸ்ருதி இவர்களை ஸ்லாகிக்கிறது. பாஷ்யகாரரும் இவர்களுடைய வைபவத்தை, (௧௮௪) “ஸ்வஸ்வரூபாநுரூப” இத்யாதியாலே, ஸ்ரீகத்யத்திலே பரக்கவருளிச்செய்தார்.

ஆகையாலே, “ஒருநாளும் ஸம்ஸரியாத” என்றபோதே, இவர்களுடைய வைபவமெல்லாம் சொல்லிற்றாயிற்று.

அசேஷ சேஷவ்ருத்தியிலும் அந்விதனாய், கைங்கர்யபரர்க்கெல்லாம் படிமாவாயிருக்கையாலே, திருவநந்தாழ்வானை சேஷனென்கிறது. (௧௮௫) “நிவாஸ சய்யாஸந பாதுகாம்சுகோபதாந வர்ஷாதபவாரணாதிபி: । சரீரபேதைஸ்தவ சேஷதாம் கதைர்யதோசிதம் சேஷ இதீரிதே ஜநை:” என்றிறே! ஆளவந்தாரு மருளிச்செய்தது.

மற்றுள்ள ததீயரைப்போலே அதீயமாயிராதே, ஸர்வேச்வரன் அமுதுசெய்த சேஷமொழிய வமுதுசெய்யாத நியமத்தைப் பற்ற, சேஷாசநரென்று-ஸேநமுதலியாரை நிரூபிக்கிறது. (௧௮௬) “த்வதீயபுக்தோஜ்ஜித சேஷபோஜிநா” என்றாரிறே! ஆளவந்தாரும்; (௧௮௭) “வநாஜ்ஞாயஸ்ய ஸம்ஸாரஸ்ய ஸ்வாமிநோ ... பரிஷதாச்ச ஸேநாந்யஸ்த்தி:” என்று, ஆழ்வாரு மருளிச்செய்தார்.

ஆதிசப்தத்தாலே - (௧௮௮) “சேஷசேஷாசந கருட ப்ரமுக நாநாவிதாநந்த பரிஜந பரிசாரிகா பரிசரித

௫௬. ஜலத்துக்கு அக்நி ஸம்ஸ்ருஷ்டஸ்த்தாலீ ஸம்ஸர்க்கத்தாலே ஔஷ்ண்ய ஶப்தாதிக ளுண்டாகிறாப்போலே, ஆத்மாவுக்கும் அசித்ஸம்பந்தத்தாலே அவித்யா கர்ம வாஸநா ருசிக ளுண்டாகிறன.

ஹாரணயஹமே'' என்கிறபடியே, பகவத் கைங்கர்யைகபோகராயிருந்துள்ள வைநதேயப்ரமுகரான நித்யஸித்தரை யெல்லாம் சொல்லுகிறது.

(௫௬) பூர்வோக்தமான ஸ்வரூப வைலக்ஷண்யத்தை யுடைய ஆத்மாவுக்கு அவித்யாதி தோஷஸம்பந்தம் வந்தபடியென்? என்கிற சங்கையிலே, ஸத்ருஷ்டாந்தமாக ததுத்தரத்தை யருளிச்செய்கிறார்; ஜலத்துக்கு என்று தொடங்கி.

அதாவது ஸ்வபாவதஏவ நிர்விகாரமாய் ஶீதளமாயிருக்கிற ஜலத்துக்கு, அக்நியோடே ஸம்ஸ்ருஷ்டையான ஸ்த்தாலியோட்டை ஸம்ஸர்க்கத்தாலே ஔஷ்ண்ய ஶப்தோத்ரேக ரூபங்களான விகாரங்க ளுண்டாகிறாப்போலே, ஸ்வதஜ்ஞாநாநந்தாமல ஸ்வரூபனான ஆத்மாவுக்கும் குணத்ரயாஶ்ரயாசித்ஸம்பந்தத்தாலே அவித்யாகர்ம வாஸநாருசிக ளுண்டாகிறனவென்கை.

இவருடைய திருத்தம்பியாரும், ஆசார்ய ஹ்ருதயத்திலே (௧௨௧) "அவித்யாகாரண அநாத்யசித்ஸம்பந்தம்" என்று அருளிச்செய்தாரிறே,

இப்படி, ஸ்ரீ விஷ்ணுபுராணத்திலே (௨௮) "நிர்வாணமய ஏவாயமாத்மா ஜ்ஞாநமயோऽமல: । து:கஜ்ஞாநமயா தர்மா: ப்ரக்ருதேஸ்தே ந சாத்மந: ॥ ஜலஸ்ய நாக்நிஸம்ஸர்க: ஸ்தாலீஸங்காத் ததாபி ஹி । ஶப்தோத்ரேகாதிகாந் தர்மாந் தத்கரோதி யதா ந்ருப ॥ ததாத்மா ப்ரக்ருதே: ஸங்காதஹம்மாநாதிதூஷித: । பஜதே ப்ராக்ருதாந் தர்மாந் அந்யஸ்தேப்யோ ஹி ஸோऽவ்யய: ॥" என்று சொல்லப்பட்டது.

அவித்யையாவது-அஜ்ஞாநம். அதுதான்-ஜ்ஞாநாநுதய, அந்யதாஜ்ஞாந விபரீதஜ்ஞாந ரூபேண அநேகவிதமாயிருக்கும்.

௪௭. அசித்துகழிந்தவாறே அவித்யாதிகள் கழியுமென்பர்கள்.

கர்மமாவது-கரணத்ரயக்ருதமாய், புண்யபாபாத்மகமான க்ரியாவிசேஷம். அதில், புண்யம் ஐஹிகாமுஷ்மிக நாநாவித போக ஸாதநதயா பஹுவிதமாயிருக்கும்; பாபமும்-அக்ருத்யகரண க்ருத்யாகரண பகவதபசார பாகவதாபசாராஸஹ்யாபசார ரூபேண அநந்தமாயிருக்கும்.

வாஸனையாவது - முன்புசெய்துபோந்தவற்றிலே மீளவும் மூளுகைக்குறுப்பான ஸம்ஸாரம். இதுதான், ஹேதுபேதத்தாலே பஹுவிதமாயிருக்கும்.

ருசியாவது - ரஸாந்தரத்தாலும் மீட்கவொண்ணாதபடி யொன்றிலேசெல்லுகிற விருப்பம். இதுவும், விஷயபேதத்தாலே பஹுவிதமாயிருக்கும்.

அவித்யாகர்மவாஸநாருசிக ளுண்டாயிற்றின வென்னாதே, உண்டாகிறன வென்கையாலே - இவற்றினுடைய ப்ரவாஹரூபத்வம் சொல்லப்பட்டது,

௪௭. இப்படி, ஆத்மாவுக்கு வந்தேறியான அவித்யாதிகள் தானே எவ்வவஸ்த்தையிலே கழிவது? என்னு மாகாங்க்ஷையிலே யருளிச்செய்கிறார்;

(அசித்துகழிந்தவாறே அவித்யாதிகள் கழியுமென்பர்கள்) என்று. அதாவது-காரணநிவ்ருத்யா கார்யநிவ்ருத்தியாகையாலே, அசித்ஸம்பந்த நிபந்தநமாக வந்த விவையும், தத்ஸம்பந்தம் கழிந்தவாறே கழியுமென்று தத்வவித்துக்கள் சொல்லுவர்க ளென்றபடி.

"என்பர்கள்" என்ற வித்தை பரமதமாக்கி, * மயர்வறமதிநல மருளப்பெற்றவர்களுக்கு பகவத்ப்ரஸாதவிசேஷத்தாலே, அசித்துகழியும்முன்னே அவித்யாதிகள் கழிகைக்காண்கையாலே அந்த நியமமில்லையென்று இவர்க்குக்கருத்து என்று சொல்லுவாரு முண்டு. அது முக்யமன்று; அவர்கள் திருமேனியோடே யிருக்கச் செய்தே, பரமபக்தி பர்யந்தமாகப் பிறந்ததேயாகிலும் (க௫௦) "விண்ணப்படலம் விள்ளவிழித்துன்னை மெய்யுற்று உள்ளவுலகளவும் யானு முளனாவனென்கொலோ" என்கையாலே; (௩௫௧) "ஊலவ-௰

௪௮. இம்மூன்றும் தனித்தனியே அநந்தமாயிருக்கும்.

௪௯. சிலர், ஆத்மபேதமில்லை, ஏகாத்மாவே யுள்ளதென்றார்கள்

ஊம வஶ்ருதி வஶ்ருதி" என்கிற முக்தாவஸ்த்தையில், வைஶத்யம் அசித்து கழிவதற்கு முன்பில்லாமையாலே.

ஆக, கீழ்ச்செய்ததாயிற்றது-ஆத்மஸ்வரூபம் பத்தமுக்த நித்யரூபேண மூன்றுபடிப்பட்டிருக்கு மென்றும, அதில் பத்தசேதநர்க்கு அவித்யாத்புத்பத்திமூலமும், தந்நிவ்ருத்திக்ரமமும் சொல்லி நின்றது.

௪௮. இப்படி உக்தமான த்ரிவிதாத்மவர்க்கமும், இத்தனை சேதந ரென்று ஸங்க்யேயமா யிருக்குமோ? என்கிற ஶங்கையிலே யருளிச்செய்கிறார்;

(இம்மூன்றுந் தனித்தனியே அநந்தமாயிருக்கும்) என்று. இம்மூன்றும் அநந்தமாயிருக்குமென்றால் வர்க்கத்ரயமுமாக அநந்தமென்று தோற்றுமென்று நினைத்து, தனித்தனியேயென்று விஶேஷிக்கிறார். அநந்தமாயிருக்கு மென்றது அஸங்க்யேயமா யிருக்குமென்றபடி.

௪௯. உக்தமான ஜீவாநந்த்யத்துக்கு விரோதியான ஐகாத்ம்யவாதத்தை நிராகரிக்கிறார் மேல்;

(சிலர் ஆத்மபேதமில்லை, ஏகாத்மாவே யுள்ளதென்றார்கள்) என்று தொடங்கி; சிலரென்று-அநாதரோக்தியாலே யருளிச்செய்கிறார்.

இப்படிச் சொல்லுவர்கள்தாங்களாரோ? என்னில்; ஜீவாத்வைத ப்ரதிபாதக ஶாஸ்த்ரத்தில் குத்ருஷ்டிகள். அதாவது-ப்ரஹ்மாத்வைதமென்றும், ஜீவாத்வைதமென்றும் ஶாஸ்த்ரப்ரதிபாத்யமான வத்வைதம் த்விவிதமா யிருக்கும். ஜீவாத்வைதமாவது-ப்ரகாராத்வைதம். இதுக்கு நியாமகமேது! என்னில்; ப்ரஹ்மப்ரகரணங்களிலே (௧௫௬) "ஸர்வம் ஸமாப்னோஷி ததோஸி ஸர்வ:" (௧௫௭) "ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம" (௧௫௮) "ஐததாத்ம்யமிதம் ஸர்வம்" என்று, ஸாமாநாதிகரண்யத்தாலே ப்ரஹ்மாத்வைதத்தை ப்ரதிபாதிக்கையிலும், ஸாமாநாதிகரண்யம் ப்ரகாரபேதவிஶிஷ்ட ப்ரகார

௫௦. அந்தப்பக்ஷத்தில், ஒருவன் ஸுகிக்கிறகாலத்திலே வேறே யொருவன் துக்கிக்கக்கூடாது.

யேகத்வபரமாகையாலும், (௪௫௫) "ஸகலஸூ ஸமஸ்த ஸ்வரூபமுதே" என்று, ப்ரகாரபஹுத்வம் கண்டோக்த மாகையாலும், ஐக்யஸ்ருதிக்கு ஶேஷமான (௪௫௬) "நேஹநாநாஸ்தி" இத்யாதி பேதநிஷேதம் ஸ்ருஷ்டிவாக்யவிரோதிபேதவிஷயமாகையாலும், ஸாமாந்யநிஷேதம் விஹிதவ்யதிரிக்த விஷயமாகையாலே ப்ரகாரி பஹுத்வ நிஷேதபரமாகையாலும், (௪௫௭) "நதத்ஸமஸ்சாப்யதிகஸ்ச த்ருஸ்யதே" என்று, ப்ரஹ்மதுல்யப்ரகார்யந்தர நிஷேதகண்டோக்தியாலும் ப்ரகார்யத்வைதமே ப்ரஹ்மாத்வைதம்.

ஜீவபஹுத்வம் ஸ்ருதிஸித்தமாகையாலும். அல்லாதபோது பத்தமுக்தவ்யவஸ்தாநுபபத்தியாலும், உபதேஶாநுபபத்தியாலும், ஸுகாதிவ்யவஸ்தாநுபபத்தியாலும், (௪௫௮) "ஸோஹம் தேவோ நநாரோ நவஸுநசவதாநைவஸம்பவதிர்யோநிமோ தேவம் ஸ்ருஜாநிவேஸநஸ்ஸ। தேவாதிமோஹதேவஸ்யே" இத்யாதிகளாலே, தேவாதி ஶரீரபேத விஶேஷநிஷேதம் கண்டோக்தமாகையாலும், முக்தாத்மாக்களுக்கு ஸாம்யத்தை சொல்லுகையாலும் ஜீவாத்வைதம் ப்ரகாராத்வைதமே.

இதுதான் ஸ்ருதப்ரகாஶிகையிலே, ஆதிபாத சதுஶ்லோகி வ்யாக்யாநோபக்ரமத்திலே (௪௫௯) "ப்ரஹ்மாத்வைதம் ஜீவாத்வைதம் ப்ரஹ்மாத்வைதம் த்ரிவிதம் ஶாஸ்த்ர ப்ரதிபாத்யம்" என்று தொடங்கி, ஸ்ரீவேதவ்யாஸபட்டராலே விஸ்தரேண ப்ரதிபாதிக்கப்பட்டது.

இப்படி ஶாஸ்த்ரத்தில் சொல்லப்படுகிற ஜீவாத்வைதத்துக்கு ஹ்ருதயமறியாதே: ஆத்மபேதமில்லை ஏகாத்மாவே யுள்ளதென்று, சிலகுத்ருஷ்டிகள் சொன்னார்களென்கை.

௫௦. அது அயுக்தமென்னுமிடம் ஸாதிக்கிறார்;

(அந்தபக்ஷத்தில்) இத்யாதியாலே. அதாவது-அப்படி ஆத்மபேதமில்லாதபக்ஷத்தில், (௪௬௦) "ஸுகதுக்க" என்று, ஒருவன்

ருக. அது தேஹபேதத்தாலே யென்னில்.

ருஉ. ஸௌபரிஶரீரத்திலு மதுகாணவேணும்.

ருங. ஒருவன் ஸம்ஸரிக்கையும், ஒருவன் முக்தனாகையும், ஒருவன் சிஷ்யனாகையும், ஒருவன் ஆசார்யனாகையும் கூடாது.

ஸுகோத்தரனா யிருக்கிறகாலத்திலே வேறொருவன் (கசுo) "அஹம் து:கீ" என்று, து:கோத்தரனாயிருக்கிற இந்த ஸுகது:கவ்யவஸ்தை கூடாதென்கை; ஸுகது:கங்களிரண்டும் ஏகாஶ்ரயகதமாகில் உபயப்ரதிஸந்தானமும் ஒருவனுக்கே யுண்டாகவேணுமிறே; ஆகையால், ஸுகது:கங்கள் நியதங்களாகையாலே, ஆத்மபேதமுண்டாகவேணுமென்று கருத்து.

ருக. அந்த ஸுகது:கவ்யவஸ்தைக்கு ஹேது, தேஹபேதமென்கிறவர்களுக்கிதை யநுவதிக்கிறார்;

(அது தேஹபேதத்தாலே யென்னில்) என்று.

ருஉ. அதுக்கு அநுபபத்தி சொல்லுகிறார்;

(ஸௌபரிஶரீரத்திலும் அது காணவேணும்) என்று. அதாவது-தேஹபேதம் ஸுகது:கநியமத்துக்கு ஹேதுவாகில், அநேக தேஹபரிக்ரஹம்பண்ணின ஸௌபரிஶரீரத்திலும் அந்த நியமம் காணவேணுமென்கை.

தேஹபேதம் ஸுகது:கநியமத்துக்கு ஹேதுவன்றாகில், ஜந்மாந்தராநுபவத்தை இஜ்ஜந்மத்திலே ஸ்மரிக்க வேண்டாவோ! என்னில்; ஸ்மரியாதொழிகிறது ஸம்ஸ்காரத்திலுடைய அநுத்பவத்தாலேயாதல், நாஶத்தாலேயாதல் ஶரீராந்தரத்தில் ஸுகது:கஸ்ம்ருத்யாதிகளின்றிகளே யொழிகிறதும் இரண்டதொன்றாலே யென்னில், ஒருஶரீரந்தன்னிலும் ஸ்ம்ருதிகூடாதொழியவேணும். ஆகையால், ஸுகது:கநியமத்துக்கு ஹேது-தேஹபேதமென்னவொண்ணாது.

ருங. அப்படி, ஸுகது:க வ்யவஸ்தாநுபபத்தியே யன்று. ஏகாத்மாவென்னும்பக்ஷத்தில் பத்தமுக்த வ்யவஸ்தாநுபபத்தியும் ஶிஷ்யாசார்ய வ்யவஸ்தாநுபபத்தியும் உண்டென்கிறார் மேல்;

௫௪. விஷமஸ்ருஷ்டியுங்கூடாது.

௫௫. ஆத்மபேதம் சொல்லுகிற ஶ்ருதியோடும் விரோதிக்கும்.

(ஒருவன்ஸம்ஸரிக்கையும்) என்று தொடங்கி. அதாவது-ஏகாத்மாவாகில், (௧௬௧) "அநேகஜந்ம ஸாஹஸ்ரீம் ஸம்ஸாரபதவீம் வ்ரஜந் । மோஹஶ்ரமம் ப்ரயாதோஸௌ வாஸநாரேணுகுண்டித:" என்கிறபடியே ஒருவன் ஸம்ஸரிக்கையும், (௧௬௨) "ஶுகோ முக்தோ வாமதேவோ முக்த:" என்கிறபடியே ஒருவன் முக்தனாகையும், (௧௬௩) "தத்விஜ்ஞாநார்த்தம் ஸ குருமேவாபிகச்சேத், ஸமித்பாணி: ஶ்ரோத்ரியம் ப்ரஹ்மநிஷ்டம், தஸ்மை ஸ வித்வாநுபஸந்நாய ஸம்யக் ப்ரஶாந்தசித்தாய ஶமாந்விதாய யேநாக்ஷரம் புருஷம் வேத ஸத்யம் ப்ரோவாச தாம் தத்த்வதோ ப்ரஹ்மவித்யாம்" என்கிறபடியே, ஒருவன் ஶிஷ்யனாய்வந்து உபஸத்திபண்ண ஒருவன் ஆசார்யனாயிருந்து அவனுக்குஉபதேஶிக்கையுங் கூடாதென்கை.

(௫௪) இன்னமுமோரநுபபத்தி சொல்லுகிறார்; (விஷமஸ்ருஷ்டியுங்கூடாது) என்று. அதாவது - ஏகாத்மாவாகில் தேவதிர்யகாதிரூபேண, சில ஸுகோத்தரமாகவும், சில து:கோத்தரமாகவும், சில ஸுகது:கமிஶ்ரமாகவும், இப்படி லோகத்தில் பதார்த்தங்களை விஷமமாக ஸர்வேஶ்வரன் ஸ்ருஷ்டிக்கக்கூடாதென்கை. ஜீவபேதமும், கர்மதாரதம்யமுமிறே! விஷமஸ்ருஷ்டிக்குஹேது.

(௫௫) இப்படி, யுக்தியாலே அநேகவிரோதங்களை தர்ஶிப்பித்தார் கீழ்; இவ்வளவேயன்று, இப்பக்ஷத்துக்குஶ்ருதிவிரோதமுமுண்டென்கிறார்; (ஆத்மபேதம் சொல்லுகிற ஶ்ருதியோடும் விரோதிக்கும்) என்று. அதாவது-ஏகாத்மாவென்கிறபக்ஷம், (௧௭௦) "நித்யோ நித்யாநாம் சேதநஶ்சேதநாநாம் ஏகோ பஹூநாம் யோ விததாதி காமாந்" என்று, ஆத்மபேதத்தைச் சொல்லுகிற ஶ்ருதிக்கும் சேராதென்றபடி. இந்த ஶ்ருதி ஆத்ம

ஜை: ஶ்ருதி, ஔபாதிகபேதத்தைச் சொல்லுகிறதென்ன வொண்ணாது.

௫எ. மோக்ஷதசையிலும பேதமுண்டாகையாலே.

௫அ. அப்போது தேவமநுஷ்யாதிபேதமும், காமக்ரோதாதிபேதமும் கழிந்து, ஆத்மாக்கள் ஸ்வரூபம் அத்யந்தம் ஸமமாய், ஒருபடியாலும் பேதம் சொல்லவொண்ணாதபடியிருந்ததேயாகிலும்.

பேதத்தைச் சொல்லுகிறதென்னில்; (கசு) "ஹொஸாஹொமஸ்மி" என்றும், (சஅ) "ஸ்யமாநாநஸி" என்றும், (௫அ) "ஜ்ஞாஜ்ஞௌ த்வாவஜா வீஶநீஶௌ" என்றும், (கசுசு) "நிதோ நிதாநாம்" ... விஜ்ஞாநமயஃ" என்றும், ஜீவைகத்வ ப்ரதிபாதிகைகளான அநேகஶ்ருதிகளோடும் விரோதிக்கும். ஆகையால், இது ஔபாதிகபேதத்தைச் சொல்லுகிறதென்றிறே! அவர்கள் சொல்லுவது.

(௫சு) அத்தை நிஷேதிக்கிறார்; (ஶ்ருதி, ஔபாதிகபேதத்தைச் சொல்லுகிறதென்னவொண்ணாது) என்று. ஔபாதிக பேதமாவது - தேவமநுஷ்யாதிபேதமும், காமக்ரோதாதிபேதமும்.

(௫எ) ஔபாதிகபேதமென்ன வொண்ணாமைக்கு ஹேதுவையருளிச்செய்கிறார்; (மோக்ஷதசையிலும் பேத முண்டாகையாலே) என்று. அதாவது - (கசு௫) "ஸஹாவஸ்மி" (கசுசு) "ஸோ ஸாயஶ்நுதே ஸர்வாந் காமாந்" (கசுஎ) "ஸதாநாம் பரமாஃ" (கசுஅ) "ஸாயுஜ்யம் ப்ரதிபத்யதே" (கசுகூ) "யஸ்மிந்தே விராஜதே ஸதா ஸம்ஸாரஸாகரே" என்று, மோக்ஷதசையிலும் ஆத்மபேதத்தை ஶ்ருதிஸ்ம்ருதிகள் சொல்லுகையாலே அப்படி சொல்லவொண்ணாதென்கை.

மோக்ஷதசையாவது - ஸர்வோபாதிவிநிர்முக்ததசையிறே. அந்ததசையிலும் ஆத்மபேதம் ஶ்ருதி ஸித்தமாகையாலே, (கஎ0) "நித்யோ நித்யாநாம்" என்கிற ஶ்ருதியும் ஆத்மபேதத்தைச் சொல்லுகிறதென்றதாயிற்று.

(௫அ) ஆனால், ஆத்மபேதப்ரதிபத்திக்கு ஹேதுவாய், ஔபாதிகமாயிருந்துள்ள தேவமநுஷ்யாதிபேதமும், காமக்ரோதாதிபேத

௫௯. பரிமாணமும், எடையும், ஆகாரமு மொத்திருக்கிற பொற்குடங்கள், ரத்நங்கள், வ்ரீஹிகள் தொடக்கமானவற்றுக்கு பேதமுண்டாகிறாப்போலே ஸ்வரூபபேதமும் ஸித்தம்.

௬௦. ஆகையா லாத்மபேதம் கொள்ளவேணும்.

மும்கழிந்த ஆத்மாக்களுடைய ஸ்வரூபம் அத்யந்தஸமமாய், ஒரு ப்ரகாரத்தாலும் பேதகதநத்துக்கு யோக்யதை யில்லாதபடி யிறே! மோக்ஷதசையிருப்பது; அவ்விடத்தில், ஆத்மபேதம் ஸித்திக்கிறபடி யெங்ஙனே? என்கிற வாதிப்ரஶ்நத்தை யநுவதிக்கிறார்; (அப்போது) என்று தொடங்கி - (ஒருபடியாலும் பேதம் சொல்லவொண்ணாத படி யிருந்ததேயாகிலும்) என்று.

(௫௯) த்ருஷ்டாந்தமுகேந பேதத்தை ஸாதிக்கிறார்; (பரிமாணமும்) என்று தொடங்கி. அதாவது - அளவும், தூக்கமும், வடிவும் ஒத்திருக்கிற பொற்குடங்கள், ரத்நங்கள், வ்ரீஹிகள் முதலான பதார்த்தங்களுக்கு பேதகமா யிருப்பதொரு லக்ஷணமில்லையேயாகிலும் அதிலே நாநாத்வம் காண்கிறாப்போலே, ஒருபடியாலும் பேதம் சொல்ல வொண்ணாதபடி ஏகாகாரரான முக்தாத்மாக்களுக்கும் ஸ்வரூபபேதம் ஸித்திக்குமென்றபடி.

(௬௦) கீழ்ச் சொன்னவற்றையெல்லாம் அநுபாஷித்துக்கொண்டு, "ஆகையால் ஆத்மபேதம்கொள்ளவேணும்" என்று நிகமிக்கிறார்.

ஆக, கீழ்ச்செய்ததாயிற்று - சிலர் ஆத்மபேதமில்லை, ஏகாத்மாவே யுள்ளதென்றார்கள் என்றுதொடங்கி இவ்வளவாக, முன்பு தாமருளிச்செய்த ஜீவாநந்த்யப்ரதிபடமான ஏகாத்மவாதத்தை உத்க்ஷேபித்து, யுக்தியாலும், ஶாஸ்த்ரத்தாலும் பஹுமுகமாக வத்தை தூஷித்து, ஆத்மபேதத்தை ஸாதித்தாராயிற்று. கீழே, ஆத்மஸ்வரூபலக்ஷணத்தை விஸ்தரேண வருளிச்செய்தார். அதில், அசித்விலக்ஷணத்வம், அஜடத்வம், ஆநந்தரூபத்வம், அவ்யக்தத்வம், அசிந்த்யத்வம், நிரவயவத்வம், நிர்விகாரத்வம்,

௬௧. இப்போ திவர்களுக்கு லக்ஷணம், ஶேஷத்வத்தோடே கூடின ஜ்ஞாத்ருத்வம்.

௬௨. இவர்களுடைய ஜ்ஞாநந்தான் ஸ்வரூபம்போலே நித்ய த்ரவ்யமாய், அஜடமாய், ஆநந்தரூபமாயிருக்கும்.

௬௩. ஆனால், ஜ்ஞாநத்துக்கும் ஸ்வரூபத்துக்கும் வாசி என்? என்னில்;

ஜ்ஞாநாஶ்ரயத்வமாகிற விவை ஜீவேஶ்வர ஸாதாரணம். நியாம்யத்வாதிகள் மூன்றும் சிதசித்ஸாதாரணம். நித்யத்வம் தத்வத்ரய ஸாதாரணம். அணுத்வமும் அசித்பரமாணுஜீவஸாதாரணம். இவை யித்தனையும் சேரக்கூடி, ஆத்மஸ்வரூபத்துக்கு அசிதீஶ்வர வ்யாவ்ருத்தியை விச்சிப்பிக்கையாலே, இவற்றைலக்ஷணமென்னக் குறையில்லை.

(௬௧) அப்படியன்றிக்கே, ஸங்க்ரஹமாக வொருலக்ஷணம் அருளிச்செய்கிறார், (இப்போது இவர்களுக்கு லக்ஷணம், ஶேஷத்வத்தோடே கூடின ஜ்ஞாத்ருத்வம்) என்று. இவர்களென்கிறது-த்ரிவித சேதநரையும். லக்ஷணமாவது - அஸாதாரண தர்மமிறே. ஆகையால், ஶேஷத்வமாத்ரத்தைச் சொல்லில் அசித்வ்யாவ்ருத்தி வித்தியாமையாலும், ஜ்ஞாத்ருத்வமாத்ரத்தைச் சொலில் ஈஶ்வரவ்யாவ்ருத்தி வித்தியாமையாலும், ஶேஷத்வேஸதி ஜ்ஞாத்ருத்வமே லக்ஷணமென்கிறார்.

(௬௨) இப்படி, ஜ்ஞாதாவான ஆத்மாவினுடைய ஜ்ஞாநத்துக்கும் ஸ்வரூபத்துக்குமுண்டான ஸாதர்ம்ய வைதர்ம்யங்களை யருளிச்செய்கிறார் மேல்; (இவர்களுடைய ஜ்ஞாநந்தான்) என்று தொடங்கி. (ஸ்வரூபம்போலே நித்யத்ரவ்யமாய், அஜடமாய், ஆநந்தரூபமாயிருக்கும்) இத்தால்-நித்யத்வ த்ரவ்யத்வ அஜடத்வ ஆநந்தரூபத்வங்கள், ஸ்வரூபத்தோபாதி ஜ்ஞாநத்துக்குமுண்டென்றபடி.

(௬௩) நித்யத்வாதிகளை யுபபாதித்து வைதர்ம்யத்தைச்சொல்லுமளவில் அநேகக்ரந்த வ்யவஹிதமாமென்று நினைத்து, ஸாதர்ம்யஞ் சொன்ன வநந்தரம், வைதர்மயத்தையும் சொல்லுவதாக தஜ்ஜிஜ்ஞாஸு ப்ரஶ்நத்தை யநுவதிக்கிறார்; (ஆனால், ஜ்ஞாநத்துக்கும் ஸ்வரூபத்துக்கும் வாசி யென்? என்னில்) என்று.

சுச. ஸ்வரூபம் - தர்மியாய், ஸங்கோச விகாஸங்களுக் கயோக்யமாய், தன்னை யொழிந்தவற்றை ப்ரகாஶிப்பியாமலே தனக்குத் தான் ப்ரகாஶிக்கக் கடவதாய், அணுவாயிருக்கும். ஜ்ஞாநம்-தர்மமாய், ஸங்கோச விகாஸங்களுக்கு யோக்யமாய், தன்னை யொழிந்தவற்றை ப்ரகாஶிப்பிக்கக்கடவதாய், தனக்குத்தான் ப்ரகாஶியாதே ஆத்மாவுக்கு ப்ரகாஶிக்கக் கடவதாய், விபுவா யிருக்கும்.

சுரு. அதில்; சிலருடையஜ்ஞாநம் எப்போதும் விபுவாயிருக்கும்; சிலருடையஜ்ஞாநம் எப்போதும் அவிபுவாயிருக்கும்; சிலருடைய ஜ்ஞாநம் ஒருகால் விபுவாய் ஒருகால் அவிபுவாயிருக்கும்.

(சுச) வைதர்ம்யந்தன்னை யருளிச்செய்கிறார்; (ஸ்வரூபம் தர்மியாய்) என்றுதொடங்கி. அதாவது-தர்மித்வம், ஸங்கோச விகாஸாயோக்யத்வம், ஸ்வவ்யதிரிக்தார்த்தா ப்ரகாஶகத்வம், ஸ்வஸ்மை ஸ்வயம்ப்ரகாஶத்வம், அணுத்வம், இவைஸ்வரூபத்துக்குவிஶேஷம்.

தர்மத்வம், ஸங்கோச விகாஸயோக்யத்வம், ஸ்வவ்யதிரிக்தார்த்த ப்ரகாஶகத்வம், ஸ்வஸ்மை ஸ்வயம்ப்ரகாஶரஹிதத்வம், ஸ்வாஶ்ரயஸ்ய ஸ்வப்ரகாஶகத்வம், விபுத்வம், இவை ஜ்ஞாநத்துக்கு விஶேஷமென்றபடி. (விபுவாயிருக்கும்) என்ற-ஜ்ஞாநத்தினுடைய ஸ்வாபாவிகவேஷத்தை யருளிச்செய்தாரித்தனையிறே.

(சுரு) ஸகல சேதநருடைய ஜ்ஞாநமும் இப்படி யிராதொழிவானென்? என்கிற சங்கையிலே ஸங்கோசா ஸங்கோச நிபந்தநமான தாரதம்யத்தை யருளிச்செய்கிறார்; (அதில் சிலருடையஜ்ஞாநம்) என்று தொடங்கி.

அதாவது (களO) "அயர்வறு மமரர்கள்" என்கிறபடியே பகவத்ஜ்ஞாநத்துக்கொருநாளும் ஸங்கோசமின்றிக்கே தத் ஸ்வரூப ரூபகுண விபூதிகளை ஸதாநுபவம்பண்ணுகிறநித்யஸூரிகளுடைய ஜ்ஞாநம், எப்போதும் விபுவாயிருக்கும். * பொய்ந்நின்ற ஞானமும் பொல்லாவொழுக்கு மழுக்குடம்புமாயிருக்கிற பத்தருடையஜ்ஞா

சுசு. ஜ்ஞாநம் நித்யமாகில் "எனக்கு ஜ்ஞாநம் பிறந்தது, நஶித்தது" என்கிறபடி யென்? என்னில்;

சுஎ. இந்த்ரியத்வாரா ப்ரஸரித்து, விஷயங்களை க்ரஹிப்பது மீளுவதாகையாலே, அப்படிச்சொல்லக் குறையில்லை.

நம், கர்மாநுகுணமாக ஸங்கோசவிகாஸங்களோடே கூடிக்கொண்டு எப்போதும் அவிபுவாயிருக்கும். (கஎக) "கரைகண்டோர்" என்கிறபடியே, பகவதப்ரஸாதத்தாலே ஸம்ஸாரஸாகரத்தைக்கடந்து அக்கரைப்பட்ட முக்தருடையஜ்ஞாநம், பூர்வாவஸ்த்தையில அவிபுவாய், உத்தராவஸ்த்தையில (கஎஉ) "ஸ ச ஆநந்த்யாய கல்பதே" என்கிறபடியே, விபுவா யிருக்குமென்கை.

(சுசு) இனிமேல், ஜ்ஞாநத்துக்குச்சொன்ன நித்யத்வாதிகளை உபபாதிக்கிறார்; அதில் ப்ரதமத்திலே, "எனக்கிப்போது ஜ்ஞாநம் பிறந்தது, எனக்கிப்போது ஜ்ஞாநம் நஶித்தது" என்று, உத்பத்தி விநாஶவத்தாகச் சொல்லப்படுகிற ஜ்ஞாநத்துக்கு நித்யத்வம கூடும படி யெங்ஙனே? என்கிற ஶங்கையைப் பரிஹரிக்கைக்காக தஜ்ஜிஜ்ஞாஸாப்ரஶ்நத்தை யநுவதிக்கிறார்; (ஜ்ஞாநம் நித்யமாகில் "எனக்கு ஜ்ஞாநம் பிறந்தது நஶித்தது என்கிறபடி யென்னென்னில) என்று-

(சுஎ) அதுக்கு உத்தரமருளிச்செய்கிறார்; (இந்த்ரியத்வாரா ப்ரஸரித்து விஷயங்களை க்ரஹிப்பது மீளுவது ஆகையாலே அப்படி சொல்லக் குறையில்லை) என்று. அதாவது - (கஎஉ) "ஸ ச ஆநந்த்யாய கல்பதே" (சுஅ) "ஸர்வஜ்ஞத்வாய கல்பதே" என்று, முக்ததசையில் ஸர்வவிஷயமாகச் சொல்லுகையாலே ஸர்வத்தையும ஸாக்ஷாத்கரிக்கைக்கு யோக்யமா யிருக்கச்செய்தேயும, (கஎங) "யதா கக்ஷ்யாஸு ஸக்தஸ்ய தேஹிநோ ஜ்ஞாநம்" என்கிறபடியே, காமத்தாலே ஸங்குசிதமாய், (கஎச) "யதா ஹி ஸ்நாதகஸ்யாபி ஶக்திர் க்ஷத்ரஜ்ஞஸம்ஜ்ஞிதா । ஸர்வக்ஷேத்ரேஷு ஸ்ர்வத்ர தாரதம்யேந வர்த்ததே । ப்ராணிஷு ஸ்த்தாவரஸ்த்தாவரேஷு ததோதிகா" என்கிறபடியே, காமாநுகுணமான தாரதம்யத்தை யுடைத்தாய்க்

சூ-அ. இது தான் ஏகமா யிருக்கச்செய்தே நாநாவாய்த் தோற்று கிறது. ப்ரஸரணபேதத்தாலே.

கொண்டு, (கஎரு) "இந்த்ரியாணாம் ஹி ஸர்வேஷாம் யத்யேகம் க்ஷரதீந்த்ரியம் । தேநாஸ்ய க்ஷரதி ப்ரஜ்ஞா த்ருதே: பாதாதிவோதகம்" என்கிறபடியே, இந்த்ரியத்வாரா புறப்பட்டு விஷயங்களை க்ரஹிப்பது மீளுவதாலகயாலே, தாத்ருஶமான விகாஸத்தாலும் ஸங்கோசத்தாலும் வந்த ப்ரகாஶாப்ரகாஶங்களைக் கொண்டு, பிறந்தது நஶித்தது என்னக்குறையில்லை என்கை.

(சூ-அ) இப்படி, இந்த்ரியத்வாரா ப்ரஸரிக்கிற ஜ்ஞாநம் ஏகமா யிருக்கசெய்தே, விஷயக்ரஹணவேளையில் ப்ரகாஶிக்கும்போது தாஶந ஶ்ரவணாதி ஸம்ஜ்ஞாபேதத்தை யுடைத்தாய்க்கொண்டு, அநேகத்வேந ப்ரகாஶிக்கிறபடி யெங்ஙனே? என்கிற சங்கையிலே யருளிச்செய்கிறார்; (இதுதான் ஏகமாயிருக்கச்செய்தே நாநாவாய்த் தோற்றுகிறது, ப்ரஸரணபேதத்தாலே) என்று. அதாவது-ஏகமுக மாக ப்ரஸரிக்கை யன்றிக்கே, சக்ஷுஶ்ஶ்ரோத்ராத் யநேகேந்த்ரிய த்வாரா ப்ரஸரித்து, ரூபஶப்தாத் யநேகவிஷயங்களை க்ரஹிக்கிற விதுக்கு தர்ஶந ஶ்ரவணாதி ஸம்ஜ்ஞாபேதேந தோற்றுகிற நாநாத் வம்-ப்ரஸரணபேத நிபந்தநமென்கை. இத்தால் - நித்யமான ஜ்ஞா நத்துக்கு உத்பத்திவிநாஶ வ்யவஹாரஹேது வின்னதென்று சொன்ன வநந்தரத்திலே, ப்ராஸங்கிகமாக அதினுடைய நாநாத் வேந ப்ரகாஶநஹேதுவும் சொல்லப்பட்டதாயிற்று.

ஆத்மாவினுடைய தர்மபூதஜ்ஞாந நித்யத்வம், (கஎசு) "ந ஹி விஜ்ஞாதுர்விஜ்ஞாதேர் விபரிலோபோ வித்யதே, ந ஹி த்ரஷ்டுர் த்ருஷ்டேர் விபரிலோபோ வித்யதே" (கஎஎ) "ஜ்ஞாநம் வைராக்ய மைஶ்வர்யம் யஶஸ் ஶ்ரீர்ஜ்ஞாநமேவ ச । ஸ்ருஷ்டிஸ்ஸ்வாத்மஸ்வரூபஸ்ய நித்யஸித்தம் ஸ்வபாவஜம் । அவ்யயாநி க்ஷராணாம் தஶைதாநி ஜகத்பதே । ஸர்வஜ்ஞதா த்ருப்திரநாதிபோத ஸ்வதந்த்ரதா நித்யமலுப்தஶக்தி: । தஸ்யாப்யமேயஸ்ய ததைவ யாவ யோகாந: । ஆகாஶவஜ்ஜ நித்யோ ஹி நித்யஜ்ஞாநவாநேவ ஹி தே" என்று, ஶ்ருதி ஸ்ம்ருத்யாதிகளில் சொல்லப்பட்டதிறே.

௬௯, த்ரவ்யமானபடி யென்னென்னில்;

௭௦. க்ரியாகுணங்களுக் காஶ்ரயமாய், அஜடமா யிருக்கை யாலே த்ரவ்யமாகக்கடவது.

---

(௬௯) இப்படி யிருந்துள்ள ஜ்ஞாநநித்யத்வத்தை யருளிச்செய்தாராய் நின்றார் கீழ்; இனி, இதினுடைய த்ரவ்யத்வத்தை உபபாதிப்பதாக தஜ்ஜிஜ்ஞாஸாப்ரஶ்நத்தை யநுவதிக்கிறார்; (த்ரவ்யமான படி யென் ? என்னில்;) என்று.

(௭௦) தத்ஹேதுக்களை யருளிச்செய்து த்ரவ்யத்வத்தை ஸாதிக்கிறார்; (க்ரியாகுணங்களுக்கு ஆஶ்ரயமாய் அஜடமாயிருக்கை யாலே த்ரவ்ய மாககடவது) என்று. க்ரியையாவது - ஸங்கோசவிகாஸங்கள். குணமாவது - ஸம்யோகவியோகங்கள். அஜடத்வமாவது - ஸ்வயம்ப்ரகாஶத்வம், (௧௭௮) "க்ரியாஶ்ரயோ த்ரவ்யம், குணாஶ்ரயோ த்ரவ்யம்" என்று, த்ரவ்யலக்ஷணம் சொல்லப்படுகையாலே, க்ரியாஶ்ரயத்வமும் குணாஶ்ரயத்வமும் ஒரொன்றே த்ரவ்யத்வஸாதகம். இவற்றோடே அஜடத்வத்தையும் சொல்லுகையாலே அதுவும் த்ரவ்யத்வஸாதக மென்று இவர்க்குக்கருத்து. எங்ஙனே ? என்னில்; ஜடவஸ்துக்க ளிலே த்ரவ்யாத்ரவ்யங்க ளிரண்டு முண்டு; அஜடவஸ்துக்களிலே அத்ரவ்யமாயிருப்ப தொன்றிலலையிறே. ஆகையால-"ஜ்ஞாநம், த்ரவ்யம், அஜடத்வாத், யதஜடம, தத்த்ரவ்யம, யதாஆத்மாதி" என்று அஜடத்வந தனனைக்கொண்டே தரவ்யத்வம ஸாதிக்கலாமிறே. ஆகையிறே ! "இதுதான் அஜடமுமாய், ஸஙகோசவிகாஸங்களுக் கும் ஸம்யோக வியோகாதிகளுககும் ஆஶ்ரயமுமாயிருக்கை யாலேத்ரவ்யம" என்று, ததவஸாரததிலும் இவ ரருளிச்செய்தது. இப்படி த்ரவ்யமாயிருக்குமாகில, இதுக்கு ஆத்மகுணத்வம் கூடும்படி என்? என்னில்; நித்யததாஶ்ரயத்வத்தாலே கூடும். (௧௭௯) "ஆஶ்ரயாதந்யதோ வ்ருத்தேராஶ்ரயேண ஸமந்வயாத் । த்ரவ்யத்வஞ்ச குணத்வஞ்ச ஜ்ஞாநஸ்யைவோபபத்யதே" என்றிறே ஆளவந்தார் அருளிச்செய்தது. ஆஶ்ரயாதந்ய தோவ்ருத்தித்வம, க்ரியாஶ்ரயத்வஙக சொன்னபோதே சொல்லிற் றாயிறறு. இதுதான் ஜ்ஞாநத்துககே யன்றிறே' தீபாதிதேஜஃபதார்

எக. அஜடமாகில் ஸுஷுப்தி மூர்ச்சாதிகளில் தோற்றவேண்டாவோ வென்னில்;

எஉ. ப்ரஸரண மில்லாமையாலே தோன்றுது.

எரு. ஆநந்தரூபமாகையாவது - ஜ்ஞாநம்ப்ரகாஶிக்கும்போது அநுகூலமாயிருக்கை.

எச. விஷஶஸ்த்ராதிகளைக் காட்டும்போது ப்ரதிகூலமாகைக்கடி தேஹாத்மப்ரமாதிகள்.

த்தப்ராஸயகளுக்கு யொக்குமிறே. ஆகையால், த்ரவ்யத்வ குணத்வங்களிரண்டும் ஜ்ஞாநத்துக்கு உபபந்நம்.

(எக) கீழ் ஜ்ஞாநத்துக்குத் தாமருளிச்செய்த அஜடத்வ விஷயமான ஜிஜ்ஞாஸுப்ரஶ்நத்தை யநுவதிக்கிறார்; (அஜடமாகில்ஸுஷுப்திமூர்ச்சாதிகளில தோற்றவேண்டாவோ? என்னில்) என்று. அதாவது-ஜ்ஞாநம் ஸ்வயம்ப்ரகாஶமாயிருக்குமாகில் எபபோதும் ப்ரகாஶிக்கவேண்டாவோ, ஸுஷுப்த்யாத்யவஸ்த்தைகளில் ப்ரகாஶியாதொழிவானென்? என்கை.

(எஉ) அதக்கு உத்தர மருளிச்செய்கிறார்; (ப்ரஸரண மில்லாமையாலே தோன்றுது) என்று. அதாவது-ஜ்ஞாநம ஸ்வாஶ்ரயத்துக்கு ஸ்வயமேவப்ரகாஶிப்பதுதான விஷயக்ரஹணவேளையிலிறே. ஸுஷுபத்யாத்யவஸ்தைகளில தமோகுணத்பபிபவத்தாலே ஸங்குசிதமாய், திரோஹிதங்களான மணிப்ரகாஶாதிகளைப்போலே, ப்ரஸரண மில்லாமையாலே ப்ரகாஶியாதென்கை.

(எரு) இனிமேல், இதினுடைய வாநந்தரூபத்வத்தை யுபபாதிக்கிறார்; (ஆநந்தரூபமாகையாவது) என்று தொடங்கி; ஜ்ஞாநம் ப்ரகாஶிக்கும்போதாவது-ஸ்வாஶ்ரயத்துக்கு விஷயங்களைதர்ஶிப்பிக்கும்போது; அப்போதிறே இதுதான் ப்ரகாஶிப்பது. அவ்வவஸ்தையில் அநுகூலமாயிருக்கையாவது - அவ்வோ விஷயங்களெல்லாம் அநுகூலமாய்த் தோற்றுகையாலே, அவற்றை விஷயீகரித்த விந்தஜ்ஞாநம-ஸ்வாஶ்ரயத்துக்கு ஸுகரூபமாயிருக்கை.

(எச) ஆனால், விஷஶஸ்த்ராதிகளை தர்ஶிப்பிக்கும்போது அவற்றை விஷயீகரித்த ஜ்ஞாநம் ப்ரதிகூலமாயிருப்பானென்? என்

௭௫. ஈஶ்வராத்மக மாகையாலே யெல்லா பதார்த்தங்களுக்கும் ஆநுகூல்யமே ஸ்வபாவம், ப்ராதிகூல்யம் வந்தேறி.

௭௬. மற்றை யாநுகூல்யம் ஸ்வாபாவிகமாகில், ஒருவனுக்கு ஒருகாலோரிடத்திலே அநுகூலங்களான சந்தந குஸுமாதிகள், தேசாந்தரே காலாந்தரே இவன்றனக்கும், அத்தேசத்திலே அக்காலத்திலே வேறேயொருவனுக்கும் ப்ரதிகூலங்களாகக்கூடாது

கிற ஶங்கையை யுடகொண்டு அருளிச்செய்கிறார்; (விஷஶஸ்த்ராதிகள்) என்று தொடங்கி. அதாவது - அவற்றை ஸ்பர்சிக்கும்போது, அவற்றை விஷயீகரித்த ஜ்ஞானம் து:கரூபமாயிருக்கைக்குக் காரணம் அவற்றில் பாதகத்வபுத்திக்கு மூலமான தேஹாத்மப்ரமமும், கர்மமும், ஈஶ்வராத்மகத்வஜ்ஞாநராஹித்யமுமென்கை;

௭௫. இவை தனக்கு ஸ்வாபாவிக வேஷமேது? என்கிற சங்கையிலே யருளிச்செய்கிறார்; (ஈஶ்வராத்மக மாகையாலே) என்று தொடங்கி. அதாவது - (ஙஅய) "ஜகத் ஸர்வம் ஶரீரம் தே" (கஅக) "தாநி ஸர்வாணி தத்வபு:" (கஅ௨) "தத் ஸர்வம் வை ஹரேஸ்தநு:" என்று, ஸகலபதார்த்தங்களும் பகவச்சரீரமென்று ஶாஸ்த்ரங்களிலே சொல்லப்பட்டு நின்றதிறே. அப்படி பகவதாத்மகமாகக் காணும்போது, ஸகலமநுகூலமாய்க்கொண்டு தோற்றுகையாலே எல்லா பதார்த்தங்களுக்கும் ஆநுகூல்யமே ஸ்வபாவம்; இவற்றில் தோற்றுகிற ப்ராதிகூல்யம், தேஹாத்மப்ரமாதி மூலமாகையாலே வந்தேறி என்கை.

(௭௬) இப்படி, ஈஶ்வராத்மகமாகையாலே ஸகலபதார்த்தங்களுக்கும் ஆநுகூல்யமே ஸ்வபாவமென்பானென்? சந்தந குஸுமாதிகளிலுண்டான வாநுகூல்யம் ஸ்வாபாவிகமன்றோ' என்கிற சங்கையிலே மேலே யருளிச்செய்கிறார்; (மற்றை யாநுகூல்யம் ஸ்வாபாவிகமாகில்) என்று தொடங்கி. மற்றையாநுகூல்யமென்கிறது - தாமருளிச்செய்த பகவதாத்மகத்வத்தால் வந்த வாநுகூல்யத்தை யொழிய, சந்தநகுஸுமாதி பதார்த்தங்களில் தோற்றுகிற வாநுகூல்யத்தை. அது அவற்றுக்கு ஸ்வாபாவிகமாகில், போக்தாவாயிருப்பானொருவனுக்கு ஒருகாலத்திலே ஒருதேசத்திலே அநுகூ

[illegible] ப்ரத்யக்ஷமாயு, காலாந்தரத்திலேயாதல், தேசாந்தரத்திலேயாதல்; இவன்றனக்கே ப்ரதிகூலங்களாவது; இவனுக்கநுகூலங்களாயிருக்கிற தேசகாலங்கள்தன்னிலே வேறேயொருவனுக்கு ப்ரதிகூலங்களாவதாகை கூடாது, இப்படி, ப்ரதிகூலங்களாய்த் தோற்றக் காணாநின்றோமிறே. ஆகையால, பகவதாத்மகத்வ ப்ரயுக்தமான வாநுகூல்யமே ஸ்வாபாவிகம்; மற்றை யாநுகூல்யம் ஸ்வாபாவிகமன்று, என்கை. (கஅுரு) "வஸ்த்வேகமேவ து:காய ஸுகாயேர்ஷ்யாகமாய ச । கோபாய ச யதஸ்தஸ்மாத் வஸ்து வஸ்த்வாத்மகம் குத: । ததேவ ப்ரீதயே பூத்வா புநர்து:காய ஜாயதே । ததேவ கோபாய யத: ப்ரஸாதாய ச ஜாயதே । தஸ்மாத் து:காத்மகம் நாஸ்தி ந ச கிஞ்சித் ஸுகாத்மகம்" என்று, இவ்வர்த்தம் ஸ்ரீபராஸரபகவானாலே விஸதமாகச் சொல்லப்பட்டதிறே.

இத்தால் சொல்லிற்றாயிற்றதென்? என்னில்; விஷயஸந்த்ராதிகள் ப்ரதிகூலங்களாயும், சந்தநகுஸுமாதிகள் அநுகூலங்களாயும் தோற்றுகிறது - தேஹாத்மபாமாதிகளாலே. ஸர்வாத்மகமாகையாலே, எல்லாபதார்த்தங்களுக்கும் ஆநுகூல்யமே ஸ்வபாவம், ஆகையால, அவ்வாகாரத்தாலே காணும்போதும், ஸர்வவிஷய ப்ரகாஸகமாயிலும், ஜ்ஞாநம் - ஆநந்தரூபமாயிருக்குமென்றதாயிற்று.

ஆக, கீழ்ச்செய்ததாயிற்று - "சித்தென்கிறது ஆத்மாவை" என்று, முதலிலே சித்பதவாச்யமான ஆத்மவஸ்துவை உத்தேசித்து, அநந்தரம், "தேஹாதிவிலக்ஷணமாய்" என்று தொடங்கி "ஸேஷமாயிருக்கும்" என்னுமளவாக தத்ஸ்வரூப லக்ஷணத்தை விஸ்தரேண சொல்லி, "தேஹாதிவிலக்ஷணமானபடியென்; என்னில" என்று தொடங்கி "ஸேஷமாகையாவது" என்னுமளவாக உக்தலக்ஷணத்தைப் பரீக்ஷித்து, அநந்தரம், ஏவம்பூதமான வாத்மஸ்வரூபம் பத்த முக்த நித்யரூபேண த்ரிப்ரகாரமாயிருக்கும்படியையும், பத்தாத்மாக்களுக்கு அவித்யாதிக ஞானடாகைக்கு ஹேதுவையும், தந்நிவ்ருத்தி க்ரமத்தையும, த்ரிவிதாத்மவர்க்கமும தனித்தனியே அநந்தமாயிருக்கும்படியையும் சொல்லி, அந்த ஜீவாநந்த்ய ப்ரதிபடமான ஏகாத்மவாதத்தை யுக்திஸாஸ்த்ரங்களாலே நிரஸித்து, ஆத்ம

ரூபமாக தாரதம்யங்களுக்கு முண்டான [illegible] ப்ரஸம்பித்து, அநந்தரம், ஜ்ஞாநத்துக்கும் ஸ்வரூபத்துக்கு முண்டான ஸாதர்ம்ய வைதர்ம்யங்களைச் சொல்லி, ஜ்ஞாந விபுத்வ ப்ரஸங்கத்திலே த்ரிவித சேதநருடைய ஜ்ஞாநத்துக்குமுண்டான விசேஷத்தைச் சொல்லி, முன்பு ஜ்ஞாநத்துக்குச் சொன்ன நித்யத்வ த்ரவ்யத்வாஜடத்வாநந்தரூபத்வங்களை யடைவே ஸமர்த்தித்து, இப்படி சித்தத்வத்தினுடைய வேஷத்தை யருளிச்செய்து தலைக்கட்டினார்.

பிள்ளை லோகாசார்யர் திருவடிகளே ஶரணம்.

மணவாளமாமுனிகள் திருவடிகளே ஶரணம்.

சித்ப்ரகரணம் முற்றிற்று.

ஸ்ரீ

அசித்ப்ரகரணம்

க. அசித்து-ஜ்ஞாநசூந்யமாய், விகாராஸ்பதமாயிருக்கும்.

உ. இது, ஶுத்தஸத்வமென்றும், மிஶ்ரஸத்வமென்றும், ஸத்வ ஶூந்யமென்றும் த்ரிவிதம்.

ங. இதில் சுத்தஸத்வமாவது - ரஜஸ்தமஸ்ஸுக்கள் கலசாதே கேவலஸத்வமாய், நித்யமாய், ஜ்ஞாநாநந்தஜநகமாய்,

---

தத்வத்ரயமாவது-சித்தும அசித்தும ஈஶ்வரனும் என்று உத்தேசித்த க்ரமத்திலே, ப்ரதமம் சித்சப்தவாச்யனான ஆத்மாவினுடைய ஸ்வரூப ஸ்வபாவ விஶேஷங்களை ஸ்புடமாக வருளிச்செய்தார் கீழ்; அநந்தரம், அசித்வஸ்துவினுடைய ஸ்வரூப ஸ்வபாவ விசேஷங்களை அதிஸ்புடமாக வருளிச்செய்கிறார்.

(க) அதில் ப்ரதமத்திலே அசில்லக்ஷணத்தை யருளிச்செய்கிறார்; (அசித்து - ஜ்ஞாநசூந்யமாய், விகாராஸ்பதமா யிருக்கும்) என்று. அசித்தாகிறது-சைதந்யாநாதாரமான வஸ்துவிறே! அதுதன்னை யருளிச்செய்கிறார்; (ஜ்ஞாநசூந்யமாய்) என்று. அத்தைப் பற்றவிறே! ஶ்ருதி, போக்யஶப்தத்தாலே அசித்தைச் சொல்லிற்று. விகாராஸ்பத மாகையாவது - விகாரத்துக்கு இருப்பிடமாயிருக்கை. விகாரமாவது-அவஸ்த்தாந்தராபத்தி; அதாவது-சித்ஸ்வரூபம்போலே, ஸதைகரூபமா யிராதொழிகை.

(உ) இப்படி இதினுடைய லக்ஷணத்தை யருளிச்செய்தவநந்தரம், இவ்வசித்தத்வந்தான் - ஸத்வைகாதாரமாயும், ஸத்வாதிகுணத்ரயாதாரமாயும், ஸத்வாதிகுணஶூந்யமாயும், மூன்றுவகைப்பட்டிருக்கும்படியை யருளிச்செய்கிறார்; (இது, சுத்தஸத்வமென்றும், மிஶ்ரஸத்வமென்றும, ஸத்வசூந்யமென்றும் த்ரிவிதம்) என்று

(ங) உத்தேசித்த க்ரமத்திலே, அசித்த்ரயத்தினுடையவும் ஸ்வரூப ஸ்வபாவ விஶேஷங்களை ப்ரதிபாதிப்பதாக நினைத்து, ப்ரதமம்

கர்மத்தாலன்றிக்கே கேவலபகவதிச்சையாலே விமாந கோபுரமண்டப ப்ராஸாதாதிரூபேண பரிணமிக்கக்கடவதாய், நிரவதிக்தேஜோரூபமாய், நித்யமுக்தராலும் ஈச்வரனாலும் பரிச்சேதிக்கவரிதாய், அத்யத்புதமாயிருப்பதொன்று.

ஶ்ரீஸங்கல்பத்தின்படியை யருளிச்செய்கிறார்; (இதில் சுத்தஸத்வமாவது) என்று தொடங்கி சுத்தஸத்வமென்றது - குணாந்தரம் கலசாதஸத்வகுணத்தையுடையதென்றபடி; அத்தை யருளிச்செய்கிறார்; (ரஜஸ்தமஸ்ஸுக்கள் கலசாதேகேவலஸத்வமாய்) என்று. (கஅச) "[illegible]" (சஅரு) "[illegible]" (சஅசு) "[illegible]" (சஅஎ) "[illegible]" என்று, ஶ்ருதிஸ்ம்ருதிகளிலே யிப்படி சொல்லாநின்றதிறே. (நித்யமாய்) அதாவது,- அநாதிநிதநமா யிருக்கை. (சஅஅ "[illegible]" (கஅகூ) "[illegible]" (சகூ0) "[illegible]" என்று, இதினுடைய நித்யத்வமும் ஶ்ருதிஸ்ம்ருதிகளிலே சொல்லப்பட்டது. (ஜ்ஞாநாநந்தஜநகமாய்) ஸாத்த்விகமாகையாலே ஜ்ஞாநாநந்த ஜநகமாயிருக்குமிறே. ஸத்வம் - ஜ்ஞாநஸுகாவஹமாயிறே! இருப்பது. ஆகையிறே! (சஅஎ) "[illegible]" என்ற வநந்தரத்திலே "[illegible]" என்றது.

(கர்மத்தாலன்றிக்கே கேவல பகவதிச்சையாலே, விமாந கோபுர மண்டப ப்ராஸாதாதிரூபேண பரிணமிக்கக்கடவதாய்) அதாவது-சேதநன் கர்மாநுகுணமாக விச்சிக்க. அந்த விச்சாநுகுணமாக பகவத்ஸங்கல்பத்தாலே சதுர்விம்ஶதிகத்வமாய்க்கொண்டு பரிணமித்து, சேதநர்க்கு போக்ய போகோபகரண போகஸ்தாநங்களாகிற ப்ரக்ருதிதத்வம்போ லன்றிக்கே, ஸ்வபோகார்த்தமாக வுண்டான பகவதிச்சையாலே விமாநகோபுராதிரூபேண பரிணமியாநிற்கு மென்கை. (சகூக) "[illegible]

[illegible]
[illegible] நிர்வ்ருதாம் வைஸ்ரீஷு” (௧௯௨) “ஸர்வாஸ்ச [illegible]
ஹணாஃ” (௧௯௩) ஆஜாநுகே ஸஹஸ்ரவேஷ்டிதம் [illegible]
என்று ஸ்ருதியிலேயும் ஸங்க்ரஹேண நித்யவிபூதியிலுண்டான திவ்யநகர திவ்யாயுதாதிகள் சொல்லப்பட்டது.
இது தன்னை பாஷ்யகாரர் ஸ்ரீவைகுண்டகத்யத்திலே (௧௯௪) “திவ்யாவரண ஶதஸஹஸ்ராவ்ருதே, திவ்யகல்பகதரு [illegible] ஶோபிதே, திவ்யோத்யாந ஶதஸஹஸ்ர கோடிபிராவ்ருதே, அதிப்ரமாணே, திவ்யாயதந [illegible] திவ்யாஸ்தாந மண்டபே” என்று தொடங்கி, விஸ்தரேண அருளிச்செய்தாரிறே. (நிரவதிகதேஜோரூபமாய்) அதாவது - அநவதிகாதிஶய ஜ்யோதிஸ்ஸுக்களையும் கத்யோதகல்பமாக்கும்படி, அளவிறந்த தேஜஸ்ஸே வடிவாயிருக்கை. (௧௯௫) “ந தத்ர ஸூர்யோ பாதி ந சந்த்ர தாரகம் நேமா வித்யுதோ பாந்தி குதோயமக்நிஃ” (௧௯௬) “க்ஷயந்தமஸ்ய ரஜஸஃ பராகே” [illegible] “[illegible] தேஜஸா” என்னக்கடவதிறே. (௧௯௭) “சுடரொளியாய் நின்ற தன்னுடைச் சோதி” (௧௯௮) ‘சுழிபட்டோடும் சுடர்ச்சோதி வெள்ளம்’ (௧௯௯) “விளங்குசுடர்ச்சோதி” என்று ஆழ்வாரும், இதினுடைய நிரவதிக தேஜோரூபத்வத்தைப் பலவிடங்களிலும் அருளிச்செய்தாரிறே.

(நித்யமுக்தராலும் ஈஸ்வரனாலும் பரிச்சேதிக்கவரிதாய்) அதாவது - இதினுடைய பரிமாணத்தை ஒருவராலும், அளவிட வொண்ணாதபடி யிருக்குமாயிறறு. (௨௦௦) ‘யதக்ஷரே பரமே வ்யோமந்’ [illegible] [illegible] என்று ஸ்ருதியால் பரிச்சேதிக்க வொண்ணாதென்று ஸ்ரீவைகுண்டகத்யத்திலே பாஷ்யகாரர் அருளிச்செய்தது நித்யமுக்தருக்கு [illegible] குமிறே. ஈஸ்வரஜ்ஞாநத்தோபாதி இவர்களுடைய ஜ்ஞாநத்துக்கும் ஸாவதர்மித்வமுண்டாகையாலே; அவனாலே பரிச்சேதிக்கலாமாகில் இவர்களாலும் பரிச்சேதிக்கலாமிறே. ஆகையால் அவனுக்குமிதொன்னை. ஆனால், இவர்களுடைய ஸர்வஜ்ஞதைக்குக் கொத்தை வாராதோ? என்னில்; வாராது. ஸர்வஜ்ஞதையாவது - ஸர்வத்தையுமுள்

௫. அஜடமானபோது, நித்யர்க்கும் முக்தர்க்கும் ஈச்வரனுக்கும் ஜ்ஞாநத்தையொழியவும் தோற்றும்.

ளபடி யறிகையிறே. பரிச்சேத்யமாகில் பரிச்சேதித்தறிகையும், அபரிச்சேத்யமாகில் அப்படி யறிகையுமிறே! உள்ளது; ஸீமையில் லாததொன்றுக்கு ஸீமையறியாமை ஸர்வஜ்ஞதைக்கு அநுகுண மென்னுமிடம், (உ0௪) "தேவி த்வந்மஹிமாவதிர் ந ஹரிணா நாபி த்வயா ஜ்ஞாயதே யத்யப்யேவமதாபி நைவ யுவயோ: ஸர்வஜ்ஞதா ஹீயதே । யந்நாஸ்த்யேவ ததஜ்ஞதாமநுகுணாம் ஸர்வஜ்ஞதாயா விது: வ்யோமாம்போஜமிதந்தயா கில விதந் ப்ராந்தோயமித்யுச்யதே" என்று, ஸ்ரீஸ்துதியிலே ஆழ்வானருளிச்செய்தார். இங்ஙனன்றாகில், (உ0உ) 'தனக்குந் தன்றன்மை யறிவரியான்' என்கிறவிதுவும், ஸர்வஜ்ஞதையோடு விரோதிக்கும். ஆகையால், நித்யமுக்தேச்வரர்களால் அபரிச்சேத்யமென்றவிதில் குறையில்லை; இத்தால், இதினுடைய வைபவம் சொன்னபடி. (அத்யத்புதமா யிருப்பதொன்று) அத்யத்புதத்வமாவது அநுக்ஷணம் அபூர்வாச்சர்யாவஹத்வம். (உ0௫) "[illegible]" என்றாரிறே! பாஷ்யகாரர். ஆக, சுத்தஸத்வமாவது-இப்படி யிருப்பதொன்றென்றதாயிற்று.

(௪) (இத்தைச்சிலர் ஜடமென்றார்கள், சிலர் அஜடமென்றார்கள்) அதாவது - இந்த சுத்தஸத்வந்தன்னை, இந்தர்சநஸ்தர்களிலே சிலர் ஜடமென்றுசொன்னார்கள்; அங்ஙனன்றிக்கே, சிலர் அஜடமென்றுசொன்னார்களென்கை. (உ0௪) "[illegible]" என்றிறே! அபியுக்தருஞ்சொல்லிற்று.

(௫) ஜடமாகையாவது-ஸ்வயம்ப்ரகாசமன்றிக்கே யிருக்கை; அஜடமாகையாவது-ஸ்வயம்ப்ரகாசமாயிருக்கை. அத்தை யருளிச் செய்கிறார்; (அஜடமானபோது, நித்யர்க்கும் முக்தர்க்கும் ஈச்வரனுக்கும் ஜ்ஞாநத்தை யொழியவுந்தோற்றும்) என்று. அஜடமானபோதென்றது-ஜடமென்றும் ஒருபக்ஷஞ் சொல்லுகையாலே, அப்படி யன்றிக்கே யிப்படியானபோதென்றபடி. அந்தப்பக்ஷத்தை விட்டு இத்தை யுபபாதிக்கையாலே இவர் தமக்கு இதுவே இஷ்

வுள்ளமென்று தோற்றுகின்றதிறே; ஜ்ஞாநத்தை யொழியவும் தோற்றுமென்றது - ஜ்ஞாநத்தாலே தன்னை யறியவேண்டாதபடித் தானே ப்ரகாசிக்குமென்றபடி.

(சு) இப்படி ஸ்வயம்ப்ரகாசமாயிருக்குமாகில், ஸம்ஸாரிகளுக்கு ஜ்ஞாநவேத்யமாக வேண்டாதே தானே தோற்றவேண்டாவோ? என்கிற சங்கையிலே யருளிச்செய்கிறார்; (ஸம்ஸாரிகளுக்குத் தோற்றாது) என்று இதுதான், அபியுக்தராலே விஸ்தரேண ப்ரதிபாதிக்கப்பட்டது. எங்ஙனே யென்னில்; "த்ரிவிதாசேதநங்கள்" என்றெடுத்து, "அவற்றில், ப்ரக்ருதியும் காலமும் ஜடங்கள்; சுத்தஸத்வமான காவ்யபதத்தையும ஜடமென்று சிலர் சொல்லுவர்கள். ஜடத்வமாவது - ஸ்வயம்ப்ரகாசமன்றிக்கே யிருக்கை. பகவச்சாஸ்த்ராதி ப்ராமாண்யம் பண்ணினவர்கள் ஜ்ஞாநாத்மகமாக ப்ராஸ்தாவிததமாகையாலே, சுத்தஸத்வத்ரவ்யத்தை ஸ்வயம்ப்ரகாசமென்பார்கள் இப்படி ஸ்வயம்ப்ரகாசமாகில், ஸம்ஸாரிகளுக்கு ப்ராஸ்தாவேத்யமாக வேண்டாதே தானே தோற்றவேண்டாவோ? என்னில்; ஸாவாகமாக்களுடையவும் ஸ்வரூபமும், தர்மபூதஜ்ஞாநமும் ஸ்வயம்ப்ரகாசமாயிருக்க, ஸ்வரூபம் தனக்கே ஸ்வயம்ப்ரகாசமாய் வேறொருவர்க்கும் ஜ்ஞாநாந்தர வேத்யமானாப்போலவும், தர்மபூதஜ்ஞாநமும் ஸ்வாஸ்ரயத்துக்கே ஸ்வயம்ப்ரகாசமாய், இதர்க்கு ஸ்வயம்ப்ரகாசமல்லாதாப்போல வும், இதுவும் நியதவிஷயமாக ஸ்வயம்ப்ரகாசமானால் விரோத மில்லை. (௨௦ரு) "யோவேத்தி யுகபத்ஸர்வம் ப்ரத்யக்ஷேண ஸதா ஸ்வத: । தம் ப்ரணம்ய ஹரிம் ஸாஸ்த்ரம் ந்யாயதத்வம் ப்ரசக்ஷ்மஹே" என்கிறபடியே, தர்மபூதஜ்ஞாநத்தாலே ஸர்வத்தையும் ௨
ஸாக்ஷாத்கரித்துக்கொண்டிருக்கிற ஈஸ்வரனுக்கு சுத்தஸத்வத்ரவ்யம் ஸ்வயம்ப்ரகாசமாயிருக்கிறபடி யெங்ஙனே? என்னில்; இவனுடைய தர்மபூதஜ்ஞாநம், இவ்யாத்மஸ்வரூபம் முதலாக ஸர்வத்தையும் விஷயீகரியாநிற்க, இவ்யாத்மஸ்வரூபம் - ஸ்வயம்ப்ரகாசமாயிருக் கிறாப்போலே இதுவும் ஸ்வயம்ப்ரகாசமாயிருக்கலாம். இப்படி யிருக்கும் துல்யம். விஷயப்ரகாசநகாலத்திலே தர்மபூதஜ்ஞாநமும்

எ. ஆத்மாவிலும் ஜ்ஞாநத்திலும் பிந்நமானபடி யேன்? என்னில்;

அ. நானென்று தோற்றாமையாலும், ஶரீரங்களாய்ப் பரிணமிக்கையாலும், விஷயங்களையொழியவுந் தானே தோற்றுகையாலும், ஶப்தஸ்பர்ஶாதிகளுண்டாகையாலும் பிந்நமாகக்கடவது.

ஸ்வாஶ்ரயமாத்ரத்துக்கே ஸ்வயம்ப்ரகாஶமானாப்போலே முக்தர்க்குமவ்வவஸ்தையிலே இது ஸ்வயம்ப்ரகாஶமானால் விரோதமில்லை. தர்மபூதஜ்ஞாநத்தினுடையஸ்வாத்மப்ரகாஶநஶக்தியானது விஷயப்ரகாஶநமில்லாதகாலத்தில் கர்மவிஶேஷங்களாலே ப்ரதிபத்தையானாப்போலே, ஶுத்தஸத்வத்தினுடைய ஸ்வாத்மப்ரகாஶநஶக்தியும் பத்ததசையில் ப்ரதிபத்தையாகையாலே, ஶுத்தஸத்வம் பத்தர்க்கு ப்ரகாஶியாதொழிகின்றது. (உ0கூ) [illegible] இவ்வளவு அவஸ்தாநதாபத்தி, விகாரித்ரவ்யத்துக்கு விருத்தமன்று. ஆகையால, ப்ரமாணப்ரதிபந்நார்த்தத்துக்கு யுக்திவிரோதஞ்சொல்ல வழியில்லை." என்று இப்படி, ரஹஸ்யத்ரயஸாரத்திலே ப்ரதிபாதிக்கையாலே.

(எ) கீழ், ஆத்மாவும அஜடமாய் ஜ்ஞாநமும் அஜடமாயிருக்கச்செய்தே, அந்யோந்யம் பிந்நமெனுமித்தை தர்ஶிப்பித்தாப்போலே ஶுத்தஸத்வமும் அஜடமாயிருக்கச்செய்தே, இவையிரண்டிலும் பிந்நமாயிருக்கும்படியை தர்ஶிப்பிக்கைக்காக, தஜ்ஜிஜ்ஞாஸா ப்ரஶ்நத்தை யநுவதிக்கிறார்; (ஆத்மாவிலும் ஜ்ஞாநத்திலும் பிந்நமானபடி யென்? என்னில்) என்று.

(அ) அநேகஹேதுக்களாலே யது தன்னை தர்ஶிப்பிக்கிறார்; (நானென்று தோற்றாமையாலும) என்று தொடங்கி; அதாவது - ஆத்மவஸ்து ப்ரத்யக்காகையாலே அஹமென்று ப்ரகாஶியாநிற்கும்; இது பராக்காகையாலே இதமென்றிறே! ப்ரகாஶிப்பது. இத்தாலே ஆத்மாவில் பிந்நமென்றபடி. ஶரீராதிகளாய்ப் பரிணமிக்கையாலே, ஆத்மாவிலும ஜ்ஞாநத்திலும் இரண்டிலும் பிந்நமென்றபடி ஏகரூபனாகையாலே, ஆத்மாவுக்குப் பரிணாமமில்,

க. மிஶ்ரஸத்வமாவது-ஸத்வ ரஜஸ் தமஸ்ஸுக்கள் மூன்றோடுங்கூடி பத்தசேதநருடைய ஜ்ஞாநாநந்தங்களுக்கு திரோதாயகமாய், விபரீதஜ்ஞாநஜநகமாய், நித்யமாய். ஈஶ்வரனுக்கு க்ரீடாபரிகரமாய், ப்ரதேஶபேதத்தாலும் காலபேதத்தாலும் ஸத்ருஶமாயும் விஸத்ருஶமாயு மிருக்கும் விகாரங்களை யுண்டாக்கக்கடவதாய், ப்ரக்ருதி, அவித்யை, மாயையென்கிற பேர்களை யுடைத்தா யிருக்கும் அசித்விஶேஷம்.

லையிறே;ஜ்ஞாநத்துக்குப் பரிணாமமுண்டேயாகிலும் ஶரீராதிகளாய் பரிணமியாதிறே. விஷயநிரபேக்ஷமாக ப்ரகாஶிக்கையாலும், ஶப்தஸ்பர்ஶாதிகளுக்கு ஆஶ்ரயமாகையாலும்,விஷயஸந்நிதியிலொழிய ப்ரகாஶிப்பதுஞ்செய்யாதே ஶப்தாத்யாஶ்ரயமன்றிக்கே தத்ஜ்ஞாநகமாயிருக்கிற ஜ்ஞாநத்தில் பிந்நமென்றபடி.

(கூ) ஆகவிப்படி, சுத்தஸத்வத்தினுடைய ப்ரகாரத்தை யருளிச்செய்தாராய் நின்றார்கீழ்; அநந்தரம். மிஶ்ரஸத்வப்ரகாரத்தை யருளிச்செய்வதாக (மிஶ்ரஸத்வமாவது) என்று தொடங்குகிறார்; மிஶ்ரஸத்வமாவது- ரஜஸ்தமஸ்ஸுக்களோடே கூடின ஸத்வகுணத்தை யுடைத்தானது. அத்தை யருளிச்செய்கிறார்; (ஸத்வரஜஸ் தமஸ்ஸுக்கள் மூன்றோடுங்கூடி) என்று. (உ0எ) "[illegible]" என்று (உ0அ) "[illegible]" (உகக) "[illegible]" என்னக்கடவதிறே.(பத்தசேதநருடைய ஜ்ஞாநாநந்தங்களுக்குதிரோதாயகமாய்) அதாவது - குணத்ரயாத்மகமா யிருக்கையாலே ரஜஸ்தமோம்ஶத்தாலே ஜ்ஞாநாதிகளுக்கு திரோதாநத்தைப் பண்ணு மென்கை. சேதநருடைய ஜ்ஞாநாநந்தங்களுக்கு திரோதாயகமா யென்று ஸாமாந்யேந சொல்லாதே, "பத்தசேதநருடைய" என்று விஶேஷிக்கையாலே,கர்மஸம்ஸ்ருஷ்டரானசேதநருடைய ஜ்ஞாநாதிகளுக்கே அது திரோதாயக மென்றபடி. அல்லது, ஐச்சிகமாக ப்ராக்ருத ஶரீரபரிக்ரஹம்பண்ணுகிற நித்யமுக்தருடைய ஜ்ஞாநாதிகளுக்கும் இது ஸங்கோசத்தைப் பண்ணவேண்டிவருமிறே. ஆகையாலே,

(சச) இதினுடைய ப்ரகாரம் ஏது? என்னுமாகாங்க்ஷையிலே சொல்லப்படுகிறது மேல்; (இது, ப்ரக்ருதிப்ராக்ருதங்களினுடைய பரிணாமங்களுக்கு ஹேதுவாய்) ப்ரக்ருதியென்கிறது - அவ்யக்தத்தை; ப்ராக்ருதமென்கிறது - வ்யக்தத்தை; ப்ரக்ருதி ப்ராக்ருதங்களினுடைய பரிணாமங்களுக்கு காலதத்வம் ஹேதுவாகையாவது - இவற்றை ஸ்வஸங்கல்பாதிகளாலே பரிணமிப்பிக்கிற ஸர்வேஶ்வரன், காலத்தினுடைய அவஸ்தாவிஶேஷங்களைப் பார்த்துக்கொண்டிருந்து, அவ்வவகாலங்கள் வந்தவாறே யிவற்றை நிர்வஹிக்கையாலே, இவற்றினுடைய பரிணாமங்களுக்கு இது அவஶ்யாபேக்ஷிதமாயிருக்கை; (௧௨௦) "ப்ரக்ருதிம் புருஷஞ்சைவ ப்ரவிஶ்யாத்மேச்சயா ஹரி: । க்ஷோபயாமாஸ ஸம்ப்ராப்தே ஸர்க்ககாலே வ்யயாவ்யயௌ" (௧௨௧) "காலேஸம்ஹதி யோக்யதாம் விதிவிதோ நைநா நைஶோஜ்ஜூதோ ஸந்தோதாஹ்ருதி பஞ்சவிம்ஶகாணீ ஸ்வாங்கப்ரவ்ருத்தநியே । அண்ணாநாவர ணைஸஹஸ்ரைகோரக:" என்கிறபடியே, ஜகத்ஸ்ருஷ்டி பண்ணுகிறபோது, அக்காலம் வருமளவும் பார்த்துக்கொண்டிருந்திறே ஸ்ருஷ்டித்தது. இதுதான் ஸ்திதியாதிகளுக்கு மொக்குமிறே. இப்படி, காலப்ரதாநமாக ஸர்வேஶ்வரன் நிர்வஹிக்கருளுகை யாலே, இவ்விபூதியில் ஸகலபதார்த்தமும் காலக்ருத பரிணாமமாயிருக்கும். இவற்றினுடைய பரிணாமங்களுக்கு காலம் ஹேதுவென்னுமிடம், இதினுடைய அந்வயவ்யதிரேகங்களாலே, லௌகிகபதார்த்தங்களிலே காணலாமிறே. ஆகையால், காலத்தினுடைய ப்ரக்ருதிப்ராக்ருத பரிணாமஹேதுத்வம், ஆகமத்தாலும். ப்ரத்ய

ஷத்தாலும் ஸித்தம். அநந்தரம், கீழ்ச்சொன்னத்துக்கு உபயோகியான விதின் பரிணாமவிஶேஷத்தைச் சொல்லுகிறது; (கலாகாஷ்டாதிரூபேண பரிணமிக்கக்கடவதாய்) (நூஉஉ) “காஷ்டா பஞ்சதஶாக்யாதா நிமேஷா முநிஸத்தம । காஷ்டாத்ரிம்ஶத் கலா த்ரிம்ஶத் கலா மௌஹூர்த்திகோ விதி: । தாவத்ஸங்க்யைரஹோராத்ரம் முஹூர்த்தைர் மாநுஷம் ஸ்ம்ருதம் । அஹோராத்ராணி தாவந்தி மாஸ: பக்ஷத்வயாத்மக: । தைஷ்ஷட்பிரயநம் வர்ஷம் த்வேயநே தக்ஷிணோத்தரே । அயநம் தக்ஷிணம் ராத்ரிர் தேவாநாமுத்தரம் திநம் । திவ்யைர்வர்ஷஸஹஸ்ரைஸ்து க்ருதத்ரேதாதிஸம்ஜ்ஞிதம் । சதுர்யுகம் த்வாதஶபிஸ் தத்விபாகம் நிபோத மே । சத்வாரி த்ரீணி த்வே சைகம் க்ருதாதிஷு யதாக்ரமம் । திவ்யாப்தாநாம் ஸஹஸ்ராணி யுகேஷ்வாஹு: புராவித: । தத்ப்ரமாணை: ஶதை: ஸந்த்யா பூர்வா தத்ராபிதீயதே । ஸந்த்யாம்ஶகஶ்ச தத்துல்யோ யுகஸ்யாநந்தரோ ஹி ஸ: । ஸந்த்யாஸந்த்யாம்ஶயோரந்தர்யஃ காலோ முநிஸத்தம । யுகாக்யஸ் ஸ து விஜ்ஞேய: க்ருதத்ரேதாதிஸம்ஜ்ஞித:” என்று தொடங்கி, “நிஜேந தஸ்ய மாநேந ஆயுர்வர்ஷஶதம் ஸ்ம்ருதம் । தத்பராக்யம் தததர்த்தம் பரார்த்தமபிதீயதே” என்னுமளவாக, காலத்தினுடைய பரிணாமவிஶேஷம், ஸ்ரீபராஶரபகவானாலே கதிதமாயிற்று. இதுதன்னை, நம்பிள்ளை திருவீதிப்பிள்ளைபட்டர், “நிமேஷம் பதினைந்துகொண்டது காஷ்டை, காஷ்டை முப்பதுகொண்டது கலை, கலை முப்பதுகொண்டது முஹூர்த்தம், முஹூர்த்தம் முப்பதுகொண்டது திவஸம், திவஸம் முப்பதுகொண்டது பக்ஷத்வயரூபமான மாஸம், மாஸமிரண்டுகொண்டது ருது, ருதுமூன்றுகொண்டது அயநம், அயநமிரண்டுகொண்டது ஸம்வத்ஸரம். இப்படி, மாநுஷஸம்வத்ஸரம் முந்நூற்றறுபதுகொண்டது ஒரு தேவஸம்வத்ஸரம், தேவஸம்வத்ஸரம் பன்னீராயிரங்கொண்டது சதுர்யுகம். அதில், க்ருதயுகம் நாலாயிரம், த்ரேதை மூவாயிரம். த்வாபரம் இரண்டாயிரம், கலியுகம் ஆயிரம். க்ருதயுகத்துக்கு பூர்வஸந்த்யை நானூறு, அபரஸந்த்யை நானூறு; த்ரேதைக்கு பூர்வஸந்த்யை முந்நூறு, அபர

ஸந்த்யை மூன்னூறு; த்வாபரத்துக்கு பூர்வஸந்த்யை யிருநூறு, அபரஸந்த்யை யிருநூறு; கலியுகத்துக்கு பூர்வஸந்த்யை நூறு, அபரஸந்த்யை நூறு. இப்படி எழுபத்தொன்று சென்ற சதுர்யுகம் ஒரு மந்வந்தரம்; இப்படி பதினாலுமந்வந்தரம ஆயிரம் சதுர்யுகம். இது ப்ரஹ்மாவுக்கு ஒருபகல்; ராத்ரியும் இத்தோடே ஸமமா யிருக்கும். இப்படி அஹோராத்ரங்களும், மாஸஸம்வத்ஸரங்களு மாகப் பெருக்கி, ஶதாந்தமாக பரிகணிதமான ப்ரஹ்மாயுஸ்ஸுக்கு பரமென்று பேராம்.” என்று ஸுவ்யக்தமாக வருளிச்செய்தார். ஆக, காலத்தினுடைய கலாகாஷ்டாதிரூப பரிணாமப்ரகாரம் சொல்லப்பட்டது. (நித்யமாய்) இவ்விடத்தில் நித்யத்வமாவது - (௧௨௩) “𑌅𑌨𑌾𑌦𑌿𑌰𑍍𑌭𑌗𑌵𑌾𑌨𑍍 𑌕𑌾𑌲𑍋 𑌨𑌾𑌨𑍍𑌤𑍋𑌽𑌸𑍍𑌯 𑌦𑍍𑌵𑌿𑌜 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇” என்கிறபடியே ஆத்யந்தரஹிதமாகை.

(ஈஶ்வரனுக்கு க்ரீடாபரிகரமாய்) அதாவது - நிகிலஜகது தயவிபவலயலீலனான ஸர்வேஶ்வரனுக்கு தத்தல்லீலோபகரண மாகை. ப்ரக்ருதி புருஷகாலங்கள் மூன்றும் லீலோபகரணமா யிறே இருப்பது. அதில், ப்ரக்ருதிபுருஷர்கள் ஸ்ருஷ்ட்யாதி களுக்கு கர்மீபவித்து லீலோபகரணமாவர்கள்; இது, ஸஹகாரித் வேந லீலோபகரணமாயிருக்கும்; ஈஶ்வரன் ஸ்ருஷ்ட்யாதிகளை நிர் வஹிக்குமிடத்தில் ஸத்யஸங்கல்பனான தான் அடியிலபண்ணி வைத்த காலநியமம் தப்பாதபடி அவ்வவகாலாகமநம பார்த் திருந்தே நிர்வஹிக்கையாலே. இது தன்னை நிமேஷகாஷ்டாதி ரூபேண பரிணமிப்பிக்கையாலே, இது தான் ஸ்ருஷ்டிவிஷயமுமா யிறே இருப்பது. ஆக இப்படிகளாலே ஈஶ்வரனுக்கு க்ரீடாபரி கரமா யிருக்கும். இத்தை க்ரீடாபரிகரமென்றே சொல்லுகையாலே காலக்ருதபரிணாமமேயாய்ச் செல்லுகிறலீலாவிபூதியிலே யிதுக்கு விநியோகம. (௧௨௪) “𑌨 𑌕𑌾𑌲𑌸𑍍𑌤𑌤𑍍𑌰 𑌵𑍈 𑌪𑍍𑌰𑌭𑍁𑌃” என்கிறபோக விபூதியில் இதுகொண்டு அபேக்ஷையில்லை யென்றதாயிற்று. அநந் தரம், ஏவம்பூதமான காலதத்வம்-ஈஶ்வரனுக்கு அப்ருதக்ஸித்த விஶேஷணமா யிருக்கும்படியை யருளிச்செய்கிறார், (ஶரீரபூதமா யிருக்கும்) என்று. (௧௨௫) “𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌂 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌸𑍍𑌤𑌥𑌾𑌽𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑌃 𑌕𑌾𑌲 𑌏𑌵 𑌚 । 𑌕𑍍𑌰𑍀𑌡𑌤𑍋 𑌬𑌾𑌲𑌕𑌸𑍍𑌯𑍇𑌵 𑌚𑍇𑌷𑍍𑌟𑌾𑌂 𑌤𑌸𑍍𑌯 𑌨𑌿𑌶𑌾𑌮𑌯” (௧௨௬) “𑌪𑍍𑌰𑌧𑌾𑌨𑌪𑍁𑌰𑍁𑌷𑌵𑍍𑌯𑌕𑍍𑌤

௯௫. மற்றை யிரண்டசித்தும், ஈஶ்வரனுக்கும் ஆத்மாவுக்கும் போக்ய போகோபகரண போகஸ்தாநங்களாயிருக்கும்

காலஸ்வரூபவிஹாரஸ: । ப்ரதாநபுருஷவ்யக்திஸ்வரூபாணாம் வ்யக்திஸ்ரூபவஹேதவ:''(க-உ-எ) "விஷ்ணோ ஸ்வரூபாத் பரதோதிதே த்வே ரூபே ப்ரதாநம் புருஷஶ்ச விப்ர । தஸ்யைவ தேந்யேந த்ருதே வியுக்தே ரூபாந்தரம் தத்த்விஜ காலஸம்ஜ்ஞம்''

என்னக்கடவதிறே, ஒருசேதநனோடு ஒருத்ரவ்யத்துக்குண்டான ப்ருதக்ஸித்த்யநர்ஹாதாராதேயபாவமும், நியந்த்ருநியாம்ய பாவமும், ஶேஷஶேஷி பாவமும் ஒரொன்றே ஶரீரலக்ஷணமாயிறே இருப்பது; காலஸம்ஜ்ஞிகாசித்த்ரவ்யத்துக்கு எதத் ஸம்பந்தத்ரயமும் ஈஶ்வரனோடே யுண்டாகையாலே, இது அவனுக்கு ஶரீரமாயிருக்குமென்றதாயிற்று. இப்படி, ப்ரக்ருத்யாதி பரிணாம ஸஹகாரியான காலம் - ஈஶ்வரனுக்கு ஶரீரமாயிருக்குமென்கை யாலே ஸஹகாரிகாரணமும் ஈஶ்வரனேயென்னுமதுக்கு விரோத மில்லை. ஆக, ஸத்வஶூந்யமாகிறது இன்னதென்றும், அது செய்யும் கார்யமும், அதுக்குறுப்பான வதினுடைய பரிணாமமும், அதினுடைய அநாதிநிதநத்வமும், அதுதான் ஈஶ்வரனுக்கு இன்னதுக்குப் பரிகரமாயிருக்குமென்றும், அதுதான் அவனுக்கு ஶரீரமா யிருக்குமென்றும் சொல்லிநின்றது.

(௯௫) த்ரிவிதாசித்தையும் அருளிச்செய்கிறவிடத்தில, அவனுக்கு போகோபகரணமான கௌரவத்தைப்பற்ற ஶுத்தஸத்வத்தை ப்ரதமமருளிச்செய்தார்; அநந்தரம, அவனுடையலீலைக்கு ப்ரதாநோபகரணமாய்க்கொண்டு ப்ரதாநஶப்தவாச்யமான மிஶ்ர ஸத்வத்தை யருளிச்செய்தார்; அநந்தரம, அந்த ப்ரதாநபரிணாமத்துக்கு ஸஹகாரியாய்க்கொண்டு லீலோபகரணமா யிருக்கும் ஸத்வ ஶூந்யத்தை யருளிச்செய்தார். இப்படி அசித்த்ரயத்தையும சொல்லுகிறவிடத்தில, (ப்ரக்ருதி ப்ராக்ருதங்களினுடைய பரிணாமங்களுக்கு ஹேதுவாய்) என்று, காலதத்வத்துக்கு விநியோகம் சொன்னவோபாதி, பூர்வாசித் த்வயத்துக்கும் விநியோகம் சொல்லப் பட்டதில்லையிறே. அத்தை யருளிச்செய்கிறார் மேல்; (மற்றை யிரண்டு அசித்தும்) என்று தொடங்கி. ஈஶ்வரனுக்கும், ஆத்மா

௪௯. போக்யங்களாகிறன - விஷயங்கள்; போகோபகரணங்களாகிறன - சக்ஷுராதிகரணங்கள்; போகஸ்தாநங்களாகிறன-சதுர்த்தஶபுவநமும், ஸமஸ்ததேஹமும்.

வுக்கும் என்றது - சேதநரிறே அசேதநத்துக்கு போக்தாக்கள், சேதநராகவுள்ளது ஈஶ்வரனும் ஆத்மாவுமிறே; ஆனபின்பு, உபயர்க்கும் போக்யாதிகளாயிருக்குமென்றபடி. 'ஆத்மாவுக்கு' என்ற ஏகவசநம் ஜாத்யபிப்ராயமாகையாலே த்ரிவிதசேதநரையும்சொல்லுகிறது. இப்படி, உபயாசித்தும் உபயர்க்கும் போக்யாதிகளாயிருந்ததேயாகிலும் கேவல பகவதிச்சையாலே தத்போகார்த்தமாக ப்பரிணமிக்கையாலும் அநவாதாபரோக்ஷித ஸ்வ பர ஸ்வரூபரான நித்யமுக்தரில், (௲௨௭) 'திருமகளும் நீயும்' என்கிறபடியே, அம்மிதுநத்தினுடைய போகத்துக்குக் கைதொடுமானமா யிருக்குமதொழிய (௲௨௮) "ஸுஹம்88" என்றிருப்பா ரில்லாமையாலும், ஶுத்தஸத்வத்தினுடைய விநியோகம் ஈஶ்வரப்ராதாநமாயிருக்கும். அங்ஙனன்றிக்கே, சேதநகர்மாநுகுணமாக பகவத்ஸங்கல்பத்தாலே பரிணமிக்கையாலும், சேதநரெல்லாரும் தேவாதிஶரீரங்களிலே அஹம்புத்தியைப்பண்ணி ஸ்வதந்த்ரபோக்தாக்களா யிருக்கையாலும், ஈஶ்வரனுக்கு இந்தவிபூதியில் லீலாரஸமே ப்ரசுரமாய் போகரஸம் அத்யல்பமாகையாலும் மிஶ்ரஸத்வத்தினுடைய விநியோகம் பத்தசேதநப்ரதாநமா யிருக்கும்.

(௪௯) அந்த விபூதியில் போக்யங்களாவன - அப்ராக்ருதமான ஶப்தாதிகள். போகோபகரணங்களாவன - திவ்யமால்யாதிகளும், சத்ரசாமராதிகளும், கரணங்கள் தானும். போகஸ்தாநங்களாவன- அப்ராக்ருத ரத்நமயமான மண்டபமென்ன மாளிகையென்ன இத்யாதிகளும். பஞ்சோபநிஷண்மயமான திவ்யவிக்ரஹங்களும். இப்படி, நித்யவிபூதி ப்ரக்ரியையும் இவ்விடத்திலே யருளிச்செய்ய வேண்டியிருக்க, ஸங்கோசித்து லீலாவிபூதி ப்ரக்ரியாமாத்ரத்தை யருளிச்செய்கிறார்; (போக்யங்களாகிறன) என்றுதொடங்கி இது தானே உபயவிபூதிக்குமாகாதோ? என்னில்; போகோபகரணங்களில் ப்ரதாநங்கள் சொல்லாமையாலும், போகஸ்தாநங்களில் வைஷம்யத்தாலும் சேராது. இங்கு, சேதநர்க்கு போகமாவது - ஸுகது:கரூபமான அநுபவஜ்ஞாநம். அந்தஜ்ஞாநத்துக்கு விஷய

௪௭ இதில், முற்பட்டவசித்துக்குக் கீழெல்லையுண்டாய், சுற்றும் மேலுமெல்லையின்றிக்கே யிருக்கும்; நடுவிலசித்துக்குச் சுற்றுங்கீழுமெல்லையின்றிக்கே, மேலெல்லையுண்டாயிருக்கும், கால மெங்குமொக்க வுண்டாயிருக்கும்.

காலந்தான் - பரமபதத்தில் நித்யம், இங்கு அநித்யமென்றுஞ் சொல்லுவர்கள்.

[illegible], ஶப்தாதிவிஷயங்கள் போக்யங்கள். அந்த ஜ்ஞாநத்துக்கு உபகரணங்களாகையாலே, இந்த்ரியங்கள் போகோபகரணங்கள். யாதொரு அதிகரணத்திலே நிற்கிற சேதநனுக்கு அந்தஜ்ஞாநம் பிறக்கிறது, அது போகஸ்த்தாநஶப்தத்துக்கு அர்த்தமாகையாலே போகஸ்த்தாநங்களென்று லோகங்களையும், தேஹங்களையும் சொல்லுகிறது. லோகவிபாகம் கீழே சொல்லப்பட்டது. ஸமஸ்த தேஹங்களாவன - ஸுரநரதிர்யக் ஸ்த்தாவராத்மகமான ஶரீரங்கள். ஈஶ்வரனுக்கு இந்தவிபூதியிலுண்டான போக்ய போகோபகரணாதிகளையும், அவதாரகந்தமான க்ஷீரார்ணவ ஶயநத்திலும் அவதாரவிஶேஷங்களிலும், அர்ச்சாவதாரங்களிலுமுண்டான விநியோகவிஶேஷங்களாலே கண்டுகொள்வது

௪௭. அநந்தரம், த்ரிவித அசித்தினுடையவும் பரிணாமங்களை யருளிச்செய்கிறார்; (இதில் முற்பட்ட அசித்துக்கு) என்று தொடங்கி. பூர்வாசித்துக்குக் கீழெல்லையுண்டு என்கிறது - மிஶ்ரஸத்வாவதியாகையாலே. நடுவில் அசித்துக்கு மேலெல்லை யுண்டென்கிறது - ஶுத்தஸத்வாவதியாகையாலே; காலத்துக்கு அங்ஙனொரு அவச்சேதமில்லாமையாலே எங்குமொக்க வுண்டாயிருக்கும் என்கிறது. இப்படி, ஸார்வத்ரிகையான காலந்தான் உபயவிபூதியிலும் நித்யமென்றிறே தமக்குத் திருவுள்ளம்.

(௪௮) இங்ஙனன்றிக்கே, இதுக்குவிபூதி விபாகத்தையிட்டு ஒருபேதம் சொல்லுவாருமுண்டென்கிறார்; (காலந்தான்-பரமபதத்தில் நித்யம், இங்கு அநித்யம் என்றும் சொல்லுவர்கள்) என்று. இப்படி சொல்லுகைக்கடி-பரமபதத்தில் இதுக்கு உத்பத்யாதிகளுண்டாக ஶாஸ்த்ரங்கள் சொல்லாமையாலும், இந்த விபூதியிலே

௪௧. சிலர் காலத்தை யில்லையென்றார்கள்.

இதுக்கு உத்பத்யாதிகளைச் சொல்லுகையாலும், வ்யூஹக்ருத்யங்களைச் சொல்லுமிடத்திலே கால ஸ்ருஷ்டியை அநிருத்த க்ருத்யமாகச் சொல்லாநின்றதிறே. ப்ரக்ருதியை ஸ்ருஷ்டிக்கையாவது - மஹதாதிரூபேண பரிணமிப்பிக்கையானாப்போலே; காலத்தை ஸ்ருஷ்டிக்கையாவது - நிமேஷகாஷ்டாரூபேண பரிணமிப்பிக்கை; ஸததபரிணாமியான ப்ரக்ருதிக்கு மஹதாதிரூபமான ஸ்தூல பரிணாமம்போலேயிறே ஸததபரிணாமியான இதுக்கும் நிமேஷாதிரூபேண பரிணாமம். அந்த மஹதாதியோபாதி நிமேஷாதியான இதுவும் உத்பத்திவிநாசவத்தாகையாலே இவ்வளவைக்கொண்டு காலம் இங்கு அநித்யமாயிருக்கும் என்கிறது; பரமபதத்தில் ஈத்ருச பரிணாமவிசேஷ ப்ரயுக்தோத்பத்த்யாதி வ்யவஹாரராஹித்யத்தாலே நித்யமாயிருக்கும் என்கிறது. இப்படி, காலத்துக்கு பரிணாமங்கொள்ளாதே ஏகரூபத்வத்தைக்கொண்டு, இப்படியிருந்துள்ள காலந்தான், தன்னுடைய நிமேஷம், காஷ்டை, முஹூர்த்தம், அஹோராத்ரம் தொடக்கமாக பரார்த்தமீறாகவுண்டான விசேஷ வ்யவஹாரத்துக்கு ஹேதுவான நிமேஷோந்மேஷங்கள், ஆதித்யகதி தொடக்கமான அவச்சேதகங்களோடே ஸம்பந்தித்திருக்கும். ஆகையாலே, க்ஷணலவாதிபேத வ்யவஹாரமுண்டாகிறதென்று சொல்லுவதும் ஒருபக்ஷமுண்டிறே. இதுவிறே! தத்வத்ரயவிவரணத்தில் ஆச்சான்பிள்ளை ப்ராதாந்யேந வருளிச்செய்தது; அந்தப்பக்ஷத்தில் உபயவிபூதியிலும் காலஸ்வரூபம் ஏகரூபமாயிருக்குமாகையாலே பரமபதத்தில் நித்யம், இங்கு அநித்யமென்கிறவிது சொல்லப்போகாது. ஆகையால், இது பரிணாமபக்ஷத்தை யவலம்பித்து சிலர் சொன்னதென்று கொள்ளவேணும், நம்முடைய தர்சநஸ்தர்தங்களிலே யிங்ஙனேயும் சிலரருளிச்செய்கையாலே, அத்தையும் தர்சிப்பித்தருளினாராயிற்று.

(௪௧) காலந்தன்னை யில்லையென்று பௌத்தாதிகள் சொல்லுகையாலே, (சிலர் காலத்தை யில்லையென்றார்கள்) என்கிறார்.

௩௦ ப்ரத்யக்ஷத்தாலும், ஆகமத்தாலும் ஸித்திக்கையாலே அது சொல்லவொண்ணாது.

௩௧. பலரும் திக்கென்று தனியேயொரு த்ரவ்ய முண்டென்றார்கள்.

---

(௩௦) அத்தை நிராகரிக்கிறார்; (ப்ரத்யக்ஷத்தாலும்) இத்யாதியாலே. ப்ரத்யக்ஷமாவது - ஸ்தாவர ஜங்கமாத்மகமான ஸமஸ்த பதார்த்தமும காலக்ருதபரிணாமமாகவே காணப்படுகிறவிது; ஆகமமாவது - ஸ்ருத்யாதிகள். (௩௨௯) "கலாமுஹூர்த்தா: காஷ்டாஶ்சாஹோராத்ராஶ்ச ஸர்வஶ:" (௩௩௦) "ஐயஸ்ஸ்ரோயவஸ வாஸஷிகாவ்ருதம், ஸஞ்ஜஸ்ய ஸம்விஸ்ரமே ஷாவ்ருதம்" என்று காலபரிணாம விஶேஷங்களான கலை காஷ்டை முஹூர்த்த மஹோராத்ரங்கள் ருதுவிஶேஷங்களைச் சொல்லாநின்றதிறே! ஸ்ருதி; (௩௩௧) "காலஸ்வரூபம் விஷ்ணோஶ்ச யந்மயோக்தம் தவாநவ" இத்யாதியாலே ஸ்ரீவிஷ்ணுபுராணத்திலே பிதாநான் விஸ்தரேண சொல்லப்பட்டதிறே. புராணாந்தரங்களிலும், இதிஹாஸாதிகளிலும் இப்படி கண்டுகொள்வது; இதுக்கென்னவே நிர்மிதமாய், அத்யயநாதி காலநியமங்களை ப்ரதிபாதிக்கிற ஜ்யோதிஶ்ஶாஸ்த்ரத்தை வேதத்துக்கு த்ருஷ்டியாகச் சொல்லாநின்றதிறே அந்த ஶாஸ்த்ரந்தன்னில், "இந்தக்காலத்திலே இன்னதுண்டாம்" என்று சொன்னால அது ப்ரத்யக்ஷிக்கலாயிராநின்றதிறே. ஆகையால், ப்ரத்யக்ஷத்தாலும், ஆகமத்தாலும் இப்படி ஸித்திக்கையாலே காலாபாவம் சொல்லவொண்ணாதென்கை.

௩௧- வைஶேஷிகாதிகள் ப்ருதிவ்யாதிகளோபாதி திக்கென்றும் தனியே யொரு த்ரவ்யமுண்டென்று சொல்லுகையாலே, (பலரும் திக்கென்று தனியே யொருத்ரவ்ய முண்டென்றார்கள்) என்கிறார். (௩௩௨) "த்ரவ்யாணி ப்ருதிவ்யப்தேஜோ வாய்வாகாஶகாலதிகாத்மமநாம்ஸி நவைவ" என்றிறே! அவர்கள்சொல்லுவது (௩௩௩) "க்ஷமாம்போஜ்யோதிரநிலோ நப: காலதிகாத்மாந இதி ப்ராஹுர் த்ரவ்யாணி நவ தத்விதஃ" என்றானிறே வரதராஜன்.

௫௪. பலஹேதுக்களாலும், ஆகாஶாதிகளிலே அந்தர்ப்பூதமாகையாலே அதுவுஞ்சேராது.

௫௫. சிலர் ஆவரணாபாவம் ஆகாஶமென்றார்கள்.

---

(௫௪) அத்தை நிராகரிக்கிறார்; (பலஹேதுக்களாலும்) இத்யாதியாலே. அதாவது- நாலுபேர் நாலு திக்கிலும் நின்றால், நால்வர்க்கும் நடுவானப்ரதேஶம் ஒருவனுக்குக்கிழக்காய், ஒருவனுக்கு மேற்காய், ஒருவனுக்கு வடக்காய், ஒருவனுக்குத் தெற்காய்த் தோற்றா நின்றதிறே. அதுக்கடி - த்ரவ்ய மன்றிக்கே ப்ரதியோக்யநுகுணகால்பநிகமாகை. நால்வர்க்கு நடுவே யிருக்கிற ப்ருதிவ்யாதிகள் த்ரவ்யமாகையாலே இப்படி விப்ரதிபத்திவிஷயமாகிறதில்லையிறே. இனித்தான், ஆதித்யன் உதிக்கிறவிடம் கிழக்காகவும், அவன் அஸ்தமிக்கிறவிடம் மேற்காகவுமிறே கொள்ளுகிறது. அதுதான், மஹாமேருவுக்கு நாலுபார்ஶ்வத்திலும் பேதித்திறே இருப்பது. ஆகையாலேயிறே நாலுபார்ஶ்வத்திலுமுள்ளவர்களுக்கு மஹாமேரு வடக்காயிருக்கிறது. (௫௫௪) "ஸர்வேஷாமேவ வர்ஷாணாம் மேருருத்தரதஸ்ஸ்தித: । ... ஸர்வேஷாம் த்வீபவர்ஷாணாம் ... யத:" இதுதான், ஸ்ரீவிஷ்ணுபுராணத்திலே சொல்லப்பட்டது. இப்படி, பலஹேதுக்களாலும் ஆகாஶாதிகளிலே அந்தர்ப்பூதமாய், தனக்கென்னவொரு த்ரவ்யவ்யவஸ்தையில்லாமையாலே திக்கென்று ஒரு த்ரவ்ய முண்டென்கிற வதுவும் சேராதென்கை (ஆகாஶாதி) என்கிற ஆதிஶப்தத்தாலே-பூமியைச் சொல்லுகிறது. இவற்றிலே, திக்கு அந்தர்ப்பூதமாகையாவது-ஸூர்யனுடைய உதயாதிகளுக்கு ஈடாக விவற்றுக்குள்ளே திக்விபாகத்தைக் கல்பித்துக் கொள்ளுகிறதொழியப் பிறித்துக்காணலாவதொரு வஸ்துவின்றிக்கே யிருக்கை. அதுவும சேராதென்றது, முன்பேயு மொரு பக்ஷத்தை நிஷேதிக்கையாலே ஸமுச்சயம்.

(௫௫) ப்ருதிவ்யாதி சதுஷ்டயத்தோபாதி ஆகாஶத்தையும் பாவரூபபதார்த்தமாகக் கொள்ளாதே, ஆவரணாபாவரூபமாகக் கொள்ளுகிற பௌத்தமதத்தை யருளிச்செய்கிறார்; (சிலர் ஆவரணாபாவம் ஆகாஶமென்றார்கள்) என்று (௫௫௫) "ஆவ்ருயதே அநேந" என்கிற கரணவ்யுத்பத்தியாலே, ஆவரணங்களாவன -

பாவரூபேண தோற்றுகையாலே அதுவுஞ் சேராது.

வேறே சிலர் இதுதன்னை, நித்யம், நிரவயவம், விபு, அப்ரத்யக்ஷமென்றார்கள்,

பூதாதியிலே பிறக்கையாலும், அஹங்காராதிகளிலில்லாமையாலும், கண்ணுக்கு விஷயமாகையாலும் அவை நாலுஞ்சேராது.

...ர்த்தங்களான ப்ருதிவ்யாதிகளாய், அவற்றினுடைய ஆகாஶஶப்தவாச்யமல்லது, இது ஆகாஶம் என்று ...படி பாவரூபமானதொரு பதார்த்தமன்று எனகை. ...ந்தவ்யாபிவ்யாத்ருஹாவ ஶாஸ்த்ராகாஶ இதிவக்தும் என்று, இது பாஷ்யகாரர் அருளிச்செய்தது.

...) அத்தை நிராகரிக்கிறார்; (பாவரூபேண) இத்யாதி ...அதாவது-பாவரூபத்வேந அங்கீகரிக்கப்பட்ட ப்ருதிவ்யா...யாதி (௨-௨-௭) "ஆத்மஸ்ருஷ்டந் ஜகதி, ஆத்ம ஹுஸ்ய:" என்று, ஸ்ருஷ்டியாதிகளுடைய பதார்த்துக்கு தேஶமாய்க் ...டி, ஆகாஶமும் பாவரூபேணதோற்றுகையாலே, இத்தை ...பாவரூபமாகச் சொல்லுகிற வது சேராதென்கை; 'அது ...ம் என்று நிஷித்தஸமுச்சயம்; இதுதன்னை, (௨-௨-௮) "ஆகாஶே சாவிஶேஷாத்" என்கிற ஸூத்ரத்திலே, (௨-௨-௯) "ஆகாஶஞ்ச நிரோதத்ரயாந்தர்பூதம், யதஸ்ததேவாவஸ்துவாதீ ஆகாஶஸ்யாவஸ்துத்வம் ஸித்தமிதி, அவிஶேஷாத், ப்ருதிவ்யாதிவதாகாஶஸ்யாபி ஸ்ருஷ்டிவதாக்ருஷ்யம் ஜதிப்ரஸாநாதிவதபடிஶகாதம்" என்று தொடங்கி பாஷ்யகாரர் விஸ்தரேண வருளிச்செய்தார்.

(௫௫) இனி, ஆகாஶத்துக்கு நித்யத்வ நிரவயவத்வ விபுத்வ அப்ரத்யக்ஷத்வங்கள் கொள்ளுகிற நையாயிக வைஶேஷிகமதத்தை யருளிச்செய்கிறார்; (வேறேசிலர்) என்றுதொடங்கி.

(௫௬) அதுதன்னை நிராகரிக்கிறார்; (பூதாதியிலே பிறக்கையாலும்) இத்யாதியாலே. அதாவது-பூதாதி ஸம்ஜ்ஞிகமான தாமஸாஹங்காரத்திலே உத்பந்நமாகையாலும், ஒன்றிலே நின்றும் உத்

௫௭. த்வகிந்த்ரியத்தாலே தோற்றுகையாலே, வாயு அப்ரத்யக்ஷமென்கிற வதுவுஞ்சேராது.

௫௮. தேஜஸ்ஸு-பௌமாதி பேதத்தாலே பஹுவிதம்.

பந்நமானதொன்றுக்கு ஸாவயவத்வம் ஸித்தமாகையாலும் நித்யம், நிரவயவமென்கிற விரண்டுஞ் சேராது. (பூதாதியிலேபிறக்கையாலும்) என்றது, பூதந்மாத்ரத்தினுடைய ஸ்தூலாவஸ்தையாகையாலே, அதுக்கும் இதுக்குமுண்டான ஐக்யத்தைப்பற்ற. இனி, விபுவாகில ஸர்வகதமாக வேணுமிறே? ஸ்தூலமான வஹ்யகாராதிகளில் இதுக்கு வ்யாப்தியில்லாமையாலே அதுவும் சேராது. பஞ்சீகரணப்ரயுக்தமான ரூபவத்வத்தாலே கண்ணுக்கு விஷயமாகையாலே அப்ரத்யக்ஷமென்கையும் சேராது. "ஆகாசம் கறுத்துத் தோற்றுகிறது அத்தாலே" என்னாநிறேகிழ்; இது தன்னை, (௩-௪௦) "ஜ்ஞாநஶக்திநஸ்தாகாஶவாயு திவ்யதா ணாவபேக்ஷ்ய வ்யக்ஷிப்த வம்ஶீக்ஷணே ந ஸ்தி வைதூர்ய ஸ்தாக்ஷ்யக்ஷிஸ்வைவிரோயஃ" என்று, பாஷ்யகாரரும் அருளிச்செய்தார்.

(௫௭) வாயுவும் ப்ரத்யக்ஷமன்று, ஸ்பர்ஶாநுமேயமென்றிறே அவர்கள் சொல்லுவது. அத்தையும் நிராகரிக்கிறார்; (த்வகிந்த்ரியத்தாலே) என்று தொடங்கி. அதாவது-ஜ்ஞாநேந்த்ரியங்களிலே ஏதேனு மொன்றுக்கு கோசரமானபோதே ப்ரத்யக்ஷத்வம் ஸித்தமாகையாலே, த்வகிந்த்ரியத்தாலே தோற்றுகிறவாயுவை அப்ரத்யக்ஷமென்ன வொண்ணாதென்கை.

(௫௮) இனி, பரஸ்பர விலக்ஷணஸ்வபாவங்களான பூதவிஶேஷங்களில் ஜ்ஞாதவ்யாம்ஶங்களை யருளிச்செய்கிறார்; (தேஜஸ்ஸு - பௌமாதிபேதத்தாலே பஹுவிதம்) அதாவது - பௌமம், திவ்யம், ஔதர்யம், ஆகரஜமென்கிற பேதத்தாலே அநேகவிதமாயிருக்குமென்கை. பார்த்திவமாத்ரேந்தநமான தேஜஸ்ஸு - பௌமம், அதாவது - தீபாதி. ஜலமாத்ரேந்தநமான தேஜஸ்ஸு - திவ்யம், அதாவது - ஆதித்யாதி; பார்த்திவஜலேந்தநமான தேஜஸ்ஸு - ஔதர்யம், அதாவது - ஜாடராக்நி; நிரிந்தநமான தேஜஸ்ஸு

௫௯ அதில் ஆதித்யாதி தேஜஸ்ஸு-ஸ்த்திரம்; தீபாதிதேஜஸ்ஸு அஸ்த்திரம்.

௬௦. தேஜஸ்ஸுக்கு நிறம் சிவப்பு; ஸ்பர்ஶமௌஷ்ண்யம்.

௬௧ ஜலத்துக்குநிறம்வெளுப்பு; ஸ்பர்ஶம் ஶைத்யம்; ரஸம் மாதுர்யம்.

௬௨. பூமிக்கு நிறமும் ரஸமும் பஹுவிதம்.

௬௩. ஸ்பர்ஶம் இதுக்கும் வாயுவுக்கு மநுஷ்ணாஶீதம்.

ஆசாரஜம், அதாவது-ஸுவர்ணாதி.

(௫௯) இதில், ஸ்திராஸ்த்திர விபாகம் பண்ணுகிறார்; (அதில் ஆதித்யாதி) என்றுதொடங்கி. சிரகாலவர்த்தித்வத்தாலே ஆதித்யாதி தேஜஸ்ஸு ஸ்திரமென்கிறது; க்ஷிப்ரவிநாஶித்வத்தாலே தீபாதிதேஜஸ்ஸு அஸ்த்திரமென்கிறது.

(௬௦) (தேஜஸ்ஸுக்கு நிறம் சிவப்பு) இத்தாலே-தேஜஃ பதார்த்தங்களில் வர்ணபேதம் பதார்த்தாந்தர ஸம்ஸர்க்கக்ருதமென்கை. (ஸ்பர்ஶமௌஷ்ண்யம்) இத்தால், உஷ்ணஸ்பர்ஶம், ஶீதஸ்பர்ஶம், அநுஷ்ணாஶீதஸ்பர்ஶமென்கிற த்ரிவிதஸ்பர்ஶத்திலும் இதுக்கு ஸ்பர்ஶம் ஔஷ்ண்யமென்கை. இதுதான், தேஜஃ பதார்த்தங்களான ஸுவர்ணாதிகளில் (ப)பலவத்ஸஜாதீயத்ரவ்யங்களாலே அபிபூதமாகையாலே தோன்றாது.

(௬௧) (ஜலத்துக்கு நிறம் வெளுப்பு) இதுக்கு ஸ்வாபாவிக வர்ணமிது. வர்ணபேதம் வந்தவிடம் ஔபாதிகம். (ஸ்பர்ஶம்ஶைத்யம்) இத்தால், த்ரிவிதஸ்பர்ஶத்திலும் ஶைத்யம் இதுக்குள்ளதென்கை. ஆகையால், இதுக்கு ஸ்பர்ஶபேதமுண்டாகிறதும் அந்யஸம்ஸர்க்கத்தாலே. (ரஸம்மாதுர்யம்) இத்தால்-இதுக்கு ஸ்வாபாவிகரஸமிது, ரஸாந்தராபத்தி ஸம்ஸர்க்கஜமென்கை.

(௬௨) (பூமிக்கு நிறமும், ரஸமும் பஹுவிதம்) அதாவது-லோகத்தில் காணப்படுகிற நாநாவித வர்ணரஸங்களுக்கெல்லாம் உத்பத்தி ஸ்தாநமிதுவென்கை.

(௬௩) (ஸ்பர்ஶம் இதுக்கும், வாயுவுக்கும் அநுஷ்ணாஶீதம்) அதாவது-த்ரிவிதஸ்பர்ஶத்திலும் வைத்துக்கொண்டு, இவற்றுக்கு

௬௮. இப்படி, அசித்து மூன்றுபடிப்பட்டிருக்கும்.

ஸ்பர்ஶம் இதுவென்னை. ஆகையால், இவற்றிலும் காதாசித்கமாகக் காணப்படுகிற ஸ்பர்ஶபேதமும் ஔபாதிகம்.

(௬௮) (இப்படி, அசித்து மூன்றுபடிப்பட்டிருக்கும்) இப்படி யென்று-ஸிம்ஹாவலோகந ந்யாயத்தாலே, முன்பு அருளிச்செய்தவற்றையெல்லாம் கடாக்ஷித்து அநுபாஷித்துக்கொண்டு, அசித்தத்த்வோபந்யாஸத்தை நிகமிக்கிறாராயிற்று.

ஆக ப்ரதமத்திலே, "அசித்து-ஜ்ஞாநஶூந்யமாய், விகாராஸ்பதமாயிருக்கும்" என்று, அசித்தினுடைய லக்ஷணத்தைச்சொல்லி, அநந்தரம், அதுதான் ஶுத்தஸத்த்வாதிபேதேந த்ரிவிதமாயிருக்கும்படி சொல்லி; உத்தேஶக்ரமத்திலே ப்ரதமம் ஶுத்தஸத்த்வமாகிற அசித்தினுடைய ப்ரகாரத்தைச்சொல்லி, தத்அநந்தரம், மிஶ்ரஸத்த்வமாகிற அசித்விஶேஷம் இன்னதென்றும், அதுதான் சதுர்விம்ஶதி தத்த்வமாயிருக்குமென்றும், அதில் ப்ரதமதத்த்வம் இன்னதென்றும், அந்தத்த்வத்தினுடைய அவஸ்தாவிஶேஷங்களிருக்கும்படியையும், அதில் நின்றும் தத்த்வாந்தரங்கள் உத்பந்நமாகைக்கு ஹேது-அதினுடைய குணவைஷம்யமென்றும், அந்தகுணங்கள்தான் இன்னதென்றும், அவைதான் அதுக்கு அவிநாபூதங்களாய், அதினுடைய அவஸ்தாபேதங்களாலே அநுத்பூதங்களாயும் உத்பூதங்களாயுமிருக்குமென்றும், அவைதான் கார்யாநுமேயங்களென்றும், அவற்றினுடைய வைஷம்ய ப்ரயுக்தமான மஹதாதி தத்த்வோத்பத்திக்ரமத்தையுஞ்சொல்லி; அநந்தரம், இப்படியுத்பந்நங்களான தத்த்வங்களினுடைய ஸமுதாயகார்யமான அண்டோத்பத்தியையும், அந்தவண்டத்துக்குள்ளில் ஸமஷ்டிபுருஷ சதுர்முகோத்பத்தியையும், ஈஶ்வரன் ஸமஷ்டி வ்யஷ்டி பதார்த்தங்களை அத்வாரகமாகவும் ஸத்வாரகமாகவும் நின்று ஸ்ருஷ்டிக்கும்படியையுஞ்சொல்லி; அநந்தரம், அண்டங்களினுடைய பஹுத்வத்தையும், அவற்றினுடைய கட்டளையையும், அவைதான் ஈஶ்வரனுக்கு லீலோபகரணங்களென்னுமத்தையும், அவற்றினுடைய உத்பத்தி ப்ரகாரத்தையுஞ் சொல்லி, அநந்தரம் ஆகாஶாதிபூதங்களுக்குத் தனித்தனியேயுண்டான விநியோகத்தையும், ஜ்ஞாநகர்மேந்த்ரியங்

களுக்கும், உபயாத்மகமான மநஸ்ஸுக்குமுண்டான வ்ருத்திபேதத்தையும், ஆகாசாதிகளுக்கு சப்தாதிகள் ப்ரதிநியத குணங்களாயிருக்கும்படியையும், அவற்றுக்கு குணவிநிமயம் வருகைக்கு ஹேதுவையும் குணாதிக்யத்துக்கு ஹேதுவையுஞ்சொல்லி; இப்படி, மிச்ர ஸத்வத்தினுடைய ப்ரகாரத்தை விஸ்தரேண உபபாதித்து, அநந்தரம், இதினுடைய பரிணாமங்களுக்கு ஹேதுவாயிருந்துள்ள ஸத்வசூந்யமாகிற வசித்விசேஷத்தையும் ஸங்க்ரஹேண சொல்லி: அநந்தரம், ஏதத்பூர்வோக்தமான வசித்த்வபத்தினுடைய விநியோகப்ரகாரத்தையும், அசித்த்ரயத்தினுடைய பரிணாமங்களையுஞ் சொல்லி, ஏதத்கர்சைநகதேசிகளுடைய காலவிஷயப்ரதிபத்திபேதத்தையும்காட்டி, அநந்தரம், கீழ்ச்சொல்லப்பட்டவற்றில் பாஹ்ய குத்ருஷ்டிகளுடைய விப்ரதிபத்தி ப்ரகாரங்களையும், அவைதான் அயுக்தமென்னுமிடத்தையுஞ்சொல்லி, அநந்தரம், பரஸ்பரவிலக்ஷணமான பூதவிசேஷங்களில ஜ்ஞாதவ்யாம்சங்களையும் தர்சிப்பித்து, இப்படி, அசித்த்ரயத்தினுடைய ப்ரகாரத்தைப் பரக்க அருளிச்செய்து தலைக்கட்டினார்.

பிள்ளைலோகாசார்யர் திருவடிகளே சரணம்.

மணவாளமாமுனிகள் திருவடிகளே சரணம்.

அசித்ப்ரகரணம் முற்றிற்று.

ஸ்ரீ

ஈஶ்வரப்ரகரணம்.

க. ஈஶ்வரன், அகிலஹேய ப்ரத்யநீகாநந்த ஜ்ஞாநாநந்தைக ஸ்வரூபனாய், ஜ்ஞாநஶக்த்யாதி கல்யாணகுணகண பூஷிதனாய், ஸகலஜகத்ஸர்க்கஸ்த்திதி ஸம்ஹாரகர்த்தாவாய், "ஆர்த்தோ ஜிஜ்ஞாஸுரர்த்தார்த்தீ ஜ்ஞாநீ" என்கிற சதுர்வித புருஷர்களுக்கு மாஶ்ரயணீயனாய், தர்மார்த்தகாம மோக்ஷாக்ய சதுர்வித பலப்ரதனாய், விலக்ஷணவிக்ரஹ யுக்தனாய், லக்ஷ்மீ பூமி நீளாநாயகனாயிருக்கும்.

இப்படி, சிதசித்ரூபமான தத்வத்வயத்தினுடையவும் ஸ்வரூப ஸ்வபாவவிஶேஷங்களை ஸுவ்யக்தமாம்படி யருளிச்செய்து, அநந்தரம் (௪௯) "க்ஷராத்மாநாவீஶதே தேவ ஏக:" என்கிறபடியே, ததுபயநியந்தாவான ஈஶ்வரனுடைய ஸ்வரூபாதிகளை ஸம்ஶயவிபர்யயமற வருளிச்செய்கிறார்.

அதில் ப்ரதமஸூர்ணையாலே, ஈஶ்வரத்வம் அஸாதாரணதர்மதயா வஸ்துவுக்கு நிரூபகமாயிருக்கையாலே, "ஈஶ்வரன்" என்றே வஸ்துவை நிர்த்தேஶித்து, தத்ஸ்வரூபாதி வைலக்ஷண்யத்தை ஸங்க்ரஹேண வருளிச்செய்கிறார்.

(க) அதில், ப்ரதமத்திலே குணிகளுக்கும் ஆதாரபூதமான ஸ்வரூப வைலக்ஷண்யத்தை யருளிச்செய்கிறார்; (அகிலஹேய ப்ரத்யநீகாநந்த ஜ்ஞாநாநந்தைக ஸ்வரூபனாய்) என்று; அதாவது-ஸமஸ்தஹேய ப்ரதிபடமாய், த்ரிவிதபரிச்சேதரஹிதமாய், ஸ்வயம்ப்ரகாஶத்வ ஸுகரூபத்வமே வடிவான ஸ்வரூபத்தை யுடையவனென்கை. (௩௪௧) "ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம" (௩௪௨) "விஜ்ஞாநம் ப்ரஹ்ம" (௩௪௩) "ஆநந்தோ ப்ரஹ்ம" என்னக்கடவதிறே. (௩௪௪) "அகிலஹேயப்ரத்யநீக கல்யாணைகதாந ஸ்வேதரஸமஸ்தவஸ்துவிலக்ஷணாநந்தஜ்ஞாநாநந்தைகஸ்வரூப" என்றிறே எம்பெருமானாரருளிச்செய்தது. அப்படியே இவருமருளிச்செய்கிறார்.

ஆனால், கல்யாணைகதாநத்வமும், ஸ்வேதர ஸமஸ்தவஸ்து விலக்ஷணத்வமும் இவரருளிச்செய்யாதொழிவானென்னென்னில்; ஹேயப்ரத்யநீகதை புக்கவிடத்தே கல்யாணைகதாநத்வம் வருமென்னுமதைப்பற்றவும், ஆநந்தரூபத்வம் சொல்லுகையாலே தன்னடையே ஸித்திக்குமென்னு மதைப்பற்றவும் கல்யாணைகதாநத்வம் அ[illegible]லர். ஸ்வேதரஸமஸ்த வஸ்து விலக்ஷணலிங்கத்வம் உபயவிஶிஷ்டத்வ ப்ரயுக்தமாகையாலே, அர்த்தாதுக்தமென்று அருளிச்செய்திலர்.

(ஜ்ஞாநஶக்த்யாதி கல்யாணகுணகண பூஷிதனை) ஆதிஶப்தத்தாலே - குணபூர்ணையில், எம்பெருமானருளிச்செய்த குணங்களையெல்லாம் சொல்லுகிறது; குணங்களுக்கு கல்யாணத்வமாவது - ஆஶ்ரிதர்க்கு பரமபோக்யமாயிருக்கை, கணஶப்தம் - ஸமூஹவாசி. பூஷிதனாகையாவது - இவற்றாலே அலங்க்ருதனாயிருக்கை. திவ்ய மங்களவிக்ரஹத்துக்கு திவ்யாபரணங்கள்போலேயாயிற்று, திவ்யாத்மஸ்வரூபத்துக்கு குணங்கள் ஔஜ்ஜ்வல்யகரமாயிருக்கும்படி. இத்தால் (௩௫) "ய: ஸர்வஜ்ஞ: ஸர்வவித்" (௩௬) 'பராஸ்ய ஶக்திர்விவிதைவ ஶ்ரூயதே ஸ்வாபாவிகீ ஜ்ஞாநபலக்ரியா ச" (௩௭) "ஸமஸ்தகல்யாணகுணாத்மகோऽஸௌ" என்கிற குணகணயோகத்தை யருளிச்செய்தாராயிற்று.

(ஸகலஜகத்ஸர்க்கஸ்திதி ஸம்ஹாரகர்த்தாவாய்) ஜகச்சப்தத்தாலே - கார்யவஸ்துவைச்சொல்லுகிறது. ஸகலஶப்தத்தாலே - ஸமஷ்டி ஸ்ருஷ்டிரூபமான ஸமஸ்தபதார்த்தங்களையுஞ்சொல்லுகிறது. ஸர்க்கமாவது - ஸ்ருஷ்டி; இதுதான், ஸத்வாரகாத்வாரகரூபேண த்விவிதையாயிருக்கும். ஸ்திதியாவது - ரக்ஷணம்; இதுவும், பாஹ்யாப்யந்தரரூபேண த்விவிதமாயிருக்கும். ஸம்ஹாரமாவது அழிக்கை; இதுவும் ஸத்வாரகாத்வாரகரூபேண த்விவிதமாயிருக்கும். இவையெல்லாம், மேல இவநுபாதிக்கிறவிடத்திலே காணலாம். (௫௫) "யதோ வா இமாநி பூதாநி ஜாயந்தே, யேந ஜாதாநி ஜீவந்தி, யத்ப்ரயந்த்யபிஸம்விஶந்தி, தத்விஜிஜ்ஞாஸஸ்வ தத் ப்ரஹ்ம" இத்யாதி ஶ்ருதிகளாலே, இவனுடைய ஸகலஜகத்

ஸர்க்காதிகள் சொல்லப்படாநின்றதிறே. இத்தால், கீழ்ச்சொன்ன குணவிஶிஷ்டனான இவனுடைய வ்யாபார விஶேஷங்களை யருளிச்செய்தாராயிற்று.

(௩௪௮) ("ஆர்த்தோ ஜிஜ்ஞாஸுரர்த்தார்த்தீ ஜ்ஞானீ" என்கிற சதுர்விதபுருஷர்களுக்கும் ஆஶ்ரயணீயனாய்) ஆர்த்தனானவன்-முன்புண்டான ஐஶ்வர்யத்தையிழந்து அதைப்பெறவேணுமென்று ஆசைப்படுமவன். ஜிஜ்ஞாஸுவாகிறான் - ஜ்ஞானஸ்வரூபனான வாத்மாவை யநுபவிக்கவாசைப்படும் கேவலன். அர்த்தார்த்தியாகிறான்- அபூர்வமாக ஐஶ்வர்யத்தை யாசைப்படுமவன். ஜ்ஞானியாகிறான்- பரமபுருஷார்த்தமான பகவத்ப்ராப்தியை யாசைப் படுமவன். (௩௪௯) "ஆர்த்த:-ப்ரதிஷ்டாஹீந: ப்ரஷ்டைஶ்வர்ய: புநஸ்தத்ப்ராப்திகாம:, அர்த்தார்த்தீ-அப்ராப்தைஶ்வர்யதயா ஐஶ்வர்யகாம:, தயோர்முகமைஶ்வர்யவிஷயதயா ஏககல்பத்வாதேகவதாயிகார:, ஜிஜ்ஞாஸு:-ப்ரக்ருதிவியுக்தாத்மஸ்வரூபாவாப்தீச்சு:; ஜ்ஞாநமேவாஸ்ய ஸ்வரூபமிதி ஜிஜ்ஞாஸுரித்யுக்தம், ஜ்ஞானீ ச "இதஸ்த்வந்யாம் ப்ரக்ருதிம் வித்தி மே பராம்" இத்யாதிநாபிஹிதபகவச்சேஷதைகரஸாத்மஸ்வரூபவித், ப்ரக்ருதிவியுக்தகேவலாத்மந்யபர்யவஸ்யந் பகவந்தம் ப்ரேப்ஸு: பகவந்தமேவ பரமப்ராப்யம் மந்வாந:" என்று, சதுர்விதாதிகாரி வேஷத்தையும், ஸ்ரீகீதாபாஷ்யத்திலே யருளிச்செய்தாரிறே இந்தசதுர்விதபுருஷ ஸமாஶ்ரயணீயத்வத்தை (௩௫௦) 'சதுர்விதா பஜந்தே மாம் ஜநா: ஸுக்ருதிநோऽர்ஜுந। ஆர்த்தோ ஜிஜ்ஞாஸுரர்த்தார்த்தீ ஜ்ஞானீ ச பரதர்ஷப" என்றும், (௩௫௧) "சதுர்விதா மம ஜநா பக்தா ஏவ ஹி தே ஸ்ம்ருதா:। ஆர்த்தோ ஜிஜ்ஞாஸுரர்த்தார்த்தீ ஜ்ஞானீ சைவ சதுர்தக:" என்றும், தானே யருளிச்செய்தானிறே. இத்தால் ஜகத்காரணபூதனுகக் கீழ்ச்சொல்லப்பட்டவனுடைய ஸர்வஸமாஶ்ரயணீயத்வத்தையருளிச்செய்தாராயிற்று.

(தர்மார்த்த காம மோக்ஷாக்ய சதுர்விதபலப்ரதனைப்) (௩௫௨) "தர்மார்த்தகாமமோக்ஷாக்யம் புருஷார்த்தம் உதாஹ்ருதம்" என்று, புருஷார்த்தம் சதுர்விதமாயிறே இருப்பது. தர்ம

மாவது-இஷ்டாபூர்த்தங்கள்; இஷ்டமாவது-யாகாதி; பூர்த்தமாவது (வா)தாதி. அர்த்தமாவது-ஸுவர்ணரஜதாதிகள். காமமாவது-ஐஹிகபாரலௌகிக போக்யபதார்த்தாநுபவஸுகம். மோக்ஷமாவது-ஆத்மாநுபவ பகவதநுபவங்கள் இவற்றில். தர்மம் - ஸாதநதயா புருஷார்த்த மாயிருக்கும் ; அர்த்தம் - ஸாதநதயாவும், ஸ்வயமாயும் புருஷார்த்தமாயிருக்கும் ; காமமோக்ஷங்களிரண்டும் - ஸ்வயம் புருஷார்த்தமாயிருக்கும். ஏவம்விதமான சதுர்விதபலங்களையும் அதிகாராநுகுணமாகக் கொடுக்குமவனென்கை.

இத்தால் - ஸர்வஸமாஶ்ரயணீயனான விவனுடைய ஸகலபல ப்ரதத்வத்தையும் அருளிச்செய்தாராயிற்று. (௩௫௩) "[illegible]" என்னக்கடவதிறே.

(விலக்ஷணவிக்ரஹயுக்தனும்) அதாவது விக்ரஹந்தான், ஸ்வரூபகுணங்களிலுங்காட்டில் அத்யந்தாபிமதமாயென்று தொடங்கி மேலருளிச்செய்கிற வைலக்ஷண்யத்தையுடைய விக்ரஹத்தோடே கூடியிருக்குமவனென்கை. (௩௫௪) "नीलतोयदमध्यस्था विद्युल्लेखेव भास्वरा" இத்யாதியாலே விக்ரஹவைலக்ஷண்யம் ப்ரஸித்தம். (௩௫௫) "स्वाभिमतानुरूपैकरूपाचिन्त्यदिव्याद्भुतनित्यनिरवद्यनिरतिशयौज्ज्वल्यसौन्दर्यसौगन्ध्यसौकुमार्यलावण्ययौवनाद्यनन्तगुणनिधिदिव्यरूप" என்று, திவ்யமங்கள விக்ரஹ வைலக்ஷண்யத்தையருளிச்செய்தாரிறே எம்பெருமானார்.

இத்தால், கீழ்ச்சொன்ன ஸ்வரூபகுணங்களுக்கு ப்ரகாஶகமாய், ஜகத்காரணத்வத்துக்கும், ஸர்வஸமாஶ்ரயணீயத்வத்துக்கும், ஸர்வபலப்ரதத்வத்துக்கும் ஏகாந்தமான திவ்யவிக்ரஹயோகத்தை யருளிச்செய்தாராயிற்று.

(லக்ஷ்மீ பூமி நீளாநாயகனுமாயிருக்கும்) அதாவது (௩௫௬) "உனக்கேற்கும்" என்னும்படியான வைலக்ஷண்யத்தை யுடையளாய்

உ. அகிலஹேயப்ரத்யநீகனாகையாவது - தமஸ்ஸுக்கு தேஜஸ்ஸு போலேயும், ஸர்ப்பத்துக்கு கருடனைப்போலேயும் விகாராதி தோஷங்களுக்கு ப்ரதிபடனா யிருக்கை.

சேதநர்க்கு புருஷகாரபூதையாயும், ப்ராப்யையாயு மிருக்கும் ப்ரதாநமஹிஷியான பெரிய பிராட்டியார்க்கும், அவளோடொக்கச் சொல்லலாம்படி யிருக்கும் பூமிநீளைகளான மற்றை யிரண்டுபிராட்டிமார்க்கும் அநுரூபநாயகனாயிருக்குமென்கை.

(௩௫) "ஹ்ரீஶ்ச தே லக்ஷ்மீஶ்ச பத்ந்யௌ" என்று, லக்ஷ்மி பூமிகளிருவரையும் வேதபுருஷன் சொன்னவிது நீளைக்கும் உபலக்ஷணம். (௩௬) "வைகுண்டே து பரே லோகே ஶ்ரியா ஸார்த்தம் ஜகத்பதி: । உபாப்யாம் பூமிநீளாப்யாம் ஸேவித: பரமேஶ்வர:" என்னக்கடவதிறே. (௩௭) "ஸ்வாபிமதநித்ய நிரவத்யாநுரூப ஸ்வரூப ரூப குண விபவைஶ்வர்ய ஶீலாத்யநவதிகாதிஶயாஸங்க்யேய கல்யாண குணகண ஶ்ரீவல்லப, ஏவம்பூத பூமிநீளாநாயக" என்றிறே எம்பெருமானார் அருளிச்செய்தது; இத்தால் கீழ்ச்சொன்ன விக்ரஹவைலக்ஷண்யம், காட்டிவரித்த நிலாவாசாதபடி யநுபவிக்கக்கடவரான பிராட்டிமாரோட்டைச்சேர்த்தியை யருளிச்செய்தாராயிற்று.

(உ) இப்படி, உக்தமான ஸ்வரூபாதிகளை விஸ்தரேண உபபாதித்தருளுகிறார் மேல். அதில, ப்ரதமத்திலே "அகிலஹேயப்ரத்யநீகாநந்த ஜ்ஞாநாநந்தைகஸ்வரூபனாய" என்றவிதில், அகிலஹேயப்ரத்யநீகத்வத்தை யுபபாதிக்கிறார்; (அகிலஹேயப்ரத்யநீகனாகையாவது) என்று தொடங்கி. ஹேயமாவது-தோஷம். அகிலஹேயமென்கையாலே - த்ரிவிதசேதநாசேதந தோஷங்களையும் சொல்லுகிறது. "த்ரிவித சேதநாசேதநதோஷமும் ஈஶ்வரனுக்கு வாராது" என்று இதுதன்னை வ்யக்தமாக மேலே யருளிச்செய்கிறாரிறே.

(தமஸ்ஸுக்கு தேஜஸ்ஸுபோலேயும், ஸர்ப்பத்துக்கு கருடனைப்போலேயும்) என்றது - தமஸ்ஸுக்கு தேஜஸ்ஸு ப்ரதிபடமாயிருக்குமாபோலேயும், ஸர்ப்பத்துக்கு கருடன் ப்ரதிபடனாயிருக்குமாபோலேயுமென்கை.

௫௫. அநந்தனுகையாவது - நித்யனுய், சேதநாசேதநங்களுக்கு வ்யாபகனுய், அந்தர்யாமியா யிருக்கை.

(விகாராதிதோஷங்கள்) என்கிறவிடத்தில், விகாரஶப்தத்தாலே - த்ரிவிதாசித்திநுடையவும் பரிணாமத்தைச் சொல்லுகிறது. ஆதிஶப்தத்தாலே - பத்தசேதநருடைய அஜ்ஞாநது:க்கங்களையும் முக்தருடையசேறுகோய்த்துச்கழுவினுரைப்போலே, ப்ரக்ருதிஸம்ஸ்ருஷ்டராய் விடப்பட்ட வாகாரத்தையும், நித்யருடைய பரிச்சிந்நஸ்வரூபத்வ பாரதந்த்ர்யங்களையும் சொல்லுகிறது. பாரதந்த்ர்யம் தோஷமோ? என்னில்-புருஷனுக்கு ஸ்தநோத்பேதம்போலே ஸ்வதந்த்ரனுக்கு தோஷமென்கை. இத்தோஷங்களுக்கு ப்ரதிபடமாயிருக்கையாவது-தான்மாருயிருக்கை. ப்ரதிபட மென்கையாலே- (உ-அ) "ஜ்ஞாஜ்ஞௌ" என்கிறபடியே, ஸ்வரூபநிபந்தநமாக மலஸம்பந்தமில்லையேயாகிலும், உபாதிநிபந்தநமான மலஸம்பந்தத்துக்கு யோக்யமான வாத்மஸ்வரூபத்திற்காட்டில் பகவத் ஸ்வரூபத்துக்கு வாசிதோற்றுகிறது. (௩௰) "[illegible]" (௩௧) "[illegible]" (௩௨) "[illegible]" என்னக்கடவதிறே.

ஹேயப்ரத்யநீகத்வமாவது - ஆஶ்ரிதருடைய ஹேயநிரஸகத்வத்துக்கு அடியான ஹேயப்ரதிபடத்வ மென்னவுமாம் என்னுமொருயோஜநையுமுண்டிறே. கத்யவ்யாக்யாநங்களிலே நஞ்சீயர் ஆச்சான்பிள்ளை முதலான வாசார்யர்களருளிச்செய்தது. "ஸர்ப்பத்துக்கு கருடனைப்போலேயும்" என்கிற த்ருஷ்டாந்தத்தாலே, அதுவும் இவ்விடத்துக்கர்த்தமானுலோ வென்னில்; விகாராதிதோஷங்களுக்கு ப்ரதிபடனுயிருக்கையாலே, இவ்விடத்தில் இவர்க்கது விவக்ஷிதமன்று.

(௫) அநந்தரம், அநந்தத்வத்தை யுபபாதிக்கிருர்; (அநந்தனுகையாவது) என்று தொடங்கி. அநந்தத்வமாவது தேஶதஃ காலதோவஸ்துதஶ்சாபரிச்சேத்யத்வம்; விபுத்வாத்தேஶபரிச்சேத

௪. அந்தர்யாமியானால் தோஷங்கள்வாராதோவென்னில் ;

௫. ஶரீரகதங்களான பால்யாதிகள் ஜீவாத்மாவுக்கு வாராதாப் போலே, த்ரிவிதசேதநாசேதநதோஷமும் ஈஶ்வரனுக்கு வாராது.

ராஹித்யம், நித்யத்வாத் காலபரிச்சேதராஹித்யம்,ஸ்வவ்யதிரிக்த ஸமஸ்த வஸ்துக்களுக்கும் ப்ரகாரியா யிருக்கையாலும், தனக்கு ப்ரகார்யந்தர மில்லாதபடி நிற்கையாலும், ஸத்ருஶவஸ்த்வபாவத்தாலே வஸ்துபரிச்சேதராஹித்யம். அத்தை யருளிச்செய்கிறார் ; (நித்யனாய், சேதநா சேதநங்களுக்கு வ்யாபகனாய், அந்தர்யாமியா யிருக்கை) என்று. இத்தால், நித்யனாகையாலே, இன்னகாலத்திலுள்ளான் காலாந்தரத்தில் இல்லையென்கிற காலபரிச்சேதமு மின்றியிலே, ஸகல சேதநாऽசேதநங்களுக்கும் வ்யாபகனாய்க் கொண்டு விபுவாயிருக்கையாலே, இன்ன தேஶத்திலுள்ளான், தேஶாந்தரத்தி லில்லையென்கிற தேஶபரிச்சேதமின்றியிலே, ஸர்வாந்தர்யாமியாகையாலே ஸர்வத்துக்கும் தான் ப்ரகாரியாய், தனக்கு ப்ரகார்யந்தர மில்லாதபடி யிருக்கையாலே, இன்னவஸ்துபோலே யென்கிற வஸ்துபரிச்சேதமு மின்றியிலே யிருக்கை யென்றதாயிற்று. (௩௯௩)“நித்யம் விபும் ஸர்வகதம் ஸுஸூக்ஷ்மம்” (௩௯௪) “அந்த:ப்ரவிஷ்டஶ்ஶாஸ்தா ஜநாநாம் ஸர்வாத்மா” (௩௯௫) “யஸ்யாத்மா ஶரீரம், யஸ்ய ப்ருதிவீ ஶரீரம்” (௧௫௭) “ந தத்ஸமஶ்சாப்யதிகஶ்ச த்ருஶ்யதே” என்னக்கடவதிறே.

(௪) இவற்றோடு தானொட்டற்றிருக்கையன்றிக்கே, அந்தர்யாமிதயா அவஸ்திதனாயிருக்குமாகில், தத்கததோஷங்கள் வாராதோ வென்கிற ஶங்கையை யநுவதிக்கிறார் ; (அந்தர்யாமியானால் தோஷங்கள் வாராதோவென்னில்) என்று.

(௫) அத்தைப் பரிஹரிக்கிறார்; (ஶரீரகதங்களான) என்றுதொடங்கி. அதாவது - இந்த ஶரீரத்தை யதிஷ்டித்து ஸ்வாதீநமாக நிர்வஹித்துக்கொண்டிரா நிற்கச்செய்தேயும், தத்கதமான பால்ய யௌவநாதி விகாரங்கள் ததந்தர்வர்த்தியான ஜீவாத்மாவுக்கு வாராதாப்போலே,த்ரிவிதசேதநாசேதநங்களுக்கும்அந்தர்யாமியாய்,

௬: ஜ்ஞாநாநந்தைகஸ்வரூபனாகையாவது - ஆநந்தரூபஜ்ஞாநனாயிருக்கை.

௭. அதாவது-கட்டடங்க வநுகூலமாய், ப்ரகாஶமுமாயிருக்கை.

இவற்றை ஶரீரமாகக்கொண்டு இராநிற்கச்செய்தேயும் தத்கத தோஷம் ஈஶ்வரனுக்கு வாராது என்கை. (௩-௯௯) "ஆவிசேருயிரி னுள்ளா லாதுமோர்பற்றிலாத பாவனையதனைக்கூடி லவனையுங் கூடலாமே" என்றிறே! ஆழ்வாருமருளிச்செய்தது. ஶரீரியான ஜீவாத்மாவுக்கு ஶரீரகதங்களான பால்யாதிகள் வந்ததில்லை யே யாகிலும், ஶரீரஸம்பந்த நிபந்தநமாக துக்காஜ்ஞாநாதிகள் வருகிறவோபாதி, ஶரீரபூதமான இவற்றோட்டை ஸம்பந்தத்தாலே இவனுக்குமிங்ஙனே சிலதோஷங்கள் வாராதோ ? என்னில்; வாராது. அதுக்கடி-ப்ரவேஶஹேது விஶேஷத்தாலே ; இவனைப்போலே கர்மமடியாக வன்றிக்கே, அநுக்ரஹமடியாகவிறே அவனுக்கு இவற்றில் ப்ரவேஶமிருப்பது. (௩-௭) "அநஶ்நந்" (௩-௮) "[illegible]" (௩-௯௯) "விஷ்ணவே ப்ரபவிஷ்ணவே" என்னுநின்றதிறே.

(௬) அநந்தரம், ஜ்ஞாநாநந்தைகஸ்வரூபத்வத்தை யுபபாதிக்கிறார் ; (ஜ்ஞாநாநந்த) இத்யாதியாலே. ஜ்ஞாநாநந்தங்களையே ஸ்வரூபமாக வுடையனாயிருக்கை யென்று, ஶப்தத்துக்கு அர்த்தம் சொல்லவேண்டியிருக்க, ஜ்ஞாநமென்றும ஆநந்தமென்றும் பிரிந்துச்சொல்லலாவது, இரண்டவஸ்த்தை யின்றிக்கே ஜ்ஞாநமே ஸ்வரூபமாய், அதுதான் அநுகூலமாயிருக்கை - ஆநந்தமாகையாலே, "ஆநந்தரூபஜ்ஞாநனாயிருக்கை" என்று அருளிச்செய்கிறார். "அநுகூலஜ்ஞாநமே ஸ்வரூமாயிருக்க ஜ்ஞாநாநந்தங்களென்று பிரித்துச்சொல்லுகிறது, இரண்டுமுண்டாகைக்காக" என்றிறே இவர்தாமிட்டருளின கத்யவ்யாக்யாநத்திலே யருளிச்செய்தது.

(௭) "ஆநந்தரூபஜ்ஞாநனாயிருக்கை" என்றதுதன்னை யுபபாதிக்கிறார் ; (அதாவது) இத்யாதியாலே. கட்டடங்கவென்றது - ஸ்வரூபமுள்ள பரப்பெங்கும் என்றபடி. இத்தால், ஸ்வரூபத்தில் அநுகூலமாயாதல், அப்ரகாஶமா யாதலிருக்கு மிடமில்லை யென்கை. ஜ்ஞாநாநந்தைக ஸ்வரூபனென்றவிதில், ஏகஶப்தார்த்தமிதுவிறே.

அ. இவனுடைய ஜ்ஞாநஶக்த்யாதி கல்யாண குணங்கள் நித்யங்களாய், நிஸ்ஸீமங்களாய், நிஸ்ஸங்க்யங்களாய், நிருபாதிகங்களாய், நிர்த்தோஷங்களாய், ஸமாநாதிகரஹிதங்களாயிருக்கும்.

ஆநுகூலத்வமாவது - ஆஹ்லாதகரத்வம். ப்ரகாஶத்வமாவது - ஸ்வயம்ப்ரகாஶத்வம். (௧௰) "ஆநந்த்யாய் நப்ரகாஶஸ்வ ஜ்யோதிஷாம் ஜ்யோதிருத்தமம் யஸ்ய ஸூர்யாதயோ யஸ்ய ஸமித் ஜ்ஞாநாத் நந்ந ஸூர்யாதயோ:" என்னக்கடவதிறே.

அ. இப்படி, ஸ்வரூபவைலக்ஷண்யத்தை யுபபாதித்த வநந்தரம், ஸ்வரூபாஶ்ரிதமான குணங்களினுடைய வைலக்ஷண்யத்தை யருளிச்செய்கிறார்; (இவனுடைய ஜ்ஞாநஶக்த்யாதி கல்யாண குணங்கள்) என்று தொடங்கி. ஆதிஶப்தத்தாலே-பலைஶ்வர்ய வீர்யதேஜஸ்ஸுக்களும், வாத்ஸல்யாதிகளும், ஶௌர்யாதிகளுமாகிற குணவிஶேஷங்களெல்லாவற்றையும் சொல்லுகிறது.

நித்யங்களாகையாவது - உத்பத்தி விநாஶரஹிதங்களா யிருக்கை. ஸ்வரூபாநுபந்திகளாகையாலே, யாவதாஶ்ரயபாவிகளா யிருக்குமிறே. (௧௧) "தஸ்யைதே ஶாஶ்வதா:" என்று, குணங்களினுடைய நித்யத்வம் ஶ்ருதிஸித்தம். (௧௧) "காந்திஜாதிகா: கல்யாணகுணா:; தஸ்யைதே ஶாஶ்வதா: நித்யஜாத்யா:" என்றிறே இந்தஶ்ருதிக்கர்த்தம். (௧௨) "ஈறிலவண்புகழ்" என்றாரிறே ஆழ்வார்.

நிஸ்ஸீமங்களாகையாவது - ஓரொன்றே அவதிகாணவொண்ணாதிருக்கை. (௧௩) "யதோ வாசோ நிவர்த்தந்தே அப்ராப்ய மநஸா ஸஹ" என்று, மீண்டுவிட்டதிறே ஆநந்தகுணத்தையெல்லாங் காணப்புக்க வேதம். இது, ஆநந்தகுண மொன்றிலுமன்றிறே; குணங்களெல்லாம் இப்படியேயிறே இருப்பது. (௧௪) "உபர்யுபர்யப்ஜபுவோ(அ)பி பூருஷாந் ப்ரகல்ப்ய தே யே ஶதமித்யநுக்ரமாத் கிரஸ்த்வதேகைககுணாவதீப்ஸயா ஸதா ஸ்திதா நோத்யமதோ(அ)திஶேரதே" என்னக்கடவதிறே. (௧௫) "உயர்நலம்" என்றிறே! ஆழ்வாரும் அருளிச்செய்தது.

நிஸ்ஸங்க்யங்களாகையாவது- இப்படிப்பட்ட குணங்கள் தான் எண்ணிறந்திருக்கை. (௩௭௬) "[illegible]" (௩௭௭) "[illegible]" [௩௭௮] "[illegible]" [௩௭௯] "[illegible]" என்னக் கடவதிறே. (௩௮௦) "எண்ணில் தொல் புகழ்" என்றாரிறே ஆழ்வாரும். (௩௮௧). "[illegible]" என்கிற ஶ்லோகத்திலே, குணங்களினுடைய நித்யநிஸ்ஸீமநிஸ்ஸங்க்யத்வங்களை யருளிச்செய்தாரிறே ஆழ்வான்.

நிருபாதிகங்களாகையாலே - ஸ்வோத்தயாதிகளிலே ஈஶ்வரேச்சையாகிற உபாதியை யபேக்ஷித்திருக்கும் சேதநகுணங்கள் போலன்றிக்கே, ஸ்வாபாவிகங்களா யிருக்கை. ஸ்ரீபாஷ்யத்தில் (௩௮௨) "[illegible]" என்கிறவிடத்துக்கு வ்யாக்யாநம்பண்ணுகிற ஶ்ருதப்ரகாஶிகாகாரர், அநவதிகாதிஶயபதத்தாலே நித்யஸித்த வ்யாவ்ருத்தி சொல்லுகிறதென்று முந்துறவொரு யோஜநைபண்ணி, (௩௮௩) "[illegible]

ஷ்டாத்தாத்ருக் ப்ரமாணகம் ஹி மயா நிர்திஷ்டம் த்வயீஶ்வரே" என்று, அநந்தரயோஜனையிலே யிவ்வர்த்தத்தை யருளிச்செய்தாரிறே. (ந-அச) "ஸ்வாபாவிகீ ஜ்ஞாநபலக்ரியா ச" என்று, குணங்களினுடைய ஸ்வாபாவிகத்வத்தை ஶ்ருதி சொல்லா நின்றதிறே. இந்த ஶ்ருதியில், க்ரியையென்கிறது-நியமநத்தை; (ந-அரு) "பாரமைஶ்வர்ய-ஜ்ஞாந ஶக்த்யாதீநாம் ஸ்வாபாவிகத்வோக்தே:; க்ரியா-நியமநம்" என்றிறே இதுக்கும் ஶ்ருதப்ரகாஶிகாகாரர் வ்யாக்யாநம் பண்ணிற்று.

நிர்த்தோஷங்களாகையாவது - ஹேயகுண ஸம்ஸர்க்கமாகிற தோஷமின்றிக்கேயிருக்கை. (ந-அசு) "அபஹதபாப்மா விஜரோ விம்ருத்யுர்விஶோகோ விஜிகத்ஸோऽபிபாஸ: ஸத்யகாம: ஸத்யஸங்கல்ப:" (ந-அஎ) "ஸத்வாதயோ ந ஸந்தீஶே யத்ர ச ப்ராக்ருதா குணா:" (ந-அஅ) "ஜ்ஞாநஶக்திபலைஶ்வர்யவீர்யதேஜாம்ஸ்யஶேஷத: । பகவச்சப்தவாச்யாநி விநா ஹேயைர்குணாதிபி:" (ந-அகூ) "தேஜோபலைஶ்வர்ய மஹாவபோத ஸுவீர்யஶக்த்யாதி குணைகராஶி:। பர: பராணாம் ஸகலா ந யத்ர க்லேஶாதய: ஸந்தி பராவரேஶே" என்கிறபடியே, ஆஶ்ரயம் - ஹேயப்ரத்யநீக மாகையாலே, இவற்றுக்கு, ஹேயகுணஸம்ஸர்க்க தோஷப்ரஸக்திக்கு யோக்யதையில்லையிறே.

ஸமாநாதிகரஹிதங்களாகையாவது - சேதநாந்தரகுணங்களை ஸமமாகவும், ஈஶ்வரகுணங்களை அதிகமாகவுமுடைத்தாயிருக்கும் சேதநகுணங்கள் போலன்றிக்கே, தனக்கொத்ததும மிக்கதுமின்றிக்கேயிருக்கை. (கறு-எ) "ந தத்ஸமஶ்சாப்யதிகஶ்ச த்ருஶ்யதே" என்கிற ஸமாதிகதரித்ரவஸ்துவை யாஶ்ரயமாக வுடையவையாகையாலே, இவையும ஸமாநாதிகரஹிதங்களாயிருக்குமிறே. (ந-கூய) "ஷோ ஷோவயாவயிஸாதிஶயா நஸந்திருணவைர்ஹ்ரூணவந்நவாஷைவதா: । ஜ்ஞாநைஶ்வர்யஶக்திவீர்ய பலார்ச்சிஷாம் ரஹஸ்ய ஸாம்யாதிஶய ஸம்பவோ ந யுக்தி" என்கிற ஶ்லோகத்திலே, இவையித்தனையும பட்டருளிச்செய்தாரிறே.

௯. இவற்றில் வாத்ஸல்யாதிகளுக்கு விஷயமநுகூலர், ஶௌர்யாதிகளுக்கு விஷயம் ப்ரதிகூலர், இவற்றுக்குக் காரணமான ஜ்ஞாநஶக்த்யாதிகளுக்கெல்லாரும் விஷயம்.

---

(௯) இப்படியிருந்துள்ள குணங்கள்தான் மூன்றுவகைப்பட்டிருக்கையாலே, அம்மூன்று வகைக்கும் விஷயங்களை வகுத்து அருளிச்செய்கிறார்; (இவற்றில்) என்று தொடங்கி. (வாத்ஸல்யாதிகள்) என்கிற ஆதிஶப்தத்தாலே, ஸௌஶீல்ய ஸௌலப்ய மார்த்தவார்ஜவாதிகளான குணவிஶேஷங்களெல்லாவற்றையும் சொல்லுகிறது; விஷயம் அநுகூலரென்றது - ஆஶ்ரிதரென்றபடி.

(ஶௌர்யாதிகளுக்கு) என்கிற ஆதிஶப்தத்தாலே, பராக்ரமத்தைச்சொல்லுகிறது. விஷயம் ப்ரதிகூலரென்றது - ஆஶ்ரிதவிரோதிகளென்றபடி. (௫௯௧) "த்விஷத்ஸந்நஹேத்வம் த்விஷத்ஸந்நவஸாஹஜயேத் । ஸாத்வாநுத்விஷஸாஜந் த்ரயாணா ஶிவாத்வா:" என்று, ஆஶ்ரிதவிரோதிகள் தனக்கு ஶத்ருக்களென்று அருளிச்செய்தானிறே.

(இவற்றுக்கு காரணமான ஜ்ஞாநஶக்த்யாதிகள்) என்கிறவிதில், ஆதிஶப்தத்தாலே - பலைஶ்வர்ய வீர்ய தேஜஸ்ஸுக்களைச் சொல்லுகிறது.

வாத்ஸல்யாதிகளுக்கும், ஶௌர்யாதிகளுக்கும் ஜ்ஞாநஶக்த்யாதிகள் காரணமானவையாவது (௫௯௨) "ப்ரக்ருஷ்டம் விஜ்ஞாநம் பலமதுலமைஶ்வர்யமகிலம் விமர்யாதம் வீர்யம் வரத பரமா ஶக்திரபி ச । பரம் தேஜஶ்சேதி ப்ரவர குணஷட்கம் ப்ரதமஜம் குணாநாம் நிஸ்ஸீம்நாம் கணநவிகுணாநாம் ப்ரஸவபூ:" என்றும், (௫௯௫) "ஜ்ஞாநகுணஷட்கஸ்யைவாஷ்டபேதா:" என்றும் சொல்லுகிறபடியே, அவற்றுக்கு ஊற்றுவாயாயிருக்கை.

அவைதான், வஸ்தூத்கர்ஷாபாதக ஷாட்குண்யாயத்தகுணபாவமாயிறே இருப்பது. "எம்பெருமானுடைய திவ்யாத்மகுணங்களாவன - ஜ்ஞாநஶக்த்யாதிஷட்குணங்களும், அதிலேபிறந்த ஸௌஶீல்யாதிகளும்" என்கிற வாக்யத்துக்கு அர்த்தமே

ழுதுகிறவளவில், "அதிலே பிறக்கையாவது - வஸ்துத்கர்ஷாபாதக ஷாட்குண்யாயத்தகுணபாவமாகை" என்றிறே விவரணத்தில் ஆச்சான்பிள்ளை யருளிச்செய்தது.

இந்தகுணஷட்கத்திலும் வைத்துக்கொண்டு, ஜ்ஞாநமாவது- (௱௯௪) "அஜடம் ஸ்வாத்மஸம்போதி நித்யம் ஸர்வாவகாஹநம் । ஜ்ஞாநம் நாம குணம் ப்ராஹு: ப்ரதமம் குணசிந்தகா:" என்கிறபடியே, என்றுமொக்க ஸர்வவிஷயப்ரகாஶகமுமாய், ஸ்வப்ரகாஶமுமானகுணவிஶேஷம்; ஶக்தியாவது - (௱௯௫) "ஜகத்ப்ரக்ருதிபாவோ யஸ்ஸா ஶக்தி: பரிகீர்த்திதா" என்கிற ஜகத்ப்ரக்ருதிபாவமாதல், அகடிதகடநாஸாமர்த்யமாதல். பலமாவது- (௱௯௬) "ஶ்ரமஹாநிஸ்ஸதா தஸ்ய ஸததம் குர்வதோ ஜகத் । பலம் நாம குணஸ்தஸ்ய கதிதோ குணசிந்தகை:" என்கிற ஜகத்காரணத்வப்ரயுக்தமானஶ்ரமமின்றியிலேயொழிகையாதல், [௱௯௭] "ஸர்வயோரண ஸாரஸ்ய" என்கிறஸமஸ்தவஸ்துதாரணஸாமர்த்த்யமாதல். ஐஶ்வர்யமாவது - [௱௯௮] "கர்த்ருத்வம் நாம யத்தஸ்ய ஸ்வாதந்த்ர்ய பரிப்ரும்ஹிதம் । ஐஶ்வர்யம் நாம தத்ப்ரோக்தம் குணதத்வார்த்தசிந்தகை:" என்கிறகர்த்ருத்வலக்ஷணமான ஸ்வாதந்த்ர்யமாதல், ஸமஸ்தவஸ்துநியமநஸாமர்த்த்யமாதல். வீர்யமாவது-௱௯௯ "தஸ்யோபாதாநபாவேபி விகாரவிரஹோ ஹிய: । வீர்யம் நாம குணஸ்ஸோயம் அச்யுதத்வாபராஹ்வய:" என்று, ஜகதுபாதாநமாகாநிற்கச்செய்தேயும்ஸ்வரூபவிகாரமின்றியிலே யொழியும்படியானஅவிகாரதை. தேஜஸ்ஸாவது - [௨௦௦] "ஸஹகார்யநபேக்ஷா யா தத்தேஜஸ் ஸமுதாஹ்ருதம்" என்கிற ஸஹகாரிநைரபேக்ஷ்யமாதல், பராபிபவநஸாமர்த்யமாதல். இவற்றுக்கு எல்லாரும் விஷயமாகையாவது- அநுகூலரக்ஷணாதிகளும் ப்ரதிகூலநிரஸநாதிகளும் - ஜ்ஞாநஶக்த்யாதிவிஶிஷ்டனாய்க்கொண்டு நிர்வஹிக்கவேண்டுகையாலே, இவற்றுக்கு ஸர்வரும் விஷயமாயிருக்கை.

ஜ்ஞாநம் அஜ்ஞர்க்கு; ஶக்தி அஶக்தர்க்கு, க்ஷமை ஸாபராதர்க்கு, க்ருபை துக்கிகளுக்கு, வாத்ஸல்யம் ஸதோஷர்க்கு, ஶீலம் மந்தர்க்கு; ஆர்ஜவம் குடிலர்க்கு; ஸௌஹார்த்தம் துஷ்டஹ்ருதயர்க்கு; மார்த்தவம் விஶ்லேஷ பீருக்களுக்கு; ஸௌலப்யம் காணவாசைப் பட்டவர்களுக்கு. இப்படி யெங்கும் கண்டுகொள்வது.

இப்படி குணங்களை மூன்றுவகையாக்கி அவற்றுக்கு விஷயங்களை தர்ஶிப்பித்தவளவன்றிக்கே, குணங்களுக்கு ப்ரத்யேகம் விஷயநியமமுண்டாகையாலே, அத்தையும் தர்ஶிப்பிக்கவேணுமென்று திருவுள்ளம்பற்றி, கீழெடுத்தகுணங்களிலே சிலவற்றுக்குத் தனித்தனியே விஷயங்களை தர்ஶிப்பிக்கிறார்; (ஜ்ஞாநம் அஜ்ஞர்க்கு) என்று தொடங்கி.

ஜ்ஞாநமாவது - சேதநருடைய ஹிதாஹித நிரூபணத்துக்கு உறுப்பானகுணமாகையாலே, (௩௦௭) "ஸாஸ்த்ரஜ்ஞாந பஹுக்லேஶ புத்திசலந பாதகம் | ஸ்வஹிதவீக்ஷணை: யஶ் தம் ஸ்வேஹ தேஜஸா ஜ்ஞாநாயநாய" என்கிறபடியே, ஸ்வஹிதாஹிதநிரூபணத்திகளில் அஜ்ஞராயிருக்குமவர்களுக்கு உறுப்பாயிருக்குமென்கை (ஶக்தி அஶக்தர்க்கு) என்றது-ஶக்தியாவது - அகடிதகடநாஸாமர்த்யமாகையாலே, ஸ்வேஷ்டாநிஷ்ட ப்ராப்தி பரிஹாரங்களில அஶக்தராயிருக்குமவர்களுடைய கார்யஸித்திக்கு உறுப்பாயிருக்குமெனகை. (க்ஷமை ஸாபராதர்க்கு) என்றது - க்ஷமையாவது - அபராத ஸஹத்வமாகையாலே, (௩௦௮) "ஸஹஸ்ரஶோபராதாநாம் நாராயண:" என்கிறபடியே, அபராதஸஹிதராகத்தங்களை யநுஸந்திக்கிருப்பார்க்கு உறுப்பாயிருக்குமென்கை. (௩௦௯) "க்ஷமாவாநாயேந்த்ர தாவிந்த்ர வ்யாத்யம் ஸாவாநயேவிந்த்ர வைக்யியஸ்ராஸ" என்றிறே பட்டருளிச்செய்தது. (க்ருபை துக்கிகளுக்கு) என்றது - க்ருபையாவது - பரதுக்கா ஸஹிஷ்ணுத்வமாகையாலே, ஆவாரார்துணையென்றலைநீர்க்கடலுளழுந்தும நாவாய்போல- பிறவிக்கடலுள்நின்று துளங்குகைமுதலான துக்கமுடையவர்களுக்கு உறுப்பாயிருக்கு மெனகை. (௩௧௦) "தயாஸாதவ்யஸநஹராஸவ்யா

[illegible]" என்று அருளிச்செய்தாரிறே பட்டர். (வாத்ஸல்யம் ஸதோஷர்க்கு) என்றது-வாத்ஸல்யமாவது- அன்றீன்றகன்றினுடம்பின் வழும்பை யாதரித்து புஜிக்குந்தேநுவைப்போலே ஆஸ்ரிதருடைய தோஷங்களை போக்யமாகக்கொள்ளுவதொரு குணமாகையாலே, அவித்யாகர்மாதிதோஷ ஸஹிதராகத் தங்களை யநுஸந்திப்பார்க்கு உறுப்பாயிருக்குமென்கை. (ஸீலம் மந்தர்க்கு) என்றது - ஸீலமாவது-பெரியவன் தாழ்ந்தவர்களோடே புரையறக்கலக்கும் ஸ்வபாவமாகையாலே, தங்களுடையதண்மையை யநுஸந்தித்திருப்பார்க்கு உறுப்பாயிருக்குமென்கை (ஆர்ஜவம் குடிலர்க்கு) என்றது-ஆர்ஜவமாவது - கரணத்ரயத்தாலும் செவ்வியனாயிருக்கையாகையாலே, தங்களுடைய கரணத்ரய கௌடில்யத்தை நினைத்திருப்பார்க்கு உறுப்பாயிருக்குமென்கை (ஸௌஹார்த்தம் துஷ்டஹ்ருதயர்க்கு) என்றது-ஸௌஹார்த்தமாவது-எப்போதும் நன்மையை சிந்தித்திருக்கும் ஸ்வபாவமாகையாலே, ஸர்வகாலமும் தீமையே சிந்தித்திருக்கும் துஷ்டஹ்ருதயராகத் தங்களை யநுஸந்தித்திருப்பார்க்கு உறுப்பாயிருக்குமென்கை (மார்த்தவம் விஸ்லேஷபீருக்களுக்கு) என்றது-மார்த்தவமாவது - ஆஸ்ரிதவிரஹம் பொறுக்கமாட்டாத மென்மையாகையாலே, தன்னுடைய விஸ்லேஷத்தில் பயமுடையவர்களுக்கு உறுப்பாயிருக்குமென்கை. (ஸௌலப்யம் காணவாசைப்பட்டவர்களுக்கு) என்றது - ஸௌலப்யமாவது - அதீந்த்ரியமான விக்ரஹத்தைக் கண்ணுக்கிலக்காம்படி பண்ணுகையாகையாலே, தன்னைக்காணவேணுமென்று ஆசைப்பட்டவர்களுக்கு உறுப்பாயிருக்குமென்கை.

இத்தால், இவனுடைய ஜ்ஞாநத்தில் அபேக்ஷையுள்ளது - தந்தாமுடைய ஹிதாஹித நிரூபணத்தில் அறிவில்லாதவர்களுக்காகையாலே, ஜ்ஞாநம் - அஜ்ஞர்க்காயிருக்கும். இவனுடையஸக்தியில் அபேக்ஷை யுள்ளது - ஸ்வேஷ்டாநிஷ்டப்ராப்தி பரிஹாரத்தில் அஸக்தராயிருப்பாருக்காகையாலே, ஸக்தி - அஸக்தர்க்காயிருக்கும். பொறையில் அபேக்ஷையுள்ளது - அபராதமுடையார்க்கா

௧௦. இப்படி, ஈஶ்வரன் கல்யாண குணங்களோடேகூடி யிரு க்கையாலே,

கையாலே, க்ஷமை - ஸாபராதர்க்காயிருக்கும். ஐயோவென்று இரங்கவேண்டுவது - நோவுபட்டவர்க்காகையாலே, க்ருபை-து:கிகளுக்காயிருக்கும்; தோஷத்தை போக்யமாகக் கொள்ளவேண்டுவது - தோஷவான்களுக்காகையாலே, வாத்ஸல்யம் ஸதோஷர்க்காயிருக்கும். தன்மையைப்பாராதே புரையறக்கலக்கவேண்டுவது-தாழ்ந்தவர்கள் விஷயத்திலே யாகையாலே, சீலம் - மந்தர்க்காயிருக்கும். கரணத்ரயத்தாலும் செவ்வியனாய்க்கொண்டு தன்னை யமைத்துப் பரிமாறவேண்டுவது - செவ்வைக்கேடாம்விஷயத்திலாகையாலே, ஆர்ஜவம் - குடிலர்க்காயிருக்கும். தானெப்போதும் நன்மை சிந்திக்கவேண்டுவது - தந்தாமுக்குத் தீமைகளைச்சிந்திக்கும் தீமனத்தர்விஷயத்திலாகையாலே, ஸௌஹார்த்தம் - துஷ்டஹ்ருதயர்க்காயிருக்கும். விரஹம்பொறாத மென்மைவேண்டுவது - விரஹத்துக்கு அஞ்சுவார்திறத்திலாகையாலே, மார்த்தவம் - விஶ்லேஷபீருக்களுக்காயிருக்கும். அதீந்த்ரியமான விக்ரஹத்தைக் கண்ணுக்கு இலக்காக்கவேண்டுவது - அவ்வடிவைக் காண்கையிலாசையுடையவர்களுக்காகையாலே,ஸௌலப்யம்- காணவாசைப்பட்டவர்களுக்காயிருக்குமென்று, குணங்களினுடைய விஷயப்ரதிநியதத்வத்தை தர்ஶிப்பித்தாராயிற்று. (இப்படியெங்குங்கண்டு கொள்வது) என்றது - கீழ்ச்சொன்னப்ரகாரத்திலே அநுக்தமான குணங்களெல்லாவற்றுக்கும் ப்ரத்யேகம் விஷயங்களை தர்ஶித்துக் கொள்வது என்றபடி.

௧௦. ஏவம்பூதகுணவிஶிஷ்டனாகையாலே, ஈஶ்வரன் ஆஶ்ரித விஷயத்தில் பரிமாறிப்போரும்படிகளை விஸ்தரேண வொருசூர்ணையாலே யருளிச்செய்கிறார் மேல்; (இப்படி, ஈஶ்வரன் கல்யாண குணங்களோடே கூடியிருக்கையாலே) என்றுதொடங்கி.

இப்படியென்று - கீழுக்தமான குணயோகப்ரகாரத்தைப் பராமர்ஶிக்கிறது. (கல்யாணகுணங்களோடே கூடியிருக்கையாலே) என்று, குணயோகத்தை ஹேதுவாக வருளிச்செய்தது - மேற்

பிறர்நோவு கண்டால், ஐயோ! என்றிரங்கி, அவர்களுக் கெப்போதுமொக்க நன்மையைச் சிந்தித்து, தனக் கேயாயிருத்தல், தனக்கும் பிறர்க்கும்பொதுவாயிருத்தல் செய்யாதே, நிலா, தென்றல், சந்தநம், தண்ணீர்போலே பிறர்க்கேயாய், தன்னையாஶ்ரயித்தவர்கள் பக்கல் ஜந்ம ஜ்ஞாநவ்ருத்தங்களாலுண்டான நிகர்ஷம் பாராதே,

---

சொல்லுகிறபரிமாற்றங்களெல்லாம் ஒரோகுணகார்யமென்றுதோற் றுகைக்காக. (பிறர்நோவுகண்டால் ஐயோ! என்று இரங்கி) இது-க்ருபாகார்யம். பிறர்நோவுகண்டால் ஐயோ! என்று ஈடுபடுகிறது-பரதுக்காஸஹிஷ்ணுவாகையாலேயிறே. (அவர்களுக்கு எப்போது மொக்க நன்மையைச்சிந்தித்து) இது - ஸௌஹார்த்தகார்யம். எப்போது மொக்கவென்றது - இவர்கள் அறிந்தகாலத்தோடு அறியாதகாலத்தோடு வாசியற ஸர்வகாலத்திலுமென்றபடி. ஆஶ்ரித ஸர்வமங்களாந்வேஷணபரனாயிருக்கிறது - ஸௌஹார்த்தத்தாலே யிறே.(தனக்கேயாயிருத்தல். தனக்கும் பிறர்க்கும் பொதுவாயிருத்தல்செய்யாதே, நிலா, தென்றல், சந்தநம், தண்ணீர்போலே பிறர்க்கேயாய்) இது-ஆஶ்ரிதபாரதந்த்ர்யகார்யம். ஸ்வார்த்தபரனாயேயிருத்தல், ஸ்வார்த்த பரார்த்தங்கள் இரண்டுக்கும் பொதுவாயிருத்தல் செய்கையன்றிக்கே, சந்த்ரிகாதிபதார்த்தங்கள்போலே, பரார்த்தைகவேஷனாயிருக்கிறது—பாரதந்த்ர்யத்தாலே யிறே, (தன்னையாஶ்ரயித்தவர்கள் பக்கல் ஜந்மஜ்ஞாநவ்ருத்தங்களால் உண்டான நிகர்ஷம்பாராதே) இது-ஸாம்யகுணகார்யம். ஆஶ்ரிதர் பக்கல் ஜந்மாதிகளால் உண்டானதண்மை பாராமல் பரிமாறுகிறது - (௪௦௫) "ஸமோஹம்ஸர்வபூதேஷு" என்கிறபடியே, ஜந்மாதிகளால் உத்க்ருஷ்டரோடு அபக்ருஷ்டரோடு வாசியறஆஶ்ரயணீயத்வே ஸமனாயிருக்கும் ஸ்வபாவத்தாலேயிறே. (தாங்களும் பிறரும் தஞ்சமல்லாதபோது தான்தஞ்சமாய்) இது - அஶரண்ய ஶரண்யத்வகார்யம். தாங்களும் தங்களுக்கு ரக்ஷகரன்று, பிறரும் தங்களுக்கு ரக்ஷகரன்றென்றுகைவாங்கின தஶையில் தான் ரக்ஷகனாகிறது -]௪௦௬] பற்றிலார்பற்றநின்றானாகையாலேயிறே.

தாங்களும் பிறரும் தஞ்சமல்லாதபோது தான்தஞ்சமாய், ஸாந்தீபிநீபுத்ரனையும், வைதிகன் புத்ரர்களையும் மீட்டுக்கொண்டுவந்தாப்போலே அரியனசெய்தும், அவர்களபேக்ஷிதங்களைத் தலைக்கட்டியும், அவர்களுக்கு த்ருவபதம்போலே பண்டில்லாதவற்றையுமுண்டாக்கியும்,

---

(ஸாந்தீபிநீபுத்ரனையும், வைதிகன் புத்ரர்களையும் மீட்டுக்கொண்டுவந்தாப்போலே அரியனசெய்தும், அவர்களபேக்ஷிதங்களைத் தலைக்கட்டியும்) இது - ஸத்யகாமத்வகார்யம். (சாஎ) "மாதவத்தோன்புத்திரன்போய் மறிகடல்வாய் மாண்டானை" என்கிறபடியே, நெடுங்காலத்திலே கடல் கொண்டுபோன ஸாந்தீபிநீ புத்ரனையும், (சா௩அ) "பிறப்பகத்தேமாண்டொழிந்த பிள்ளைகளைநால்வரையும்" என்கிறபடியே, ஜநித்தபோதே, [சாகூ] "என்னுடைமனைவி காதல் மக்களைப் பயத்தலும்காணேன்" என்கிறபடியே, பெற்ற தாயும் தர்ஶிக்கப்பெறாதபடி நாய்ச்சிமார் தங்கள் ஸ்வாதந்த்ர்யத்தாலே யழைப்பிக்க, (சாகo) "தப்பினபிள்ளைகளை" என்கிறபடியே, கைதப்பிப்போய் * சுடரொளியாய்நின்ற தன்னுடைச்சோதியிலே கிடந்த வைதிகன்புத்ரர்களையும், (சாoஎ) 'உருவுருவேகொடுத்தான்' என்றும், (சாகக) "உடலொடுங்கொண்டு கொடுத்தவனை" என்றுஞ் சொல்லுகிறபடியே, அவ்வவ ரூபங்களோடேமீட்டுக்கொடுவந்துகொடுத்தாப்போலே, துஷ்கரங்களைச்செய்தும் ஆஶ்ரிதர் அபேக்ஷிதங்களைத் தலைக்கட்டுகிறது-[சாகக] "ஶுஶ்ரூ[illegible] தாக்ஷணவிஷயொ ... நாராயண[illegible] ஸொ[illegible] ..." என்கிற ஸத்யகாமனுகையாலேயிறே. "ஸத்யகாமனுகையாவது - ஸாந்தீபிநீ புத்ரனைக்கொடுவந்தாப்போலே, ஸகலாபேக்ஷிதங்களும் முடிக்க வல்லனுகை." என்றிறே நடுவிற்றிருவீதிப்பிள்ளை பட்டர், தத்வத்ரயத்திலே யருளிச்செய்தது.

(அவர்களுக்கு, த்ருவபதம்போலே பண்டில்லாதவற்றையுமுண்டாக்கியும்) இது - ஸத்யஸங்கல்பத்வகார்யம். உத்தாநபாத

தந்தாம் ஸ்வம் தாந்தாம் விநியோகம் கோண்டாப்போலேயிருக்க தன்னையும் தன்னுடைமையையும்வழங்கி, அவர்கள் கார்யம் தலைக்கட்டினால்தான் க்ருதக்ருத்யனாய்,

---

புத்ரனை த்ருவனுக்கு, ஸ்வர்க்கத்தினுடைய ஊர்த்வாவதியிலே அபூர்வமாயிருப்பதொருபதம் கல்பித்துக் கொடுத்தாப்போலே, ஆஶ்ரிதர்க்குப் பண்டில்லாதவற்றையு முண்டாக்குகிறது - அபூர்வ போக்யங்களை ஸ்ருஷ்டிக்கவல்ல அமோகஸங்கல்பனாகையாலே யிறே. "ஸத்யஸங்கல்பனாகையாவது - த்ருவபதம்போலே பண்டில்லாத வற்றையுமுண்டாக்கவல்லனாகை" என்று, இதுவும்பட்டர்தாமேயருளிச்செய்தாரிறே. (தம்தாம்ஸ்வம் தாம்தாம் விநியோகங்கொண்டாப்போலே யிருக்கத் தன்னையும் தன்னுடைமையையும் வழங்கி) இது-ஔதார்யகார்யம். (௪௧௨) "[illegible]" என்கிறபடியே, தங்களுடைமையைத் தாங்கள் விநியோகங் கொள்ளுமாபோலே விநியோகங் கொள்ளலாம்படி, ஆத்மாத்மீயங்களை ஆஶ்ரிதர்க்குக்கொடுக்கிறது-கொடுத்தோம் என்னு மபிமாநம் தன்னெஞ்சிலில்லாதபடியாகவும், கொள்ளுமவர்களுக்கு ப்ரத்யுபகாரந்தேடி நெஞ்சாறல்பட வேண்டாதபடியாகவும்கொடுக்கும்பரமோதாரனாகையாலேயிறே.

(அவர்கள் கார்யம் தலைக்கட்டினால், தான் க்ருதக்ருத்யனாய்) இது-க்ருதித்வகார்யம்! ஆஶ்ரிதர் கார்யந்தலைக்கட்டினால், அவர்கள் க்ருதக்ருத்யராகையன்றிக்கே, (௪௧௩) "[illegible]" இத்யாதிப்படியே, தான் க்ருதக்ருத்யனாகிறது - ஆஶ்ரிதரக்ஷணம்பெற்றால், பேறுதன்னதாயிருக்கும்ஸ்வபாவத்தாலேயிறே. † "க்ருதியாவது - ஆஶ்ரிதருடையவபேக்ஷிதம் பூர்ணமானால், தான்க்ருதக்ருத்யனாகை." என்றிறே பட்டரும் அருளிச்செய்தது

---

† [பா] க்ருதித்வமாவது.

தான் செய்த நன்மைகளொன்றையும் நினையாதே அவர்கள் செய்த ஸுக்ருதலவத்தையேநினைத்து, அநாதிகாலம் வாஸிதங்களான ரஸங்களைமறக்கும்படி யெல்லா தசையிலும் இனியனாய்,பார்யா புத்ரர்கள்குற்றங்களைக் காணாக் கண்ணிட்டிருக்கும் புருஷனைப் போலே, அவர்கள் குற்றங்களைத் திருவுள்ளத்தால்நினையாதே,

---

(தான்செய்த நன்மைகளொன்றையும் நினையாதே, அவர்கள் செய்தஸுக்ருதலவத்தையேநினைத்து) இது-க்ருதஜ்ஞதாகார்யம்; தன் திறத்திலே யொருஸமானாக்கிமுதலானஸுக்ருதலேஸத்தைப்பண்ணினால், அவர்களுக்குத் தான் எல்லா நன்மைகளுஞ் செய்தாலும் அவற்றை யொன்றையும் நினையாதே, அவர்கள் செய்த ஸுக்ருதலவத்தையே நினைத்திருக்கிறது-செய்த நன்றியறியுமவனாகையாலேயிறே. "க்ருதஜ்ஞனாகையாவது - ஆஸ்ரிதருடைய ஸுக்ருதலவத்தை யொன்றையும் நினைத்து, தான் செய்த நன்மைகளொன்றும் பாராதேயிருக்கை" என்று, இதுவும் பட்டரருளிச்செய்தார். (அநாதிகாலம வாஸிதங்களான ரஸங்களை மறக்கும்படியெல்லா தசையிலும் இனியனாய்) இது - மாதுர்யகார்யம். அநாதிகாலமே பிடித்துக்கொளுந்திக்கிடக்கிறப்ராக்ருதவிஷயரஸங்களை விஸ்மரிக்கும்படி ஸர்வாவஸ்தையிலும இனியனாகிறது - (௬௧௪) "ஸர்வரஸ:" என்கிறபடியே, நிரதிஸயபோக்யனாயிருக்கையாலேயிறே.

(பார்யாபுத்ராதிகள் குற்றங்களைக் காணாக்கண்ணிட்டிருக்கும் புருஷனைப்போலே, அவர்கள் குற்றங்களைத் திருவுள்ளத்தாலேநினையாதே) இது-சாதுர்யகார்யம். பார்யா புத்ராதிகளோடே கூடி வர்த்திப்பானொரு புருஷன், அவர்கள் செய்கிற குற்றங்களைக் கண்டிருக்கச் செய்தேயும் காணாதானைப்போலே யிருக்குமா போலே ஆஸ்ரிதர் செய்த குற்றங்களைக் கண்டிருக்கச் செய்தேயும் திருவுள்ளத்தால் நினையாதிருக்கிறது - ஆஸ்ரித தோஷங்களைத் தெரியாதபடி மறைக்கவல்ல சதுரனாகையாலேயிறே.

குற்றங்களைப் பெரியபிராட்டியார் காட்டினாலும் அவளோடே மறுதலைத்துத் திண்ணியனாய் நின்று ரக்ஷித்து, காமினியுடைய அழுக்கு உகக்கும் காமுகனைப்போலே, அவர்கள் தோஷங்களை போக்யமாகக் கொண்டு அவர்கள் பக்கல் கரணத்ரயத்தாலும் செவ்வியனாய், பிரிந்தால் அவர்கள்வ்யஸநம் தானேபடியென்னும்படி தானீடுபட்டு

